உ

சிவமயம்

பரஞ்சோதி முனிவர்

அருளிய

திருவிளையாடற் புராணம்

(கூடற்காண்டமும், திருவாலவாய்க் காண்டமும்)

உரையாசிரியர்

ஈக்காடு - இரத்தினவேலு முதலியார்

இயற்றிய

விருத்தி உரை

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை

1937

உரிமை பதிவு செய்யப்பட்டது.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

உள்ளுறை

கூடற் காண்டம்

	பக்கம்
அங்கம்வெட்டின படலம்	சுருஅ
அஷ்டமாசித்தி யுபதேசித்த படலம்	எகடு
இசைவாது வென்ற படலம்	அசo
இரசவாதஞ் செய்த படலம்	எசக
உலவாக்கிழி யருளிய படலம்	சுகூஅ
உலவாக்கோட்டை யருளிய படலம்	எடுசி
எல்லாம்வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்	டுகூஅ
கரிக்குருவிக் குபதேசித்தபடலம்	அஎக
கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்	டுஎசு
சோழனை மடுவில்வீட்டிய படலம்	எடுo
தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்	எகூo
திருமுகங் கொடுத்த படலம்	அஉக
நாகமெய்த படலம்	சுசுஎ
நாரைக்கு முத்தி கொடுத்த படலம்	அஅசு
நான்மாடக்கூடலான படலம்	டுடுக
பலகையிட்ட படலம்	அகூசு
பழியஞ்சின படலம்	சுஙுக
பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்	அஎசு
பன்றிக் குட்டிக்கு முலைகொடுத்த படலம்	அடுசு
மாபாதகந் தீர்த்த படலம்	கசசு
மாமனுக வந்து வழக்குரைத்த படலம்	எகஉ
மாயப் பசுவை வதைத்த படலம்	சுஎடு
மாறியாடின படலம்	சுகடு
மெய்க்காட்டிட்ட படலம்	சுஅசு
யானையெய்த படலம்	டுஅச
வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்	எஎசு
வளையல்விற்ற படலம்	எoச
விடையிலச்சினையிட்ட படலம்	எஉஉ
விருத்த குமார பாலரான படலம்	சுoo
விறகுவிற்ற படலம்	எகூடு

திருவாலவாய்க் காண்டம்

அருச்சனைப் படலம்	கஉகடு
இடைக்காடன் பிணக்கு தீர்த்த படலம்	கூஅக
கோணுக்கு இலக்கண முபதேசித்த படலம்	கூசுஅ
கௌனைக் கரையேற்றிய படலம்	கூடுஅ
சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்	கூஎஎ
சங்கப்பலகைதந்த படலம்	கூகஎ
சமணரைக் கழுவேற்றிய படலம்	ககஎகூ
சுந்தரப்பேரம்பெய்த படலம்	கூoச
தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்	கூஉக
திருவாலவாயான படலம்	அகூடு
நரிபரியாக்கிய படலம்	கoசூஅ
பரிநரியாக்கி வைகை யழைத்த படலம்	கoஎடு
பாண்டியன் சுரந்தீர்த்த படலம்	ககசo
மண்சுமந்த படலம்	கoகஉ
வலைவீசின படலம்	கூகூசு
வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்	கஉoo
வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்	கoகo

கூடற் காண்டம்

ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவிளையாடற் புராணம்

மூலமும் உரையும்

கூடற் காண்டம்

பத்தொன்பதாவது

நான்மாடக்கூடலான படலம்

பரசிவம்

பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின்
பேதங்க ளல்ல விவையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்சவெளியென்ப கூடல் மதுரைப்
பாதங்கள் நோவ வளையிந்த ஞதி பகர்வாரை யாயு மவமே.

(இ - ள்) மதுராபுரியின் திருவீதியில் (தமது) திருவடிகள் நோவ, வளையல் விறகு முதலியனவற்றை விற்றருளிய சோமசுந்தரப் பெருமானை (நூன்முறையால்) ஆராய்ந்தறியும் அறிவுடையோர், (பிருதிவி) முதலிய ஐம்பூதங்களுமல்ல ; ஞானேந்திரியங்களுமல்ல ; பிற புலன்களுமல்ல ; மன முதலிய அந்தக்காரணங்களின் விகற்பங்களுமல்ல ; (அப்பூத முதலிய மேற்கூறிய) இவையல்லாமலும் (சேடித்து) நின்ற ஆன்மாவுமல்ல என்று, பெருமை பொருந்திய நூலாகிய வேதமானது (நிச்சயிக்கமாட்டாமல்) கிடந்து தடுமாறி நிற்கும் வேறு வெளியெனக் கூறுவர்.

(வி - ம்) முதலியன என்றதனால் மாணிக்கமும் சுதிரையும் விற்றதுங் கொள்க.

மதுரைக் காண்டத்தில், "சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர முத்தி யான முதல்" என்ற செய்யுளிற்போந்த "முதல்" என்னும் நிஷ்கள சிவத்தினிலீக் கணத்தை வற்புறுத்தற்கு இப்பாயிரம் எழுந்தது என்க.

இனி, பிருதிவி - அப்பு - தேயு - வாயு-ஆகாயமென்னும் பூதங்கள் ஒன்றினொன்று தோன்றி முத்தொழிற் கேதுவாகித் தோன்றிய முறையே லயமடை

தலின், அவற்றிற்கு மேம்பாடுடையா னொருவன் கருத்தாவாக நின்று அவற்றைத் தொழிற்படுத்த வேண்டுமாதலின் உலோகாயதனை மறுத்து "பூதங்களல்ல" என்றும், மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்னும் ஐம்பொறிகளில் ஒன்றனையுணரும் பொறி பிறிதொன்றினை யுணராமையின், அவற்றைத் தொழிற்படுத்தவா னொருவன் வேண்டுமாதலின் சாங்கிராந்தவாதியை மறுத்து "பொறியல்ல" என்றும், சுவை - ஒளி - ஊறு - ஓசை - காற்றமென்னும் புலன்கள் மூலப்பகுதியாகிய சடத்திற் றோன்றினமையால் அவற்றையுந் தொழிற்படுத்துவோ னொருவன் வேண்டி சாங்கியனை மறுத்து "புலனல்ல" என்றும், இந்திரியங்கள் அந்தக்காரணங்களேயின்றிச் சுதந்திர விடயங்களே யறிதலின்மையின் அவற்றையுந் தொழிற்படுத்துவான் வேண்டி அச்சங்கிராமவாதியை மறுத்து "உள்ள மதியின் பேதங்களல்ல" என்றும், ஆன்மாவானது தனக்கு வேண்டிய இந்திரியங்களைப் பொருந்தி விடயங்களை நுகர்ந்து ஒரு வினைமுதல் அறிவிக்க அறியும் சதசத்காலின் ஈஸ்வர அவிகாரவாதியை மறுத்து "பிறிதல்ல" என்றும், இவ்வாறு சமயவாதிகளை மறுத்தவர், மேல் நிஷ்களசிவத்தின் லக்ஷணத்தை வற்புறுத்தவேண்டி, அச்சிவம் பிரபஞ்ச காரியத்திற்குத் தனக்கோர் உபாதான காரணமாய் நின்ற சுத்தமாயை அசுத்தமாயை சுத்தாசுத்தமாயை என்னு மிவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையாதலின் "வஞ்சவெளி" என்றுங் கூறினர்.

இச்செய்யுளால், உலோகாயதன் முதலிய புறமத கண்டனங் கூறிப் பரசிவ வணக்கஞ் செய்யப்பட்டது. இதன் கருத்தை "அல்லையீ தல்லையீதென மறைகளு மன்மைச் - சொல்லினுற் றுணித்தினிலக்குமிச் சுத்தரன்" என இந் நூலாரும், "வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என மாணிவாசகரும் முதலிய மேலோர் கூற்றுணர்க.

இம்மதுரைத் திருநகரத்திற்குச் சிவலோக முதலிய பல திருநாமங்களிருக்கும் இச்செய்யுளிற் கூடல் என்று கூறவந்தது இக்காண்டத்தின் பெயரும், இப்படலத்தான் அத்திருநாமம் எய்திய காரணமும் விளங்குதல் வற்புறுத்தற் கெனக் கொள்ளக் கிடந்தது. (5)

சிவசத்தி

திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்
பெருமகள் நுதற்க ணுகப் பெற்றுவான் செல்வங் கல்வி
அருமைவீ டளிப்பாள் யாவ ளவளுயிர்த் துணைவன் காண
ஒருமுலை மறைத்து நாணி யொசிந்தபூங் கொம்பி னின்றாள்.

(இ - ள்) இலக்குமியே வலக்கண்ணும் சரஸ்வதியே இடக்கண்ணும் பரஞான மாதே நெற்றிக்கண்ணுமாகப் பெற்று, பெருஞ்செல்வத்தையும் கல்வியையும் அடைதற்கரிய மோக்ஷத்தையும் அனுக்கிரகிப்பவள் எவள் அத்தலைவியே (தனது) உயிர்த்துணைவராகிய சிவபெருமான் நோக்கியருள (மூன்று திருத்தனங்களில்) ஒரு திருத்தனம் மறைத்து நாணமுற்றுத் தளர்ந்த பூங் கொம்பைப்போல நின்றருளினாள்.

(வி - ம்) "பரையாதி வீரூப்பறிவு தொழிலாகி யுலகமெலாம் படைத்துக் காத்து - வரையாது துடைத்துமறைத் தருளியவை நின்றுந்தன் வடிவு வேறு-யுரையாதி மறைகடந்த வொருமுதல்வி" என இந்நூலிற் கூறியவாறு, சிற்சத்தியே சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்கட்கு இச்சை முதலிய ஐவகைச் சத்தி பேதமுற்று நிற்றலின், இச்சாசத்தியாகத் திருமகளையும், ஞானசத்தியாகக் கலைமகளையும் கூறினர். இன்னும் இச்செய்யுளுக்கு வேண்டுவனவாகிய விஷயங்கள் முன்னும் பின்னும் விரவிக்கிடத்தலின் ஆண்டுக் கண்டுகொள்க. (உ)

கதிர்மதி மிலைந்த வேணிக் கண்ணுதல் வருண னேய
அதிர்கடல் வறப்பச் செய்த ஆடலீ தனையா னேய
முதிர்மழை யேழின் மேலு முன்னைநான் முகிலும் போக்கி
மதுரைநான் மாடக் கூட லாக்கிய வண்ணஞ் சொல்வாம்.

(இ - ள்) பிரகாசிக்குஞ் சந்திரனைத் தரித்த சடைமுடியையுடைய சோம சுந்தராக்கடவுள் வருணன் விடுத்த சத்திக்கின்ற கடலை வற்றச்செய்தருளிய திருவிளையாடல் இது. அவ்வருணன் ஏவிய முதிர்ந்த சத்தமேகங்களின் மேலும் முன்போல (அப்புட்கலா வர்த்த முதலிய) நான்கு மேகங்களையும் விடுத்து, மதுரையை நான்மாடக் கூடலாகச் செய்தருளிய திருவிளையாடலை (இனி யாம்) கூறுவாம்.

(வி - ம்) "கதிர்மதி மிலைந்த வேணி" என்னும் விசேடணம் குற்றஞ் செய்த சந்திரன் தம்மைச் சரணடைந்த காலத்து, குற்றஞ் செய்தோனெனக் கருதாது சிவபெருமான் அவனைச் சிரமேலணிந்ததுபோல, யாவர் சரணடையினும் அவரை யெல்லாங் காப்பர் என்னுங் கருத்துத் தோன்றக் கூறப்பட்டதாதலின், இச்செய்யுள் கருத்துடையணி யெனக. (ஊ)

ஏற்றுதெண் டிரைநீர்ச் சேர்ப்பன் தன்செய லிழுக்கி ஞாணம்
உற்றிரு கண்ணுஞ் சேப்ப வுடன்றெழு கோபச் செந்தீப்
பற்றிட வாகம் வெம்பிப் பரவையும் யாறும் வெந்து
வற்றிட வெகுண்டு நின்றுன் மானமும் வலியுங் குன்றுன்.

(இ - ள்) (கரையை) மோதுகின்ற தெள்ளிய அலைகள் பொருந்திய கடற்றுறைக்குத் தலைவனுகிய வருணன், தனது செயல் தவறுபாடுற்று ஞாணங் கொண்டு இருவிழிகளும் சிவக்கக் கொதித்தெழுந்த செவ்விய கோபாக்கினி மூள, தேகங் கருகிக் கடலும் யாறும் (அக்கோபத் தீயால்) வெந்துவற்ற, தனது மானமும் வலிமையுங் குறையாதவனுகிக் கோபித்து நின்றுன். (எ)

நவிர்புனல் மதுரை மூதூர் நாயக னுடல் தன்னைத்
தெளிகில னுகிப் பின்னுஞ் செழுமுகி லேழுங் கூவிக்
குளிர்கடல் வறந்த தென்னக் குடித்தெழுந் திடித்துப் பெய்யா
ஒளிவளர் மதுரை முற்று மொல்லெனக் கலாவி னென்றுன்.

(இ - ள்) தண்ணிய நீர் சூழ்ந்த மதுரையாகிய பழைய திருநகரில் எழுந்தருளிய சோமசுந்தரப் பெருமானது திருவிளையாடலைச் சிறிதும் தெளியாதவ

ஞெலி, மீண்டும் குறைவில்லாத சத்தமேகங்களையும் ஒளித்து, குளிர்ந்த கடலும் வறக்தென்று (கண்டோர்) சொல்ல (நீரைப்) பருகி மேலெழுந்து, இடித்துப் பொழிந்து கீர்த்திமிகுந்த மதுரைநகர முழுவதும் விரைவாக அழியுங்களென்று கட்டளையிட்டான்.

(வி - ம்) ஞெலி - உவமையாகு பெயர். (நு)

பொள்ளென மேக மேழும் புகுந்துபார் தெரிய ழுந்நீர்ப்
பள்ளமும் வறப்ப முற்றப் பருகிமெய் கருகி மின்னித்
தெள்ளருந் திசையும் வானுஞ் செவிடுறப் பிலமும் பாரும்
விள்ளமால் வரைக ளெட்டும் வெடிபட மேருச் சாய.

(இ - ள்) சத்த மேகங்களும் விரைவாகக் (கடலில்) சென்று நிலந்தோன்றக் கடலாகிய பள்ளமும் வற்ற (நீரை) முற்றப் பருகி (மேலே நிளம்பி) உடல் கருகி (சூல் கொண்டு) மின்னலை வீசி (கட்புலன்களுக்கு)த் தோன்றுதற்கரிய (அஷ்ட) திசைகளும் ஆகாயமும் செவிடுபடவும், பாதலலோகமும் பூலோகமும் பிளவுபடவும், பெரிய (அஷ்டகுல) பர்வதங்களும் பொடிபடவும், மேருமலை சாயவும்.

இதுமுதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர். (சு)

ஊழிநாள் வெடிக்கு மண்ட கடாகத்தி னெளிபோ லார்த்துப்
பாழிவா னுருமு வீழப் பணடவி மணிகள் சிந்தி
ஆழிநீர் ஞாலந் தாங்கு மராவுட னெளியத் திக்கிற்
சூழிமால் யானை நின்ற நிலைகெடத் துணுக்கங் கொள்ள.

(இ - ள்) ஊழிக் காலத்தில் வெடிபட்டுடையும் அண்டகடாகத் தோசை போலக் கோஷித்து, மிகவும் பெரிய இடியேறுகள் விழவும், கடல்சூழ்ந்த பூமியைத் தாங்கும் ஆதிசேடன் (தனது) ஆயிரம் படங்களிலுமுள்ள சிரோமாணிக்கங்களைச் சிதறி (தனது) உடலை நெளிக்கவும், திக்குகளில் நின்ற முகபடாமணிந்த பெரிய அஷ்ட கஜங்கள் நிலைகெடும்படி நடுக்கங் கொள்ளவும். (எ)

வெள்ளிய நீறு பூத்து முழுவென வீங்கு காய்போல்
தெள்ளிய வாலி சிந்தத் திரண்டதிண் பனிக்குத் தூண்போல்
ஒள்ளிய தாரை சோர வும்பர்மீன் கணங்க ளோடுக்
துள்ளிய திரையி லாடு மீன்கணந் துடித்து வீழ.

(இ - ள்) வெண்ணிறம் பொருந்திய நீற்றினைப் (புறத்தில்) பூத்து, மத்தளம் போலப் பருத்த பூனிக்காய் போலத் தெளிந்த மழைத்துளிகளைச் சிந்தவும், திரண்ட திண்ணிய பனிக்குக் கல்லாலாகிய தூணைப்போல ஒளிபொருந்திய மழைத் தாரைகள் சோரவும், மேலிடத்துள்ள நக்ஷத்திரங்களாகிய (காண்) மீன் கூட்டங்களோடுக் துள்ளிச் செல்லும் அலைகளில் ஆடுகின்ற மீன் கூட்டங்கள் தாவி விழவும். (அ)

ஆர்த்தெழு கொண்மூ வேழஞ் சாரசா மஜைத்துஞ் சூழ்ந்து
போர்த்தன ஞால முண்ணப் புக்கதோர் வடிவங் கொண்ட

தீர்த்தனில் விசும்பும் பாருந் திசைகளுந் தெரியா வாகப்
பார்த்தகண் ணுழையா வாகப் பரந்திருள் கான்ற வன்றே.

(இ - ள்) கோஷித்தெழுந்த சத்த மேகங்களும் சராசரங்களே யெல்லாம் சூழ்ந்து புறத்திற் போர்த்தன. உலக முழுதும் அழிக்கும்படிசென்ற ஒப்பற்ற திருவுருவங் கொண்டருளிய பிரளயகால ருத்திர மூர்த்தியைப்போல ஆகாயமும் பூமியும் (ஏட்டித்) திசைகளும் மறைபடவும், பார்த்தகண் (இருள் நெருக்கத்தால்) செல்லாதெழுயவும் பரவிய விருளே (அம்மேகங்கள்) வெளிப்படுத்தின. (கூ)

பைஞ்சுட ரெறிக்கும் பச்சை காரொளி பரப்பு நீலம்
புஞ்சுவா ளுடுக்க ளன்ன தித்திலம் பொன்னங் குப்பை
செஞ்சுடர் மணிக டுப்புச் சிதறுவ கணவ ரோடும்
விஞ்சையர் மகளி ரூடி வெறுத்தெறி கலன்கள் போல.

(இ - ள்) பசிய கிரணங்களே வீசும் மரகதங்களேயும், கரிய ஒளியை வீசும் நீலங்களேயும், திரண்ட ஒள்ளிய சுக்குத்திரங்கள் போன்ற முத்துக்களேயும், அழகிய பொற்குப்பைகளேயும், செவ்ந்த கிரணங்களேயுடைய பதுமராகங்களேயும், பவளங்களேயும், வித்தியாதர ஸ்திரீகள் (தத்தமக்குரிய) கணவர்களோடும் பிணக்குற்று, வெறுத்து (கழற்றி) வீசின ஆபரணங்களேப்போலச் (சத்தமேகங்களும் அவ்விடத்திருக்களிலும்) சொரிந்தன. (கூ)

கடியகா லுதைப்பப் பெய்யுங் கடுஞ்செல வெழிலி மாடக்
கொடியமீ ணகரைச் சூழ்ந்து புதைத்தலுங் கோலொன் றேச்சிப்
படியெலாம் புரக்குங் கோனு நகருளார் பலரு ஞாலம்
மடியுகா லிதுவே யென்ஞ மயங்கினு ருயங்கி ஞரே.

(இ - ள்) அச்சத்தைத் தரும் (பெருங்) காற்றடித்துத் தாக்க விரைந்து செல்லுதலேயுடைய பெய்யா நின்ற சத்த மேகங்களும் கொடிகள் கட்டிய மாடங்கள் நெருங்கிய நெடிய மதுரை நகரத்தைச் சூழ்ந்து போர்க்கவும், ஒப்பில்லாத செங்கோலேச் செலுத்தி உலக முழுவதையும் பாதுகாக்கும் அபிடேக பாண்டியனும் அந்நகரிலுள்ளோர் எல்லாரும் உலகமுழுதும் அழியும் (சங்கார)காலம் இக்காலமே யென்று மயங்கிச் சோர்ந்தார்கள். (கூ)

கண்ணுதல் மூர்த்தி தானே யின்னமுங் காக்கு மென்னப்
புண்ணிய நகரா ரோடும் பொருக்கெனக் கோயி லெய்தி
விண்ணிழி விமான வாழ்க்கை விடையவ னடிக்கீழ் வீழ்ந்தான்
அண்ணலா ரடன் முன்னு மறிந்துகை கண்ட வேந்தன்.

(இ - ள்) சோமசுந்தரக் கடவுள் (தனது நிமித்தம்) முன்னமே செய்தருளிய திருவிளையாடலேத் தெரிந்து கைவந்த அபிடேக பாண்டியன், நெற்றிக் கண்ணேயுடைய அச் சோமசுந்தரமூர்த்தியே இன்னமுங் காத்தருளுவாரென்று புண்ணிய ஸ்தலமாகிய அம்மதுரையில் உள்ளாரோடும் விரைந்து திருக்

கேயிலை யடைந்து, விண்ணுலகத்தினின்றிழிந்த இந்திர விமானத்தின்கண் வாழ்க்கையையுடைய இடபவாகனராகிய அச்சோமசுந்தரக் கடவுள் திருவடிக் கீழ் (சாஷ்டாங்கமாக)ப் பணிந்தான். (கூ)

விடையினை யால முண்ட மிடற்றினை கங்கை தாங்குஞ்
சடையினை கூற்றை வென்ற தாளினை மேருச் சாபப்
படையினை யடியேங் துன்பப் பாட்டினை நீக்கி யாளும்
நடையினை யாகி யெங்கள் நல்லுயிர் காத்தல் வேண்டும்.

(இ - ள்) இடபவாகனரே! ஆலால விடபானஞ் செய்த ஸ்ரீ கண்டத்தை யுடையவரே! கங்காநதியைத் தாங்கிய சடைமுடியை யுடையவரே! எமனை உதைத்தருளிய திருவடியை யுடையவரே! மகம்மேருவாகிய விற் படையை யுடையவரே! அடியேங்களது துன்பத்தை விலக்கி ஆட்கொண்டருளும் நடையினை யுடையவராகி, எங்களது நல்ல உயிர்களைக் காத்தருளல் வேண்டும். (கூ)

என்னலுந் தென்னார்க் கென்று மெய்திய இடுக்கண் தீர்க்கும்
முன்னவன் முன்போல் நான்கு முகிலையு நோக்கி யின்ன
தொன்னக ரெல்லை நான்குஞ் சூழ்ந்துகான் மாட மாகி
இன்னெடு மாரியேழும் விலக்குமி னெனவி டுத்தான்.

(இ - ள்) என்று விண்ணப்பஞ் செய்யவும், பாண்டியர்களுக்குச் சம்பவிக்கும் துன்பங்களை எக்காலத்தும் தீர்த்தருளுஞ் சோமசுந்தரக் கடவுள் முன்போல (புஷ்கலாவர்த்த முதலிய) நான்கு மேகங்களையும் பார்த்தருளி, இத்தத் தொன்று தொட்டுள்ள மதுராபுரியின் நான்கு வல்லிகளிலும் (புறத்திற்) சூழ்ந்து, நான்கு மாடங்களாய் (இந்த) ஒள்ளிய சப்த மகாமேகங்களையும் விலக்குங்கள் என்று கட்டளையிட்டருளினர்.

(வி - மீ) முன்னவன் - முதற்கடவுள். (கசு)

வந்துகான் மாட மாகி வளைந்துநாற் றிசையுஞ் சூழ்ந்து
சந்துவாய் தெரியா தொன்றித் தாமொரு குடிலாய் மாடப்
பந்திகோ புரஞ்செய் குன்றங் கால்கள்போற் பரிப்பப் போர்த்த
இந்துவார் சடையோ னேவ வெழிலிமா நகர மெங்கும்.

(இ - ள்) சந்திரனை யுடைய சடையிற்றரித்த சோமசுந்தரப் பெருமான் ஏவிய மேகங்கள் (நான்கும்) வந்து நான்கு மாடங்களாகி வளைந்து, காற்றிசையிலுஞ் சூழ்ந்து, தாம் ஒரு குடிசையாகி, பொருத்துவாய் தெரியாமல் ஒன்று பட்டு, மாட வரிசைகளும் கோபுரங்களும் செய்குன்றுகளும் கால்கள்போலச் சுமக்க, பெரிய அந்நகர் முழுமையும் போர்த்தன.

(வி - மீ) 'வளைந்து காற்றிசையுஞ் சூழ்ந்து' என்பதை இரண்டு யோசனை தூரம் சுற்றிலும் வளைந்து என வடநூல் கூறும். (கரு)

அன்னநான் மாடத் துள்ளு நகருளா ரமைச்சர் வேந்தன்
றன்னநாற் கருதித் தானைச் சராசரம் பிறவுந் தாழ்ந்து

முன்னைநாள் தனினு மின்ப மூழ்கிநன் கிருந்தா ருழிற்
பொன்னுளுள் பூகன் தாளிற் புக்கமர்ந் திருந்தா சொத்தார்

(இ - ள்) அந்த நான்கு மாடங்களினுள்ளும் அங்கரவாசிகளும் மந்திரி களும் பாண்டியனும் அவனுடைய சதுரங்க சேனைகளும் (இயங்கியற் பொரு ளும் நிலையியற் பொருளுமான) சரம் அசரங்களும் மற்றுள்ளனவுந் தங்கி, முந் திய தினத்தில் (உண்டாகிய இன்பத்தைக்) காட்டிலும் அதிகவின்பத்தில் மூழ்கி நன்றாக விருந்தார்கள்; (ஆதலின்) ஊழிக்காலத்தில் உமாதேவியாரை அர்த்த பாகமுடைய சிவபெருமான் திருவடிநீழலில் இரண்டறக் கலந்தவரை ஒத்திருந் தார்கள்.

(வி - ம்) ஊழின் என்றதற்குத் தமது ஜன்மாந்தர கல்வூழின்படி எனி னும் பொருந்தும். முன்னைநாள் என்றதற்கு வருணன் விட்ட கடலை வற்றச் செய்த காலத்தினும் என்றுவது நான்மாடக் கூடலான தினத்திற்கு முற்பட்ட தினத்திலும் என்றுவது பொருள்கொள்க. (கசு)

கழைகெழு வரையி னுச்சி கவிழ்கின்ற புயல்போற் கார்சூழ்ந்
திழைமணி மாடத் தும்ப ரெறிதுளி யுடைந்து துள்ளத்
தழைகடல் வறப்ப வாங்கித் தம்முடல் வறப்பப் பெய்து
மழைகளும் வெள்கி நின்ற வருணனும் வெள்கி நின்றான்.

(இ - ள்) மூங்கில்கள் நெருங்கிய மலையுச்சியிற் பெய்கின்ற மழைத்துளி கள் (உடைந்து துள்ளுவது) போல, மேகங்கள் சூழ்ந்து இரத்தினங்களழுத்திய மாடங்களின் பேரிற் பெய்யும் மழைத்துளிகள் உடைந்து துள்ள, பெருங்கடல் வற்ற முகந்து தமது தேகங்கள் பசையறப்பெய்து மேகங்களும் காணுகின்றன. வருணனும் (தனது செயல் நிறைவேறுமையால்) நாணுற்றே (அசைவற்) கின்றான். (கஎ)

நடுங்கினன் கழிந்த வச்ச நாணமீ தூர மானம்
ஒடுங்கின னுள்ளத் துள்ளோ ருவகைவந் தெய்தப் பொற்பூத்
தடங்கரை குறுகா முன்னுய் தணிந்துபின் தோய்ந்த பாசம்
மீடங்கினன் மடங்கா அன்பின் வள்ளலைப் பூசை செய்வான்.

(இ - ள்) நடுங்கி மிகுந்த அச்சமும் நாணமும் அதிகரிக்க மானம் ஒழிந்து தன் மனத்துள்ளே ஒரு மகிழ்ச்சிவந்தடைய பொற்றுமரைத் தீர்த்தத்தின் பாந்த கரையை அடைதற்கு முன்னே நோயினின்றும் நீங்கி, பிறகு (அதில்) ஸ்நானஞ்செய்து அவிச்சையும் நீங்கி, நீங்காத பேரன்புடன் சோமசுந்தரக் கடவுளை அருச்சிக்கத் தொடங்கினான்.

(வி - ம்) இச்செய்யுளில் நடுங்கினன் - ஒடுங்கினன் - மடங்கினன் என் னும் வினை முற்றுக்கள் வினையெச்சப் பொருளில் வந்தன. (கஅ)

புனிதநீ ருடிக் கண்டி பூண்டுவான் கங்கை யாதி
வனிதையர் பசும்பொற் கும்ப வாசநீர் வடித்து நீட்டப்

பணிமலர் சந்தங் கந்த மணிக்கலன் பசும்பொ ணுடை
இனையன பிறவு மீண்டு கற்பக மெடுத்துக் காட்ட.

(இ - ள்) பரிசுத்தமாகிய திருவெண்ணீறணிந்து, ருத்திராக்ஷகண்டிகை தரித்து, ஆகாயகங்கை முதலிய (நதி) மங்கையர் பசும்பொன்னுற்செய்த கலசத்தில் வாசமூட்டிய நீரை வார்த்து (ஒருபக்கலில்) கொடுக்கவும், குளிர்ச்சி பொருந்திய மலையும் சந்தனத்தையும் வாசனைத்திரவியங்களையும் இரத்தினபரணங்களையும் பலபீதாம்பரத்தையும் இவைபோன்றனவாகிய பிறவற்றையும் பெற்றுக் கற்பகவிருக்ஷம் (ஒருபக்கலில்) எடுத்துக்கொடுக்கவும். (கக)

ஐங்கணி யமுத மைந்தங் கௌவிய மமுது தூபஞ்
செங்கதிர் விளக்க மின்ன தேவடான் கொடுப்பச் சேற்கண்
நங்கைதன் பதியைப் பூசித் தாபிர நாமங் கூறிப்
பைங்கதிர் முத்தஞ் சாத்தித் தொழுதடி பணிந்து நின்றான்.

(இ - ள்) (வாழை முதலிய) ஐந்து கனிகளும் பஞ்சாமிர்தங்களும் பஞ்சகவ்வியங்களும் திருவமுதும் தூபமும் சிவந்த வொளியையுடைய தீபமும் (ஆகிய) இவைபோல்வனவற்றைக் காமதேனு (ஒருபக்கலில்) வழங்கவும், அங்கயற்கணம்மையார் தலைவராகிய சோமசுந்தரக்கடவுளை (ஆகமமுறைப்படி) பூசித்து, ஸஹஸ்ரநாமங்களால் துதித்து, (ஒவ்வொரு திருநாமத்திற்கும்) பலிய ஒளி பொருந்திய முத்துக்களைச்சாத்தி (அருச்சனைசெய்து) திருவடியிற்றொழுது பணிந்து நின்றனன் வருணன். (உ0)

அருச்சனை யுவந்த வாதி யமலனீ யாது வேண்டிற்
றுரைத்தியென் றோத நீர்க்கோ னுலகிலாதாழ்ந் தொன்றி னுலும்
கரைத்திட வரிய விந்தக் கடியவென் வயிற்று நோய்கின்
திரைத்தட மாடி யின்னே தீர்ந்திடப் பெற்றே னெந்தாய்.

(இ - ள்) (அவன் செய்த) அருச்சனையை மகிழ்ந்தருளிய முதற்கடவுளும் நிமலமூர்த்தியுமாகிய சோமசுந்தரப்பெருமான் 'நீ இச்சித்தது யாது? சொல்லுவாய்' என்று வினவ, வருணன் விரைவில் பணிந்து ஒருவகையிலுலும் நீங்குதலில்லாத இந்தக் கொடிய எனது வயிற்றுநோய் உமது அலைகள் பொருந்திய (பொற்றாமரைத்) தீர்த்தத்தில் நீராடி இப்பொழுதே தீரப்பெற்றேன்.

(வி - ம்) ஒன்றினுலும் என்றது, மணி - மந்திரம் - ஔஷதாதிகளையுணர்த்தற்கென்க. (உக)

வேறு

வேதமுதற் கலைகாட்சி முதலளவை விரிஞ்சன்முதல் விண்ணோர் செய்யுள், சோதனையு ளகப்படாச் சோதியுனைச் சோதிக்கத் துணிந்தே னந்தோ, பேதைமையே னிடத்தென்ன குணங்கண்டென் பிணிதீர்த் தென்பெற்ற யாசை, கோதமிலாய் குற்றமே குணமாகக் கொள்வது நின் குணமோ ஐயா.

(இ - ள்) வேதமுதலிய கலைகளுக்கும், காட்சி முதலிய பிரமாணங்களுக்கும், பிரமன் முதலிய தேவர்கள் செய்கின்ற ஆராய்ச்சிகளுக்கும் அகப்படாத ஒளிப்பிழம்பே! உனது கிலேமையை நான் ஆராயத் துணிந்தேன்; ஐயோ! (அத்தகைய) அறிவிலேனிடத்தில் யாது (நற்) குணங்கண்டு என்னுடைய (வயிற்று) நோயைத் தீர்த்து என்ன பலனை அடைந்தாய்? விருப்பு வெறுப்புகளில்லாதவனே! ஐயனே! (அடியவர்கள் செய்யும்) குற்றத்தைக் குணமாகக் கொண்டருளுவது உன்னுடைய குணமோ? (அறிகிலேன்.) (உஉ)

பொன்னகரான் காலந்தாழ்த் தினையருச்சித் தயர்ச்சியோடும் போன வாறும், என்னெனயான் வினவியதும் வலாரியிறை கொடுத் ததுமவ் விறைக்கு நேர்யான், பின்னவிஞ் யதுமவன்சொல் வழியுன் னீச் சோதித்த பெற்றி தானும், முன்னவனே யுன்னருளா லென் பிணிக்கு மருந்தாகி முடிந்த வாறும்.

(இ - ள்) (யாவர்க்கும்) முதல்வனே! பொன்னகரத்தையுடைய இந்திரன் காலந்தாழ்த்து உன்னை அருச்சனை செய்து மனத்தளர்வுடன் (தன்னகரத்திற்கு) சென்றவிதமும், (அச்சோர்வு நோக்கி) என்னகாரணம்? என்று நான் வினவியதும், (அதற்கு) இந்திரன் (காலந்தாழ்த்துப் பூசித்தேன் என்று) விடை கொடுத்ததும், அவ்விடைக்கு நேராக (உனதுபிரபாவங்களை) யான் பின்னும் வினவியதும், அவன் விடைவழியினின்று உன்னைச்சோதித்த தன்மையும், (ஆகிய இவையொவ்வொன்றும்) உனது திருவருளால் எனது நோய்க்கு மருந்தாகி முடிந்த வகையாம். (உங)

ஆறுமதி முடியணிந்த அருட்கடலே வயிற்றுநோ யன்றி மேனாள் மாறுபடு மிருவினையு மலவலியுங் கெட்டீட்டின் வழியும் பற்றேறன் ஏ வேறினிமற் றிதமென்னை மணியென்னை மருந்தென்னை மெய்ம்மை யாகத் தேறுமவர்க் கிப்புனித தீர்த்தமே பிணியனைத்துந் தீர்ப்ப தன்றே.

(இ - ள்) கங்கையையும் சந்திரனையும் சடைமுடியிலணிந்த திருபா சமுத்திரமே! (எனது) வயிற்றுநோயே யல்லாமல், அநாதியே (என்னுடன்) மாறுபட்டு நிற்கும் இருவினைகளும் மலவன்மையுங் கெட, மோக்ஷமார்க்கத்தையு மடைந்தேன்; இனி வேறு மந்திரம் யாதுளது? மணி யாதுளது? மருந்து யாதுளது? உண்மையாகத் தெளிந்தவர்க்கு இத்தப் புனிதமாகிய (பொற்றீர மரைத்) தீர்த்தமே நோய் முற்றும் தீர்ப்பதல்லவா? (உச)

வேறு

அடியனேன் முன்னஞ் செய்த அபராத மிரண்டுந் தீரும்
படிபோலுத் தருள்வா யென்று பன்முறை பரவித் தாழ்ந்து
மடிவிலா மகிழ்ச்சி பொங்க வரங்களுஞ் சிறிது வேண்டிக்
கடியதன் னகரம் புக்கான் குடதிசைக் காவல் வேந்தன்.

(இ - ள்) மேற்றிசைக்காவலனாகிய வருணன், அடியேன் முன்பு (அறிவில்லாமல்) செய்த இரண்டு குற்றங்களையும் தீரும் வண்ணம் பொறுத்தரு

திருவைச்செய்வாய் என்று பலமுறையும் அதித்துப்பணித்து, அழிவில்லாத மகிழ்ச்சி யோங்கும்படி சிறிது வரங்களையும் (வேண்டி) பெற்று ஒளியையுடைய தன்னகரிற்குச் சென்றான்.

(வி - ம்) இரண்டு அபராதம் என்றது முன்மதுரையை யழிக்கக் கடலை விடுத்ததும் மீண்டு மேகங்களை விடுத்ததுமாம். (உரி)

வண்டிறல் வருணன் விட்ட வாரியை விலக்க ஈசன்
மின்திகழ் சடையி னின்று நீங்கிய மேக நான்கும்
குன்றுபோ னிவந்து நான்கு கூடமாக் கூட லாலே
அன்றுநான் மாடக் கூட லானதான் மதுரை மூதூர்.

(இ - ள்) வண்மை பொருந்திய வருணன் விடுத்த சத்தமேகங்களையும் விலக்குதற் பொருட்டு, சோமசுந்தரப் பெருமானுடைய மின்னல்போல விளங்கும் சடையிலிருந்து நீங்கிய (புஷ்கலாவருத்த முதலிய) நான்கு மேகங்களும், மலைபோல மேலேறி நான்கு கூடங்களாய்க் கூடுதலாலே மதுரையாகிய பழைய நகரம் அன்றுமுதல் நான்மாடக்கூடல் என்னும் பெயருடையதாயிற்று. (உசு)

ஆ திருவிருத்தம் - கஙஙஉ.

இருபதாவது
எல்லாம்வல்ல சித்தர்
திருவிளையாடற் படலம்

சத்த நான்மறைப் பொருள்வரை தள்ளுநீண் முடிமேல்
வைத்த கார்கள்நான் மாடமாய் மதுரைமேல் வருணன்
உய்த்த மாரியைத் தடுத்தவா றுரைத்துமே றுயர்த்தோர்
சித்த ராய்வினை யாடிய செயல்சிறி துரைப்பாம்.

(இ - ள்) நாதமாத்திரையாகிய நான்கு வேதங்களின் பொருளளவைக் கடந்த நெடிய சடாமுடியில் அணிந்த (புஷ்கலாவருத்த முதலிய மேகங்கள் நான்கும்) நான்கு மாடங்களாய், மதுராபுரியின் பேரில் வருணன் விடுத்த மேகங்களைத் தடைசெய்த திருவிளையாடலைக் கூறினேனும். இடபத்தைக் கொடியாக வுயர்த்திய சோமசுந்தரக் கடவுள் (எல்லாம் வல்ல) சித்தமூர்த்தியாய்த் திருவிளையாடல் செய்த செயலை (யாம் இனி) சிறிது கூறுவாம். (க)

தேட ருங்கதிர் மணிமுடிச் செழியனும் பாண்டி
நாட ருந்திரு வெய்திமே னல்லவீ டெய்தக்
கூட லம்பதி மேவிய குணங்குறி கடந்த
வேட ரங்கொரு சித்தமெய் வேடராய் வருவார்.

(இ - ள்) தேடிக்கிடைத்தற்கரிய ஒளிபொருந்திய கவரத்தினங்களிழைத்த கிரீடத்தை யணிந்த அபிஷேக பாண்டியனும் பாண்டி காட்டி லுள்ளாரும் செல்வ மடைந்து மூறுமையில் கல்ல மோக்ஷத்தைப் பெற, அழகிய மதுரைப் பதியில் எழுந்தருளிய குணங்குறிகட்கதீதப்பட்ட திருவேடத்தையுடைய சோமசுந்தரப் பெருமானுர் அக்ககரில் ஒரு சித்தவடிவமாகிய திருவேடமுடையவராய் வருகின்றுர்.

(வி - ம்) 'குணம் குறி கடந்த வேடர்' என்றதில், குணம் என்றது, இராஜசு, தாமசு, சாத்துவம் என்னு மூக்குணங்களேயும், குறியென்றது ஆண் பெண் என்னும் பகுப்பினேயும் உணர்த்தலின், வேடர் என்றது குணங்குறிகடந்து கின்ற நிஷ்களை சிவத்தை யென்க. (உ)

வட்ட வார்சடைக் குஞ்சியும் பூணுரூன் மார்பும்
இட்ட நீறணி திலகமு மிணக்குழை தூங்க
விட்ட வெள்ளேமுத் திரையுந்தோல் விரித்தபட் டிகையுஞ்
சுட்ட வெண்பொடிப் பொக்கணக் தூக்கிய தோளும்.

(இ - ள்) வட்டமாகக் கட்டிய நீண்ட சடையாகிய சிகையும், உபவீதம் அணிந்த திருமார்பும், இட்ட திருநீற்றின்மேல் அணிந்த திலகமும், பொருத்தாதலுடைய குண்டலங்கள் தொங்கவிட்ட சங்காலாகிய தோடும், புலித்தோலாற் செய்த யோக பட்டிகையும், நீற்றிய தாவள்ளியமாகிய விபூதிப் பொக்கணம் தொங்கவிட்ட திருத்தோளும்.

இது முதல் பதினெட்டுச் செய்யுள்கள் குளகம்.

(வி - ம்) பொக்கணம் - இப்பிவடிவமாகத் தலையோட்டா லமைத்துப் பிறர்க்குத் திருவெண்ணீறு தருவதற்கு உபயோகிக்கும் ஒருகருவி என்பர் பேராசிரியர். ஐக்து முகங்கள் தலையிற் பொருத்தச் செய்த வட்ட வடிவாகிய ஒரு பை என்னலு மொன்றும். (ஊ)

துய்ய வெண்பொடி யழிந்துமெய் சிவந்திடச் சுவடு
செய்யும் வெண்டிரட் படிகரீண் மாலையுஞ் சிவந்த
கையி லங்குகட் டங்கமுங் கண்டவர் மனஞ்சென்
றய்ய வன்புற வீக்கிய வுதரபந் தனமும்.

(இ - ள்) பரிசுத்தமாகிய வெள்ளிய திருநீறு அழிந்து திருமேனி சிவக்கச் சுவடு செய்யாகின்ற வெள்ளிய திரண்ட படிகமணிகள் கோத்த நீண்டமாலையும், சிவந்த கையில் விளங்கும் மழுவும், கண்டவர்களுடைய மனம் சென்று (பதிந்து) உச்சிவிக்கச் சிக்கெனக் கட்டிய திருவுதரபந்தனமும். (எ)

அட்ட வேங்கையி ருரிவைகீண் டசைத்தகோ வணமும்
ஒட்டி வீக்கிய புலியத ளுடுக்கையு மிடைத்தோள்
இட்ட யோகபட் டிகையும்பொன் னிடையிடை கட்டப்
பட்ட சுஃறிருலி வேத்திரப் படைக்கையும் படைத்து.

(இ - ள்) தான்கொன்ற வேங்கையி னின்றீர்ந்த தோலைக் கிழித்துக் கட்டிய திருக்கோவணமும், (இடையில்) பொருந்தக் கட்டிய புலித்தோல் ஆடை

யும், இடத்தோளிலிட்ட யோகபட்டிகையும், (கம்பியாகச் செய்த) பொன்னூல் இடையிடையே கட்டப்பட்ட சுஃறென்னும் ஒலிக்குறிப்பையுடைய பிரம்பாயுதம் தாங்கிய திருக்கரமும், (ஆகிய இவற்றை) கொண்டருளி.

(வி - ம்) சுஃறெனலி என்றது பிரம்பை வீசுகையில் உண்டாகும் ஒலிக் குறிப்பு. (நி)

வேத கிண்கிணி சிலம்புசூழ்ந் தடிகளின் மிழற்ற
ஓத ரும்பத மூளரி யுருண்மது வொழுகப்
போத வானந்த மதுதுகர்ந் தலர்முகம் பொலியப்
பாத பங்கய முபநிடப் பாதுகை சூட.

(இ - ள்) வேதமே கிண்கிணியாகவுஞ் சிலம்பாகவுஞ் சூழ்ந்து திருவடிகளிற் சத்திக்கவும், சொல்லுதற்கரிய ஆத்திருவடித் தாமரையினின்று ஊற் றெடுக்கின்ற திருவருளாகிய தேன் சித்தவும், சிதானந்தமாகிய தேனைப் பருகி, மலர்ந்த திருமுகம் விளங்கவும், திருவடித் தாமரைகள் உபநிடதமாகிய பாதுகையைச் சூடவும்.

சிவஞானசித்தியார்

(வி - ம்) "போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிவ தோரார்
யோகியா யோக முத்தி யுத்வுத லதுவு மோரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி ஞருவ னென்பார்"

என்றபடி பரசிவம் பலமூர்த்தங்களாகச் சகளீகரித்தல் ஆன்மாக்களுக்கு அருள் செய்தற் பொருட்டாகலின், அவ்வமயத்து, தமது திருவடியைத் தேடிக் கண்டறியாது தடுமாறி நின்ற வேதமும் உபநிடதமும் முறையே கிண்கிணியும் பாதுகையுமாக உருமாறிச் சூழ்ந்து நின்றனவென்பார் "வேதகிண்கிணி சிலம்புசூழ்ந் தடிகளின் மிழற்ற" என்றும், "பாதபங்கய முபநிடப் பாதுகை சூட" என்றுங் கூறினர். (சு)

சிறிது மூரலும் வெயர்வையுந் திருமுகத் தரும்பக்
குறுகி யாவணஞ் சித்திர கூடநாற் சந்தி
மறுகு சூளிகை யுபரிகை மாளிகை வாயில்
அறுகு சூழ்நிரைத் தெற்றியிவ் விடந்தொறு மடைந்து.

(இ - ள்) சிறிது புன்சிரிப்பும் வேர்வையுந் திருமுகத்தில் அரும்பச் சென்று, கடைவீதியும், சித்திர கூடமும், நாற்றெருக்கள் கூடுமிடமும், வீதியும், இறப்பினையுடைய உபரிகையும், மாளிகை வாயிலும், சிங்கத்தால் வரிசைபடச் சுமக்கப்பட்ட திண்ணையும் (ஆகிய) இந்த இடங்களிலெல்லாஞ் சேர்ந்து.

தேற்கி ருப்பவர் போல்வட திசைவயிற் சென்று
புக்கி ருப்பதுங் கிழக்குளார் போலமேற் றிசையில்
நக்கி ருப்பதும் யாவரு நாடின ரறியத்
தக்க தன்றியே யிந்திர சாலமாத் தணந்தும்.

(இ - ள்) தென்றிசையி லிருப்பார்போல வடதிசையிற் போயீச் சேர்ந் திருத்தலும், கீழ்த்திசையி லீருப்பார்போல மேற்றிசையிற் போய்ச் சிரித்திருத் தலும், (கண்டறியும்படி கண்ணிமை கொட்டாது) பார்த்திருன்ற எவரும் (மீட் டும் தேடி) அறியக் கூடாத வகையாக இந்திரசாலமாய் மறைந்தருளியும். (அ).

சேய வெற்பினை யணியதாச் செய்தமற் றணித்தாய்
மேய வெற்பினைச் சேயதா விடுத்திமெய் மூதுமூப்
பாய மகளிர யிளையவ ராக்கியுங் குதலை
வாய மக்களைக் கழிமுது மக்களா வகுத்தும்.

(இ - ள்) தூரத்திலிருக்கும் மலையைச் சமீபத்தி லிருப்பதாகச் செய்தும், சமீபத்தி லுள்ளதாய்ப் பொருந்திய மலையைத் தூரத்திலுள்ளதாகச் செய்தும், தேக முதிர்ந்த கிழப்பருவம் வாய்ந்த மாதுடரை வாலிபராக்கியும், குதலைச் சொல் பேசும் வாயையுடைய குழந்தைகளை மிக்க கிழவர்களாகச் செய்தும்.

(வி - ம்) தூரத்திலுள்ள பொருளைச் சமீபத்து வருவித்தல் **ஆகருஷணம்.** கிழவரைப் பாலராகவும் பாலரைக் கிழவராகவுஞ் செய்தல் **வயத்தம்பம்.** (கூ).

ஆணைப் பெண்ணுரு வாக்கியும் பெண்ணையா ணுருவா
மாணைக் காட்டியு மலடியை மகப்பெறச் செய்தும்
கோணற் கூன்செவி நீமைகண் குருடுபங் கெவருங்
காணத் தீர்த்துகா லுலோகமுங் கனகமாச் செய்தும்.

(இ - ள்) ஆணினைப் பெண்ணின் வடிவாகச் செய்தும், பெண்ணினை மாட்சிமைப்பட ஆண் வடிவாகச் செய்தும், மலடியைக் குழந்தைபெறச் செய் தும், (முதுகு) வளைந்த கூன் - செவிடு - ஊமை - கண்குருடு - முடம் (ஆக உள்ளவர்களின் குறைபாடுகளை) யாவரும் பார்க்கத் தீர்த்தருளியும், நான்கு உலோகங்களையும் பொன்னுகச் செய்தும்.

(வி - ம்) காலுலோகமாவன : வெள்ளி - செம்பு - இரும்பு - ஈயம். இவற் றைப் பொன்னுக்குதல் **வாதம்** எனப்படும். (கo).

செல்வர் தம்மனைப் பொருளெலாம் வறுமையிற் சிறந்தோர்
இல்ல மெய்தவு நட்டவ ரிகலின்றித் தம்மின்
மல்லு வெஞ்சம நிழைப்பவுங் காஞ்சிர மரத்தின்
நல்ல தீங்கனி பழுப்பவும் விஞ்சைகள் நயந்தும்.

(இ - ள்) தனிகர்களுடைய வீட்டிலுள்ள செல்வமெல்லாம், தரித்திரத் தில் மேம்பட்டோர் வீட்டிலடையவும், சிநேகித்தவர்கள் தம்முட் சிறிதும் விரோத மில்லாமலே கொடிய மல்யுத்தஞ் செய்யவும், எட்டிமரத்திலே நல்ல மதுரமாகிய பழங்கள் பழுக்கவும், (இவ்வகைய அரிய) வித்தைகளைச் செய் தருளியும். (கக).

பருவ மாறிய பருவத்தில் வைகைநீர் பரந்து
வருவ தாக்கியு மீளவும் வறந்திடச் செய்தும்

பொருவில் தீஞ்சுவை யோடையும் பொய்கையு முவர்ப்புத்
தருவ வாக்கிய முவரியின் சுவையவீர்த் தந்தும்.

(இ - ள்) (நீர் பெருகுதற்கு) காலமல்லாத காலத்திலும் வைகைநதி சலப் பெருக்கெடுத்து வரச்செய்தருளியும், திரும்பவும் (ஜீர) பெருக்கை வற்றச்செய் தருளியும், சமானமில்லாத மதுரமாகிய சுவையையுடைய ஓடைநீரும் பொய்கை நீரும் உவர்ப்புத் தருவனவாகச் செய்தருளியும், உவர்ப்பையுடைய (கடல்) நீரை இனிய சுவையுடையதாகச் செய்தருளியும். (கஉ)

வீசி மாத்திரைக் கோலினை விண்ணில்நட் டதன்மேல்
ஊசி நாட்டியிட் டுசிமேற் பெருவிர லூன்றி
ஆசி லாடியு மூசிமேற் றலைழுக் காக
மாசில் சேவடிப் போதுவான் மலர்ந்திடச் சுழன்றும்.

(இ - ள்) மாத்திரைக்கோல ஆகாயத்தில் வீசிநட்டு அம்மாத்திரைக் கோலின் பேரில் ஊசியை நாட்டி, அவ்வூசியின் பேரில் பெருவிரலை யூன்றிக் குறைவின்றி விளையாடி யருளியும், அவ்வூசியின் பேரில் தலைழுக்காக குற்ற மில்லாத தம்முடைய சிவந்த திருவடிக் கமலங்கள் ஆகாயத்தில் மலரச் சுழன் றாடியருளியும். (கூ)

சண்ட வெம்பணிப் பகையெனப் பறந்துவிண் தாவிக்
கொண்ட லூப்பிடித் திடியொடுங் குடித்தநீர் பிழிந்து
கண்ட வர்க்கதி சயம்பெறக் காட்டியுங் காண
விண்ட லத்தினிற் பண்டுபோ லிறைகொள விடுத்தும்.

(இ - ள்) கொடிய வேகத்தையுடைய கருடன்போலப் பறந்து, ஆகாயத் தில் தாவி (சீசென்று) மேகத்தைப் பிடித்து, இடியுடன் அவை பருகிய நீரைப் பிழிந்து, பார்ப்போர்க்கு வியப்புண்டாக (அம்மேகங்களைக்) காட்டியருளியும், (யாவரும்) பார்க்கும்படி (அந்த) ஆகாயத்தில் (அவற்றை) முன்போல உலாவி வசிக்க விடுத்தருளியும். (கச)

எல்லி டைப்படும் பொருள்களை யிராவெழப் பார்த்தும்
அல்லி டைப்படும் பொருள்களைப் பகல்வர வமைத்தும்
வல்ல ழற்புன லுளர்வளி வலிகெடப் பார்த்தும்
நல்ல போதுகாய் கனியிலா நாள்படக் கண்டும்.

(இ - ள்) பகலிற்றோன்றும் (சூரியன் முதலிய) பொருள்களை இரவில் வரப் பார்த்தருளியும், இரவிற்றோன்றும் (சந்திரன் முதலிய) பொருள்களைப் பகலில் வரச் செய்தருளியும், கொடிய அக்கினியும், சலமும், சஞ்சரிக்குங் காற் றும் (ஆகிய இவற்றின்) வேகவன்மைகள் கெடப் பார்த்தருளியும், மணம் பொருந்திய மலர்களும், காய்களும் கனிகளும் இல்லாத பருவங்களில் (மலரவும் காய்க்கவும், பழுக்கவும்) உளவாகச் செய்தருளியும். (கடி)

மீளா காலிழிச் கிழவரைப் பிரம்பினூல் வருடிக்
காளை யாடவ ராக்கியக் கணவருக் கிசைய

வீளை வாய்முது கற்பினர் கருவடைந் திளமை
ஆள வேத்திரம் வருடிநீ ரளித்தருள் செய்தும்.

(இ - ள்) வீளைசொரியுங் கண்களையுடைய விருத்தர்களை (தாம் எந்திய) பிரம்பினால் தடவிக் காளைப்பருவத்தை யுடைய வாலிபர்களாகச் செய்தருளி, (வாலிபர்களாகிய) அத்தக்கணவர்கள் மனந்திற்கியைய வீளைவாய்ந்த வாயையுடைய கிழத்தன்மைவாய்ந்த கற்பமைந்த மனைவியர் கருப்பமுற்று மங்கைப் பருவத்தையடையப் பிரம்பால் தடவித் திருவெண்ணீறு பிரசாதித்துக் கிருபை செய்தருளியும்.

(வி - ம்) வீளை - ஒருவித வாயொலி. வேத்திரம் - பிரம்பு. (கசு)

அகர மாதிமூன் றுகிய ஆகரு டணமே
புகரி லாவதி ரிச்சிய மஞ்சனம் பொருவில்
வகர மாதிமூன் றுகிய வசியமே வாதம்
இகலி லாவயத் தம்பமென் றின்னவை செய்தும்.

(இ - ள்) அகாரத்தை முதலாகவுடைய மூன்றுகிய ஆகருடணமும், குற்றமில்லாத அதிரிசியமும், அஞ்சனமும், சமானமில்லாத வகாரத்தை முதலாகவுடைய மூன்றுகிய வசியமும், வாதமும், தம்முள் மாறுபடாத வயஸ்தம்பமும் என்று சொல்லப்பட்ட இவைபோல்வனவற்றைச் செய்தருளியும்.

(வி - ம்) அகரத்தின் விகாரமே ஆகாரமாதலால் ஆகாரத்தை அகரத்துள் ளடக்கி "அகரமாதி மூன்று" என்றார். "வகரமாதி மூன்று" என்றதில் இப்படியே வாகாரமும் வகாரத்துள் ளடங்குதல்பற்றிக் கூறப்பட்ட தென்க.

ஆகருஷணம் - தூரத்திலுள்ளதைச் சமீபத்து வருவித்தல்.
அதிரிச்சியம் - கண்களுக்குப் புலப்படுவதைப் புலப்படாமற் செய்தல்.
அஞ்சனம் - மறைந்து கிடக்கும் பொருள்களை விளக்கிக் காட்டுதல்.
வசியம் - பகைவரைத் தன்வயமாக்கல்.
வாதம் - இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கல்.
வயஸ்தம்பம் - வயதைத் தம்பித்தல்; [யவ்வணமாக இருக்கச்செய்தல்.(கஎ)

வேத நூல்மெனி யார்களெக் கலைகளும் விளங்கப்
பூத நாவினிற் சிதறியும் பூழியன் காதன்
மாத ராரொடும் பயில்புது மணமலர்க் காவிற்
காத நீண்டகோட் டெங்கினைக் கரும்பனை செய்தும்.

(இ - ள்) வேதநூல (முறையே) உணராதவர்களுக்கு அறுபத்துநான்கு கலைகளும் (ஐயம் திரிபு அறியாமைகளின்றி) விளங்கத் திருவெண்ணீற்றினை அவர்களுடைய நாவிற் சிதறியும், அபிஷேகபாண்டியன் (தனது) ஆசை பொருந்திய மனைவியுடன் சஞ்சரித்தலவும் அன்றலர்ந்த மணமமைந்த மலர்கள் நிறைந்த பூஞ்சோலையிலுள்ள காததூரம் உயர்ந்த வலிய தென்னமரத்தைக் கரிய பனைமரமாகச் செய்தருளியும். (கஅ)

ஏனை வான்தருக் குலங்களைப் புட்களை யிருகோட்
டானை யாகிபல் விலங்கினை யொன்றை யொன்றுக

ஞான நோக்கினு ணெக்கிய நாடிய விளையோர்
மானி னெக்கிய ராகிலோ மெனவெழில் வாய்த்தும்.

(இ - ள்) அது வொழிந்த மரக்கூட்டங்களையும், பறவைகளையும், இரண்டு கொம்பினையுடைய யானைமுதலிய பல மிருகங்களையும், ஒன்றைப் பிறிதொன்று ஞான திருட்டியால் நோக்கியருளியும், (எல்லோரும்) விரும்பத்தக்க (அழகமைத்த) காளையும், மான்போலும் (மருண்ட) பார்வையுடைய மாதர்களாகளே மல்லேமென்று கருதப் பேரழகு வாய்த்தருளியும். (கக)

நாக நாடுபொன் னுட்டுள பொருளுமந் நகருள்
ஆக வாக்கியு மின்னணம் விச்சைக ளனந்தம்
மாக நாயகன் மலைமக ணுயகுன் மதுரை
ஏக நாயகன் திருவிளை யாடல்செய் திருந்தான்.

(இ - ள்) பாதலத்திலுள்ள பொருள்கள் வானுலகத்திலுள்ள பொருள்களாகவும், வானுலகத்திலுள்ள பொருள்கள் பாதலத்திலுள்ள பொருள்களாகவுஞ் செய்தருளியும், இவ்விதமாக எண்ணிறந்த (ஆகருஷண முதலிய) வித்தைகளை, சிவலோகத்திற்கு இறைவரும் மலையரசபுத்திரியாருக்கிறைவரும் மதுரையில் எழுந்தருளியுள்ள ஏகநாயகருமாகிய சித்தமூர்த்திகள் (வடிவம் வாய்ந்த சோமசுந்தரக்கடவுள்) திருவிளையாடல்களாகச் செய்திருந்தருளினர்.

(வி - ம்) ஏகம் - ஒப்பின்மை. இது சிந்தாமணியில் நச்சினார்க்கினியருரையிற் கண்டது. (உ0)

சித்த யோகிகள் செய்கின்ற ஆடல்மேற் செலுத்தி
வைத்த கண்களுஞ் சிந்தையும் வாங்கலர் திகைத்துத்
தத்த மாள்வினைத் தொழில்மறந் திருந்தனர் தகைசால்
முத்த வேதிய ராதிய முதுகுகர் மாக்கள்.

(இ - ள்) பெருந்தன்மையும் முத்தத்தன்மையும் வாய்ந்த பிராமணர் முதலிய தொன்றுதொட்டுள்ள மதுராபுரியிலுள்ள மாந்தர்கள் சித்தயோகிகள் செய்தருளுந் திருவிளையாடல்களிற் செலுத்தி வைத்த கண்களையும் மனத்தையும் (தம் வசமாக) மீட்க வலியில்லாதவர்களாய் மயங்கித் தத்தமது தொழில் முதலியவற்றையு மறந்து தம்பித்து இருந்தார்கள்.

(வி - ம்) முத்தத் தன்மையாவது ஆன்மாவின் தோற்றமற்றுச் சிவத் தோற்றமாம் நிலையில் நிற்றல். (உக)

இனைய செய்தியை யுழையரா லிறைமக னறிந்தான்
அனைய சித்தரை யிங்ஙனந் தருகென வடித்தார்
தனைய கற்றினன் சித்தரைச் சார்ந்தவர் தாழும்
வினையை வென்றவ ராடலே வியந்துகண் டிருந்தார்.

(இ - ள்) இவ்வகைய அற்புதங்களை வேவுகாரரால் அபிஷேக பாண்டியன் உணர்ந்து, அப்படிப்பட்ட (அற்புதங்களைச் செய்யவல்ல) சித்தமூர்த்திகளை இவ்

விடத்திற்கு அழைத்துவரக் கடவீர் என்று கூறித் தம்பால நின்றவர்களை அனுப்பினன். அவர்களுழ் சென்றனை பெற்று) சித்தமூர்த்திகளை யடைந்து (இயற்கையாகவே) வினைச் சம்பந்தத்தினின்று நீங்கிய அந்தச் சித்தமூர்த்திகள் திருவிளையாடலைக் களித்துப் பார்த்து (அவர் வசத்தராய்) இருந்தார்கள்.

(வி - ம்) அறிந்தான் என்றது முற்றெச்சம். (உஉ)

அமைச்சர் தங்களை விடுத்தன னமைச்சருஞ் சித்தர்
தமைச்ச ரண்பணிந் தாசன்மூன் வருகெனத் தவத்தோர்
எமக்கு மன்னனு லென்பய னெனமறுத் திடமண்
சுமக்கு மன்னவன் தம்மவர் தொழுதனர் போனார்.

(இ - ள்) (அழைத்து வரும்படி சென்ற வேவுகாரர்கள் வராமையால்) மந்திரிகளை யனுப்பினன். (அவ்வாறு சென்ற) மந்திரிகளுஞ் சித்தமூர்த்திகளைப் பணிந்து, (சுவாமிகளே! எங்கள்) அரசு சமுகத்திற்கு வரக்கடவீரென்று கூற, அச்சித்தமூர்த்திகள் எமக்கு அவ்வரசனால் யாது பலன் (வேண்டியது) ? என்று தடுக்க, உலகபாரத்தைத் தாங்கும் பாண்டியன் தமர்களாகிய மந்திரிகள் பணிந்து சென்றார்கள். (உங)

வேறு

மன்னன்மு னமைச்சர் சித்தர்மறுத்துரை மாற்றங் கூற
முன்னவ னருள்பெற் றிம்மை மறுமையு முனிந்த யோகர்
இந்நில வேந்தர் மட்டோ இந்திர னயன்மா லாதீர்
தன்னையு மதிப்ப தோவென் றிருந்தனன் தருமை வேந்தன்.

(இ - ள்) மந்திரிமார்கள் அபிஷேகபாண்டியன் சமுகத்தில் (சென்று) சித்தமூர்த்திகள் (தம்முடன் வரத்) தடுத்துக்கூறிய சொல்லை உரைக்க, தரும சொரூபமாகிய அபிஷேக பாண்டியன், சிவானுக்கிரகம் பெற்று இம்மை மறுமைப் பயன்களையும் வெறுத்த யோகவான்கள் இப்பூலோக மன்னர்களை மாத்திரமோ இந்திரன் பிரமன் திருமால் (முதலிய) பிற தேவர்களையும் மதிப்பார்களோ ? (மதியார்கள்) என்று இருந்தான்.

(வி - ம்) முனிதல் - வெறுத்தல். அது அருளுஞ் சினமுமின்றி இடைநிகர்த்தல். (உச)

ஆ திருவிருத்தம் - கஉஉக.

இருபத்தொராவது
கல்லானைக்குக் கரும்பருத்தியபடலம்

செல்லார் பொழில்சூழ் மதுராபுரிச் சித்த செல்லாம்
வல்லா ரவரா டலையா ருரைசெய்ய வல்லார்
எல்லாரும் வியப்புற இத்தனிச் சித்த சாமி
கல்லானை தின்னக் கரும்பீந்த கதையுஞ் சொல்வாம்.

(இ - ள்) மேகங்கள் பொருந்திய சோலை சூழ்ந்த மதுரைப்பதியில் எழுந் தருளிய எல்லாம் வல்லவராகிய சித்தமூர்த்திகள் (செய்தருளிய) திருவிளை யாடலை யாவர் எடுத்துச் சொல்ல வல்லவர் ? பார்த்தோர் யாவரும் ஆச்சரியப் பட ஒப்பில்லாத இத்தச் சித்தமூர்த்திகள் கல்லானை தின்னும்படி கரும்பைக் கொடுத்தருளிய திருவிளையாடலையும் (யாம் இனிச்) சொல்வாம். (க)

பின்னேய மச்சம் பெருகப் பெரியோரை யெண்ணு
தென்னே யெளியா ரெனையானிகழ்ந் திங்க னீண்டச்
சொன்னே னவர்க்கென் குறையென்னிற் றுருவி நானே
தன்னே ரிலாதார் தமைக்காணத் தருவ தென்னு.

(இ - ள்) பிறகு (சித்தமூர்த்திகளிடத்தில்) அன்பும் அச்சமும் மிகும்படி இஃதென்ன ? பெரியோரை மதியாமற் சாமானியரைப்போல அவமதித்து நான் இவ்விடத்து வரும்படி (மந்திரிகள் மூலமாக) சொல்லி(யனுப்பி)னேன். அச்சித்தமூர்த்திகளுக்கு என்னிடத்திற் பெறுங்குறைபாடு யாது? நானே (அவரை) தேடி, தமக்கு ஒப்பில்லாதவராகிய அச்சித்தமூர்த்திகளைக் காணக்கடவனென்று நினைத்தி.

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம். (உ)

ஆனந்த சித்தர் தமைக்காண்பலென் றன்பு கூர்ந்த
மீனந் தரித்த கொடிவேந்தன் குறிப்பு நோக்கி
மோனந் தரித்த சிவயோகரு மூர்த்தித் தம்பொன்
மானந் தனக்கு வடமேற்றிசை வந்தி ருந்தார்.

(இ - ள்) பேரின்ப மயமாகிய சித்தமூர்த்திகளைத் தரிசிப்பேனென்று அன்பு மிகுந்த மீனக்கொடி தாங்கிய அபிஷேக பாண்டியனுடைய உள்ளக் குறிப்பை யறிந்து, மௌனநிலையை மேற்கொண்ட சித்தமூர்த்திகளும் (அப் பாண்டியனுக்கு) முற்பட்டு, தமது இந்திரவிமானத்துக்கு வடமேற்றிசையில் வந்திருந்தருளினர்.

(வி - ம்) குறிப்பு நோக்கி யென்றது எல்லாம் வல்ல சித்தாதலின். (ங)

அருகாத செல்வத் தவனன்றுதைத் திங்க டோற்றம்
வருகால மாக மதுசோசனை வந்து வந்தித்

துருகா தரத்தாற் கழிந்துள்வல மாக மீள
வருவா னவன்முன் வருகாஞ்சுகி வன்கண் மாக்கள்.

(இ - ள்) அக்கூர்ல் மகரமாதப் பிரவேசம் வருங்காலமாக, நிறைந்த செல்வத்தையுடைய அபிஷேகபாண்டியன் வந்து சோமசுந்தரக் கடவுளைப் பணிந்து (மனம்) உருகுதற்கேதுவாகிய அன்பினால் மிகுந்து உள்ளே பிரதக்ஷிணமாகத் திரும்பிவரும் அப்பாண்டியன் முன்னர்க் கஞ்சுகிகளாகிய அஞ்சாமையையுடைய மெய்க்காப்பாளர்.

(வி - ம்) கஞ்சுகிகள் - அரசனைச் சூழ்ந்து செல்லும் மெய்க்காப்பாளர்கள்; ஈண்டு இவர்கள் அரசன்முன் கைக்கோலால் வழி விலக்கிச் செல்லா நின்றார்கள் என்க. (கூ)

சீறிட்ட வேங்கை யதட்டேக்கையர் சீறி ஐந்தும்
பாறிட்ட வேடர் யோகபட்டதத்தர்கட் டங்கத்தில்
வரிட்ட கைய ரிறுமாந்திருப் பாரை நோக்கி
மாறிட்டு நீக்கி யெழப்போகென வந்து சொன்னர்.

(இ - ள்) கோபித்த புலித்தோலை ஆசனமாக வுடையவராகி, கோபித்து ஐம்புலன்களையுஞ் சயங்கொண்ட தவவேடமுடையவராகி, யோகபட்டிகையைத் தரித்தவராகி, மழுவாயுதத்தின்மேல் வைத்த கையை யுடையவராகி, இறுமாப்புற்றிருக்குஞ் சித்தமூர்த்திகளைப் பார்த்து, பிரம்பை நீட்டி (அங்கிருந்து) நீங்கி எழுந்து போகக்கடவீர் என்று சொன்னார்கள்.

(வி - ம்) கட்டங்கம் - கடங்கம் என்னும் வடசொற்றிரிபு. இதனை, கட்டு வாங்கமென்பதன் திரிபு எனவுங் கூறுவர் அவ்வாறு கொள்ளின் கட்டிற்கால் வடிவுபோன்ற ஒருவகை ஆயுதமென்க. (எ)

பின்னு வருதென்னர் பிரான்பெரி யோரை நோக்கி
எங்காடு நும்மூ ருமக்கென்வரும் யாது வேண்டும்
நுங்காம மேது நுவல்பின்னென வைய மெந்த
மன்னுடு மெந்த நகருள்ளுங் திரிவ மப்பா.

(இ - ள்) (அம்மெய்க்காப்பாளருக்கு) பின்னுக வரும் அபிஷேக பாண்டியன் அச்சித்தமூர்த்திகளைப் பார்த்து, உமது நாடு எந்த நாடு? உமக்கு யாது வரும்? (என்னால்) உமக்கு என்னவேண்டும்? உமது பெயர் யாது? சொல்லும் என்று வினவ, அச்சித்த மூர்த்திகள் (அபிஷேக பாண்டியனைப் பார்த்து) அப்பா! எந்த நல்ல நாட்டிலும் எந்த நகரத்திலும் சஞ்சரிப்போம்.

இதுமுதல் ஐந்துபாடல்கள் ஒரு தொடர். (கூ)

ஆனலு மிப்போ தணிகான்மிக நாட்டிற் காகி
தானு மிருக்குந் தலமாகு மகாத ராகி
ஆனதை பிச்சைப் பெருவாழ் வுடையார் நமமா
காணுநும் விஞ்சை கடாஅய்த்திரி சித்த சேம்யாம்.

(இ - ள்) ஆனலும் இப்போது அழகிய காஷ்மீர காட்டினுள்ள காசி நகரம் தான் நாம் வசிக்கும் இடமாகும்; பசுபதியாகி நீங்காத பிச்சையாகிய பெரிய வாழ்வினையுடைய சிவனடியாரே நமது உறவினராம்; நாம் எக்காலமும் (ஆகருஷண முதலிய) வித்தைகளை கடத்தித் திரிகின்ற சித்தாவோம்.

(வி - ம்) இச்செய்யுளால் பாண்டியன் விஞக்களில் 'எங்காடு' 'நுமக்கென் வரும்' என்பனவற்றிற்கு விடைவிடுத்தாயிற்று. (எ)

ஆனந்த கானந் தொடுத்திங்குள வான சைவத்
தானம் பலவுந் தொழுதற்பர மாகி வந்தேம்
ஞானந் தருமிங் நகரிம்மையிற் சீவன் முத்தி
மானந்த மான பரமுத்தி மறுமை நல்கும்.

(இ - ள்) காசிநகரம் தொடங்கித் தென்றிசையிலுள்ள சைவத்தலங்கள் பலவற்றையும் பணியும் அதுவே பிரயோசனமாய் வந்திருக்கின்றோம். சிவ ஞானத்தைப் பாலிக்கும் இம்மகாபுரியானது இப்பிறப்பில் ஜீவன்முத்தியையும் மறுபிறப்பில் பாசமாகியமயக்கங்கெட்ட பரமுத்தியையுந் தந்தருளாகிற்கும்.

(வி - ம்) மானந்தமான என்பதற்கு, மான் அந்தமான எனப்பிரித்து, பிரகிருதிமாயைக்கு அப்பாற்பட்ட எனக்கூறினும் பொருந்தும். இவ்வாறுயின் உபலக்கணத்தால் இதற்குக் காரணமாகிய விந்து மோகினியைக் கொள்க. (அ)

ஈண்டுள் ளவர்க்கெம் விளையாடலைக் காட்டி யிச்சை
வேண்டும் பலசித்தியு நல்குவம் வேத மாதி
மாண்டங்கு மெண்ணெண் கலைஞானமும் வல்ல மல்லாற்
சேண்டங்கு மெல்லாப் பொருளும்வல சித்த ரேம்பாம்.

(இ - ள்) இவ்விடத்தில் இருப்பவர்களுக்கு எமது திருவிளையாடல்களைக் காண்பித்து, அவாவர் விரும்பியபடியே வேண்டிய பல சித்திகளையுங் கொடுத்தருளுவோம். வேதமுதலிய மாட்சிமைதங்கிய அறுபத்துநான்கு கலைஞானங்களின் தேர்ச்சியுமுடையேம். இவையுமல்லாமல் தூரத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் (அழைத்தலில்) வல்ல (ஆகினு) சித்தரெனப் பெயரு முடையேம். (ஈ)

உன்னு னமக்குப் பெறல்வேண்டுவ தொன்று மில்லை
தென்னு வெனவுண் ணகைசெய்தனர் சித்த யோகர்
மன்னு மிவர்தம் மிறுமாப்புஞ் செருக்கும் வீறும்
என்னு ளவிட் டறிவேனென வெண்ணித் தேர்வான்.

(இ - ள்) அந்தச் சித்தமூர்த்திகள் பாண்டியனே! உன்னால் நமக்குப் பெறும் பொருள் ஒன்றுமில்லையென்று புன்னகை செய்தருளினர். நிலை பெற்ற இவருடைய இறுமாப்பையும் அகங்காரத்தையும் பெருமிதத்தையும் என்னளவையால் அளந்தறிவேனென்று ஆராய்வானுயினன்.

(வி - ம்) இச்செய்யுளால் யாது வேண்டு மென்னும் விஞவுக்கு விடை கூறப்பட்டது. (உ0)

தேரும் பொழுதோ ருழவன்னெரு செல்வக் கன்னல்
ஆருங் கமுகென்னீ வயிர்ப்புறக் கொண்டு தாழப்
பாருந் திசையும் புகழ்பங்கயச் செங்கை தாங்கி
நீரும் பிறையுங் காந்தார்தமை நேர்ந்து சொல்வான்.

(இ - ள்) அப்படி ஆராய்கையில், ஒருழவன் செழித்தோங்கிய ஒருகருப்பங் கழியைக்கண்டோசெல்லாம் இது கமுகமரமோ என்று ஐயங்கொள்ளக்(கையுறை யாகக்) கொண்டு பணிய, பூலோகமும் அஷ்டதிசைகளும் புகழுந் தாமரை மலர் போன்ற தனது சிவந்த கையில் எடுத்து, கங்கையையுஞ் சந்திரனையும் மறைத் துவந் தருளிய சித்த மூர்த்திகளே யெதிர்ந்து சொல்கிறான். (நக)

வல்லாரில் வல்லே மெனவும்மை மதித்த நீரிக்
கல்லானைக் கிந்தக் கரும்பை யருத்தி னெல்லாம்
வல்லாரு நீரே மதுரைப்பெரு மாணு நீரே
அல்லா லெவர்தும் மனம்வேட்ட தளிப்ப னென்றான்.

(இ - ள்) வல்லவர்களில் நாம் வல்லமென்று தம்மைத் தாமே மதித்த நீர் இங்கிருக்குங் கல்லானைக்கு இந்தக் கரும்பை யுண்பித்தால், எல்லாம் வல்லவரும் நீரே மதுராபுரியில் வீற்றிருக்குஞ் சோமசுந்தரப் பெருமானு நீரே யல்லாமல் யாருள்ளார்? உமது மனத்திற் கருதியது எதுவோ அதனைக் கொடுப்பே னென்று அபிஷேக பாண்டியன் கூறினன்.

(வி - ம்) 'வல்லாரில் வல்லேம்' என்பதில் ஏழனுருபு கூட்டிப் பிரித்தற் கண் வந்தது. (கூ)

என்னு முகிலைத் தூளியிட்டவன் கூறக் கேட்டுத்
தென்னு வருதி யெனப்புன்னகை செய்து சித்தர்
நின்னுல் வருவ தெமக்கேது நினக்கு நாமே
உன்னுசை தீரத் தருகின்ற தலாம லுண்டோ.

(இ - ள்) என்று அபிஷேகபாண்டியன் சொல்லக்கேட்டு, பாண்டியனே இங்குவருக என்று புன்னகை செய்தருளி, அச்சித்தமூர்த்திகள் உன்னுல் வரும்பயன் எமக்கு ஏது உளது? உனக்கு நாமே உன்னுசை தீரும்படி தருவ தல்லாமல் (யான் அடைவது) ஒன்றுண்டோ? (இல்லை யென்றபடி).

(வி - ம்) முகிலைத் தளையிட்டவன் - மேகங்களைச் சிறைப்படுத்தினவன்; இது உக்கிரகுமார பாண்டியர் செயலாயிருக்க அபிஷேகபாண்டியனே அவ்வாறு விளித்தது ஒற்றுமை நயம்பற்றி யென்க. (கஉ)

செல்லா வுலகத் திணுஞ்சென்றொரு விஞ்சை கற்றோர்
பல்லாரு நன்கு மதிக்கப்பய னெய்து வார்கள்
எல்லா மறிந்த வெமக்கொன்றிலு மாசை யில்லை
கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்டி யென்றார்.

(இ - ள்) (ஆகருஷண முதலிய அறுவகை வித்தைகளில்) ஒரு வித்தை யைக் கற்றவர்கள் செல்லற்கரிய வுலகத்திலுஞ் சென்று பலரும் நன்கு மதிக்க

(அதனை) கீகாட்டிப் பயனை யடைவார்கள். (அப்படியிருக்க) எல்லா வித்தைகளையும் அறிந்த எமக்கு ஒரு பொருளிலும் ஆசையில்லை. (நீ சொல்லியபடி) கல்லானையானது கரும்பைக் கறிக்கின்றதைக் காண்பாய் என்றார்.

(வி - ம்) எல்லாம் அறிந்த என்றதனால், ஆகருஷண முதலிய அறுவகைத் தொழில்களே யன்றி, தமது எண்குணங்களுள் முற்று முணர்தலையும் உணர்த்திஞராயிற்று. " விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும், பிறழவும் பெறாஉமுக் காலமு மேற்புழி " என்றதனானே தெளிவுபற்றி எதிர் காலத்தை இறந்த காலமாகக் காண்டி என்று கால வழுவமைதி யாக்கினர். (கச)

கடைக்கண் சிறிதே குறித்தார்முன் கடாக்கல் யானை
மடைக்கண் டிறந்து மதமூன்றும் வழிய விண்வாய்
அடைக்கும் படிவாய் திறந்தார்த்துப் புழைக்கை நீட்டித்
தொடைக்குன் றனன்கைச் சுவைத்தண்டைப் பறித்த தன்றே.

(இ - ள்) சிறிது கடைக்கண் செய்தருளிய சித்த மூர்த்திகளின் முன்னர், மதஞ்சிந்துங் கல்லானையானது மடைக்கண்போலக் கண் திறந்து, மதங்கள் மூன்றுஞ் சித்த மேகத்தின் வாயடையும்படி தனது வாயைத் திறந்து ஒலித்து, துதிக்கையை நீட்டி மாலையை யணிந்த மலைபோன்ற (திண்மை வாய்ந்த) அபிஷேக பாண்டியன் கையிலுள்ள கரும்பைப் பறித்தது.

(வி - ம்) கடாக்கல் யானை யென்றது யானை யெண்பதைப் பற்றிச் சாதியடை தந்து கூறிய தென்க. விண் - இடவாகு பெயராய் மேகத்தை யுணர்த்தியது. தொடைக்குன்று இல்பொருளுவமம். கடைக்கண் - இலக்கணப்போலி. (கடு)

பறித்துக் கடைவாய் வழிசாறளி பாய்ந்து நக்கக்
கறித்துக் குதட்டிப் பருகிக்கர மூசு லாட
நெறித்துத் தருக்கி நிழல்சீறி நிமிர்ந்து நிற்ப
மறித்துக் கடைக்கண் குறித்தார்பினு மாயம் வல்லார்.

(இ - ள்) (அவ்வாறு) பறித்துக் கடைவாயினின்று ஒழுகுஞ் சாற்றினை வண்டுகள் பாய்ந்து சுவைக்கக் கறித்து, அதிக்கி உண்டு (தனது) துதிக்கை பூசலாடப் பொறித்து, இறுமாந்து நிழலைக் கோபித்து நிமிர்ந்து நிற்க, மாயை வித்தையில் வல்ல சித்தமூர்த்திகள் மீண்டுங் கடைக்கணித் தருளினர். (கசு)

மட்டுற்ற தாரான் கழுத்திற்கண்ட மாலை தன்னை
எட்டிப் பறித்த திகல்காஞ்சுகி மாக்கள் சீறிக்
கிட்டிக் கனிற்றைப் புடைப்பான்கிளர் கோல்கொண் டோச்சச்
சிட்டத் தவர்கண் சிவந்தாணையைச் சீறி நோக்க.

(இ - ள்) மணம் பொருந்திய மாலை யணிந்த அபிஷேக பாண்டியனது கண்டசாத்தை எட்டிப் பறித்தது; போர் செய்யும் மெய்காப்பாளர் கோபித்து நெருங்கி யானையை யடிக்கும்படி (தமது கையில்) விளங்குங் கோலை மேலெழுக்க, (யாவருக்கும்) மேலாகிய சித்தமூர்த்திகள் கண் சிவந்து யானையைக் கோபித்துப் பார்த்தருள.

இதுமுதல் இரண்டுசெய்யுள்கள் குளகம். (கஎ)

கண்டா வளியைக் களிறுண்டது கண்கள் சேப்புக்
கொண்டா னரசன் சிவயோகரிற் கோப மூளத்
தண்டா வரசன் றமருட்டறு கண்ணர் சீறி
வண்டா ரிதழி மறைத்தாரை யடிக்க வந்தார்.

(இ - ள்) கண்டசரத்தைப் (பறித்த) யானையானது உண்டது. அரசன் கண்கள் சிவப்புற்றுச் சிவயோகிகளாகிய சித்தமூர்த்திகளிடத்துக் கோபமதிகரிக்க, (எப்பொழுதும்) பிரியாத பாண்டியனுடைய பரிசனத்தில் அஞ்சாமையையுடைய வீரர்கள்கோபித்து, வண்டுகள் பொருந்திய கொன்றைமாலையை மறைத்து வந்தருளிய சித்த மூர்த்திகளை யடிக்க வந்தார்கள்.

(வி - ம்) கண்ட + ஆவளி = கண்டாவளி ; கண்டத்தில் அணிந்த சரம். இது வடநூன் முடிபு. சேப்புக் கொண்டான் - ஒரு சொல். (உஅ)

அப்போ திளமூர லரும்பிய சித்த சாமி
கைப்போ தமைத்துக் கடிந்தேதார்தமை நின்மி னென்ன
மைப்போ தகமன் னவர்வைத்தடி பேர்க்க லாற்ரு
தொப்போ தரிய நிலையோவியம் போல நின்றார்.

(இ - ள்) அப்பொழுது புன்முறுவல் செய்தருளிய சித்தமூர்த்திகள் தமது கைத்தாமரையால் அமர்த்தி, கோபித்து (தம்மை யடிக்க) வந்தவர்களை. நில்லுங்கள் என்று கூறியருள, கரியயானைபோன்ற (வலிய) வீரர்கள் (முன்) வைத்த காலைப் பெயர்த்து வைக்க முடியாமல், உவமை கூறுதற்கரிய நிலையிற் பொருளாகிய சித்திரம்போல நின்றார்கள்.

(வி - ம்) வைத்த என்னும் பெயரெச்சத்தில் அகர விகுதி தொக்கது.(உக)

மத்தக் களிற்றன் வெகுளித்தழல் மாறி யன்பு
பொத்தப் புதைந்த மனத்தற்புதம் பொங்கிச் சோரச்
சித்தப் பெருமா னடிமாமுடி தீண்டப் பாச
பெத்தத் தமியேன் பிழையைப்பொறு மென்று வீழ்ந்தான்.

(இ - ள்) மதமயக்கத்தையுடைய யானைச் சேனை வாய்ந்த பாண்டியன் கோபாக்கினி தணிந்து, அன்பானது போர்க்க (அதனால்) மூடப்பட்ட மனத்தினிடத்து அதிசயமிகுந்து வழிதலால், சித்தமூர்த்திகளினுடைய திருவடிகளைத் தனது முடிமேல் தீண்டும்படி, பாசபந்தத்திற் கட்டுண்ட தமியேன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று பணிந்தான்.

(வி - ம்) பாசம், ஆணவமுதலிய மும்மலங்களையு முணர்த்தலால் சாதியொருமை. (உ0)

அன்புக் கிரங்குங் கருணைக்கட லான ஐயர்
இன்புற்று வேண்டும் வரங்கேளென தாழ்ந்து வேந்தன்
நன்புத் திரப்பே றருள்வாயென நல்கிச் செங்கை
வன்புற்ற வேழ மிசைவைத்தரு ணூட்டம் வைத்தார்.

(இ - ள்) (அடியவர்களது) அன்புக்குக் கனிந்தருளும் திருபா சமுத்திர மாகிய சித்தமூர்த்திகள் மகிழ்வெய்தி, வேண்டிய வரத்தைக் கேள் என்றருளிச் செய்ய, அபிடேக பாண்டியன் பணிந்து கல்ல புத்திரப்பேற்றை அருள்செய்வீர் என்று வேண்ட (அவ்வாறே) கொடுத்தருளி; தமது சிவந்த கரத்தை வலிமைமிக்க யானையின்மேல் வைத்துக் கிருபாலோகங் செய்தருளினர்.

(வி - ம்) வன்புற்றவேழம் என்றது கல்யானையை யுணர்த்திற்று. (உக)

வேறு

தழைக்கு நீள்கதிர்த் தண்முத்த மாலையைப்
புழைக்கை நீட்டிக் கொடுத்தது போதகம்
மழைக்கை நீட்டினன் வாழ்கின னீகியிற்
பிழைக்க லாத பெருந்தகை வேந்தனே.

(இ - ஸ்) பரந்த கிரணமிக்க தண்ணிய முத்தமாலையாகிய கண்டாவளியை (வீழுங்கிய) கல்லானையானது (மீட்டும் வெளிப்படுத்தித் தனது) துதிக்கையால் நீட்டிக் கொடுத்தது; நீதியினின்றும் தவறாத பெருந்தகைமை வாய்ந்த அபிஷேக பாண்டியன் மேகம்போலக் (கைம்மாறுகருதாது) கொடுக்குங்கையை நீட்டி வாங்கினன். (உஉ)

முத்த மாலிகை வாங்குமுன் முன்னின்ற
சித்த சாமி திருவுருக் கண்டிலன்
மத்த யானை வடிவமு மேயன
ஒத்த தாக வுரவோன் வெருவினான்.

(இ - ள்) (பாண்டியன்) முத்தமாலையை வாங்கி மீட்டுதற்குமுன், தன்முன் நின்றருளிய சித்தமூர்த்திகளின் திருவுருவத்தைக் காணுதவனாகி, மதமயக்கத்தையுடைய யானையின் வடிவமும் (அங்கிருந்த) மற்றைய கல்லானைகளை யொத்திருக்க, (அன்பிற்) பெரியோனாகிய அபிடேக பாண்டியன் அச்சமுற்றனன். ()

இந்த வாட லெடைக்குயி ராயவிவ்
வந்த மில்லி யருள்விளை யாட்டெனு
முந்தை வேத முதல்வனீ மீளவும்
வந்து வந்தனை செய்தனன் மன்னனே.

(இ - ள்) இந்தத் திருவிளையாடல் எமக்கு உயிராய் விளங்கிய இறுதியில்லாத இச்சோமசுந்தரமூர்த்தியின் அருள்விளையாடல் என்று கருதி, (யாவருக்கும்) முற்பட்டவனும், வேதங்களைத் திருவாய்மலர்ந்தருளிய முதல்வனுமாகிய சோமசுந்தரப் பெருமானை அரசன் மீளவும் வந்து பணிந்தான்.

(வி - ம்) அபிஷேகபாண்டியன் சோமசுந்தாக்கடவுளைப் பணிந்து திருக்கோயிலை வலம்வருகையில் சித்தமூர்த்திகளைத் தரிசித்து அற்புதமும் அச்சமும் மெய்திப் பிரதக்கணமுடித்துச் சன்னிதானமடைந்து பணிந்தனனுதலின் "மீளவும் வந்து வந்தனை செய்தனன்" என்றார். (உசு)

முழுது ணர்ந்த முதல்வகின் னுடலே
இழுதை யேன்றி யாதளந் தேமினை ஞ
அழுகி றைஞ்சிய பாத மீந்துகை
தொழுது நின்று துதிக்கத் தொடங்கினன்.

(இ - ள்) எல்லாவற்றையுமுணர்ந்தருளிய முதற்கடவுளே! தேவரீரது திருவீளையாடலே அறிவிலேனுகிய யான் அறியாமையால் அளவிடத்தொடங்கினேனென்று, அழுது வணங்கி அபராதமீந்து கைகுவித்து நின்று தோத்திரஞ் செய்யத்தொடங்கினன் (பாண்டியன்).

(வி - ம்) முழுது என்பதனிறுதியில் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

வேறு

வேதியாய் வேத வீளெபொருளாய் வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியா யீருய் நடுவா யவைகழிந்த
சோதியாய் நின்றுயென் சோதனைத்தோ நின்னியல்பே.

(இ - ள்) வேதத்தையுடையவனுகியும், வேதத்தில் வீளையும் பொருளாகியும், அவ்வேதத்தில் அடங்கிய நீதி வடிவாகியும், அந்த நீதிநெறியைக் கடந்து நின்ற மிக்க ஒளியாகியும், முதலாகியும், இறுதியாகியும், நடுவாகியும், அவற்றைக்கடந்த சோதியாகியும் நின்றவனே! உனது தன்மை எனது சோதனையில் (எவ்வாற்றுனும்) அகப்படத்தக்கதோ. (உசு)

நின்னுல் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னு ளருச்சித்தும் பாதர் தலைசுமந்தும்
உன்னுமம் வாசித்து முன்னியறி யேனென்று
சொன்னு லடியேனென் சோதனைத்தோ நின்னியல்பே.

(இ - ள்) தேவரீரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேதங்கள் தேவரீரது திருவடிகளே வந்தனைசெய்தும், பலகாலமருச்சனைசெய்தும், தேவரீரது திருவடிகளைத் தீலைமேற் சுமந்தும், தேவரீரது திருநாமங்களைக் கூறியும், தேவரீரையறியேம் என்று முறையிட்டால், தேவரீருடைய தன்மை அடியேனுடைய சோதனையுள் அகப்படத்தக்கதோ. (உள)

பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினு மரியதுமா யெளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமா யவைகடந்த
தூரியமூமாய் நின்றுயென் சோதனைத்தோ நின்னியல்பே.

(இ - ள்) மகத்தினும் மகத்துமாய், அணுவினும் அணுவுமாய், அரிய பொருளினும் அரியபொருளுமாய், எளிய பொருளினும் எளிய பொருளுமாய், ஆன்மாவும் உணர்வும் விஷயப்பொருளுமாய், அவற்றைக் கடந்த தூரியமூமாய் நின்றவனே! தேவரீரது தன்மை என் சோதனையில் அகப்படத்தக்கதோ. (உஅ)

வேறு

என்றுபல முறைபழிச்சி மணியெய்தி வீக்கமணி யின்று பண்ணுட், டொன்றுமுறை கோலோச்சி விக்கிரமன் சுவன்மிசைப்பார் சுமத்திப் பாசம், வென்றுகளைந் தருட்சித்த சோமிதிரு வருணோக்கால் விளைபே ரின்ப, மன்றன்மது விழ்வண்டிற் கலந்திருந்தா னபிடேக மாறன் மன்னே.

(இ - ள்) என்றுபலதாம் தோத்திரஞ்செய்து தனது கோயிலயடைந்து விக்கிரமபாண்டியனைப் பெற்று பலகாலமும் பண்டுபோல முறைப்படி செங்கோல் செலுத்தி, அவ்விக்கிரம பாண்டியனுடைய பிடரின்மேற் பூபாரத்தைச்சுமத்தி, பாசத்தொடக்கை வென்று நீக்கி அருள் வடிவாகிய சித்தமூர்த்தியின் திருவருள் நோக்கத்தால் விளையும் பேரின்பத்தில் நிலைபெற, மதுவில் வீழ்ந்தவண்டுபோல அபிஷேகபாண்டியன் (இரண்டறக்) கலந்திருந்தான் (உக)

ஆ திருவிருத்தம் - கஅ அடி.

இருபத்திரண்டாவது

யானை யெய்த படலம்

கட்டவிழ்க டுக்கையர்ச லாணைகழை தின்ன
இட்டதிது பஞ்சவ னிடத்தமண ரேவி
விட்டமத யானைவிழ மேவலர் புரத்தைச்
சுட்டகணை விட்டுயிர்தொ லைத்தமுறை சொல்வாம்.

(இ - ள்) முறுக்குகளவிழ்ந்த கொன்றை மாலையையணிந்த சித்தமூர்த்திகள் கல்லானை கரும்பைத் தின்னக் கொடுத்தருளியது இத்திருவிளையாடல். (இனி)பாண்டியனிடத்தில் சமணர்களேவிய மதப்பெருக்குடைய யானையானது மடிய, பகைவர்களது திரிபுரங்களைத் தகித்த பாணத்தினை வீடுத்து அதனுயிரை மாய்த்தருளிய திருவிளையாடலைக் கூறுவாம்.

(வி - ம்) திரிபுராசங்கார காலத்தில் திருமாலே அம்பாக்கப்பட்டனர். ஈண்டு இத்த யானையைச் சங்காரிக்க ராசிங்கக்கணை செலுத்தப் பட்டதாகலின், காரணனுக்கும் ராசிங்கத்துக்கும் உரிய ஒற்றுமை கருதி "மேவலர்புரத்தைச் சுட்டகணை" எனக் கூறினர். (க)

விக்கிரம பாண்டியன் வெலற்கரிய செங்கோல்
திக்குநில னுந்திறைகொள் செல்வநிறை வெய்த
அக்கிரம வெங்கலி யரும்பகை யொதுங்கச்
சக்கரமு ருட்டியிடர் சாய்த்துமுறை செய்வான்.

(இ - ள்) விக்கிரம பாண்டியனுடைய தடுத்தற்கரிய செங்கோலானது எட்டுத் திக்கிலும் திலவுலகிலும் இறுக்கும் திறையாலாகிய செல்வத் தினிறைவை யடைய, மிகக்கொடிய கலியாகிய அரியபகைவிலக, தனது ஆக்கினை சக்கரத் தைச் செலுத்திக் துன்பத்தை யடையாது விலக்கி அரசுசெய்து வருவா னுயினான்.

(வி - ம்) திக்கு, நிலன்—இடவாகுபெயர்கள். (உ)

புத்தரம ணுதிய புறக்கோ யகழ்ந்து
நித்தமறை யாகம நெறிப்பயிர் வளர்த்து
மெய்த்தவிதி பத்தியின் விளைத்தபயன் யாருங்
துய்த்திட மனுத்தொழி னடத்திவரு தூயோன்.

(இ - ள்) புத்தர் சமணர் முதலாகிய புறமதக்கோளைக் களைத்தும், அழியாமையுடைய வேதநெறியும் ஆகமநெறியுமாகிய பயிர்களை வீளைத்தும், (அவ்வைதிக சைவ மார்க்கத்தில்) மெய்ம்மையையுடைய விதியும் பத்தியுமாக விளைந்த பயன்களை யாவரும் உண்டு களிக்க, மநு முறைப்படி அரசு செலுத்தி வருகின்றவனுகிய விக்கிரம பாண்டியன்.

(வி - ம்) விதி - திருவருளைக் கருதாமல் அறத்தாறு ஒழுகல். பத்தி - அவ்வற ஒழுக்கத்தால் அருள்வழிப்படல். பத்தியின் - என்பதில் இன் தவிர் வழிவந்த சாரியை. (ஊ)

மருவிதழி யானுறையும் வானிழிவி மானத்
தருகுவட பக்கமுற வாலயமெ மூப்பி
உருவருவி ரண்டினையு மொருவிவரு கித்தர்
திருவுருவு கண்டுபணி செய்தொழுகு நாளில்.

(இ - ள்) வாசம் பொருந்திய கொன்றைமாலை தரித்த சோமசுந்தரக் கட வுள் எழுந்தருளிய வீண்ணிழிவிமானத்தின் பக்கலில் வடதிசையில் (சிற்பநூன் முறைப்படி) ஓர் ஆலயஞ் செய்வித்து, உருவமருவுமாகிய இரண்டினையும் நீக்கி (அருளுருவங் கொண்டு) வந்த சித்த மூர்த்திகளது திருவுருவை (தன்தத்தை விருப்பின்படி) பிரதிஷ்டை செய்து, பூசித்து வருங்காலத்தில்.

(வி - ம்) விக்கிரமபாண்டியன் தன்பிதாவாகிய அபிடேக பாண்டியனுக்குச் சித்த மூர்த்திகள் கொடுத்த வரத்தாற் ரோன்றினவளுகலின், சித்தர் திருவுருவு கண்டு என்பதற்குத் தனது தந்தை விருப்பின்படி என வருவித்தாம். (எ)

செய்யகதி ரோன்வழிய செம்பியனெ ருத்தன்
கையன வன் வெண்றிபயில் காஞ்சிந கருவ்ளான்
பொய்யமணர் கட்டுரைபு றத்துறையி னின்ரூன்
மையின்மதி மாறனெடு மாறுபட கின்ரூன்.

(இ - ள்) செவ்விய கிரணங்களையுடைய சூரிய பாம்பரையிற் ரோன்றிய சோழராஜன் ஒருவன் இருந்தான்; அவனே வஞ்சகன்; வெற்றிபொருந்திய காஞ்சி நகரத்தில் வசிப்பவன்; பொய்மைபொருந்திய சமணமதமாகிய புறமார்க்

கத்தில் நின்றவன்; குற்றமில்லாத சந்திர வமிசத்தில் தோன்றிய விக்கிரம பாண்டியனுடன் பகைமை கொண்டிருந்தான்.

(வி - ம்) இயற்கையாகவே சூரியமரபிற்கும் சந்திரமரபிற்கும் குலவிரோத மூள்ளதுடன் சமணசமயத்திற்குஞ் சைவ சமயத்திற்கும் மதவிரோதமும் உளதாதலின் "மாறு படநின்றான்" என்றார். (ஙி)

மூடங்கண்மதி செஞ்சடைமு டித்துவிடை யேறும்
விடங்கரது சேவடிவி ழுங்கிய மனத்து
மடங்கணிகர் தென்னனெதி ர்வந்துபொர லாற்ற
தடங்கலனெர் வஞ்சணியி னுலடம தித்தான்.

(இ - ள்) ஊனைத்த (பிறைச்) சந்திரனைச் செவ்விய சடையில் தரித்து, இடபத்தில் ஆரோகணிக்குஞ் சோமசுந்தரக் கடவுளினுடைய சிவந்த திருவடி களை யடக்கிய மனத்தையுடைய சிங்கம்போன்ற விக்கிரமபாண்டியனுக் கெதிரே வந்து போர்புரிய முடியாமல், பகைவனுகிய அச்சோழன் ஒரு தந்திரத்தாற் கொல்ல யோசித்தான்.

(வி - ம்) விடங்கர் - சுயம்புமூர்த்தி. டங்கம் - உளி. வி - எதிர்மறைப் பொருள் தரும் வடமொழியுபசர்க்கம். (கூ)

வேறு

அஞ்சனங் கவுஞ்சங் கோவர்த் தனந்திரி கூடங் காஞ்சி
குஞ்சர சைய மேம கூடமே விந்த மென்னும்
மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு மமணர்தம்மில்
எஞ்சலில் குரவர்க் கோலை வேறுவே றெழுதி விட்டான்.

(இ - ள்) அஞ்சனம் - கிரவுஞ்சம் - கோவர்த்தனம் - திரிகூடம் - காஞ்சி-குஞ்சரசையம் - ஏமகூடம் - விந்தம் என்று சொல்லப்பட்ட மேகங்கள் தவழும் (இந்த) எட்டு மலைகளிலுள் தங்கிய சமணர்களுள் குறைவில்லாத ஆசிரியத் தன்மை வாய்ந்தவர்களுக்குத் தனித்தனி யோலை யெழுதி விடுத்தான்.

(வி - ம்) வைகுறும் - ஒருசொல். குஞ்சரம் - யானை. (எ)

வடிவுபோ லுள்ள மெல்லா மாசிருள் புதைய நின்ற
அடிகண்மா ராவா ரெண்ணு யிரவரு மார்த்தார் வேய்ந்த
முடிகெழு வேந்தன் விட்ட முடங்கலை நிமிர்ந்து வாசித்
திடிகெழு கார்போற் குன்றி னிழிந்துவே றிடத்திற் செல்வார்.

(இ - ள்) தமதுருவம் கருநிறம் வாய்ந்திருத்தல் போலத் தமது உள்ள முழுதும் அஞ்ஞானமாகிய இருள் பொத்தநின்ற அடிகண்மா ராவாராகிய எண் ணுயிரஞ் சமணர்களும் ஆத்திமாலையைச் சூடிய கோடன்தரித்த சோழனுப் பிய ஓலையைப் பிரித்து வாசித்து இடியோசைமிக்க மேகம்போல அம்மலைகளி னின்றிறங்கிக் காஞ்சிநகரத்திற்குச் செல்வாராயினர்.

(வி - ம்) சமணசிரியருக்கு அடிகள் என்பது சிறப்புப்பெயராதலின் மார் எனப் பன்மைவிகுதி தந்து அடிகண்மார் எனவும், அம்மலைகளைத் தம்முடைய

இருப்பிடமாகக் கொண்டவராதலாற் காஞ்சிநகரத்தை வேறிடமெனவுங் கூறினர். (அ)

யாவரு மொருங்கு கூடி யிருள்வழி கொள்ள தெய்ப்பக்
காவல்வல் லரணஞ் சூழ்ந்த காஞ்சிமா நகரத் தெய்திப்
பூவலர் தாரான் கோயிற் புறங்கடைப் புகுந்து வேந்தன்
ஏவலர் விடுப்ப வுள்போ யிறைமக னிருக்கை புக்கார். (இ - ள்) (அடிகண்மார்கள்) எல்லோரும் ஒன்றுசேர்ந்து இருளானது வழி நடந்து செல்வதுபோல வலிய மதிற்காவல் சூழ்ந்த பெரிய காஞ்சிநகரத்தையடைந்து ஆத்திப்பூமலர்ந்த மாலையணிந்தசோழனது கோயிலின் தலைவாயிலில் வந்து அச்சோழராசனது வாழ்நாட்காப்போர் உள்ளேவிடுப்பப்போய் அரசிருக்கைமண்டபத்தை யடைந்தார். (கூ)

மன்னவன் முடிமேற் பீலி வைத்தன ராக்கங் கூற
அன்னவ னவரை நோக்கி வயமுன் னுறும் வல்லீர்
தென்னனை யாபி சாரஞ் செய்துயிர் செகுத்தா லுங்கட்
கென்னது நாடு பாதி தருவல்போ யியற்று மென்றான். (இ - ள்) சோழராசன் சிரீடத்தின்மேலில் (தங்கள் கையிற்பற்றிய) மயிற் சிறகைகளைவைத்து ஆசீர்வதிக்க, அச்சோழன் அவர்களைப்பார்த்து வெற்றி முதலிய ஆறுதொழில்களிலும் வன்மையுடைய அடிகண்மாரே! விக்கிரமபாண்டியனை ஆபிசாரயாகஞ்செய்து உயிர்கொன்றால் உங்களுக்கு எனது நாட்டிற் பாதி கொடுப்பேன்; போய் (அதனைச்) செய்யுங்களென்று விடுத்தான். (வி - ம்) சமணமத குரவர் தமது கையில் மயிற்பீலி ஏந்துதலும், தம்மை வழிபடுவோரைக்காணில் அதை அவர் சிரமேல்வைத்து ஆசீர்வதித்தலும் மரபு.

வெற்றிமுன் ஆறு என்றது: வெற்றம், வயஸ்தம்பம், வாதம், அதிரிசியம், அஞ்சனம், ஆகருஷணம். ஆபிசாரம் - சத்துருவைக் கொல்லுதற்பொருட்டுச் செய்யும் ஒரு கொடுந் தொழில். (கூ)

தவம்புரிந் தவமே செய்வார் தாமதற் குடன்பட் டேகி
நிவந்தெண் டிசைநீர்ப் பாலி நெடுங்கரைக் காத மூன்றிற்
கவர்ந்தகன் சாலை கோலி யோசனை யகலங் கல்வி
அவம்படு வேள்விக் குண்டங் கோணமெட் டாகக் கண்டார். (இ - ள்) (புறத்தில்) தவத்தைச் செய்து (அகத்தில்) பாவத்தைச் செய்யும் அடிகண்மார் அத்தீத்தொழிற்கு அங்கேகித்துப்போய், பெருகெடுத்தோங்கிய தெள்ளிய அலைகளையுடைய நீர்மயமான பாலாற்றின் நெடிய கரையில், மூக்காதவழி பரந்த இடத்தையுடைய யாகசாலை நிருமித்து, ஒரு யோசனை யகலக் நிமைபொருந்திய யாககுண்டந்தோண்டி, எண்கோணமாகச் செய்து. (வி - ம்) கவர்ந்த என்பதில் அகரவீறுதொகுத்தல். அகம் - அகன்; மொழி யிறுதிப்போலி. கண்டார் என்னும் வினைமுற்று வினையெச்சப்

பொருளது. இது பின்வருஞ் செய்யுளில் செய்தார் என்னும் வினைமுற்றைக் கொண்டது. (சக)

விடம்பொதி காட்டம் பெய்து நிம்பநெய் விராய் நஞ்சின்
உடம்புடை யுயிரின் கோழூன் கறிப்பொடி பூறு மெண்ணெய்
இடம்படு வாயங் காந்த வெரிக்குழி புதையப் பெய்து
சொடும்பழி வேள்வி செய்தார் கொல்லாத விரதம் பூண்டார்.

(இ - ள்) விஷம்பொருந்திய (எட்டி முதலிய) சமித்தையிட்டு வேப் பெண்ணெயிற் கலந்த விஷம்பொருந்திய உடலேயுடைய பாம்பின் கொழு விய தசையும், மிளகின்பொடியூறும் எள்ளெண்ணெயும், விசாலமாக வாய்ந்த பார்த்த எரியையுடைய யாகக்குழி புதைபடும்படி பெய்து, கொல்லாமையையே விரதமாக மேற்கொண்ட எண்ணுயிரவரும் கொடிய பழிவாய்ந்த அபிசாரயாகத் தைச் செய்தார்.

(வி - ம்) வாய் அவ்காந்த வாய்திறந்தது போன்ற எனினும் பொருந்தும்.

மாடுள பொதும்பர் நந்தா வனமுள சோலை யுள்ள
காடுள கருகிச் சாயக் கயலுள வோடை யுள்ள
கோடுள வாவி யுள்ள குளமுள வறப்பத் தாவிச்
சேடுள முகிலுந் தீயச் சிகையெழு குண்டத் தீவாய்.

(இ - ள்) மரத்தொகுதியிடத் துள்ளனவும், நந்தவனங்களி லுள்ளனவும், சோலைகளி லுள்ளனவும், காடுகளி லுள்ளனவும் (ஆகிய உயிர்கள்) கருகி இறக் கவும், சேல்மீன்கள் உள்ள ஓடைகளி லுள்ளனவும் கரையுள்ள தடாகங்களி லுள்ளனவும் குளத்திலுள்ளனவும் (ஆகிய உயிர்கள்) வற்றியழியவும் மேலெழுந்து கூட்டமாகவுள்ள மேகங்களும் தீய்ந்துசாயவும் கொழுந்து விட்டெழுந்த யாக குண்டத்தீயினிடத்தில். (கஉ)

கூற்றெழு தோற்றம் போல வஞ்சனக் குன்றம் போலக்
காற்றெழு செவியு நால்வாய் கௌவிய மருப்பு மாறு
ஊற்றெழு மதமு மூச லாடிய வொற்றைக் கையும்
ஏற்றெழு விடம்போற் சீறி யெழுந்தசே தார் தறுகண் யானை.

(இ - ள்) யமன் தோன்றி யெழுந்த காட்சிபோலவும், ஓர் அஞ்சனமலை (மூலத்தெழுந்த காட்சி) போலவும், காற்றைவீசாநின்ற காதுகளையும், தொங்கி யசையும் வாயிற்பொருந்திய கொம்புகளையும், நீங்காது ஊற்றெடுத்து எழா நின்ற மதத்தையும், ஊசல்போல் ஆடாநின்ற துதிக்கையையுந்தாங்கி, (கடலில்) எழுந்த ஆலாலவிடம்போல ஓர் அஞ்சாமையையுடைய யானையானது கோபித் தெழுந்தது. (கச)

அந்தமா வேள்வித் தீயு மவியமும் மதமுஞ் சோர
வந்தமா களிற்றை நீபோய் வழுதியை மதுரை யோடுஞ்
சிந்தவே தொலைத்தி யென்னுத் தென் றிசைச் செல்ல வேவி
முந்தவே விடுத்த மாசு மூழ்குட லமணப் பேய்கள்.

(இ - ள்) அந்தப் பெரிய ஆபிசாரயாகாக்கினியும் அவியும்படி மூம்மதங்களுஞ் சொரியத் தோன்றிய பெரிய யானையை (நோக்கி), நீ சென்று விக்கிரமபாண்டியனை மதுரைப் பதியிலுள்ளாரோடும் கெடும்படி அழிக்கக் கடவாய் என்று தென்திசை நோக்கிச் செல்லக் கட்டளையிட்டு, குற்றத்தில் மூழ்கிய (எண்ணுயிரவர்களாகிய) சமணப் பேய்கள் (தங்களுக்கு) முற்பட அனுப்பினர்.

வேறு

அருளற்றிரு ஞடலிற்புதை யமணக்கய வர்களுட்
டெருளற்றரு மறையிற்படர் செயலற்றிக பரமெய்ப்
பொருளற்றவ ணனிகத்தெதாடு புறமொய்த்திட மதமா
வெருளத்றிடி குரலிற்படி வெடிபட்டிட வருமால்.

(இ - ள்) கிருபையின்றி உடலில் கருகிறம்பொதிந்த சமணர்களாகிய கீழ் மக்களுள், அறிவின்றி அரிய வேத நெறிச் செல்லும் செயலொழிந்து, இக போகத்தையும் பரபோகத்தையும் உண்மைப் பொருளையும் ஒழிந்த சோழனுடைய சேனைகளோடு புறத்திற் சூழ்ந்தவர, மதப்பெருக்கையுடைய யானையானது அச்சம் ஒழிந்து இடியின் (ஒலி) போன்ற (தனது) முழக்கத்தால் உலகம் வெடிபட வரா கிற்கும். (கசு)

அடியின்னள வகல்பாதல முடியின்னள வண்டம்
இடியின்னள வெழுகார்செவி யெறிகாலள வகிலம்
மடியும்மள வுளர்கான்மத மழையின்னள வுலக
முடிவின்னெழு கடல்கண்ணெழ லளவாமுது வடவை.

(இ - ள்) அகன்ற பாதலத்தின் அளவு (அந்த யானைவைத்த) காற்சுவட்டின் அளவினதாம். வானுலகளவு (அதன்) தலையின் அளவினதாம். சத்த மேகங்களின் (ஒலி) அளவு (அதன்) முழக்கத்தின் அளவினதாம். உலக முழுவதும் மடிய எறியும் (ஊழிக்) காற்றினது அளவு (அதன்) காது வீசுங் காற்றின் அளவினதாம். உலக முடிவில் எழாநின்ற கடலின் அளவு (அதன்) மதப்பெருக்கின் அளவினதாம். பெரிய வடவாமுகாக்கினியளவு (அதன்) கண்களிற் கிளுங் கோபாக்கினியின் அளவினதாம்.

(வி - ம்) மடியும்மளவு என்பதிலுள்ள அளவு என்னுஞ் சொல் முன்னும் பின்னும் சென்றமையின் இடைநிலைத் தீவகம். (கள்)

கூற்றஞ்சிட வருமிக்கரி குரலஞ்செவி முழைவாய்
ஏற்றஞ்செய மடங்குஞ் செவி யெறிகால்வழி விழித்தீ
ஊற்றஞ்செய மடைவாயுடைக் தொழுகுங்கட மதநீர்
காற்றஞ்செயக் திசைவேழமு மடிக்கஞ்செய்து நலியும்.

(இ - ள்) யமனும் அஞ்சும்படி வாகின்ற இந்த யானையின் முழக்கமானது (தமது) அகஞ்செவியாகிய முழையில் தாக்குதலாலும், (அதன்) மடங்கிய காதுகள் எறியுங் காற்றின் வழி (தமது) கண்களிலுள்ள (கோபத்) தீ கெடுதி செய்தலாலும், நீர் மடை வாய் உடைந்து ஒழுகும் (வெள்ளம்போல) மதப்பெருக்கா

னது காற்றைச் செய்தலாலும் திக்குகள்தோறும் உள்ள அட்டகஜங்களும் நடு நடுங்கி வருந்தா கிற்கும்.

(வி-மீ) 'திசைவேழமும் நடுக்கஞ்செய்து கலியும்'என்றதனால் இந்த யானை திக்கஜங்களையும் வெல்லும் ஆற்றலுடையது என்று குறிப்பித்ததாயிற்று. (கஅ)

இடிக்கும்புயல் வயிற்றைக்கிழித் திடியேற்றினை யுதிர்க்கும்
வெடிக்கும்பிளி றெலியாற்றினை விழுங்கிச்செவி டாக்குந்
துடிக்கும்புழைக் கையோச்சினிண் டொடுகுன்றினைச் சுற்றிப்
பிடிக்குங்கடல் கலக்குந்தனிப் பெருமத்தினைத் திரிக்கும்.

(இ - ள்) ஒலிக்கின்ற மேகத்தின் வயிற்றைப் பீறி இடியேற்றை உதிர்க்கா கிற்கும். முழங்குகின்ற பேரொலியால் திக்குகளை விழுங்கிச் செவிடுபடுத்தும். (கோபத்தால்) துடிக்கின்ற துதிக்கையை ஓசி ஆகாயமளாவிய மலைகளைச் சுற் றிப் பிடிக்கும். (அம்மலைகளைப் பறித்து) கடலைக் கலக்கும் ஒப்பில்லாத பெரிய (மந்தரகிரியாகிய) மத்தைபோலச் சுழற்றும். (கக)

உருமுக்குர லொலியிற்றுள ரொலிவிட்டெறி செவியிற்
றிருமுட்பிறை யெயிறிற்றழ லெறிகட்டிரு ளுடலிற்
றருமுக்கட வருவித்துர லடியிற்றென நிலமேல்
வருமுக்கிர வடவைக்கனல் வரிணெப்பத மதமா.

(இ - ள்) இடிபோன்ற முழக்கத்தையுடையது; சஞ்சரிக்கும் காற்றை வீசும் செவியையுடையது; இரண்டு முள்போலும் (முனைகூரிய) பிறை போன்ற தந்தங்களையுடையது; கோபாக்கினி சொரியும் கண்களை யுடையது; இருள்போன்ற (கரிய) உடலையுடையது; உரல்போலும் (வட்ட வடிவாகிய) காலை யுடையது என்று சொல்லும்படி நிலவுலகத்தின்மேல் கொடுமை பொருந்திய வடவாமுகாக்கினி வந்தால்(அதனை)அந்த மதத்தைச்சொரியும் யானை நிகர்க்கும்.

(வி - ம்) கட்டு - கண்ணையுடையது. உளரொலி-சுறைக்காற்று. சாரியை பெறாது வந்த அஃறிணை யொன்றன் படர்க்கைக் குறிப்புவினைமுற்று. (உ0)

தெழிபட்டதிக் கயத்தின்செவி தீயப்பகை யோடும்
வழிபட்டொரு கடுங்கூற்றென வருகுஞ்சர வரவை
விழிபட்டவர் மொழியாலுணர் விரைபட்டலர் வேம்பன்
சுழிபட்டலை புனல்போல்மனஞ் சுழன்றுனினைந் தழன்றான்.

(இ - ள்) (தனது) முழக்கம் தாக்கிய திக்கு யானைகளின் காதுகள் கிழிந்து தீய, பகைவராகிய சமணரோடும் ஒருவழிப்பட்டுக் கொடிய எமனைப்போல வரா நின்ற யானையின்வரவைப் பார்த்தவர்களுடைய சொற்களால் அறிந்த வாச மூற்றலர்ந்த வேப்பமாலை யணிந்த விக்கிரமபாண்டியன் சுழித்தல்கொண்டு அழி கின்ற நீரைப்போல (தனது) மனந்திரிந்து (அதின் வேகவரவை) நினைந்து வருந்தி.

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) நினைந்தான், அழன்றான் என்னும் முற்றெச்சங்கள் பின் செய்யு ளில் இரந்தான் என்னும் முற்றுவினையைக் கொண்டன. (உக)

மைப்போதகம் பொறையாற்றிய மணிக்கோயில்முன் சூறுகாக்
கைப்போதக முரித்தான்கழற் காற்போதக முறத்தாழ்ந்
திப்போதகந் தணியுந்தெரிலத் தெணிக்காத்தியென் றிரந்தான்
அப்போதகல் வாளின்றெரு திருவாக்கெழுந் தன்றே.

(இ - ள்) கரிய (திக்கு) யானைகளால் சுமக்கப்பட்ட நவமணிகளிழைத்த இந்திர விமானத்தின்முன் சென்று, துதிக்கையையுடைய (கயாசுரனுகிய) யானையை யுரித்தீருளிய சோமசுந்தரக் கடவுளுடைய வீரக்கழலை யணிந்த திரு வடித் தாமரையை மனத்திற் பொருந்தப் பணிந்து, (அக் கயாசுரனைப்போல) இந்த யானையையுங் கொன்று (தேவர்களைப்போல) என்னை (நகரவாசிகளோ டும்) காப்பாய் என்று குறையிரந்தான். அப்பொழுது பரந்த ஆகாயத்திலிருந்து ஓர் அசரீரி உண்டாயிற்று.

(வி - ம்) எழுந்தன்று - ஒருசொல். அன்று சாரியை பெற்றது. அசரீரி மேலெச்செய்யுளால் விளங்கும். (உஉ)

விட்டார்வலி கெடநாமொரு விற்சேவக ணுகி
ஒட்டார்விட வருவெங்கரி யுயிர்வெளவுது முதனின்
மட்டார்பொழிற் கடிமாநக ரயற்கீழ்த்திசை மருங்கோர்
அட்டாலைமண் டபஞ்செய்யென வதுகேட்டெழுந் தரசன்.

(இ - ள்) விடுத்தவர்களுடைய மனவன்மை அழிய நாம் வில்தாங்கிய ஒரு சேவகனுகி, அப்பகைவர் ஏவ வராகின்ற கொடிய யானையின் பிராணனைக் கொள்ளே கொள்ளுவோம்; முதலில் உனது தேன் பொருந்திய சோலைசூழ்ந்த காவலையுடைய பெரிய மதுரை நகரின் அருகில் கீழ்த்திசையினிடத்து ஓர் அட்டாலை மண்டபத்தைச் செய்கவென்று திருவாக்கருள அரசன் அதனைக் கேட்டெழுந்து.

இதுமுதல் இரண்டுபாடல்கள் குளகம்.

(வி - ம்) அட்டாலை மண்டபம் - உன்னதமண்டபம். இதனை அட்டால மெனவும் கூறுவது வழக்கு. (உரு)

அங்ஙக்வ்விய களிப்பெய்திவந் தட்டாலைமண் டபம்பொன்
நகங்கவ்விய தெனத்தூணெரு நாலுன்கினி லெடுத்தே
சகங்கவ்விய புகழான்செயத் தறுகட்கணி மதமா
முகங்கவ்விய விற்சேவகன் வருவானது மொழிவாம்.

(இ - ள்) மனநிற்பற்றிய மகிழ்ச்சியடைந்து (திருச்சுற்றானத்தி னின்று) வந்து உலகிற்பரந்த கீர்த்தியையுடைய விக்கிரமபாண்டியன் அட்டாலை மண்டபம் ஒன்றை மகமேருவே (தூணுக வருமாறிச்) சுமந்ததென்று சொல்லும் படி பதினுறுதூண்களால் (சுமக்கும்படி) எடுத்துக் கட்டிமுடிக்க, அஞ்சாமையை யுடைய அம்பானது யானையின் முகத்தில் தைத்தருள, (சோமசுந்தரக் கடவுள்) வில்லை யேந்திய சேவகனுய் வருகின்றூர். அதனைக் கூறுவாம்.

(வி - ம்) முகங்கவ்விய என்பதில் கவ்விய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (உசு)

வேறு

நீனிற நீத்த நீக்கு நிழன்மதி யிரண்டுண் டென்ன
வானிற வலயச் சங்க வார்குழை துழைவித் தம்பூம்
பானிற வெகினங் காணுப் படர்சடை மறைத்துத் தோற்றுங்
கானிறை குஞ்சிச் சூட்டிற் களிமயிற் கலாபஞ் சூடி.

(இ - ள்) நீலநிறம் பொருந்திய சமுத்திரத்தை நீக்கிச்செல்லும் ஒளிபொருந்திய சந்திரன் இரண்டுண்டாயின் அவற்றை யொப்ப, வெண்ணிறம் பொருந்திய வட்டவடிவமாகிய சங்காற்செய்த நீண்ட குண்டலங்களே (திருச்செவியில்) அணிந்து, அழகிய தாமரைமலரில் வசிக்கும் வெள்ளிய நிறத்தையுடைய (பிரமனுடைய) அன்னத்தால் காணமுடியாத படர்ந்த சடைமுடியை மறைத்தருளி, காணப்படும் வாசனைபொருந்திய சிகையாகிய சுடிகையில் களிக்கும் மயிலினது இறகைச் சூடி.

இதுமுதல் ஆறு செய்யுள்கள் குளகம்.

(வி - ம்) இதுமுதல் நான்கு செய்யுள்களால் சிவபெருமானது வருகை கூறப்பட்டது. நீலநிறம் என்றது நீனிறம் எனக் கடைக்குறையாயிற்று. (உரு)

கருங்கடன் முளைத்த செக்கர்க் கதிரெனக் குருதிக் கச்சை
மருங்குற வீக்கிச் சோரி வாயுடை வாளுங் கட்டி
இருங்குரான் மறைக ளேங்க இருநிலக் தீண்டு தாளிற்
பொருங்கழல் வளைத்து வாளிப் புட்டிலும் புறத்து வீக்கி.

(இ - ள்) கரிய கடலில் உதித்த செஞ்சூரியனைப்போல உதிரநிறம் பொருந்திய கச்சையை அறையிற் பொருந்தக்கட்டி, உதிரஞ் சொரியும் வாயையுடைய உடைவாளையும் (அதன் புறத்துச்) சேர்த்து, (தேடமுடியாமல்) வருந்தும் நான்கு வேதங்களும் அலற, (தனது பெருந்தவத்தால்) பெரிய நிலவுலகு பரிசிக்கும் திருவடியில் போர் செய்கின்ற வீரக்கழலையணிந்து, அம்பராத்தூணியையும் முதுகிற் கட்டி.

(வி - ம்) உடையான்றொழிலை யுடைமைமேலேற்றிப் பொருகழலென்றார்.

வீங்கிய தடந்தோ ளிட்ட வார்சிலை வில்லி னேடும்
பாங்குறை யிமயப் பாவை பாதியே யன்றி முற்றும்
வாங்கிய வண்ணம் போன்று மல்லது மாலு மோர்பால்
ஓங்கிய வண்ணம் போன்று மொளிநிறம் பசந்து தோன்றி.

(இ - ள்) பூரித்த பெரிய தோளில் தொடுத்த வடிய வில்லினோடும் இடப்பாதியில் வசிக்கும் உமாதேவியார் அப்பாதியே யல்லாமல் (திருமேனி) முழுமையும் பெற்றது போன்ற (பசிய) நிறத்தையொத்தும், அதுவன்றித் திருமாலும் ஒருவலப் பாதியில் வசித்தருளும் நிறத்தையொத்தும் கருநிறமுற்று.

(வி - ம்) திருமாலும் சிவசத்திகளுள் ஒன்றாதல் பற்றி ஒருபாகம் பெற்றது போலும் என்றார். இதனை,

வானெகவமத்தீ வாரெஷாவஷ - வ்ரயொஜநாயஶ்ய
ஹதவிக்தர ஹ்ருஶ: - ஹொமெவவாதி வாரவஷெஷவி
ஷ்ணு - க்ரோமெஹவாவீவஸ மெஷவமஶ்ர ॥

எனவரும் ஆகம சுலோகத்தானறிக. (உஎ)

காமனுங்காமுற் றஞ்சுங் காலையாம் பருவக் தோன்றத்
தாமுல களந்த வென்றித் தனிவிற்சே வகனுய்த் தோன்றி
மாமறை மகுட மன்ன மண்டபத் தேறித் தென்னர்
கோமக னிடுக்கண் தீர்ப்பான் சூஞ்சர வரவு நோக்கா.

(இ-ள்) மன்மதனும் விரும்பி (இவ்வடிவம் மகக்கில்லையே யென்று பொரு மையால்) அஞ்சும் காலைப்பருவம் வாய்க்க, உலகத்தை அளவுபடுத்திய வெற்றி வாய்ந்த ஒப்பில்லாத வில்லேத்தாங்கிய வேடுவவீரனுய் எழுந்தருளி, மகத்தாகிய வேதபுருஷனுடைய கீரீடம் போன்ற மண்டபத்திலேறி, பாண்டிய மரபிற் ரோன்றிய விக்கிரம பாண்டியனுடைய துன்பத்தைத் தவிர்த்தற்பொருட்டு (சோழனேவிய) யானையைப் பார்த்தருளி.

(வி - ம்) காமனும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்பு. (உஅ)

அஞ்சுகூ விளிச்சேய்த் தென்ன அதுவர அறனி லாதான்
வெஞ்சினக் கோலி ணேன்முண் மிதித்துமெய் குழைய வாங்கிச்
செஞ்சிலே நெடுநாண் பூட்டித் திருவிர றெறித்துத் தாக்கிக்
குஞ்சர மெட்டு மஞ்சக் கோளரி முழக்கங் காட்டி.

(இ - ள்) ஐந்து கூப்பிடு தூரத்தில் அந்த யானையானது வரத் தருமகெறி யில்லாத அரசனது கோபத்தையுடைய கொடுங்கோல் போல, செவ்வேயுள்ள வில்லினை (கனது) வலிய திருத்தாளால் மிதித்து, திருமேனிவளேய வளேத்து, நெடிய நாணினை (வில்லிற்) பூட்டி, திருவிரல்களால் தாக்கிக் குணத்தொனி செய்து, அட்டகஜங்களும் அஞ்சும்படி சிங்கம்போல வீரகோஷஞ் செய்து.

(வி - ம்) அஞ்சுகூவிளிச் சேய்த்து என்பது ஒரு குரோசம். (உக)

இங்கித நெடுங்கோ தண்ட மிடங்சையி லெடுத்து நார
சிங்கவெங் கணேதொட் டாகங் திருகமுன் னிடத்தாள் செல்ல
அங்குலி யிரண்டா லேயன் செவியுற வலித்து விட்டான்
மங்குலின் முழங்கும் வேழ மத்தகங் கிழிந்த தன்றே.

(இ - ள்) இம்மதுராபுரியிலுள்ளாருக்கு இதஞ் செய்தற் பொருட்டு வேட் டருவேற்றுவந்த சோமசுந்தரக்கடவுள் நெடியவில்லினை இடக்கையிற் பிடித்து, கொடிய நாணிஞ்காஸ்திரத்தை (குதையில்) ஏறிட்டு, திருமேனி திருகும் படி (வலக்கால் மண்டலித்து) முன்னே இடக்கால் செல்ல, இரண்டு திரு விரல்களால் செவியளவு (விருத்தாகாரமாக) நாணேவலித்துப் பிரயோ கஞ் செய்தருள, மேகம்போல முழங்கி வந்த யானையானது மத்தகம் கிழி பட்டது.

(வி - ம்) விட்டான் - முற்றெச்சம். வில்லில் அம்புதொடுத் தெய்வார்க்கு நிலைகள் நான்கு. அவை பசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீட மெனப் படும். ஈண்டு "மூன் இடத்தாள் செல்ல" என்றது வலக்கால் மண்டலித்தா லன்றி யியலாதாதலின் இதனை ஆலீடநிலை யென்பர். (கூ0)

கோண்டலி னலறிச் சீறி வீழ்ந்தது கொடிய வேழம்
பிண்டது பாருஞ் சேடன் சென்னியும் பிளந்த தண்டம்
விண்டது போலு மென்னத் துண்ணென வெருவிப் போன
பண்டைய தருக்கும் வீறும் படைத்தன திசைமால் யானை.

(இ - ள்) கொடுஞ்செயலையுடைய யானையானது மேகம்போலக் கதறிச் சீறி (நிலமிசை) வீழ்ந்தது. (அதன் உடற்சுமை யாற்ற) பூமியும் பிளந்தது. அண்டம் பிளவுற்றதுபோலு மென்ற விரைவாகப் பயந்த ஆதிசேடனுடைய ஆயிரஞ் சிரசுகளும் பிளவுற்றன. (புறமுதுகிட்டோடிப்) போன மதமயக்கத் தையுடைய திக்கஜங்கள் (புதிதாய் வந்த யானை யிறந்ததால்) மூன்னுள்ள (தமது) இயற்கையாகிய செருக்கும் இறுமாப்பும் அடைந்தன.

(வி - ம்) சென்னி - சாதியொருமை. இதற்கேற்பப் பிளந்தது என ஒருமை வினை கொடுத்தார்.

இச்செய்யுள் காரணகாரிய சம்பந்தங்காட்டி நிற்றலின் காரணமாலையணி.

புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்ற மொத்தது மத்த யானை
சுதைபடு மதிக்கோ வேந்தன் செழுமுகுவுக் கிறுவ னெத்தான்
பதைபடு மமணர் கால படரெனப் படரிற் பட்டார்.

(இ - ள்) (தமது திருமேனி) புதைபடும்படி யானைத்தோலைப் போர்த்தரு ளிய புண்ணியமூர்த்தியாகிய சிவபெருமானது திருவடியால் உதைக்கச் சாய்ந்த இயமனை யொத்தது, மதமயக்கத்தையுடைய யானையானது சாய்ந்தது. அமுதம் பொருந்தி சந்திரமரபிற் செறன்றிய விக்கிரம பாண்டியன் வேதியர் குலத் திற் பிறந்த மார்க்கண்டேயரை யொத்திருந்தான். (யானை இறந்ததுகண்டு) பதைக்குஞ் சமணர்கள் (இயமன் வீழ்ந்தது கண்ட) காலபடாளைப் போலத் துன்பத்திலழுந்தினர்கள். (கூ2)

இருள்கிடந் தனைய தானை யிட்டகிற் குரங்கார் மாலை
திருண்முகத் தொதுங்கிச் செல்லு மிரவிசெங் கிரணம் போன்ற
திருண்முழு துண்ணக் காலை யெழுகதிர் வட்ட மன்ன
திருளினை மறைத்த கண்ட னெய்தவாய்ப் பெய்யுஞ் செங்கீர்.

(இ - ள்) (இறந்து வீழ்ந்த) யானையானது இருட்படலம் (பூமியின்மேல்) வீழ்ந்ததை யொத்தது. (அந்த யானையின் நெற்றியில்) இட்ட சிந்தூரமானது கரியமாலைக்காலத்திலுள்ள இருள் முகத்திலே ஒதுங்கிச் செல்கின்ற சூரியனது சிவந்த கிரணத்தை யொத்தது. நீலகண்டராகிய சிவபெருமான் எய்த வாயினூற் சொரியும் உதிரநீரானது இருள் முழுவதையும் (ஒரு சேர) உண்ணக் காலைப்பொழுதில் உதயமாகுஞ் சூரியனை யொத்தது.

(வி - ம்) முழுது என்பதனிறுதியில் முற்றும்மை தொக்கது. 'கிடந்தனை யது என்பது தொகுக்கும் வழி தொகுத்தல். (கூக)

போய்யறு மனத்தார் தேற்றும் புன்னெறி யொழுக்கம் பூண்ட
வெய்யகோன் சொடுங்கோல் தன்னை வெண்மருப் பாகத் தாங்கி
மையல்மா வடிவங் கொண்டு வக்கவெங் கலியைத் தென்னன்
செய்யகோ லியன் சிங்க வாளியாய்ச் சிதைத்த தன்றே.

(இ - ள்) பொய்யொழுக்கமகலாத மனத்தையுடைய சமணர்கள் (மெய் போலத்) தேற்றிய பாவநெறியில் ஒழுகுதலே மேற்கொண்ட கொடிய சோழா சனுடைய கொடுங்கோலை வெண்மைதங்கிய கொம்பாக ஏற்று, மதமயக்கம் பொருந்திய யானைரூபங்கொண்டு வந்த கொடிய கலியை, விக்கிரமபாண்டிய னுடைய செங்கோலானது சிவபெருமானுடைய நரசிங்காஸ்திரமாகச் சென் றழித்தது.

(வி - ம்) வேதாகமநெறி பொழுசாத சமணமார்க்கத்தில் நின்ற சோழ னுடையகோல் கொடுங்கோல் என்றும், அதனுல் அவன் நாட்டிலுள்ளது கலி என்றும், வேதாகம நெறி யொழுகும் பாண்டியனுடைய கோல் செங்கோல் என்றும், அதனுல் அவனது நாட்டிலுள்ளது அறம் என்றுங் குறிப்பால் உணர்த்தப்பட்டன. (கூச)

உருமுவீழ்ப் புண்ட குன்றி னும்பன்மா வம்பு தொட்ட
பெருமுழை வாயும் வாயும் பெருகினை வருவிச் சேரி
கருமுகின் மானச் சேனங் கழுதுகள் பூத மொய்த்த
திருமணித் தடந்தோள் வீங்கத் தென்னவ னுவகை பூத்தான்.

(இ - ள்) இடிவீழ்ந்த மலைபோல யானையின்மேல் அம்புதைத்துப் பிளந்த பெரிய (மலைக்) குகைபோன்ற வாயிலிருந்தும், (அந்த யானையின்) வாயிலிருந் தும், அருவிபோல உதிரவெள்ளங்கள் பெருகின. காளமேகம்போலப் பருந் துகளும் பசாசுகளும் பூதங்களும் (தசையுண்ணு) நெருங்கின. வீரலக்ஷ்மி வசிக் கும் விசாலமாகிய தோள்கள் பூரிக்கும்படி விக்கிரமபாண்டியன் மகிழ்கூர்ந் தான்.

(வி - ம்) வீழ்ப்புண்ட என்னும் பெயரெச்சத்தில் வீழ்ப்பு என்னுந் தொழிற்பெயர் உண் என்னும் வினைப்பகுதியோடுகூடி ஒருபகுதியாக நின்றது.

ஆனையின் புண்ணீ ருண்ண அடுத்தகா ருடற்பே யென்னச்
சேனையின் செல்லப் போந்த திணிபிரு வாணர் தம்மை
மீனவன் கண்டு சீற வேந்தவன் குறிப்பி னிற்கும்
மானஞவஞ் சினவேல் மள்ளர் வல்லேபோய் மூடுக்க லுற்றூர்.

(இ - ள்) யானையினது உதிரத்தைப் பருகச் சமீபித்தடைந்த கரிய உடலையுடைய பேய்கள்போல, சேனைகள் பின்தொடர்ந்துவர, (யானையின் பின்தொடர்ந்து) வந்த வலிய கரிய சமணர்களை, விக்கிரமபாண்டியன் கண்டு சினங்கொள்ள, அப்பாண்டியனுடைய குறிப்பின் வழிநிற்கும் மானத்தையுங்

மொடிய கோபத்தையுமுடைய வேற்படை தாங்கிய வீரர்கள் விரைந்து சென்று திரத்தத் தொடங்கினர்கள்.

(வி - ம்) ஈண்டு மானம் என்றது தமது அரசனுக்கு வந்த தீங்கைத் தமதாகக் கருதியவழிப் போக்கதாம். (நகரு)

எடுத்தனர் கையிற் றண்ட மெறிந்தனர் மறிந்து சூழ்மேபாய்த்
தடுத்தனர் கரகந் தூளாத் தகர்த்தனர் பீலி யோடுங்
தொடுத்தன ருடுத்த பாயைத் துணிபடக் கிழித்துக் கால்வாய்
விடுத்தனர் மானம் போக்கி விட்டனர் சில்லோர் தம்மை.

(இ - ள்) (தமது) கையில் தண்டாயுதத்தை யெடுத்து (சில சமணர்களை அடித்தார்கள். குறுக்காகச் சூழ்ந்துபோய் (சிலரை)த் தடுத்தார்கள். (அவர்கள் தாங்கிய) காகங்கள் தூளாக மயிற்றோகையோடும் பொடிபடுத்தினர்கள். (சிலரை) அவர்கள் தொடுத்துடுத்த பாயைத் துண்டுபடக் கிழித்துக் கால்வாயில் விடுத்தார்கள். சிலரை அவமானப்படுத்தி விட்டார்கள்.

(வி - ம்) எடுத்தனர் தொடுத்தனர் - முற்றெச்சங்கள். தடுத்தனர் என்பதனையும் முற்றெச்சமெனக் கொள்ளினு மிழுக்காது. (நகஎ)

எறியுண்டு செய்த மாய மிழப்புண்டு சேணை யோடு
முறியுண்டு நடுக்கம் பாவ மூழ்குண்டு மாழ்கிச் சாம்பிப்
பறியுண்ட தலையர் யாரும் பழிப்புண்டு பாயுந் தாமும்
உறியுண்ட கரகத் தோடு மொதுங்குண்டு பதுங்கிப் போனார்.

(இ - ள்) (விக்கிரமபாண்டியன், வழிகின்ற மள்ளர்களால்) அடிபட்டு, (மதுரையையிழக்கத்தாம்) செய்த வஞ்சனையாகிய மாயையையிழந்து, (தமக்குத் துணையாக வந்த) சேனையோடு முறிபட்டு, நடுக்கத்திலும் பாவத்திலும் மூழ்கி மயங்கி, உரோமம் பறிக்கப்பட்ட தலையையுடைய சமணர்கள் எல்லோரும் வருந்திப் பழிப்படைந்து, பாயும் தாமும் உறியிற்பொருந்திய கமண்டலத்தோடும் ஒளித்துப் பதுங்கி ஓடினார்கள்.

(வி - ம்) மாயை தாம்செய்த வஞ்சத்தால் வந்ததாதலின் மாயம் என்று காரணத்தைக் காரியமாக உபசரித்தார். "பறியுண்டதலையர்" என்றது சுவேதசமாகிய உயிர்கள் கருவியால் உயிர் போகாதிருத்தற் பொருட்டு ரகத்தாற் பறித்தல் சமணமதக் கொள்கையாதல் பற்றி யென்க.

எறி முறி மூழ்கு ஒதுங்கு என்னும் வினைப்பகுதிகளுடன் உண் என்னும் செயப்பாட்டுவினை விகுதிகள் வந்து புணர்ந்து வேறு பொருள் தந்து கின்றன. பறியுண்டி மூதலியன செயப்பாட்டு வினையெச்சங்கள். (நகஅ)

மாதங்கந் தடிந்தட் டாலே மண்டபத் திருந்த வீரன்
பாதங்கள் கையாற் பற்றிப் பாண்டிய னிரந்து வேண்டிப்
போதங்கள் கடந்தா யென்றும் பொலியவிங் கிருத்தி யென்ன
வேதங்கட் கருத்தஞ் சொன்ன வேதிய னதற்கு நேர்ந்தான்.

(இ - ள்) (சமணர்கள் ஏவிய) யானையைச் சங்கரித்து அட்டாலே மன்ன பத்திலிருந்தருளிய (வேட்டிவருக்கொண்டுவந்த) பெருமானுடைய திருவடிகளே, விக்கிரமபாண்டியன் (தனது) கைகளாற் பற்றிக் குறைகூறி யாசித்து, (பிரமாதியாது) சுட்டநிலிற்கு அதீதப்பட்டு நின்றாய்! எக்காலமும் இவ்விடத்தில் விளங்க வீற்றிருப்பாய் என்று வேண்ட, (முற்காலத்தில் கண்ணுவர் முதலிய முனிவர்கட்கு) வேதத்திற்குப் பொருளருளிச்செய்த (வேட்டிவடிவாய் நின்ற) அத்தணர் அவ்வேண்டுகோளுக்கு இணங்கினார். (கூ)

பின் னுஞ்சில் வரங்கள் கல்கப் பெற்றுநான் மாடக் கூடல்
மன் னுஞ்சின் மயனே வந்து வந்தித்து வருநாள் காமன்
என் னுஞ்சின் மலர்ப்பூக் கண்டா ரிராசசே கரனைப் பெற்று
பின் னுஞ்சில் லியந்தேர் வேந்தன் மேதினி புரக்கு மன்னே.

(இ - ள்) பின்னுஞ் சிலவரங்கள் தந்தருளப் பெற்று, நான்மாடக்கூடலில் எழுந்தருளிய ஞானவடிவாகிய சோமசுந்தரக்கடவுளே (நாள்தோறும்) வந்து வந்தனை செய்து வருநாளில், (கண்டோர்) மன்மதனென்று சொல்லும் மெல்லிய மலராகிய பொலிவையுடைய தண்ணிய மாலையையணிந்த இராசசேகரனைப்பெற்று, விளங்கா நின்ற உருள்பூண்ட அழகிய தேரையுடைய விக்கிரம பாண்டியன் உலகத்தைப் பாதுகாத்து வாழ்கின்றான்.

(வி - ம்) "வந்தித்து வருநாள் இராசசேகரனைப் பெற்று" என்றது, அபிடேகபாண்டியன் சித்தமூர்த்திகள் திருவருளால் விக்கிரமபாண்டியனைப் பெற்றதுபோல, விக்கிரமபாண்டியன் வேட்டிருவங்கொண்ட பெருமான் திருவருளால் இராசசேகரபாண்டியனைப் பெற்றனென்பது புலப்படக் கூறினார்.

வம்புளாய் மலர்ந்த வாசான் வசவிடு மத்தக் குன்றிற்
சிம்புளாய் வடிவங் கொண்ட சேவக னேவல் செய்த
அம்புளாய்த் தூணம் விள்ள அன்றவ தரித்த வாறோர்
செம்புளாய்க் கொடிய நார சிங்கமா யிருந்த தன்றே.

(இ - ள்) வாசனை தனதகத்துக் கமழ விகசித்த ஆத்திமாலை யணிந்த சோழராசன், ஏவிய மதமயக்கத்தையுடைய மாலை (போன்ற யானையின் மத்தகத்தின்)மேல், (நாரசிங்கத்தின் இறுமாப்பொழிக்க)சரபப்புள்ளாய்த்திருவுருவுங் கொண்டருளிய சிவபெருமானுடைய ஏவல்வழிநின்ற நரசிங்காஸ்திரமானது (தைத்து) அதனுள்ளாகி, (பிரகலாதன் பொருட்டுத் திருமால் இரணியாக்ஷன் (தைத்து) அதனுள்ளாகி, (பிரகலாதன் பொருட்டுத் திருமால் இரணியாக்ஷன் சுட்டிய) தூண் பிளவுபட அன்று நரசிங்கமூர்த்தியாய் அவதரித்தவகைபோல, கருடவடிவாய்க் கொடியையுடைய நரசிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருந்தது.

(வி - ம்) "சிம்புளாய் வடிவங்கொண்ட சேவகன்" என்றது, இரணியாக்ஷனைச் சங்கரித்ததனாலுண்டாகிய இறுமாப்பால் தன்னை மறந்து உலகை யழிக்கக்கருதிய நரசிங்கத்தைச் சங்கரித்த சரபத்திருவுருவத்தை. அவ்வாறு சரபரூபங்கொண்டவர் வீரபத்திரக்கடவுளென்று உபதேசகாண்ட முதலிய நூல்கள் கூறியிருக்க, ஈண்டுச் சிவபெருமானுக்குக் கூறியது வீரபத்திரர்முதலிய

மூர்த்தங்களும் சிவமூர்த்தங்கள் அறுபத்துநான்கனுள் அடங்குதல்பற்றி என்க. அவையாவன:—

இலிங்கம் - இலிங்கோற்பவம் - முகலிங்கம் - சதாசிவம் - மஹாசதாசிவம் - உமாமஹேசுரம் - சுகாசனம் - உமேசம் - சோமாஸ்கந்தம்-சந்திரசேகரம்-ரிஷபாரூடம் - ரிஷபாந்திகம் - புஜங்கலளிதம் - புஜங்கத்ராசம் - சந்தியாநிருத்தம்-சதாநிருத்தம்-சண்டதாண்டவம்-கங்காதரம் - கங்காவிசர்ஜனம் - திரிபுராந்தகம் - கலியாணசுந்தரம் - அர்த்தநாரீச்வரம் - கஜாரி - ஜ்வராபகர்ஷம் - சார்த்தூலஹரி - பாசுபதம் - கங்காளம் - கேசவார்த்தம் - பிக்ஷாடனம் - காரகிங்காரி - சண்டேசுரபிரசாதம் - தக்ஷிணமூர்த்தம் - யோகதக்ஷிணமூர்த்தம்-வீணாதக்ஷிணமூர்த்தம் - காலாந்தகம் - காமாரி - இலகுளேசம் - பைரவம் - ஆபத்துத்தாரணம் - வடுகம்-க்ஷேத்ரபாலகம் - வீரபத்ரம் - அகோராஸ்த்ரம்-தக்ஷயஜ்ஞபூர்ணம் - கிராதம்-குருமூர்த்தம் - அசுவாரூடம் - கஜாந்திகம் - ஜலந்தராரி - ஏகபாதத்ரிமூர்த்தம் - த்ரிபாதத்ரிமூர்த்தம் - ஏகபாதமூர்த்தம் - கௌரீவரப்தம் - சக்ரதானம் - சௌரீலீலாதானம் - வ்ருஷபவாஹனம் - கருடாந்திகம் - பிரமசிரச்சேதம் - கூர்மாரி - மச்சாரி - வராஹாரி - பிரார்த்தநாமூர்த்தம் - இரத்தபிக்ஷாடனம் - சிவ்யபாவம் எனப்படும். *இவற்றை,

சிவபராக்கிரமம்

ஸிம்மஸிம்ஹரூபம்ஸிவெவ ஶரபேஸிம்மஸஹாஸிவம் |
ஶஹாவஸஹாஸிவம்ஸிவெவெவ ஶாஶிவெஹரஸஶதிஸிவரம் |
ஸஸ்வாவஸநிஸஸிவம்தஸ ஸொசிவஸ்ஸஸ்ஸ்ஸ்தஸிவெவஸ |
ஸம்ஸஸ்ஸிவெஸரஸஶிரிம்ஸ வ்ருஷாரஸிவம்வ்ருஷாஜிகம் |
ஹஸ்ஜம்ஸஸவிகம்ஸிவெவ ஹஸ்ஜம்ஸதுராவஸிவெவ |
வஸம்ஸுரஸ்ருதம்ஸஹாஸ்ருதம் தாரஸவம்ஜாஹ்ருவீயரம் |
மம்ஸாவிஸரஸ்ருஸம்ஸிவெவ திவஸரரம்தகஸிவெவ |
கஸ்யாணஸஸம்ஹரஸம்ஸிவெவ கஸ்யந்தாரீஸ்வரஸம்தயா |
ஸஜ்யஸ்ஜம்ஜ்ஜராவஸ்வம் ஸரார்ஸ்ரிஸஹரஸிஸ்ருஹம் |
தயாவபாரஸஸ்வதம்ஸிவெவ கஸ்காஸம்கெஸவரயஸ்கம் |
ஸிக்ஷாடஸ்ரிம்தஸ்வஸிம்ஹஸ்ரம் ஸம்ஸெஸரஸ்ரவ்யஹாஸ்கம் |
ஸகஸ்ணாஸ்தி-ஸ்தஸ்ரஸ்ரிம்யொமவீணாயரம்தயா |
கரஸாம்தகஸ்ரஸ்ரகாரரிரஸகஸ்ஸஸ்ரஸஸ்ரஸிவெவ |
கஸ்வஸ்ஸஸரணம்ஸிவெவ வடுஸ்கம்க்ஷேத்ரவாஸகம் |

---

*இவற்றின் விரிவெல்லாம் தமிழ் வசனநூலாகப் பிரமாணசஹிதம் அறுபத்துநான்கு **திருவுருவப்படங்களுடனே** வெளியிடப்பட்டிருக்கும் **சிவபராக்கிரமத்தானறிக.**

வீரஹரஸ்வொராஹ்ரஂஷயஜ்ஹரஂதயா ।
கிரஂதம ஹரஸ்தி-ஂவ்ரஸ் கஸ்வராஸ்ரஂமஜாஂதிகம் ।
ஜஹ்யராவயஂவைவ ஸைகவாஹஂதி-ஸ்தி-ஂகம் ।
கிரஸ்தி-ஂதி-ஂவ்ரஹஂவைவ தயாமௌரீவராவ்ரஹம் ।
வக்ரஹாஸ்வராஸ்வம மௌரீமீராஸஸ்திதம ।
விஷாவஹரணஂவைவ ஹரஸ்யாஂதிகஸைவ ।
தயாவ்ரஹஸிராஸ்ரெயஂகஸ்ரஸ்வஂஹராஸைவ ।
உத்ஸாரிஂதவராஹாரிஂவ்ரயஂநாஸ்தி-ஂவைவ ।
ராக்ஷிகஸ்வாஹாநஂவ ஸ்ரிஷ்ஹாவஂதயைவ ॥
ஊதிகஷ்டாஷ்விஹரஸ்ரஸ்தாஸ்நாராவயீ ॥

என்பதனுனறிக. (சக)

வேறு

உலகெலா மழித்து மீளவுண் டாக்கு முருத்திரன் வீரசத் தியினிற், சிலதரித் திறவா வவுணன்மார் பிடந்த சிங்கநா யகனியங் கெய்தி, அலகின்மா தவஞ்செய் துரோமசன் றன்பே றறியவோர் தீர்த்தமுண் டாக்கி, இலகுபே றடைந்தான் பிரகலா தனுநேரற் றிலாப் பெருவர மடைந்தான்.

(இ - ள்) சமஸ்தலோகங்களையுஞ் சங்கரித்து மீளவும் (தனது சத்தி யாற்) படைத்தருளும் உருத்திரமூர்த்தியின் வீரசக்திகளில், சிலசக்திகளை (அவனருளால்) தரித்து, இறவாத (வரம்பெற்ற) இரணியாக்ஷனுடைய மார்பைப் பிளந்த நரசிங்கமூர்த்தியை, உரோமசமுனிவர் அத்தலத்தையடைந்து குற்ற மில்லாத பெருந்தவஞ்செய்து தம் பெயர்விளங்க ஒரு தீர்த்தமுண்டாக்கி விளங் கும் பெரும்பேறடைந்தார். பிரகலாதனுக் தவஞ் செய்து அழிவில்லாத பெரியவரங்களை யடைந்தான்.

(வி - ம்) "உருத்திரன் வீரசத்தியினிற் சில தரித்து" என்றதால், இரணி யாக்ஷனை நரசிங்கமூர்த்தி வென்றது உருத்திரானுக்கிரகப் பேற்றால் என் பது விளங்கக் கிடப்பது.

உரோமசரென்பவர் இந்நரசிங்கானுக்கிரகத்தால் மீண்டுஞ் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து இறவாவரம் பெற்றவர். ஈரிருடலில் ஒருரோமம் உதிர்ந்தால் ஒருமால் இறப்பர். இவ்வாறு எண்ணில்லாத விண்டுமூர்த்திகள் இவர் காலவீளவிற்கழிந்திருத்தலை ஒரு கை யுரோமமற்றிருப்பது உணர்த்து மென்பர். இதனை, திருவொற்றியூர்ப்புராணத்தானறிக. (சஎ)

ஆ திருவிருத்தம் - கசஉஎ.

இருபத்துமூன்றுவது

விருத்த குமார பாலரான படலம்

தழையு லாங்கைய ரேவிய தந்திமேல் விடைமேல்
அழகர் சேவகஞ் செய்தவா றறைந்தன மவரே
கிழவ னுகிப்பின் காளையாய்க் கிஞ்சுகச் செவ்வாயிக்
குழவி யாய்வினை யாடிய கொள்கையைப் பகர்வாம்.

(இ - ள்) மயிற்றோகையைத் தாங்கிய கையையுடைய சமணர்கள் செலுத்திய யானையின்மேல், இடபத்தின்மேல் ஆரோகணித்தருளும் அழகினையுடைய சோமசுந்தரக் கடவுள் சேவகஞ்செய்த திருவிளையாடலைக் கூறினேம். அச் சோமசுந்தரப் பெருமானே (முதலில்) கிழவராகியும், பிறகு காளைப் பருவ மூடையவராகியும், (இறுதியில்) முண்முருக்கம் பூவையொத்த செவ்விய வாயையுடைய குழந்தையாகியும் விளையாடி யருளிய திருவிளையாடலை (யாம் இனி) க்கூறுவாம்.

(வி - ம்) சமணசிரியர்கள் எக்காலத்துந் தமது கைகளில் மயிற்றோகையைப்பற்றி நிற்றலானும் அவர்கள் சோழராசன் விருப்பின்படி பாண்டியனைக் கொல்ல அபிசாரஞ் செய்து அதிற்றோன்றிய யானையை அப்பாண்டியன்மீது விடுத்ததானும் "தழையுலாங்கையரேவிய தந்தி" என்றும், சிவபெருமான் இடபாரூடரும் பேரழகரும் பாண்டியர்க் குற்ற இடுக்கண் களைவாருமாய் அதனை ஸாசிங்காஸ்திரம் விடுத்து மாய்த்தெழுத்தமையின் "தந்திமேல் விடைமேலழகர் சேவகஞ் செய்தவாறு" என்றுங் கூறினர். (க)

தென்னன் விக்கிர மன்புயத் திருநிலச் செல்வி
மன்னி வாழுநாள் மதுரையின் மறையவ னொருவன்
அன்ன வன்விரு பாக்கனு மவன்குடி வாழ்க்கை
மின்ன னுள்வட மீன னுள் பெயர்சுப விரதை.

(இ - ள்) விக்கிரமபாண்டியனுடைய தோளின் மீது பெரிய பூமிதேவி நிலை பெற்று வசிக்குங் காலத்தில், மதுராபுரியில் பார்ப்பனன் ஒருவன் இருந்தனன்; அவ்வேதியன் விரூபாக்ஷனென்னும் பெயரையுடையவனும்; அவனுடைய இல்வாழ்க்கைக் குரியவள் மின்னல் போலும் (ஒளி) பொருந்தியவள்; வடமீனுகிய அருந்ததியைப் போலுங் கற்பு வாய்ந்தவள்; சுபவிரதையெனப் பெயர் பெற்றவள்.

விரூபாக்கன் - மேல் நோக்கிய விழியையுடையவன். (உ)

அனையர் தங்களுக் கரும்பெறன் மகவின்றி யநந்தம்
புனித கல்லறஞ் செய்தொழி லொழுக்கமும் பூண்டு
கனைய வார்குழ லன்னைய ரெழுவர்பால் நண்ணி
இனிய மாதவஞ் செய்தொரு பெண்மக வீன்றார்.

(இ - ள்) அப்படிப்பட்ட (விரூபாக்ஷன் சுபவிரதை யென்னும்) இருவருக்கும் பெறுதற்கரிய புத்திரப்பேறில்லாது, பரிசுத்தமாகிய கல்ல எண்ணிறந்த தருமமே செய்து வரும் தொழிலையும் (சிவபெருமானையும் பிராட்டியாரையும் வழிபட்டு வரும்) கல்லொழுக்கத்தையு மேற்கொண்டு, குளிர்ச்சி பொருந்திய நெடிய அளகத்தையுடைய சத்தமாதர்கள் சந்நிதியை யடைந்து, இனியபெருந் தவத்தைச் செய்து ஒரு பெண் குழந்தையைப் பெற்றார்கள்.

(வி - ம்) அன்னையர் எழுவர்:—அபிராமி - மாயேசுவரி - கௌமாரி - நாராயணி - வராகி - இந்திராணி - காளி - எனப்படுவர். (கூ)

பேருங் கௌரியென் றழைத்தனர் பிராயமோ சைந்திற்
சாருங் கௌரியும் பிறவிநோய் தணிப்பதற் குறுதி
தேருஞ் சிந்தையாள் தந்தையை வணங்கியிச் சென்னனம்
ஈருந் தெய்வத மந்திரம் யாதென வினவ.

(இ - ள்) (சத்த மாதர்களது திருவருளாற் பிறந்த குழந்தையாதலின்) பெயர் கௌரி யென்றிட்டனர். ஐந்து வயதையடைந்த கௌரியும் பிறவியாகிய பிணியைத் தணிக்கும்படி உறுதி வழியை யாராய்ந்தறியும் மனத்தையுடையவளாகி, தனது பிதாவாகிய விரூபாக்ஷ யையரைப் பணிந்து, இப்பிறவிப் பிணியை யொழிக்கத்தக்க தெய்வீகம் பொருந்திய மந்திரம் யாது? என்று கேட்க.

இது முதல் இரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) "தெய்வத மந்திரம் யாவென வினவ" எனப் பாடமாயின், தெய்வதம் - தெய்வமும், மந்திரம் - மந்திரமும், யாஎன வினவ - எவையென்று கேட்க என்று பொருள் கொள்க. தெய்வதம் என்றது பொருளால் உயர்திணையேனும் சொல்லால் அஃறிணையாதல்பற்றி மந்திர மென்பதைச் சேர்த்து யாவென்னும் பலவறி சொல்லைப் பயனிலையாகக் கொண்ட தென்க. (ஈ)

அந்த ணுளனு மதிசயித் தரும்பெறன் மகட்குச்
சிந்தை யார்வமோ டிறைவிதன் மனுவினைச் செப்பத்
தந்தை பாலது தெளிந்துநாத் தழும்புறப் பயின்றுள்
முந்தை நாளருந் தவக்குறை முடித்திட வந்தாள்.

(இ - ள்) வேதியனுகிய விரூபாக்ஷனும் வியப்படைந்து பெறுதற்கரிய தனது புதல்விக்கு மனத்திற் பொருந்திய அன்புடன் பராசத்தியின் திருமந்திரத்தைப் போதிக்க, சன்மார்த்திரத்திற் செய்த அரிய தவத்தின் குறை பாட்டை (இந்தச் சன்மத்தில்) முடித்திடும்படி பிறந்த கௌரியானவள் தன் பிதாவினிடத்தில் அம்மந்திரத்தைக் (கேட்டுச் சித்தித்து) தெளிந்து நாவானது தழும்பு பொருந்தப் பழகினுள் [சபித்து வந்தாள் என்றபடி]. (ஙி)

தாதை தன்றவக் கொழுந்தினுக் கிசையமா சைவ
மாத வத்தனு யாதியாச் சிரமத்தில் வழங்கும்
வேத வித்துமாய் மரபினுன் மேம்படு வானைப்
போது போதுமென் றுளத்தொடு பகன்றுகொண் டிருந்தான்.

(இ - ள்) விரூபாக்ஷன் தன்தவக் கொழுந்து போன்ற புத்திரிக்குப் பொருந்த மகா சைவ மார்க்கத்தில் நின்ற பெருந்தவ முடையஞும் (கால் வகையாச்சிரமங்களில்) முற்பட்ட பிரமசரிய ஆச்சிரமத்தி லொழுகும் வேத வித்துமாய், மரபினும் மேம்பட்டவனும் உள்ள கணவன் எப்பொழுது வருவா னென்று தன்மனத்தில் (இடையீடின்றி) நினைந்திருந்தான்.

(வி - ம்) மாசைவன் என்றது சிவதீக்கை பெற்ற வைதிகப் பிராமணனை. வேத அத்தியயனஞ் செய்தற்குரிய ஆச்சிரமம் பிரமசரிய மாதலின் "ஆதியாச் சிரமத்துள்" என்றும், அவ்வாறு வேதம் பழதினவருள்ளுஞ் சிறந்தவனுக இருத் தல் வேண்டுமென்பார் "வயங்கும் வேதவித்துமாய்" என்றுங் கூறினர். போதும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. மரபு என்றது கோத்தி ரம் சூத்திரம் முதலியவற்றை. (சு)

பருவ நாளிரண் டாகமேற் கடிமணப பருவம்
வருவ தாகஅங் கொருபகல் வைணவப் படிவப்
பிரம சாரியாய்க் கடைதொறும் பிச்சைபுக் குண்பான்
ஒருவன் வந்தனன் பலிக்கவ ணயற்புலத் துள்ளான்.

(இ - ள்) எட்டு வயதாக, அப்பொழுது நிகழும் திருமணஞ் செய்தற்குரிய பருவம் வர, அவ்விடத்தில் ஒரு நாள் வைணவ வடிவமேற்ற பிரமசரிய ஆச்சிர மத்தை மேற்கொண்டவனும் வீட்டு வாயில்களி லெல்லாம் (போய்) பிச்சை வாங்கிப் புசிக்கும் அயலூரிலுள்ள ஒருவன் அக்காலத்தில் பலிக்குத் தன் வீட்டிற்கு வந்தான்.

(வி - ம்) கடைதொறும் பிச்சை புக்கு என்பதற்குக் கடை வீதியில் (அமுதுபடி) முதலியவற்றைப் பிச்சை யெடுத்து எனப் பொருளுரைப்பினும் இழுக்காது. (எ)

பிச்சை வேண்டிஞ னவற்குத்தன் பெண்ணிணைக் கொடுப்பான்
இச்சை கூர்ந்தருந் தவத்தினுல் வருந்தியீன் றெடுத்த
விச்சை வேதியன் மனையொடு சுற்றமும் வினவா
தச்ச மின்றிநீ யெடுத்தவ னங்கையிற் பெய்தான்

(இ - ள்) பிச்சை விரும்பி வந்த அவ்வைணவப் பிரமசரியனுக்குத் தன் புத்திரியைக் கொடுக்க விருப்பங் கொண்டு, அருந்தவச் செயலால் (உடல்) வருந் திப் பெற்றெடுத்த (வேதநூற்) கல்வியில் வல்ல விரூபாக்ஷன், (சுபவிரதை யென்னும்) தன்னுடைய மனைவியுடன் சுற்றத்தாரையும் வினவி (அவர் கருத்தை) உணராமல், (சிறிதும்) அச்சமில்லாது காகதீ யெடுத்து அப்பிரமசரி யனது அழகிய கையில் (என் சுன்னிகையைக் கொடுத்தே னெவாறு) தாரை வார்த்தான்.

(வி - ம்) அச்சமின்றி என்றது தான் தங்தையாயிருப்பினும் அக்கன்னி கையின் தாய் கருத்தும் உறவினர் உட்கிடையும் உணரக் கருதாமலும் அதனுல் வருங் கோபத்தைக் குறியாமலுஞ் செய்தானெனப் புலப்படக் கூறியதாம். (அ)

கலிக்கு நூபுரச் சீறடிக் கன்னிதன் விதியும்
பலிக்கு வந்தவன் கல்வினைப் பகுதியுந் தரப்ப
ஒலிக்கு மந்திரச் சிரகநீ ரொழுக்கினுன் முந்திச்
சலிக்கு மன்னையுந் தமர்களுங் கேட்டுளந் தளர்வார்.

(இ - ள்) சத்திக்கின்ற சிலம்பை யணிந்த சிற்றடியையுடைய கன்னிப் பருவம் வாய்ந்த கௌரியின் விதிப்பயனும், பிச்சைக்கு வந்த வைணவப் பிரமசரியனுடைய கல்வினையின் பயனும் (தன்னைச்) செலுத்த, முற்பட்டு உச்சரிக்கும் மந்திரத்துடன் கரகத்தில் நிரப்பிய நீரைத் தாரைவார்த்தான் (என்று) மனம் வருந்துஞ் சுபவிரதையும் நெருங்கிய உறவினரும் கேள்விப் பட்டு மனந்தளர்ச்சியடைவாராயினர்.

(வி - ம்) "கன்னி தன்விதி - பலிக்கு வந்தவன் கல்வினைப் பகுதி" என்றமை—கௌரியின் போகூழ்ப்பயனும் பிரமசரியனுடைய ஆகூழ்ப்பயனும் என்க. (கூ)

குலனு மோர்கிலன் கோத்திர மோர்கிலன் சூடிமை
நலனு மோர்கில னெழுக்கமுங் கல்வியு நண்ணுந்
தலனு மோர்கிலன் கன்னியைத் தத்தஞ்செய் தானெப்
புலனு மோர்ந்தவன் விதிவழி மதியெனப் புலந்தார்.

(இ - ள்) (அவனது) குலத்தையும் விசாரித்தறியாமல், (குலமறிந்தபின் கோத்திரம் அறியவேண்டுதலின்) கோத்திரத்தையும்விசாரித்தறியாமல், குடிப் பிறப்பையும் சிறப்பையும் விசாரியாமல், சமயவொழுக்கத்தையுங் கல்வித்திறத் தையும் விசாரியாமல், அவன் வாசஞ்செய்யுந் தலத்தையுமறியாமல், (விரூபாக்ஷன்) தன் கன்னிகையை (முகமறியாத பிரமசாரிக்கு)த் தத்தஞ்செய்து விட் டான். எல்லா நூல்களையுமறிந்தவன் "விதியின்வழி மதி" என்று (கூறும் பழ மொழி இவன்பாற் புலப்பட்ட தென்று) வருந்தினர் (மனைவி முதலிய உறவினர்). (கo)

மற்ற வன்குடி கோத்திரஞ் சூத்திர மற்றும்
உற்ற நிந்நுகம் மாபிணுக் கொக்குமால் மாயோன்
சொற்ற தந்திர வியிணவத் தொடக்குண்டு திரியுங்
குற்ற மொன்றினி மறுப்பதென் கொடுப்பதென் றிசைந்தார்.

(இ - ள்) அப்பிரமசாரியின் குடியும் கோத்திரமும் சூத்திரமும் மற்றுள் ளனவும் (ஆகியவற்றை) (அவனுல்) உற்று உணர்ந்து, நமது மாபிற்கு (ஒரு வாறு) ஒத்திருக்கின்றது. (ஆனால்) திருமால் கூறிய பாஞ்சராத்திரத்தின் வழிப்பட்ட வைணவக் கட்டுண்டு திரியுங் குற்றமொன்றுதானுளது. (முன்னரே தக்தை தத்தஞ் செய்துவிட்டமையின்) மறுக்கக் கடவது யாதுளது? கொடுக்க வேண்டுவதுதான் என்று (தாய் முதலியோர்) உடன்பட்டனர்.

(வி - ம்) மற்று என்னும் இடைச் சொற்க ளிரண்டனுள் முந்தியது அசைநிலையும், பிந்தியது பிறிது என்னும் பொருளதுமாம்.

சூத்திர மென்றது—போதாயகம் - ஆபஸ்தம்பம் - ஆஸ்வலாயகம் - திராகியாயகம் - கார்த்தியாயகம் - சத்யாஷாடம் எனப்படும். (கக)

தாயு மொக்கலு மொத்தபின் ருதையும் வேதத்
தாயு மெண்மணைத் தாதியா மறநிலே யர்ற்ருற்
றேயு நுண்ணிடைக் கன்னியைச் செம்பொனுற் புதைத்துக்
காயு மாரழல் முன்னரக் காளைகைக் கொடுத்தான்.

(இ - ள்) தாயாகிய சுபவிரதையும் உறவினரும் மனம் ஒத்த பின்னர், தந்தையாகிய விரூபாக்ஷனும், வேதத்தில் ஆராயப்பட்ட எண்வகை மணங்களுள் (பிரமமணமென்னும்) முதலாவதாகிய அறநிலைவழியால், (தனத்தோற்றத்தால்) தேய்ந்து வரும் நுண்ணிய இடையையுடைய கன்னிகையாகிய கௌரியை, செம்பொன்னுபரணங்களால் உடல் தோன்றுதலங்கரித்து, வெப்பம் பொருந்திய ஓமாக்கினிக்கு முன், அப்பிரமசரியனுக்கு மணமுடித்தான்.

(வி - ம்) மணம் எண்வகை யாவன:—பிரமம் - பிரசாபத்தியம் - ஆரிடம் - தெய்வம் - காந்தர்வம் - அசுரம் - இராக்கதம்-பைசாசம். இவற்றுள் பிரமமணம்-பிரமசாரிக்குக் கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது ; பிரசாபத்தியமணம் - தலைமகனைத்தார் வேண்டத் தலைமகளைத்தார் உடன்பட்டு அவளைத் தீ முன்னர்க் கொடுப்பது ; ஆரிடமணம் - ஒன்றுமிரண்டும் பசுவுமெருதும் வாங்கிக் கொண்டு கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது ; தெய்வமணம் - வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது; காந்தர்வமணம் - கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந் தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது; அசுரமணம் - பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வது; இராக்கதமணம் - பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற் கொள்வது; பைசாசமணம் - துயின்றுளைச் சென்று கூடுவது என்பர். இவற்றை,

காசிகண்டம் - ஆசாரங்கூறிய அத்தியாயம்

" பிரமந்ற் றெய்வ மாரிடம் பிரசா பத்திய மாசுரம் பெட்பின்
மருவுகாந் தருவ மிராக்கதம் பசாச மெனமண மெட்டுள வவற்றுட்
கருதுமுற் பிரம மொருவனே யழைத்துக் கலனெடுங் கன்னியை யளித்தல்
அருளுமத் தெரிவை பயந்தசேய் மூவேழ் குலமுமற கதியுற வளிக்கும் "

என்பது முதலிய செய்யுள்களா னறிக. (கஉ)

தெய்வ மங்கல வரிசைகள் செய்துதான் பயந்த
மௌவ லங்குழற் கன்னியை மணமக ளேடுங்
கௌவை யம்புனல் வேலிசூழ் கடிநகர் விடுத்தான்
சைவ மங்கல வேதியத் தாபத னிப்பால்.

(இ - ள்) பிராமண குலத்திற்குரிய மங்கல வரிசைகளை நடத்தி, தான் பெற்ற முல்லைமலர்மாலை சூடிய அழகிய கூந்தலையுடைய புதல்வியாகிய கௌரியம்மையை, சைவத்தின் சிறப்புப் பொருந்திய தவவேடமுடைய விரூபாக்ஷன்

(வைணவனுகிய) மணநாயகனேடும் ஒலியையுடைய அழகிய சீர் வளமிக்க வயல் சூழ்ந்த காவல்பூண்ட அவனது நகரத்திற்கு அனுப்பினன். இப்பால்,

(வி - ம்) தெய்வமங்கல வரிசையென்றது வேதியர் பூசராதலி னென்க. புனல் வேலிசூழ் என்றமையால் வயல் சூழ்ந்த என்றும். அல்லது புனலை வேலி யாகவுடைய அகழி சூழ்ந்த வெனப் பொருள் கூறினும் பிழையாது. (கூ)

வேறு

இல்லார்க்குக் கிழியீடு கேர்பட்டா லெனப்பல்லா ரில்லந் தோறுஞ் செல்லாநின் றிரந்துண்டு திரிந்தமகன் மணமகனுய்ச் செல்வ நல்க வல்லாளே மணந்துவரு வான்போற்றம் மனைபுகுத வன்கட் சீலப் பொல்லாராய் வைணவத்துப் புக்கொழுகுதாய்தந்தை பொருர்க ளாகி.

(இ - ள்) தரித்திரர்கட்குப் பொன் முடிப்பு கிடைத்தாற்போல, பல பிராமணர்களுடைய வீடுகள்தோறும் போய் யாசித்துப் புசித்துத் திரிந்த வைணவப் பிராமணன் மணமகனுய்ச் செல்வத்தைக் கொடுக்கவல்ல திருமகளே மணஞ்செய்து வருவான் போலக் கௌரியம்மையை மணஞ்செய்து தன்னு டைய வீட்டிற் சென்றபுக, கொடுமையையே சீலமாகக்கொண்டு கொடியவராய் வைணவமதமேற்கொண்டு அதன் வழிப்பட்டொழுகும் தாயும் தந்தையும் மனம் பொருதவர்களாகி.

இதுமுதலிரண்டு செய்யுள்கள் குளகம்.

(வி - ம்) "வன்கட்சீலப் பொல்லாராய் வைணவத்துப் புக்கொழுகு" என்றது அவர்கள் வைணவர்களுள்ளும் மிகக் கொடியரென்பது தோன்றக் கூறியதாம். (கச)

வந்தமண வாட்டிசிவ சிந்தனையுஞ் சைவதவ வடிவு நோக்கி வெந்தவுடல் போல்மனமும் வெந்தவளே வேறெருதுக்கி வேண்டாராகி நிந்தனைசெய் தொழுகுவா ரவளையொரு நாள்நீத்து நீங்கி வேற்றார்த் தந்தமர்மங்கலங்காண்பான் றனியேவைத்தகம்பூட்டித் தாங்கள் போனுர்

(இ -ள்) (தமது வீட்டுக்கு) வந்த மணக்கோலம் பொருந்திய மருகியின் சிவசிந்தனையையும் சைவதவவேடப் பொலிவையும் பார்த்து, (தமது மதக் கொள்கைப்படி) வெந்த தமது உடம்புபோல மனமும் வெந்து, அந்தக் கௌரி, யைப் பிரத்தியேகமாய் ஒதுக்கிக் குடிவைத்து (சிறிதும்) வேண்டாதவர்களாய் நிந்தனை செய்தொழுகும் அவனது தாய்தந்தையர்கள், ஒருநாள் அக்கௌரியை விட்டுநீங்கி, அயலூரிலே தமது சுற்றத்தார் மணவீனையைக்காண, தனியே (ஓரிடத்தில்) வைத்து வீட்டைப் பூட்டிக்கொண்டு தாங்கள் சென்றார்கள்.

(வி - ம்) வெந்தவுடல் என்றது வைணவருள் சங்கு சக்கரக்குறிகளைக்காய்ச் சித் தோளிற்பொறிக்கும் இயற்கையுடையராதல்பற்றி என்க. இது பிருகுமுனி வருடைய மனைவி கியாதியென்பாள் சில அரக்கருக்கு அடைக்கலங் கொடுத்த பொழுது, அவர்களைத் தூரத்திக்கொண்டுவந்த திருமால் அவள் சிரத்தை வெட்ட, அவள் கூகுவென் றிரைந்து வீழ்ந்திறக்க, யோகத்திலிருந்த பிருகு

முனிவர் யோகநீங்கித் திருமாலைச் சினக்கு நோக்கி "நீ உன் மாமியென்று கருதாது அவளைச் சிறங்கொய்த பாவத்தால், மீன்முதலிய பத்துப்பிறவிக ளடைக. உன் அடியார்கள் வேதவிரோதமாகத் தீக்ஷை செய்துகொள்க" என்று சபித்து, சுக்கிரபகவானுல் உயிர்பெற்றெழுந்த மனைவியுடன் வாழ்ந்திருந்தனர். இதனும் கிடைத்த சாபமென்பது புராண வரலாறு.—இதனை,

காஞ்சிப்புராணம் - அரிசாபவிமோசனப்படலம்

"எடுத்தி யம்பிய சைவ மேயெவற் றுள்ளு முத்தம மெண்ணில் யாங்களுங்
கடுத்த தும்பிய கண்ட னுரடிக் கமல மன்றியே றறிகி லேமெனிற்
றொடுத்து சைக்குமிச் சத்தி யத்தினுற் றுயரு ழக்துநீ நரக வல்வினை
மடுத்த வெம்பிறப் பொருப தெய்துக வழுவு பாதகக் குழிகி யாயினுப்.

எவ்வ மேமிகுந் தமோகு ணம்பயின் றிழிந்த யோனியின் மீன மாதியாம்
வெவ்வி ணைப்பவந் தோறு மின்னலே விரவு வாயென வெய்ய சாபமிட்
டவ்வி யத்தொகை யிரிய நூறமப் பிருகு வெள்ளியா லாவி பெற்றெழு
கவ்வி வாள்விழி மனைவி தன்னொடு நாரி பாகனே வழுத்தி வைகினுன்.

நின்ற னக்கடித் தொண்டு பூண்டவர் நெறிய லாப்புறத் தாற்று நூல்விழி
துன்று தீக்கையுற் றென்றுமுப்புரஞ் சுட்டவெம்பிரான் றிருவடிப்பிழைத்
தொன்று மூன்றுதண் டேந்தி யீனரா யுலப்பி லாதவெங் நிரய மேவுக
மன்ற வங்கவர்க் கண்டு ளோர்களுஞ் மறலி யூரினைக் குறுகி மாய்கவே "

என வருவனவற்று ணர்க. (கஎ)

உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக் கேட்டும்
மண்மாசு படப்பூசும் வடிவுடையா ரகன்றதற்பின் மனையில் வைகும்
பெண்மாசு கழியவொரு சிவனடியார் தமைக்காணப் பெரும லின்றென்
கண்மாசு மிடுவதெனக் கனிக்தொழுகு கலியன்பாற் கவலை கூர்வாள்.

(இ - ள்) (புறத்தழுக்கைப்போக்கிப் புனிதமாக்குகின்ற நீர்போல) அகத்தழுக்காகிய மலத்தைப் போக்கிச் சுத்தஞ்செய்வது திருவெண்ணீறே யென்று (பஸ்மஜாபால முதலிய) உபநிஷத்துகள் சொல்லக் கேட்டிருந்தும், (தமதுடம்பில்) அழுக்குப்பட மண்ணீப்பூசும் வடிவினையுடைய வைணவர்கள் நீங்கிய பிறகு, (அவர்கள்) மனையில் வாழும் கௌரியம்மை தனது குற்றமின்றிய ஒரு சிவனடியார் திருவேடத்தைக் காணப்பெறாமல் இப்பொழுது என் கண் மாசுபடுகின்றது எனப் பழுத்தொழுகுஞ் சிறந்த அன்பினுல் மனம் வருந்தத் தொடங்கினுள்.

(வி - ம்) ஆன்மாக்களைப் பந்தித்துள்ள மும்மலங்களே "உள் மாசு" என்றும், புறமுகமாக நோக்குவோர்க்கு ஆகமவிதிப்படி நீற்றுவது என்னும் பொருள்படினும் அகமுகமாக நோக்குவோர்க்கு மலங்களை நீற்றுவதாதலின் தேற்றேகாரந்தந்து "உள் மாசு கழுவுவது நீறென்றே" என்றும், இவ்வகைத்தாகத் திருவெண்ணீற்றின் பிரபாவத்தைச் சாமான்னிய நூல்களேயன்றி பஸ்மஜாபால முதலிய உபநிஷதமாதிய பிரபலஸ்ருதிகள் எடுத்தோதலாலும், வேதாகம வுபநிடதாதிகளைக் கேட்டற்குரிய அதிகாரிகளாதலாலும் "உபநிடத

மூசைப்பக் கேட்டும்" என்றும், பிருகுவாதியர் சாபத்தால் வேதவிருத்தராகி யொழுகலின் "மண்மாசு படப்பூசும் வடிவுடையார்" என்றுங் கூறினர்.

"உள்மாசு கழுவுவது நீறு" என்றதனை, உபநிஷதங்களிலும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகத்திலும் புராண நூல்களிலும் பாக்கக் காண்க. (கசு)

சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே யிரும்பேவல் செய்து நாளும் அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே மாஞ்செவிகண் ஞாலம் ஐந்தும் பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே பாவைமறை பாவுஞ் சைவ தவநெறியல் லாநெறியே பவநெறியென் றுளியளாய்த் தளர்வாள் பின்னும்.

(இ - ள்) சிவபெருமான் தொண்டர்களிடத்தில் அன்பில்லாத மனமே இரும்பாம். (அவர்கள் ஏவிய) ஏவலைச்செய்து எக்காலமும் அச்சிவனடியவர் திறத்திற் செல்லாத சரீரமே மரமாம். சிவி - கண் முதலிய பஞ்சேந்திரியங்களும் அச்சிவனடியார்களிடத்துச் செலுத்தாத உருவமே பதுமையாம். வேதங்கள் அதிக்கும் சைவத்தின் தவமார்க்கமல்லாத ஏனைய மார்க்கங்களே (ஆன்மாக்கட்குப்) பாவத்தைத் தரும் மார்க்கங்களென்று அன்புடையவளாய்த் தளர்வாளாயினள்.

(வி - ம்) "தாபர சங்கமங்க ளெஞ்ஞான்று முருவி னின்று - மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளே வைப்பன்" என்ற ஏதுவால், சிவபெருமான் தமது தொண்டர் திருவேடத்தையே கொண்டு நின்று ஆன்மாக்களின் வழிபாட்டிற்கிரங்கி அருள் செய்தலின் "சிவனடியார்க்கன்பிலாச் சிந்தையே, அவனடியர் திறத்தொழுகா ஆக்கையே, செவிகண் ஞாலம் ஐந்தும் பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே" என்று கூறினர். (கள)

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா னெல்லாந் தானுய், அனைத்துயிர்க்கு முயிராகு மானென்ப வவனறிவார்க்கங்கம் வாக்கு, மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழிநிற் பார்க்கு, வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவனடியார் வேட மன்றே.

(இ - ள்) எல்லாவுயிர்கட்கும் பயனுள்ளன இம்மை மறுமைப் போகங்களென்று கூறுவர். (உயிர்கட்கு) அவற்றை அனுக்கிரகிப்பவன் எல்லாந் தானுமே எல்லா வுயிர்கட்கும் உயிராகி நின்றருளுஞ் சிவபெருமானென்று கூறுவர். அச்சிவபெருமானே (ஆகம முறையால்) உணர்ந்தவர்கட்கு மனம் வாக்குக்காயமென்னும் இவற்றால் வழிபடும் உண்மையாகிய சிவபத்திநெறி முதிருமென்று கூறுவர். அப்பத்திவழியிலே நிற்பவருக்கு இருவினைகளால் வருந்துன்பங்களைத் தீர்க்க வெடுத்த (திருவுருவென்பது) அச்சிவனடியவர் திருவேடமல்லவா ?

(வி - ம்) மலபந்தத்தையுடைய நரர்முதல் சுரர் ஈறாகவுள்ளோர் யாவரும் பசுக்களே யாதலின் "எனைத்துயிர்க்கும்" என்றும், அப்பசுக்களின் மலபந்த மொழிதற்கு இம்மை மறுமைப் போகங்கள் பரமஅவுடதமாதலின் "உறுதியிகபரமென்ப" என்றும், அவ்வகைய அவுடதத்தை யளிப்போன் அம்மலங்களினீங்

கிய பதியாவானுகலின் "அவை கொடுப்பான் அரன்" என்றும், மாயையினின்று காரியப்படுத்த வேண்டி யொவ்வொன்றிலுங் கலந்து நிற்றலின் "எல்லாந் தானுய்" என்றும், அவற்றைச் செலுத்துங்கால் உடனிற்றலின் "அனைத்து யிர்க்கு முயிராகும்" என்றும், ஞான நூல்களைக் கற்றுங் கேட்டுஞ் சிந்தித்தும் பசுவையும் பாசத்தையுஞ் சேர்த்துச் சேட்டிப்பவன் பரம்பரனென்பது தெளிர்த்தவர்க்கே புலப்படலின் "அவனறிவார்க்கு" என்றும், அவ்வாறுணர்ந் தார்க்கு அவன் றிருவடியைக் கலத்தற்கு மனத்தாற் சிந்தித்தலும், வாக்காற் றுதித்தலும், காயத்தால் வழிபடலுமாகிய சார்புபற்றிய மெய்ப்பத்தி சனிக்கு மாதலின் "அங்கம் வாக்கு மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப" என்றும், கல்வினையா னெய்துஞ் சொர்க்காதி போகங்களும் பொன் விலங்குபோலு மாதலின் அதனையும் உடனெண்ணிப் பொதுவாக "வினைத்துயர்" என்றும், அம்மெய்ப் பத்தியில் வழுவாது நிற்பேர்க்கு அப்பதியை யேற்ற அதற்கெதிரீ டாக முத்தியை யருள உறைவிடமாகக்கொண் டெழுந்தருளி யிருக்குமிடம் அடியர் திருவேடமாகலின் "அப்பத்தி வழுகிற்பார்க்கு வினைத்துயர் தீர்த்திட வெடுத்த வடிவென்ப தவனடியார் வேடமன்றே" என்றுங் கூறினர். (கஅ)

என்னவிருந் தலமருவா ளிருக்குமிடத் தவளுள்ளத் தெண்ணி யாங்கே, தென்னவனு யிருந்தரசு செய்தபிரா னவட்கருளுஞ் செவ்வி நோக்கிக், கன்னமூரங் காஞ்சிரந்தோள் கண்டமூங்கண் டிகைபூண்டு கையிற் றம்போற், பன்னெடுநாட் பழகியதோர் தனிப்பெரிய புத்தக மும் பக்கஞ் சேர்த்தி.

(இ - ஸ்) என்றிவ்வாறு கௌரி வருந்தி யிருக்குமிடத்தில், அக்கௌரி மனத்தில் கினைத்தபடியே, சுந்தரபாண்டியராயிருந்து அரசுசெலுத்திய சோம சுந்தரக் கடவுள், அக்கௌரிக்கு அணுக்கிரகஞ் செய்யுஞ் சமயங் கருதி, காதி லும், மார்பிலும், கையிலும், தலையிலும் தோளிலும், கழுத்திலும் உருத்திராக்க கண்டிகை யணிந்த தமது திருக்கரத்தில் தம்மைப்போலப் பலகாலமும் நீங்கா திருக்கும் ஒப்பற்ற (சிவஞானபோத) புத்தகத்தையும் அத்திருக்கரத்தினகண் தரித்து.

இது முதல் மூன்றுபாடல்கள் குளகம்.

(வி - ம்) "பன்னெடுநாட் பழகிய தோர்தனிப் பெரிய புத்தகம்" என்றது, சிவஞான போதம் சிவபெருமானேப்போல என்றும் உள்ளதாலும், "கன்னமூரங் காஞ்சிரந்தோள்கண்டமூங் கண்டிகைபூண்டு" என்றது, சிவ பெருமான் ஆசிரியத்திருக்கோலந்தாங்கி வந்தன ராதலாலுமென்க. (கூ)

கரிந்தநீள் கயன்முள்ளி னரையுமுது திரைகவுளுங் கணைக்கு கெஞ்சுஞ், சரிந்தகோ வணவுடையுந் தலைப்பனிப்பு முத்தரியந் தாங்கு தோளும், புரிந்தநூல் கிடந்தலையும் புண்ணியநீ றணிமார்பும் பொலிய நீழல், விரிந்ததோர் தனிக்குடையுந் தண்டுன்றிக் கவிழ்ந்தசையு மெய்யுந் தாங்கி.

(இ - ள்) கருநிறம் பொருந்திய நெடிய கயற்கெண்டையின் முள்ளைப் போன்ற நரையும், மிகவும் திரைபொருந்திய கபோலமும், (அடிக்கடி) கனைக்கும் மார்பும், சரிந்த கோவணமாகக் கட்டிய ஆடையும், தலையாட்டமும், உத்தரியமணிந்த திருத்தோளும், மூப்புரியாக்கிய பூணூல் கிடந்தசையும் புண்ணிய சொரூபமாகிய திருவெண்ணீற்றினை யணிந்த திருமார்பும், நீழல் விளங்க விரிந்த ஒப்பற்ற குடையும், தண்டினை யூன்றிக் கவிழ்ந்தசையும் (தள்ளாடிய) திருமேனியும் (ஆகிய இவற்றைக்) கொண்டருளி.

(வி - ம்) நரை - மயிர்வெளுத்தல். திரை - உடலின் மீத்தோல் சுருங்குதல். கனைக்கு நெஞ்சு - ஈளையிருமல். (உ0)

ஒருத்தரா யுண்டிபல பகல்கழிக்த பசியினர்போ லுயங்கி வாடி, விருத்தகவே தியராய்வந் தகம்புகுதக் கண்டெழுந்து மீது ரன்பின், கருத்தளாய்த் தவிசிருத்திக் கைதொழுது சிவனேயிங்குக் காண வென்ன, வருத்தமா தவமுடையே னெனமுனிவர் பசித்தன் பால் வந்தே மென்ருர்.

(இ - ள்) (தமக்கோர் உறவினரில்லாத) ஒருவராய், பல தினங்கள் ஆகாரமில்லாத பசியையுடையார்போல மயங்கி வாட்டமடைந்து மிக்க மூப்படைந்து பிராமணத் திருவேட முடையவராய் வந்து தனது வீட்டிற்புகக் கண்டு விரைந்தெழுந்து மேலிட்டோங்கிய அன்பையுடைய மனத்தினளாய், ஆதனத்தில் எழுந்தருளச்செய்து கைகுவித்து, சிவபெருமானே ஈண்டுத் தரிசிக்க வருத்தமாகிய பெருந்தவம் யாதுசெய்துள்ளேன்? என்றுகூற, (வந்த) முனிவர் பசித்தலால் உன்னிடத்தில் வந்தேமென்று கூறியருளினர்.

(வி - ம்) பசித்து-வினையெச்சம். இது காரண காரியப்பொருளின் மேல் நின்றது. ஆதலின் பசித்தலால் எனப் பொருள் கொள்ளப்பட்டது. (உக)

இற்பூட்டிப் போயினு செமரங்க ளெனக்கெளரி யியம்ப மேரு
விற்பூட்டிப் புரம்பொடித்த வேதியர்கின் கைதொட்டு விடுமுன் யாத்த
கொற்பூட்டு விடுந்திறந்து கடிதடிநில் சமைத்தியெனக் குமரி தாளில்
அற்பூட்டு மடவரலு மவ்வாறே யட்டில்புகுந் தடிநி லாக்கி.

(இ - ள்) எம்முடைய மாமி முதலானவர்கள் வீட்டினைத் தாளிட்டு (வேற்றூர்க்கு)ச்சென்றூர்கள் எனக் கௌரி சொல்ல, மேரு (மலையாகிய) வில்லில் (சேடனுகிய நாணினைப்) பூட்டித் திரிபுரத்தை நீறுபடுத்திய அந்தணர் (வடிவங் கொண்ட சோமசுந்தரக்கடவுள்) உனது கையால் தொடுவதற்கு முன்னரே கொல்லனுற் செய்யப்பட்ட பற்றித்துளள பூட்டுத்திறக்கும். (கதவைத்) திறந்து விரைந்து திருவமுது சமைப்பா யென்றருள, உமாதேவியார் திருவடியில் அன்பு செலுத்தும் அக்கௌரியும் அவ்வண்ணமே (செய்து கதவைத் திறந்து) சமையல் வீட்டிற் புகுந்து திருவமுது சமைத்து.

இதுமுதல் ஐந்து பாடல்கள் குளகம்.

(வி - ம்) அன்பு-அற்பு; இது எதுகை நோக்கி வலித்தல் விகாரப்பட்டது. கொல் என்னுஞ் சாதிப்பண்பு அத்தொழிலையுடைய கொல்லன்மேல் நிற்றலால்

பண்பாகு பெயர். அல்லது கொல்லன் என்றது தொக்கு நின்றதெனினும் பொருந்தும். (உஉ)

தையன்மா தவக்கொழுந்து புறம்போந்து சிரகரீர் தளிர்க்கை தாங்கி ஐயனே யமுதுசெய வெழுந்தருளு மெனவெழுந்த அடிகள் பாதச் செய்ய தா மலைவிளக்கி யங்கீர்தன் சென்னியின்மேற் றெளித்துப் பாச மையன்மா சிருள்கழுவி யகம்புகுவித் தாசனமேல் வைத்துப் பின்னர்.

(இ - ள்) மாதருள், பெருந்தவக் கொழுந்துபோன்ற அக்கெளரி (சமையல் வீட்டிலிருந்து) வெளியேவந்து, கரக நீரைத் தனது தளிர்போன்ற கைகளிற்றாங்கி, ஐயனே ! திருவமுது செய்தற் கெழுந்தருளுமென்று விண்ணப்பிக்க, எழுந்தருளி வந்த வேதியருடைய திருவடியாகிய செந்தாமரைகளை (அக்கரக நீரால்) அலம்பி, அந்த பாததீர்த்தத்தைத் தலைமேற் றெளித்துக் கொண்டு, பாசமாகிய மயக்கத்தை விளக்கும் மல விருளைக் கழுவி ஓர் அறைக்குட் புகுவித்து, பீடத்தின்பேரில் வீற்றிருக்கச் செய்து அதன்பிறகு.

(வி - ம்) பெரியோர் திருவடியை விளக்கிய நீரைச் சிரமேற் புரோக்ஷித்துக் கொள்வதால் பாவங்களெல்லாம் அகலுமெனச் சிவபுண்ணியத்தெளிவு கூறுமாகலின் "செய்ய தாமரை விளக்கி யங்கீர்தன் சென்னியின் மேற் றெளித்து" என்றார். (உங)

ஙகைமலரிட் டருச்சித்து நல்லபரி கலந்திருத்தி நறுவீ மூல்லை [ற் முகையனைய பாலடகில் வெள்ளிமலை யெனப்பரப்பு முதுகிற் செம்பொ ரிகாமெனப் பல்வேறு கருணைபுறந் தழீஇக்கிடந்த சிறுகுன் றீட்ட வகையெனநெய் யருவியெனப் படைத்தனைய சிற்றுண்டி வகையும்பெய்தி.

(இ - ள்) விளக்கம் பொருந்திய மலர்களாற் பூசித்து நல்ல உண்கலத்தைத் திருத்திவைத்து நன்மணங்கமழும் முல்லை யரும்பு நிகர்த்த பால்வார்த்துச் சமைத்த திருவமுது திருக்கைலை மலைபோலவும், (அதன்புறத்திட்ட) பருப்பு அக்கயிலையின் புறத்திலுள்ள) பொற்சிகரமாகிய மகமேருவைப்போலவும், (அதனைப் புறஞ்சூழப் படைத்த) பலவேறுருசிய பொரிக்கறிகள் (அம்மகமேருவின்) புறத்தைத் தழுவிக்கிடந்த (நிஷதமுதலிய) சிறுமலைகளின் கூட்டத்தைப்போலவும், (திருவமுதின்மேல் சொரிந்த) நெய் (திருக்கயிலையினின்றிழியும்) அருவியாற்றைப் போலவும் படைத்து, அதுபோலவே சிற்றுண்டி வகைகளையும் (சூழ) படைத்து.

(வி - ம்) பரிகலம்திருத்தி என்றது பரிபாஷை. (உச)

செய்யவா யிடையிடையே முகமனுரை யின்னமுது செவியி னூட்டத் தையலாள் வீசுக்கையறு சுவையமுது வாயூட்டத் தளர்ந்த யாக்கை ஐயர்தாந் திருவமுது செய்தமுதண் டவரெனமூப் பகன்று பூவிற் கையதே மலர்வாளிக் காவலடி வாயிருந்தார் கன்னி காண.

(இ - ள்) (கெளரி) சிவந்த தனது வாயினால் இடையிடையே உபசார வார்த்தையாகிய இனிய அமுதமைத்து (விருந்தினராகிய வேதியரது) திருச்

செவியில் உண்பிக்கவும், கௌரியம்மை தனது வளையலணிந்த கைகளால் அறு சுவையோடுகூடிய திருவமுதை வாயிலூட்டவும், (மூப்பால்) தளர்ச்சியடைந்த திருமேனி வாய்ந்த அவ்வேதியர் திருவமுது செய்தருளி, தேவாமிர்தம் உண் டவரைப்போல (தமது) முதுமையொழிந்து,மலர் வில்லேயேந்திய கையிலுள்ள தேன் சொரியும் புஷ்பபாணங்களையுடைய மன்மதாகாரமாய் அக்கௌரி காணும்படி இருந்தனர். (உடு)

பூசியவெண் ணீறுபோய்க் கலவையாய்க் கண்டிகைபோய்ப் பொன் செப் பூணுங், காசணிபொற் குண்டலமுங் கடகமுமாய் மூப்புப்போய்க் காளை யான, தேசுருவங் கண்டுநடு நடுங்கிவிழக் கரநெரித்துத் திகைத்து வீழ்த்துக், கூசியொரு புறத்தொதுங்கி நின்றாளக் கற்பு மலர்க் கொம்ப ரன்னாள்.

(இ - ள்) திருமேனியி லணிந்த தாவள்யமாகிய திருநீறுமாறிக் கலவைச் சாந்தாகியும், உருத்திராக்க கண்டிகைமாறிப் பொன்னாற்செய்த ஆபரணங்க ளும் இரத்தினமிழைத்த பொற்குண்டலங்களும் கடகமுமாகியும், மூப்புப்பரு வம் மாறிக் காளைப்பருவமுமான விளக்கம்பொருந்திய அத்தணரது திருவுரு வத்தை, கற்பாகிய மலர்க்கொடியையுடைய பூங்கொம்புபோன்ற அத்தக் கௌரியம்மை கண்டு, நடுநடுங்கி, வளையலணிந்த தனது கைகளை நெரித்து மயங்கி வேர்வரும் பிக் கூசி அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நின்றனள்.

(வி - ம்) "வெண்ணீறு" என விதந்துகூறியது எற்றுக்கெனின், திருநீற் றினுள் வெண்ணிறமுடைய திருநீறே அளவில்லாத புண்ணியத்தை விளைக்கு மாதலின் என்க. வேறைய நிறங்களில், கருநிறமுடையது கோயையுண்டாக்கு மென்றும், செந்நிறமுடையது கீர்த்தியைப் போக்குமென்றும், புகைநிறமுடை யது ஆயுளைக் குறைக்குமென்றும், பொன்னிறமுடையது சம்பத்தைக் கெடுக்கு மென்றும் சிவாகமங் கூறும்.

இதுபற்றியே "கறுப்புச் செவப்புக் கடியதொரு தூமம் - வெற்றப்புடனே பீதம் விடு" எனச் சைவசமயநெறியிற் கூறப்பட்டிருப்பதுங் காண்க. (உசு)

ஆனபொழு தருங்கடிநன் மணங்குறித்து மீனையிற்றீர்ந் தயலார் புக்க, தேனுழுகு தூமாலங்கற் றீர்த்தனுக்கன் புடையார்பாற் றிரியும் வஞ்ச, மானமுடை யார்மீண்டு மீனைபுகலும் பதினாறு வயதின் மேய, பானன்மணி கண்டனுதற் காப்பணிந்தோர் பசுங்குழவிப் படி வங் கொண்டான்.

(இ - ள்) (வேதியவடிவாகவந்த சோமசுந்தரக்கடவுள்) இவ்வகைய திருவுரு வாகிய காலத்தில்,மிக்க விளக்கமமைந்த நல்ல விவாகத்தைக்குறித்து (தமது)வீட் டினின்றும் நீங்கி, அயலூருக்குச் சென்ற தேன்சொரியுந் தளவமாலையணிந்த திருமாலுக்கு அன்புடையவர்போல (நடித்து)த்திரியும் வஞ்சனையும் சமயாபி மானமுமுடைய மாமி முதலானூர் திரும்பித் தமது வீட்டிற்குவர, பதினாறுவய தினையுடைய நீலோற்பலம் போன்ற கரியகண்டத்தையுடைய வேதியராக

வுள்ள சோமசுந்தரக்கடவுள் செற்றியில் (நீலப்) பொட்டணிந்த ஒப்பில்லாத பச்சைக்குழந்தையின் திருவுருவத்தைக் கொண்டருளினர்.

(வி - ம்) "அன்புடையார்போல் திரியும் வஞ்சமானமுடையார்" என்றதனால், அவர்கள் உள்ளபடியே திருமாலுக்கு மெய்யன்புடையரல்லரென்பது புலப்படுகின்றது. "பசுங்குழவி" என்றதில் பசுமை இளமை குறித்தது. (உ எ)

எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்பஅள்ப ரிதய மென்னுஞ், செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு தெய்வக் கஞ்சத், தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர் துளும்ப வாய்விட், டழுதணையா டையிற்கிடந்தா னணைத்தயிரு மீன்று காத் தாளு மப்பன்.

(இ - ள்) எல்லாவுயிர்களையும் படைத்தும் காத்தும் (சங்கரித்தும்) அருள் புரியும் அப்பனுகிய சோமசுந்தரக்கடவுள், எழுதற்கரிய வேதமாகிய சிலம்புகள் சூழ்ந்துகிடந்து புறத்தே சத்திக்க, அடியவர்களது இதயமாகிய செழிய தாமரை மலர்களையுடைய ஓடையில் மலர்ந்து, சிவானந்தமாகிய தேன்ததும்பும் தெய்விகம்பொருந்திய தாமரைபோன்ற துதிக்கத்தக்க சிற்றடியிலுள்ள பெருவிரலைச் சுவைத்து, மைபொழுதிய கண்களில் நீர்ததும்ப வாய்திறந் தழுது அணைபோலப் பரப்பிய ஆடையின்மேனிற் கிடந்தருளினர்.

(வி - ம்) சிற்றடியைக் கஞ்சமென்றதற்கேற்ப "அன்பர் இதயமென்னுஞ் செழுமலரோடையின் மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு" என அடைதந்தனர்.

தாய்விட்டுப்போனதொரு தனிக்குழவி யெனக்கலங்கித் தாங்கித் தேடி, ஆய்விட்டுப் பிரமனழ மறைகளழ அன்புடையா ளன்பிற்பட்டு, வாய்விட்டுக் கிடந்தழுத மகவினைக்கண் டணங்கையாண் மாமி யென்னுங், காய்விட்டு மதக்கொடியா ளிம்மகவே தெனக்கேட்டாள் கௌரி தன்னை.

(இ - ள்) (சிதத்தில்) தாங்கித்தேடி ஆராய்ந்து, பிரமதேவர் அழவும், வேதங்கள் அழவும், அன்பு மிகுந்த கௌரியினுடைய அன்பினிலகப்பட்டு வாய் திறந்து (அணையாடையிற்) கிடந்து, தாயானவள்விட்டுப் பிரிந்துபோன ஒப்பில்லாத ஒரு குழந்தையைப்போல (மனங்) கலங்கி, அழுங்குழந்தையைக்கண்டு, இலக்குமியேபோன்ற அக்கௌரியினது மாமியாகிய கோபமிகுந்த வைணவமதக் கொடியவள் கௌரியை நோக்கி இக்குழந்தை ஏது ? என்று (கோபித்துக்) கேட்டனள்.

(வி - ம்) ஆய் விட்டு - ஆராய்ந்து விஷ்ணு எனக் கூறினும் பொருந்தும். விட்டு என்பது விஷ்ணு என்னும் ஆரியமொழித் திரிபு. (உக)

நத்தனயன் றனக்கரிய நாயகனுக் கன்புடையாள் நகில்வாள் தேவ தத்தனயந் தருமணியை யொடுபோந்து சிறுபோது தையலாயீண் [னஞ் டித்தனயன் றனைப்பார்த்துக் கோடியென வைத்தகன்ற ளென்னு முன்னித்தநய னங்கலங்கச் சீறிமண வாட்டி தன்மேற் செற்றங் கொண்டாள்.

(இ - ள்) (பாஞ்ச சன்னியம் என்னும்) சங்கினைத் தாங்கிய விஷ்ணு மூர்த்திக்கும் பிரம தேவருக்கும் தேடியடைதற்கரிய சிவபெருமானுக்கு அன் பினையுடைய கௌரியம்மை கூறுமுன்னரே. தேவதத்தனென்னும் வேதியன் இன்பத்தரும் (தனது) மனையாட்டியுடன் (இங்கு) வந்து, பெண்ணே! இப் பொழுது சிறிதுநேரம் இக்குழந்தையைப் பார்த்துக்கொள்கவென்று வைத்து நீங்கினன் என்று கூறுமுன்னரே (தனது) மனமுங் கண்களுங் கோபித்து, தன் மணவாட்டியாகிய் மருகியின்பேரிற் சோபங்கொண்டனள்.

(வி - ம்) திருமால் பாஞ்சசன்னியம் பெற்ற வரலாறு:—

அவர்திதேசத்திலுள்ள சாந்தீவினி என்பவரைக் கிருஷ்ணனும் பலராம னும் வித்யாகுருவாகக்கொண்டு வேதாகமங்களைக் கற்றுணர்ந்தனர். பிறகு கண் ணன் ஆசிரியரை வணங்கி "உமக்கு வேண்டிய குருகாணிக்கை யாது?" என, அவர் தமது பத்தினியைக்கேட்க, அவ்மனைவி "சிறிதுகாலத்திற்குமுன் நீர் வியோயாட்டில் இறந்த நமது புத்திரனைக் கொடுக்கும்படிகேட்க" என, அவர் அவ்வாறே கண்ணனைக்கேட்டனர். உடனே கண்ணன் தன் அண்ணனுடன் தேரேறி வருணலோகமடைய, அதுகண்ட வருணன் கண்ணனை வணங்கி "வந்த காரணம் யாது?" என, கண்ணன் "கடலாடுகையி லிறந்த எமதாசிரியர் புதல்வனைத் தருக" என, வருணன் "அவனைக் கடலில் வசிக்கும் பஞ்சசன்னி என்னும் அவுணன் விழுங்கிவிட்டான்" எனக்கேட்ட கண்ணன் கடலிற்பாய்ந்து அங்குத் துயிலும் அசுரனது நெஞ்சைப்பிளந்து அதனுள்ளிருந்த சங்கைக் கைக் கொண்டு தேரேறி யமனுலகடைந்து சங்கைப் பூரிக்க, இயமன் அவ்வோசை யால் விரைந்தோடி வந்து வணங்கி, வந்த காரணமுணர்ந்து புதல்வனைத்தர, கண்ணன் ஆசிரியர்முன் கொணர்ந்து விடுத்தனனென்பது. இவ்வாறுகொண்ட பஞ்சசனனுடலிலிருந்த சங்கமே பாஞ்சசன்னியம். இதனை,

பெரியாழ்வார் திருமொழி

"மாதலத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானே
ஓதுவித்த தக்கணையா வுருவருவே கொடுத்தானூர்
தோதவத்தித் தூமறையோர் துறைபடியத் துளும்பி யெங்கும்
போதில்வைத்த தேன்சொரியும் புனலரங்க மென்பதுவே" எனவும்,

பாகவதம் - குரவன்மைந்தற் கொணர்ந்த அத்தியாயம்

"வஞ்சம் படைத்து மறிவெண்டிரை வேலை யூடு
அஞ்சுக் திறல்வா ளவுணன்றனைச் சூழ்ந்து பற்றி
நெஞ்சம் பிளந்து நிலவுக்கதிர்ச் சங்கு கொண்டான்
கஞ்சங் கடுக்குங் கருணைத்தடங் கண்ணன் மாதோ.

மின்னும் பிறைவா ளெயிற்றத்தன் வீற்றி ருக்குந்
தென்னம் புலத்திற் கதிர்மாமணித் தோர்க டாவிப்
பின்னந் திரையிற் கவர்சங்கு பிறங்க யாவு
முன்னம் படைத்த முகினின்று மூழக்குஞ் செய்வான்.

வெருவுற்ற கூற்றம் விரைவோடெதிர் வந்தி றைஞ்சி
வாவற்ற தென்கொலென வேத்தலும் வந்த வண்ணம்

தெரிவுற்ற தாக்கிச் சிறுவற்றர வொல்லே மீளாக்
குரவற்பணித்து குமரன்றனைக் கொள்க வென்றான் ''

எனவும் வருவனவற்றுனறிக. (கூ0)

என்புபூண் டிடுகாட்டிற் பொடியாடு முருத்திரனுக் கிடைய ருத
அன்புபூண் டான்மகவுக் கன்புடையாய் நீயுமெமக் காகா யென்ஞத்[கள்
துன்புபூண் டயர்வாளே மகவையுங்கொண் டகத்தைவிடத் துரத்திஞர்
வன்புபூண் டொழுகுவை ணைவம்பூண்டு பொறையிரக்க மானகீத்தோர்.

(இ - ன்) எலும்பினை (ஆபரணமாக) ப்பூண்டு, சுடுகாட்டில் சாம்பலேப் பூசி யாடிய வுருத்திரனுக்கு நீங்காத அன்புகொண்ட அத்தேவதத்தன் குழந்தையி னிடத்தில் அன்பினையுடையாளே! (அவன் எமக்கு ஆகாதுபோல) நீயும் எங் களுக்கு ஆகாய் என்றுசொல்லி, (இடையுறுது) நிகழும் கொடுஞ்சீலத்தை மேற் கொண்டு, வைணவ மதமேற்கொண்டு பொறுமை இரக்கம் மானம் (ஆகிய) இவற்றைக்கைவிட்ட மாமிமுதலியோர், துன்பமுற்று வருந்துங்களரியை,அப் பிள்ளையையுமேந்திக்கொண்டு தமது வீட்டினின்றும் புறம்போக ஓட்டினஞர்கள்.

(வி-ம்) '' வேதன் மான்முத லோரை நம்பன் வீதித்த ழித்திடு பொழுதெலாந்
தீதி லங்கவ ரென்ப ணிக்கு சிரங்கள் கேச மணிக்கு நீள்
கோதி லாதொளிர் சூல மீதுதுடல் கொண்டு நீறது கண்டுபின்
மீது பூசுமி யாவ ருந்தனே மேவி யுய்ந்திட வேண்டியே ''

என்றபடி இறைவர் லோககாரணமாகத் திருமால் பிரமன் முதலியோரைச் சிருஷ்டித்து அவர்களால் முத்தொழில் நடத்தி இறுதியில் சங்காரிக்கப்பட்ட அவர்கள் என்பையும் சிரத்தையும் தமது திருமேனியிலணிந்து அப்பெருந் தேவர் மரித்தமயானத்தில் நடித்து'அவர்களுடலேத் தமது திருகெற்றி விழி யாற் பொடிபடுத்தி அந்நீற்றினை யணிதலின் ''என்புபூண் டிடுகாட்டிற் பொடி யாடு முருத்திரன்'' என்றார். (கூக)

தாயிலாப்பிள்ளைமுகந் தனேநோக்கித் தெருவினிடைத்தளர்வாளுள்ளங் கோயிலாக் கொண்டுறையுங் கூடல்நா யகனேமனக் குறிப்பிற் கண்டு
வேயிலாக் கியதடந்தோட் கௌரிதிரு மந்திரத்தை விளம்ப லோடுஞ்
சேயிலாய்க்கிடந்தழுதகுழவிவிசும்பிடைவிடைமேற்றெரியக்கண்டாள்.

(இ - ன்) மாதாவில்லாத மகவின் முகத்தைப்பார்த்து வீதியிலிருந்து மனம்வருந்துங் கௌரியம்மை தனது உள்ளத்தைத் திருக்கோயிலாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் மதுராபுரீசனுகிய சோமசுந்தரப் பொருமானே மனத் திற்றியானித்து, மூங்கில் போன்ற பூரித்த திருத்தோள்களேயுடைய உமாதேவி யாரது திருமந்திரத்தைச் செபிக்கவும், தன் சமீபத்திலிருந்து அழுத இளம் பிள்ளே ஆகாயத்தில் இடபவாகனத்தின்மேல் தோன்றியருளத் தரிசித்தனள்.

மழவருநீத்தழலேற்றின்வருவார்தம்மிடத்தணங்கின்மனுவையோதிப்
பழகியபார்ப் பனமகளைப் பார்ப்பதியின் வடிவாக்கிப் பலருங் கண்டு
தொழவிடைமே லேற்றிவிசும் பாமுக மலர்மாரி சுரர்கள் தூற்ற
அழகெழுந் தருளினர் களிதூங்கி யதிசயித்தா ரவனி மாக்கள்.

(இ - ள்) குழந்தைத் திருவுருவத்தை மீக்கியருளி, வெற்றி பொருந்திய இடபவாகனத்தில் வருகின்ற சிவபெருமானுடைய வாமபாகத்திலுள்ள உமாதேவியாரது திருமணிதாரத்தைச் சபித்துப்பழகிய பார்ப்பனப் பெண்ணகிய கௌரியம்மையை உமாதேவியாரது சாரூபத்தந்தருளிப் பலருங்கண்டு தொழ, தமது இடபவாகனத்திலிருக்கச் செய்து, ஆகாயமார்க்கமாகத் தேவர்கள் புட்ப மாரி சொரிய, சிவபெருமான் எழுந்தருளினார். (அது கண்ட) பூலோக மாந்தர்கள் பெருமகிழ்ச்சியிலழுந்தி அதிசயப் பட்டார்கள்.

(வி - மீ) கௌரி திருமந்திரத்தை ஒரு லக்ஷஞ் செபித்தால் சாலோக பதமும் இரண்டு லக்ஷஞ் செபித்தால் சாமீபபதமும், மூன்றிலக்ஷஞ் செபித்தால் சாரூபபதமும், நான்கிலக்ஷஞ் செபித்தால் சாயுச்சியபதமுங் கிடைக்குமாதலாலும், கௌரியம்மை தன் திருத்தைபாலுணர்த்த கௌரிமந்திரத்தை மூன்றிலக்ஷஞ் செபித்தவளாதலாலும் 'தம்மிடத்தணங்கின் மனுவை யோதிப் பழகிய பார்ப்பன மகளைப் பார்ப்பதியின் வடிவாக்கி" என்றார். (நூக)

ஆ திருவிருத்தம் - கசசுo.

இருபத்து நான்காவது

மாறியாடின படலம்

திருத்த ராய்மது ராபுரி மேவிய சித்தீரா கியசெல்வர்
விருத்த ராயினை யவருமாய் மழவுமாய் வேடங்கொண் டடலேற்றின்
ஒருத்த ராய்வினை யாடிய ஆடலை யுரைத்தன மினிமன்னுள்
கிருத்த ராயவர் மாறிநின் றுடிய நிலைகிறி துரைசெய்வாம். ›

(இ - ள்) கிஷ்களங்காய் மதுராபுரியில் எழுந்தருளிய சித்தமூர்த்திகளாகிய திருவருட் செல்வத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், விருத்தருமாகிக் காளையுமாகிப் பாலருமாகித் திருவேடங்கொண்டு, வெற்றிபொருந்திய இடபவாகனத்தின் மேல் ஒருவராய் லீலையாடியருளிய திருவிளையாடலைச் சொண்ணுவோம். வெள்ளியம்பலத்தில் நடனமூர்த்தியாய் நின்ற அப்பெருமானார் கான்மாறிநின்று நிருத்தஞ் செய்த திருவிளையாடலை இனிச்சிறிதெடுத்துச்சொல்லுவோம்.

(வி - மீ) "விருத்தரா யிளையவருமாய் மழவுமாய்" என்றது பொருண்முரணணி. (க)

வேந்தன் மீனவன் கொடியவ ஞகிய விக்கிர மன்றன்மேருள்
வந்து மண்பொறை யிராசசே கரன்புயத் திறக்கியைக் தருகாடன்
பூந்தண்மாமலர் வேதியன் மாதவன் புரத்தின்மேற்பொலிந்தோங்குஞ்
சாந்த நீறெனச் சண்ணித்த புண்ணியத் தனிமுத னகர்சார்ந்தான்.

(இ - ள்) அரசனும் வலிய கயற்கொடியை யுடையவனுமாகிய விக்கிரம பாண்டியன் தனது தோளிலாற்றிய பூமிபாரத்தை இராஜசேகரனுடைய தோளிலேயிறக்கி, பஞ்சதருக்கள் பொருந்திய வானநாட்டையுடைய இந்திரனும், அழகையுடைய தண்ணிய பெருமை பொருந்திய தாமரைமலரில் வாழும் பிரமதேவனும், இலக்குமி நாயகராகிய திருமாலும் (ஆகிய இவர்களது) நகரங்களின் மேல் (திரிடம்போலப்) பொலிவுற்று விளங்கும் திருவெண்ணீற்றைச் சந்தனம்போலப் பூசியருளிய புண்ணியவடிவாயுள்ள ஒப்பில்லாத சிவபெருமானுடைய சிவநகரமடைந்தனன்.

(வி - ம்) புவலோகமுதல் திருமாலுலகமிறுதியாகிய எல்லாவுலகங்களுக்கும் மேலிருத்தலால், சிவலோகத்தைப் "புரத்தின்மேற் பொலிந்தோங்குந் தனிமுதனகர்" எனக் கூறினர். (உ)

கண்ண கன்புவி யிராசசே கரன்பொதுக் கடிந்துசெங் கோலோச்சி
வண்ண வெண்குடை நிழற்றுவா ளுனந்த வடிவமாய்த் தனிமன்றுள்
அண்ண லாடிய திருநடத் தன்பினு லாடனூ லொழித்தேனே
எண்ணு மூவிரு பத்துமுக் கலையுங்கற் றிறைமுறை செயுநாளில்.

(இ - ள்) இடம் பரந்த நிலவுலகத்தை இராசசேகரபாண்டியன் பொதுத் தன்மையைநீக்கி (தனக்கேயுரியதாக்கி)ச் செங்கோல் செலுத்தி, வெண்ணிறம் வாய்ந்தகுடையால் (ஆன்மாக்கட்கு) நிழலேச்செய்பவன், இன்பமயமாய்ச் சமானமில்லாத வெள்ளியம்பலத்தில் சோமசுந்தரக் கடவுள் நடித்தருளிய திருநடனத்தில் (தான்கொண்ட) அன்பினுல், பாதநூல் (ஒன்றுமட்டுமே) ஒழித்து (அஃதொழிந்த) அறுபத்து மூன்று கலைகளையுங்கற்று அரசியலே முறையே செய்து வருநாளில்.

(வி - ம்) கலைஞானம் அறுபத்துநான்காதலின் "ஆடனூலொழித்தேனே யெண்ணு மூவிருபத்து முக்கலையும்" என்றார். (ஙு)

சிலம்பி வாயில்நூ லிழைத்திடு பக்கரிற் செங்கண்மால் தொழவைகும்
அலம்பு தெண்டிரைப் பொன்னியந் தண்டுறை யாணைக்கா விறைக்கன்பு
கலந்த சிந்தையான் மூவிரு பத்துநாற் கலைகளும் பயின்றுள்ளம்
மலர்ந்த வன்கரி காற்பெரு வளத்தவன் வையகம் புரக்கின்றுழி.

(இ - ள்) சிலம்பிப்பூச்சியானது தனது வாயால் நூலினுற் செய்த பக்கத்தின் கீழ், செவ்விய (தாமரைமலர்போலுங்) கண்களையுடைய திருமால் பணியும்படி எழுந்தருளிய, சத்திக்குந் தெள்ளிய அலைகள் பொருந்திய காவிரிநதியின் அழகிய தட்பமாகிய துறையையுடைய திருவானைக்காவி லெழுந்தருளிய சம்புலிங்கேசுவரருக்கு அன்புகொண்ட மனமுடையவனும், அறுபத்துநான்கு கலைஞானையுங்கற்று (அவற்றுள் ஐயத்திரிபு அறியாமையகல) மனந்தெளிந்தவனுமாகிய கரிகாற் பெருவளவன் (என்னும் பெயர்வாய்ந்த சோழன்) பூமியை (அதாவது சோழமண்டலத்தை அக்காலத்தில்) அரசுசெய்து வருவானுழியுனன்.

(வி - ம்) வையகம் என்றது ஈண்டுச்சோழநாட்டை யுணர்த்திற்று. அதன் எல்லையை,

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்
எண்ணூட்டுப் பெண்ணே யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்" என்பதனாலறிக.

சிவபெருமான் சிலம்பிப்பூச்சி செய்த பந்தரில் வசித்தார் என்றது:—

திருவானைக்காவின் வாயு திசையிலுள்ள சுவேதமலை [வெண்மலை] யினின்று ஒரு வெள்ளையானை யதேச்சையாய் அந்த ஞானபூமியில் வந்துசேர, உண்மை யறிவு உண்டாகி ஆங்கு வெண்ணாவலின் கீழ் எழுந்தருளிய ஜம்புலிங்க மூர்த்தியைத் தரிசித்துப் பணிந்து புண்ணிய வசத்தால் "இப்பெருமானை இனிப் பூசித்து முத்தியடையவேண்டும்" என்று நினைத்து, காலந்தவறாமல் அங்கிருக் கும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பத்திரபுட்பங்கொய்து தனக்குக்கிடைத்த காய்கனிகளைக்கொண்டுவந்து பெருமானை சந்நிதியைச் சுத்திசெய்து பூசித்து வந்தது. அப்படி யிருக்கையில் ஒருகாள் அருகிலிருந்த மரத்தில் வாழும் ஒரு சிலம்பிப் பூச்சிக்கு கல்வினைச்சம்பந்தம் வர, அம்மரத்தை விட்டு வெண்ணாவலில் வந்து தனக்கொரு வீடிழைத்து மேலுங் கீழும் இறங்கித்திரிந்து வாழ்கையில், அவ்விலிங்கமூர்த்தியைக் கண்டு உண்மையறிவு மூள "எம்பெருமானைப் பிரி யேன்" என்று திருக்கோபுரம் திருமண்டபம் முதலியவற்றை, நூலாலிழைத் தது என்பது. இதனை, திருவானைக்காப்புராணம் சொராணியப்படலத்திற் காண்க.

கரிகாற்பெருவளத்தவன் என்றது:—

இவன் இளமையில் ஒரு முனிவராற்காக்கப்பட்டவன். அப்பொழுது உறை யூர் மண்மாரியாலழிந்தமையின் மன்னிரி மூதலாளர் அதனை மீண்டும் திருத்தி அரசனில்லாமையால் ஆலோசித்து ஒரு யானையை அனுப்ப, அது அம்முனிவ ரிருக்கையை யடைந்து அச்சிறுவனையெடுக்க வலியின்றித் திகைத்து நின்றது. அது கண்ட அச்சிறுவனோடு விளையாடிய முனிசிறார் சென்று, சோழன் பெரு மாட்டியிடம் அதனைக் கூற, அவள் மனங்கலங்கி முனிவர்பாற்சென்று "யான் காவிரியா லொழுக்கப்பட்டது முதல் இதுவரை இடையூறின்றி யிருந்தேன். உம்மாற்காதுகாத்துவரப்பட்ட எனது சிறுவன் பெருந்துன்பமுற்றனன்" என நிகழுஞ்செய்தி கூறவும், அம்முனிவர் கேட்டு "உன்புதல்வனுக்குப் பெருவாழ்வு வரும்; பயப்படாதே; அவன் காலிற் கரிக்கோடிடு" என்று கூறி விடுப்ப, அவ்வாறே செய்ய, அவன் வலி குறைந்தமையால் அந்த யானை அவனை யெடுத்துக்கொண்டுபோய்ச் சிங்காதனத்தில் வைத்தது. இக்காரணத்தால் இவன் கரிகால்வளவன் எனப் பெயரெய்தினன். (வளவன்=சோழன்) இவ் விருத்தாந்தத்தை, சேவ்வந்திப்புராணத்திற் காண்க. (ச)

பொன்னி நாடவன் வாயிலுள் ளாமினொரு புலவன்வந் தலர்வேம்பின்
கன்னி காடனைக் கண்டுமுன் பரவுவான் கணைகழற் கரிகாலெம்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும் வரும்வரா தனைக்கொன்று
தென்ன ரேறனை யாயது பதநூல் தெரிக்கிலை யெனச்சொன்னன்.

(இ - ள்) காவிரிநதியைத் தனது நாட்டிலுடைய கரிகாற்பெருவளவனது வாயிலிலுள்ள ஒரு புலவன் (பாண்டிநாட்டில்) வந்து, மலர்ந்த வேப்பமாலை யணிந்த பாண்டி நாட்டையுடைய இராஜசேகர பாண்டியனைக்கண்டு முன்னே நின்று புகழ்கின்றவன், சத்திக்கின்ற வீரக்கழலணிந்த எமது கரிகாற்பெருவளவனுக்கு அறுபத்து நான்கு கலைகளுங் கைவரும். பாண்டியருள் ஆண்சிங்கத்தைப் போன்ற இராஜசேகர பாண்டியனே! உனக்கு (அக்கலைகளுள்) ஒன்று கைவராது. அது (எக்கலை யென்னில்) பாதநூல் (அதனைக்) கற்றிக்கிலை யென்று சொன்னான்.

(வி - ம்) பொன்னி - பொன்னையுடையது. (நி)

கேட்ட மீனவன் மறுபுல விஞ்சையன் கிளத்துசொல் லிகன்மானம்
மூட்ட வாகுல மூழ்கிய மனத்தனுய் முதுமறைச் சிரமன்றுள்
நாட்ட மூன்றுடை நாயக னுடலில் நானுமா டுதற்குள்ளம்
வேட்ட தீதிகொலா மிதுவுமெம் பிரானருள் விகியென வதுகற்பான்.

(இ - ள்) (அவ்வாறு சொல்ல) கேட்ட இராசசேகரபாண்டியன், மறுநாட்டில் வசிக்கும் கவிஞன் கூறியவார்த்தையானது பகைமையையும் மானத்தையும் மூள்விக்க, அன்பத்தில் முழுகிய சித்தத்தையுடையவனாகி, 'பழமையாகிய வேதத்தின் உச்சியாகவிளங்கும் வெள்ளியம்பலத்தில் திரிகோத்திரங்களையுடைய சோமசுந்தரப்பெருமான் திருநடனத்தை நானும் நடித்துக் கற்றற்கு மனம் விரும்பியதென்னே! இவ்வெண்ணமும் எமது பெருமானுடைய திருவருளின் கட்டளை' என்று, அப்பரதநூலைக் கற்கும் பாண்டியன்.

(வி - ம்) இயற்கையாகவே பாண்டியருக்குஞ் சோழருக்கும் பகைமை யுள்ளமையின் அச்சோழனுடைய வாயில் வித்துவான் அவனைத் தன்முன்னே புகழ்ந்துரைத்து வார்த்தை தனக்குத் துன்பம் விளைத்ததென்பது தோன்ற "மறுபுல விஞ்சையன் கிளத்து சொல் லிகன்மான மூட்ட வாகுல மூழ்கிய மனத்தனுய்" எக்ருர். (சு)

வேறு

ஆடனூல் வரம்பு கண்டவ ராகி யவ்வழி யாடலும் பயின்ற
நாடக நடைதேர் புலவரைத் தருஷி நண்ணிய வவர்க்கெலா மகிழ்ச்சி
வீடருஞ்சிறப்பா லறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்துப்
பாடல்வண் டபற்றுந் தாரினன பரதப் பனுவலுங் கசடறப் பயில்வான்.

(இ - ள்) பண்பாடுதலையுடைய வண்டுகள் ஒலிக்கும் (வேப்பமலர்) மாலையணிந்த இராசசேகரபாண்டியன், பரதநூலை அளவுகண்டவர்களாகி அவ்வகையே நடித்தலையுங் கற்றுணர்ந்த நாடகநடையின் தேர்ச்சியையுடைய கவிஞரைத்தேடி, வந்த அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி யொழியாத அருஞ் சீறப்புடன் ஆடையும் ஆபரணமும் பொன்னும் அவாவடங்கக் கொடுத்து, பரதநூலையுங் குற்றமறக் கற்பானுயினன்.

(வி - ம்) விஷயஞான மின்றி வாசாஞானம் பயன்தருதலில்லையாதலின், ஆடல் நூலைக் கற்றல் மாத்திரமே யமையாதென்பார் "ஆடல்நூல் வரம்பு கண்ட

வராகி யவ்வழி யாடலும் பயின்ற '' என்றும் 'தன்மக ஞசான் மகனே மன் மகன் - பொருணனி கொடுப்போன் வழிபடுவோனே - உரைகோ ளாளற் குரைப்பது நூலே'' என்றபடி அவர்கள் தனக்குக் காவாது கற்பிக்க வேண்டு வது கருதி ''மகிழ்ச்சி வீடருஞ் சிறப்பால் அறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்து'' என்றுங் கூறினர். (எ)

*பாவமோ டராகந் தாளமிம் மூன்றும் பயின்றிடு முறையினுற் பரதம்
ஆவயி னங்க முபாங்கமே பிரத்தி யாங்கமே யலர்முக ராகம்
ஓவறு சீர்சால் கரப்பிர சார முவமையில் சிரக்கர முமங்
காவறு கரகேத் திரங்கர காணந் தானக மேசுத்த சாரி.

(இ - ள்) பாவகத்துடனே இராகமும் தாளமுமாகிய இந்த மூன்றினையும் முறைப்படி யுரைப்பது பரதநூல். அந்நூலினிடத்து அங்கமும், உபாங்கமும், பிரத்தியாங்கமும், தன்மையிக்க முகராகமும், கெடுதலற்ற சிறப்புமிக்க கரப்பிர சாரமும், ஒப்பில்லாத சிரக்கரகருமமும், ஒழிதலில்லாத கரகேத்திரமும், காகா ணமும், தானகமும், சுத்தசாரியும்.

இது முதல் ஏழு பாடல்கள் ஒருதொடர்.

(வி - ம்) ''பாவமோ டராகந் தாளமிம் மூன்றும் பயின்றிடு முறையினுற் பரதம்''—இது பாவ ராக தாளங்களே யுணர்த்தலின் அவற்றின் முதலெழுத் துக்களின் இலச்சினையாற் போந்த காரணப்பெயராம். அவற்றுள் பாவம் - உள் ளக் கருத்தைப் பிறருக்குணர்த்தல். இராகம் - ஓசையின் வேறுபாடு. தாளம் - மேற்கூறிய பாவராகங்கட்கு ஒத்திருக்கும்படி யிசைக்குமோசை.

பரதமென்னும் நூற்பெயரின் உட்கிடையை,

''பகரமே பிரமன் மாயன் பண்பென்ப ராகந் தன்னைத்
தகரமே பீசன் மவ்வே சத்தியின் கூற தாகும்
அகரமே பிரமஞ் செய்த வளித்தல்பின் னழித்த லென்றே
சிகாமார் மலய வெற்பின் செந்தமிழ் முனிவன் சொன்னான் ''

எனவரும் பரதநூற் செய்யுளா னுணர்க.

பாவம்

பதாகைக்கை - திரிபதாகைக்கை - பிறைக்கை - சர்ப்பசிரக்கை - சாளே யக்கை - மான்றலைக்கை - பற்மகோசக்கை - சிலீமுகக்கை - தேசிமுட்டிக்கை - சிகரக்கை - சூசிகக்கை - கபித்தக்கை - கடகக்கை - சந்தாங்கிசக்கை - அன்ன வாய்க்கை - முகிழ்க்கை - திரிலிங்கக்கை - மிருகசிரக்கை - சிங்கமுகக்கை - கூர்மக் கை - பூரணக்கை - மெண்ணிலைக்கை - முன்னதக்கை - அஞ்சலிக்கை - புஷ்பாஞ் சலிக்கை - தாடனக்கை - பதாகைக்கை - சங்கற்பக்கை - டோளாக்கை - உற்சங்கக்கை - உபசாரக்கை - அபயவரதக்கை - மகரக்கை - கருடக்கை - பாரதிக்கை - கலகக்கை - சுபசோபனக்கை - பற்மமுகிழ்க்கை - மல்லயுத்தக்கை - பதாகைசோத்திரக்கை -

*இது முதல் ஏழு செய்யுள்களால் நடனலக்ஷணங் கூறுகின்றார். இவற்றை நன்குவிளக்கத்தக்க கருவிநூல் போதிய அளவு கிடைக்கவில்லை. நந்திகேஸ்வர பரதம் - நந்திகேஸ்வர அபிநயம் - சொக்கர் பரத முதலிய சில நூல்களே இருக்கின்றன.

கத்திரிசோத்திரக்கை என *நாற்பத்தொருவகைக் காலக்ஷணமும், சமசிரம் - கம்பிதசிரம் - ஆகம்பிதசிரம் - தூதசிரம் - வித்தூதசிரம் - உக்கிதசிரம் - நிருஞ்சித சிரம் - அதோமுகசிரம் - கந்தானனசிரம் - அணுக்குசிரம்•எனப் **பத்துவகைச் சிரலக்ஷணமும்,** சமபதம் - மண்டிலபதம் - குஞ்சிதபதம் - அஞ்சிதபதம்-வடிப் புப்பதம் - தாடிதபதம் - நாகபர்த்தபதம் - சாடகத்திப்பதம் - நிருத்தமூர்த்தபதம்- கருடலீலப்பதம் எனப் **பத்துவகைப் பதலக்ஷணமும்,** காந்தைக்கண் - பயா னகைக்கண் - கருணைக்கண் - மூடாம்பரக்கண் - அற்புதக்கண் - வீரக்கண் - நகைக் கண் என **எழுவகை நேத்திரலக்ஷணமும்,** பெருநகைரசம் - சோகரசம் - கருணை ரசம் - வீரரசம் - அச்சரசம் - சாந்திரசம்-அற்புதரசம் - ரௌத்திரரசம்-சிங்கார ரசம் என **நவவகை ரசலக்ஷணமும்,** பற்மகோசக்கையாலாகிய இனிப்பும், பிறைக்கையாலாகிய துவர்ப்பும், சாளையக்கையாலாகிய காரமும், முஷ்டிக்கையா லாகிய கைப்பும், பதாகைக் கையாலாகிய புளிப்பும், அன்னவாய்க்கையாலாகிய உவர்ப்பும் என **அறுவகைச் சுவைலக்ஷணமும்** உணர்த்துவதாம். இதனை,

பரதம் (சூ) " பாவ வியலிற் பகர்வித முரைக்கின்
ஓவறு கரவகை யொன்றுமூன் ஞற்பான்
மூர்த்தினி பதமீ ரைந்தென மொழிப
சேத்திர மெழுவகை யாமென நிகழ்த்துவர்
நவரச பேத நாட்டுமோன் பானே
சுவைவகை யாறெனச் சொற்றனர் புலவர் " என்பதனுணர்க.

இனி மேற்கூறியவற்றுள் சிரவகை :—சமம் - உத்வாஹிதம் - அதோமுகம் - ஆலோளிதம் - தூதம் - கம்பிதம் - பரிவருத்தம் - உத்க்ஷிப்தம் - பரிவாஹிதம் - என ஒன்பது வகையென்றும், நேத்திரவகை—சமம் - ஆலோகிதம் - ஸாசீ - ப்ரலோகிதம் - நிமீலிதம் - உல்லோகிதம் - அநுவ்ருத்தம் - அவலோகிதம் - என எண்வகையெனவும் கூறுதல் மரபு. இதனை **நந்திகேசுவரப்ரோக்தம்,**

ஸ்ரீ ॥ ஸமஶ ஊஹிதமேவ ஆவஶலோலிதமேவ தூதம்
கூர்ணிதமவபரிவ்ருத்தி ஆக்ஷிப்தம் பரிவாஹிதம்
நவயாகயிதமஸ்ஷ்டம் நாட்யஸாஸ்த்ர விதக்ஞைஃ ॥

எனவும்,

ஸ்ரீ ॥ ஸமலோகிதமஸாசீ ப்ரலோகித நிமீலித
உல்லோகித அநுவ்ருத்த தயாவலோகிதமிதி
ஏதஷ்டௌ திருஷ்டிபேதாஸ்ஸ்யுஃ நிர்திஷ்டாஸ்தாண்டவே ॥

எனவும் வருவனவற்றுணர்க.

---

*சரவகை நாற்பத்தொன்றில் பதாகை முதல் முன்னதம் இறுதியாகிய இருபத்து மூன்றும் ஒற்றைக்கை எனவும், அஞ்சலிமுதல் கத்திரிசோத்திகம் இறுதியாகிய பதினெட்டும் இரட்டைக்கை எனவு முணர்க.

இராகம்

பைரவி - தேவகிரியை - மேகவிரஞ்சி - குறிஞ்சி - பூபாளம் - வேளாவளி - மலகரி - பௌளரி - சீர்சகம் - இந்தோளம் - பல்லதி - சாவேரி - படமஞ்சரி - தேசி - இலலிதை - தோடி - வசந்தம் - இராமக்கிரியை - வராளி - கைசிகம் - மாளவி - காராயணி - குண்டக்கிரியை - கூர்ச்சரி - பங்காளம் - தன்னியாசி - காம்போதி - கௌளரி - நாட்டை - தேசாட்சரி - காந்தாரி - சாரங்கம் என **முப்பத்திரண்டு**. இவற்றில் பைரவி - புருடராகம்; இதின் மனைவிகள் தேவகிரியை - மேகவிரஞ்சி - குறிஞ்சி; இதின் அதிதேவதை ஈசன். பூபாளம் - புருடராகம்; இதின் மனைவிகள் வேளாவளி - மலகரி - பௌளரி; இதின் அதிதேவதை திருமால். சீராகம் - புருடராகம்; இதின் மனைவிகள் இந்தோளம் - பல்லதி - சாவேரி; இதின் அதிதேவதை சரசுவதி. படமஞ்சரி - புருடராகம்; இதின் மனைவிகள் தேசி - இலலிதை - தோடி; இதின் அதிதேவதை இலக்குமி. வசந்தம் - புருடராகம்; இதின் மனைவிகள் இராமக்கிரியை - வராளி - கைசிகம்; இதின் அதிதேவதை சூரியன். மாளவி - புருடராகம்; இதின் மனைவிகள் காராயணி - குண்டக்கிரியை - கூர்ச்சரி; இதின் அதிதேவதை நாரதர். பங்காளம் - புருடராகம்; இதின் மனைவிகள் தன்னியாசி - காம்போதி - கௌளரி; இதின் அதிதேவதை விநாயகர். நாட்டை - புருடராகம்; இதின் மனைவிகள் தேசாட்சரி - காந்தாரி - சாரங்கம்; இதின் அதிதேவதை அம்புரு. இவையெயன்றிப் பல வகைப்பட வழங்குவனவுமுண்டு.

இனி இவ்விராகம் இடம் செய்யுள் குணம் காலம் என்னுக் தகுதிபற்றி நான்குவகைப்படும். இவற்றுள் **இடம்பற்றியராகம்** ஐந்திணை இராகம்.

கோயுள் பற்றியராகத்துள் வெண்பா - சங்கராபரணம்; அகவல் - தோடி; கலி - பந்துவராளி; கலித்துறை - பைரவி; தாழிசை - தோடி; விருத்தம் - கல்யாணி, காம்போதி, மத்தியமாவதி முதலியன; உலா - செளராட்டிரம், தோடையம் - நாட்டை; மங்களம் - மங்களகௌசிகம்; தேவாரம் - பூபாளம்; பின்லைக்கலி - கேதாரகௌளம்; பரணி - கண்டாரவம்.

குணம்பற்றியராகத்துள் இரக்கம் - ஆகரி, கண்டாரம், நீலாம்புரி, பியாகடை, புன்னாகவராளி. அக்கம் - இரக்கத்துக்குரியனவன்றி வராளி முதலியன. மகிழ்ச்சி - காம்போதி, சாவேரி, தன்னியாசி. யுத்தம் - நாட்டை.

காலம்பற்றியராகத்துள் வசந்தம் - காம்போதி, அசாவேரி, தன்னியாசி. மாலைக்காலம் - கலியாணி, காபி, கன்னடம், காம்போதி. யாமம் - ஆகரி. விடியற்காலம் - இந்தோளம், இராமகலி, தேசாட்சரி, நாட்டை, பூபாளம். உச்சி - சாரங்கம், தேசாட்சரி (அன்றியும்) ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளநீக்கி நின்ற மற்றவை எக்காலத்தும் பொதுமைய.

தாளம்

சச்சற்புடம் - சாசபுடம் - சட்பிதாபுத்திரிகம் - சம்பத்துவேட்டம் - உற்கடிதம் என **ஐவகைப்படும்**. இவற்றுள் சச்சற்புடமாவது குரு - உ, இலகு - க, புதலும் க உ உ | வியூகமாத்திரை - அ. இஃதீசனுடைய சத்தியோசாத

முகத்திற் பிறந்தது ; சாசற்புடமாவது குரு - க, இலகு - உ, குரு - க. ஆ | | ஆ ஆ மாத்திரை - சு - இஃது தீசனுடைய வாமமுகத்திற் பிறந்தது ; சட்பிதா புத்திரிகமாவது புலுதம் - க, இலகு - க, குரு - உ, இலகு - க, புலுதம் - க. ஆ | ஆ ஆ | ஆ ஆ மாத்திரை கூ. இஃதீச னகோரமுகத்திற் பிறந்தது ; சம்பத்துவேட்டமாவது புலுதம் - க, குரு - ங, புலுதம் - க. ஆ, ஆ ஆ, ஆ ஆ மாத்திரை - கூ. இஃதீசனுடைய தற் புருடமுகத்திற் பிறந்தது ; உற்கடிதமாவது குரு - ங. ஆ ஆ ஆ ஆ மாத்திரை - சு. இஃதீசன ஈசானமுகத்திற் பிறந்தது.

இத்தாளங்களின் பிறப்பிடங்களை,

"தத்தத்தீம் தெதிந்தமெனத் தாண்டவஞ்செய் கின்றசபை
அத்தர்முக மைந்தனிட மாமுறையே - உற்கடிதம்
சம்பத்து வேட்டமுடன் சட்பிதா புத்திரிகம்
சச்சபுடஞ் சாசபுட மாம்" எனமாறிக் கூறுவதுங்கொள்க.

இப்பஞ்சதாளங்களேயன்றி, குருவம்-மட்டியம்-உருபகம்-சம்பை-திரிபுடை-அடதாளம்-ஏகதாளம் என ஏழுவகையாகவும், அரிதாளம்-அருமதாளம் - சமதாளம் - சயதாளம் - சித்திரதாளம் - குருவதாளம் - கிவர்த்ததாளம்-படிமதாளம்-விடதாளம் - என நவசந்திதாளம் ஒன்பது வகையாகவும், இன்னும்பல பேதப்படவும் வழங்கும். இனி தாளப்பிரமாணம் காலம் - மார்க்கம் - கிரியை - அங்கம் - கிரகம் - சாதி - களை - இலயை - யதி - பிரத்தாரம் எனப்பத்துவகை.

காலப்பிரமாணம் :—தாமரைமலரிதழ்நூறுடுத்தி அதிலோர் ஈரிதழில் ஊசி செலுத்துங்காலம் கணம். கணம் எட்டுக்கொண்டது இலவம். இலவம் எட்டுக் கொண்டது காட்டை. காட்டை எட்டுக்கொண்டது நிமிஷம். நிமிஷ மெட்டுக் கொண்டது துடி. துடி இரண்டுகொண்டது துரிதம். துரிதம் இரண்டுகொண்டது இலகு. இலகு இரண்டுகொண்டது குரு. இலகு மூன்றுகொண்டது புலுதம். குரு இரண்டுகொண்டது காகபதம். **மார்க்கம் :**—தச்சணம்எட்டுமாத்திரை ஒரு களையாகக்கொண்டது. வார்த்திகம் நான்குமாத்திரை. சித்திரம் இரண்டு மாத்திரை. சித்திரதரம் ஒருமாத்திரை. அர்த்தசித்திரம் அரைமாத்திரை. அதி சித்திரம் கான்மாத்திரை என ஆறுவகைப்படும். **கிரியை :**—மார்க்கம், தேசிகம் என இருவகைப்படும். **அங்கம் :** ⌣ ○ | ஆ ஆ + இவை முறையே பிறை-மதி - கணை - வில் - பாம்பு - புள்ளடி. இவற்றின் பெயர் அநுதுரிதம்-துரிதம் - இலகு-குரு - புலுதம் - காகபதம் என அங்கம் அறுவகைப்படும். இதனை,

"பிறைமதிகோல் வீற்பாம்பு பேசுபுட்கா லங்கம்
அறைபடு மநுதுரிதந் துரிதம் - முறையிலகு
வாகுங் குருபலுத மாங்கரண்டக் காலென்பர்
பாகுமொழி யாயிவற்றின் பண்பு" என்பதனுணர்க.

கிரகம்:—குரல் முன்னும் தாளம் பின்னும் வருவது அதீதம். தாளமுன்னுங் குரல்பின்னும் வருவது அநாகதம். குரலுந் தாளமும் ஒத்துவருவது சமம். குரலுந் தாளமு முன்னும் பின்னுங் கலந்து வருவது விடமம் என நான்கு

வகைப்படும். காதி:—சதுராசிரம் - திரிசிரம் - மிசிரம் - கண்டம் - சங்கீரணம் என்னப்படும்.

களை :—அக்காரகாலமாயும் கிரியையையோடும் வருவது ஏககளை. இதனை இரட்டித்துக் கிரியையோடுவருவது துவிகளை. இதனை இரட்டித்துக் கிரியை யோடு வருவது சதுர்க்களை என்பர்; இது மூன்றுவகைப்படும். இலேயை:—அக் காரகாலமாய்க் கிரியையோடு வருவது விளம்பம். இதை இரட்டித்துக் கிரியை யோடு வருவது மத்திமம். இதை இரட்டித்துக் கிரியையோடு வருவது துரிதம் என மூன்றுவகைப்படும். யதி:—நெட்டங்கமாயினுங் குற்றங்கமாயினும் ஒரே வகையாய் வருவது சமயதி. ⏑ ⏑, ||, எல்லா அங்கமும் கிரமமின்றிக் கலந்து வருவது விடமயதி. ♂ ⏑ ○. முதலிலுங் கடையிலும் குற்றங்கமும் இடையில் நெட்டங்கமும் வருவது மிருதங்கயதி. ⏑ ○ ♂ ○ ⏑. முதலிலுங் கடையிலும் நெட்டங்கமும் இடையிற் குற்றங்கமும் வருவது வேதமத்தியயதி. | ⏑ |. முதலில் நெட்டங்கமும் இறுதியில் குற்றங்கமுமாய் நேர்ந்தவரு வது கோபுச்சயதி. ♀♂ | ○⏑. முதலிலே குற்றங்கமும் இறுதியில் நெட்டங்க மமாய் வருவது சுரோதோவகயதி ⏑ ○ | ♂ ♂. என ஆறுவகைப்படும். மற் றையவற்றை விரிநூல்களிற் காண்க.

அங்கம் உபாங்கம் பிரத்தியாங்கம் என்பனவற்றை,

ஸ்ரீ॥ கூமாநூதுரிரொஹஹெளள கூகூஃவொஸ்வூக்கூழ்தெடெள
வாஷாவிதிஷ்டூஷ்டூகூராகிரீவாஃவ்வுவரொஜஹ்ஃ॥

என்றது அக்காரட்டியத்திலே சிரம்-கரங்கள் - பகூம் - பக்கம் - கடிதடம்- பாதம் இவ்வாறும் அங்கமெனப்படும். [கண்டத்தையும் உடன்கொள்வது முண்டு.]

ஸ்ரீ॥ வ்ருதூம்மாகிக்வழ்ஸ்ம்யெள வாஹ்வ்ருஷ்டம்தியொஷ்டம்॥
உளரூஜம்ஜெஷ்டிவிதூராஹ்ரூவரொணிவ்வம்யகெள ।
ஜாநஹ்நீகூஹிர்ரூஸ்ரீதி தூயஃவ்யுயிக்கூம்ஜஹ்ஃ ।

என்றது பிரத்தியங்க காட்டியத்திலே தோள்கள் புஜங்கள் புஷ்டம் வயிறு தொடை கணைக்கால் முதலிய இவ்வாறும் பிரத்தியங்கங்கள். [சிலர் மணிக் கட்டுகள் முழங்கால்கள் முழங்கைகள் சஹிதமாகப் பிரத்தியங்கமென்பர்.]

ஸ்ரீ॥ ஊவ்ஷிஹ்ஹிவ்ஃடாராராஷ்டு கூவொஹெள நாஹிகாஹநஹ்ஃ॥
கூயிரொஷுநாஜஹ்வா வ்ஹ்வ்கூம்வஷுநிம்தியா ॥
உவாம்மாகிஷாஷுஹெஹெதி ஸிராஷ்வ்ஷ்யாம்தரொதயா ।
வாஷ்ஷ்டீஹ்ரூஹ்ஹெள தயாஃஹ்ரூவ்ஷ்டுக்கூஹெயொஃவஷுயொஷ்வஹ்ஹெ ।
வநதாகிவ்ஹிரூஸ்ராஷ்வ்ஷ்டூ நஹ்ஷாரொணொகூகிஹிவெஃயா॥

கூம்மாநாம்வஷுநாஹெவ வ்ருதூம்மொவாம்நயொராஷி ।

என்றது,

உபாங்கஞாட்டியத்திலே பார்வை - கண்ணிமை - கருவிழி - கவுள் - நாசி - கன்னம் - உதடு - பல் - நா - மோவாய் - முகம் - சிரசு - இப்பன்னிரண்டும் உபாங்கங்கள். [சிலர் - பக்கம் - பரடு - கைவிரல் - கால்விரல் - கைத்தலம் - காற்றலங்களும் உபாங்கமென முற்காலத்தவர் கூறுவர்.] அங்கங்கள் சலித்தலிலுலேயே பிரத்தியங்க உபாங்கங்களுஞ் சலிக்கும்.

எனவரும் நந்திகேஸ்வரப்ரோக்த பரதசாஸ்திரங்களானறிக. (அ)

விண்டிடாக் தேசி சாரியே நியாயம் விருத்தியே பிரவீசா ரம்பூ
மண்டல மூடனு காசமண் டலமே மாசில்சுத் தக்கர ணஞ்சீர்
கண்டவுற் புலித காரணமே யங்க காரமே யிசோசித மென்னக்
கொண்டநா லைந்து பேதமுங் கற்றுக் கோதறப் பயின்றபி னவற்றுள்.

(இ - ள்) நீங்காத தேசிசாரியும் நியாயமும் விருத்தியும் பிரவிசாரமும் பூமண்டலத்துடன் ஆகாசமண்டலமும் குற்றமில்லாத சுத்தக்காரணமும் சிறப்பமைந்த உற்பவித காரணமும் அங்காகாரமும் இரேசிதமுமென்று சொல்லப்படும் இருபது பேதங்களாகிய (பொது) இலக்கணங்களையுங் கற்று, குற்றமறப் பழகிய பின்னர், அவற்றுள். (கூ)

வருத்தமின் மனோபா வாதியா மெட்டு வகைகிருத் தங்களிற் சாரி
நிருத்தமா கியதாண் டவமக மார்க்க நிகழ்த்திடுக் தேசியே வடுகே
அருத்தமா கியசிங் களமென மூன்று மதுநிலை யாறுமூ விரண்டு
திருத்தமாம் பதமூன் நிகழிசே காகி செப்பிய அங்கமீ செட்டும்.

(இ - ள்) வருத்தமில்லாத மனோபாவம் முதலாகிய எண்வகை நடனகங்களில், சாரி நடனமாகிய தாண்டவம் அகமார்க்கமாம். சொல்கின்ற தேசிகக் கூத்தென்றும் வடுகுக் கூத்தென்றும் பொருளமைந்ததாகிய சிங்களக் கூத்தென்றும் மூவகையாம். அதன் பேதங்கள் பன்னிரண்டு வகையாம். திருத்தமாகிய பதங்களும் விளங்குகின்ற இரேகைமுதலாகச் சொல்லப்பட்ட பதினாறு அங்கங்களும்.

(வி - ம்) ஆறுமூவிரண்டும் என்றதை ஆறும் மூவிரண்டும் எனச் சொல் வகை செய்க.

தாண்டவம் நிருத்தம் என்னுமிரண்டும் அகக்கூத்து. இந்த அகக்கூத்து அல்லியம், கடையம், பேடு, மரக்கால், குடை, குடம், குடி, மல்லாடல், பாவை, பாண்டரங்கம், கொடுகொட்டி எனப் பதினொருவகைப்படுமென்பர். அவற்றுள் அல்லியம் - கிருஷ்ணமூர்த்தி தன்மேற் கஞ்சனனுப்பிய யானையின் கொம்பை முறித்தபோது ஆடிய ஆட்டம். கடையம் - இந்திராணி வாணாசானது வடக்கு வாயிலில் ஆடியது. பேடு - காமன் தன்மகனே வாணன் சிறையிட்டபொழுது அவனை மீட்கப் பெண்கோலங்கொண் டாடியது. மரக்கால் - அசுரர்கள் போர் செய்யமுடியாமல் பாம்பு தேள் முதலிய வஞ்சவடிவேற்று வருகையில், தூர்க்கையுணர்ந்து மரக்கால் கொண்டாடியது. குடை - முருகக்கடவுள் தன்னுடன் போர்செய்ய ஆற்றாத அசுரர் புறங்காட்டியோடக் குடையைச் சாய்த்து ஆடியது. குடம் - வாணன் அநிருத்தனைச் சிறையிட்டபொழுது திருமால் குடத்

திண்மேல்நின் ரூடியது. அடி - சூரன் வேற்றுருவாகிச் சமுத்திரத்து நின்ற பொழுது அதனைக் கடத்தற்குத் தடிகொட்டியாடியது. மல்லாடல் - திருமால் வாணசுரனை வெல்ல முல்லஞ்சென்று ஆடியது. பாவை இலக்குமி அசுரர் போழிந்து மோகிக்க மோகினிவடிவாயாடியது. பாண்டரங்கம் - திரிபுரதகனத்தில் இரதசாரதியாயிருந்த பிரமன் கலைமகளது பிரிவாற்றாது வருந்தக் கண்ட இறைவன் அதனைநீக்க ஆடியது. கொடுகொட்டி-திரிபுரதகனஞ் செய்த மயானத்தில் உமையவள் தாளம் பணிக்க இறைவன் •கைகொட்டி யாடியது என்பர்.

அல்லியம் ஆறங்கமும், கடையம் ஆறங்கமும், பேடு நான்கங்கமும், மரக்கால் நான்கங்கமும், குடை நான்கங்கமும், குடம் ஐந்தங்கமும், அடி ஐந்தங்கமும், மல்லாடல் ஐந்தங்கமும்,பாவை இரண்டங்கமும்,பாண்டரங்கம் ஆறங்கமும், கொடுகொட்டி நான்கங்கமு முடையன என்பர்.

புறக்கூத்து புறமார்க்க மெனப்படும். அது பெருங்கடை பிரமரி முதலாகப் பலதிறத்தது. சாந்திக்கூத்து விநோதக்கூத்து என்னும் இருவகைக் கூத்தில் சாந்திக்கூத்தில் தேசி,வடுகு,சிங்களமென்னும் மூன்றுகூத்துக்களும் அடங்கும். சாந்திக் கூத்து சொக்கம், மெய், அபிநயம், நாடகம் என நான்கு வகைப்படும். அவற்றுள் சொக்கம் என்பது சுத்தநிருத்தம். அது நூற்றெட்டுக் கரணமுடையது. தேசி, வடுகு, சிங்களம் இம்மூன்றும் மெய்த்தொழிற் கூத்துகள். கரிசில் முதலியன அங்கங்களாதலின் மெய்த்தொழிற் கூத்து. இவற்றின் இலக்கணங்கள் முன்கூறினும். (கo)

நால்வகைத் தாகுங் கரணமு மேலோர் நாட்டிய இருவகைக் கரமுங் கால்வகை புரிகை முதற்பதி ஞறுங் கவான்மீ னாதியா மிரண்டும் பாலது மடிப்பு வகையெழு நான்கும் பழிப்பறு சுத்தசா ரியெனும் ஏலுறு பூசா ரிகள்பதி ஞறு மித்திணைக் ககனசா ரிகளும்.

(இ - ள்) நான்குவகைப்பட்ட கரணமும், மேலோர் நிலைநிறுத்திய இரு வகைப்பட்ட கரங்களும், கால்வகையும் செய்யப்பட்ட கைமுதலிய பதினாறு வகைகளும், கவான் மீனமுதலாகிய இரண்டும், பருப்பினையுடைய இருபத்தெட்டு மடிப்புவகைகளும், பழிப்பற்ற சுத்தசாரியென்னும் மேன்மைமிக்க பூசாரிகள் பதினாறுவகைகளும், இவ்வளவினவாகிய ககனசாரிகளும்.

(வி - ம்) இரண்டுகரம் - எழிற்கை தொழிற்கை யென்பன. (கக)

ஏற்றதிக் கிராந்த மாதியா முப்பத் திருவகைத் தேசிசா ரிகளுங் காற்றினுங் கடுந்தேர்ச் சக்கர முதலாங் ககனசா ரிகைகளே ழைந்துஞ் சாற்றுவித்துவப்பி ராந்தமா தியவாஞ் சாரிபத் தொன்பது மாகப் போற்றியை யினத்து முட்படப் புட்ப புடத்திலக் கணமுதற் பொருள்கள்.

(இ - ள்) பொருந்திய திக்கிராந்த முதலிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தேசிசாரிகளும்,காற்றைக்காட்டிலும் மிகுதியாகிய வேகத்தையுடைய தேர்ச்சக்கரம் முதலிய ககனசாரிகள் முப்பத்தைந்தும்,சொல்லாநின்ற வித்துவப்பிராந்த

முதலாகிய சாரிபத்தொன்பதுமாக முற்கூறிய இப்பன்னிரண்டும் உட்படப் புட்பபுடத்தி னிலக்கணங்களாகிய முதன்மையாயுள்ள பொருள்களாம். (கஉ)

ஆசவாத் தியமுன் பொருண்முதற் களாச மாதியரீம் பாடபே தங்கள்
பேசிய பதிஞ றெறன்பதும் படக பேதமொன் றெழிந்தகா லேந்தும்
மாசறு மளக மாதியாம் பாட வகைகள்கா லேழுமற் றவற்றிற்
பூசல்வார்த் திகந்தொட் டைவகைச் சச்ச புடாதியாந்தாள மாத்திரையும்.

(இ - ள்) ஆசவாத்தியமும் முன்பொருளும் முதலிய களாசம் முதலாகிய பாடபேதங்களென (பாதாலிற்) சொல்லப்பட்ட இருபத்தைந்தும், படக பேதங்கள் பத்தொன்பதும், குற்றமற்ற அளகம் முதலாகிய பாடவகைகள் இருபத்தெட்டும், அவற்றுள் பூசல் வார்த்திகந்தொட்டுச் சச்சபுடம் முதலாகிய தாளமாத்திரைகளும். (கூ)

கிளந்தமாத் திரையின் கதிகளுஞ் சொல்லுங் கீதமும் பாடமு மெழுத்துங்
வளந்தரு மணிபந் தாகிகீ தத்தின் வகுத்தகட் டளையெழு நான்கும்
அளந்திடு சாளே யாதிகட் டளேயே ழைந்துநன் கமைந்தபா வாதி
விளம்பிய மூன்று கலப்புமீ ருக விளேத்திடுங் கூத்தக மார்க்கம்.

(இ - ள்) சொல்லப்பட்ட மாத்திரையின் கதிகளும், சொற்களும், கீதங்களும், பாடங்களும், எழுத்துகளும், வளப்பமிக்க மணிபந்தம் முதலாகிய கீதத்தின்பாற் பிரித்த கட்டளைகள் இருபத்தெட்டும், அறுதிசெய்யப்பட்ட சாளைகள் முதலிய கட்டளைகள் முப்பத்தைந்தும், நன்றாக அமைவுபெற்ற பாவம் முதலாகக்கூறிய மூன்றுவகைச் சம்பந்தமும் மீறாகச்செய்யுங் கூத்து அகமார்க்க மெனப்படும்.

(வி - பீ) மாத்திரை முதலியவும் கட்டளைகளும் இன்னுஞ் சிலவும் முதலிற் சந்தித்த (அ-வது இலக்கச்) செய்யுளிற் கூறியவற்றையே கருவியாகக் கொண்டு பிறவற்றையும் வருமிடத்துணர்க. (கச)

வேறு

உரைத்தவிக் கூத்துக் கற்கும் போதுதன் னுடம்பிற் சால
வருத்தமோ யெய்தி யிந்த வருத்தமான் மறையுங் தேறு
அருத்தமா யறிவாய் வெள்ளி யம்பலத் தாடி. நின்ற
திருத்தனூர் தமக்கு முண்டே யென்பது நிணேவிற் கொண்டான்.

(இ - ள்) (இவ்விடத்திற்) சொல்லிய இந்நடனத்தை அப்பியசிக்குங் காலையில், தன்னுடையதேகத்தில் மிகுதியும் வருத்தங்கூர்ந்து, இந்நடனவருத்தம் காண்கு வேதங்களுக் தெளிதற்கரிய பொருளாகி ஞானமயமாகி வெள்ளியம் பலத்தில் நிருத்தஞ் செய்து நின்றருளிய திருக்கூத்தையுடைய சோமசுந்தரப் பெருமானுக்கும் உளதேயென்பதை மனத்திற் கொண்டவனுயினன் (பாண்டியன்.)

(வி - ம்) இறைவன் விக்குசத்தியின் காரியமாகிய சொற்பிரபஞ்சத்தாளத்தற் காரியவனுயினும் " அவனருளாலே யவன்றாள் வணங்கி " என்ற மணி

வாசகர் திருவாக்கின்படி, தன்னைத் தன்னருளா லுணர்ந்தோர் உணர்வாய் நிற்றலின் "நான் மறையுந் தேரு அருத்தமாய் அறிவாய்" என்றார். (கஙி)

கரியதா மரைக்கண் ணுணுங் கமலகான் முகனுங் காண்டற்
கரியதா ளொன்றே நோவ வாற்றகா ணிற்ப தன்றே
உரியதா பிதற்றிக் கற்று வருத்தமுற் றேர்ந்து மீது
தெரியகா னிருப்ப தேயோ அறனெனைச் சிக்கை.நோவான்.

(இ - ள்) கருநிறம் பொருந்திய தாமரைமலர்போலும் திருவிழிகளையுடைய விஷ்ணுமூர்த்தியும், தாமரைப் பூவில் வசிக்கும் பிரமதேவனும் காண்பதற்கரிய திருவடியொன்றே வருந்தும்படி அநேககாலமாக ஆடிநிற்கின்றதை. ஐயோ! (அதனையுணர்வதற்கு) உரிய இப்பாதனாலே வருத்தமுற்று ஆராய்ந்துணர்ந்தும், இது தெரிந்தா நான் வாளாவிருப்பது தருமமோவென்று மனம் வருந்தத் தொடங்கினன்.

(வி - ம்) தெரிய என்றது தெரிந்து என்னும் வினையெச்சத்திரிபு. (கசு)

வடுப்படு பிறவிப் பௌவ வரம்புகாண் கின்ற நாள்வந்
தடுப்பவர் யாவ ரோனு மவர்க்கெலாம் போகம் வீடு
கொடுப்பவர் செய்யு மிக்குக் கூத்தையெப் படிகாஞ் சென்று
தடுப்பது தகாதன் றேனும் வருந்துமே சரண மென்னு.

(இ - ள்) குற்றமிக்க பிறவிச்சமுத்திரத்தின் எல்லையைக் காணுங்காலம் வரப்பெற்றவர் எவராஞலும் அவர்கள் யாவர்க்கும் இன்பத்தையும் மோக்ஷத்தையும் அனுக்கிரகிக்கும் பெரியபெருமான் செய்தருளும் இந்தத் திருக்கூத்தை எவ்வாறு நாம் தடைசெய்வது (கூடும்)? (தடுக்கத்) தகாது. அல்லவென்றாலும் (எம்பெருமானது) திருவடிவருந்துமே யென்று நினைத்து.

இது முதல் மூன்று பாடல்கள் குளகம். (கஎ)

இதற்கிது துணிவென் றுன்னி யெழுந்துபோய்ச் சிவனி ராவிற்
கதக்களிற் றிருந்த லேந்துங் கதிர்மணிக் குடுமிக் கோயில்
மதக்கரி யுரியி ஞற்கு வரம்பறச் சிறந்த பூசை
விதப்பட யாம நான்கும் விதிவழி யியற்றல் செய்யா.

(இ - ள்) இதற் கிதுதான் துணிபென்று கருதி எழுந்துபோய், சிவராத்திரியிலே கோபத்தையுடைய அஷ்டகஜங்கள் தாங்கும் ஒளிபொருந்திய இரத்தினமிழைத்த சிகரத்தையுடைய திருக்கோயிலில் எழுந்தருளிய, மதஞ்சொரியும் யானைத்தோலைப் போர்வையாகக்கொண்ட சோமசுந்தரப் பெருமானுக்கு அளவற்ற சிறந்த பூசையை முறைப்பட நான்கு சாமங்களிலும் (ஆகம) விதிப்படிசெய்து (கஅ)

விண்டக மலர்த்தா ளேத்தி வெள்ளியம் பலத்து ளன்பர்
தொண்டக மலர நின்ற சோதிமெய்ஞ் ஞானக் கூத்தைக்
கண்டக மகிழ்ந்து தாழ்ந்து கட்புன லோரச் செங்கை
முண்டக முடிமே லேற்றி முகிழ்த்துநின் றிதனை வேண்டும்.

(இ - ள்) தனது இதயத்தில் விகசித்த தாமரைமலரையொத்த திருவடியைப்பணிந்து, வெள்ளியம்பலத்திலே அடியார்களுடைய தொண்டுபூண்ட இதயத்தின்கண் விளங்க எழுந்தருளிநின்ற பேரொளியாகிய சோமசுந்தரப்பெருமானுடைய உண்மை ஞானமாகிய திருக்கூத்தினைத் தரிசித்து, மனங்களித்துப் பணிந்து, கண்களிலிருந்து, ஆனந்தபாட்பஞ் சிந்த, சிவந்த கைத்தாமரைகளைத் தனது தலையின்மேலேற்றிக் கூப்பித்(திருமுன்) நின்று இதனை வேண்டுகின்றான் (இராசசேகரபாண்டியன்.) (கக)

நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததாள் நிலமீ தூன்றி
இன்றுநாங் காண மாறி யாடியென் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேற் பொன்றுவ லென்னு அன்பின்
குன்றனுன் சரிகை வாண்மேற் குப்புறீ வீழ்கி வென்னு.

(இ - ள்) (தேவரீர்) ஊன்றிய திருவடியையெடுத்து வீசியருளி, தூக்கியருளிய திருவடியைத் தரைமீதூன்றியருளி, இன்று அடியேன்தரிசிக்கும்படி, காண்மாறி நடித்தருளி அடியேனுடைய வருத்தமுழுவதும் நீங்கும்வண்ணஞ் செய்தருள்வீர். (அவ்வாறு) செய்தருளாவிடின் மடிவேனென்று அன்பின்மலை போன்ற இராசசேகரபாண்டியன் உடைவாள்மேற் குப்புறவீழ்ந்து இறப்பேனென்று கூறி.

இதுமுதல் இரண்டுபொடல்கள் குளகம். (உ0)

நாட்டினுன் குறித்துப்பா யகண்ணுமூன் னிடத்தா ளூன்றி
நீட்டினுன் வலத்தாள் வீசி நிருமலன் மாறி யாடிக்
காட்டினுன் கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும்
வீட்டினுன்பரமா னந்த வேலையுள் வீட்டி னானே.

(இ - ள்) (இவ்வாறுகூறி) உடைவாளைநாட்டி (அதன்மேல்) பாயச்செல்லுமூன்னர், மலரகிதராகிய சிவபெருமான் எடுத்தருளிய இடதுகாலை யூன்றியருளி, (ஊன்றியநீளிய) வலதுகாலை எடுத்து வீசியருளி, (இவ்வண்ணமாக) கான்மாறியாடிக் காட்டியருளினார். கன்னிநாட்டையுடைய இராசசேகரபாண்டியன் (எம்பெருமானது திருவடி நீழலே யென்று கொண்ட) வருத்தத்தையும் (ஆணவம் காமியம் மாயையென்னும்) மும்மலங்களையும் ஒழித்துப் பேரின்பக்கடலில் (தன்னை) முழுகச்செய்தான். (உக)

வினைகள்வாய் வீழ்ந்த வண்டின் மெய்யறி வின்ப மென்னும்
அளவிலா மூன்நீர் வெள்ளத் தாழ்ந்தவ னெழுந்து பின்னும்
உளமும்வா சகமு மெய்யு முடையவ னதிவே யாகப்
பளகிலா அன்பு தானே படிவமாய்ப் பழிச்ச லுற்றான்.

(இ - ள்) இன்பம் வினையும் மதுவில் வீழ்ந்த வண்டுபோல, சச்சிதானந்த மென்னுந் தனக்கோர் எல்லையில்லாத (ஆனந்த) சமுத்திரவெள்ளத்தி லழுந்திய இராசசேகரபாண்டியன் மீண்டும் எழுந்து, மனமும் வாக்கும் காயமும் (தன்னை ஆளாக) உடையவன் உடைமைப்பொருள்களாகவும் குற்றமில்லாத அன்பே தனக்கோருருவாகவும் தோத்திரஞ் செய்யத் தொடங்கினான். (உட)

வேறு

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியா கியஅங் கணனே சரணம்
அரியா யெளியா யடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்.

(இ - ள்) (மகத்துக்கும்) மகத்தாகவுள்ளாய்! (அடியேன் உனக்குச்) சரணம். (அணுவுக்கும்) அணுவாகவுள்ளாய்! சரணம். (எல்லாவற்றிலும் எக்காலத்திலும் எவ்விடத்திலும்) சாட்சியாக விளங்கிய அழகிய திருக்கண்களையுடையவனே! சரணம். (பிரமன் முதலிய தேவர்கட்கும் காண்டற்கு) அரியவனே! (அன்பர்களுக்கு) எளியவனே! கான்மாறித் திருநடனஞ் செய்தருளியவனே! சரணம். பரிசுத்தமானவனே! சரணம்.

(வி - ம்) "அண்டங்களெல்லா மணுவாக அணுக்களெல்லா மண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினு மண்டங்களுள்ளும் புறம்புங் கரியாயினும்" என முன்கூறியதுபோலப் "பெரியாய் சிறியாய் கரியாகிய" என்றும், எனைய தேவர் போலன்றிச் சூரிய சோமாக்கினிகளாகிய மூச்சுடர்களைக் கண்களாக வுடைமையின் "அங்கணனே" என்றும், மமதையுற்றவர்க்கு அரியவனும் அன்பர்கட்கெளியவனுமாகலின் "அரியாய் எளியாய்" என்றும், அடியேன் மனஞ்சகியாமை கண்டு எனது வேண்டுகோளுக் கிரங்கிக் கான்மாறி நடித்தருளினை யென்பார் "அடிமாறி நடம்புரிவாய்" என்றும், ஆணவாதி மல சம்பந்திகளாகிய ஏனை தேவர் போலாது நிமலன் அமலன் நிர்க்குணன் என்றற்கெனக்கியமாக விளங்குவோனுதலின் "புனிதா" என்றும் இடையிடையே அடியேன் சரணம் என்றும் கூறினர். (உக)

நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய் மதியா தவர்தம் மதியிற்
பதியாய் பதினெண் கணமும் பரவும்
துதியாய் சரணஞ் சுடரே சரணம்.

(இ - ள்) கங்காநதி விளையாடாநின்ற செவ்விய சடையையுடையவனே! பிரகாசிக்கின்ற வெள்ளிய பிறையை யணிந்தவனே! நியானியாதவர்களது இதயத்தில் தங்காதவனே! பதினெண்கணத்தவர்களும் துதிசெய்யுந் துதியையுடையவனே! சரணம். மூச்சுடர் வடிவாயுள்ளவனே! சரணம்.

(வி - ம்) சுடரே என்பதற்கு ஒளிப்பிழம்பே என்றுவது ஜோதிவிக்ரூபியே என்றுவது பொருள் கொள்ளவும் பொருந்தும். (உச)

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணங் கொடுவெண் மழுவாள்
உடையாய் சரணம் உருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம்.

(இ - ள்) (எல்லாவற்றிற்கும்) பழைமையாயுள்ளவனே! நூதனமாயுள்ளவனே! சரணம். சங்கருண்டலமணிந்த (காதுகளையுடைய)வனே! சரணம். கொடியவெள்ளிய (நிணந்தோய்ந்த) மழுப்படையையும் மானையும் ஏந்தியவனே! சரணம். (நின்னிடத்து மனம்) உருகாதவரிடத்தில் இரங்காதவனே! சரணம். விகிர்தனே! சரணம்.

(வி - ம்) தன் சந்நிதிமுன்னரே யாவும் தோன்றுதலின், "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே" என்றார் போல "பழ்ழையாய்" என்றும், தன் சத்தியால் உதித்த விண்டுமுதலியதேவர்யாரும் விருத்த தசையெய்தவும் தான் அவ்வாறின்றி என்று மொருதன்மையனுய் நிற்றலின் "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்பப் பெற்றியனே" என்றார் போல "புதியாய்" என்றும், இறைவர் உலகமாதாவாகிய பிராட்டி சகிதமாக விளங்கினும் பெருந்துறவியாகச் சங்கருண்டலமணிந்திருத்தலின் "பணிலக்குழையாய்" என்றும், தாருவன முனிவர் ஏவிய யாகாக்கினி மான் முதலியவற்றைத் திருக்கரத்தேற்றமையின் "மழுவாளுடையாய்" என்றும், பலவகை எதுக்களானும் தான் பரம்பொருளென் றுணர்த்தும் வழிபாடு செய்ய ஒருப்படாத "கல்லினும் வல்லெனனு" மன முடையாரிடத்து இரங்காதவனென்பார் "உருகாதவர்பால் விழையாய்" என்றும், தன்னைப் பணிவோரிடத்து விருப்பும் தன்னைப் பணியாரிடத்து வெறுப்புமுடையாராகலின் "விகிர்தா" என்றுங்கூறினர். (உடு)

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளா கநினைக் துபுரந் தான்மால்
தெருளா ததடந் தெரிவித் தெனையாள்
அருளாய் சரணம் மழகா சரணம்.

(இ - ள்) இருளாயுள்ளவனே! வெளியாயுள்ளவனே! சரணம். அடியேனையும் ஒரு பொருளாகத் திருவுள்ளங் கொண்டு இந்திரனும் விண்டுவும் காண்டற்கரிய திருநடனத்தைத் தரிசிப்பித்து என்னை அடிமைகொண்டருளும் அருள்வள்ளலே! சரணம். பேரழகனே! சரணம். (உசு)

அயனத் தினைனப் படுமா டரவச்
சயனத் தவனைத் தருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசேல்
நயனத் தவணு யகனே சரணம்.

(இ - ள்) பிரமதேவனையும் (பாஞ்சசன்னிய மென்னுஞ்) சங்கத்தையேந்தியவரென்று சொல்லப்படும் ஆடாகின்ற சேஷசயனத்தையுடைய விஷ்ணுவையும் தத்தருளும் தத்துவ சொரூபியே! நான்கு வேதங்களாகிய திருவாக்கையுடையவனே! தேவதேவனே! சேற்கெண்டைபோலுங் கண்களையுடைய (மீனாட்சி) அம்மையாருக்குத் தலைவனே! சரணம்.

(வி - ம்) "அயனத்தினைனப்படு மாடரவச் சயனத்தவனைத் தருதத்துவ" என்றதை,

"மைந்த கின்னெயென் வலப்புறத் தளித்தன னறிய
பைந்து ழாய்மது வண்ணனெ யெனவிடப் பாலில்
தந்த வித்தன னீவிர்வெங் கரிமுகன் றழல்வேற்
கந்த னேரெனக் கருணையி னுச்சிமோந் தனைத்தான்"—என்பதனை நிக.

கதவெங் கரியின் னுரியாய் சரணம்
முதலந் தமிலா முதலே சரணென்
றதிர்பைங் கழனூர் புரவண் டலமும்
பதபங் கயமுன் புபணிந் தரசன்.

(இ - ள்) கோபம் பொருந்திய கொடிய யானைத்தோலைப் போர்வையாக யுடையவனே! சரணம். முதலும் இறுதியுமில்லாத முழுமுதற் கடவுளே! சரணமென்று, சத்தியானின்ற பசிய வீரக்கழலும் சிலம்புமாகிய வண்டுகள் ஒலிக்கும் திருவடித் தாமரையின் முன்னே நின்று இராசசேகர பாண்டியன் பணிந்து. (உ அ)

வேறு

என்றுமிப் படியே யிந்தத் திருநடம் யாருங் காண
நின்றருள் செய்ய வேண்டு நிருமல மான வெள்ளி
மன்றவ அடியேன் வேண்டும் வரமிது என்று தாழ்ந்தான்
அன்றுதொட் டின்று மெங்கோன் அந்நட நிலையாய் நின்றான்.

(இ - ள்) பரிசுத்தமான வெள்ளியம்பலத்தையுடைய எம்பெருமானே! எக்காலத்தும் இவ்வண்ணமே இந்தத் திருநடனத்தை எல்லோருங்கண்டு தரிசிக்க நின்று அருள்செய்ய வேண்டும். அடியேன் (தேவரீரை) வேண்டிய வரம் இதுதானென்று நமஸ்கரித்தான். அந்தத் தினமுதல் இதுவரை எமது பெருமான் (அவன் வேண்டுகோளுக்கிரங்கி) அத்திருநடன நிலையனாகி நின்றருளினன். (உ க)

ஆடிருவிருத்தம் - கசஅக

இருபத்தைந்தாவது

பழியஞ்சின படலம்

ஈறிலான் செழிய னன்புக் கெளியவ னாகி மன்னுள்
மாறியா டியகூத் தென்சொல் வரம்பின தாமே கங்கை
ஆறுசேர் சடையான் றேனு ரரும்பழி யஞ்சித் தென்னன்
தேறலா மனத்தைத் தேற்றுங் கிருவீளை யாடல் சொல்வாம்.

(இ - ள்) அழிவில்லாத சுந்தரேசப் பெருமான் இராசசேகர பாண்டிய னுடைய அன்பினுக்கு எளியவராகி வெள்ளியம்பலத்தில் கான்மாறி யாடி

யருளிய திருக்கூத்து என் சொல்லினளவையி லடங்கியதோ? (அடங்கிய தன்று) கங்காநதியையணிந்த சடையையுடைய அவ்விறைவன் ஒரு கொடும் பழியையஞ்சிக் குலோத்துங்க பாண்டியனுடைய தெளியாத மனத்தைத் தெளிவித்த திருவிளையாடலே (யாம் இனிக்) கூறுவாம்.

(வி - ம்) "பழியஞ்சித் தென்னன்தேறலா மனத்தைத் தேற்றும்" என்றது பாண்டியன் ஆன்மாக்களிடத்து என்றும் இரக்கமுடையவனென்பது தோன்றக் கூறியதாம். (க)

இனியநாட் சிறிது செல்ல இராசசே கரன்றன் காதற்
றனியனுங் குலோத்துங் கற்குத் தன்னர சிருக்கை நல்கி
வினையெலாம் வென்று ஞான வெள்ளியம் பலத்து ளாடுங்
கனைகழ னிழலிற் பின்னிக் கலந்துபே ரின்ப முற்றான்.

(இ - ள்) இவ்வாறு சிறுகாலங் கழிய, இராசசேகர பாண்டியன் தனது ஆசைக்குமாரனுகிய குலோத்துங்க பாண்டியனுக்குத் தனது அரசுரிமையைக் கொடுத்து, வினைச்சம்பந்தங்களே யொழித்து, ஞானவடிவாயுள்ள வெள்ளியம் பலத்தில் கடித்தருளும் சத்திக்கின்ற வீரக்கழலணிந்த திருவடிநீழலில் இரண்டறக்கலந்து பேரின்பத்தி லழுந்தினன்.

(வி - ம்) "வினையெலாம் வென்று" என்பதற்கு வினை கன்மத்துளடங்குதலின் இருவினையொப்பும் மலபரிபாகமும் வாய்த்து எனப் பொருள் கூறினுமமையும். "பின்னிக்கலந்து" என்றது உடலுமுயிரும் தம்முளொன்றுபட்டறியும் அறிவும், கண்ணெளியுஞ் ரூரியவொளியும், ஒன்றுபடப்பிரிக்க வொண்ணுமையும் போலக் கலந்தான் என்பதாம். (உ)

குரவன்செங் கோல்கைக் கொண்ட குலோத்துங்க வழுதி செங்
அரவங்கம் பூண்ட கூட லாதிரா யகனே நித்தம் [கண்
பரவுன்பின் வழிபா டானுப் பத்திமை நியமம் பூண்டான்
இரவுஞ்சுங் கதுப்பி னல்லா ரிசையா யிரவ ருள்ளான்.

(இ - ள்) தந்தையாகிய இராசசேகர பாண்டியனுடைய செங்கோலைக் கையிற்கொண்ட குலோத்துங்க பாண்டியன் சிவந்த கண்களையுடைய சர்ப்பத்தைத் தனது திருமேனியிலணிந்த மதுராபுரியி லெழுந்தருளிய சோமசுந்தரப்பொருமானே நித்தமும் அன்புடன் துதிசெய்யும் வழிபாட்டையும் நீங்காத பத்திமைத்திறத்தையுங் கடைப்பூண்டுள்ளவன்; இருளஞ்சுங் கூந்தலையுடைய பதினுயிரமாதர்களே மனைக்கிழத்தியராக வுடையவன். (ரு)

வேறு

அப்பதினு யிரவர்க்கு மொவ்வொருத்திக் கவ்வாறாய்
ஒப்பரிய அறுபதினு யிரங்குமர ருளவருட்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கவிள வேறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பே ரனந்தகுணன்.

(இ - ள்) அந்தப் பதினாயிரம் மாதர்களுள்ளும் ஒவ்வொருத்திக்கும் அவ்வாறு (புதல்வர்) ஆக அறுபத்தினாயிரம் புதல்வருளர். சொல்லுதற்கரிய வலிமையையும் ஆண்தன்மையையுமுடைய இளஞ்சிங்கவேறு போன்றவன். வைப்பு நிதிக்குச் சமானமானவன்; முதற்பிறந்த புதல்வன்; அவன் பேர் அனந்த குணனென்போன்.

(வி - ம்) அவ்வாறு = ஆறு + ஆறு. "ஒன்பதொழித்த வெண்ணென்பதிமிரட்டின் முன்னதின் முன்னல வோட வுயிர்வரின் வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி" என்பது சூத்திரம்.

பதினாயிரவர்க்கும் என்பதிலுள்ள குவ்வுருபு உருபு மயக்கம். (ச)

கலிபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலிபயின்று வருகுமரர் தீறநோக்கி மகிழ்வேந்தன்
அலிபயின்ற கடலாடை நிலக்கிளை யடலணிதோள்
மலிபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள்.

(இ - ள்) நூலாராய்ச்சி செய்து குதிரை நெடிய இரதம் யானை (இவற்றைச் செலுத்தும்) திறமுங் கற்று, கேடகம் வாள் வில் இவற்றின் வரிசையையும் கற்றுவராநின்ற புதல்வர் திறங்களைக் கண்டு மகிழ்ச்சியடையுங் குலோத்துங்கபாண்டியன், அலைகள் பொருந்திய கடலை ஆடையாகவுடுத்த பூமிதேவியை வீரத்தையே ஆபரணமாக அணிந்த தனதுதோளாகிய மலையிற் சஞ்சரித்து வெம்மைதீங்க மகிழச் செய்து வாழுங்காலத்தில். (ஞ)

செய்யேந்து திருப்புத்தூர் நின்றுமொரு செழுமறையோன்
பையேந்து மரவல்குல் மணிவிரிபோடும் பானல்வாய்க்
கையேந்து குழவியொடுங் கடம்புகுந்து மாதுலன்பால்
மையேந்து பொழில்மதுரை நகர்நோக்கி வருகின்றான்.

(இ - ள்) வயல்சூழ்ந்த திருப்புத்தூரிலிருந்து ஒருவேதியன் பாம்பு விரிக்கும் படத்தையொத்த நிதம்பத்தையுடைய தனதுமனைவியோடும் பால்மணங் கமழும் நல்லவாயையுடைய கையிலேந்துங் குழந்தையோடும் காட்டுவழியே சென்று தனது மாமன் வீட்டிற்கு, மேகந்தவழுஞ் சோலைசூழ்ந்த மதுராபுரியை நோக்கி வருகின்றான். (சு)

வருவானுண் ணீர்வேட்டு வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவுமொரு பேராவி னீழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி யுடனிருத்தி நீர்தேடித்
தருவான்போய் மீண்டுமனை யிருக்குமிடந் தலைப்படுமுன்.

(இ - ள்) (காட்டுவழியே நடந்து) வரும் வேதியன், உண்ணும் நீரை விரும்பி வருகின்ற மனைவியை அவ்வழியில் நிற்கும் பெரிய விண்ணுலகத்தை யளாவிய ஒரு பெரிய ஆலமரத்தினீழே, தன்கையினின்றும் நீங்காத குழந்தையோடிருக்கச் செய்து, நீரைத் தேடிக்கொண்டு வரும்படி போய் (நீர்கொண்டு) திரும்பித் தன்மனைவியிருக்கு மிடத்தைச் சேருதற்கு முன்னே. (எ)

இலைத்தலைய பழமரத்தின் மிசைமுன்னு ளெய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிட்டத்தகால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை வினையுலப்ப வுங்கிருந்த
வலைத்தலைய மானுக்கி வயிறுருவத் தைத்தன்றே.

(இ - ள்) இலைகள் பொருந்திய தலையையுடைய ஆலமரத்தின்மேலே (ஒருவன்) முன்னளிலெய்த கொலைத்தலையினையுடைய ஒருகூரிய அம்பு சிக்கிக் கிடந்தது. காற்று அசைத்து அலைக்க அந்த அம்பு கீழேவிழுந்தது. முற் பிறப்பிற்றேடிய வினைமுடிய, வலையிலகப்பட்ட மான்போன்ற (மருண்டா) பார் வையையுடைய அவ்விடத்திருந்த அப்பார்ப்பனத்தியுடைய வயிறுறவும்படி தைத்தது. (அ)

அவ்வாறவ் வணங்கணையா ஞெயிழிழுந்தா ளவ்வேலைச்
செவ்வரளி யேறிட்ட கிலையுடையா னொருவேடன்
வெவ்வாவி யேறனையான் வெயிற்கொதுங்கு நிழல்தேடி
அவ்வால நிழலெய்தி யயனின்மு னீளப்பாற.

(இ - ள்) அவ்வண்ணமாக அந்தத் தெய்வப்பெண்ணையொத்த பார்ப்பனி தன் உயிர்நீங்கினாள். அப்பொழுது கொடிய ஆண்யாளிபோன்றவனுகிய ஒரு வேடன் (உதிரம்தோய்ந்த) செங்கிறந்தங்கிய அம்பினைப்பூட்டிய வில்லையேந்திய வனுகி, இளைப்பாறும்படி வெயிலிற்கொதுங்கும் நிழல்தேடி, அந்த ஆலமர நீழலைச் சேர்ந்து அம்மரத்தின் பக்கலில் நின்றனன். (ஈ)

தண்ணீர்க்குப் போயாவி தலைப்பட்ட மறையவனும்
உண்ணீர்கைக் கொண்டுமீள்வ டொருங்கிருந்த சூழலியாடும்
புண்ணீர்வெள் ளத்துக்கா முழ்ந்துயிரைப் புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றன்.

(இ - ள்) தண்ணீர்கொண்டு வருவதற்குச் சென்று நீரோடையையடைந்த வேதியனும் உண்ணும் நீரைக் கையிலெடுத்துத் திரும்பி, ஒருசோதத் தன்னுட னிருந்து பின்னையுடன் உதிரவெள்ளக்காலிலமுழ்ந்தி உயிரிழந்த பண்ணைசை போலும் இனிமை பொருந்திய மழலைச்சொல்லையுடைய தனது மனைவியைப் பார்த்தான்.

(வி - ம்) ஆவி - குளம். (கo)

அயில்போலுங் கணையேறுண் டவ்வழிபுண் ணீர்சோர
மயில்போல வுயிர்போகிக் கிடக்கின்றுள் மருங்கணைந்தென்
உயிர்போல்வா யுனக்கிதுவென் னுற்றதென மத்தெறிதண்
தயிர்போலக் கலங்கியறி வழிந்துமனஞ் சாம்பினன்.

(இ - ள்) வேல்போலுங் கூர்மைவாய்ந்த அம்புதைத்து அவ்விடத்தில் உதிரநீர் சோர மயிலைப்போல உயிர்போய்க்கிடக்கின்ற தன் மனைவியருகே சென்று, என் உயிர்போன்றவளே! உனக்கு இவ்வாறு வந்தடைந்தது என்ன

காரணம்? என்று, மத்தாலுடைந்த தண்ணிய தயிர்போல (மனமுடைந்து) கலங்கி, அறிவு நீங்கி மனமடிந்தான்.

(வி - ம்) அழிவதற்கு மனங்கலங்கலும், மனமடிதற்கு அறிவழிதலுங் காரணமாம். இச்செய்யுள் காரணமாலையணி. (கச)

இனையதோர் பெண்பழியை யாமேற்ற ரெனத்தேர்வான்
அனையதோர் பழுமரத்தின் புறத்தொருசா ரழல்காலும்
முனையதோர் கணையோடு முடக்கியகைச் சிலையேந்தி
வினையதோர்ந் தெதிர்நின்ற விறல்வேடன் றனைக்கண்டான்.

(இ - ள்) இவ்வகைய ஒப்பற்ற பெண்கொலையை யேற்றாரியாவர்? என்று ஆராய்வானாகி, அந்த ஆலமரத்தின் அருகே ஒருபக்கலில், தீயைச்சொரியும் முனையை யுடைய ஒரு பாணத்துடன் கையிலே வளைந்த வில்லைத்தாங்கி, (மிருகங்களைக்) கொல்லுதலே யாராய்ந்து, தனக்கு நேரில்நின்ற வெற்றியையுடைய வேடனைப்பார்த்தான்.

(வி - ம்) வினையது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (கஉ)

வேறு

காப்பணி தாளன் வாளொடு வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோ லேறிடு வில்லன் கொலைசெய்வான்
ஏற்பன கைக்கொண் டிவ்விடை நின்ற னிவனேயென்
பார்ப்பனி யைக்கொன் றின்னுயி ருண்டு பழிபூண்டான்.

(இ - ள்) செருப்பணிந்த காலையுடையவனும், வாளுடன் கட்டிய கச்சினையுடையவனும், கூர்மையுடைய அம்பையேறிட்ட வில்லைத் தாங்கியவனுமாகி, கொலை செய்தற்கேற்ற ஆயுதங்களைக் கையிற்பற்றி இவ்விடத்தில் நிற்கின்றான். இவ்வேடுவனே என்மனைவியைக் கொன்று (அவளுடைய) இனிய வுயிரைக் குடித்துப் பழியைப் பூண்டான்.

(வி - ம்) "இவனே யென் பார்ப்பனியைக் கொன்றான்" என்பதில் ஏகாரம் தோற்றப் பொருளது. (கூ)

என்னம தித்தே யேடா வேடர வென்னேனை
தன்னவ தைத்தாய் நீயே யென்னத் தழல்கால்கண்
மின்னலெ யிற்றுக் கூற்றென வல்வாய் விட்டார்த்து
மன்னவ னுணைப் பாச மெறிந்து வலித்தீர்குபு.

(இ - ள்) என்று நினைத்து, ஏடா வேடா! என் மனைவியைக் கொன்றாய் (அவளைத்) கொன்றவன் நீயே என்று, தீப்பொறிசிந்தும் கண்களையும் மின்னல்போலும் பற்களையுமுடைய இயமன் போன்று வலியவாய் பிளந்து கோவித்து, அரசனது ஆக்கினையாகிய கயிற்றைவீசி இழுத்துச் செல்வான்.

மாண்டவ ளைத்தன் வெங்கிடை யிட்டான் மகவொக்கற்
றூண்டவ ளைத்தன் றூய்முலை வேட்டழு தன்சேயைக்

காண்டொறும் விம்மாக் கண்புனல் சோரக் கடிதேகா
ஆண்டகை மாறன் கூட லணைந்தா னளியன்றான்.

(இ - ள்) இறந்த (தன்) மனையாட்டியைத் தனது முதுகின்பேரில் வைத்துக்கொண்டு, தனது குழந்தையைப் பக்கத்திற்பொருந்த அணைத்து, அன்னையின் மூலப்பாலே யவாவி அழுகின்ற குழந்தையைப் பார்க்குந்தோறுங் கண்களினின்று நீர்சொரிய அழுது விரைந்துசென்று, அந்தவேதியுடன் ஆண்தன்மையையுடைய குலசேகர பாண்டியனுடைய மதுரைபதியையடைந்தான். (வி - ம்) இட்டான் அணைந்தான் என்பன முற்றெச்சங்கள். (கடு)

மட்டவிழ் தாரான் வாயின் மருங்கே வந்தெய்தா
உட்டுக வில்லா வேடனை முன்பிட் டுயிரன்னாள்
சட்டக நேரே விட்டெதிர் மாறன் தமர்கேட்பக்
கட்டழல் சிந்தா முறையிடு கின்றான் கையோச்சா.

(இ - ள்) வாசம்பொருந்த மலர்மாலையணிந்த குலசேகரபாண்டியனது அரண்மனைவாயிலின் பக்கத்து வந்துசேர்ந்து, மனத்திற் களங்கமில்லாத வேடனை முன்னேவிட்டுத் தன் உயிர்போன்ற மனையாட்டியின் சரீரத்தை நேரேகிடத்தி, எதிரே பாண்டியன் உறவினராகியமந்திரிமுதலியோர் கேட்கும்படி கையையோச்சிக் கண்களினின்றும் நீர் சிந்தி முறையிடுகின்றான். (கசு)

கோமுறை கோடாக் கொற்றவ னேநே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ
மாமதி வானெனன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ.

(இ - ள்) நீதி தவறுத பாண்டியருள் ஆண்சிங்கம் போல்வாய்! (உன் அரசுரிமையில் இது நிகழ்த்து) முறைதானோ? தாமரைமலரின் வாழ்க்கையுடைய நீருமகள் வசிக்குந் தண்ணிய வீளக்கமமைந்த மார்பையுடையாய்! (இது) முறை தானோ? பெருமைபொருந்திய சந்திரவமிசத்திற்றோன்றியமைந்தா! (இது) முறை தானோ? தீமைசெய்தவனேப்போலச் செவ்வை கையைக் குறைத்தாய்! (இது) முறை தானோ?

"தீமை செய்தாய்போற் செங்கை குறைத்தா" யென்றது:—

ஒருபாண்டியன் தன் நகரத்தைக் காவலாலலர் சோராது காக்கின்றனரோ என்பதை அறிதற்பொருட்டு அவரறியாமல் உருமாறி நகர்சோதித்துச் சென்று வருகையில், ஒருநாள் பிராமணவீதியில் வரும்போது, ஒரு பிராமணன் தன் மனைவியைப் பார்த்து "பெண்ணே நான் காசிக்குப்போய் வருமளவும் உன்னைப் பாதுகாத்துக்கொள்" என, அவன் மனைவி "நான எப்படிக்காக்கக்கூடும்?" என, அவன் "பாண்டியன் செங்கோல் உன்கற்பைக் காக்கும்" என்றுகூறி, மறுநாள் காசிக்குச்சென்றனன். அதனைக் கேட்டிருந்த பாண்டியன் அன்றுமுதல் நகர் சோதனைவந்து இரவு முழுதும் அவ்வீட்டைக்காத்துப் பொழுதுபுல அரசிருக்கைக்குத் திரும்புவதாயிருந்தான். ஒருநாள் காசிக்குச்சென்ற வேதியன்

மீண்டு மனையை யடைந்து அங்கு நடந்த செய்திகளை மனைவியோடு சொல்லிக் கொண்டிருக்க, அப்பொழுது அவ்வழிவந்த அரசன் இவ்வீட்டிற் பேச்சுக்குரல் புதிதாயிருக்கின்றதே என்ன விபரீதமோ? என்று கவலை கொண்டு உண்மை யறிய அவ்வீட்டுக் கதவைத் தட்டினன். அவ்வேதியன் வீட்டுக் குரியவனுகையால் "யார் அவன்" என்று வினவினன். அதனால் அரசன் இவன் வீட்டிற் குரியவன்; சோரபுருடனன்று எனத்தெளிந்து, அப்பிராமணன் சந்தேகியாத வகை அவ்வீதியிலுள்ள வீட்டின் கதவுகளெல்லாந் தட்டிக் கொண்டு போய்விட்டான். அன்று பொழுதுவிடிந்தபின் பிராமணர் யாவரும் ஒருங்கு கூடிப் பாண்டியனிடஞ் சென்று "எங்கள் வீட்டுக் கதவைத் தட்டிஞன் கையைக் குறைக்கவேண்டும்" என முறையிட, அரசன் "அக்கை யிது தான்" என்று உடைவாளாற் றன்கையைக் குறைத்தன னென்பது கர்ணபரம் பரையில் வழங்கிவந்த சரிதம். குலசேகரபாண்டியனும் அவன் வழிவந்தவரு கலின் அவ்வாறு கூறப்பட்டனன். (கஎ)

பிறங்குங் கோலான் மாறடு கொற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதுந் தன்னரு ளாணை யுலகெங்கும்
அறங்குன் றுவாக் காப்பதை யென்ப வஃதியாதிம்
மறங்குன் றுதான் செய்கொலை காவா வழியென்றான்.

(இ - ள்) பிரகாசிக்கின்ற செங்கோலினை யுடையவனுகிச் சத்துருக்களைக் கொல்லும் வெற்றி பொருந்திய பாண்டியன் தூங்கும்போதும் அவனது அருளாணையானது உலகமுழுவதுந் தருமமெறிகுறையாமற் காப்பதென்று (அறிவுடையோர்) சொல்லுவர். அவ்வருளாணை மறத்தொழில் குன்றுத வேடன் செய்த கொலைத்தொழிலைக் காவாதவகை யாதுகாரணமோ? என்று முறையிட்டான். (கக)

வர்யினு ளார்த மன்னவன் முன்போய் மன்னுங்
கோயிலின் மாடோர் வேதியன் மாதைக் கொலைசெய்தான்
ஆயின னென்றோர் வேடனை முன்விட் டவிந்தானைத்
தாயினன் வந்திங் கிட்டனர் கின்றன் றமியென்றார்.

(இ - ள்) வாயில் காப்பாளர் தமது அரசனுக்கு முன்னே சென்று, இறைவனே! நமது கோயினருகில் ஒரு பிராமணன், தன்மனையாட்டியைக் கொலை செய்தானென்று ஒரு வேடனை முன்னே விட்டு, இறந்த தன் மனைவியை எடுத்து வந்து இங்கே போட்டு, ஒன்றியாய் வருந்துகின்றனென்று சொன்னர். (கஉ)

இறைமக னஞ்சா என்குடை நன்று லென்காவல்
அறமலி செங்கோ லஞ்சுப யந்தீர்த் தரசாளும்
முறைமையு நன்றன் மண்கலி மூழ்கா முயன்றோங்கும்
பொறைமையு நன்று லென்று புலந்து புறம்போந்தான்.

(இ - ள்) குலசேகரபாண்டியன் (அதுகேட்டுப்) பயந்து எனது வெண் கொற்றைக்குடை நன்றாயிருந்தது - எனது காவலாகிய தருமமிக்க செங்கோல் (குடிகளுக்கு வரும்) ஐந்து பயங்களையுமொழித்து இராசரிகள் செய்யும் முறைமையும் நன்றாயிருந்தது - நிலவுலகம் கலியில் மூழ்காமல் முயற்சியோடு தாங்கும் பொறுமையும் நன்றாயிருந்ததென்று, மனம் புளர்ந்து (அரசிருக்கையினின்றும்) வெளியே வந்தான்.

(வி - ம்) திருத்தொண்டர் புராணம்

"மாநிலங்கா வலனுவான் மண்ணுயிர் புரக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தண்ணுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்த்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தரசாள்வா னல்லனே" என்றபடி, குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், விலங்கு முதலிய வுயிர்களாலும் வருங்கெடுதிகள் ஐந்தினையுந் தீர்க்கவேண்டுவது மன்னர் கடமையாதலின் "அஞ்சுபயந்தீர்த் தரசாளு முறைமை" என்றார். அல்லது அஞ்சத்தக்க பயங்களைத்தீர்த்து எனப் பொருள் கூறினும் பொருந்தும். (உ0)

வேதிய னிற்சூழ் தன்மை தெரிந்தான் மெலிவுற்றான்
சாதியின் மிக்காய் வந்ததுனக்கென் றளர்கின்றாய்
ஓதுதி யென்னக் காவல னேப்பார்த் தூசைசான்ற
நீதியு ளாய்கே ளென்றுரை செய்வா னிகழ்செய்தி.

(இ - ள்) (மனைவியையிழந்த) பிராமணன் (வருந்தி) நிற்கின்ற தன்மை தெரிந்து மனமெலிந்து, சாதியில் மேம்பட்டவனே! உனக்கு வந்தது யாது? (நீ ஏன்) வருந்துகின்றாய். அதனைக் கூறாய் என்று வினவ, (வேதியன்) மன்னனைப் பார்த்து, புகழ் மிகுந்த நீதியுடையவனே! கேட்பாயென்று கடந்த செய்தியைச் சொல்லத்தொடங்கினான்.

(வி - ம்) தெரிந்தான், மெலிவுற்றான் என்னும் வினைமுற்றுகள் வினையெச்சப் பொருளன. (உக)

இன்றிவ ளைக்கொண் டோர்வட நீழ லிடைவிட்டுச்
சென்றுத ணீர்கொண் டியான்வரு முன்னிச் சிலைவேடன்
கொன்றய னின்றா னென்றுலை யூட்டுங் கொலைவேல்போல்
வன்றிறன் மாறன் செவிநுழை வித்தான் மறையோனுல்.

(இ - ள்) இன்று இறந்த இவளை உடன்கொண்டு ஓர் ஆலமரத்தின் நீழலிலிருக்கச்செய்து (இவளது தாகவேட்கையைத் தீர்க்கச்) சென்று, யான் தண்ணீர் (முகந்து) கொண்டு வருவதன் முன்னர், வில்லைத் தாங்கிய இந்த வேடன் (அவளைக்) கொன்று (அம்மரத்தின்) பக்கத்திலே நின்றானென்று, உலக்களத்திற் காச்சிய கொலைத்தொழிலையுடைய வேலை (செவியில் நுழைத்தால்)போல வேதியன் வன்மையுடைய பாண்டியன் காதிற் செலுத்தினான்.

(வி - ம்) நுழைவித்தானென்றது கொடுமையை யுணர்த்திற்று. (உஉ)

அந்தணன் மாற்றங் கன்னெயு முட்கொண் டறநோக்குஞ்
சந்தன வெற்பன் மறவனை நோக்கத் தாழ்ந்தன்னன்
எந்தை பிரானே நாயடி யேனின் றெய்ப்பாற
வந்து புகுந்தே னந்தம தத்தின் மருங்கோர்சார்.

(இ - ள்) பிராமணன் சொல்லிய சொல்லையுஞ் செவியிற்கொண்டு, தரும வழியைக்காணும் பொறியமலையையுடைய குலோத்துங்கபாண்டியன் வேடு வனைப்பார்க்க, அவ்வேடுவன் பணிந்து, எனது தந்தையாகிய பெருமானே! நாயினுங் கடைப்பட்ட அடியேன் இப்பொழுது இளைப்பாறும்படி அந்த ஆல மரத்தின் ஒரு பக்கத்தில் வந்து நின்றேன். (உங)

ஐயே நானுங் கொன்றவ னல்லேன் கொன்றுசைக்
கையேன் வேறுங் கண்டில னென்று னிவளாகத்
தெய்யே றுண்ட வாறெவ னென்று செறிர்நின்றார்
மெய்யே யையா யானறி யேனிவ் விளைவென்றான்.

(இ - ள்) ஐயனே! அடியேனுங் கொலைசெய்தவ னல்லேன். கொலைசெய் தாரையும் கீழ்மகனுகிய யான் வேறுங் காணேனென்று சொன்னன். (அப் பொழுது) எதிரே நின்றவர்கள் (ஆயின்) இவளது தேகத்திலே அம்பு தைத்தரு விய காரணமென்ன ? என்று கேட்டார்கள். ஐயா ! நிசமாகவே இச்செய்தியை யானறியேனென்று சொன்னன்.

(வி - ம்) எய்-முதனிலைத்தொழிற்பெயர். ஈண்டுத் தொழிலாகு பெயராய் அம்பினை யுணர்த்தியது. (உச)

இக்கொலை செய்தான் யானல னென்னு துளனென்னத்
தக்கவ னேயோ தறுகண் மறவ னுரைமெய்யோ
சிக்கெடவா றுத்தா லல்லதை யுண்மை செப்பானென்
றெறக்க வுரைத்தார் மந்திர ருள்ளார் பிறரெல்லாம்.

(இ - ள்) ஆண்டுள்ள மந்திரிகளும் மற்றெல்லோரும் (அரசனை நோக்கி) இந்தக் கொலைத் தொழிலைச் செய்தவன் நான் அல்லனென்று பொய் சொல் லாமல் மெய் சொல்லத்தக்க குலத்திற் பிறந்தவனே ? கொலைத்தொழிலை (இயற்கையாக) உடைய வேடன் சொல்லும் வார்த்தை மெய்ம்மையோ? கடினு மாகத் தண்டித்தாலல்லது நிசத்தைச் சொல்லானென்று ஒரே வகையாகச் சொன்னார்கள். (உஞ)

மன்னன் றுணு மற்றது செய்மின் னெனமள்ளர்
பின்னுந் தண்டஞ் செய்தனர் கேட்கப் பிழையில்லான்
முன்னஞ் சொன்ன சொற்பெய ராணுய் மொழியாநின்
றின்னந் தீரத் தேருமி னென்று னென்செய்வான்.

(இ - ள்) (மந்திரி முதலானுர் அவ்வாறு சொல்லக் கேட்ட) பாண்டிய னும் (ஆயின்) அப்படிச் செய்யுங்கள் என்று கட்டளையிட, தண்டலாளரும்

பின்பு தண்டித்துக் கேட்க, பிழைபாடில்லாத அவ்வேடுவன் முன் சொல்லிய சொல்லினின்றும் பிறழாதவனாய் நான் கொன்றேனல்லேனென்று சொன்னான். (பாண்டியன்) இன்னமும் முற்றும் பார்த்தறியுங்கள் என்று சொன்னான். (வேறு யாது செய்வான் ?) (உசு)

ஆற்றவொ றுக்குந் தண்டமு மஞ்சா னறைகின்ற
கீற்றமு மொஞ்றே கொன்ற குறிப்பு முகந்தோற்றான்
மாற்றவ ரேயோ மாவோ புள்ளோ வழிவந்த
கோற்றொடி யைக்கொன் றென்பெற வல்லான் கொலைசெய்வான்.

(இ - ன்) மிகவும் தண்டிக்கும் தண்டனையையுஞ் சிறிதுமஞ்சான். இவன் சொல்கின்ற வார்த்தையும் ஒன்றே. கொலைசெய்த குறிப்பும் முகத்திற் காட்டான். (ஆதலால் அவளைக் கொன்றுர் அவ்வேதியனுடைய) பகைவரோ ? (அல்லது) மிருகமோ ? பறவையோ ? கொலைசெய்யும் வேடன் வழியேவந்த இப் (பிராமணப்) பெண்ணைக் கொன்று என்ன பலனை யடைய வல்லவன் ?

(வி - ம்) கோற்றொடி - அன்மொழித்தொகை. கோல்போலத் திரண்ட வளையலணிந்த கையையுடையாள் என்பது பொருள். (உஎ)

கைதவ ணுமிக் கானவ னேயோ பிறரேயோ
செய்தவர் யாரே யிக்கொலை வேட்டஞ் செய்தோர்மா
எய்த விலக்கிற் றப்பிய கோல்தா னேறுண்டிம்
மைதவழ் கண்ணுள் மாய்ந்தன ளேபோ அறியேனால்.

(இ - ன்) இந்தப் பெண்கொலை செய்தோர் வஞ்சகனுகிய இவ்வேடுவனோ? பிறரோ? எவரோ ? வேட்டையாடினோர் மிருகத்தைக் குறிவைத்தெய்த இலக்கில் தப்பிய அம்பு தைத்திருந்தலால் இந்த மைதீட்டிய கண்களையுடைய பார்ப்பனி மாய்ந்தாளோ ? (யான்) ஒன்றுமறியேன். (உஅ)

என்ன முன்னிக் தென்னவ னின்ன மிதுமுன்னூல்
தன்ன லாயத் தக்கதை யென்றுன் றகவிற்றன்
அன்ன தந்நூ லாய்ந்திது நூலா லமையாதான்
மன்ன தெய்வத் தாலே தேறும் வழியென்றூர்.

(இ - ன்) என்று நினைத்துக் குலோத்துங்கபாண்டியன் இன்னும் இதனை முதனூலால் ஆராய்ந்தணரத்தக்கதென்று சொன்னன். தன்னைப்போன்ற தருநியையுடையோர், அந்த முதனூலை யாராய்ந்து இதனை முதனூலால் ஆராய்ந்தறிதல் முடியாது. அரசனே ! கடவுளாலேயே ஆராய்ந்தறியும்வழி இதுவெனச் சொன்னர்கள்.

(வி - ம்) தக்கதை என்பதில் ஐகாரம் சாரியை. சோதிடநூலை முன்னூலென்றூர். (உக)

வேந்தர்கள் சிங்கம் வேதிய ரேப்பார்த் திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலையொ ழிப்பே னஞ்சேனின்
வாய்ந்தழை மீடக் கடனிறு விப்போ தென்றேறவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற வோனைச் சிறைசெய்தான்.

(இ - ள்) மன்னவருள் ஆண்சிங்கம்போன்ற குலோத்துங்க பாண்டியன், வேதியனைப் பார்த்து இத்தச்செய்தியைத் தீர்யோசித்து உனது மனக் கவலையை மாய்ப்பேன் பயப்படாதே. இப்போது உன் மனையாட்டிக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களை நடத்தி (ஈண்டு) வருக என்று ஏவி, வேங்கைமரத் தின் தேன் சொரியும் பூங்கொத்தாலாகிய மாலையணிந்த வேடுவனைச் சிறையி லடைப்பித்தான். (கூ0)

மின்னனை யாடன் செய்கடன் முற்று மீண்டோனைத்
தன்னமர் கோயிற் கடைவயின் வைத்துத் தானேகிக்
கொன்னவில் வேலான் றங்கள் குடிக்கோர் குலதெய்வம்
என்ன விருந்தா ரடிகள் பணிந்தா னிதுகூறும்.

(இ - ள்) மின்னல் போலும் விளக்கமுடைய தனது மனைவிக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்து முடித்துத் திரும்பிய பிராமணனை, தன் விருப்பமுடைய மாளிகையின் கடைவாயிலில் வைத்து, கொலைத்தொழில் செய்யும் வேலைத்தாங்கிய குலோத்துங்க பாண்டியன், தான் (தனித்துச்) சென்று, தங்கள் குடிக்கு ஒரு குலதெய்வமாகவிருந்த சுந்தரேசப்பெருமா னுடைய திருவடிகளை நமஸ்கரித்து இது சொல்கின்றான்.

(வி - ம்) தங்கள் குடிக்கோர் குலதெய்வமென்ன இருந்தாரென்றதை முன்னும் பின்னும் பலவிடங்களிலும் விளங்கும் திருவிளையாடல்களிற் காண்க.

வேறு

மன்றடு மணியேயிம் மறவன்றன் பார்ப்பனியைக்
கொன்றலை பிறர்பிறிதாற் கொன்றதோ வித்துவறநூல்
ஒன்றுமு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளால்
என்றுழ்வு கெடத்தேற்ற மென்றிரந்தா னவ்வேலை.

(இ - ள்) வெள்ளியம்பலத்தில் நிருத்தம் புரியும் மாணிக்கமே! இந்த வேடுவனே அப்பிராமண ஸ்திரீயைக் கொலைசெய்தானோ? (இவனன்றி) பிறர் பிறகாரணத்தாற் கொலைசெய்ததோ? இந்தச் செய்தி மிகவும் சோதிடநூலுள் ஒன்றாலாகிலும் அளந்தறிதற் கரியதாயிருந்தது. உனது திருவருளாலே எனது குறைவுதீரத் தெளிவிப்பாயென்று முறையிரந்தான்; அக்காலையில்.(கூ உ)

திருநகரின் புறம்பொருசார் குலவணிகத் தெருவின்கண்
ஒருமனையின் மணமுளதங் கந்தணனை டொருங்குசீ
வருதியுன துளந்தேற மாற்றமெலாந் தேற்றுதுமென்
றிருவிசும்பி னகடுகிழித் தெழுந்ததா லொருவாக்கு.

(இ - ள்) மதுரைத் திருநகரத்தின் புறத்திலே ஒருபக்கத்தில் வணிகர் குலத் தெருவில் ஒரு வீட்டில் மணவினை நிகழ்கின்றது. அவ்விடத்திற்கு (அச் தப்) பிராமணனுடன் நீ ஒருசேர வருவாய். உன்மனம் தெளியாத செய்தியை யெல்லாம் தெளிவிப்போமென்று பெரிய ஆகாயத்தின் வயிற்றைக்கிழித்து ஒரு (அசரீரித்) திருவாக்கு உண்டாயது. (கூகூ)

திருவாக்குச் செவிமடுத்துச் செழியன்றன் புறங்கடையிற்
பெருவாக்கு மறையவனே டொருங்கெய்திப் பெரும்பகல்போய்க்
கருவாக்கு மருண்மாலைக் கங்குல்வாய்த் தன்னையும்வேற்
றுருவாக்கிக் கடிமனைபோ யொருசிறைபுக் கினிதிருந்தான்.

(இ - ள்) அந்த அசரீரித் திருவாக்கைப் பாண்டியன் தன் செவிநிரம்பக் கேட்டு, தனது கடைவாயிலிலிருக்கும், பெருமைமிக்க வாக்காகிய வேதத்தை யுணர்ந்த பிராமணனுடன் ஒருசேரவிருந்து பெரிய பகற்பொழுது கழிந்து, கருமையைப் பெருக்கும் மயக்கமுடைய மாலைக்காலத்துடன் வந்த இராப் பொழுதில், தன்னையும் (பிறர் அறியாவண்ணம்) வேற்றுருவடிவஞ்செய்து (வணிகர் வீதியிலுள்ள) கலியாணவீட்டிற் சென்று ஒருபக்கத்திற் புகுந்து (மறைந்து) இடையூறின்றி யிருந்தான். (கூச)

அன்றிறைவ னருளாலங் கவ்வர்கேட்க அம்மனையின்
மன்றல்மகன் றனக்களந்த நாளுலப்ப மறலியிருட்
குன்றமிரண் டெனவிடுத்த கொடும்பாசக் கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரி லொருவனிது வினவுமால்.

(இ - ள்) அப்பொழுது சோடசுந்தரப்பெருமானுடைய திருவருளால் அவ் விடத்திற் பாண்டியனும் வேதியனுங் கேட்க, அந்தக் கலியாணவீட்டில் மண மகனுக்கு அளவுபடுத்திய வாழ்நாள் முடிய, இயமன் கரிய இரண்டு மலைகளே (ஏவியது) போல ஏவிய கொடிய பாசத்தையேந்திய கையையுடையவரும் வாயை மென்று வருங்கோபத்தை யுடையவருமாகிய காலபடர்களுள் ஒருவன் இது வினவுகின்றான்.

(வி - ம்) 'அளந்த நாளுலப்ப' என்றது வினைப்பயன் தெய்வத்தவழி யென்றும், 'வாய் மென்றுவருஞ் சினத்தவர்' என்றது மிக்க கோபமுடையா ரென்றுங் கொள்க. (கூஙி)

இன்றேயிங் கிவனுயிரைத் தருதிரெனு மிரும்பகட்டுக்
குன்றேறுங் கோனுரையாற் கொள்வதெவன் பிணியுடம்பின்
ஒன்றேனு மிலனெனுகா ரணமின்றி யுயிர்கொள்வ
தன்றேயென் செய்துமென மற்றவனீ தறைகிற்பான்.

(இ - ள்) இப்பொழுதே இவ்விடத்தில் இம்மணகாயகனுடைய உயிரைக் கொண்டு வருவீர் என்றேவிய பெரிய எருமைக்கடாவாகிய மலையின் மீதிவர்க்து வரும் இயமன் கட்டளையால் கொள்வது எவ்விதம் ? (இவனே) தேகத்தில் சிறிதும் நோயில்லான். ஒரு நிமித்தமுமில்லாமல் உயிரைக் கவர்வதல்லவே ?

(இதற்கு) என்ன செய்வோமென்று கூற, மற்றொரு தூதன் இதனைக் கூறுகின்றான்.

(வி - ம்) இங்கு மதுரைக்கு ஒரு சோசத்திற்கப்பால் என்றும் பொருள்.

ஆற்றலே யுண்டகணை யருகொதுங்கும் பார்ப்பனியைக்
காற்றுல்வீழ்த் தெவ்வாறு கவர்க்தேமப் படியிந்தச்
சாற்றரு வாசத்திற் றும்பறுத்துப் புறநின்ற
ஈற்றுவை வெருளவிடித் திவணுவி கவர்கின்றான்.

(இ - ள்) வழியிலிருந்த ஆலமரத்தின் இலையிற் சிக்குண்டிருந்த அம்பை, அம்மரத்தருகே கிழலுக்கொதுங்கிய பார்ப்பனியை (காம்கொண்ட) காற்றுவடிவால் (அறைத்து) விழச்செய்து எவ்வண்ணம் உயிர்கவர்ந்தோம்? அதுபோலவே புறத்திற் (கட்டுண்டு) கின்ற ஈற்றுப்பசுவை இந்தக்கலியாண ஆரவாரத்திலுலே (கட்டியிருக்கும்) தாம்பையறுத்து வெருண்டோடத் தூத்தி, இவனுடைய உயிரைக் கொள்வோமென்று கூறினன்.

(வி - ம்) 'காற்றுல் வீழ்த்து' என்பதற்குக் காற்றினுல் தள்ளியெனப் பொருள் கூறுவாருமுளர். ஆனுல் காற்று, காலபடர் கட்டளைப்படி ஈடத்தலின் மையின் அது பொருந்தாதெனக. (கூஎ)

அந்தமொழி கேட்டசர னருமறையோய் கேட்டனையோ
இந்தமொழி யெனப்பனவ னிவனிவ்வா றிறந்தாலென்
பைந்தொடியா ளிறந்ததுமப் படியேயென் மனக்கவலை
கிந்தவிது காண்பேனென் றிருந்கிருந்தான் றென்னனுடும்.

(இ - ள்) (இயமதூதர்கள் தம்முட்பேசிய) அந்தவார்த்தையைப் பாண்டியன் கேட்டு, அரிய வேதங்களையுணர்ந்த அந்தணனே! இந்த வார்த்தைகளைக் கேட்டாயோ? என்று வினவ, அந்தணன் இந்த மணகாயகன் இவ்வண்ணம் மடிந்தால் என்மனைவி மடிந்ததுவும் அவ்வகையேயாகும். என் மனைதக்கமழிய இதனையுங் காண்பேனென்று கூறி (அவ்விடத்தில்) பாண்டியனுடும் ஒருசோ இருந்தான். (கூஅ)

ஒட்டியபல் கினைதுவன்றி யொல்லொலிமங் கலக்தொடங்கக்
கொட்டியபல் லியமுழங்கக் குழுமியவோ சையின்வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றுவொன் றதிர்த்தோடி
முட்டியதால் மணமகனை முடிந்ததரா லவனுவி.

(இ - ள்) விடாது வந்த பல சுற்றத்தாரும் நெருங்கி, ஒல்லென்னு மொலியுடன் மங்கலச் செயல்களை (ஒருபால்) தொடங்கவும், கொட்டிய பலவாச்சியங்கன் (ஒருபால்) முழங்கவும், (இவ்வாறு) ஒருசேரத் திரண்ட ஓசையால் பயந்து (தன்னைப்) பிணித்த கயிறு அற, இளமையையுடைய கன்றையுடைய பசுவொன்று அதிர்த்து ஓடி மணகாயகனை முட்டியது. (அதனுல்) அவன் உயிர் ஒழிந்தது. (கூக)

மணமகனே பிணமகனுய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறர்திறுமிக் காயத்தின் வரும்பயனே
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலே.

(இ - ள்) கலியாணப்பிள்ளையே பிணமாய், கலியாண வாத்தியங்களே சாக் காட்டுப் பறைகளாய், ஆபரணங்களே யணிந்த சுமங்கலிகள் மங்கலப்பாட்டொ ழிந்து அழுகை யோசையாய்முடிய, ஒரு க்ஷணப்பொழுதில் தோன்றியழியும் இத்தச் சரீரத்தால் வரும் பிரயோசனத்தை அறிவுடையார் அறிவார்கள். அறிவு சிறிதும் இல்லாதவர்க்குச் சிறிதும் (பிரயோசன மூண்டாவது) இல்லே.

காலடியார்

(வி - ம்) "மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்"

என்னும் செய்யுளினும் இக்குறிப்புணர்த்துவது காண்க. (சo)

கண்டானந் தணனென்ன காரியஞ்செய் தேதினனத்தன்
வண்டார்பூங் குழல்மனவி மாட்சியினுங் கழிதுன்பங்
கொண்டான்மற் றவனெடுத்தன் கோயில்புகுந் தலர்வேப்பக்
கண்டாரா னமைச்சர்க்கும் பிறர்க்குமிது சாற்றினனே.

(இ - ள்) பிராமணன் பார்த்தான். தான் யாதுகாரியஞ் செய்தேனென்று வண்டுகள் பொருந்திய மலர்மாலையணிந்த கூந்தலையுடைய தனது மனேயாட்டி இறந்ததினும் மிக்க துன்பத்தை யடைந்தான். வேப்பமலராலாகிய தட்பம் பொருந்திய மாலேயையணிந்த பாண்டியன், அத்துன்பங்கொண்ட பிராமண னுடன் தனது கோயிலுட்சென்று மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இவ்வாச் சரியத்தை யெடுத்துச் சொன்னன்.

(வி - ம்) ஒன்றுமறியாத வேடனைத் தண்டித்துத் துன்புறுத்தியது பேரபராதமான காரியமாகலின் "மனைவி மாட்சியினுங் கழிதுன்பங் கொண்டான்" என்றார். (சக)

மறையவனே யின்னுமொரு மணமுடித்துக் கோடியென
நிறையவரும் பொருளீந்து நீபோதி யெனவிடுத்துச்
சிறையழுவத் திடைக்கிடந்த செடித்தலைய விடிக்குரல
கறையுடல்வே டனைத்தாடித்த கால்யாப்புக் கழல்வித்து.

(இ - ள்) அந்தப்பிராமணனே யின்னுமொரு விவாகத்தை முடித்துக்கொள் வாயென்று அரியபொருளே மிகுதியாகக்கொடுத்து, நீ போவாய் என்று விடை யளித்து, சிறைக்கூடமாகிய கொடிய இடத்தில் அழுந்திக்கிடந்த முடைநாற்றம் வீசும் தலையையுடைய, இடிபோன்ற குரலையுடைய கரிய தேகத்தையுடைய வேடனைப் பூட்டிய கால் விலங்கைத் தறித்து.

இதுமுத லிரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) தலைய குரல சினையடியாகப் பிறக்த குறிப்புப் பெயரெச்சவினைகள். இவை வேறு பலவடுக்கி வேடனென்னும் பெயரைத் தனித்தனி கொண்டன. (சஉ)

தெளியாதே யாமிழைத்த தீத்தண்டம் பொறுத்தியென
விளியாவின் னருள்சுரந்து வேண்டுவன நனிநல்கி
அளியாளு மனத்தரச னவனியவ னிடைச்செலுத்திக்
களியாரை விழுவெய்த கௌரியரைப் போய்ப்பணிவான்.

(இ - ள்) காங்கள் (உண்மை) அறியாமற்செய்த தீய தண்டனைகளை(மனம்) பொறுப்பாயென்று அருகழைத்து இன்னருள் மிகுந்து அவன் விரும்பிய வற்றை மிகக்கொடுத்து, திருபை நீங்காத மனத்தையுடைய பாண்டியன் அவ்வேடனை அவனிருப்பிடத்திற்கனுப்பி, (முன் சமணரேவிய) மத மயக்கத்தையுடைய யானை இறக்க அம்புதொட்ட சுந்தரபாண்டியராகிய சோமசுந்தரப் பெருமானை (திருச்சங்கிதானத்திற்) சென்று வணங்குவான். (சஎ)

வேறு

ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டெம் மடிகளீ ரரும்பழி யஞ்சு
காதரா யிருந்தீ ரொக்தையார்க் குண்டோ நான்செயத் தக்கதொன் றென்னுக்
காதலிற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக் கரையின்மா பூசனை சிறப்பித்
தேதமற் றகற்றி யுலகினுக் குயிரா யிருந்தன னிறைகுவோர்த் துங்கன்.

(இ - ள்) அன்பு மீக்கூரப் பாவியேனுடைய என் நியித்தமாக எமது அடிகளாகிய நீவிர் அரிய பழியஞ்சிய காதராக வீருந்தீர். என் தந்தையாகிய தேவரீருக்கு என்னுற் செய்யத்தக்கது ஒரு பிரதியுதவியுளதோ? (இல்லை) என்று அன்புடன் புகழ்ந்து, பலமுறை தோத்திரஞ் செய்து, எல்லையில்லாத மகாபூசையைச் சிறக்கச்செய்து, குடிகளுக்கு வரும் ஐந்து குற்றங்களையொழித்துக் குடிகளுக்குத் தானேநர் உயிராய் அரசனுகிய குலோத்துங்க பாண்டின் மகிழ்ச்சி மீக்கூர இருந்தான்.

(வி - ம்) யாதொரு குற்றமுமில்லாத வேடனைத் தேரூதபாண்டியன் அவனைத் தண்டஞ்செய்தமையால் அப்பாண்டியனுக்கு அறியாமையால் வரும் பழியை அஞ்சிக்காத்த காரணத்தால் **அரும்பழியஞ்சுகாதர்** என ஒரு திருப்பெயர் போந்தமையின் "அரும் பழியஞ்சு காதராயிருந்தீர்" என்றார். (சஅ)

ஆ திருவிருத்தம் - கடுகுகு

இருபத்தாறுவது.

மாபாதகந் தீர்த்த பட்டலம்

வேத நாயகன் வெம்பழி யஞ்சிய
காத ஞன கலனிது நல்கிய
தாதை யைக்கொலை செய்த தனயன்மா
பாத கந்தனைத் தீர்த்தமை பாடுவாம்.

(இ - ள்) (தான்கு)வேதங்கட்கும் நாயகனுகிய சோமசுந்தரக்கடவுள் அரும் பழிக்கஞ்சிய திருவிளையாடல் இது. தன்னைப்பெற்ற தந்தையைக் கொலை செய்த வேதியனுடைய மகாபாதகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடலை (யாம்இனி) க் கூறுவாம். (க)

விரைசெய் மாலைக் குலோத்துங்க மீனவன்
திரைசெய் நீர்நிலஞ் செங்கோல் செலத்தனி
அரசு செய்யுமந் நாளி லவந்தியென்
றுரைசெய் மாநக ராளெரு பூசுரன்.

(இ - ள்) மணங்கமழும் மலர்மாலையணிந்த குலோத்துங்கபாண்டியன் அலை களையுடைய கடல் சூழ்ந்த நிலவுலகத்திலே தனது செங்கோல் செல்ல, சமான மில்லாத இராசரிகத்தை நடத்தும் அக்காலத்தில், அவந்தியென்று சொல்லப் படும் பெரிய நகரத்திலுள்ளான் ஒரு வேதியன். (உ)

வெருவுங் காய்சின மாறிய வேதியன்
மருவுங் காதன் மனையெனும் பேரினள்
திருவுங் காமனுந் தேவியு மண்புனை
உருவுங் காமுறு மொப்பில் வனப்பினள்.

(இ - ள்) (கண்டோர்) அஞ்சத்தக்க கொடிய கோபம் நீங்கிய அந்த வேதிய னால் விரும்பப்பட்ட மனைவியென்பவள் இலக்குமியும்,மன்மதன் மனைவியாகிய இரதியும், சுதையாற்செய்த (சித்திரப்) பதுமையும் தனக்கு ஒப்பில்லாத (யாவ ரும்) விரும்பத்தக்க அழகினையுடையவள். (ஊ)

படியி லோவியப் பாவையொப் பாகிய
வடிவி னளவள் பால்மக னென்றெரு
கொடிய பாவி பிறந்து கொலைமுதற்
கடிய பாவக் கலன்போல் வளருநாள்.

(இ - ள்) நிலவுலகத்தில் சித்திரித்த பதுமைபோன்ற உருவத்தை யுடைய வள்.அவ்வுருவமுடைய பார்ப்பனியிடத்து மகனென்று ஒருகொடும்பாவிபிறந்து, கொலைமுதலிய கொடும்பாவங்களைக் கொள்கலனுக அவன் வளர்ந்து வருநாளில்.

(வி - ம்) கொலைமுதல் கடியபாவமென்றது-கொலை களவு கட்குடி காமம் குருத்ரோகமாகிய ஐந்து. இவை பஞ்சமகா பாதகங்களெனப்படும். (ஈ)

கோடி கோடி யடுஞ்சிலை கோட்டியே
கோடி கோடி கொடுங்கணை பூட்டியே
கோடி கோடி விகாரமுங் கூட்டியே
கோடி கோடி யனங்கனெய் தார்கொலோ.

(இ - ள்) கொல்லும்வில்லைக் கோடாகோடி வளைத்துக், கொடிய கோடா கோடி பாணங்களை அவற்றிலேற்றிக், கொடிய கோடாகோடி விகாரங்களையும் அப்பாணங்களோடுகூட்டிக், கோடாகோடி மன்மதர்கள் (அப்பாதகன்மேற்) பிர யோகித்தார்களோ? (யாதோ? யாம் அறியோம்).

(வி - ம்) மன்மதபாணங்கள் ஐந்து : அவை தாமரை - மா - அசோகு - முல்லை - நீலமாகிய கணைகள். அவைசெய்யும் விகாரங்கள் : சுப்பிரயோகம்-விப் பிரயோகம் - சோகம் - மோகம் - மரணம் எனப்படும். அவையாவன : சுப்பிர யோகம் - சொல்லுதினைவு மாறுபடுதல்; விப்பிரயோகம் - பெருமூச் செறிந்து வருந்தல்; சோகம் - வெதும்பல், உணவு தெவிட்டல்; மோகம் - அழுதல், மொழி பலபேசுதல்; மரணம் - அயர்த்தல், மயங்கல் எனப்படும். இவற்றை,

"வனசஞ் சூத மசோகு மூல்லை
நீல மெனமதன் பெய்கணை யைந்தே.
சுப்பிர யோகம் விப்பிர யோகம்
சோகம் மோகம் மரணமூந் தோற்றும்.

அவைதாம்
சுப்பிரயோகஞ் சொல்லு நினைவும்
விப்பிர யோகம் வெய்துயிர்த் திரங்கல்
சோகம் வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும்
மோக மழுங்கலு மொழிபல பிதற்றலும்
மரண மயர்ப்பும் மயக்கமுஞ் செய்யும்"—என்பதனுணர்க. (ஙி)

இளமைச் செவ்விய யாக்கையன் மையல்கூர்
வளமைக் காமமும் வல்வினை யுந்நிறைத்
தளையிட் டிர்த்தலிற் றன்னை வயிற்றிடை
விளைவித் தீன்றவள் தன்னை விரும்பினன்.

(இ - ள்) இளம் பருவமுடைய சரீரமமைந்த அப்பாதகன் மயக்க மிக்க குறைவில்லாத காமமும் பாவமும் நிறைவாகிய பாசத்தையிட்டு இழுத்தலால், தன்னைத் தன் வயிற்றில் தோன்றச்செய்து பெற்றதாயை விரும்பினன்.

(வி - ம்) நிறைத்தலைவிட்டு எனவும் பாடம். மனக்கவலையாகிய தளையை விடுவித்து என்று பொருள் கொள்க. (சு)

அன்னை யென்னு மழிதகை யாளகத்
தின்னு யிர்த்துணை யும்மனக் காவலாய்

மன்னு நாண மடமுத னுல்வருந்
தன்னை நீங்கலிற் றுனுமொத் தாளரோ.

(இ - ள்) தாயென்று சொல்லப்படும் அழிகற்புடையவள் தன் மனத்திலே தனது இனிய உயிருக்கோர் துணையாயும் தனது மனத்துக்கோர் காவலாயும் நிலைபெற்ற நாணம் மடமுதலிய நான்கு காவற்காரரும் தன்னைவிட்டு நீங்குதலால் தானுமதற்கு உடன்பட்டாள்.

(வி - ம்) நாணமடமுதல் நால்வர் என்றது நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு. அவற்றுள், நாணம் - தன்கணவனையன்றி மற்றோரைக் காணவுங் கூசுதல். மடம் தன்கணவன் குணமன்றிப் பிறர்குணத்தை யறியாமை. அச்சம் - தன்கணவன் முன்னன்றிப் பிறர்சாயை தோன்றினும் காசாணுதிகளே ஆமைபோலொடுக்கிப் பதுங்கல். பயிர்ப்பு - தன்கணவன் உடைமுதலியவற்றை யன்றிப் பிறருடையதைத்தொட அருவருத்தல் என்பர். (எ)

இன்ப மோகிறி தாகு மிதில்வருந்
துன்ப மோகரை யில்லாத் தொடுகடல்
என்ப தாரு மிவளு லறியவிவ்
வன்ப தான வினையால் வருக்துவான்.

(இ - ள்) (காமத்தால் விளையும்) சுகமோ அற்பமாகும். (ஆனால்) இதனால் வருந் துன்பமோ எல்லையில்லாத சமுத்திரமாமென்னும் பழமொழியை எல்லோரும் இவளுலறிய இக்கொடியதீவினையால் வருத்தத்தொடங்கினன்.

(வி - ம்) தொடுகடல் - வினைத்தொகை ; சகரரால் தோண்டப்பட்ட கடல் என்பது பொருள். வன்பது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (அ)

மைய னுக மதியை விழுங்கவக்
கைய னுயைக் கலந்தொழு குஞ்செயல்
ஐயன் முன்குறிப் பாற்கண் டயற்செவிக்
குய்ய லாவண்ண மூள்ளத் தடக்கினன்.

(இ - ள்) (காம) மயக்கமாகிய (இராகுவென்னும்) பாம்பானது அறிவு ஆகிய சந்திரனைவிழுங்க, அவ்வஞ்சகன் கன்தாயைப் புணர்ந்து நடக்குஞ் செய்கையை அவனது தந்தை குறிப்பாலறிந்து (அது) பிறர் செவியி லேறுதவண்ணம் தனது மனத்திலடக்கி யொழுகினன்.

(வி - ம்) ஒருவர்க்கு முரைக்கலாற்றுத மானக்கேடாதலின், அடக்கினனென்பார் "அயற்செவிக் குய்யலா வண்ண மூள்ளத் தடக்கினன்" என்றார். (க)

வேற்றோர் வைகல் வெளிப்படக் கண்டறிஞ்
சாற்று காவினன் வேறென்றுஞ் சாற்றிலன்
சீற்ற மேல்கொடு செல்வன்கொல் வேனென
வேற்றெ ழுந்தன னீன்றுள் விலக்குவாள்.

(இ - ள்) (குறிப்பாக வுணர்ந்ததேயன்றி) தருமவொழுக்கத்தை யுரைக்கும் அவ்வேதியன் வேறொருநாள் வெளியாகக்கண்டு, வேறென்று முரையாது

இருந்தனன். (அதைக்கண்ட கொடும்பாவியாகிய) புத்திரன் கோபத்தைமேற் கொண்டு (தந்தையைக்) கொல்வேனென்று மேற்கொண்டெழுந்தனன். பெற்றவள் விலக்குகின்றாள்.

(வி - ம்) 'செல்வன்' என்றது பெரும்பாவியென்னும் இழிபுதோன்றக் கூறியதாம். (கo)

தாயி னின்ப நுகர்ந்தனை தந்தையைக்
காயி லென்பெறு வாயெனக் காமுகர்க்
காயி லன்னீயி லப்பனி லென்பயன்
வயி வின்னரு ளென்னற மென்னென்றான்.

(இ - ள்) தாயினிடத்து இன்பமனுபவித்தாய். தந்தையைக் கொன்றாலென்னபல னடைவாயென்று சொல்ல, காமிகளுக்கு ஆராய்ந்து பார்த்தால் தாயாலும் தந்தையாலும் (அடையத்தக்க) பயனென்ன? பொருந்திய இனிய சிவகருணையால் பயனென்ன? தருமத்தால் பயன் என்ன? என்றான். (வி - ம்) என் - வினா வினைக்குறிப்பு முற்று. (கக)

மண்டொ டுங்கரு விப்படை வன்கையிற்
கொண்டு தாதை குரவனென் றோர்கிலான்
துண்ட மாகத் துணித்தானுய் வாய்முகந்
துண்ட காம நறவா வுணர்விலான்.

(இ - ள்) மண்வெட்டுங் கருவியைத் தனது வலியகரத்திற்கொண்டு தன்தந்தையை (ஐங்குரவருள் ஒரு) குரவனென்றறியாது, தாயின் வாயிலிருந்து முகந்துண்ட காமமாகிய மதுவினால் உணர்விலாத பாவி துண்டுபட வெட்டினான்.

(வி - ம்) ஐங்குரவர்—அரசன் - உவாத்தியான் - பிதா - தமையன் - ஆசாரியன் எனப்படுவர். (கஉ)

மைக்க ருங்கங்குல் வாய்க்கொன்ற தாதைக்குத்
தக்க தீத்தவி கிட்டன்னை தன்னெடுங்
கைக்க டங்கு பொருளொடுங் கன்னெறி
புக்க னன்புடை சூழ்ந்தார் புளிஞரே.

(இ - ள்) இருண்மயமான இராப்பொழுது தன்னுற் கொலைசெய்யப்பட்ட பிதாவுக்கு (அப்பொழுதே) பொருந்திய தீக்கடன் செய்துமுடித்து, தனது தாயோடும் தான் எடுத்தற்கமைந்த செல்வத்தோடும் பாலைநிலவழியாகச்சென்றனன். (வழிமுதிக்கும்) வேடர் அவன் புறத்தில் வந்து சூழ்ந்தார்.

(வி - ம்) 'கல்நெறி' என்பதைப் பருக்கைக்கல் நெருங்கிய இடமெனக் கொண்டு பாலை என்று பொருள் கூறினும். (கஙு)

எய்யுங் கோல்தொடு வில்லரி டிக்குநேர்
செய்யுஞ் சொல்லினர் செல்லலை நில்லெனக்

கையி லுள்ளவுங் கைக்கொண்டு காரிகைத்
தையல் தன்னையுந் தாங்கொடு போயினார்.

(இ - ள்) பிரயோகிக்கும் அம்பையேறிட்ட வில்லினையும் இடிக்குச்சமான மான சொல்லினையும் உடையவராகி,போகாதே நில் என்றதட்டி (அப்பாவியின்) கையிலிருந்த பொருள் முழுவதையுஞ் சூறையாடி, (அவன்தாயாகிய) பார்ப்பனியையும் (தாம்) கொண்டு சென்றார்.

(வி - ம்) செல்லலே - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. (கச)

சென்று சேணிடைச் சிக்கற வாழலாம்
என்ற வெண்ணமொன் றெய்திய வண்ணமொன்
றென்று நாமெண்ணத் தெய்வமொன் றெண்ணிய
தென்ற வார்த்தை யிவணிடைப் பட்டதால்.

(இ - ள்) தூரதேசத்திற்குப் போய்ச் சிக்கில்லாமல் வசிக்கலாமென்று (மகாபாதகன்) எண்ணிய எண்ணமொன்று (அவனுக்குவழியிடையே) வந்த வகையொன்று (ஆதலால்) 'காமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது' என்ற பழமொழி இந்த மகாபாதகனிடத்திற் புலப்பட்டது. (கடு)

தாதை தன்றன யற்கினி யார்துணை
மாதர் யாயை மறவர்கைக் கொள்ளவிப்
போது தான்றுணை யென்பவன் போன்றுமா
பாத கத்துரு வாய்வந்து பற்றினன்.

(இ - ள்) (மாபாவியாகிய மகனால் வெட்டுப்பட்ட) வேதியன் தனது புத்திரனுக்குத் துணையினி யாவர்? (அவன் வழித்துணையாகக் கொண்ட) அழகிய (அவனது) தாயை வேடர் கைக்கொள்ளுதலால் (துணையிழந்த) இப்பொழுது தானே துணையென்று தொடர்ந்தவன் போன்று (அவன்செய்த பிரமபாவத்தால்) பிரமஹத்திசாயையாய் வந்து (அவனைப்) பிடித்தான்.

(வி - ம்) தாதை (அவனைப்)பற்றினன் என முடித்துக்கொள்க. யாய்-தாய்.

ஆவ வென்னு மழுஞ்சிவ தாவெனும்
பாவம் பாவம் பழியிது வோவைய
கோவெ னுங்கை குலைத்திதறி யுந்நிழற்
பாவை போல விடாதுபின் பற்றுமால்.

(இ - ள்) ஆ ஆ வென்றலறும்; அழும்; சிவதாவென்று சொல்லும்; பிரமகத்தியாகிய இதுவோ பாவம் பாவம் ஐயையோவென்று முறையிடும்; கையை (ஒன்றோடொன்று சேர்த்து) மோதும்; (அவனது) தேகச்சாயல்போல அவனைப் பிரியாது பின்பற்றிச் செல்லும்.

(வி - ம்) சிவதன் - மங்கலத்தைக்கொடுப்பவன். இது வாதன் என்பது வரதாவென்றாற்போல முறைப்பாடிற் சிவதாவென வந்தது. இதனைத் திருத்தொண்டர் புராணம் எறிபத்தநாயனார் சரிதத்துங்காண்க. (கஎ)

வேறு

நல்லதீர்த் தஞ்சிவ தலமலோர் பக்கமுஞ்
செல்லவொட் டாதரன் சீர்த்திநா மஞ்செவிப்
புல்லவொட் டாதுளம் புகுதவொட் டாதுநாச்
சொல்லவொட் டாதுகண் துயிலவொட் டாதரோ.

(இ - ள்) (இப்பிரமஹத்தி யொழிய) நல்லதீர்த்தமாடவும் (நல்ல) சிவ தலஞ் சேவிக்கவும் நல்லோர் பக்கஞ்சென்று சேவிக்கவும் (அவன் செல்ல நினைத்தால்) செல்லவொட்டாது தடுக்கும். சிவசரிதமும் சிவநாமமும் (கேட்கப் புகுந்தால் கேளாமல்) தடுக்கும். (ஒருவகையாகக் கேட்கினும்) அவன் மனதிற் புகவொட்டாது தடுக்கும். (ஒருவாறுகேட்டு நாவால் சொல்லத் தொடங்கினும்) நாவைச் சொல்லவொட்டாது தடுக்கும். (இவற்றிற்குப் பயந்து நித்திரை செய்யப்புகினும்) செய்யவொட்டாது தடுக்கும்.

(வி - ம்) இதுமுதல் இரண்டு செய்யுள்களால் பிரமஹத்தியால் நிகழ்ந்த துன்பங்களை விளக்குகின்றார். (கஅ)

சுற்றுமுன் பின்புறச் சூழ்ந்துதன் கொடுக்கிறப்
பற்றிநின் றீர்க்குமா பாதகத் தாலெலாந்
தெற்றினிச் செய்வதென் றுற்றலா திடருழந்
தற்றவே றுலகெலா மச்சமுற் றழலுமால்.

(இ - ள்) முன்னும் பின்னும் எப்பக்கமும் விடாது சூழ்ந்து தனது கொய் சகமானது அவிழ்ந்து அலையப்பற்றி நின்று இழுக்காநின்ற மகாபாதகத்தா லெலாந்து திரிந்து இனி யாது செய்வதென்றே சகியாது துன்பத்தில் வருந்தித் தன்னைப் பற்றிய பிரமஹத்திக் கஞ்சிச் சுழலாநிற்பான். (கக)

உறுகலீ யாற்றநா ளுற்றுமுன் றுலகெலாம்
மறுகவே திரியுமா பாதகன் வலியெலாஞ்
சிறுகுவான் சிவனருட் செயலினிப் பாதகங்
குறுகுநாள் குறுகுநாள் கூடலைக் குறுகினான்.

(இ - ள்) (இவ்வண்ணம்) அதேகநாள் துன்பதோயடைந்து சுழன்று கண் டோரெல்லாம் வருந்த உலகமெல்லாம் திரிந்தலையாநின்ற மகாபாதகன் வலிமை முழுவதும் சிறுகுதலால், சிவபெருமானது திருவருட்செயலால் இனிப் பாதகங் குறுகியொழியுநாள் வருங்காலையில் மதுரைப்பதியை யடைந்தான்.

(வி - ம்) குறுகல் இரண்டில் முந்தியது குறைதல் என்றும் பிந்தியது சேர்தல் என்றும் பொருள்படும். (உ0)

வேறு

அழிதகன் குறுகு வான்முன் னங்கயற் கண்ணி தந்தக்
குழையிரு காதுங் கோத்துக் கொலையெழு புலிப்பற் றூலி
துழைமயிர் கெடுகாண் பின்ன ரீனென்பிட ரலைப்பப் பூண்டோர்
பழிதகை யாத வேடப் பாவையாய்ப் படிவங் கொள்ள.

(இ - ள்) அழிதகைமையுடையவன் வருதற்கு முன்னமே மீனாட்சியம்மையார் தத்தத்தற்செய்த சூண்டலங்களே இருசெவிகளிலும் நுழைவித்துக், கொலைத்தொழிலில் மேம்பட்ட புலியின் பல்லாகிய தாலிகோத்த மயிராற் பின்னிய நெடிய மங்கலநூற்றிரம் வலிய பிடரில் அசைந்தலையத் தரித்து, குலத்திற் குரிய பழித்தொழில் இறுதிதந் தடுத்த லில்லாத ஒரு வேட்டுவப் பெண்ணுய்த் திருவுருவங் கொள்ள. (உக)

கோலையிரும் பழிக்கன் றஞ்சுங் கூடலெம் பெருமான் கொன்றை
மாலையிருங் குஞ்சி வேங்கை மெல்லிணர்க் கண்ணி வேய்ந்து
கலையிரு மருப்பிற் கோடிக் காதள வோடுந் தாடிச்
சிலையிருந் தடக்கை வேடத் திருவுருக் கொண்டு தோன்றி.

(இ - ள்) (தைவிகமாய் நேரிட்ட)கோலத்தொழிலால்வந்த பெரும்பழிக்கு அக்காலத்திலஞ்சிய எமது சோமசுந்தப் பெருமான் கொன்றைமாலையணிந்த பெரிய சிகையில் வேங்கையின் மெல்லிய பூங்கொத்தாலாகிய மாலையையணிந்து, கலைமானின் முறுக்கினையுடைய இரண்டு கொம்பின் வளைவுபோல மூறுச்சுள்ளதாய் வளர்ந்து காதமட்டுஞ் சென்ற மீசையும், வில்லேத் தாங்கிய பெரிய கையுமுடைய வேட்டுவத் திருவுருவம் தான் கொண்டருளி. (உஉ)

கோண்டல்கண் படுக்கு மாடக் கோபுர மருங்கிற் போந்தின்
கண்டகக் கருக்கு வாய குரைக்குகாய் கதுவிக் காப்பப்
புண்டலே வாளி வில்லோர் புறங்கிடந் திமைப்பத் திங்கட்
டுண்டவா ணுதலா ளோடுஞ் சூதுபோ காடல் செய்வான்.

(இ - ள்) மேகங்கள் துயிலும் மாடங்கள் பொருந்திய கோபுரவாயிலினருகே, பனுவின் முள்வாய்ந்த கருக்குபோன்ற வாயையுடைய குரைக்காகின்ற நாயானது கதுவிக் காத்துநிற்கவும், மாமிசத்தை நுனியிலுடைய அம்பும் வில்லும் ஒரு புறத்திருத்து விளங்கவும், (தம்மைப்போல வேட்டுவ வடிவு கொண்டு) அர்த்த சந்திரன் போன்ற நெற்றியையுடைய பிராட்டியாரோடும் சூதாடலாகிய போர்த்தொழில் செய்வாராயினர். (உங)

வெருவரு வேழ முண்ட வெள்ளில்போல் வறிய ஞெகிப்
பருவர வுடனுங் கெய்தும் பாதகன் வரவு நோக்கி
ஒருவரு முள்ளத் தாலு முன்னருங் கொடிய பாவி
வருவது காண்டி யென்னு மாதரை நோக்கிக் கூறும்.

(இ - ள்) பயமில்லாத யானையுண்ட விளாங்கனிபோலச் சிறிதும் உள்ளீடு இல்லாதவனுகித் தன்பத்துடன் அவ்விடத்து வரும் மகாபாதகனது வருகையைக்கண்டு, யாவரும் தமது மனத்தாலும் நினைத்தற்கரிய கொடிய மாபாவி வருவதைப் பார்ப்பாய் என்று தேவியாரைப் பார்த்துத் திருவாய்மலர்ந்தருளு கின்றார்.

(வி - ம்) வேழம் - ஒரு நோய். அது, இளநீர்க்குத் தேரையென்னும் நோய்போல விளங்கனியை உள்ளீடில்லாததாகச் செய்வது. இது வேழமென்னும் பெயரொற்றுமையால் யானையுண்ட விளாங்கனி யெனவும் வழங்கும்.(உச)

அணங்குநோ யெவர்க்குஞ் செய்யு மநங்கனு லலைப்புண் டாவி
உணங்கினு ருள்ளஞ் செல்லு மிடனறிந் தோடிச் செல்லா
குணங்குல மெழுக்கங் குன்றல் கொலைபழி பாவம் பாரா
இணங்குமின் னுயிர்க்கு மாங்கே யிறுதிவந் தூறுவ தெண்ணு.

(இ - ள்) எல்லோருக்குங் காமநோயைச் செய்யும் மன்மதனுல் அலைக்கப் பட்டு உயிர் சோர்ந்தவர்களது மனமானவை தாம் செல்லுமிடமறிந்து சென்று சேரா; குணமும் குலமும் ஒழுக்கமும் குறைபடுதலையும் கொலைத்தொழிலையும் (அதனுல் வரும்) பழியையும் பாவத்தையும் பாரா ; பொருந்திய தமது இனிய உயிர்க்கும் அவ்விடத்து அழிவு வருவதைச் சிறிதுங் கருதா.

(வி - ம்) செல்லா - பாரா - எண்ணு என்பன உள்ளம் என்பதன் பய னிலைகள். (உடு)

கள்ளுண்டல் காம மென்ப கருதகறை போக்குச் செய்வ
எள்ளுண்ட காமம் போல வெண்ணினிற் காணிற் கேட்கிற்
றள்ளுண்ட விடத்தி னஞ்சந் தலைக்கொண்டா லென்ன வாங்கே
உள்ளுண்ட வுணர்வு போக்கா துண்டபோ தழிக்குங் கள்ளுண்.

(இ - ள்) கள்ளுண்ணுதல் காமங்கொள்ளுதல் என்று சொல்லப்படும் இரண்டும் (உண்டோர் காமுற்றோர்) கருத்தகலை கெடுத்தழிகை செய்வன. (இவ்வாறு இரண்டும் ஒத்திருப்பினும்) விலக்கப்பட்ட காமத்தைப்போலக் கள்ளானது தன்னை யொருவன் கருதினும் காணினும் தனது தன்மையைக் கேட்பினும் தாமிருக்குமிடஞ் செல்வினும், நஞ்சு தலைக்கேறியதுபோல அப் பொழுதே (காமம்போல) உள்ளத்தின் அறிவைக் கெடுக்காது. அக்கள்ளானது அதனை உண்டபோது மட்டும் அறிவைச் சிதைக்கும்.

(வி - ம்) கள்ளையுங் காமத்தையும் ஒரு பொருளாகவைத்துப் பின் கள்ளை விலக்கிக் காமத்தை மேம்படக் கூறினர். இச்செய்யுளின் கருத்தை, திருக்குறள் "உள்ளக் கிளர்ச்சியுங் காண மகிழ்தலுங் கள்ளுக்கில் காமத்துக் குண்டு" என் பதனுணர்க. (உசு)

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணு டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்னுன்.

(இ ள்) காமமே கொலைகளுக்கெல்லாங் காரணம். தாட்சண்ய மில்லாத காமமே திருட்டுக்கெல்லாங் காரணம். இயமனும் அச்சப்படும் காமமே கள்ளுண் டற்குங் காரணம். ஆனபடியால் காமமே நரகபூமியை உரிமையாகக் கொடுப்பது என்று கூறினர்.

(வி - ம்) காமமே என்பவற்றில் ஏகாரங்கள் பிரிநிலைப்பொருளன. இது பெரும்பாதக மாதலின். (உஎ)

கோலப்பழி கோட்பட் டாங்கே குறுகியான் முகங்கண் டேட
அலைப்பட நுழந்து சாம்பி யழிவதென் பார்ப்பா னென்னக்
கலைப்படு திங்கள் வேணிக் கானவ னருட்கு ணேக்கக்
தலைப்படச் சிறிது பாவந் தணிந்ததன் னறிவு தோன்ற.

(இ - ள்) பிதாவைக் கொன்ற பிரமகத்தியால் விழுங்கப்பட்டுத் தமது சன்னிதியிலெதிர்ந்த மகாபாதகனுடைய முகத்தைப் பார்த்து, அடா! பார்ப்பானே! அலைத்தலையுடைய பெருந்துன்பத்தால் வருந்திச் சோர்ந்து அழிவதா? என்று வினவியருள, சந்திரகலைபொருந்திய சடாமுடியையுடைய வேட்டுவவுருவாய் வந்த சோமசுந்தரக் கடவுளது திருவருணோக்கம் சிறிது படுதலால் மகாபாதகங் குறைந்து தன் இயற்கை யுணர்வுதோன்ற.

இதுமுதலிரண்டு பாடல்கள் குளகம். (உ)

முற்பக லிழைத்த பாவ முதிர்ச்சியாற் பிறந்து தந்தை
தற்கை யான வாறுந் தாதையை வதைத்த வாறும்
பிற்பக லந்தப் பாவம் பிடித்தலைத் தெங்குந் தீரா
திப்பகி புகுந்த வாறு மெடுத்துரைத் திரங்கி நின்றான்.

(இ - ள்) முன்னாளிற் செய்த பாவமுதிர்ச்சியால் (மகனுக்) பிறந்து தக்தைக்குத்தான் விரோதியான வகையையும், (அதனால்) தந்தையைக் கொலை செய்த வகையையும், பின்னாளில் அந்தப் பாவமானது (பிரமஹத்தியாய்ப்) பிடித்து வருத்த எங்கும்திரிந்தும் தீராமல், இந்தக் தலத்தையடைந்த வகையையும் எடுத்துச் சொல்லி, (மிகவும் வருந்தி) நின்றான்.

(வி - ம்) தற்பகன் எனப் பாடங்கொள்வது முண்டு. அவ்வாறாயின் தல் பகன் என்னும் வடசொற்றிரிபு எனக்கொண்டு தக்தை சயனத்திற் சூரியவன் எனப் பொருள் கொள்க. (உ)

மறப்பெரும் படிவங் கொண்டு மனத்தருள் சுரந்து நின்ற
அறப்பெருங் கருணை மூர்த்தி யழிதகை யவனைப் பார்த்துத்
திறப்பழி யாங்குச் சென்று மீங்கன்றித் தீரா தென்றக்
கறைப்பழி தீரும் வண்ணங் கருதியோ ருறுதி கூறும்.

(இ - ள்) பெரும் பாவஞ்செய்யும் வேட்டுவவடிவங்கொண்டு, உள்ளே அருள் சுரந்து நின்ற தருமவடிவாயுள்ள பெரிய தயாமூர்த்தி, அழிதகைமை பொருந்திய மகாபாதகனை நோக்கி, இப் பெரும்பாதகம் எவ்விடஞ் சேர்ந்தாலும் இத்தலத்தன்றித் தீராதென்று கூறி, அந்தக் கரிய பெரும்பழி தீரும்படி திருவுளங்கொண்டு ஒருறுதி மொழியைக் கூறுகின்றார். (கூ)

வருதிநின் னுமஞ் சொன்னோர் வருக்கமு நாகில் வீழக்
கருதிநீ செய்த பாவங் கழிப்பவ ரெவர்யா நோக்கந்
தருதலா லெனிதிற் றீரச் சாற்றுது மையங் கையேற்
றெருபொழு தண்டி யீச னுறுதவ ரேவல் செய்தி.

(இ - ள்) இங்குவருவாய்; உன்பெயரை யுரைத்தோர் (மாத்திரமேயல்லது அவரது) மரபினரும், நரகத்திலே வீழும்படி நீயெண்ணிச் செய்த மகாபாதகத்தை யொழிப்பவர்யாவர்? காம் கிருபா தோக்கஞ் செய்தமையால் (அப்பாதகம்) இலேசாக ஒழியக் கூறுகின்றோம். பிச்சையைக் கையாலேற்று ஒருபொழுது புசிப்பாய். சிவபெருமான் விரும்பும் தவவேடத்தையுடைய அடியவர் பணிவிடை செய்வாய்.

(வி - ம்) இதுமுதல் மூன்று செய்யுள்களால் மகாபாதகனுக்கு அனுக்கிரகித்த முறையை உரைக்கின்றார். (நக)

செங்கதிர்க் கடவுள் வானந் தீண்டுமுன் னெழுந்து தீந்தண்
பைங்கதி ரறுகு கொய்து பசுக்களை யருத்தி யார்வம்
பொங்கமுப் போதுங் கோயிற் புறத்தொட்டித் தீர்த்த மாடிச்
சங்கரன் றனைநூற் றெட்டு மெய்வலஞ் சாரச் செய்தி.

(இ - ள்) சிவந்த கிரணங்களையுடைய சூரியன் உதயஞ்செய்வதன் முன்னே யெழுந்து, இனிய தட்பமாகிய பசிய கிரணத்தையுடைய அறுகினை யறுத்துப் பசுக்களை (பணித்து) உண்பிப்பாய். அன்பு அதிகரிக்க (காலை உச்சி மாலையாகிய) மூப்போதிலும் திருக்கோயிலின் புறத்தேயுள்ள தொட்டித் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, சிவபெருமானை நூற்றெட்டுத்தாம் அங்கப்பிரதக்கணம் பொருந்தச் செய்வாய். (நஉ)

இத்தவ நெறியி னின்று லிப்பழி கழியு மென்னுச்
சித்தமன் புடைய வேடத் திருவுருக் கொண்ட கொன்றைக்
கொத்தவ ணுரைத்தான் கேட்டுக் கொடிச்சியா யிருந்த வம்மை
மத்தவன் கரித்தோல் போர்த்த மறைவன வினவு கின்றாள்.

(இ - ள்) நீ இத்தத் தவமார்க்கத்திருந்தால் இந்த மகாபாதக மொழியுமென்று திருவுளத்தில் அன்புடைய வேடத்திருவுருவங்கொண்ட கொன்றையின் பூங்கொத்தினை யணிந்த சோமசுந்தரக்கடவுள் கூறியருளினர். அதனைக் கேட்டருளி வேடுவச்சித் திருவடிவங்கொண்ட பிராட்டியார், மதமயக்கத்தையுடைய வலிய யானைத் தோலைப் போர்த்தருளிய வேட்டுவத் திருவுருவங்கொண்ட பெருமானை விளவுகின்றார். (நந)

ஐயகிக் கொடியோன் செய்த பாவத்துக் களவில் காலம்
வெய்யநா லேழு கோடி நரகிடை வீழ்ந்தா னேனும்
உய்வகை யிலாத பாவி யிவனுக்கென் னுய்யுந் தேற்றஞ் [ம்.
செய்வகை யென்று கேட்பச் செங்கண்மால் விடையோன் செப்பு

(இ - ள்) ஐயனே! இம்மகாபாதகன் செய்த பெரும்பாதகத்திற்குக் கணக்கில்லாத காலமீட்டும் கொடிய இருபத்தெட்டுக் கோடி நரகத்திலே வீழ்ந்து கிடந்தானுலும் பிழைக்கும் வகையில்லாத மகாபாவி. இவனுக்குக் கடைத்தேறும் தேர்ச்சி செய்யும் வகையேது? என்று வினவ, சிவந்த (தாமரை போலும்) கண்களையுடைய திருமாலாகிய இடபத்தை (வாகனமாக) உடைய சோமசுந்தரக் கடவுள் திருவாய் மலர்ந்தருளுகின்றார். (நச)

அடுபழி யஞ்சா நீச ராயினு நினைக்கி னச்சம்
படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும்
விடுவதை யின்றி வேறு கலைகணு மின்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றே காப்பென்றன் கருணை மூர்த்தி.

(இ - ள்) கொல்லும் பழிக்குப்பயப்படாத நீசர்களாலுலும், நினைக்கினும் அவர்களுக்கு அச்சமுறுத்தும் பழிக்கஞ்சாலுகிச் செய்த மகாபாதகத்திற் கட்டுண்டு எந்த ஸ்தலத்திற்குப் போலுலும் அப்பாதகம் தன்னை விடுதலில்லாமலும் வேறு பற்றுக்கோடு இல்லாமலும் அழியக்கடவோனைப் பாதுகாப்பதல்லவா பாதுகாப்பு என்று கிருபாமூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள் கூறியருளினர்.

(வி - ம்) 'கலைகண்' என்பதனிறுதிகிலுள்ள உம்மையைப் பிரித்து இன்றி என்பதலுடி கூட்டுக. (சுடு)

நெய்த்தீப் போ தணைய வுண்க ணேரிழை நீயா தொன்று
செய்தற்குஞ் செய்யா மைக்கும் வேறொன்று செயற்கு மாற்றல்
மெய்தக்க கருணை வள்ளல் வேண்டினெவ் வினைஞ ரேனும்
உய்தக்கோ ராதல் செய்கை யுன்னருள் விளையாட் டன்றே.

(இ - ள்) குவளைமலர் போன்ற மைதீட்டிய கண்களையுடைய மீனாட்சி தேவியார், நீ யாதொரு காரியத்தைச் செய்தற்கும் அதனைச் செய்யாமைக்கும் பிறிதொன்று செய்தற்கும் வன்மையின் உண்மையிக்க கிருபாமூர்த்தி! விரும்பினல் எவ்வகைத் தீத்தொழிலினாலுலும், பிழைக்கும் வகையினராகச் செய்வது உனது திருவருளின் விளையாட்டல்லவா? (சுசு)

என்றக மகிழ்ச்சி பொங்க இயம்பிய ளியம்ப லோடுங்
குன்றக நாட்ட வேடக் குழகனு மறைந்து வெள்ளி
மன்றக நிறைந்தான் மேக மறைந்திட மறைந்து செல்லும்
மின்றக விடாது பின்போய் விளங்கிழை மடந்தை யோடும்.

(இ - ள்) என்று மனக்களிப்பு மீக்கூரக்கூறி யருளினுர். அவ்வாறு கூறவும், மலைநாட்டிலுள்ள வேட்டுவத் திருவுருவங்கொண்ட சோமசுந்தரப்பெருமானுக் திருவுருவங் கரந்து, மேகம் மறைகையில் மறைந்து (உடன்) செல்லும் மின்னல்போல விடாது பின் வரும் வேட்டுவத் திருவுருவங் கொண்ட மீனாட்சி தேவியாரோடும் வெள்ளியம்பலத்தில் நிறைந்தருளினர்.

(வி - ம்) விளங்கிழை மடந்தை - விளங்கும் ஆபாணத்தை யணிந்த தேவி.

ஆததா யியுங்கண் டானு அற்புத மடைந்து கூடல்
நாதனர் நவின்ற வாற்றி னன்னெறி விரதச் செய்கை
மாதவ வொழுக்கந் தாங்கி வருமுறை மதிய மூன்றிற்
பாதகங் கழிந்து தெய்வப் பார்ப்பன வடிவ மானுன்.

(இ - ள்) கொடிய பாவியாகிய வேதியன் அவ்விடத்தில் (இறைவன் தனக்குப் புலப்பட்டு மறைந்ததைக்) கண்டு நீங்காத ஆச்சரியமடைந்து,

மதுராபுரீசராகிய சோமசுந்தரக்கடவுள் கூறியருளிய முறைப்படி, நன்னெறிக் கேதுவாகிய கோன்பையும் பெரிய தவவொழுக்கையும் மேற்கொண்டு வரன் முறையே மூன்று மாதத்தில் மகாபாதகத்தினின்று நீங்கித் தெய்வத்தன்மை யுடைய முன்னுள்ள பிராமண வடிவாஞன். (நஅ)

சோற்பதங் கடந்த எத்தைச் சுந்தர நாதன் முளிற்
பற்பல வடசொன் மாலை பத்தியிற் பெருடுத்துச் சாத்திச்
தற்பர அறிவா னந்தத் தனியுரு வுடைய சோதி
பொற்பத மருங்கிற் புக்கான் புண்ணிய மறையோ னம்மம.

(இ - ள்) சொல்லளவைக் கடந்த எந்தையாகிய சோமசுந்தரக் கடவுளது திருவடியிற் பற்பல வடசொற்களாலாகிய மாலையைப் பத்தியோடு தொடுத்துச் சாத்தி உண்மை யறிவானந்த மென்னும் மொப்பில்லாத திருவுருவத்தையுடைய சோமசுந்தரக் கடவுளுடைய பொன் போன்ற திருவடி கீழில், சிவபுண்ணிய வடிவான அந்தணன் அடைந்தான். (நக)

அன்னையைப் புணர்ந்து தாதை குரவனு மந்த ணாளன்
தன்னையுங் கொன்ற பாவந் தணித்துவீ டளித்த தென்றுற்
பின்னரீ ரிழிநோய் குட்டம் பெருவயி றீளை வெப்பென்
றின்னநோய் தீர்க்குந் தீர்த்த மெனபதோ இதற்கு மேன்மை.

(இ - ள்) தாயைப்புணர்ந்து தனக்குத் தந்தையுங் குருவுமாகிய வேதிய னைக் கொலை செய்த மகாபாதகத்தை யகற்றி (அத்திருத்தொட்டித் தீர்த்தம்) மோக்ஷத்தையுந் தந்தது என்று சொன்னால், பின்பு ரீரிழி நோய் - குஷ்டநோய் - பெருவயிற்று நோய் - இருமல் - சுரமென்று கூறப்பட்ட இவைபோன்ற நோய் களைத் தீர்க்குந் தீர்த்தமென்று கூறுவதோ இத்தத் தீர்த்தத்திற்கு மேன் மைப்பாடு? (சஅ)

வேறு

அழிந்தவே தியன்மா பாதகந் தீர்த்த தறிந்துவேந் தமைச்சரு ருள்ளார், ஒழிந்தபா ருள்ளார் வானுளார் வியப்ப முற்றுநல் லுரை யுணர் வெல்லாங், கழிந்தபே ருளிக் கயவன்மேல் வைத்த காரணம் யாதெனக் கண்ணீர், வழிந்துநான் மாடக் கூடல்நா யகனே வழுத்தினர் மகிழ்ச்சியுட் டிளைத்தார்.

(இ - ள்) பிராமணீக மொழிந்தவனுடைய மகா பாதகத்தைத் தீர்த்தரு ளியதை யுணர்ந்து மன்னனும் மந்திரிகளும் மதுராபுரியிலுள்ளவர்களும் (பிற) நாட்டிலுள்ளவர்களும் ஆகாயவாசிகளும் ஒருசேர அதிசயிப்ப, நல்ல சொல்லள வைக்கும் உணரும் உணர்ச்சிக ளெல்லாவற்றிற்கும் அதீதப்பட்ட பெரிய திரு வருளை இப்பாதகன் பேரில் வைத்தருளிய காரணம் என்ன? என்று, ஆனந்தக் கண்ணீர் சொரிய நான்மாடக்கூடலாகிய மதுரைமா நகரத்தில் எழுந்தருளி யிருக்கும் சோமசுந்தரக் கடவுளைத் துதித்து இன்பக் கடலி லழுந்தினர்கள்.

(வி - ம்) வழிந்து - செயவெனெச்சத்திரிபு. (சக)

ஆ திருவிருத்தம் - கடுஎச.

இருபத்தேழாவது
அங்கம் வெட்டின படலம்

வேதகந் தரித்த முக்கண் வேதியன் மறையோன் செய்த
பாதகந் தவிர்த்த வாறு பகர்ந்தனம் விஞ்சை யீந்த
போதகன் மனைக்குத் தீங்கு புந்திமூன் னுகச் செய்த
சாதகன் றனைப்போ ராற்றித் தண்டித்த தண்டஞ் சொல்வாம்.

(இ - ள்) வேதித்தலைக் கைக்கொண்டருளிய திரிசேத்திரங்களையுடைய பிராமணராகிய சோமசுந்தரக் கடவுள், வேதியன் செய்த மகா பாதகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடலைக் கூறினேம். (வாட்போர் செய்யும்) வித்தை கற்பித்த ஆசிரியன் மனைவிக்குத் தீமையைப் புத்திபூர்வமாகச் செய்த மாணுக் கனைப் போர்செய்து தண்டித்த தண்டமாகிய (அங்கம் வெட்டின) திருவிளையாடலை (யாம் இனிக்) கூறுவாம்.

(வி - ம்) வேதகம் - இரசகுளிகை. செம்பையுருக்கித் தன்னெடு கூட்டி வேதித்துப் பொன்னாக்கியும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுள்ளடக்கியும் நிற்கும் வகைபோலப் பசுக்களை அவ்வாறு செய்தும் அவற்றினியல்பு தோன்றுது அறிவு தந்தும் நிற்கும் வண்ணம் தன் வியாபகத்திலடக்கி நிற்பது.

வேதகந்தரத்து எனவும் பாடம். அவ்வாறுயின், வேதமோதிய கண்டத்தையுடைய எனப் பொருள்கொள்க. (க)

கூர்த்தவெண் கோட்டி யாணைக் குலோத்துங்க வழுதி ஞாலங்
காத்தர சளிக்கு காளிற் கடிமதி லுடுத்த கூடல்
மாத்தனி நகருள் வந்து மறுபுலத் தவனு யாக்கை
மூத்தவ னெருவன் வைகி மூனியவாள் பயிற்றி வாழ்வான்.

(இ - ள்) கூர்மைவாய்ந்த வெள்ளிய கொம்பினையுடைய யானைச் சேனையையுடைய குலோத்துங்க பாண்டியன் உலகத்தைக் காத்து அரசாளுமை செலுத்துங் காலத்தில், காவலமைந்த மதில் சூழ்ந்த மதுரையாகிய ஒப்பில்லாத பெரிய நகரத்தில் அயல் நாட்டிலுள்ளவனுகி முதிர்ந்த தேகத்தையுடைய ஒரு விஞ்சையன் வந்து குடியேறி, கூர்மை வாய்ந்த வாட்போர் கற்பித்து வாழ்வானுயினன். (உ)

வாள்வினைக் குரவ னன்னுன் வல்லமண் விடுத்த வேழந்
தோள்வினை வலியா லட்ட சுந்தர விடங்கன் றன்னை
ஆள்வினை யன்புந் தானும் வைகலு மடைந்து தாழ்ந்து
மூள்வினை வலியை வெல்லு மூதறி வுடைய னம்ம.

(இ - ள்) வாட்போர் போதிக்கும் ஆசிரியனுகிய அவ்வயோதகன், வலிய சமணர் விடுத்த யானையைத் தமது திருத்தோளின் போர்த்தொழிலின் வன்

மையால் வென்றருளிய சோமசுந்தரக்கடவுளை, சிவபணிவிடையும் சிவசேய மூன் தானுமாகத் தினந்தோறுஞ் சென்று பணிந்து, சம்பவிக்கும் வினையின் தன்மையை வெல்லும் போறிவுடையவன்.

(வி - ம்) தன்றொழில் போர்த்தொழிலாதலின் யானையை யெய்த மூர்த்தத்தைத் தினமும் பணிந்து வருவானுயினன் எனக் குறித்தனர் என்க. (ங)

கைவினை மறவாள் விஞ்சைக் காவல னவனைத் தாழ்ந்து
தெவ்வினை வெல்வான் கற்குஞ் சிங்கவே றனையார் தம்மூர்
உய்வினை யுணராப் பாவி சித்தனென் றொருவ னுள்ளான்
அவ்வினை நிரம்பக் கற்ற ஞகலூழ் வலியா லன்னான்.

(இ - ள்) கொலைத்தொழிலையுடைய வானையேந்தி வீசும் கைத்தொழில் வித்தையில் வல்லவனுகிய முதியோனைப்பணிந்து, பகைவரது போர்த்தொழிலை வெல்ல வாள்வித்தை கற்கும் ஆண்சிங்கம்போன்ற மாணுக்கருள் (பாவச்செயலி லிருந்து) தப்புதலையுணராத பாவியாகிய சித்தனென்று ஒருவனுளன். அச்சித்தன் ஆகூழ் வலியினுல் அந்த வித்தைகளைக் குறைவின்றிக் கற்றுன்.

(வி - ம்) ஆகூழ் - நல்வினை. (ச)

மானவாள் விஞ்சை யாலே தனைநன்கு மதிக்கத் தக்க
தானதோர் செருக்கி னுற்றன் ஞசிரி யர்க்கு மாறுய்த்
தானுமோர் விஞ்சைக் கூடஞ் சலமத்துவாள் பலருங் கற்க
ஊனுலாம் படைவல் லானி னூதிய மிதப்பக் கொள்வான்.

(இ - ள்) மானம்பொருந்திய வாள்வித்தையினுலேயே தன்னைப் (பிறர்) மதிக்கத்தக்கதான ஒருவகை இறுமாப்பினுல், தானும் தன் ஆசிரியனுக்கு விரோதமாய் ஒரு வித்தை கற்பிக்குஞ் சிலம்பக்கூடத்தை ஏற்படுத்தி, வாள் வித்தையைப் பலரும் கற்கும்படி நிணம் பொருந்திய ஆயுத வரிசையில் வல்ல தன் ஆசிரியனைக் காட்டிலும் வருவாய் அதிகமாகப் பெறுவானுயினன்.

(வி - ம்) வித்தைக் கூடமென்று கூறுவது முண்டு. இதனைச் சிலம்பம் என்பதே சிறப்புடைத்து. (டு)

ஒருத்தனே யிருவர் வாளின் விருத்தியு மொருங்கு கொள்ளுங்
கருத்தனுய் விருத்த னூரிற் கழிவது கருதி யன்னன்
வருத்துவா ளிளையர் தன்பால் வரமனந் திரித்து காலும்
விருத்தமே செய்வான் முயை விருப்பினேற் கிளையோ னன்னன்.

(இ - ள்) சித்தனெருவனே (தானும் தன்னுசிரியனுமாகிய) இருவர் (அடையும்) வாட்பயிற்சியின் ஊதியத்தையும் ஒருசேர அடையும் மனமுடையவனுகித் தன்னுசிரியன் மதுரைப்பதியி லிருந்து (தன் ஊர்க்குச்) செல்வது நினைத்து, அவன் கற்பிக்கும் வாட்போர் பயிலும் இளைஞர்கள் தன்னிடத்திற் கற்கும்படி வர, மனத்தைத் திருப்பி (எப்பொழுதும்) விரோதமே செய்துவருஞ் சித்தன் தாயைப் புணர்ந்த (செய்தியறிந்த தந்தையைக் கொலைசெய்த) வனுக்குச் சகோதரனை யொத்தவனுயினன். (சு)

தோடத்தொடப் பொறுக்குந் திண்மைத் தொன்னில மணையா னில்லா
இடத்தவன் றேவி பாற்போ யிடனுண்டே யிடனுண் டேயென்
றடுத்தடுத் தஞ்சா தென்றுங் கேட்டுக்கேட் டகல்வா ளுக
நடைத்தொழிற் பாவை யன்ன நங்கைவா ளாவி ருந்தாள்.

(இ - ள்) தோண்டத் தோண்டப் பொறுக்குந் திண்ணிய பழைமையாகிய பூமிதேவிபோன்ற (பொறுமையுடைய) மூதியோன் இல்லாத பொழுது அவன் மனைவி மூணிக்கமாலையிடஞ் சென்று சமயமுளதோ ? சமயமுளதோ ? என்று தினந்தோறும் அடுத்தடுத்துக் கேட்டுப் போக, நடத்தற்றொழிலையுடைய பதுமைபோன்ற அந்தப் பெண்மணி (ஒன்றுங்கூறாது) மவுனமாயிருந்தாள்.

(வி - ம்) நடைத்தொழிற் பாவை - இல்பொருளுவமையணி. (எ)

பின்னொரு பகற்போய்ச் செங்கை பிடித்தனன் வலிப்பத் தள்ளி
வன்னிலைக் கதவ நூக்கித் தாழக்கோல் வலித்து மாண்ட
தன்னிலைக் காப்புச் செய்தாள் தனிமனக் காவல் பூண்டாள்
அன்னிலை பிழைத்த தீயோ னகங்கத்தீ வெதுப்பப் போனான்.

(இ - ள்) பின்பு ஒருநாள்சென்று (குருபத்தினியாகிய மாணிக்கமாலையின்) சிவந்த கையைப் பிடித்திழுக்க, ஒப்பில்லாத மனத்தைக் கற்பின் காவலாகக்கொண்ட அவள் (அவனைப்புறந்) தள்ளி, வலிய நிலையையுடைய கதவைச் சாத்தித் தாழ்போட்டு மாட்சிமைப்பட்ட தனது கற்பு நிலையைக் காத்துக் கொண்டாள். (அதனால்) அப்பொழுது (தன் எண்ணம்) தவறிப்போன கொடிய சித்தன் காமாக்கினி சுட வருந்திச் சென்றான்.

(வி - ம்) பிழைத்த என்பதற்குத் தவறுசெய்த என்றும் பொருள்படும்.(அ)

அறங்கடை நின்ற ருள்ளு மாற்றவுங் கடைய ளுகிப்
புறங்கடை நின்றுன் செய்த புலைமைதன் பதிக்குந் தேற்றாள்
மறந்தவிர் கற்பி னுள்தன் மனம்பொதிந் துயிர்கள் தோறும்
நிறைந்தகான் மாடக் கூடல் நிமலனை நினைந்து நொந்தாள்.

(இ - ள்) மகாபாதகருள்ளும் மிகவுங் கடைப்பட்டவனுகிப் புறம்பாய்நின்ற சித்தன் செய்த கீசகத்தன்மையை அறக்கற்பினையுடைய மாணிக்கமாலை தன் நாயகனுக்குந் தெரிவியாது, தன் மனத்தில் வைத்து உயிர்கள்தோறும் வியாபித்த மதுராபுரியில் எழுந்தருளிய சோமசுந்தாக்கடவுளைச் சிந்தித்து வருந்தினாள்.

(வி - ம்) கற்பு அறக்கற்பு மறக்கற்பு என இருவகைத்து. தன்னை வழிபடுவோரைப் பரிக்கிரகிக்குங்கற்பு அறக்கற்பென்றும், தனக்குத் தீங்குசெய்வோரை நிக்கிரகிக்குங் கற்பு மறக்கற்பென்றுங் கூறப்படும். (கூ)

தூதக நிறைந்த கொன்றைச் சடையவன் புறம்பு செய்த
பாதக மறுக்குங் கூடற் பகவனெவ் வுயிர்க்குந் தானே
போதக ருகித் தேற்றும் புண்ணியன் புலைஞன் செய்த
தீதக முணர்ந்து தண்டஞ் செய்வதற் குள்ளங் கொண்டான்.

(இ - ள்) உள்ளே மகரந்தம் நிறைந்த கொன்றைமாலே யணிந்த சடையை யுடையவனும், புறநாட்டிற் செய்த மாபாதகத்தையுந் தொலைத்தருளிய மதுரா புரீசனும், எவ்வுயிர்க்கிருந்தானே யுணர்த்துவோனுகி யுணர்த்தும் புண்ணிய சொரூபியுமாகிய சோமசுந்தரக்கடவுள், நீசனுகிய சித்தன்செய்த கொடுமை யைத் தமது திருவுள்ளத்திலிரக்கி, அவனே (அதற்காகத்) தண்டஞ் செய்தற் குத் திருவுள்ளஞ் செய்தருளினர்.

(வி - ம்) பகவன்—ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் என்னும் ஆறு குணங்களே உடையவனென்பது பொருள். (கம)

கோஞடைக் குரவ னேபோற் சித்தனைக் குறுகிச் சித்தா
காலேயா நீயுஞ் சாலக் கழியமூப் படைந்த யாமும்
வாளம ராடி நந்தம் வலிகளு மளந்து காண்டும்
நாளைவா வருது நாமு நகர்ப்புறத் தொருசா சென்றுன்.

(இ - ள்) வல்லமையுடைய ஆசிரியனேப்போலவே (திருவுருவங்கொண்டு) சித்தனேயடைந்து, சித்தா! வாலிப வயதுடைய நீயும் மிக்க விருத்த வயது டைய நாமும் வாட்போர் புரிந்து நம்மிருவருக்குமுள்ள வலிமைகளேயும் அளவு செய்தறிவோம். நகரத்தின் புறத்திலே ஒருபக்கத்தில் நாளேயதினம் (போர் புரிதற்கு) வா. நாமும் வருவோம் என்று கூறியருளினர். (கக)

நாதனுங் குரவன் கூற நன்றென வுவந்து நாலாம்
பாதக னதற்கு கோந்தான் படைக்கலக் குரவன் மீண்டு
போதரு மளவில் வையம் புதையிருள் வெள்ளத் தாழ
ஆதவன் வைய முங்கீர் வெள்ளத்து ளாழ்ந்த தம்மா.

(இ - ள்) இறைவனுகிய ஆசிரியன் (இவ்வாறு) கூறியருள, நான்காம் பாதகம் (ஆகிய காமத்தை ஆசிரியன் மனேவிபாற்) செய்தவனுகிய சித்தன் விரும்பி நல்லது என்று அவ்வார்த்தைக் கிணங்கினவனுகி, ஆயுதங்களே யேந் திய ஆசிரியன் திரும்பிவருமளவில், நிலவுலகமானது நிறைந்த இருள்வெள்ளத்தி லாழும்படி, சூரியனுடைய தேரானது கடலாகிய வெள்ளத்தி லழுந்தியது.

(வி - ம்) கொலே களவு கள் காமம் என வழங்குதலே முறையாதலின் நான்காம் பாதகன் எனக் கூறினர். (கஉ)

ஆசினன் குரவற் கின்னு வாற்றினேன் பாவம் போல
மாசிருள் தணிந்த கங்குல் வலிகெட வடிவாள் விஞ்சைத்
தேசிக னுருவ னன்னுன் றிணியுடல் சிதைப்பத் தீட்டுங்
காய்சின வாள்போற் கீழைக் கல்லிடை முளேத்தான் வெய்யோன்.

(இ - ள்) குற்றமில்லாத தனது நல்ல ஆசிரியனுக்குத் தீங்குசெய்த சித்தனுடைய பாவத்தின் வலிமை போலக், கரிய இருள்தழைந்த இரவின் வலிமைகெட, வடித்த வாட்போர் ஆசிரியன் அச்சித்தனுடைய வலிய சரீரத்தை யழிக்கத் தீட்டிய கொல்லுங் கோபத்தையுடைய வாள்போல, சூரியன் கீழ்த் திசையிலுள்ள உதயகிரியில் உதித்தான். (கஊ)

நன்றியைக் கொன்று தின்றே ளுயக ளுணைக் கஞ்சும்
வன்றிற லரிமா ளூர்தித் தெய்வதம் வழிபட் டேத்தி
வென்றிவாள் பரவிக் கச்சு வீக்கிவாள் பலகை யேந்திச்
சென்றுவா ளுழவன் சொன்ன செருக்களங் குறுகி ளுனே.

(இ - ள்) (ஆரியன் செய்த) நன்றியைச் சிதைத்த சித்தன், சோமசுந்தரக்கடவுளுடைய ஆக்ஞைக்கு அஞ்சும் வலிமையுடைய சிங்கவாகனத்தையுடைய துர்க்கையை வழிபட்டுப்பணிந்து, கச்சினைக்கட்டி, வாளையுங் கேடகத்தையுந் தாங்கிச் சென்று, வாளையேந்திய தனது ஆரியன் (வடிவங்கொண்டு வந்த சோமசுந்தரக் கடவுள்) கூறியருளிய போர்க்களத்தைச் சேர்ந்தான்.

(வி - ம்) எந்நன்றி கொன்றூர்க்கு மூய்வுண்டா மூய்வில்லை-செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற தெய்வப் புலவர் சொற்படி செய்ந்நன்றி சிதைத்தவன் பெருஞ்சாதனங்க ளுடையாளுயினும் அவை பயன்படாவென்பது தோன்ற "நாயக ளுணைக் கஞ்சும் வன்றிற லரிமா ளூர்தித் தெய்வதம்" என்றார். (கச)

மதுகைவா ளமர்க்கு நென்னல் வந்தறை கூவிப் போன
மூதுகடும் புலியே றன்ன மூடங்குடற் குரவன் ரூளும்
அதிர்கழல் வீக்கிக் கச்சு மசைத்துவெண் ணீ றுஞ் சாத்திக்
கதிர்கொள்வாள் பலகை தாங்கிக் கயவனுக் கெதிரே வந்தான்.

(இ - ள்) வலிய வாட்படைதாங்கிச் செய்யும் போருக்கு நேற்றைப்பொழுதில்வந்து அறைகூவிச்சென்ற மூதிய கடிய புலியேறுபோன்ற கூனிய உடலையுடைய ஆரியன் (வடிவமாகச் சோமசுந்தரக் கடவுள்), ஒலிக்கும் வீரகண்டாமணி கட்டி, (அரையிற்) கச்சினையிக்கட்டி, திருவெண்ணீற்றினையும் (திருநெற்றியில்) அணிந்து, ஒளிவீசும் வாளையுங் கேடகத்தையும் (திருக்கரங்களில்) ஏந்தி, சித்தனுக்கு எதிரில் (போர்புரிய) வந்தனன்.

(வி - ம்) அறைகூவல் - போர்க்குவா வென்று வலிய அழைத்தல். கயவன் - கீழ்மகன். (கஞ)

மடங்கலே றுன்னும் பைங்க ணரியொன்று மலைந்தா லென்ன
மூடங்கல்வான் றிங்க ளொன்று முக்கணு நான்கு தோளும்
விடங்கலுழ் மிடறுங் கோற்ற வென்றிவாள் விஞ்சை வேந்தும்
அடங்கலன் ரூணு நேரிட் டரடம ராடல் செய்வார்.

(இ - ள்) ஆண்சிங்கமொன்றும், பசிய கண்களையுடைய கரியொன்றும் தம்மூட் போர் செய்தாற்போல, ஆகாயத்தில் உலவும் இளம்பிறை யொன்றும், திரிசேத்திரங்களும், நான்கு திருத்தோளும், விடம் பொருந்திய திருமிடறும் புலப்படாது, (போருக்கு வந்தருளிய) வெற்றிவாய்ந்த வாள் வித்தையில் வல்ல அரசராகிய சோமசுந்தரக் கடவுளும் பகைவனுகிய சித்தனும் தம்முள் எதிர்த்து வெற்றியோடு போர் செய்யத் தொடங்கினர். (கசு)

எதிர்ப்பர்பின் பறிவர் கேர்போ யெழுந்துவா னேறு போல
அதிர்ப்பர்கே டகத்துட் டாழ்வுற் றடங்குவர் மூளைப்பர் வாளை

விதிர்ப்பர்சா ரிகைபோய் வீசி வெட்டுவர் விலக்கி மீள்வர்
கொதிப்பர்போய் கைப்ப ராண்மை கூறுவர் மாறி கோர்வர்.

(இ - ள்) (ஒருவரையொருவர்) எதிர்த்து பின் போவார்; கேடயத்துள் மறைத்து அடங்குவார்; (பின்பு) வெளிப்படுவார்; வாளை யசைப்பார்; இடசாரி வலசாரியாகச் சென்று (வாளை) வீசி (ஒருவரையொருவர்) வெட்டுவார்; (அவ்வாறு வெட்டுவதை) விலக்கித் திரும்புவார்; கோபிப்பார்; சென்று நிரிப்பார்; வீரத் தன்மை பேசுவார்; (சாரிகை) மாறி எதிர்ப்பார்.

(வி - ம்) இதுமுதலிரண்டு பாடல்களால் வாட்போரின் திறம் விளக்கப் பட்டது. (கஎ)

வெங்கிடு வார்போற் போவர் வடிவித்து விளித்து மீள்வர்
கொன்னிடு வாண்மார் பேற்பர் குறிவழி பிழைத்து நிற்பர்
இங்கிலை நாலெங் கன்ன லெல்லைகின் றூடல் செய்தார்
அங்கிலை யடுபோர் காண்பா ரனைவருங் கேட்க லுயன்.

(இ - ள்) புறங்காட்டிப் போவார்போலப் போவார்; சுழன்று வந்து (போருக்கு) அழைத்துத் திரும்புவார்; கூர்மை பொருந்திய வாள்வேட்டை (தமது) மார்பில் ஏற்பார்; (தாம்கொண்ட) இலக்கின் நெறியைத் தப்பி நிற்பார்; இவ்வாறு இருபது நாழிகைவரையிலும் நின்று போர் செய்தார். அப் பொழுது போர்த்தொழிலைக் காண வந்தவர் யாவருங் கேட்கும்படி, சோமசுந்தரக் கடவுளும்.

(வி - ம்) ஐயன் என்னும் எழுவாய் வருஞ் செய்யுளில் தண்டஞ்செய்து மறைத்து நின்றான் என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது. (கஅ)

கூரத்திரை நினைத்த நெஞ்சைக் குறித்துரை நாவைத் தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக் காத்தனை கோடி யென்றென்
றுரைத்துரைத் தவற்றுக் கெல்லா முறுமுறை தண்டஞ் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைந்து நின்றான்.

(இ - ள்) குருபத்தினியை விரும்பிய மனத்தையும், குறித்து (காமமிக்குப்) பேசிய நாவையும், பிடித்த கையையும், உற்றுப்பார்த்த கண்ணையும் (நீதித் தொழிலுக் குடன்பட்டமையின்) காத்துக்கொள் என்று அடுத்தடுத்துக்கூறி அவ்வவயவங்களுக்கெல்லாம் (நீதிநூலிற் சொல்லிய) முறைப்படி தண்டஞ் செய்து, (அவனது) தலையைத் துண்டித்துத்தள்ளித் திருவுரு மறைந்தருளினார்.

(வி - ம்) "உரைத்துரைத்து" என்றது முற்றுணர்வுடையனுதலின், யாவு முணர்ந்தானென்பது புலப்படக் கூறியது. (கக)

போர்கெழு களங்கண் டாருட் பொருபடைக் கேள்விச் செல்வர்
வார்கெழு கழற்கா லானைக் கண்டிலர் மீளியிற் றேடி
வர்கெழு கற்பி னாளை யெங்குற்றான் குரவ னென்னக்
கூர்கெழு வடிவேற் கண்ணுள் போயினர் கோயிற் கென்றாள்.

(இ - ள்) போர்த்தொழில் நடக்குங் களத்திற் கண்டவர்களில், போர்புரியும் ஆயுதப் பயிற்சியுடைய மாணக்கர்கள் வாரிற்கோத்த வீரக்கழலணிந்த காலையுடைய தமது ஆசிரியனைக் காணுதவராகி, (அவரது)* வீட்டிற்குத் தேடிச் சென்று, அழகுமிக்க கற்பினையுடைய மாணிக்கமாலையைப் பார்த்து, ஆசிரியர் எங்கே போனரென்று வினவ, கூர்மைமிக்க வடித்த வேற்படைபோலுங் கண்களையுடைய அம்மாணிக்கமாலை (அவர்) கோயிலுக்குச் சென்றரென்று சொல்லினள்.

(வி - ம்) ஈண்டு 'வார்கெழு கழற்காலானைக் கண்டிலர்' என்றது முதியோன் பால் வாட்போர் கற்றவரை. (உ0)

என்றவப் போதே கோயிற் கேகினன் மீண்டான் றேடிச்
சென்றவர் சித்தன் றன்னைச் செருக்களத் தடுபோர் செய்து
வென்றனை யேபின் னந்த வெங்களத் தெங்குந் தேடி
நின்றனைக் காணு திங்கு நேர்ந்தனம் யாங்க ளென்றார்.

(இ - ள்) என்று சொல்லிய அப்பொழுதே, கோயிலுக்குப்போன முதியோன் (தன்வீட்டிற்குத்) திரும்பினன். தேடிச்சென்ற மாணக்கர்கள் சித்தனைப் போர்க்களத்தில் கொலத்தொழிலுக்குரிய போர்புரிந்து வென்றனையே, பின்பு அந்தப் போர்க்களத்தில் (எவ்விடத்தும்) காணுமல், இவ்விடத்தில் நாங்கள் தேடிவந்தோம் என்று சொன்னார்கள். (உக)

விரைசெய்தா ரவன்யா னங்கம் வெட்டினே னல்லே னீங்கள்
உரைசெய்வ தெவன்யா ரென்போற் சித்தனை யுடன்று மாய்த்து
வரைசெய்தோள் விந்தைக் கீந்தார் மற்றிது சுற்றும் வைகைத்
திரைசெய்வீர்க் கூட லெந்தை திருவுளச் செயல்கொ லென்றான்.

(இ - ள்) வாசம் வீசும் மாலையையணிந்த சித்தனுடைய அங்கத்தை யான் வெட்டினே னல்லேன். நீங்கள் (இப்படி) சொல்வது என்ன? என்னைப் போல யாவர் வந்து சித்தனைக் கோபித்துக் கொன்று மலைபோன்ற அவனது தோளைத் தறித்துத் துர்க்கைக்குக் கொடுத்தவர்? இது, சூழ்ந்த அலை வீசும் நீர் மயமாகிய வைகை நதியையுடைய மதுராபுரியில் லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளுடைய திருவுளச் செயலோ என்று சொன்னன். (உஉ)

மட்டித்த கலவைக் கொங்கை மணிவியுஞ் சித்தன் றன்னைக்
கிட்டிப்பல் காலும் வந்து கேட்டது நெருநல் வாய்வந்
தொட்டித்தன் கையைப் பற்றி யீர்த்தது முள்ளம் வெந்து
தட்டிப்போய்க் கதவந் தாழிட் டிருந்ததுஞ் சாற்றி னாளே.

(இ - ள்) பூசிய கலவையையுடைய தனங்கள் பொருந்திய மாணிக்க மாலையும், சித்தன் தன்னை நெருங்கிப் பலதாரமும் வந்து (இடமுண்டாவென்று) கேட்டுச் சென்றதும், நேற்றைப்பொழுது வந்து நெருங்கித் தன்கையைப் பிடித்திழுத்ததும், (அதற்கவள்) மனம்வெதும்பி (அவனினின்று) நீங்கிக் கதவினைத் தாள் போட்டிருந்ததுஞ் சொன்னள். (உங)

அம்மனே யருளிச் சொன்ன படியெலா மருளிச் செய்து
தெம்முனே யடுவாள் வீரர் சித்தனே மாய்த்தா ரீது
மெய்ம்மையா மென்று கண்ட மைந்தரும் விளம்பக் கேட்டான்
எம்மையா ளுடைய கூட லிறைவனே யாட்டே யென்றான்.

(இ - ள்) தமது தாயாகிய மாணிக்கமாலே வாய்மலர்ந்து கூறிய அவை யெல்லாம் திருவாய்மலர்ந்தருளி, பகைவர் முனையை மாய்க்கும் வீரனேற்றி வந்தவீரர் சித்தனைக் கொலைசெய்தார். இஃது உண்மையாமென்று பார்த்த தன் மாணக்கருஞ் சொல்லக்கேட்ட முதியோன், எம்மை யாளாகவுடைய மதுரா புரியி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலே என்று கூறினன்.

(வி - ம்) அம்மனே யென்றது ஆசிரியன் மனைவி தாயாகலின்.

தெவ்+முனை = தெம்முனை. "தெவ்வெனமொழியே தொழிற்பெயரற்றே-மவ்வரின் வஃசான் மவ்வு மாகும்" என்பது சூத்திரம். (உ-ச)

கோடியைநே ரிடையா ளோடுங் கொற்றவா ளிலைஞ ரோடுங்
கடியகான் மாடக் கூடற் கண்ணுத லடிக்கீழ்த் தாழ்ந்து
நெடியகான் முகனுந் தேரு நெறியது சிறிய வேலை
அடியனே னளவிற் றேநின் னருள்விளை யாட லென்றான்.

(இ - ள்) பூங்கொடிபோலும் இடையையுடைய மாணிக்கமாலையென்னும் மனைவியோடும், வெற்றியையுடைய வாள்பயிலும் (தன்னுடைய) மாணக்க ரோடும், காவல்புரியும் மதுராபுரியி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவடிக் கீழ்ப்பணிந்து, திருமாலும் பிரமதேவனும் தெளிந்துணராத நெறிய தாகிய உனது அருள் விளையாட்டு சிறிய ஏழையடியேனது அளவினதோ? என்று கூறினன். (உ-டி)

தண்மதி வழிவந் தோனு நகருளார் தாமும் பாதி
விண்மதி மிலைந்த வேணி விடையவ னுடனே னேக்கிக்
கண்மலர் வெள்ளத் தாழ்ந்து கணைகழ லடியிற் ழுழ்ந்து
பண்மலர் கீதம் பாடி யாடினர் பழிச்சி நின்றார்.

(இ - ள்) குளிர்ச்சி பொருந்திய சந்திர மரபிற்றோன்றிய குலோத்துங்க பாண்டியனும் மதுரைப்பதியி லுள்ளவர்களும் அர்த்த சந்திரனைத் தரித்த சடாமுடியையுடைய இடபாரூடராகிய சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளை யாடலைத் தரிசித்து, தமது கண்கள் சொரியும் ஆனந்தக்கண்ணீர் வெள்ளத்தி லழுந்தி, ஒலிக்கும் வீரக்கழலணிந்த திருவடியிற்பணிந்து இசை நிறைந்த கீதங் கள் பாடியாடிப் பணிந்தார்கள். (உ-சு)

வேறு

அடியவருக் கெளியரிவர் பரதேசி காவலென் றடிவீழ்ந் தேத்தி,
வடியயில்வேற் குலோத்துங்கன் மாணிக்க மாலையெனு மனையா
ளோடுங், தொடியணிதோள் முதுமகனைக் களிறேற்றி நகரைவலஞ்

சூழ்வித் திப்பால், முடியணிவித் தனந்தகுண பாண்டியற்குத் தன் னிறைமை முழுது மீந்தான்.

(இ - ள்) வடித்த கூர்மைதங்கிய வேற்படையேந்திய குலோத்துங்கபாண் டியன் அடியார்க் கெளியராகிய இச்சோமசுந்தரக்கடவுள் தமக்கோர் கீளகணில் லாதவரைக் காத்தலில் வல்லவரென்று திருவடியிற் பணிந்து நமஸ்கரித்து, வாகுவலயமணிந்த தோளையுடைய (வாட்போர் பயிற்றும்) மூதுமகனே மாணிக்க மாலை யென்னும் அவன் மனையாட்டியோடும் யானையின்மே லேற்றி மதுரா புரியைப் பிரதக்ஷிணஞ் செய்வித்து, இப்பால் அநந்தகுணபாண்டியனுக்கு மகுடஞ் சூட்டித் தனது அரசுரிமை முழுவதுங் கொடுத்தனன்.

(வி - ம்) பரதேசி - ஓர் இடத்திலும் பற்றின்றிச் சஞ்சரிப்போன். (உ எ)

நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து காணமொரு தெறியே செல்லப், புலனெறிநீத் தருள்வழிபோய்ப் போதமாந் தன்வலியைப் பொத்தி நின்ற, மலவலிவிட் டகலவரா வுமிழ்ந்தமதி போல்விளங்கி மாறி யாடுங், கலைவனடி நிழல்பிரியாப் பேரின்பக் கதியடைந்தான் றமிழ்நர் கோமான்.

(இ - ள்) நிலைப்பொருளையும் நிலையில்லாப்பொருளையும் உணர்ந்து பற் றுக ளொழித்து, அந்தக்காரணங்க ளொருவழிப்பட்டே செல்ல, ஐம்புலன்களின் தெறியினின்று நீங்கித் திருவருள்வழியே சென்று, போதமாகிய தனது வலியை மறைத்து நின்ற ஆணவமலவலி கழன்றொழிய, (விழுங்கிய) இராகு வென்னும் பாம்புமிழ்ந்த சந்திரனைப்போல விளங்கி, கான்மாறியாடிய சோம சுந்தரக்கடவுளுடைய திருவடிநீழலாகிய பிரியாத பேரின்பத்தருஞ் சிவகதியைக் குலோத்துங்க பாண்டியன் அடைந்தனன். (உ அ)

திருவிருத்தம் - கசுஉ.

இருபத்தெட்டாவது
நாகமெய்த படலம்

செங்கண் மால்விடை மேல்வி டங்கர்செ ருக்க ளத்திடை வாளெடுத்
தங்கம் வெட்டியீ சேவ கத்தைய றைந்த னந்தமிழ் மாரன்பேர்ந்
சங்கை யிட்டம ணீச ராற்றிய தறுகண் வேள்விமு ளைத்தெதார்
வெங்கண் வாளர வைத்து ணித்துவி ளித்த வாறுவி ளம்புவாம்.

(இ - ள்) (தாமரைமலர்போலுஞ்) சிவந்த விழிகளையுடைய திருமாலாகிய இடபவாகனத்தின்பேரில் எழுந்தருளும் அழகாகிய சோமசுந்தரக்கடவுள் போர்க்களத்தில் வாட்படை தாங்கி (துன்மார்க்கனுகிய சித்தனுடைய) அங்கம் வெட்டிய திருவிளையாடலைக் கூறினேம். பாண்டியன்பேரில் விரோதமுற்றுக் கொடியோராகிய சமணர் செய்த தீய யாகத்தில் தோன்றிய, கொடிய கண்களையுடைய ஓர் ஒளி பொருந்திய சர்ப்பத்தைத் துண்டித்துக் கொன்றருளிய திருவிளையாடலையும் (யாம் இனி) கூறுவாம்.

(வி - ம்) தமிழ் மாறன் - "மருவுமூத் தமிழை முன்னுள் வளர்த்த பாண்டியனேபோல" எனக்கூறியதற்கேற்ப, தமிழ்வளர்த்த பாண்டியனெனப் பொருள் கொள்க. மூலத்தது - முற்றெச்சம். (க)

கோதி லாத குணத்த னந்தகு ணப்பெ ருந்தகை மீனவன்
ஆதி நாயக னுருவ மாகிய வைந்தெ ழுத்தொடு கண்டிவெண்
பூதி சாதன மாவ தேபொரு ளென்னு பத்திமை பூண்டுதன்
தாதை யேமுத லாய மன்னவர் தம்மி னுந்தலை யாயினன்.

(இ - ள்) குற்றமில்லாத குணத்தையுடைய அனந்த குணனென்னும் பெருந்தகைமையுடைய பாண்டியன் சோமசுந்தரக்கடவுளுடைய திருவுருவமாகிய திருவைந்தெழுத்துடன் உருத்திராக்க கண்டிகையும் தாவள்யமான விபூதியும் ஆகிய சிவசாதனமே உண்மைப் பொருளென்று சிவநேயம் பூண்டு தன் தந்தையே முதலாகிய பாண்டியர்களிலும் சிவபத்தியிற் சிறந்தவனுயினன்.

(வி - ம்) "கோதிலாத குணத்த" என்னும் அடை அனந்தகுணனென்னும் பெயர்க் காரணத்தாற் குற்றமின்மை விளங்கப் போந்தது. பத்திமையெனக் குணியைக் குணமாகக் கூறியது மாபு வழுவமைதி. (உ)

அத்த கைச்சிவ சாத னந்தனி லன்பு மிக்கவ னெழுகலால்
அத்தன் மெய்த்திரு வைந்தெ ழுத்தொலி யாலு நீற்றொளி யாலுமுட்
பைத்த வல்லிரு ளும்பு றத்திரு ளுஞ்சி தைத்துப ராபரன்
வித்த கத்திரு வேட மானது மீன வன்றிரு நாடெலாம்.

(இ - ள்) இத்தன்மையான சிவசாதனத்தில் அன்பு மிகுந்து அனந்தகுண பாண்டியன் ஒழுகுதலால், சிவபெருமானுடைய உண்மையாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்

தின் ஒசையாலும், திருநீற்றின் பிரகாசத்தாலும், (உயிர்களின்) அகத்திற் பரந்த வலிய (அஞ்ஞான)இருளும், புறத்திலுள்ள (பூத) இருளுங்கெட்டு, அப்பாண்டிய னுடைய அழகிய நாடு முழுவதும் சிவஞானம் பொருந்திய திருவேடமாகப் பொலிந்தது.

(வி - ம்) ஐந்தெழுத் தொலியால் அகவிருளும், நீற்றொளியால் புறவிரு ளும் சிதைந்து என முடித்துக்கொள்க. இது முறை நிரனிறை. (சு)

நாயி னுங்கடை யான மாசுட னள்ளி ருட்புலை நெஞ்சுரெண் ணுயி ரஞ்சமண் வேட ரன்ன தறிந்து கொண்டுவெ குண்டழற் றீயி ரும்பென மான வெங்கனல் சுட்டி டத்தரி யார்களாய் மாயி ருந்தமிழ் மாற னேத்தெற வஞ்ச வேள்வியி யற்றுவார்.

(இ - ள்) நாயைக் காட்டிலுங் கீழ்ப்பட்ட அழுக்குப்படிந்த சரீரத்தை யுடைய பேரிருள்போன்ற மனத்தையுடைய எண்ணுயிரம் சமணகுரவர்களும் அதனையுணர்ந்து சினங்கொண்டு, நெருப்பிற்காய்ச்சிய இரும்புபோல மானமா கிய கொடிய நெருப்பானது சுட்டுவருத்த (மனம்) பொருதவர்களாய், பெருமை பொருந்திய தமிழ்வளர்க்கும் பாண்டியனைக் கொல்ல ஆபிசாரயாகஞ் செய்யத் தொடங்கினார்கள்.

(வி-ம்) அறிந்துகொண்டு-தற்பொருட்டுப் பொருளில்வந்த வினையெச்சம்.

எல்லை காதம ளந்து சாலையெ டுத்த முற்படி குண்டமுங் கல்லி யாரழ லிட்டெ ழும்புகை கௌவி யெண்டிசை களுமுறச் செல்ல வானவு டுக்க ளும்பொரி யிற்பொ திர்ந்தன சிதறமீண் டொல்லை தாவிவி சும்பு தைவர வோட்டி வெங்கனல் மூட்டினர்.

(இ - ள்) ஒரு காததூரம் அளந்து சாலைகோலி, தீவளர்க்கும் யாககுண்ட மும் தோண்டி, நிறைந்த நீயை அக்குண்டத்திலிட்டு,(அக்குண்டத்தினின் றும்) எழும்புகையானது பரந்து அட்டதிசைகளிலும் பொருந்தச் செல்லவும், ஆகா யத்திலுள்ள நக்ஷத்திரங்களும் பொரிபோலப் பொரிந்து சிதறவும், ஓங்கி விரைந்து தாண்டி ஆகாயமளாவவும் இடைவிடாது கொடிய யாகாக்கினியை மூட்டினர்கள். (டு)

அத்த முன்றெரி குண்ட நின்றும கன்பி லத்தெழு வானெனப் பைத்த தஞ்சிருள் வாயும் வாயிரு பாலும் வாலிய பகிர்மதிக் கொத்து நஞ்சின மொழுகு பற்களு மூழி யாரழல் விழிகளும் வைத்த சைந்தொரு வெற்பு வந்தென வந்து ளானெரு தானவன்.

(இ - ள்) அந்தக் கொதித்தெரியும் யாககுண்டத்தினின்று பரந்த பாத லத்தினின்று எழுந்திருப்பவனைப்போலவும், பரந்த நிலைபெற்ற இருள்போன்ற வாயையும், வாயின் இருபக்கலிலும் வெள்ளிய அர்த்த சந்திரர்போன்ற விஷம் பொருந்திய (வக்கிர) தந்தங்களையும், நிறைந்த ஊழித்தீயைச் சொரியும் விழி களையுங் கொண்டு, அசைந்து ஒரு மலை வந்தாற்போலவும் ஓர் அசுரன் வந்து தோன்றினன்.

(வி - ம்) குண்டம் நின்று ஒரு தானவன் வந்துளானென முடித்துக் கொள்க. (சு)

உதித்த செங்கண ரக்க வஞ்சனு ருத்தெ ழுந்தெரி வடவையிற்
கொதித்த டும்பசி தாக முங்கொடி தாலெ னக்கொடி யோரைநீர்
விதித்தி டும்பணி யாதெ னக்கென மீன வன்றனை மதுரையோ
டெதிர்த்தெ டுத்துவி ழுங்கி வாவென வெவி ளருட னேகினன். (எ)

(இ - ள்) (அவ்வாறு) தோன்றிய சிவந்த கண்களையுடைய வஞ்சகனுகிய இராட்சதன் கோபித்தெழுந்து எரிகின்ற வடவாமுகாக்கினிபோலப் பொங்கி, கொல்லத்தக்க பசியுடனே தாகமுங் கொடிதாயுள்ளதென்று கொடிய சமணர்களை, நீங்கள் எனக்கு விதிக்கும் கட்டளையாதென்று வினவ, மீனக்கொடி தாங்கிய பாண்டியனை மதுரையோடு எதிர்த்து எடுத்து விழுங்கிவா என எவினர்கள் (அசுரன் அக்கட்டளை யேற்று) உடனே சென்றனன். (எ)

வேறு

பாயுடை யவர்விட விடநாகப் படிவுகொ ணிசிசர னிலனண்டந்,
தோயுட லினனுடல் விடமூறிச் சொரிதொளை யெயிறினன் வடவைச்
சேந், தீயுடை யனலென வெரிகண்ணன் றிணியிருள் வரைமுழை
யென விண்ட, வாயுடை யவனெடு நெறிமுன்னி மழைதுழை வரை
யென வருகின்றனன்.

(இ - ள்) பாயை ஆடையாகவுடுத்த சமணர்கள் ஏவ, விஷம்பொருந்திய பாம்பு வடிவங்கொண்ட இராகூதன் நிலவுலகினின்றும் விண்ணுலகளாவுஞ் சரீரமுடையவனுகி, வருத்துகின்ற விஷமானது ஊற்றெடுத்துச் சிந்தும் தொளை பொருந்திய வக்கிரதந்தங்களை யுடையவனுகி, சிவந்த வடவாமுகாக்கினியையுடையனவென்று சொல்லும்படி தீச்சொரியுங் கண்களையுடையவனுகி, திணிந்த இருள்மயமான மலைக்குகைபோல் பிளந்த வாயையுடையவனுகி, நெடிய வழியில் முற்பட்டு மேகங்கள் சஞ்சரிக்கும் மலைபோல வருகின்றவனனென்.

(வி - ம்) எயிறினன் - கண்ணன் - உடையவன் என்னுங் குறிப்பு வினை முற்றுக்கள் வேறுபல வடுக்கி வினையெச்சங்களாய்த் தனித்தனி வருகின்றன என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தன. (ஏ)

அரவிறை யுறைபிலம் வெளிகாண வரையுடல் புதைபட நிலம் விள்ள, வருவிழி யழலெழ வுயிர்காண்முன் வளியுளர் கிளர்வலி விளியெய்தப், பொருசின விழியெதிர் படுபைங்கூழ் புகையெழ வனமரை பொரிபொங்கர், கருகிட முதுசிறை யிறைகொள்ளுங் ககநிலை சிறை சுருள் படவீழ.

(இ - ள்) சர்ப்பராசனுகிய ஆதிசேடன் வாழும் பாதலம் பிளவுறும்படி மலை போன்ற தனது சரீரம் புதைதலால் பூலோகம் பிளவுறவும், கண்களினின்று

கோபாக்கினி யெழவும், விடுகின்ற மூச்சின் முன்னே சஞ்சரிக்குங் காற்றினது வன்மை கெடவும், போர்புரிதற்குரிய கோபம் பொருந்திய கண்களுக் கெதிர்ப் பட்ட பசிய பயிர்கள் புகைக்க வாடவும், காடுகளும் பொருக்குகள் பொருந்திய தூரையுடைய சோலைகளுங் கருகவும், பெரிய மரக்கிளைகளில் வசிக்கும் பறவைக் கூட்டங்கள் சிறகுகள் சுருண்டு (நிலமிசை) வீழவும்.

(வி - ம்) இச்செய்யுளும் வருஞ் செய்யுளும் ஒரு தொடர். (கூ)

அக்கினிலம் வெருவுற நிலனேந்து மாவிறை வெருவுற வெயில் காலும், பகன்மதி வெருவுற மிவைகௌவும் பணிகளும் வெருவுற அகல்திக்கின், புகர்மலை வெருவுற வடுதண்டப் புரவலன் வெருவுற வருசெங்கண், நகைமதி புரையெயி றவன்மாட நகரெதிர் குடவயின் வருமெல்லை.

(இ-ள்) பரந்த நிலவுலகம் அஞ்சவும், அந்த நிலவுலகத்தைத் தாங்கும் சர்ப்பராஜனுகிய ஆதிசேடன் அஞ்சவும், ஒளிவீசுஞ் சூரிய சந்திரர் அஞ்சவும், சூரிய சந்திரர்களைப் பற்றும் இராகுகேதுக்கள் அஞ்சவும், அகன்ற திக்குகளிலுள்ள புள்ளிதங்கிய அஷ்டகுல பர்வதங்கள் அஞ்சவும், கொலைசெய்யுந் தண்டாயுத மேந்திய இயமன் அஞ்சவும் வராகின்ற சிவந்த கண்களையும் பிரகாசிக்கின்ற அர்த்தசந்திரன்போன்ற பற்களையுமுடைய இராட்சதன், மாடங்கள் பொருந்திய மதுராபுரிக்கெதிரே மேலைத்திசை (நோக்கி) வருங்காலையில். (கo)

கண்டவர் கடிநகர் கடிதோடிக் கௌரிய னடிதொழு தடிகேணங், கொண்டல்கண் வளர்மதில் வளைகூடற் குடவயி னெருபெரு விடநாகம், அண்டமு மகிலமு மொருவாயிட் டயிறர வருவதை யெனநீள்வாய், விண்டுகொண் டணைவதை யெனலோடும் வெருவலன் மதிகுல மறவீரன்.

(இ - ள்) பார்த்தவர்கள் காவல்பொருந்திய மதுராபுரிக்கு விரைந்துபோய், பாண்டியனுடைய பாதங்களைப்பணிந்து, அடிகளே! நமது மேகங்கள் அயிலும் மதில் சூழ்ந்த மதுரையின் மேலைத்திசை (நோக்கி) பெரிய விஷத்தையுடைய ஒரு சர்ப்பமானது அண்டங்களையும் நிலவுலகத்தையும் ஒருவாயிற் போட்டுண்ண வருவதுபோல நீண்ட வாயைத் திறந்து வருகின்றதென்று சொல்லவும், சந்திரவமிசத்திற்றோன்றிய பாண்டியன் (அவ்வார்த்தைக்குச் சற்றும்) அஞ்சாதுயினன். (கக)

மற்றிது மூனமத கரிவிட்டோர் வாவிட வருவதை யெனவெண்ணம், உற்றிது தனையும் விளித்தற்கெம் முடையவர் விடையவர் விடநாகஞ், சுற்றிய சடையின ருளரென்னுச் சுரருல கிழிசுட லென நிற்குங், கற்றளி யிடையுறை யிறைமுன்போய்க் கணைகழ லடிதொழு தறைகிற்பான்.

(இ - ள்) இந்தச்சர்ப்பமானது மதமயக்கத்தையுடைய யானையைமுன்னே ஏவிய சமணர்கள் செலுத்த வருவது என்று எண்ணங்கொண்டு இதனையுங்கொல்

லுவதற்கு, எம்மை யாளாகவுடையவரும் இடபவாகனரூடரும் விடம்பொருந்திய சர்ப்பத்தைச்சூழ்ந்த சடையையுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள் அணை யுள்ளாரென்று, தேவலோகத்தினின்று மிறங்கிய சூரியனைப்போல விளங்கும் மாணிக்கத்தாலமைந்த விமானத்தில் எழுந்தருளிய பெருமானது சன்னிதியிற் சென்று,சத்திக்கும் வீரக்கழலணிந்த திருவடியைப் பணிந்து சொல்கின்றனன்.

வழிவழி யடிமைசெய் தொருபோது மறவலன் வழிபடு மடியேனின்
மொழிவழி முறைசெய்து வருவேனிம் முதுநக ரடையவு மமர்நீசர்
அழிவது கருதினர் விடுநாக மடைவது னருள்வழி யதனுவி
கழிவது கருதிய வடியேனைக் கருணைசெய் தருளிது கடனென்றார்.

(இ - ள்) என் மரபுவழியே அடிமை செய்து ஒரு காலத்தும் மறவாது வழி பாடு செய்யும் அடியேன், தேவரீரது திருவார்த்தைகளாகிய வேதாகமங்களின் வழியே அரசியல் செய்துவராநின்றேன். சமணர்களாகிய நீசர்கள் இத்தப்பழைய மதுராபுரி முழுவதும் அழிவதைக்கருதி ஏவியசர்ப்பம் வராநின்றது. தேவரீரது திருவருளின் வழியே அத்தச் சர்ப்பத்தின் உயிர் நீங்குதலைக் கருதிய அடியே னுக்குத் திருவருள் செய்தருளுவீர். இது தேவரீரது கடனென்று குறை யிரந்தான். (கஉ)

அணிமதி கொடுதொழு திறைபாத மகமதி கொடுபுற னடைகின்ற
பனிமதி வழிவரு தமிழ்மாறன் பகழியொ டடுகில யினனேகிக்
குனிமதி தவழ்தரு மதினீடுங் கொடியணி குடகடை குறுகாமுன்
கனிவரை யெனநிகர் தருகோபத் தழல்விழி யரவினை யெதிர்கண்டான்.

(இ - ள்) விடைபெற்று மீண்டும் வணங்கி, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைத் தனது மனத்திற்கொண்டு செல்கின்ற குளிர்ந்த சுந்திரமரபிற் றோன்றிய அனந்தகுண பாண்டியன், பாணத்தோடு கொலைத்தொழிற்குரிய வில்லை யேந்தியவனுய்ச் சென்று வளைந்த சந்திரன் தவழாநின்ற மதிலில் ஓங் கிய துவசங்கட்டிய மேற்றிசைவாயிலையடைவதற்கு முன், ஒப்பற்ற மலையென்று சொல்லத்தக்க (கோபத்) தீச்சொரியுங் கண்களையுடைய சர்ப்பத்தை எதிரே கண்டான். (கக)

வேறு

பல்பொறிப் பகுவாய்ப் படம்புடை பரப்பிப் பக்கமெண் டிசை
யொடு விசும்பிற், செல்கதிர் புதைத்துத் திணியிருள் பரப்பித் திங்
களின் பகிர்புரை நஞ்சம், பில்கெயி றதுக்கிப் பெரிதுயிர்க் தகல்வாய்
பிளந்துமா நகரெலா மொருங்கே, ஒல்லெனக் கௌவி விழுங்குவான்
சீறி யுருத்தன னுரகவா ளவுணன்.

(இ - ள்) பல புள்ளிகளையும் பிளந்தவாயையுமுடைய படங்களைப் பரப்பி, பக்கங்களிலுள்ள அஷ்டதிக்குகளையும் ஆகாயத்திற் செல்லுஞ் சூரியனையும் மறைத்து, நெருங்கிய இருளைப் பரப்பி, அர்த்தசந்திரன்போன்ற விஷமுஞ்சொரி யும் வக்கிர தந்தங்களை அதுக்கிப் பெருமூச்சுவிட்டு, அகன்றவாயைப் பிளந்து

பெரிய நகரையெல்லாம் ஒரு சேரக் கௌவி வீழுங்க, ஒள்ளிய சுற்பவடிவாய் வந்த இராகூதன் சீறிக் கோபித்தான். (கடு)

அடுத்தன னரச சிங்கவே றிடியே றஞ்சவார்த் தங்கையிற் சாபம், எடுத்தன னெடுநா ணிருதலை வணக்கி யெரிமூகக் கூர்ங்கணை தொடுத்து, விடுத்தனன் விடுத்த சரமெலா முரகன் வெறுக்துகள் படக்கறித் துமிழ்ந்து, படுத்தனன் பொறுது பஞ்சவன் புராரி பங்க யச் சேவடி நினையா.

(இ - ள்) அரசருள் ஆண்சிங்கம்போன்ற அகந்தகுண பாண்டியன் சமீ பித்து, இடியேறு அஞ்சும்படி கோஷித்து, அழகிய தனது கையில் வில்லைத் தாங்கி நெடிய நாணேச் செவ்வே வளைத்து, தீமுகத்தையுடைய கூரிய அம் பைத் தொடுத்து விடுத்தான். விடுத்த அம்புகளெல்லாம் பாம்பின் வடிவாக வந்த அந்த ராகூதன் வெறுக்துளாகக் குடித்து உமிழ்ந்து சிதைத்தான். பாண் டியன் மனம்பொறுமல் சோமசுந்தரக் கடவுளினுடைய தாமரை மலர்போன்ற சிவந்த திருவடியைத் தியானித்து.

(வி - ம்) புராரி - திரிபுரங்களேச் சிரித்தெரித்தவன்; சிவபெருமான். (கசு)

கோடியதோர் பிறைவா யம்பினே விடுத்துக் கோளரா வளையுடல் துணித்தான், இடியதோ வெனவார்த் தெரிநிறக் குருதி யிரங்கிவீ ழுருவியிற் கவிழ, நெடியதோ ருடலம் புரள்படக் கூர்வா னெளிதர விளிபவன் மேலைக், கடியதோ ரால காலவெள் ளம்போற் கக்கினுன் கறையிருள் நஞ்சம்.

(இ - ள்) கொடிய ஓர் அர்த்த சந்திராஸ்திரத்தைச் செலுத்தி வலிய பாம்பின் வளேத்த உடலத்துண்டித்தான். இடியோவென்னும்படி கோஷித்துச் செங்நிறம் பொருந்திய இரத்தமானது ஒலித்து வீழும் அருவியைப்போலக் கவிழவும், நெடிய ஒப்பில்லாத சரீரம் புரளவும், கூரிய வால நெளியவும் இறக் கும் இராகூதன் முன்தோன்றிய கடிய ஒப்பில்லாத ஆலகாலவெள்ளம்போலக் கரிய இருள்போன்ற விஷத்தைக் கக்கினுன்.

(வி - ம்) கடியதோர் ஆலகாலவெள்ளம் போல என்றது பாற்கடலிற் றோன்றிய விஷம் போல என்பதாம். (கள)

தீவிட முருத்துத் திணியிருள் கடுப்பத் திருநக ரெங்கணுஞ் செறிந்த காவிடங் கூவல் கபந்தலே சதுக்கங் கழகமா வணமக ழிஞ்சி கோவிட மாட முபரிகை மேடை கோபுர மரங்கெலாம் பாந்து தாவிட மயங்கி யுறங்கினுர் போலச் சாம்பினுர் தனிநகர் மாக்கள்.

(இ - ள்) தீப்போன்ற விஷம் கோபித்துத் திணிந்த இருள்போல மதுரை நகாமுழுவதும், நெருங்கிய சோலேயும், திணறும், குளமும், சுற்றெருக் கூடு மிடமும், கல்விச்சாலேயும், கடைவீதியும், அகழியும், மதிலும், இராசகிருக மும், மாடமும், உபரிகையும், மேடையும், கோபுரமும், காட்டியசாலேயுமாகிய எல்லாவற்றிலும் பரந்ததாவ, ஒப்பில்லாத நகரத்திலுள்ள மாந்தர்கள் (விடத் தால்) மயங்கி உறங்கினவர்கள் போல வாடினுர்கள். (கஅ)

நீலைகளர்ந் துடலந் திமிர்ந்துவேர் வரும்பி நிறைபுலன் பொறிகர ணங்கள், தலைதடு மாறி யுரைமொழி குழறித் தழுதழுப் படைந்துநா வுணங்கி, மலைதரு கபமே னிமிர்ந்துணர் வழிந்து மயங்கிமூச் சொடுங்கி யுள் ளாவி, அலைதர வுச லாடினூர் கிடந்தா ரன்னதொன் னகருளா ரெல்லாம்.

(இ - ள்) நிலைகெட்டு, உடல் கம்பித்து, வேர்வை யரும்பி, நிறைந்த புலன் களும் இந்திரியங்களும் அந்தக் காரணங்களும் (தத்தமக்குரிய) இடங்களைவிட்டு தடுமாறுதலால் சொற்கள் குழறித் தழுதழுப்பேறி நாவுலர்ந்து, அதிகப்பட்ட கபம் மேலெழுந்து, அறிவழிந்து, மயங்கிப் பெருமூச்சுவிட்டு அந்தத் தொன்றுதொட் டுள்ள மதுரையிலுள்ளாரெல்லாரும் உள்ளேயுள்ள பிராணன் ஊசல்போலவே யத் தள்ளாடிக் கிடந்தார்கள். (கக)

தென்னவன் விடங்கண் டஞ்சுமால போலச் சினகர மடைந்து தாழ்ந் தெந்தாய், முன்னவ வாதி முதல்வவித் தின்றி மூவாத்தவ முடிவிலா முனிவ, என்னவ வன்பர்க் கெளியவ யார்க்கு மிறையவ இருகைக் கென்றும், மன்னவ வஞ்சி மறையவ மூக்கண் வானவ நின்னச்சர ணடைந்தேன்.

(இ - ள்) அனந்தகுண பாண்டியன், விஷத்தைக்கண்டு அச்சமுற்று (கைலயிற் சென்று சரணடைந்து) நின்ற திருமால்போல, திருக்கோயிலை யடைந்து பணிந்து, எந்தையே! முதற்கடவுளே! ஆதியாகிய முதல்வனே! மூலமில்லாமல் தோன்றியவனே! அழிவில்லாத முனிவனே! எனக்குப் புத மையை விளைவிப்பவனே! அடியார்க் கெளியவனே! (தேவர் முதலிய) எல் லோருக்கும் தலைவனே! இம்மதுராபுரிக்கு எப்பொழுதும் அரசனுள்ளவனே! அனாதியாயுள்ள வேதியனே! திரிநேத்திரங்களையுடைய கடவுளே! உன்னைச் சரணடைந்தேன். (உ0)

அடித்துவந் தலைக்கு மாழியைத் தூசந்து மாழியுண் டேழுமொன் றுகத், தொடுத்துவந் தலைக்கும் பெருமழை தடுத்துந் தலைக்கை விண் டுழாவவெண் பிறைக்கோ, டெடுத்துவந் தலைக்குங் களிற்றினை விளித்து பிந்நகர் புரந்தனை யின்று, மடித்துவந் தலைக்கும் விடத்தி னுன் மயங்கும் வருத்தமுங் கலாதியென் றிரந்தான்.

(இ - ள்) அடித்துவந்து வருத்துங் கடலைச் சுவறச்செய்தும், கடல் பருகிச் சத்தமேகங்களும் ஒன்றுகத் திரண்டுவந்து பெய்து துன்புறுத்தும் பெருமழை யைத் தடுத்தும், வெள்ளிய அர்த்த சந்திரன் போன்ற கொம்பினிடையே தந்திக்கையை விண்ணுலகந்தழாவ மேலெடுத்து வருத்தும் யானையைக் கொன் றும், இந்த மதுரைப்பதியைப் பாதுகாத்தாய்; (அவைபோல) இப்பொழுதும் அடித்துவந்து வருத்தும் விஷத்தினுல் மயங்கும் வருத்தத்தையுங் களைவா யென்று யாசித்தான்.

(வி - ம்) இச்செய்யுள் பழமையைப் பாராட்டிப் பிரார்த்தித்ததாம்.

கடல்சுவற வேல்விட்டதும், கான்மாடக் கூடலானதும், யானையெய்ததும் தன் மூதாதைகள் பொருட்டும் மதுரை வாசிகள் பொருட்டு மாதலின் இப் பொழுதும் இவ்விடவேகத்தைத் தன் பொருட்டும் அங்கீகரத்தார் பொருட்டும் தவிர்க்க வேண்டுமென்று பாண்டியன் யாசித்தான். (உக)

அருட்கட லனைய வாதிநா யகன்ற னவிர்சடை யணிமதிக் கொழுந் தின், பெருக்கடை யுமுதத் தண்டுளி சிறிது பிலிற்றினுன் பிலிற்றிட லோடும், பொருக்கென வெங்கும் பாவினிற் பிரைபோற் புரையறக் கலந்துபண் டுள்ள, திருக்கிளர் மதுரா நகரமாப் புனிதஞ் செய்ததச் சிறுதுளி யம்ம.

(இ - ள்) திருபா சமுத்திரம்போன்ற சோமசுந்தரக்கடவுள் தமது பிர காசிக்கின்ற சடையிலணிந்த சந்திரனது பெருக்கமைந்த அமுதத்தின் தட்ப மாகிய துளியைச் சிறிது சிந்தினர். (அவ்வாறு) சிந்தவும், பாலிற் பிரைபோல விரைந்து எவ்விடத்திலும் குற்றமறக் கலந்து, முன்னமைந்த செல்வமிக்க மதுராநகரமாக அந்தச் சிறிய அமுததுளியால புனிதஞ் செய்தது.

(வி - ம்) அருட்கட லென்பதற்குச் சித்தமூர்த்தியாய் வந்தருளிய கரு ணைக்கடலெனவும் பொருள் கூறுவர். (உஉ)

இரவிமுன் னிருள தெனவிறை யருண்முன் னிருண்மல வலி யென வெங்கும், பரவிய வமுதால் விடமகன் றவசப் படிவொழிந் தியாவரு மின்பம், விரவிய களிப்பின் மேவினு நிருந்தார் மீனவர் பெருந்தகை வேந்தன், அரவணி சடையார்க் கன்புருத் தானே யாகி மண் காவல்செய் திருந்தான்.

(இ - ள்) சூரியன் சந்திரிக்குமுன்னே இருள் (ஓடுதல்) போலவும், சிவ பெருமானது திருவருளின் முன்னே ஆணவமலத்தின் வலிமை (சிதைதல்) போலவும், எவ்விடத்திலும் பரவிய அமுதத்தினல் விஷத்தன்ப மகன்று எல்லோரும் தக்க சொரூபம் நீங்கி இன்பங்கலந்த சந்தோஷத்திற் பொருந்தி யிருந்தார். பாண்டியருள் பெருந்தகைமையமைந்த அனந்தகுண பாண்டி யன் சர்ப்பத்தையணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுளுக்கு அன்பே ஒரு வடிவமாகி நிலவுலகத்தைப் பாதுகாத்திருந்தான்.

(வி - ம்) சூரியன்முன் இருள் கெடுதலும், சிவசந்நிதியில் ஆணவவலி கெடுதலும் போல, அமுதத்தின்முன் விடவலி நீங்கியது என்பதாகருத்து. (உங)

ஆ திருவிருத்தம் ககஉடு.

இருபத்தொன்பதாவது
மாயப்பசுவை வதைத்த படலம்

சுருதி யின்புறத் தவர்விடு மாயினைச் சுருதி
கருத ரும்பர னருளுடைக் கௌரியன் றுணித்த
பரிசி தங்கது பொழுதமண் படிதர்பின் விடுப்ப
வருபெ ரும்பசு விடையினுன் மாய்த்ததும் பகர்வாம்.

(இ - ள்) வேதபாஹ்யர்களாகிய சமணர்களேவிய சர்ப்பத்தை, அவ்வேத மானது சிந்தித்தற்கரிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளுடைய அனந்த குணபாண்டியன் துண்டித்த தன்மை இத்திருவிளையாடல். அச்செயல்கண்டு மனஞ்சகியாத சமணர்களாகிய வஞ்சகர் பின்னே செலுத்தவந்த பெரிய பசுவை, அதிகாரநந்திதேவரால் (சோமசுந்தரக்கடவுள்) வதைத்தருளிய திரு விளையாடலை (இனி யாம் எடுத்துக்) கூறுவாம். (க)

பணப்பெ ரும்பகு வாயுடைப் பாந்தளை யனந்த
குணப்பெ ருந்தகை துணித்தபின் பின்வரு குண்டர்
தணப்ப ருங்குழாங் காலினுற் றள்ளுண்டு செல்லுங்
கணப்பெ ரும்புயல் போலுடைக் தோடின கலங்கி.

(இ - ள்) படமமைந்த பெரிய பிளவுபட்ட வாயையுடைய சர்ப்பத்தை அனந்தகுண பாண்டியன் துண்டித்துச் சிதைத்த பிறகு, ஆச்சர்ப்பத்தின் பின்னே வந்த நீங்குதலில்லாத சமணக் கூட்டத்தவர், காற்றினுல் கலக்குண்டு சிதைந்தோடும் பெரிய மேகசாலம்போலப் புறமுதுகிட்டு நிலைகலங்கி யோடி னார்கள். (உ)

உடைந்து போனவ ரினவரு மோரிடத் திருள்போல்
அடைந்து நாமுன்பு விடுத்தமால் யானைபோ லின்று
தொடர்ந்த பாம்பையுந் தொலைத்தனர் மேலினிச் சூழ்ச்சி
மிடைந்து செய்வதை யாதென வினயமொன் றோர்வார்.

(இ - ள்) புறமுதுகிட்டோடிய யாவரும் இருள்போல ஒரிடத்திற்சேர்ந்து நாம் முன்புவிடுத்த மதமயக்கத்தையுடைய யானையைச் சிதைத்ததுபோலவே இப்பொழுது விடுத்த நாகத்தையும் நாசஞ்செய்தனர். இனிமேல் நாம் ஒருசே நெருங்கி ஆலோசிப்பது யாதுளது? என்று, ஒரு வினயத்தை எண்ணத் தொடங்கினர்கள். (ங)

ஆவை யூறுசெய் யார்பழி யஞ்சுவா ரதனை
ஏவு வாமிது வேபுணர்ப் பென்றுசூழ்ந் திசைந்து
பாவ காரிகள் பண்டுபோற் பழித்தழல் வளர்த்தார்
தாவி லாவுரு வாகியோர் தானவன் மூளைத்தான்.

(இ - ள்) பசுவைக் கொலைசெய்யார்கள்; பழிக்கஞ்சுவார்கள்; அதனை விடுப் போம்; இதுவே ஆலோசனையென்று சூழ்ச்சிசெய்து எல்லோருமொத்து, பாவ காரிகளாகிய சமணர்கள் முன்போல ஆபிசாரயாகஞ் செய்தார்கள்; கெடுதலில் லாத பசுவின்வடிவாகிய (அவ் யாகாக்கினியில்) ஓர் அசுரன் தோன்றினன்.

(வி - ம்) ஆவையூறு செய்யார் என்றது பசுவின் வடிவத்தில் தேவர் யாவ ரும் மிடைந்திருத்தலினென்க. இதனை, திருத்தொண்டர்புராணம் சண்டேசுர நாயனர் சரித்தத்தும், சிவதருமோத்தரம் கோபுரவியலிலுங் கண்டுகொள்க. (கூ)

குண்ட முழக்கணின் றெழுந்தவக் கொடியவெம் பசுவைப்
பண்டு போலவர் விடுத்தனர் கூடலம் பதிமேல்
உண்டு மில்லையு மெனத்தடு மாற்றநூ லுரைத்த
பிண்டி யானுரை கொண்டுழல் பேயமண் சூண்டார்.

(இ - ள்) உண்டென்றும் இல்லையென்றுங் கூறுந் தடுமாற்றத்தையுடைய நூலைக்கூறிய அசோகநிழலில் வசிக்கும் அருகனுடைய பொய்யுரையை (மெய் யெனக்) கொண்டு திரியும் பேய்க்குணம்வாய்ந்த சமணராகிய கீழ்மக்கள், யாகத் தீயினின்று மெழுந்த அக்கொடிய பசுவை, மதுரைப்பதியின்பேரில் முன போல ஏவினர்கள்.

(வி - ம்) உண்டுமில்லையுமென என்றது "அஸ்தி நாஸ்தி" எனக்கூறுவது இது அவர் தத்துவார்த்தமொழி. [அஸ்தி - தாம் கூறியது உள்ளதெனவும், நாஸ்தி சுவர்க்கம் நரகம் கடவுள் இல்லையெனவுங் கூறல்] பிண்டியான் உரை என்பது பூர்வாகம முதலிய நூல்கள். அகை—பூர்வாகமம் - அங்காகமம் - வெகு சுருதி முதலியன. (கு)

வேறு

மாடமலி மாளிகையி லாடுகொடி மானக்
கோடுகளி னேடுமுகில் குத்திமிசை கோத்துச்
சேடன்முடி யுங்கதிர்கொள் சென்னிவரை யுந்தூள்
ஆடவடி யிட்டுலவை யஞ்சிட வுயிர்த்தே.

(இ - ள்) மேல்மாடங்கள்மிக்க மாளிகையில் ஆடாகின்ற கொடிகளைப் போல, தனதுகொம்புகளினால் ஆகாயத்திலோடும் மேகங்களைக்குத்தி அவற்றின் மேற்கோத்து, ஆதிசேடன் முடியும் விளக்கமடைந்த சிகரத்தையுடைய மக மேருவும் பொடிபடக் கால்(பெயர்த்து) வைத்து, காற்றஞ்சும் பெருமூச்சுவிட்டு,

இதுமுதல் நான்கு பாடல்கள் குளகம். (சு)

விடுத்திடுமு யிர்ப்பினெதிர் பூளைகரை வீபோல்
அடுத்திடுசி ராசமணைத்துமிரி வெய்தக்
கடுத்திடுகி னக்கனலி னுக்குலக மெல்லாம்
மடுத்திடுத முற்கடவுள் வார்புனலி மான.

(இ - ள்) பெருமூச்சிற்கு எதிர்ப்பட்ட நிலையிற்பொருளும் இயங்கியற் பொருளுமாகிய யாவும், தேன் சொரியும் பூளைப்பூப்போலப் பறக்கவும், மிகுத்த

கோபாக்கினிக்கு உலகமுழுவதையும் அழிக்கப் பார்த்த நீக்கடவுள் வெப்பங் குறைந்து பெருகிய நீர் வெள்ளத்தை யொப்பத் தண்ணியதாகவும்.

(வி - ம்) இதன் •கோபாக்கினிக்கு வடவாமுகாக்கினியும் குளிர்ந்துள்ள தன்மைபோலுமிருக்குமென்பார், "உலகமெலா மடித்திடு தழற்கடவுள் வார் புனலே மான" என்றார். (எ)

உடன்றிறைகொள் புள்ளொடு விலங்கலறி யோட
மிடைந்தீபழு வத்தொடு விலங்கலிம ருப்பால்
இடக்தெறிம ருத்தென வெறிந்தளவி லோரைத்
தொடர்ந்துடல்சி தைத்துயிர் தொலைத்திடியி னர்த்தே.

(இ - ள்) தம்மூட் போர்செய்து வாழும் பறவைகளுடன் மிருகங்களுங் கதறியோட, நெருங்கிய சோலையோடு மலைகளையுங் கொம்பினால் வேரோடு பறித்து வீசுஞ் சண்டமாருதத்தைப்போல எங்குஞ் சிதறிவீசி, கணக்கிறந்தவர் உள்ளை யெதிர்த்துச் சரீரத்தையழித்து உயிர்போக்கி. இடிபோலக் கோஷித்து. ()

மறலிவரு மாறென மறப்பசுவ ழிக்கொண்
டறலிவர்த டம்பொருகை யாறுடைய மாறன்
றிறலிமலர் மங்கையுறை தென்மதுரை முன்னு
விறலிவரு கின்றதது மீனவ னறிந்தான்.

(இ - ள்) இயமனது வருகைபோலக் கொலைத்தொழிலையுடைய பசுவானது வழிக்கொண்டு, கருமணல் பரந்த விசாலித்த தாமிரபர்ணியையுடைய அனந்தகுணபாண்டியனுடைய (வலுமையோடு பகைத்து) வென்று, இலக்குமி வசிக்குந் தென்றிசையிலுள்ள மதுரையை முற்பட்டு (எதிர்ப்பட்டவர்களை) வெற்றிகொண்டு வாகின்றது. அதனைப் பாண்டியன் தெரிந்துகொண்டான்.

(வி - ம்) திறலி - விறலி என்பன—பெயர்ச்சொல்லடியாகப் பிறந்த இறந்த காலத் தெரிநிலை வினையெச்சங்கள். (க)

மீனவனு மாகருள் மிக்கவரு முக்கண்
வானவனே மாமதுரை மன்னவனே முன்னோர்
தானவனே யாழிகொடு சாய்த்தவனே யேத்தா
ஆனதுரை செய்துமென வாலய மடைந்தார்.

(இ - ள்) மீனக்கொடிதரித்த அனந்தகுணபாண்டியனும் பெரிய மதுராபுரியிலுள்ள மேலோரும், திரிநேத்திரங்களையுடைய கடவுளே, பெரிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரபாண்டியனே, முற்காலத்தில் ஓர் அசுரனைச் சக்rாயுதங்கொண்டு கொன்றவனைத் தோத்திரஞ்செய்து, நிகழ்ந்தசெய்தியைக் கூறுவோமென்று இருக்கோயிலையடைந்தார்கள்.

(வி - ம்) ஒரு தானவனை ஆழிகொடு சாய்த்ததாவது :—

ஒரு காலத்தில் தேவேந்திரன் திருக்கைலாய கிரியையடைய, சிவபெருமான் வடிவு மாறி வழியில் நிற்கக் கண்டு, "நீ யாவன் ? யாது தொழில் செய்வோன் ?" என, ஒன்றுங் கூறாதிருப்பக்கோபித்துத் தன் கைவச்சிரத்தைத்

தோளிற்றுக்க, அது பொடியாகவுதிர்த்தது. உடனே பெருமானுக்குக் கோப முதித்து ஓர் உருத்திரவடிவேற்க, இந்திரன் பயந்து பலவகையாகத் துதிபுரிய, இறைவர் மனம்பொறுத்துத் தன் கோபத்தாலுண்டான வியர்வையை வழித் தெறிய, அஃது மேற்றிசைக் கடலில் வீழ்ந்து புத்திரவடிவாயிற்று. அதனைச் சமுத்திரராசன் மகன்மைகொண்டு வளர்த்தான். அச்சிறுவன் பிரமனுல் சலந் தானென்று காமமெய்தி, காளைப்பருவமடைந்து, அவணருடன் சேர்ந்து, ஆற்றல் மிகுந்து மயனென்பவனுல் ஒரு நகரஞ்செய்வித்து, காலகேயரின் புதல்வி பிருந் தையை மணஞ்செய்து, சிறிதுகாலம் அரசிருந்து, மேருமலையிலிருந்த தேவர்களை யெதிர்க்க, அவர்கள் வேண்டுகோளின்மேல் விண்டு கருடாரூடராயெதிர்வர, இருபதினுயிரம் வருடங் கடும்போர் புரிந்தனன். விண்டு அவனைவெல்லும் வல்ல மையின்றிப் புகழ்ந்து சென்றனர். இந்திரஞ் தனக்கென்ன விபரீதம்விளையுமோ என்று திருக்கயிலையை யடைந்தனன். இந்திரன் செய்கையை யறிந்த சலந் தான் அவரை அங்கேபோ யெதிர்க்கப் புறப்படுகையில், அவன் மனைவி தடுப் பவுங்கேளாது சேனையோடு கைலாயகிரியையடைய, இந்திரன் கண்டு இறைவர் முன் சாற்ற, பெருமான் வருந்தாதேயென்று தேற்றி, வடிவமாற்றிப் பின்வரப் பணித்து, நரைத்தவுருவும் ஊன்றிய தடியும் தளர்ந்த நடையும் உடைய விருத்த வடிவேற்றுச் சென்று சலந்தரனைக் கண்டு " நீ யார் ? எங்கே செல்கின்றாய் ?" என, "யான் சமுத்திரராசன் மகன் ; என்பெயர் சலந்தான்; சிவனுடன் போர் செய்யப் போகிறேன் " என, இறைவர் " நன்றுயிருந்தது ! உயிர்ப்பிச்சை வேண்டுமாஞல் ஓடிப்போ ; சிவனை யெதிர்த்தாற் செத்தாய்" என்று கூறிக் காலால் ஒரு வலயங்கீறி " இச்சக்கரத்தைச் சிரமேல் தாங்கவல்லையா ?". என, சலந்தரன் இருமாப்புடன் " இது பெரிதா " என்று இருகையாலுமெடுத்து, மார்பிலும் புயத்திலும் தாங்கிச் சிரசின்மீது வைத்துக்கொள்ள, அச்சக்கரம் அப்பொழுதே அவனை இரு பிளவாகப் பிளந்து சிவபெருமான் திருக்கரத்தை யடைந்தது. அவனுடன் வந்த அசுரர் கூட்டம் பெருமானது திருவிழித்தீயா லழிந்தது என்பதாம். (கo)

நாதமுறை யோபொதுவின் மாறிகட மாடும்
பாதமுறை யோபலவு யிர்க்குமறி விக்கும்
போதமுறை யோபுனித பூரண புராண
வேதமுறை யோவெனவி ளித்துமுறை யிட்டார்.

(இ - ள்) நாதனே ! முறையோ, வெள்ளியம்பலத்திற் கான்மாறி நடித் தருளிய திருவடியையுடையாய் ! முறையோ, பல ஆன்மாக்கட்கும் உணர்த்தும் போதனே ! முறையோ, பரிசுத்தமானவனே! எங்கும் வியாபித்தவனே ! பழம் பொருளாயுள்ளவனே ! வேதசொரூபியே ! முறையோ என்று விளித்து முறை யிட்டார்கள். (கக)

நின்றுமுறை யிட்டவரை நித்தனரு ணோக்கால்
நன்றருள்சு ரந்திடப நக்கியைவி ளித்துச்

சென்றமண மேவவரு தீப்பசுவை நீபோய்
வென்றுவரு வாயெனவி ளம்பினன்வி டுத்தான்.

(இ - ள்) (இவ்வீரு திருமுன்) நின்று முறையிட்டவர்களுக்குச் சோமசுந் தரக்கடவுள் திருவருள்நோக்கத்தால் மிகவுங் கருணைசெய்து,(அருகிலுள்ள) அதி காரநந்திதேவரை விளித்து, சமணர்கள் ஏவ வாநின்ற கொடியபசுவை நீ போய் வென்று வருவாயென்று கூறி ஏவியருளினர். (கூ)

வேறு

தண்டங் கெழுகூற் றமுமஞ்சத் தறுகட் செங்கட்
குண்டந் தழன்று கொதிப்பக் கொடுநாக் கெறிந்து
துண்டந் துழாவக் கடைவாய்நுரை சோர்ந்து சென்னி
அண்டந் துழாவ வெழுந்தன்ற டலே றுமாதோ.

(இ - ள்) தண்டாயுதத்தை யேந்திய இயமனும் அஞ்சும்படி கொடு மையை யுடைய சிவந்த கண்களாகிய குழிகள் சுவாலித்துக் கொதிக்கவும், வளைந்த நாவினை யெறிந்து மூக்கினைத் தழாவவும், வாய்க்கடையில் நுரைசோர வும், சிரசானது வானுலகத்தைத் தடவவும், வெற்றியையுடைய அதிகார நந்தி தேவர் எழுந்தருளினர்.

(வி - ம்) இதுமுதல் ஐந்து செய்யுள்களால் அதிகார நந்திதேவர் மாயப் பசுவை நோக்கி யெதிர்த்து வருகை கூறப்பட்டது. (கூ)

நேற்றித் தனியோடை நிமிர்ந்து மறிந்த கோட்டிற்
பற்றிச் சுடர்செம் மணிப்பூண் பிறை பைய நாகஞ்
சுற்றிக் கிடந்தா லெனத்தோன்றவெள் ளாழி யீன்ற
கற்றைக் கதிர்போற் பருமம்புறங் கௌவி மின்ன.

(இ - ள்) நெற்றியிற்கட்டிய ஒப்பற்ற பட்டமானது மேற்பட்டு விளங்கவும், வளைந்த கொம்பினைப் பொருந்தி விளங்காநின்ற மாணிக்கத்தா லாகிய பூண னது, படத்தையுடைய கேதுவென்னும் பாம்பானது மூன்றும் பிறையைச் சுற்றிக்கிடந்தாற்போலத் தோன்றவும், வெள்ளிய பாற்கடல் பெற்ற நெருங்கிய கிரணத்தையுடைய சூரியனைப்போலப் பொன்னாற் செய்த கவசமானது உடம் பின்புறத்தைப் பொருந்தி விளங்கவும்.

இதுமுதல் நான்குபாடல்கள் குளகம். (கசு)

கோட்டுப் பிறைகால் குளிர்வெண்கதிர்க் கற்றை போலச்
சூட்டுக் கவரித் தொடைத்தொங்கலு நெற்றி முன்னுப்
பூட்டுத் தாள முகவட்டும் பொலியப் பின்னல்
மாட்டுச் சதங்கைத் தொடைகல்லென வாய்விட் டார்ப்ப.

(இ - ள்) கொம்பாகிய மூன்றும்பிறையானது கக்குகின்ற குளிர்ந்த வெள் ளிய கிரணத்திரட்சிபோல, உச்சியிற் சூட்டிய கவரிமயிராற் றொடுக்கப்பட்ட தொங்கணியும், நெற்றிக்கு முற்படப் பூட்டுதலையுடைய முத்தாலாகிய முகவட்

டமும் பொலிந்து விளங்கவும், (வெள்ளிய) பின்னலிற் கோத்த மாட்டுச் சதங் கைமாலை கல்லென்று வாய்விட்டுக் கோஷிக்கவும்.

(வி - ம்) பூட்டித்தாளம் என்றது பெருமுத்து முச்சிறப் புனைதல். (கடு)

பணிகா வசைக்கும் படியென்னக் கழுத்தில் வீர
மணிகா வசைப்ப நகைமுத்தின் வகுத்த தண்டை
பிணிகாண் சிறுகிங்கிணிப் பிப்பல மாலைத் தொங்கல்
துணிகா ணல்லம்பச் சிலம்பார்ப்ப வடிக ணுன்கும்.

(இ - ன்) பாம்பு காவசைக்கும் விதம்போலக் கழுத்தில் வீரகண்டை காவ சைத்தொலிக்கவும், பிரகாசிக்கின்ற முத்தைப் பருக்கையாகவுடைய தண்டை யும், கயிற்றிற் கோத்த சிறு சதங்கைகளும், அரசிலைவடிவாகச் செய்த மாலையா கிய ஆபரணமும், ஓர் அணியாகக் கயிறும் ஒலிக்கவும், நான்கு கால்களிலும் சிலம் புகள் முழங்கவும். (கசு)

அடியிட்டு நிலங்கிளைத் தண்டமெண் டிக்கும் பேரப்பப்
பொடியிட் டுயிர்த்துப் பொருகோட்டினிற் குத்திக் கோத்திட்
டிடியிட் டதிர்கா தெதிரேற்றெழுந் தாங்கு நோக்கிச்
செடியிட் டிருகண் ணழல்சிந்த நடந்த தன்றே.

(இ - ன்) காலிட்டுப் பூமியைக் கிளைத்து, அண்டமும் அட்ட திக்கும் புதைபடத் தூள்செய்து, பெருமூச்செறிந்து, போர்செய்யுங் கொம்புகளால் குத் திக்கோத்து முழங்கிக் கோஷிக்கும் மேகத்தோ டெதிர்த் தெழுந்தாற்போலப் பார்த்து, ஒளிமிக்க இரண்டு கண்களுங் கோபாக்கினி சொரிய நடந்தது.

(வி - ம்) செடியிட்ட - பெயரெச்சம்; இதில் அகரவீறு தொக்கது. (கஎ)

வேறு

பால்கொண்ட நிழல்வெண் டிங்கட் பகிர்கொண்ட மருப்பிற் கொண்மூச்
சூல்கொண்ட வயிற்றைக் கீண்டு தூள்எளியோர் வெள்ளிக் குன்றங்
கால்கொண்டு நடந்தா லென்னக் கடிந்துடன் றுவைச் சீற்ற
மேல்கொண்டு நாற்றம் பற்றி வீங்குயிர்ப் பெறிந்து கிட்டா.

(இ - ன்) வெண்ணிறம்பொருந்திய அர்த்த சந்திரன்போன்ற கொம்பி னால், சூல்கொண்ட மேகத்தினது வயிற்றைக்கிழித்துத் தூள்எளி ஒரு வெள்ளிய மலை கால் கொண்டு நடந்தாற்போல விரைந்துசென்று பகைத்து, பசுவைக் கோபித்து நாற்றம் பற்றி மேல்கொண்டு கெட்டுயிர்ப் பெறிந்து சமீபித்தது. (கஅ)

குடக்கது குணக்க தென்னக் குணக்கது குடக்க தென்ன
வடக்கது தெற்க தென்னத் தெற்கது வடக்க தென்ன
முடுக்குறு மருப்பிற் கோத்து முதுகுகீ ழாகத் தள்ளும்
எடுக்குறு மலையைக் கால்பேர்த் தெனத்திசைப் புறத்து வீசும்.

(இ - ன்) மேலெத்திசையிலுள்ள பசு அன்றே கீழைத்திசையிலுள்ள தென்று சொல்லவும், கீழைத்திசையிலுள்ளதன்றே மேலெத்திசையிலுள்ள

தென்று சொல்வவும், வடதிசையிலுள்ளதன்றே தென்றிசையி லுள்ளதென்று சொல்லவும், தென்றிசையிலுள்ளதன்றே வடதிசையி லுள்ளதென்று சொல்லவும் கொம்பினுற் கோத்து முதுகு ழோகத்தள்ளும்; எடுக்கும்; மலையைக் காற்றுனது பேர்த்து வீசினுற்போலத் திசைகளின் புறத்தே தள்ளும்.

(வி - ம்) குடக்கது முதலிய நான்கும் குறிப்பு வினைமுற்றுப்பெயர்கள்.

கோழுமணிச் சிகர கோடி. சிதைபடக் குவட்டில் வீசும்
பழுமரச் செறிவில் வான்றேய்ப் பணையிற வெறியும் வாளின்
விழுமறப் பசுபோல் வீழ வேலைவாய் வீச மிங்ஙன்
செழுமதிக் கோட்டு நந்தித் தேவிளை யாடல் செய்து.

(இ - ள்) உருவ முதிர்ந்த இரத்தினங்கள் நிறைந்த சிகரபந்திகள்பொடி பட எடுத்து மலைகளில் வீசும்; ஆலமரங்களின் செறிவிலுள்ள ஆகாயமளாவிய கொம்புகள் முறிய வீசும்; விண்ணுலகினின்று கடலில் வீழ்ந்து மறைந்த காமதேனுவைப் போலக் கடலில்வீழ எடுத்துவீசும்; இவ்வண்ணம் அர்த்தசந்திரன் போன்ற கொம்பினையுடைய அதிகார நந்திதேவர் போர்வினையாட்டுச்செய்து.

(வி - ம்) அருவாசமுனிவர் கோபத்தால், இந்திரன் செல்வங்கள் முற்றுங் காணப்படாது கடலிற் புக்கமையால், அவற்றேடுகின்ற காமதேனுவும் கடலிற் புகுந்தது பற்றி "வானின் விழும் அறப்பீசு" என உவமித்தார். (உ0)

பூரிய ரெண்ணி யாங்கே பொருதுயி ரூற்றஞ் செய்யா
தாரிய விடைதன் மாண்ட அழகினைக் காட்டக் காமுற்
றீரிய நறும்பூ வாளி யேறுபட் டாவி யோடும்
வீரியம் விடுத்து வீழ்ந்து வெற்புளு வாயிற் றன்றே.

(இ - ள்) சமணர்களாகிய கீழ்மக்கள் நினைத்தபடியே,போர்புரிந்து உயிர்த் தன்பஞ் செய்யாமல், அழகிய இடபமானது தனது மாட்சிமைப்பட்ட அழகினைக்காட்ட அப்பசுவானது விரும்பி, குளிர்ந்த நல்ல புஷ்பபாணம் பாய்தலால் [காமங் கொள்ளுதலால்], பிராணனோடும் வீரியம்விட்டுத் தரைமிசை விழுந்து (வடதிசையில்) ஒருமலையின் வடிவாய் விளங்கியது.

(வி - ம்) பூரியர்-சாமானியர்; வஞ்சனையால் வெல்லக் கருதினவராகலின்.

வாங்கின புரிசை மாட மாநக ராளு வின்பந்
தூங்கின வரவாய் வேம்பின் றேடவிழ் தாரான் திண்டோள்
வீங்கின வீரவி தோன்ற வீங்கிரு ளுடைந்த தென்ன
நீங்கின நாண மோடு நிறையமண் குழாங்க ளெல்லாம்.

(இ - ள்) வளைந்த மதில்சூழ்ந்த மாடம்பொருந்திய பெரிய மதுராபுரியி லுள்ளோர் நீங்காத இன்பத்தில் அழுந்தினுர்கள்; அரம்போல் (இருபக்கங்களி லும்) வாயுள்ள வேப்பிலே தெருங்கிய வேப்பமாலையணிந்த அனந்தகுண பாண்டியனுடைய திண்ணிய தோள்கள் பருத்தன; சூரியன் உதிக்கப் பேரிருள் புறங் கொடுத்ததுபோல வரிசை வரிசையாயுள்ள சமணக்கூட்டங்கள் நாணத்துடன் புறங்கொடுத் தோடின. (உ உ)

உலகறி கரியாத் தன்பே ருருவினை யிடபக் குன்றுக்
குலவுற நிறுவிச் சூக்க வடிவினுற் குறுகிக் கூடற்
றலைவனை வணங்க வீசன் றண்ணருள் சுரந்து பண்டை
இலகுரு வாகி யிங்ங னிருக்கென இருத்தி னானே.

(இ - ள்) உலகத்தார் அறிதற்குச் சாட்சியாகத் தனது பெரிய ஸ்தூலவடிவத்தை அவ்வடதிசையில் இடபமலையாக விளங்க நிறுத்தி, சூக்கும வடிவத்துடன் சென்று மதுரையில் எழுந்தருளிய இறைவனைப்பணிய, அப்பெருமான் தண்ணிய திருவருள் சுரந்து, முன்னுள்ள விளங்கும் உருவத்தையடைந்து இவ்விடத்திலிருக்க என இருக்கச் செய்தருளினர்.

(வி - ம்) சூக்குமம் - சூக்கமென்னும் பிராகிருதச் சிதைவு. (உக)

அங்நிலை நகரு ளாரு மமசனு முகிழ்ச்சி தூங்கிச்
சந்நிதி யிருந்த நந்தி தாளடைந் திறைஞ்சிப் போக
மின்னவிர் சடையா னந்தி வென்றிசால் வீறு நோக்கி
இன்னமு தனையா ளோடுங் களிசிறந் திருக்கு நாளில்.

(இ - ள்) அப்பொழுது நகரத்திலுள்ளவர்களும் அகத்தகுணபாண்டியனும் மகிழ்ச்சியிலமிழ்ந்து, திருச்சன்னிதியிலிருந்த அதிகார நந்திதேவருடைய திருவடியையடைந்து பணிந்து செல்ல, மின்னல்போலும் பிரகாசிக்குஞ் சடையையுடைய சோமசுந்தரக்கடவுள் அந்த நந்திதேவருடைய வெற்றிமிகுந்த இறமாப்பை நோக்கி, இனிய அமுதுபோன்ற அங்கயற்கண்ணம்மையாரோடு களிகூர்ந்திருக்குங்காலத்தில். (உச)

அவ்விடை வரைமேன் முன்னீ ரார்கலி யிலங்கைக் கேகுந்
தெவ்வடு சிலையி ராமன் வானர சேனை சூழ
மைவரை யனைய தம்பி மாருதி சுக்கி ரீவன்
இவ்வடல் வீர ரோடு மெய்தியங் கிறுத்தான் மன்னோ.

(இ - ள்) அந்த இடபமலையின்பேரில், கடல் சூழ்ந்த இலங்கைக்குச் செல்லும் பகைவரைச் செயித்த இராமமூர்த்தி வானரசேனை புடைசூழ நீலமலை போன்ற இலட்சுமணரும் அனுமானும் சுக்கிரீவனுமாகிய இந்த வெற்றிபொருந்திய வீரர்களுடன் சேர்ந்து வசித்தார்.

(வி - ம்) வானர சேனை - வடசொற்புணர்ச்சி. (உடு)

அன்னது தெரிந்து விந்த மடக்கிய முனியங் கெய்தி
மன்னவற் காக்கங் கூறி மழவிடைக் கொடி.யோன் கூடற்
பன்னரும் புகழ்மை யோது பனுவலை யருளிச் செய்ய
முன்னவன் பெருமை கேட்டு முகிழ்த்தகை முடியோ ரூகி.

(இ - ள்) விந்தமலையை வீறுகுறைத்த அகத்தியமுனிவர் அதனையுணர்ந்து அவ்விடபமலையை யடைந்து, இராமமூர்த்திக்கு ஆசீர்வாதங்கூறி, இளமை பொருந்திய இடபக்கொடியையுடைய சோமசுந்தரக்கடவுளுடைய திருவாலவா

யின் சொல்லுதற்கரிய மான்மியத்தைக் கூறும் நூலினைத் திருவாய்மலர்ந்தருள, அவ்விறைவனது பெருமையைக் கேட்டுக் குவித்த கைகளேறிய முடியையுடையவராகி.

இதுமுதல் ஈான்கு பாடல்கள் ஒருதொடர். (உசு)

முனியொடு குறுகிச் செம்பொன் முளரியுண் மூழ்கி யாதித்
தனிமுத லடியை வேணி முடியுறத் தாழ்ந்து வேத
மனுமுறை சிவாக மத்தின் வழிவழா தருச்சித் தேத்தி
கனிவுறு மன்பி லாழ்ந்து முடிமிசைக் கரங்கள் கூப்பி.

(இ - ள்) அகத்திய முனிவருடன் சென்று பொற்றாமரைத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, ஒப்பற்ற முழுமுதற்கடவுளது திருவடியைத் தனது சடாமுடி பொருந்தவணங்கி, வேதமந்திர முறையும் சிவாகமமுறையும் வழுவாமல் அருச்சனைசெய்து பணிந்து, கனிந்த பேரன்பிலழுந்தி, சிரசின்மேற் கைகளைக் குவித்து. (உஎ)

புங்கவ சிவன் முத்தி புராதிப புனித போக
மங்கல மெவற்றி னுக்குங் காரண வடிவ மான
சங்கர நினது தெய்வத் தானங்க ளநந்த மிந்த
அங்கண்மா ஞால வட்டத் துள்ளன வவைகள் தம்மில்.

(இ - ள்) (எல்லாத் தேவர்கட்கும்) மேம்பட்டவனே! சிவன்முத்திபுரத்திற்குத் தலைவனே! பரிசுத்தமானவனே! எல்லாப் போகங்கட்கும் மங்கலங்கட்குங் காரணவடிவாயுள்ள சங்கரனே! தேவரீரது தெய்வத்தன்மை பொருந்திய தலங்கள் அளவுபடாமல் இந்த அழகிய இடம்பரந்த பெரிய நிலவுலகினிலுள்ளன. அத்தலங்களில், (உஅ)

வேறு

அற்பு தப்பெரும் பதியிந்த மதுரையீ தாற்றப்
பொற்பு டைத்தென்ப தெவன்பல புவனமு நின்பாற்
கற்பு வைத்துய ரீசெய்த கருமத்தின் விருத்தம்
வெற்பு ருக்களாய்ப் புடைநின்று விளங்கலான் மன்னோ.

(இ - ள்) அற்புதம் பொருந்திய பெரிய தலமாயுள்ள இம்மதுரையாகியது, மிகவும் சிறந்ததென்று கூறுவது என்னகாரணம் (என்றால்) பல உலகங்களும் தேவரீரிடத்தில் அன்புவைத்துப் பிழைக்கத் தேவரீர் செய்த திருவிளையாடலின் சரித்திரம் மலைகளின் உருவங்களாய்ப் பக்கங்களிலிருந்து விளங்குதலால் (அல்லவோ).

(வி - ம்) உம்முடைய திருவிளையாடல்கள் இத்தலத்திலே காட்சிப் பிரமாணமாக விளங்கின என்பதாம். (உக)

கண்ட வெல்லையிற் றுன்பங்கள் களைதற்கு மளவைக்
கண்ட நும்பெருஞ் செல்வங்க ளளித்தற்குங் கருணை

கொண்டு கீயுறை சிறப்பினுற் குளிர்மதிக் கண்ணி
அண்ட வாணவிவ் விலிங்கத்துக் கொப்புவே ருமோ.

(இ - ள்) தெரிசித்த அப்பொழுதே தன்பங்களை நீக்குதற்கும், அளவிடற் கரிய (இந்திரபோக முதலிய) பெருஞ் செல்வங்களைத் தந்தருளுதற்கும் திருவருள் கொண்டு தேவரீர் இடைவிடாது வசித்தருளுஞ் சிறப்பினால், குளிர்ந்த பிறைச் சந்திரனை மாலையாகவணிந்த தேவதேவனே! இந்த இலிங்க மூர்த்தத்திற்குச் சமானமாக வேறொருவன்று உளதோ? (இல்லை). (கூ0)

தோய்ந்து டும்பொழு தீட்டிய தொல்வினைப் படலம்
மாய்ந்து டும்படி மாய்த்துநின் மங்கல போகம்
ஈந்து டும்படிக் கிருந்தமா தீர்த்தத்தி னியல்பை
ஆய்ந்து டும்பொழு ததற்கொரு தீர்த்தமொப் பாமோ.

(இ - ள்) மீராடுங்காலையில் (பிறவிகள் தோறும்) தேடிய தொன்று தொட்டுள்ள சஞ்சிதவினையின் திரட்சி கெடும்படி சிதைத்து, தேவரீரது மங்கள காமாகிய சிவபோகத்தைக் கொடுக்கும்படிக்கு அமைந்த பொற்றுமரைத் தீர்த்தத்தின் இயற்கையை யாராயுமிடத்தில், அதற்கு ஒப்பாக ஒரு தீர்த்தமும் உள்ளதோ? (இல்லை). (கூக)

ஏத்த லத்தினு மொவ்வொன் றுவிழுமி தாமிந்த
மெய்த்த லத்திலிம் மூவகை விழுப்பமும் விளங்கும்
அத்த வாதலா லித்தல மடைந்தவ ரெவர்க்குஞ்
சித்த சுத்தியும் பல்வகைச் சித்தியும் பயக்கும்.

(இ - ள்) பரிசுத்தனே! எந்தச் சிவதலத்திலும் (மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூன்றினுள்) ஒவ்வொன்று மேலாய் விளங்கும். இந்த வுண்மையாகிய தலத்தில் இம்மூவகைச் சிறப்பும் விளங்கும்; ஆகலால், இந்தத்தலமானது தன்னை யடைந்தோரெல்லாருக்கும் சித்தசுத்தியையும் (அணிமா முதலிய) பலவகைச் சித்திகளையுங் கொடுக்கும்.

(வி - ம்) சித்தசுத்தி - நித்தகைமித்திய கருமங்களைச் சிவார்ப்பணமாகச் செய்தலால் வரும் பேறு. பலவகைச்சித்தி - அணிமா - மகிமா - கரிமா - லகிமா - பிராப்தி - பிராகாமியம் - ஈசத்துவம் - வசித்துவம் எனப்படும். இவற்றின் சிறப்பிலக்கணங்களை அஷ்டமாசித்தி யுபதேசித்த படலத்திற் கண்டு கொள்க. (கூஉ)

அடியனே னெண்ணுங் கருமமுஞ் சரதமே யாக
முடியு மாவரி தச்செயன் முடியுமெப் படியப்
படிபு ரிந்தருள் கடிதெனப் பணிந்தனன் பரனும்
கெடிய வான்படு மமுதென வெதிர்மொழி நிகழ்த்தும்.

(இ - ள்) அடியேன் எண்ணிய காரியமும் உண்மையாக முடியும் வண்ணமரியதோ? அந்தக்கருமம் இலேசாக முடியும். (திருவருள்) எவ்வாறே அவ்வாறு செய்தருளாய் என்று பணிந்தார். சோமசுந்தரப் பெருமானும்

நெடிய ஆகாயத்திற்மேலுன்றும் அமிர்தம்போல (ஓர் அசரீரிப்) பிரதிவார்த்தை கூறியருளுகின்றார். (ஈஈ)

வேறு

இரவிதன் மரபின் வந்த இராமகே ளெமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற் போகி வீரிகடற் சேது கட்டிக்
கரவிய வுள்ளக் கள்வன் கதிர்முடிப் பத்துஞ் சிந்தி
அரவமே கலியி னூளை யருஞ்சிறை யழுவ நீக்கி.

(இ - ள்) சூரிய பரம்பரையிற் றோன்றிய இராமனே ! கேளாய். எமக்குத் தெற்குங் கிழக்குமாய்க் கலந்த (தென்கீழ்த்) திசையிற்சென்று, பரந்த கடலிற் சேதுபந்தனஞ் செய்து, வஞ்சகமமைந்த மனத்தையுடைய இராவணனது விளக்கம் பொருந்திய பத்துத் தலைகளையுங் துண்டித்து, ஒலிக்கும் மேகலையையுடைய ஜானகியை, அடைதற்கரிய சிறைக்கூடமாகிய நடுங்குமிடத்திலிருந்து விலக்கி. (ஊச)

மீண்டுதின் னயோத்தி யெய்தி வீரிகட லுலகம் பன்னூள்
ஆண்டினி திருந்து மேனாள் வைகுண்ட மடைவா யாக
ஈண்டுநீ கவலை கொள்ளே லெனுமச ரீரி கேட்டு
நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து நிருத்தனை விடைகொண் டேகி.

(இ - ள்) மீளவும் உனது அயோத்யா புரியைச் சேர்ந்து, பரந்தகடல் சூழ்ந்த உலகத்தைப் பலகாலமும் அரசியல் புரிந்து இனிது வாழ்ந்து, அதன்மேல் நீ வைகுண்டமடைவாயாக. இப்பொழுது நீ கவலைகொள்ளாதே யென்று கூறிய அசரீரியைக் கேட்டு, இராமமூர்த்தி களித்துச் சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து விடைபெற்றுச் சென்றார். (ஊடு)

மறைப்பொரு ளுரைத்தோன் சொன்ன வண்ணமே யிலங்கை யெ
அறத்தினைத் தின்ற பாவி யாவியின் றம்பியான் செல்வத் [ய்தி
திறத்தினை யிளவற் கீந்து திருவிரா மேசன் கண்டு
கறைப்படு மிடற்றி னூனை யருச்சித்துக் கருணை வாங்கி.

(இ - ள்) வேதப்பொருளைக் கூறிய சோமசுந்தரக் கடவுள் (அசரீரியாய்ச்) சொன்னபடியே இலங்கையையடைந்து, தருமத்தைக் கடந்த பாவியாகிய இராவணனுடைய உயிரைக்குடித்து, அவனுடைய செல்வப்பகுதியை அவன் தம்பியாகிய விபீஷணனுக்குத்தந்து, இராமேஸ்வர மென்னுந் தலத்தைப் பிரதிஷ்டை செய்து, விஷம்பொருந்திய நீலகண்டத்தையுடைய சிவபெருமானை அருச்சித்து, அவர் திருவருளைப் பெற்று.

(வி - ம்) இராவணன் இலிங்கபூசைசெய்வதிற் சிறந்தவனாகலின் அவனைக் கொன்றதனால் வந்த பிரமஹத்தியைப் போக்கச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து தன் பெயரால் இராமேஸ்வரமெனப் பெயர் தந்தனனென்பது புராண வரலாறு. (ஊசு)

பற்றிய பழியி னீங்கி யிந்திரன் பழியைத் தீர்த்த
வெற்றிகொள் விடையி னோடு மீளவும் வந்து போற்றி
அற்றிர ளனைய கோதை கற்பினுக் கரசி யோடுஞ்
சுற்றிய சடையி ராமன் முருன்னக ரடைந்தா னிப்பால்.

(இ - ள்) தன்னைப்பிடித்த பிரமஹத்தியிலிருந்து நீங்கி, தேவேந்திரனுடைய பிரமஹத்தியை யொழித்த வெற்றிபொருந்திய இடபவாகனத்தையுடைய சோமசுந்தரக்கடவுளை மீளவும் வந்து பணிந்து, இருளின் திரட்சியைப் போன்ற கூந்தலையுடைய கற்பினுக்கரசியாகியஜாகதேவியோடும்(வட்டமாகச்) சுற்றிய சடையையுடைய இராமமூர்த்தி தொன்றுதொட்டுள்ள அயோத்தி நகரத்தை யடைந்தார். இப்பால். (கூஎ)

வேறு

செங்கோ லனந்த குணமீனவ்ன் றேயங் காப்பக்
கொங்கோ டவிழ்தார்க் குலபூடணன் றன்னை யீன்று
பொங்கோதை ஞாலப் பொறைமற்றவன் பாலி றக்கி
எங்கோ னருளாற் சிவமாக நேறி னோனே.

(இ - ள்) செங்கோலை யேந்திய மீனக்கொடி தரித்த அனந்தகுணபாண்டியன், கிலவுலகங் காக்க மகரந்தத்தோடலர்ந்த மாலையணிந்த குலபூஷணனைப் பெற்று, (தான் சுமந்த) பேரொலியுடைய கடல்சூழ்ந்த பூமி பாரத்தை அக்குலபூஷணனிடத்திறக்கி, எமதிறைவராகிய சோமசுந்தரக் கடவுளினுடைய திருவருளால் சிவபுரத்திற் குடியேறினன். (கூக)

ஆ திருவிருத்தம் - ககூசுஙூ.

மூப்பதாவது

மெய்க்காட்டிட்ட படலம்

பாவமென வடிவெடுத்த படிற்றமனர் பழித்தழல்செய்
தேவவரு மறப்பசுவை யேறுயர்த்தோன் விடைநங்கிக்
காவலனே விடுத்தழித்த கதையுரைத்து மட்டாலைச்
சேவகன்மெய்க் காட்டிட்டு விளையாடுந் திறமுரைப்பாம்.

(இ - ள்) பாவமே உருவேற்றதுபோன்ற வஞ்சனையையுடைய சமணர்கள் ஆபிசார யாகஞ்செய்து ஏவ வந்த கொலைத்தொழிலையுடைய பசுவை, இடபக் கொடியையுயர்த்திய சோமசுந்தரக்கடவுள் அதிகார நந்திதேவரையேவி அழித்த திருவிளையாடலைக் கூறினேம். அட்டாலைச் சேவகனுக்கு வந்த சோமசுந்தரக்கடவுள் திருமேனி காட்டி யருளிய திருவிளையாடலை (இனி யாம்) கூறுவோம்.

(வி - ம்) அட்டாலைச் சேவகன் என்றது குதிரை வீரரை. (க)

வெவ்வியமும் மதயானை விறற்குலபூ டணன்சமணர்
அவ்வியவஞ் சனைகடந்த அனந்தகுணச் செழியன்பாற்
செவ்வியசெங் கோல்வாங்கித் திகிரிதிசை செலவுருட்டி
வவ்வியவெங் கலிதிரந்து மண்காத்து வருகின்றான்.

(இ - ள்) கொடிய மும்மதங்களையுடைய யானைச் சேனையின் வெற்றி பொருந்திய குலபூடண பாண்டியன் சமணர்களது பொறுமையால் வீளைந்த வஞ் சத்தைக் கடந்த அனந்தகுண பாண்டியனிடத்து, செவ்விய செங்கோலைத் தனது கையால் வாங்கி, (ஆக்கினை) சக்கரத்தைத் திசைகளிற் செல்லச் செலுத்தி, தன்வசப்படுத்திய உலகத்தைக் கொடிய கலியினை யோட்டிக் காத்து வருகின் றவனியினன். (உ)

சவந்தரசா மந்தனெனத் தீணிகா வலனெருவன்
செவந்தசடை முடியண்ண லீடியவரே சிவமாகக்
கவர்ந்தொழுகி யருச்சிக்குங் கடப்பாட்டி னெறிநின்றோன்
உவந்தரசற் கிருமைக்குந் துணையாகி யொழுகுநாள்.

(இ - ள்) சுந்தரசாமந்தர் என்ற சேனுபதி யொருவர், சிவந்த சடா முடியை யுடைய சிவபெருமானது அடியவரையே அச்சிவபெருமானாகக் கொண்டு பத்திமை பூண்டு பூசிக்கும் ஒழுக்கியின் வழியில் நின்றவராய் விரும்பிக் குலபூடணபாண்டியனுக்கு இம்மைப் பலனுக்கும் மறுமைப்பலனுக்குந் துணை வராய் நடக்குங்காலையில்.

வல்வேடர்க் கதிபதியாய் வருசேதி ராயனெனும்
வில்வேட னெருவனவன் விறல்வலியான் மேலிட்டுப்
பல்வேறு பரிமான்றேர்ப் பஞ்சவன்மேற் படைபெடுத்துச்
செல்வேனென் றுறவலித்தான் றென்னர்பிரா னஞ்சுறிந்தான்.

(இ - ள்) வலிய வேடராசனுகிய சேதிராய னென்னும் பெயரையுடைய வில்லையேந்திய வேடனெருவன் உள்ளான். அவன் வெற்றியின் வலிமையால் இறுமாப்படைந்து பலவேறு வகைப்பட்ட குதிரைகள் பூண்ட தேரையுடைய குலபூடண பாண்டியன்மேரில் தண்டெடுத்துச் செல்வேனென்று மனவூக்கங் கொண்டான். பாண்டியன் அதனை யுணர்ந்து. (ஈ)

தன்னதுதாள் நிழனின்ற சாமந்தன் றணைப்பார்த்தெம்
பொன்னறைதாழ் திறந்துகிடி முகந்தளித்துப் புதிதாக
இன்னமூசீ சிலசேனை யெடுத்தெழுகிக் கொள்கென்றோன்
அன்னதுகேட் டிசனடிக் கன்புள்ளா னென்செய்வான்.

(இ - ள்) தனது கால்நிழலின் கீழ்நின்ற சுந்தர சாமந்தரைப்பார்த்து எமது பொக்கிஷத்தின் தாழைத்திறந்து (வேண்டிய அளவு)பொருள் எடுத்துச் செலவு செய்து, இன்னமும் புதிதாகச் சில சேனைகளை நீ நமக்குரிமையாய் எடுத்துக் கொள்ளக்கடவாய் என்றான். சிவபெருமானது திருவடிக்கு அன்புபூண்ட சுந் தர சாமந்தர் அதைக்கேட்டு என்ன செய்வாரென்றால்.

(வி - ம்) தாணிழற்கீழ் நின்ற என்றது அருகு நிற்றலின். (ஙு)

தேன்னவர்கோன் பணித்தபணி பின்றள்ளச் சிந்தையிலன்
புன்னவ னருள்வந்து மூன்னீர்ப்ப வொல்லேபோய்ப்
பொன்னறைதாழ் திறந்தறத்தா ரீட்டியிடும்பொற்குவையுட்
டன்னதுளத் தவாவமையத் தக்கநிதி கைக்கவரா.

(இ - ள்) குலபூடண பாண்டியன் எவிய எவல் பின்னே நின்று தள்ளவும், தமது மனத்திலுள்ள சிவபக்தியும் சிவபெருமானது திருவருளும் (யாவரும்) நீனைக்குமுடி முன்னின்று இழுக்கவும், விரைந்துபோய்ப் பொக்கிஷத்தின் தாழைத் திறந்து தருமமார்க்கத்திற்றேடிய பொருட்குவியலில், தனது மனத்தி லெழுந்த ஆசைக்குப் பொருந்த மிக்க பொருளைக் கைக்கொண்டு. (சு)

எண்ணிறந்த களிப்பினுடுங் திருக்கோயி லிடத்தணைந்து
கண்ணிறைந்த பொன்மூளரிக் சயத்தலைநீர் படிந்துதன
துண்ணிறைந்த மெய்யன்பி னெளியுருவாய் மூளைத்தெழுந்த[ம்.
பண்ணிறைந்த மறைப்பொருளைப் பணிந்திறைஞ்சி யிதுவேண்டு

(இ - ள்) அளவில்லாத சந்தோஷத்தோடும் திருக்கோயிலையடைந்து. தேன் நிறைந்த பொற்றமரைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, தனது மன தில் நிறைந்த மெய்யன்பின் ஒளி வடிவமாய் மூளைத்துத் தோன்றிய இசை நிறைந்த வேதத்தின் பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து, இதனை வேண்டாகின்றார். (எ)

பண்ணியனன் மறைவிரித்த பரமேட்டி யெங்கோமான்
எண்ணியகா ரியமுடிப்பா யிவையுனக்கு மூன்னடிக்கீழ்
அண்ணிபமெய் யடியவர்க்கு மாதக்க வெனவிரந்தப்
புண்ணியமா நிதிமுழுது மவ்வழியே புலப்படுப்பான்.

(இ - ள்) இசைமயமான நான்கு வேதங்களின் பொருள்களையும், (முனி வர்களுக்கு) விரித்தருளிச் செய்த பரமேஷ்டியே! எமது அரசனுகிய குல பூடண பாண்டியன் எண்ணிய காரியங்களை (முட்டின்றி) முடிப்பாய். இப் பொருள்கள் தேவரீருக்கும், தேவரீரது திருவடிக்கீழ்க் கலந்த உண்மை யடிய வர்க்கும் ஆவக்கடவனவென்று குறையிரந்து, புண்ணிய வழியிற்றேடிய அப் பெரும்பொருள் முழுவதும், தான் குறையிரந்தவகையே செலுத்துவாராயினர்.

(வி - ம்) பரமேஷ்டி என்றது உயர்ந்த பதவியிலுள்ளானெனப் பொருள் படும். (அ)

அண்டமுக டிரிஞ்சிகிமிர் கோபுரமு மாயிரக்கான்
மண்டபமுங் கண்டிகையும் வயிரமணிக் கோளகையுங்
குண்டலமுங் தண்டாளக் குடைநிரையுங் கொடிநிரையுங்
கண்டனன்முன் னவனருளாற் பிறப்பேழுங் கரைகண்டோன்.

(இ - ள்) சோமசுந்தரக் கடவுளினுடைய திருவருளால் (ஏழு) பிறவியா கிய ஏழு கடல்களையுங் கரைகண்ட சுந்தரசாமந்தர் ஆகாயமுகட்டை யளாவி

யுயர்ந்த கோபுரத்தையும், ஆயிரக்கால் மண்டபத்தையும், கண்டிகையையும், வைரத்தாற் செய்த வாகுவலயத்தையும், குண்டலத்தையும், தண்ணிய முத்தாலாகிய குடை வரிசையையும், கொடிவரிசையையும் செய்தமைத்தார். (கூ)

வானுடர்க் கலியுணவின் வகைமுந்நூன் மன்றன்முதல்
நானுவாஞ் சிறுவேள்வி நான்மறையோர்க் கறுசுவையின்
ஆனுத பேரூண்டி துறவடைந்தோர்க் கருத்துபலி
தானுதி பலவேறு தருமகனி தழைவித்தான்.

(இ - ள்) தேவர்களுக்கு அவியூட்டும் பெரிய யாகங்களும், பூணூல் கலியாண முதலிய பலதிறப்பட்ட சிறு வேள்விகளும், வேதியருக்கு அறுசுவை பொருந்திய இனிய பேருணவுகளும், துறவிகளுக்கு உண்பிக்கும் பிச்சையும், பூதான முதலிய வேறு தருமங்களும் (ஆகிய இவையெல்லாம்) மிகவும் பெருகச் செய்து வந்தார்.

(வி - ம்) உபவீதம் பூணுதலே வேள்விக்கு அருகராக்குதலின், அதனையும் வேள்வியோடு உடனெண்ணிச் "சிறுவேள்வி" என்றார். (கo)

எவரேனு முருத்திரசா தனங்கண்டா லெதிர்வணங்கி
அவரேநம் பிறப்பறுக்க வடிவெடுத்த அரனென்று
கவராத அன்புள்ளங் கசிந்தெழுக அருச்சித்துச்
சுவையாறி னமுதருத்தி யெஞ்சியதின் சுவைதெரிவான்.

(இ - ள்) எவராவதுஞ் சிவசாதனந் தாங்குவாராயின், அவரை யெதிரே பணிந்து, அவரே நம்முடைய பிறவியையறுக்கத் திருவுருவமெடுத்த சிவபெருமானென்று, நீங்காத அன்புடன் வழிபட்டு அருச்சித்து, அறுசுவை யமைந்த திருவமுதை உண்பித்து, (பரிகலத்தில்) மிகுந்த (சேடத்தை) இனிய சுவை பார்த்து உண்பாராயினர்.

(வி - ம்) இச்செய்யுளில் எவரேனு முருத்திர சாதனங் கண்டால் என்பதை,

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தாணியொடு வானுளத் தருவ தேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராயின்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யாராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே"—என்பதனாலும், உருத்திர சாதனங் கண்டோரை அர்ச்சித்தலும் ஊட்டுதலும் சிவபெருமானுக்குச் செய்ததை நிகர்க்கும் என்பதை.

சிவதருமோத்தரம்

"அருத்துக வமலன் றன்னே யகத்தணர்ச் தவரை யன்னங்
கருத்திருர் தவர்க்குச் தெய்த பூசனே கடவுள் கொள்வன்
ஒருத்தனுக் குபசா ரங்க ளுடலிடை யுலகர் செய்வர்
பிரித்துட லுயிரைப் பேணும் பெற்றியை யாரே பெற்ரூர்."

எனவரும் திருவிருத்தத்தானு முணர்க. (கக)

இன்றைக்கா யிரகாளைக் கிருமடங்கு வருகாட்டும்
அன்றைக்கன் றிருமடங்கா அரசனது பொருளெல்லாங்
கொன்றைச்செஞ் சடையார்க்கு மடியார்க்குங் கொடுப்பதனைத்
தென்றற்கோன் செவிமடித்தான் சேனைக்கோ னிதுசெய்வான்.

(இ - ள்) இன்றைக்கு ஆயிரம்பொன் - காளைக்கு இரட்டிப்பு - இனிவரும் காட்களுக்கும் அன்றைக்கன்று இரட்டிப்பு ஆகப் பாண்டியனது பொருளெல்லாம் கொன்றை மாலையணிந்த சிவந்த சடையையுடைய சிவபெருமானுக்கும் அவர் அடியார்கட்குங் கொடித்து வருதலை, பொதியமலைக்கதிபனுகிய பாண்டியன் கேள்விப்பட்டான். சேனைபதியாகிய சுந்தரசாமந்தர் (பின்வரும்) இக்காரியங்களைச் செய்யத் தொடங்கினர்.

(வி - ம்) தென்றல் - தென்றற்காற்று. இது தோன்றுதற்குரிய இடமாகிய பொதிய மலையை யுணர்த்தினமையின், இடவாகுபெயர். (கஉ)

வேறு

காவல னவையத் தெய்திக் காரியஞ் செய்வா ரோடு
மேவினன் பிறநாட் டுள்ள வீரர்க்கு வெறுக்கை போக்கிச்
சேவகம் பதிய வோலை செலவிடுத் தழைப்பான் போலப்
பாவகஞ் செய்து தீட்டிப் பட்டிமை யோலை யுய்ப்பான்.

(இ - ள்) (சுந்தரசாமந்தர்) பாண்டியன் சபையையடைந்து, இராச காரியஞ் செய்பவருடன் கலந்து, பிறதேசத்திலுள்ள சேனவீரருக்குப் பொருளனுப்பிச் சேவகத்திற் பதிவுசெய்ய ஓலை செலுத்தி அழைப்பார்போலப் பாவனைகாட்டி, வஞ்சனையாகத் திருமுக மெழுதியனுப்புவாராயினர். (கங)

எழுதுக தெலுங்கர்க் கோலை யெழுதுக கலிங்கர்க் கோலை
எழுதுக விராடர்க் கோலை யெழுதுக மராடர்க் கோலை
எழுதுக கொங்கர்க் கோலை யெழுதுக வங்கர்க் கோலை
எழுதுக துருக்கர்க் கோலை யென்றுபொய் யோலை விட்டான்.

(இ - ள்) தெலுங்கு காட்டிலுள்ளாருக்கு ஓலை யெழுதக்கடவீர்; கலிங்க காட்டிலுள்ளாருக்கு ஓலையெழுதக்கடவீர்; விராடகாட்டிலுள்ளாருக்கு ஓலை யெழுதக்கடவீர்; மராடகாட்டிலுள்ளாருக்கு ஓலையெழுதக்கடவீர்; கொங்க காட்டிலுள்ளாருக்கு ஓலை யெழுதக்கடவீர்; அங்கதாட்டிலுள்ளாருக்கு ஓலை யெழுதக் கடவீர்; துருக்கதாட்டிலுள்ளாருக்கு ஓலை யெழுதக் கடவீர் என்று பொய்த்திருமுகம் அனுப்பினர். (கச)

எங்குமிப் படியே யோலை செலவிடுத் திருப்ப ஆறு
திங்களி னளவு மந்தச் சேவகர் வ்ரவு காணு
தங்கதிர் வேலோன் சேனைக் கரசினை யழைத்து நாளை
வெங்கதிர் படுமுன் சேனை யாவையும் விளித்தி யென்றான்.

(இ - ள்) இப்படியே எவ்விடத்துந் திருமுகமனுப்பி (வாளா) இருக்க, ஆறுமாதம்வரையிலும் அச்சேனைவீரர் (ஒருவரும்) வருகையைப் பாராத, அழகிய ஒளிபொருந்திய வேற்படை தாங்கிய பாண்டியன், (தனது) சேனைத்தலைவனாகிய சுந்தரசாமந்தரை யழைத்து நாளையதினம் சூரியாஸ்தமனத்திற்கு முன்னே சேனைவீரர்களை யெல்லாம் அழைப்பாயென்று கட்டளையிட்டான். (கடு)

என்றமன் னவனுக் கேற்கச் சாமந்த னிசைந்து வெள்ளி
மன்றவ னடிக்கீழ் வீழ்ந்து வள்ளலே யரச னீந்த
குன்றுறழ் நிதிய மெல்லாங் கொண்டெனைப் பணிகொண் டாயே
வன்றிறற் சேனை யீட்டும் வண்ணம்யா தென்ன நின்றான்.

(இ - ள்) என்று கூறிய குலபூஷண பாண்டியனுக்குப் பொருந்த, சுந்தர சாமந்தர் உடன்பட்டு, வெள்ளியம்பலத்தில் நடித்தருளும் பெருமானது திருவடிக்கீழ்ப் பணிந்து, "எனது வள்ளலே! (சேனைவீரரைச் சேர்க்க) அரசன் கொடுத்த மலைபோன்ற பொருளையெல்லாம் கொண்டு என்னைக் குற்றேவலனாகக் கொண்டனையே, வலிய சேனையைச் சேகரிக்கும் வகை யாது?" என்று இரந்து நின்றார்.

(வி - ம்) "சேனையீட்டும் வண்ணம் யாது" என்றது, தனது உடல்-பொருள்-ஆவி மூன்றையும் இறைவனுக்கு ஒப்புவித்தவிட்டவராதலின், சேனையீட்டி அரசனுக்கு ஒப்பிடாவிடின் அவ்விடையூறு எனதன்று, தினதே என்னும் ஒற்றுமை யுரிமைகள் தோன்றக் கூறியதாம். (கசு)

அடியவர் குறைவு தீர்த்தாண் டருள்வதே விரதம் பூண்ட
கொடியணி மாடக் கூடற் கோமகன் காமற் காய்ந்த
பொடியணி புராணப் புத்தேட் புண்ணிய னருளி ஞாலை
இடியதிர் விசும்பு கீறி யெழுந்ததோர் தெய்வ வாக்கு.

(இ - ள்) தொண்டர்களது இடுக்கண்களைக் களைந்து அடிமைகொண்டருள்வதையே விரதமாகக் கொண்டருளிய, கொடிகள் கட்டிய மாடங்கள் பொருந்திய மதுராபுரியில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளும், மன்மதனைப் பொடிபடுத்திய திருநீறு தரித்த பழம்பொருளும், தெய்வதன்மை பொருந்திய தருமசொரூபியுமாகிய பெருமானது திருவருளினால், இடிமுழங்கும் ஆகாயத்தின் வயிற்றினைக் பிளந்து ஓர் அசரீரித் திருவாக்கு எழுந்தது. (கஎ)

சூழ்ந்தெழு சேனை யோடுந் தோற்றது நாளை நீயும்
வீழ்ந்தர சவையத் தெய்தி மேவுதி யென்ன விண்ணம்

போழ்ந்தெழு மாற்றங் கேட்டுப் பொருகரே றுவகை வெள்ளத்
தாழ்ந்தனன் மூங்நீர் வெள்ளத் தலர்கதி ரவனு மாழ்ந்தான்.

(இ - ள்) (நம்மைச்) சூழ்ந்தெழுந்த சேனைவீரர்களோடும் காளைக்கு வருகின்றோம். நீயும் பாண்டியன் சபையையடைய வருவாயென்று, ஆகாயத்தின் வயிற்றைக் கிழித்தெழுந்த அசரீரியைக் கேட்டு, போர் வீரர்கட்கு ஆண்சிங்கம் போன்ற சுந்தரசாமந்தர் சந்தோஷக் கடலில் மூழ்கினர். பரந்த கிரணத்தையுடைய சூரியனும் கடற்பெருக்கில் மூழ்கினன். (கஅ)

மீனவன் காண மேரு வில்லிதன் றமரை வன்கண்
மானவேன் மறவ ராக்கி வாம்பரி வீர னாகத்
தானுமோர் கூத்துக் கோலஞ் சூழைமந்துவந் தாட விட்ட
நீனிற எழினி போலக் காரிரு ணிவந்த தெங்கும்.

(இ - ஸ்) குலபூஷண பாண்டியன் காணும்படி, மேருமலையை வில்லாக வுடைய சோமசுந்தரக்கடவுள் தனது பிரதம கணங்களே மானமிக்க வேற்படை தாங்கிய போர்வீரர்களாக்கி, தானும் தாவிச்செல்லும் ஒரு குதிரை வீரனாக, திருவிளையாடல் செய்யுந் திருக்கோலம் பூண்டுவந்து லீலையாடப்போட்ட, நீலநிறம் பொருந்திய திரைச்சீலைபோல, எவ்விடத்துங் கரிய இருள் நிரம்பியது

புண்ணிய மனையிற் போகிப் புலர்வதைப் போழ்தென் றெண்ணி
அண்ணல்சா மந்தன் றுஞ்சா னடிக்கடி யெழுந்து வானத்
தெண்ணிறை மீன நோக்கி நாழிகை யெண்ணி யெண்ணிக்
கண்ணுத லெழுச்சி காண்பா னளந்தனன் கங்கு லெல்லாம்.

(இ - ள்) பெருமையிற் சிறந்த சுந்தரசாமந்தர் சிவபுண்ணியங்கள் குடிகொண்டுள்ள தனது வீட்டிற் சென்று எப்பொழுது விடியுமென்று கருதி, நித்திரை செய்யாமல் அடிக்கடி (படுக்கையினின்றும்) எழுந்து, ஆகாயத்தில் விளங்கும் கணக்கில்லாத நக்ஷத்திரங்களைப் பார்த்து, நாழிகை வரையறுத்து, சிவபெருமான் எழுந்தருளுந் திருக்கோலத்தைக் காண விரும்பி, இராப் பொழுது முற்றும் அளவுசெய்தார்.

(வி - ம்) அளந்தனென்றது - தான் இறைவர் வருங் கோலத்தைக் காணப் பெருமகிழ்ச்சியுற்றிருத்தலின் நித்திரை பெறுது விழித்திருந்தனென்பதாம். (உ ஏ)

தெருட்டரு மறைகள் தேறுச் சிவபரஞ் சுடரோ னன்பன்
பொருட்டொரு வடிவங் கொண்டு புரவிமேற் கொண்டு போதும்
அருட்படை யெழுச்சி காண்பான் போலவார் கலியின் மூழ்கி
இருட்டுகள் கழுவித் தூய இரவிவந் துதயஞ் செய்தான்.

(இ - ள்) தெளிவுபடிக்க வேதங்கள் தெளிந்துணராத பரஞ்சுடராகிய சோமசுந்தரக்கடவுள், தனது அன்பராகிய சுந்தரசாமந்தர் பொருட்டு ஒரு திருவுருவேற்றுக் குதிரையின்மேல் ஆரோகணித்து வரும் திருப்படை யெழுச்சி

யைக் காண்பவன் போலப் புனிதமாகிய சூரியன் கடலில் மூழ்கி, இருளாகிய அழுக்கினைப் போக்கிக் (கீழ்க்கடலில்) வந்து உதித்தான்.

(வி - ம்) சிவபெருமானது திருப்படை யெழுச்சியைக் காணவேண்டிய சூரியன் தேகசுத்தி காரணமாக நீராடி வந்தானென்றார். சூரியாஸ்தமனமும், சூரியோதயமும் வர்ணித்துக் கூறுவது பெருங்காப்பிய வுறுப்புக்களிலொன்று.

பொருகடே றணையா னேர்ந்து போந்துகான் மாடக் கூடற்
கருணாக ரகனைத் தாழ்ந்து கைதொழு திரந்து வேண்டிப்
பரவீமீண் டொளிவெண் டிங்கட் பன்மணிக் குடைக்கீ ழேகிக்
குருமதி மருமான் கோயில் குறுகுவான் குறுகு மெல்லை.

(இ - ள்) வீரர்களில் ஆண்சிங்கம் போன்ற சுந்தரசாமந்தர் மனமிசைந்து சென்று, நான்மாடக் கூடலாகிய மதுரபுரியில் எழுந்தருளிய திருபாமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளே சமஸ்கரித்துக் கைகுவித்து யாசித்துத் துதித்துத் திரும்பி, ஒளி பொருந்திய வெள்ளிய சந்திரன்போன்ற முத்துக்குடையின் கீழ்ச்சென்று, கிழக்கிலுதித்த சந்திரன் மரபிற்றோன்றிய பாண்டியன் மாளிகைக்குச் செல்வாராயினர். அவர் அவ்வாறு செல்லுகையில். (உஉ)

கரைமதி யெயிற்றுச் சங்கு கன்னன்முன் ஞான வென்றிப்
பிரமத கணமுங் குண்டப் பெருவயிற் றிருவ ஞாதி
வரைபுரை குறுத்தாட் பூத மறவரும் குழுமி வீக்கு
குரைகழல் வலிய கோன்றாட் கோளுடை வயவ ராகி.

(இ - ள்) அர்த்த சந்திரன் போன்ற (வக்கிர) தந்தங்களையுடைய சங்கு கன்னன் முதலான வெற்றி பொருந்திய பரிசனமாயுள்ள சிவகணங்களும், ஆழ்ந்த பெரு வயிற்றையுடைய குண்டோதரன் முதலான மலைபோன்ற குறிய கால்களையுடைய பூதவீரர்களும் நெருங்கி, கட்டிய சத்திக்கின்ற வீரகண்டை யையுடைய வலிய காலையும் வன்மையையுமுடைய வீரர்களாகி.

(வி - ம்) குறுத்தாள்—வலித்தல்.

இதுமுதல் நான்கு செய்யுள்களால் சிவபெருமான் மெய்க்காட்டுக் கொடுக்க எழுந்தருளிய திருக்கோலம் வர்ணிக்கப்பட்டது. (உங)

நேட்டிலை வடிவாள் குந்தந் தோமர நேமி நெய்த்தோர்
ஓட்டிய கணிச்சி சாப முடம்பிடி முதலா வெண்ணப்
பட்டவெம் படைமூ வாறும் பரித்தசெங் கையர் காலிற்
கட்டிய கழலர் காலிற் கடியராய்ப் புறம்பு காப்ப.

(இ - ள்) நீண்ட அச்சவடிவாகிய வடித்தவாளும், குந்தமும், எறியாயுதமும், சக்காரமும், உதிரம் பொருந்திய மழுவும், வில்லும், வேலு முதலாக எண்ணப்பட்ட கொடிய பதினெட்டுவித ஆயுதங்களையுந் தாங்கிய சிவந்த கையையுடையவர்களும், காலிற் கட்டிய வீரக்கழலணிந்தவர்களும், காற்றிலுங் கடிய கடையை யுடையவர்களுமாய்ப் புறத்திற் சூழ்ந்தவரவும். (உச)

வார்கெழு கழற்கா னந்தி மாகாளன் பிருங்கி வென்றித்
தார்கெழு நிகும்பன் கும்போ தரன்முதற் றலைவர் யாரும்
போர்கெழு கவசந் தொட்டுப் புண்டர நுதலிற் றீட்டிக்
கூர்கெழு வடிவா ளேந்திக் குதிரைச்சே வகராய்ச் சூழ.

(இ - ள்) வாரிற் கட்டிய வீரக்கழலணிந்த காலையுடைய நந்தி மாகாளரும், பிருங்கியும், வெற்றிமாலை தரித்த நிகும்பனும், கும்போதரனு முதலிய சிவ கணத்தலைவர் யாவரும் போர்த்தொழிற்குரிய கவசம் பூண்டு, திரிபுண்டரத்தை நெற்றியிலணிந்து கூர்மை மிக்க வடித்த வாட்படை தாங்கி, குதிரைச் சேவக ராய்ச் சூழ்ந்து வரவும். (உடு)

கற்றைச்சா மரைகள் பிச்சங் ஙவிகைபூங் கொடிக்கா டெங்கும்
மூற்றக்கா சொலியு ஙாணத் ஞாரிய முழுது மேங்கக் [ண்
கொற்றப்போர் விடையைத் தானே குரங்குளைப் பரியா மேற்கொ
டொற்றைச்சே வகராய் மாறி யாடிய வொருவர் வந்தார்.

(இ - ள்) நெருங்கிய சாமரைகளும், மயிற்பீலிகளும், குடைகளும், பொலி வையுடைய துவசக்காடுகளும், எங்குஞ் சூழ்ந்து வரவும், மேகவொலியும் ஙாண வாத்தியங்களெல்லாம் ஒலிக்கவும், வெற்றி பொருந்திய டோருக்குரிய இடப வாகனத்தையே குதிரையாக ஆரோகணித்தருளி, ஒப்பில்லாத வீராய்க் கான் மாறி யாடியருளிய சோமசுந்தரப் பெருமான் வந்தருளினன்.

(வி - ம்) குரங்கு உளை பரி - வளைந்த புறமயிரையுடைய குதிரை. (உக)

பல்லிய மொலிக்கு மார்ப்பும் பாய்பரி கலிக்கு மார்ப்புஞ்
செல்லொலி மழுங்க மள்ளர் தெழித்திடு மார்ப்பு மொன்றிக்
கல்லெனுஞ் சும்மைத் தாகிக் கலந்தெழு சேனை மேனுள்
மல்லன்மா நகர்மேற் சீறி வருகடல் போன்ற தன்றே.

(இ - ள்) பல வாத்தியங்கள் ஒலிக்குங் கோஷமும், பாய்ந்து செல்லுங் குதிரைகள் கனைக்குங் கோஷமும், மேககோஷமானது மழுங்கும்படி வீரர்கள் பேரொலி செய்யுங் கோஷமும் தம்முட் கலந்து, கல்லென்னும் ஆரவாரத்தை யுடையதாகிக் கலந்தெழுந்த சேனையின் வருகையானது, முற்காலத்தில் வளப்பம் பொருந்திய மதுராபுரியின்பேரில் (வருணன் ஏவக்) கோபித்து வாரின்ற கடலே யொத்திருந்தது. (உஎ)

சேனையின் வரவு நோக்கித் திருமகன் றிருமுன் னேகித்
தானையர் தலைவன் றென்னன் றுணிமுழல் குறுகிக் கூற
மீனவ னுவகை பூத்து வெயின்மணிக் கடையிற் போந்தங்
கானமண் டபத்திற் செம்பொ னரியணை மீது வைகி.

(இ - ள்) சேனையின் வருகையைப் பார்த்து, பாண்டியனுக்கு முன் சென்ற சேனைத் தலைவராகிய சுந்தர சாமந்தர், அப்பாண்டியனது பாதநிழலை யடைந்து (சேனையின் வருகையைக்) கூற, குலபூஷணபாண்டியன் களிகூர்ந்து

விளக்கமமைந்த இரத்தின மழுத்திய கடைவாயிலில் வந்து, அவ்விடத்தமைந்த மண்டபத்திலே, செம்பொன்னுலாகிய சிங்காசனத்தில் இருந்து.

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம். (உஅ)

தெவ்வடி மகிழ்ச்சி பொங்கச் சேணியின் செல்வ நோக்கி
எவ்வெவ தேயத் துள்ளா ரிவரென எதிரே நின்று
கௌவையில் மனச்சா மந்தன் கையிற்பொற் பிரம்பு நீட்டி
அவ்வவர் தொகுதி யெல்லா மணியணி நிறுவிக் கூறும்.

(இ - ள்) (சேதிராயனென்னும் வேடுவப்) பகைவனைக் கொல்லும் மகிழ்ச்சி பொங்கச் சேனைப் பெருக்கத்தைக் கண்டு, இவர்கள் எத்தெந்தத் தேசத்திலிருந்து வந்த சேனைவீரர்கள்? என்று வினவ, வருத்தமில்லாத மனதையுடைய சுந்தரசாமந்தர் பாண்டியன் முன் நின்று, கையிற்றாங்கிய பொற் பிரம்பினை நீட்டி, அச்சேனைவீரர் கூட்டங்களை யெல்லாம் வரிசை வரிசையாக நிறுத்திச் சொல்லுகின்றார். (உக)

வேறு

கோங்கரிவ ரையருரு நாடரிவ ரைய
கங்கரிவ ரையகரு நாடரிவ ரைய
அங்கரிவ ரையவிவ ராரியர்க ளைய
வங்கரிவ ரையவிவர் மாளவர்க ளைய.

(இ - ள்) ஐயனே! இவர்கள் கொங்குநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் குருநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் கங்கநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் கருநடநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் அங்கநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் ஆரியநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் வங்கநாட்டவர்கள்; ஐயனே! இவர்கள் மாளவநாட்டவர்கள். (ஙo)

இது முதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர்.

குலிங்கரிவ ரையவிவர் கொங்கணர்க ளைய
தெலுங்கரிவ ரையவிவர் சிங்களர்க ளைய
கலிங்கரிவ ரையகவு டத்தரிவ ரைய
உலங்கெழு புயத்திவர்க ளொட்டியர்க ளைய.

(இ - ள்) ஐயனே! இவர்கள் குலிங்கநாட்டார்கள்; ஐயனே! இவர்கள் கொங்கநாட்டார்கள்; ஐயனே! இவர்கள் தெலுங்குநாட்டார்கள்; ஐயனே! இவர்கள் சிங்களநாட்டார்கள்; ஐயனே! இவர்கள் கலிங்கநாட்டார்கள்; ஐயனே! இவர்கள் கௌடநாட்டார்கள்; ஐயனே! திரண்ட கல்போன்ற தோளையுடைய இவர்கள் ஒட்டிய நாட்டார்கள். (ஙக)

கோல்லரிவ ரையவிவர் கூர்ச்சரர்க ளைய
பல்லரிவ ரையவிவர் பப்பரர்க ளைய
வில்லரிவ ரையநல்வி தேகரிவ ரைய
கல்லொலி கழற்புனை கடாரரிவ ரைய.

(இ - ள்) ஐயனே! இவர்கள் கொல்லர்கள்; ஐயனே! இவர்கள் கூர்ச்சர்கள்; ஐயனே! இவர்கள் பல்லவர்கள்; ஐயனே! இவர்கள் பப்பரர்கள்; ஐயனே! இவர்கள் வில்லர்கள்; ஐயனே! இவர்கள் பரவிய வீதேகநாட்டினர்கள்; ஐயனே! இவர்கள் கல்லென்னு மொலியையுடைய வீரக்கழலணிந்த கடாரர்கள். (கூஉ)

கேகயர்க ளாலிவர்கள் கேழ்கிளர் மணிப்பூண்
மாகதர்க ளாலிவர் மராடரிவர் காஞ்சி
நாகரிக ராலிவர்கள் நம்முடைய நாட்டோர்
ஆகுமிவர் தாமெனமெய்க் காட்டியறி வித்தான்.

(இ - ள்) (ஐயனே!) இவர்கள் கேகய நாட்டிலிருந்து வந்தவர்கள்; இவர்கள் கிறங்கொண்டு விளங்கும் இரத்தினமிழைத்த ஆபரணமணிந்த மகதநாட்டிலிருந்து வந்தவர்கள்; இவர்கள் காஞ்சிநாட்டிலிருந்துவந்த நாகரிகத்தையுடையவர்கள்; இவர்கள்தாம் நம்முடைய நாட்டினராவார்களென்று அவரவருடைய உருவத்தைக் காட்டி யறிவித்தார். (கூங)

இத்தகைய சேட்புலனு ளாரையிவ ணுய்த்த
வித்தகைமை யென்னென வி ஞையருள் செய்யேல்
அத்தநின ரும்பொருள ணைத்தும்வரை யாதே
உய்த்தலின டைந்தனர்க ளாலெனவு ரைத்தான்.

(இ - ள்) இத்தன்மையாகிய தூதாகாட்டவர்களே இவ்விடம் வருவித்த சதுரப்பாட்டை என்னவென்று வினவியருளவேண்டாம், பெருமானே! உனது பெறுதற்கரிய பொருளையெல்லாம் கணக்கின்றிச் செலவுசெய்தமையால் (இவர்கள் யாவரும்) வந்தார்கள் என்று கூறினர். (கூச)

வேறு

அங்கெடுஞ் சேனை தன்னுட் சேணிடை யடன்மா வூர்ந்து
பின்னுற நிற்கு மொற்றைச் சேவகப் பிராணை நோக்கி
மன்னவ னிவர்யா ரென்னச் சாமந்தன் வணங்கி ஐய
இன்னவர் சேனை வெள்ளத் தியாரையென் றறிவ தென்றான்.

(இ - ள்) அந்தப் பெரிய சேனையுள் தூரத்தில் வெற்றிபொருந்திய குதிரையைச் செலுத்திப் பின்னே பொருந்திற்கும் ஒப்பில்லாத வீரத்தையுடைய சோமசுந்தரக்கடவுளைப் பாண்டியன் பார்த்து, இவர் யாவர்? என்று வினவ, சுந்தரசாமந்தர் பணிந்து, ஐயனே! இவர் இத்தச் சேனைப்பெருக்கில் யாரென்று யான் உணர்ந்து சொல்லுவது? எனச் சொன்னர். (கூடு)

அவரையிங் கழைத்தி யென்று னரசன்றன் வழிச்செல் வார்போற்
கவயமிட் டவரும் போந்தார் காவலன் களிகூர்ந் தம்பொன்
நவமணிக் கலன்பொன் னுடை நல்கிஞ னுள்ளத் தன்பு
தவறிலான் பொருட்டு வாங்கித் தரித்துத்தன் தமர்க்கு மீந்தார்.

(இ - ள்) அவரை யிவ்விடத்தில் அழைப்பாயென்று பாண்டியன் கூறினன். அப்பாண்டியனே வழிபட்டுச் செல்வார்போல, போர்க்கவசஞ்

சாத்திவந்த சோமசுந்தரப்பெருமானுஞ் சென்றார். பாண்டியன் மகிழ்ச்சி மிகுந்து அழகிய பொன்னுலாகிய நவமணிகளழுத்திய ஆபரணங்களையும் பீதாம்பரத்தையுங் கொடுத்தான். தன் மனதில் அன்பானது சிறிதுந் தவறுதலில்லாத சுந்தரசாமந்தர் பொருட்டு, (அவற்றை) ஏற்றுத்தரித்து, தனது பரிசனங்கட்குங் கொடுத்தருளினர். (சுக)

ஆய்ந்தவெம் பரிமாத் தூண்டி யைங்கதி நடத்திக் காட்டி
வய்ந்ததஞ் சேனை வெள்ளத் தெய்திணை செய்து மெல்லே
வேய்ந்ததார்ச் சேதி ராயன் வேட்டைபோய்ப் புலிகோட் பட்டு
மாய்ந்தன னென்றே றொற்றன் வேந்தன்முன் வந்து சொன்னன்.

(இ - ள்) ஆராய்ந்தெடுத்த உத்தம அசுவத்தை நடத்தி ஐங்கதிகளிலுஞ் செலுத்திக் காண்பித்து, பொருந்திய தமது சேனைவெள்ளத்திற் சென்றருளினர். (அப்படி) செல்லுங்காலத்தில், வெற்றிபொருந்திய (பூகைவனுகிய) சேதிராயன் வேட்டைமேற் சென்று புலியினுற் கொல்லப்பட்டு மடிந்தானென்று, ஒரு தூதுவன் பாண்டியன்முன் வந்து கூறினன். (சுஎ)

மூரசதி ரனிக நோக்கி முகமலர்ந் துவகை பூத்த
அரசனு மனிக வேந்தற் களவில்சீர்த் தலைமை யோடும்
வரிசைகள் மிதப்ப நல்கி வந்துமெய்க் காட்டுத் தந்து
பரசிய பதாதி தத்தம் பதிபுகச் செலுத்து கென்றான்.

(இ - ள்) மூரசொலிக்குஞ் சேனையைப் பார்த்து முகமலர்ச்சியுற்று மகிழ்வுற்ற பாண்டியனும், சேனைத்தலைவராகிய சுந்தரசாமந்தர்க்குப் பெருஞ் சிறப்பமைந்த சேனைத் தலைமையோடு வேறு அதிகாரமும், மூனம் வெறுக்கத் தக்க பரிசுகளுங் கொடுத்து, வந்து மெய்க்காட்டுக் கொடுத்து யாவரும் அதிசயிக்கின்ற சேனைகள் தத்தம் ஊர்க்குச் செல்ல விடைகொடுக்கவென்று பாண்டியன் கூறினன். (சுஅ)

அறைந்தவார் கழற்காற் சேனை காவல னனிகந் தத்தஞ்
சிறந்தசே ணுட்டிற் செல்லச் செலுத்துவான் போன்று நிற்ப
நிறைந்தநான் மாடக் கூடல் நிருத்தனந் நீலநின் முருகே
மறைந்தனன் மனித்த வேடங் காட்டிய மறவ ரோடும்.

(இ - ள்) சத்திக்கின்ற கெடிய வீரக்கழலணிந்த காலையுடைய சுந்தரசாமந்தர், சேனைகள் தங்கள் தங்களது சிறந்த தூரதேசங்கட்குச்செல்ல விடைகொடுப் பார்போல நிற்க, (வளப்பம்) நிறைந்த நான்மாடக்கூடலாகிய மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் மானுட வடிவங்கொண்டு வந்த சிவகணங்களோடும் அவ்விடத்தில் நின்றருளினற்போலவே அப்பொழுதே அந்தர்த்தானமாயினர்.

(வி - மீ) நின்றருங்கு = நின்ற + ஆங்கு. இதில் அகரம் தொகுத்தல். (சுசு)

கண்டனன் பொருனை நாடன் வியந்தனன் கருத்தா சங்கை
கொண்டனன் குறித்து நோக்கி யீதுநங் கூடல் மேய

அண்டர்தம் பெருமான் செய்த ஆடலென் றெண்ணிக் கண்ணீர்
விண்டனன் புளகம் போர்ப்ப மெய்யன்பு வடிவ மானான்.

(இ - ள்) தாமிரபர்ணி சூழ்ந்த காட்டையுடைய குலபூடண பாண்டியன் கண்டு அதிசயித்து மனதில் ஐயங்கொண்டு ஆராய்ந்துபார்த்து, இஃது நமது மதுரைப் பதியிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய திருவிளையாடலென்று கருதி ஆனந்த பாஷ்பஞ் சொரிந்து உடல் முழுதும் மயிர்க்கூச் செறிய ஒய்யன்பே வடிவமாகி நின்றான்.

(வி - ம்) அண்டர்தம் பெருமான் - தேவர் தலைவன். (சஅ)

தனக்குயிர்த் துணையா நின்ற சாமந்தன் றன்னை நோக்கி
உனக்கெனி வந்தார் கூட லுடையநா யகமே யென்றல்
எனக்கவ ராவார் நீயே யென்றவற் கியாவு நல்கி
மனக்கவல் பின்றி வாழ்ந்தான் மதிவழி வந்த மைந்தன்.

(இ - ள்) தனக்கு உயிர்த்துணைவரா யிருந்த சுந்தரசாமந்தரைப் பார்த்து, மதுரைப்பதியையுடைய சோமசுந்தரக் கடவுளே உமக்கு எளிதில் வந்தருளினரென்றல், நீரே எனக்கு அச்சோமசுந்தரக் கடவுளென்று, சந்திரமரபில் வந்த குலபூடண பாண்டியன் அவருக்கு வேண்டுவன வெல்லாந் தந்து மனக்கவலை யில்லாமல் அரசியல் நடத்தி வந்தான்.

(வி - ம்) "எனக்கவ ராவார் நீயே" என்றது.—"தாவர சங்கமங்க ளென்றிரண் டருவி னின்று - மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பான்" என்றபடி சிவபெருமான் அடியவரிடத்து வசித்தலால், அவ்வடியவரை யுபசரித்தலே அவரை யுபசரித்தல்மாதலி னென்க. (சக)

ஆ திருவிருத்தம் - கஎ0ச.

மூப்பத்தொன்றுவது

உலவாக்கிழியருளிய படலம்

அடியார் பொருட்டுப் பரிவயவ ராகிச் செழியன் காணவிடைக்
கொடியார் வந்து மெய்க்காட்டுக் கொடுத்த வண்ண மெடுத்துரைத்துங்
கடியார் கொன்றை முடியாரக் கன்னி நாடன் றனக்கிசைந்த
படியா லுலவாக் கிழிகொடுத்த படியை யறிந்த படிபகர்வாம்.

(இ - ள்) அடியாராகிய சுந்தரசாமந்தர் பொருட்டுக் குதிரைச் சேவகராகிக் குலபூஷணபாண்டியன் தரிசிக்க இடபக் கொடியையுடைய சோமசுந்தரக் கடவுள் மெய்க்காட்டுக் கொடுத்தருளிய திருவிளையாடலை எடுத்துக் கூறினேம். வாசநிறைந்த கொன்றை மலரை யணிந்த சடாமுடியையுடைய அப்

பெருமான், அப்பாண்டியன் தனக்கொத்த அன்பனுனபடியால் உலவாக்கிழி யருளிய திருவிளையாடலே (யாம் இனித்) தெரிந்த வண்ணங் கூறுவாம். (க)

வள்ளல் குலபூ டணன்றிங்கள் வாரந் தொடுத்துச் சிவதருமம்
உள்ள வெல்லாம் வழாதுகோற் றொழுகும் வலியாற் றண்ணுட்டில்
எள்ள லில்லா வேதியரை யிகழ்ந்தா னதனுல் மழைமறுத்து
வெள்ள மருக வளங்குன்றி வீளைவஃ கியது நாடெல்லாம்.

(இ - ள்) வரையாது கொடுக்குந் தொழிலையுடைய குலபூஷண பாண்டி யன் சோமவார விரதமுதல் சிவதருமமாகவுள்ள விரதங்களையெல்லாம் தவறுது கோற்று நடக்கும் வன்மையால், தன்னுடைய நாட்டிலுள்ள நிந்தையில்லாத அந்தணர்களை இகழ்ந்து நடந்தான். அவ்வேதிய இகழ்ச்சியால் மழைவளங் குன்றி நீர்ப்பெருக்குக் குறைய, பாண்டியநாடு முற்றும் வளங்குறைந்து வீளைவு சுருங்கிற்று.

(வி - ம்) சோமவார முதலான விரதங்கள் - அட்டமி, சதுர்த்தசி, பூரணை முதலியன. (உ)

அறவோ ரெல்லா நிரப்பெய்தி யாகங் கிடந்த நூலன்றி
மறைநூ லிழந்து மூனிவேள்வி வாழ்னர் வேள்வி தென்புலத்தின் [ன்
உறைவோர் வேள்வி யிழந்திழிந்த தொழில்செய் தாற்றுதியிர்வளர்ப்பா
புறநா டணைந்தார் பசியாலே புழுங்கி யொழிந்த குடியெல்லாம்.

(இ - ள்) அந்தணர் யாவரும் வறுமையுற்று, மார்பில் விளங்கும் பூணநூலே யன்றி, வேதமாகிய பெருநூலையும் இழந்து, முனிவர் யாகம் - தேவர் யாகம் - பிதிர்யாகம் (இவற்றை) இழந்து, இழிந்த தொழில்களைச் செய்து உய்தியறி யாது, தம்முயிரைக் காக்கப் புறநாட்டிற் சென்றார்கள். (அவ்வந்தணர்) ஒழிந்த குடிகளெல்லாம் பசியினுல் மனம் புழுங்கி. (ஊ)

எங்கா டணைவோ மெனவிரங்கி விரங்கி மதிக்கோன் மதிநாவிற்
பொன்னுண் முளரித் நடங்குடைந்து சித்திக் களிற்றைப் பூசித்துத்
தன்னு கைவாற் கயற்கண்ணி தலைவன் றன்னை யருச்சித்து
முன்னு வீழ்ந்து கரமுகிழ்த்துப் பழிச்சி மகிழ்ந்து மொழிகின்றுன்.

(இ - ள்) எந்த நாட்டிற்குப் போவோமென்று வருந்த (அதுகண்ட குல பூஷணபாண்டியன் மனம் வருந்தி, சோமவாரத்தில் அன்றலர்ந்த மலர்களை யுடைய பொற்றுமரைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சித்திவிநாயகமூர்த்தி யைப் பூஜைசெய்து, தன்னுடைய அன்புடன் அங்கயற்கண்ணியார் தலைவராகிய சோமசுந்தரக் கடவுளை (ஆகமமுறையே) அருச்சித்து, சந்நிதிமுன் விழுந்து கைகுவித்துத் துதித்து மகிழ்ந்து சொல்கின்றுன். (எ)

அத்த வுலகி லுயிர்க்குயிர்நீ யல்லை யோவுவ் வுயிர்ப்பசியால்
ஏய்த்த வருத்த மடியேனை வருத்து மாறென் யானீட்டி
வைத்த பொருளுந் தருமத்தின் வழியே சென்ற தினியடிகள்
சித்த மலர்ந்தென் னிடும்பைவினை தீர அருட்கண் செய்கவென.

(இ - ள்) தலைவனே! உலகிலுள்ள உயிர்களுக்கு உயிர் கீயல்லவோ? அந்த வுயிர்கள் பசியினால் இளைத்த வருத்தம் (தேவரீரைச் சாராது) அடியேனை வருத்தும் காரணம் யாது? யான் சேகரித்துவைத்த பொருளும் சிவதரும வழியே செலவாயது. இனித் தேவரீர் திருவுளமிரங்கி எனது துன்பநோய் தீரும்வண்ணம் திருவருணோக்கஞ் செய்தருளுக வென்று யாசிக்க. (கி)

கோளாடு டரவ மசைத்க சைத்த கூடற் பெருமான் குறையிரக்கு
மாளா வரசன் றவறுசிறி தகங்கொண் டதனைத் திருச்செவியிற்
கேளார் போல வாளாதே யிருப்ப மனையிற் கிடைத்தமலன்
ருளா தரவு பெறநினைந்து தரையிற் கிடந்து துயில்கின்றான்.

(இ - ள்) வன்மையுடைய ஆடாகின்ற சர்ப்பத்தை இடையிற் (கச்சாகக்) கட்டியருளிய சோமசுந்தரக்கடவுள், தனது குறைகூறி யாசிக்குந் தொண்டை நெஞ்சிய பாண்டியன் தவறுபாட்டைச் சிறிது திருவுளத்திற்கொண்டு, அதனைத் தமது திருச்செவியிற் கேளாதவர்போல வாளாவிருப்ப, (அரசன்) தனது கோயிலிற் சென்று நிர்மலாகிய பெருமானது திருவடியை அன்புமிகச் சிந்தித்து, தரையிற்கிடந்து நித்திரை செய்கின்றவனுயினன். (கூ)

அங்கண் வெள்ளி யம்பலத்து ளாடு மடிக ளருங்கனவிற்
சங்கக் குழையும் வெண்ணீறுஞ் சரிகோ வணமுந் தயங்கவுரன்
சிங்க நாதஞ் சிடந்தசையச் சித்த வடிவா யெழுந்தருளி
வெங்கண் யானைத் தென்னவர்கோன் முன்னின் றிதனை விளம்புவார்.

(இ - ள்) அப்பொழுது வெள்ளியம்பலத்தில் நடித்தருளும் சோமசுந்தரக் கடவுள் அக்குலபூஷணபாண்டியன் கனவில், சங்ககுண்டலமும் வெள்ளியதிரு நீறும் சரிந்த கோவணமும் விளங்கவும், திருமார்பில் சிங்கநாதம் (ஒருபாற்) சிடந்து அசையவும், சித்தமூர்த்தியா யெழுந்தருளி, அஞ்சாமையைப் பொருந்திய யானைச்சேனையையுடைய அப்பாண்டியன் முன்னே நின்று இதனைக் கூறியருளுகின்றார்.

(வி - ம்) சிங்கநாதம்-ஒருவகை வாச்சியம்; கொம்பினாற் செய்யப்பட்டது.

ஏடா ரலங்கல் வரைமார்ப வெம்பா லென்று மன்புடைமை
வாடா விரத விழுச்செல்வ முடையாய் வைய மறங்கடிந்து
கோடா தளிக்குஞ் செங்கோன்மை யுடையா யுனக்கோர் குறையுள துன்
வீடா வளஞ்சேர் நாட்டிந்நாள் வேள்விச் செல்வ மருகியதால்.

(இ - ள்) இதழ்கள் பொருந்திய மாலையுடிய மலைபோன்ற மார்பையுடைய பாண்டியனே! எம்மிடத்தில் எப்பொழுதும் அன்புடைமையும் அழியாத சிவவிரதமுமாகிய பெருஞ்செல்வத்தையுடையாய்! பூமியைக் கலிதூரத்து கோணுதலின்றிக் காக்குஞ் செங்கோலினையுடையாய்! உன்னிடத்தில் ஒரு குறையுளது. (அதனால்) அழியாத உனது வளம்பொருந்திய நாட்டில் இப்பொழுது வேள்விச் செல்வங்குறைந்தது. (அ)

மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்.

(இ - ள்) வேதமே நமது பீடமாம்; வேதமே நமது பாதுகையாம்; வேதமே நமது வாகனமாம்; வேதமே நமது சிலம்பாம்; வேதமே நமது கோவணமாம்; வேதமே நமது விழிகளாம்; வேதமே நமது மொழியாகும்; வேதமே நமது வடிவமாகும்.

(வி - ம்) பாதுகை - திருவடிநிலை. (கூ)

வேதந் தானே நமதாணைச் சத்தி வடிவாய் விதிவிலக்காய்ப்
போதங் கொளுத்தி நிலைநிறுத்திப் போகங் கொடுத்துப் பல்லுயிர்க்கும்
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு தருவதுமீதன்
நாதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோ லதுவாகும்.

(இ - ள்) வண்டுகள்பாடும் மாலையணிந்த மன்னவனே! வேதமே நமது ஆக்ஞையாகிய சத்தி வடிவாயும், விதிவிலக்குகளாயும், பலவுயிர்கட்கும் அறிவு கொளுத்தி நன்னிலையில் இருத்தி இஷ்டபோகங்கொடுத்து, எல்லாப் பிராணிகளிடத்தும், ஐயமாதிகளே வீலக்கும் பந்தங்களைக் கெடுத்து, எம்மைப்பிரியாத மோகூத்தைத்தருவதாயு முள்ளது. (ஆதலின்) நமது செங்கோலும் அவ்வேதமே யாகும். (கo)

அந்த மறைகள் தமக்குறுதி யாவா ரகந்நூல் வழிகலிகோய்
சிந்த மகத்தீ வளர்த்தெம்பாற் சிந்தை செலுத்து மந்தணரால்
இந்த மறையோர் வேள்விமழைக் கேதுவாகு மிவர்தம்மை
மைந்த இகழ்ந்து கைவிட்டா யதனுன் மாரி மறுத்தன்றுல்.

(இ - ள்) அந்த வேதங்கட்கு உறுதியாயுள்ளவர்கள், அந்த வேதநூல் வழியே கலிகோய்கெட யாகாக்கினி யோம்பி, எம்மிடத்தில் மனதைச்செலுத்தும் வேதியராவர். இவ்வாறுள்ள வேதியர்கள் செய்யும்யாகம் மழைக்குக் காரணமாம். நமது புதல்வனே! நீ இவர்களை அவமதித்துக் கைவிட்டாய்; அக்காரணத்தினுல் மழைவளங் குறைத்தது. (கக)

மும்மைப் புவனங் களுமுய்ய முத்தீ வேட்கு மிவர்தம்மை
கம்மைப் போலக் கண்டொழுகி நாளு நாளு அறம்பெருக்கிச்
செம்மைத் தருமக் கோலோச்சித் திகிரி யுருட்டி வாழ்தியென
உம்மைப் பயன்போ லெளிவந்தா ருலவாக் கிழியொன் றுதவுவார்.

(இ - ள்) திரிலோகங்களும் உச்சிவிக்க (காருகபத்தியம் ஆகவநீயம் தக்ஷிணக்கினியென்னும்) மூன்றக்கினியையும் வளர்க்கும் இத்தவேதியரை நம்மைப்போலச் சிந்தித்துநடந்து,எக்காலத்தும் பலதருமங்களையும்பெருகச்செய்து தருமவடிவான செங்கோலைச் செலுத்தி ஆக்ஞை சக்கரத்தைச் செலுத்தி

வாழ்வாய் என்று, மும்பிறப்பிற் செய்த கல்வினைப் பயன்போல எளிதில் வந்
தருளிய சோமசுந்தரக்கடவுள் உலவாக்கிழி ஒன்று கொடுத்தருளினார். (கூ)

இந்தக் கிழியி லெத்துணைப்பொன் னெடுத்து வழங்குந் தொறுநாங்கள்
தந்த அளவிற் குறையாத தன்மைத் தாகு மிதுகொண்டு
வந்த இலம்பா டகற்றென்று கொடுத்து வேந்தன் மனக்கவலை
சிந்தத் திருவீ றுதுசாத்தி மறைந்தா ரையர் திருவுருவம்.

(இ - ஸ்) இந்த உலவாக்கிழியில் எவ்வளவு பொன்னுலும் எடுத்துக் கொடுக்குந்தோறும் நாம் கொடுத்த அளவினின்றுங் குறையாத தன்மையதாகும். அப்பொருளைக்கொண்டு நேரிட்ட துன்பத்தை யொழிப்பாயென்று கொடுத்து, பாண்டியனுடைய மனத்துன்பமகலத் திருநீறிட்டு, சோமசுந்தரக் கடவுள் (சித்தமூர்த்தமாக வந்த) தமது திருவுருவ மறைத்தருளினார். (கூ)

கண்ட கனவு நனவாகத் தொழுதா னெழுந்து கௌரியர்கோன்
அண்டர் பெருமான் றிருவடிபோ லம்பொற் கிழியை முடித்தலைமேற்
கொண்டு மகிழ்ச்சி தலைசிறப்ப நின்ற்ரூர் முகூர்த்தங் கூத்தாடித்
தண்டா அமைச்சர் படைத்தலைவர் தமக்குங் காட்டி யறிவித்தான்.

(இ - ஸ்) பாண்டியன் தான்கண்ட கனவு நனவாகப் பயன்படத் துயிலெழுந்து பணிந்து சோமசுந்தரக் கடவுளுடைய திருவடியைப்போல அழகிய உலவாக்கிழியைத் தனது முடிமேற்சூடி, மகிழ்ச்சிமேலோங்க ஒரு முகூர்த்தம் ஆனந்தக் கூத்தாடி,நீங்காதமகிழ்திரிகட்டும் சேனாதிபதிக்கும் காட்டி (நடந்த விர்த்தாந்தங்களைத்) தெரிவித்தான்.

(வி - மீ) தொழுதெழுந்து என்பதனை 'எழுந்து தொழுது' என மாற்றிப் பொருள் கொள்க. 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் - பெய் யெனப் பெய்யுமழை' என்னுந் திருக்குறளில் தொழுதெழுவாள் என்றது எழுந்து தொழுவாள் எனப் பொருள்படுமென்பர் பிரயோகவிவேகநூலார். (கூ)

செங்க ணரிமான் பிடர்சுமந்த தெய்வ மணிப்பூந் தவிசேற்றிச்
சங்க முழங்க மறைமுழங்கச் சாந்தந் நிமிர்ந்து தாதெழுதத்
தொங்க லணிந்து தசாங்கவிரைத் தூப நறுநெய்ச் சுடர்வளர்த்துக்
கங்கை மிலைந்த கடவுளெனக் கருதிப் பூசை விணைமுடித்தான்.

(இ - ஸ்) செவ்விய கண்ணினையுடைய சிங்கத்தின் பிடர்சுமந்த தெய்வத் தன்மைபொருந்திய இரத்தினத்தின் பொலிவையுடைய ஆசனத்திலேற்றி, சங்கங்கள் (ஒருபுறம்) முழங்கவும், வேதங்கள் (ஒருபுறம்) கோஷிக்கவும், சந்தனக் குழம்பைஅப்பி, மகரந்தம் சிந்த மலர்மாலையைச் சூட்டி,தசாங்கோபசாரத்தோடு வாசனைத்தூபத்தையும், மணங்கமழும் நெய்த்தீபத்தையும் வளர்த்து, கங்காதரராகிய சிவபெருமானேப்போல (உலவாக்கிழியைச்) சிந்தித்துப் பூசைசெய்து முடித்தனர்.

(வி - மீ) தசாங்கோபசாரங்கள். —ஆவாகனம் - தாபனம் - சன்னிதானம் - சன்னிரோதனம் - அவகுண்டனம் - தேனுமுத்திரை - பாத்தியம் - ஆசமனீ

யம் - அர்க்கியம் - புட்பதானம் எனப்படும். தூபம் ஐவகையென்பர்: அவை குக்குருக்கம் - பச்சைக் கர்ப்பூரம் - காரகில் - வெண்சந்தனம் - கருஞ்சீதாரி எனப்படும். (கடு)

அடுத்து வணங்கி வலஞ்செய்திட் டம்பொற் கிழியைப் பொதிரீக்கி
எடுத்து முத்தீ விஞைஞர்க்கும் யாகங் களுக்கும் யாவர்க்கும்
மடுத்து நாளும் வரையாது வழங்க வழங்க அடியார்க்குக்
கொடுக்கக் குறையா வீட்டின்ப மாயிற் றையர் கொடுத்தகிழி.

(இ - ள்) அழகிய உலவாக்கிழியைச் சமீபித்துப் பணிந்து பிரதக்ஷிணம் செய்து முடியினின்று நீக்கிப் பொன்னையள்ளி, முத்தீயோம்பும் அந்தணர்கட்கும் யாகங்கட்கும் மற்றவர்கட்கும் எக்காலும் அளவின்றிக் கொடுக்கக் கொடுக்க, சோமசுந்தரக்கடவுள் கொடுத்தருளிய உலவாக்கிழியானது, தமது அடியார்க்குக் கொடுக்கக் குறையாத மோட்ச இன்பத்தைப்போல (என்றுங் குறையாது) ஒரு படித்தா யிருந்தது.

(வி - ம்) வழங்க வழங்கவென்ற அடுக்கு மிகுதிப்பொருளது. (கசு)

ஆய பொதியில் வளைபொன்னு லகும்பு செய்து விசும்பிழிந்த
கோயி லதனை யகம்புறமுங் குயின்று ஞானக் கொழுந்தனைய
தாயி லறுகாற் பீடிகைவான் றடவு கொடிய நெடியபெரு
வாயில் பிறவு மழகெறிப்ப வேய்ந்தான் மறையின் வரம்பறிந்தான்.

(இ - ள்) உலவாக்கிழியினின்றெடுத்த வளைந்த பொன்னுல், ஒளிவீசி விண்ணுலகினின்றிழிந்த இந்திர விமானத்தை அகத்திலும் புறத்திலும் இழைத்து, ஞானக்கொழுந்துபோன்ற அங்கயற்கண்ணம்மையார் திருக்கோயிலும் அறுகாற் பீடமும் ஆகாயமளாவிய கொடியையுடைய நெடிய பெரிய திருக்கோபுரவாயிலும் மற்றுள்ளனவும் அழகுசீசப் பொற்றகடுவேய்ந்தான் வேதத்தின் எல்லையை யறிந்த குலபூஷண பாண்டியன். (கள)

மூந்திக் குறையா நிதிக்கடலே முகந்து முகந்து நாடோறுஞ்
சிந்திக் சூலபூ டணக்கொண்டல் தெய்வ தருமப் பயிர்வளர்ப்பப்
பந்தித் திமைமுந் நீர்மேகம் பருகிச் சொரியப் பலவளனும்
கந்திக் கன்னி நாடளகை ககர்போற் செல்வந் தழைத்தன்றே.

(இ - ள்) குலபூஷண பாண்டியனுகிய மேகமானது குறையாத திரவிய மென்னுங்கடலே முற்பட்டு மொண்டு தினந்தோறுஞ்சிந்தி, தெய்வத்தன்மையையுடைய தருமமாகிய பயிரை வளர்த்தலால், வரிசையாகவரும் அலைகளையுடைய கடல் நீரை மேகமானது பருகிச் சொரியப் பல்வளங்களுமிருந்து, பாண்டி நாடானது அளகா புரிபோலச் செல்வத்திற்றழைத்தது. (கஅ)

வேறு

வையா கரணர்க ணையா யிகர்மறை வல்லோர் மறைமுடி சொ
லாய்வோர், மெய்யா மிருதிகள் பொய்யா விரதிகள் வேள்வித் தழ

களே வாழ்விப்போர், பையா டரவணி யையா னனனுரை பகர்வோ ருல கிய லகல்வோர்கள், எய்யா துறைதவி னேயா தளகைய தென்னப் பொலிவது தென்னாடு.

(இ - ள்) வியாகரண பண்டிதர்களும், நியாயநூற் புலவர்களும், வேதமு ணர்ந்தவர்களும், உபநிஷதப்பொருளே யாராய்ந்தவர்களும், உண்மையாகிய ஸ்மிருதி நூல்களே வாசித்தவர்களும், பொய்யாத விரதமுடையவர்களும், யாகாக்கினியைப் பாதுகாப்பவர்களும், படம்விரித்தாட நின்ற சர்ப்பத்தை யணிந்த ஐந்து திருமுகங்களேயுடைய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய ஆகம நூலே அப்பியசித்தவர்களும், பாசபந்த மொழிந்தவர்களும், (வறுமை யால்) வருந்தாது வாழ்தலால், பாண்டி நாடானது வருந்தாத அளகாபுரிபோல விளங்கா நின்றது.

(வி - ம்) வையாகரணம் - இலக்கணம். நையாயிகம் - நியாயநூல். (கஙு)

ஆ திருவிருத்தம் - களஉ.

மூப்பத்திரண்டாவது

வளையல் விற்ற படலம்

வேதந் தனது வடிவென்று விண்ணின் றிழிந்த விமானமறைக் கீதன் செழியன் றனக்குலவாக் கிழிதந் தளித்த வழியிதுவப் போதங் கடந்த பொருள்வணிகப் புத்தேள் மாட மணிமறுகு பாதந் தட்வ நடந்துவளை பகர்ந்த பரிசு பகர்கிற்பாம்.

(இ - ள்) தனது திருவுருவம் வேதமேயென்று கூறி, விண்ணுலகினின் றிழிந்த இந்திரவிமானத்திலெழுந்தருளிய சாமகீதராகிய சோமசுந்தரக்கடவுள் குலபூஷணபாண்டியனுக்கு உலவாக்கிழி கொடுத்தருளிய திருவிளையாடல் இது. சுட்டறிவிற் கெட்டாத அக்கடவுள் வணிகராய், மாடங்கள் நெருங்கிய அழகிய வீதியில் தமது திருவடி தோய நடந்து, வளையல் விற்ற திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

(வி - ம்) 'வேதந் தனது வடிவென்று' என்பதனை விமானத்திற்கே அடை யாக்கிக் கூறினும் அமையும். (க)

இறைவன் குலபூ டணன்றிகிரி யிவ்வா றருட்டு நாண்முன்னுட் கிறைவண் டறையுந் தாருவன தெய்வ முனிவர் பன்னியர்தந் கிறைவன் றளந்து காட்டுகென நெடியோன் மகளைப் பொடியாக்கும் அறவன் முனைர் காபாலி யாகிப் பலிக்கு வருகின்றான்.

(இ - ள்) குலபூஷண பாண்டியன் தனது ஆக்ஞை சக்கரத்தை யிவ்வாறு செலுத்துங் காலத்தில், முன்னுளில் சிறைகளையுடைய வண்டுகளெல்லாக்கும் தாருவனத்திலுள்ள தெய்வீகம் பொருந்திய முனிபத்தினிகளுடைய கற்பு நிலையை அப்பொழுது அளவிட்டுக் காட்டும்படி, மன்மதனைப் பொடிபடுத்திய வீரஞ்சிய சிவபெருமான் ஒரு கபாலத்தையுடையவனுப் பலிக்கு வருகின்றவ னுயினன்.

(வி - ம்) கெடியோன்மகன் - திரிவிக்கிரமாவதாரங்கொண்ட திருமாலின் புதல்வன். சிவபெருமான் மனைவியோடு கூடியிருப்பினும் சடைமுடி கல்லாடை முதலியன தாங்கிக் காமனைச் சாம்பராக்கினமையின் "கெடியோன் மகனைப் பொடியாக்கும் அறவன்" என்றார். (உ)

வேத மகைக்குங் கோவணமு மெய்யி னீறு மூள்ளாளக்
கீத மிகைக்குங் கணிவாயு மூள்ளே நகையுங் கிண்கிணிசூழ்
பாத மலரும் பாதுகையும் பலிகொள் கலனுங் கொண்டிடதி
மாதர் கணவன் றவவேட மெடுத்தா லொத்து வருமெல்லை.

(இ - ள்) வேதமாகிய கட்டுங்கோவணமும், திருமேனியில் விபூதியும் உள்ளாளக்கீதத்தைப் பாடாநின்ற கொவ்வைக் கனிபோன்ற திருவாயும், உள்ளே அரும்பிய புன்னகையும், சதங்கை யணிந்த பாததாமரையும், பாதுகையும், பிட்சாபாத்திரமுங்கொண்டு இரதிதேவியின் அழகிய காயகஞ்சிய மன்மதன் தவவேட மெடுத்தாற்போல வந்தருளுங் காலத்தில்.

(வி - ம்) உள்ளாளக்கீதம் - வழக்கிற்கனம். அதாவது ஒற்றறுத்துப்பாடுத லென்பர். (ஊ)

விள்ளுங் கமலச் சேவடிசூழ் சிலம்பி னெலியு மிடறதிரத்
துள்ளுங் கீத வொலியுங்கைத் துடியி னெலியுந் துளைச்செவிகீண்
டுள்ளம் பிளந்து கிறைகளைந்தீர்த் தொல்லை வருமுன் வல்லியர்கள்
பள்ளங் கண்டு வருபுனல்போற் பலிகொண் டில்லின் புறம்போந்தார்.

(இ - ள்) மலர்ந்த தாமரை போன்ற சிவந்த திருவடியைச் சூழ்ந்த சிலம்பினெலியும், கண்டத்தில் அதிரத்துள்ளாகின்ற கீதவொலியும், திருக்கரத்தேந்திய தமருகவொலியும், செவித்தொளையைக் கிழித்து மனதை வெளிசெய்து சற்பைக் கொள்ளை கொண்டு இழுத்து விரைந்து வருமுன், தாருகவன முனிபன்னியர் பள்ளத்தைக் கண்டு வருகின்ற நீரைப்போலப் பலிதாங்கி வீட்டினின்று புறம்போந்தார்கள். (எ)

வேறு

ஐயங்கொண் டணைவா ரையர் பரிகலத் தைய மன்றிக்
கையம்பொன் வளையும் பெய்வார் கருத்துகா ணன்றிக் காசு
செய்யும்பொன் மருங்கு ஞணு மிழப்பர்வேள் சிலையம் பன்றிக்
கொய்யுத்தண் மலர்க்க ணம்புங் கொங்கையிற் சொரியச் சோர்வார்.

(இ - ள்) பலிதாங்கி வருகின்ற முனிபன்னியர் ஐயரது பிக்ஷாபாத்திரத்தில் ஐயமல்லாமலும் தமது கையிலணிந்த அழகிய பொன்னுலாகிய வளையலையுமிடுவார்கள்; மனதிலுள்ள நாணையன்றி இரத்தினமிழைத்த பொன்னுலாகிய இடையிலணிந்த நாணையுமிழப்பார்கள்; மன்மதன் தனது வில்லில் ஏறிட்ட மலரம்பல்லாமல் கொய்யா னின்ற தண்ணிய தாமரை போன்ற தமது கண்களாகிய அம்பினையும் தமது தனத்தின்மேற் சிந்த நிலைதளர்வார்கள்.

(வி - ம்) மருங்குல்காண் - மேகலாபரணம். சிலையம்பு - மன்மதனது கருப்பு வில்லிலேறிட்ட மலர்ப்பாணம். கண்ணம்பு - கண்ணீர். (நி)

மடமயி லனையா ரெங்கள் வளையினைத் தருதி யென்றூர்
கடல்விட மயின்ரு னுங்கள் கந்தரத் துள்ள தென்றூன்
தடமதிக் கொம்ப ஞெரெங் கலையினைத் தருதி யென்றூர்
மூடமதி யிலைந்தா னுங்கண் மூகமதி யிடத்த தென்றூன்.

(இ - ள்) இளமைதங்கிய மயில்போன்ற சாயலையுடைய மாதர்கள் எங்கள் வளையை [வளையல]த்தாரும் என்றூர்கள். கடலிற்றோன்றிய ஆலாலவிஷத்தைப் பானஞ்செய்தருளிய சிவபெருமான் வளை[சங்கம்] உங்கள் கண்டத்திலுள்ள தென்றுவிடைகொடுத்தார். பூரணசந்திரனுதித்த மலர்க்கொம்புபோன்ற மங்கையர் எமது கலை [வஸ்திரத்தைச்] கொடும் என்று கேட்டார்கள். வளர்ந்த இளஞ்சந்திரனை யணிந்த சிவபெருமான் (கலைகள்) உங்கள் முகமாகிய சந்திரனிடத்துள்ளனவென்று கூறினர்.

(வி - ம்) வளை கலை என்னு மிரண்டும் முறையே வளையல் சங்கு எனவும், வஸ்திரம் சந்திரகலை எனவும் சிலேடைப்பொருள்தரும். இவ்வாறு விடை யளித்தது அவர் கருத்துணர்ந்த சிவபெருமான் அதனை யுணராரா போன்று நும்பாற் காமவேட்கையுடையே மல்லமெனப் பொருள் தோன்றக் கூறினரென்க. (சு)

இடையறிந் தெம்மைச் சேர்மி னென்றன நிளைய செங்கோன்
கடலமு தணையீர் நுங்கட் கிடையினிக் காணு தென்றூன்
மடநலா ரஃதேற் பண்டை வண்ணமீந் திலிலீர் செல்ல
விடையளித் தருள்மி னென்றூர் வேலைபுக் குறங்கு மென்றூன்.

(இ - ள்) மங்கையர் இடை[சமயம்] அறிந்து எம்மைச்சேரும் என்றூர்கள். எமது பெருமான் (பாற்) கடலிலுதித்த அமிர்தம்போலு மரிவைகாள்! உங்கட்கு இடை [இடுப்பு] இப்பொழுது புலப்படாதென்று கூறினர். மடமைக்குணமுடைய அம்மாதர்கள் அவ்வாறுயின், முன்னுள்ள நிறத்தைக் கொடுத்து எமது வீட்டிற்குச் செல்ல விடை [உத்தரவு] கொடுத்தருளவேண்டுமென்றூர்கள். வீடை [தமது இடபம்] கடலிற்புகுந்து அறிதுயில்கொள்ளுமென்று கூறினர்.

(வி - ம்) இடை விடை என்பன சிலேடைப் பொருளன.

'பண்டைவண்ண மீந்து' என்றது தமது இயற்கை வடிவொழிந்து பசலை நிற முற்றிருத்தலின், அவ்வாறு வீட்டிற்சென்றூல் வியபிசாரம் வினையுமாதலின் அஃது நீங்க வேண்டிப் பிரார்த்தித்ததாம்.

சிவபெருமான் ஊர்ந்துவரும் இடபவாகனம் திருமாலாதலின் "விடை வேலைப்பு குறங்கும்" என்றுரைக்க. (எ)

நங்கையர் கபாலிக் கென்று நடுவிலே போது மென்றூர்
அங்கண னடுவி லாமை நும்மினோர்க் கடுத்த தென்றூன்
மங்கைய ரடிகள் நெஞ்சம் வலியகற் போது மென்றூர்
கொங்கலர் கொன்றை யானுங் கொங்கையே வன்க லென்றூன்.

(இ - ள்) மூனிங்கையர் கபாலி ஆகிய உமக்கு ஒருபோதும் நடு [நடுவு கிலே] இல்லேபோலுமென்றூர்கள். அழகிய கண்ணையுடைய சிவபெருமான் நடு [இடை] இலாமை உம்மைப் போல்வார்க்கே அடுத்தது என்று கூறினர். மாதர்கள் அடிகளுடைய நெஞ்சம் வலிய கல்போலு மென்றூர்கள். மகாத்தத் தோடலர்ந்த கொன்றை மாலையணிந்த சிவபெருமான் உமது குசங்களே வலிய கற்கள் என்று கூறினர்.

(வி - ம்) நடு சிலேடைப் பொருளது. (அ)

காதுவே லன்ன கண்ணூர் கங்கைநீர் சுமந்த தேதுக்
கோதுமி னென்றூர் தும்பா லுண்பலி யேற்க வென்றூன்
ஏதுபோ விருந்த தையநிசைத் தசெப் பென்று ரீசன்
கோதுறு வழுதன் னீர்துங் கொங்கைபோ லிருந்த தென்றூன்.

(இ - ள்) கொல்லுகின்ற வேற்படைபோன்ற கண்ணையுடைய பெண்கள் கங்கை [கங்காநதி]யைத் தேவரீர் சுமந்திருப்பது யாதுநிமித்தம்? சொல்லும் என்று வினவினர்கள். கங்கை [பிரமகபாலத்தைக் கையில் தாங்கி கிற்றல்] உம்மிடத்தில் உண்ணும் பலியேற்பதற்காக வென்று கூறினர். ஐயன் கூறிய செப்பு [சொல்] யாது போன்றிருந்ததென்று கூறினர். "பெருமான் குற்ற மில்லாத அழுதம்போன்ற பெண்களே! செப்பு [கலயம்] உமது தனத்தைப் போன்றிருந்தது என்று கூறினர்.

(வி - ம்) கங்கை, செப்பு - சிலேடைப் பொருளன.

கம் - பிரமகபாலம்; கை - கரம். (கூ)

கறுத்ததை யெவன்கொ லைய கந்தர மென்றூர் வேளை
வெறுத்தவன் மாரி பெய்தற் கென்றனன் விழியால் வேலை
ஒறுத்தவர் யாவ தென்றீ ருத்தர மென்றூர் கூற்றைச்
செறுத்தவன் தென்பால் நின்று நோக்கினுற் றெறிவ தென்றூன்.

(இ - ள்) (மூனி பன்னியர்) ஐயரே (உமது) கந்தரம் [கழுத்து] கறுத்தது யாதுகாரணம் எனவினவினர். மன்மதனை வெறுத்தெரித்த சிவபெருமான் (கந்தரங் கறுத்தது [மேகங் கறுப்புற்றது]) மழைபெய்தற்கென்று விடைகொடுத் தார். தமது கண்களால் வேலாயுதத்தை வென்ற மங்கையர் எங்கள் விஞவிற்கு உத்தரம் [விடை] யாதென்று கூறினீர்? எனக்கேட்டார்கள். இயமனை யுதைத் தருளிய சிவபெருமான் தென்றிசைக்கணின்று பார்த்தால் நீங்கள் கூறிய உத் தரம் [வடக்கு] தெரியத்தக்கது என்று கூறினர்.

(வி - ம்) கந்தரம், உத்தரம் என்பன - சிலேடைப் பொருளன. (கo)

செக்கரஞ் சடையான் கண்ணிற் றம்முருத் தெரிய நோக்கி
இக்கொடி யார்போற் கண்ணு ளெம்மையு மிருத்தி மென்றூர்
நக்கனுந் தனையன் ஞர்கண் ணிடைக்கண்டு நகைத்து நம்மின்
மிக்கவர் நுங்க ணுள்ளார் விழித்தவர்க் காண்மி னென்றூன்.

(இ - ள்) சிவந்த அழகிய சடாமுடியையுடைய சிவபெருமான் திருவிழி யில் தமதுருவம் புலப்படப்பார்த்து, இக்கொடிபோன்ற இடையையுடைய பெண்களைப் போல உமது விழியில் எம்மையும் இருக்கச் செய்யுமென்றூர்கள் சிவபெருமானும் தன்னை அப்பெண்கள் கண்ணிற்கண்டு நகைத்து நம்மைக் காட்டிலும் பேரழகர் உமது கண்களிலிருக்கின்றூர்; சரிவர விழித்து அவரைப் பாருங்களென்றூர்.

(வி - ம்) சிவபெருமான் விழியிற்றோன்றிய தமது பிரதிபிம்பத்தைக் காமவெறியாலுணராது மங்கையரைக் கண்ணிலமைத்தா ரென்றூர். (கக)

அஞ்சலிப் போது பெய்வார் சரணமென் றடியில் வீழ்வார்
தஞ்செனத் தளிர்க்கை நீட்டித் தழுவிய கிடைக்குந் தோறும்
எஞ்சுவா னெஞ்சா தேதத்தி யெதிர்மறை யெட்டுந் தோறும்
வஞ்சனு யகல்வான் மையல் வஞ்சியர்க் கணிய ஞமோ.

(இ - ள்) (மங்கையர்) அஞ்சலித்து மலர் சூட்டுவார்கள்; சரணம் என்ற திருவடியிற் பணிவார்கள்; (நீரே) பற்றுக்கோடென்று மாந்தளிர் போன்ற கை களை நீட்டித் தழுவ, அவர்கட்குக் கிட்டுந்தோறும் (கிட்டாது) அப்பாற்படுவான். வேதங்கள் குறைபடாது வணங்கி எதிர்நின்று தொடுத்தோறும் அடைதற் கரியனுய் நிற்கும் பெருமான், மயக்கவலையிற் பட்ட பெண்களுக்குச் சமீபித்தவ னுவானே? (கஉ)

அடுத்தெமைத் தழாதீ ரேனீ ரவிழ்ந்தபூங் கலையை மீள
உடுத்துமி னும்பால் யாங்கள் மையல்நோ யுழப்ப நோக்கிக்
கடுத்தெமர் முனியா முன்னங் கழற்றிய வலையுங் கையில்
எடுத்திடு மென்றூர் நாளை யிடுதுமென் றேகி ஞனே.

(இ - ள்) (ஐயரே! நீர்) எம்மை யடுத்தழத் தழுவாதிருப்பீராகில், சரிந்த அழகிய உடையை மீண்டு எடுத்து உடுத்தும். உம்மிடத்தில் நாங்கள் மயக்க நோயில் வருந்தக் கண்டு எம்மவர்கள் கோபித்து வெறுக்காததற்கு முன்னே கழற்றிய வலையேயாயினும் எமது கையில் எடுத்து இடும் என்றூர்கள். (சிவ பெருமான்) நாளைக்கு இடுவோ மென்று சென்றருளினர்.

(வி - ம்) 'கழற்றிய வலை' என்றது சிவபெருமானைக் கருதிய வழி நிகழ்ந்த செயலாதலின், சிவபெருமான்மே லேற்றிக் கூறப்பட்டது. 'உடுத்துமின்' என் றது பரிசித்தலாற் காமமயக்கஞ் சிறிதொழியு மென்னுங் கருத்துடன் கூறியது.

பிள்ளைவெண் டிங்கள் வேய்ந்த பிரான்கொண்டு போன நாணும்
உள்ளமு மீட்க லாற்ரு துயங்கினர் கலையுஞ் சங்குந்

துள்ளஐங் கணையான் வாளி துளைப்பவெம் பசலை யாகங்
கொள்ளைகொண் டுண்ண நின்ற ரங்கிலை கொழுநர் கண்டார்.

(இ - ள்) வெள்ளிய இளஞ்சந்திரனையணிந்த சிவபெருமான் கைக்கொண்டு சென்ற தமது நாணத்தையும் மனத்தையும் மீட்க முடியாது, மயங்கிய முனி பன்னியர் ஆடையும் வளையுஞ் சோரவும் பஞ்சபாணனுகிய மன்மதனது கணைகள் துளைக்கவும், (காமவிருப்பாலாகிய) கொடிய பசலை நிறம் தமது மார்பைக் கவர்ந்து படரவும் நின்றார்கள். அவர்களது நிலையை அவர்கள் கணவர்களாகிய தாருகவன முனிவர்கள் கண்டார்கள். (கச)

போய்தவ வடிவாய் வந்து நம்மனைப் பொன்னி னன்னர்
மெய்தழை கற்பை நாணை வேரொடுங் களைந்து போன
கைதவன் மாடக் கூடற் கடவுளென் றெண்ணித் தேர்ந்தார்
செய்தவ வலியாற் கால மூன்றையுந் தெரிய வல்லார்.

(இ - ள்) பொய்த்தவ வடிவேற்றுவந்து, தமது இல்வாழ்க்கைக்குரிய மனைவியாது உடலுடன் வளர்ந்த கற்பையும் நாணையும் வேரொடு களைந்து சென்ற வஞ்சகன், மாடங்கள் நெருங்கிய மதுராபுரியி லெழுந்தருளிய சோம சுந்தரக் கடவுளே என்று சிந்தித்துணர்ந்தார்கள், செய்யுந் தவவலியால் திரி கால வர்த்தமானங்களையும் அறியவல்ல முனிவர்கள்.

(வி - ம்) பொன்னின் அன்னர் - திருமகள்போலும் வடிவுடைய மாதர்கள். முனிமாதரது கற்பை அறத் தவிர்த்தற்கே தவவடிவேற்று வந்தமையின் "பொய்தவ வடிவாய்" என்றார். (கடு)

வேறு

கற்புத் திரிந்தார் தமைநோக்கிக் கருத்துத் திரிந்தீர் ளீராழி
வெற்புத் திரிந்த மதிற்கூடல் மேய வணிகர் கன்னியராய்ப்
பொற்புத் திரியா தவதரிப்பீர் போமென் றிட்ட சாபங்கேட்
டற்புத் திரிந்தா செங்களுக்கீ தகல்வ தெப்போ தெனமுனிவர்.

(இ - ள்) கற்புநிலை தவறிய தமது மனைவியரைப் பார்த்து, மனம் வேறு பட்டவர்களே! பெரிய சக்கரவாளகிரி தனதருவத் திரிந்துவந்த மதில்சூழ்ந்த மதுராபுரியில் வாழும் வணிகமாதர்களாய்ச் சிறிதும் அழகு குறைபடாது பிறக்கக் கடவீர்கள். (இங்கிருந்து) போங்கள் என்று இட்ட சாபத்தைக் கேட்டு அஞ்சி, (இல்வாழ்க்கைக்குரிய) அன்பு மாறிய அப்பெண்கள் இச்சாபம் எங்களுக்கு எப்பொழுது அகல்வது? என வினவ, தாருகவன முனிவர்கள். (கக)

அந்த மாட மதுரைநகர்க் கரசா கியசுந் தரக்கடவுள்
வந்து நும்மைமக் கைதீண்டும் வழியிச் சாபங் கழியுமெனச்
சிந்தை தளர்ந்த பன்னியருந் தென்னர் மதுரைத் தொன்னகரிற்
கந்த முல்லைத் தார்வணிகர் காதல் மகளி ராய்ப்பிறந்தார்.

(இ - ள்) மாடங்கள் நெருங்கிய அந்த மதுராபுரிக்கு இறைவராகிய சோம சுந்தரக் கடவுள் (மானுட வடிவேற்று) வந்து உங்களைக் கைதீண்டும்பொழுது

இச்சாபம் நீங்கும் என்று அனுக்கிரகிக்க, (அச்சாபத்தால்) மனந்தளர்ந்த முனிபத்தினிமாரும், சோமசுந்தரக் கடவுளுடைய தொன்று தொட்டுள்ள மதுராபுரியில், வாசனை நிறைந்த முல்லைமாலை யணிந்த் வணிகர் குலத்தில் விருப்பமிக்க பெண்களாகப் பிறந்தார்கள். (கஎ)

வளர்ந்து பேதை யிளம்பருவ மாறி யல்குல் புடையகன்று
தளர்ந்து காஞ்சி மருங்கொசியத் ததும்பி யண்ணுந் தரும்புமுலை
கிளர்ந்து செல்லும் பருவத்திற் கிடைத்தா ராக இப்பால்மண்
அளந்த விடையான் வந்துவளை பகரும் வண்ண மறைகிற்பாம்.

(இ - ள்) (அம்மாதர்கள்) வளர்ந்து பேதைப் பருவமாறி அல்குல் புடை பரவ, காஞ்சியென்னும் ஆபரணமணிந்த இடையானது தளர்ந்தொசிய, முகங் கொண்டு மேலெழுந் தண்ணுந்து தோன்றிய முலைகள் பருத்தோங்கும் மங்கைப் பருவத்திலே ஓர, இப்பால் பூலோகத்தையளந்த இடபவூர்தியையுடைய சோம சுந்தரக் கடவுள் (மானுடத் திருவுருவங்கொண்டு) வந்து வளையல் விற்ற வகை யைச் சொல்லுவோம்.

(வி - மீ) "அல்குற் புடையகன்று * * * முலை கிளர்ந்து செல்லும் பரு வம்" என்ற குறிகள் மங்கைப் பருவத்திற் குரியன. (கஅ)

கங்கை கரந்து மணிகண்டங் கரந்து தூதற்கண் கரந்தொருபால்
மங்கை வடிவுங் கரந்துழையு மழுவுங் கரந்து மழவிடையூர்
அங்க ணழகர் வளைவணிக ராகி யேன மளந்தறியாச்
செங்க மலச்சே வடியிரண்டுந் திரைநீர் ஞால மகள்சூட.

(இ - ள்) கங்கையையும், நீலக்கண்டத்தையும், நெற்றிக் கண்ணையும், வாம பாகத்திலுள்ள உமாதேவி திருவுருவையும், மானையும் மழுப்படையையும் மறைத்து, இளமை தங்கிய இடப வாகனத்தை ஏறி நடத்தும் சோமசுந்தரக் கடவுள் வளையல் விற்கும் வணிகராகி, (திருமாலாகிய) வராகம் (நிலவுலகங் கீண்டு சென்று) அளந்தறியாத செந்தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிக ளிரண்டையும், கடலே யாடையாக அணிந்த பூமிதேவி சூடும்பொருட்டு. (கக)

இதுமுத லிரண்டு பாடல்கள் குளகம்.

பண்டு முனிவர் பன்னியர்பாற் கவர்ந்த வளையே பட்டுவடங், கொண்டு தொடுத்து மீண்டவர்க்கே யிடுவே மெனுமுட் கோளினர் போற், றொண்டர் தொடுத்த வைவண்ணத் துணர்த்தார் போலத் தோள்சுமந்து, மண்டு வளையை விலைபகர்ந்து வணிக மறுகில் வரு கின்றார்.

(இ - ள்) முன்பு முனிபன்னியரிடத்திற் கொள்ளைகொண்ட் வளையலையே பட்டு வடத்திற் கோத்து, மீளவும் அவர்க்கே இடுவோமென்னும் உட்கருத்தினர் போல, அவரது அடியவர் சாத்திய பஞ்சவர்ணங்களையுடைய பூங்கொத்தா லமைந்த மாலைபோலத் திருத்தோளிற் சுமந்து, அடிக்காக நெருங்கிய வளையலை விலை கூறி வணிகர் வீதியில் வருவாராயினர். (உ0)

மன்னு மறையின் பொருளுரைத்த மணிவாய் திறந்து வளைகொண்மின்
என்னு மளவிற் பருவமுகி லிமிழின் னிசைகேட் டெழுமயில்போற்
றுன்னு மணிமே கலைமிழற்றத் தூய வணிகர் குலமகளிர்
மின்னு மணிமா ளிகைகின்றும் வீதி வாயிற் புறப்பட்டார்.

(இ - ள்) நிலைபெற்ற வேதப்பொருளை (கண்ணுவர் முதலிய முனிவர் கட்கு) உபதேசித்தருளிய அழகிய திருவாயைத் திறந்து, வளையல் வாங்குங்கள் என்று விற்கையிலே, (கார்ப்) பருவத்திலே சூல்கொண்ட மேகம் ஒலிக்கும் இனிய இசையைக் கேட்டு (ஆடச் சிறைவிரித்து) எழுகின்ற மயில்போல, செருங்கிய இரத்தினமிழைத்த மேகலாபரணமொலிக்கக் களங்கமில்லாத வணிகர் குலப்பெண்கள் பிரகாசிக்கின்ற இரத்தினமழுத்திய மாளிகையினின்றும் வீதியிற் புறப்பட்டார்கள். (உக)

வளைக ளிடுவா ரெனத்தங்கள் மணிமெல் லாந்தம் புடையொதுங்கத்
தளைக ளிடுதீங் குழலிசைபோற் சுரும்பு பாடக் கருங்குழல்மேல்
விளைக ளொழுக நடங்கிவரு மின்போ லடைந்து கண்டார்கள்.

(இ - ள்) வளையல்கள் தொடுப்பவர்போலத் தமது மனத்தையெல்லாம் தம்பாலொதுங்க விலங்கிடுவாராகிவருஞ் சோமசுந்தரக் கடவுளை, குவிந்த கொடிமை தங்கிய மூலைகளையுடைய வணிக மாதர்கள், தளைகள் பொருந்திய இனிய வேய்ங்குழலி னிசையைப்போல வண்டுகள் பாடவும், கரிய கூந்தலி னின்று சுரக்கும் அமுது சிந்தவும், (நிலவுலகின்மேல்) தவண்டுவரும் மின்னலைப்போலச் சென்று தரிசித்தார்கள். (உஉ)

கண்ட வடிவாற் றிளைப்பதற்குக் கழிபே ரன்பு காதல்வழிக்
கொண்டு செல்ல வொருசார்தங் குணனு நாண முதல்நான்கும்
மண்டி யொருசார் மறுதலைப்ப மனமுஞ் சுமன்று தடுமாற
அண்டர் பெருமான் விளையாடற் கமையச் சூழ்ந்தா ரமுதனையார்.

(இ - ள்) அவரைத் தரிசித்த திருவுருவத்தோடு கூடிக் கலப்பதற்கு எழுந்த பெரிய அன்பு (தமது மனதை) காமவழியிற்கொண்டு ஒருபுறஞ் செலுத்தவும், தமது குணமாகிய நாணமுதலிய நான்கும் நிலைகலங்கி ஒருபுறம் மூராணவும், மனமும் நிலைதிரிந்து தடுமாறவும், சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடல் செய்தற்கு, அமுதம்போன்ற வணிகருலப் பெண்கள் பொருந்த மொய்த்தார்கள். (உக)

வேறு

இரங்குமே கலைசிலம் பன்றி யேனைய
விரும்பிய குழைதொடி மின்செய் கண்டிகை
மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனில்
அருங்கிய முலையினர்க் கழகுண் டாகுமோ.

(இ - ள்) சத்திக்கும் மேகலாபரணமுஞ் சிலம்புமல்லாது, விரும்பப்பட்ட மற்றைய குண்டலமும் சூடகமும் பிரகாசிக்குங் கண்டிகையுமாகியவற்றை

இடை முறியச் சுமக்தாலும், கோங்கரும்புபோன்ற குசங்களையுடைய பெண்களுக்கு வளையல் கைகளுக்கு இல்லையாயின் அழகுண்டாகுமோ? (உண்டாகாது).

(வி - ம்) இச்செய்யுளால் வளையே மாதர்கட்கு மங்கலஞ் செய்வதென்று ராயிற்று. (உசு)

செல்வநல் வணிகிரெஞ் செங்கைக் கேற்பன
நல்வளை தெரிந்திடு மென்று நாய்கர்முன்
வல்வள ரிளமுலை மகளிர் மின்னுமிழ்
கல்வளர் கடகமென் காந்தள் நீட்டினர்.

(இ - ள்) செல்வத்தையுடைய நல்ல வணிகரே! எமது கைகட்குத் தகுந்தனவாகிய வளையல்களுள் நல்ல வளையல்களைத் தெரிந்து (எடுத்துத்) தொடுமென்று, வணிக வேடங்கொண்ட சோமசுந்தரக் கடவுள்முன், சூதாடு கருவி போல வளர்ந்த முற்றுத தனங்களையுடைய பெண்கள் ஒளிவீசும் நவமணிகளிழைத்த கீடகம்பூண்ட தமது மெல்லிய காந்தள் (மலர்போன்ற கைகளை) நீட்டினர்கள். (உடு)

பண்டருங் கிளவியங் கயற்கட் பாவைகைத்
தண்டளிர் பற்றிய தடக்கை மாதர்கைம்
முண்டகம் பற்றியே மூகிழ்த்துப் பல்வரி
வண்டுக ளேற்றுவார் மைய லேற்றுவார்.

(இ - ள்) இசைபோலும் மொழியையுடைய அங்கயற்கண்ணம்மையார் திருக்கரமாகிய தட்பமமைந்த தளிரைத் தொட்ட தெடிய திருக்கரத்தால், வணிக மாதர்கள் கைத்தாமரை மலரைப் பிடித்து (முன்னர்) கொரித்து, பல வரிகளையுடைய வளையல்களைச் செறிப்பவர்போலக் காமமயக்க மிகச்செய்வாராயினர். (உசு)

புங்கவ னிடுவளை புடைத்து மீளவந்
தெங்களுக் கிடவிலை யிடுதி ராலெனக்
கொங்கவிழ் பைங்குழ லெருத்தங் கோட்டினின்
றங்கர நீட்டுவா ராசை நீட்டுவார்.

(இ - ள்) வணிகேசர் தொடுத்த வளையல்களை கொறுக்கித் திரும்ப வந்து, எங்களுக்குத் தொடுக்கவில்லை தொடுமென்று, மகாத்தம் பாத்த பழைய கூந்தல் சரிந்த பிடரை வளைத்து நின்று, தமது அழகிய கரங்களை நீட்டுவார்போலத் தமது ஆசையை நீட்டுவாராயினர்.

(வி - ம்) அம்மாதர்கள் பரிசவின்பங்கருதி முன் தொடுத்ததை உடைத்து மீண்டும் வந்தார்கள் என்க. (உஎ)

எமக்கிடு மெமக்கிடு மெனப்பின் பற்றியே
அமைத்தடக் தோளினு ரனங்கன் பூங்கணை
தமைத்துளை படுத்தவோர் சார்பி லாமையாற்
கமைப்புறு நாண்முதற் காப்பு நீங்கினர்.

(இ - ள்) மூங்கில்போன்ற பருத்த தோளையுடைய வணிகருலப் பெண்கள் எமக்குத் தொடும் எமக்குத் தொடுமென்று பின்தொடர்ந்து, மன்மதனது மலர்ப்பாணம் தம்மைத் தாக்க, (அதனை நீக்க) ஒரு பற்றுக்கோடில்லாமல், தமக்குச் சார்பாயுள்ள நாணமுதலிய காவலினின்றும் நீங்கினார்கள். (உஅ)

முன்னிடு வளையெலாங் கழல முன்புசூழ்ந்
தின்னவை பெரியவே றிடுமென் றிட்டபின்
அன்னவு மணையவே யாக மீளவந்
தின்னமுஞ் சிறியவா விடுமென் றேந்துவார்.

(இ - ள்) (அம்மாதர்கள்) தமக்கு முன்னே தொடுத்த வளைகளெல்லாஞ் சோர, முன்பு சென்று சூழ்ந்து, இவை பெரியன (ஆதலின் கழன்றன) வேறு வளையல் (கைக்கேற்பத்) தொடும் என்று, தொடுத்தபின்பு அவையும் அவ்வாறே யாக, மீளவும் வந்து இவற்றினுஞ் சிறியனவாகத் தொடுமென்று (கையை) ஏந்துவார்கள். (உக)

பின்னிடு வளைகளுஞ் சரியப் பேதுறு
முன்னெதிர் குறுகிநீர் செறித்த மொய்வளை
தன்னொடு கலைகளுஞ் சரிவ தேயென
மின்னென நடங்கினர் வேல்கெ டுங்கணார்.

(இ - ள்) பிறகு இட்ட வளைகளுஞ் சரிய மயங்கி, தம்முன்னே வந்து, நீர் தொடுத்த நெருங்கிய வளையலோடு மேகலைகளுஞ் சரிவதேயென்று, வேற் படைபோலும் கெடிய கண்களையுடைய வணிகருலப் பெண்கள் மின்னல் போலத் (தமதாடல்) ஆவண்டார்கள். (ஙo)

இவ்வளை போல்வளை யாமுன் கண்டிலம்
மெய்வளை வணிகரில் வரிய வெள்வளை
எவ்வயி னுள்ளவின் றினிய வாகியெம்
மெய்வளர் பொடிப்பெழ வீக்கஞ் செய்தவே.

(இ - ள்) உடல் கூனிய வணிகரே! இவ்வருமையாகிய வெள்ளிய வளையல் கள் எவ்விடத்துள்ளன ? இன்று (எமது) மனத்திற்கினியனவாய் எம்முடம்பில் மயிர்க் கூச்செறியக் காமப்பெருக்குச் செய்தன. (ஆதலின்) இவ்வளைபோன்ற வளையல யாம் முன் (ஒருபோதும்) பார்த்திலோம். (ஙக)

நாளையும் வளையிட நண்ணு மிங்கென்பார்
கோள்வளை விலையிது கொண்டு போமென்பார்
வாள்விழி யீர்பிணை வாங்கிக் கோடுமென்
றாளரி யேறனை ராடிப் போயினார்.

(இ - ள்) நாளைக்கும் வளையலிட இங்கே வாருமென்பார்கள். நாங்கள் கொண்ட வளையலுக்கு விலை இது ; கொண்டு போமென்பார்கள். ஆண் தன் மையையுடைய சிங்கவேறு போன்ற வணிகேசர் வாள்போலும் விழியையுடை

யீர்! நாளை வாங்கிக் கொள்ளுதுமென்று திருவிளையாடல் செய்து சென்றருளினர். (கூஉ)

போயின வணிகர்தம் புடையின் மின்னென
பாயின மகளிரும் பலருங் காணமூன்
மேயின விண்ணிழி விமானத் துள்ளொளி
ஆயின திருவுரு வாகித் தோன்றினர்.

(இ - ள்) (அவ்வாறு) சென்ற வணிகவேடப் பெருமானும், தம் பக்கலில் மின்னல்போலப் பாவிய பெண்களும் பிறரும் பார்த்து அதிசயிக்க, தாம் முன்பு எழுந்தருளிய விண்ணிழி விமானத்தில் ஒளிமயமாகிய திருவுருவமாகித் தோன்றியருளினர். (கூக)

வேறு

மட்ட லம்பு கோதை யார்முன் வளைப கர்ந்த வணிகர்தாம்
பட்டி சைந்த அல்குல் நங்கை பாக ராகு மெனவியக்
துட்ட தும்பு முவகை வெள்ள மூற்றெ ழுந்த குமிழிபோற்
கட்ட தும்பு புனலி லாழ்ந்து களிய டைந்த நகரெலாம்.

(இ - ள்) தேன் சொரியும் மாலைசூடிய மாதர்கள்முன் வளையல் விற்ற வணிகேசர், செம்பட்டமைந்த அல்குலையுடைய உமாதேவியாரை வாமபாகத்திலுடைய சோமசுந்தரக் கடவுளாமென்று அதிசயித்து, மனதிற்றதும்பிய ஆனந்தவெள்ளத்தில் பொருந்தி யெழுந்த குமிழியைப் போல, மதுராபுரியிலுள்ளோர் யாவரும் கண்களிற்றதும்பிய ஆனந்தநீர்ப் பெருக்கிலமிழ்ந்து களிப்படைந்தார்கள்.

(வி - ம்) நகர் என்றதற் கேற்பக் களியடைந்த என்றார். நகர் - இடவாகுபெயர். (கூச)

உருவி லாளி யுடல்பொ டித்த வொருவர் கூட லிருவரான்
மருவி லார்தி ருக்கை தொட்டு வளைசெ றித்த நீர்மையாற்
கருவின் மாத ராகி நாய்கர் கன்னி மார்கள் மின்னுவேற்
பொருவில் காளை யெனவ ரம்பில் புதல்வ ரைப்ப யந்தனர்.

(இ - ள்) மதனனது தேகத்தைப் பொடிபடுத்திய ஒப்பற்றவரும் (பிரமவிஷ்ணுக்களாகிய) இருவரால் தேடியறிதற்கரிய மதுரைப்பதியிலுள்ளவரும் மகிய சோமசுந்தரக் கடவுள் தமது திருக்கரதலத்தாற் பரிசித்து வளையலிட்டதன்மையால், வணிகக் கன்னியர்கள் கருப்பம் வாய்ந்த மாதர்களாய்ப் பிரகாசிக்கின்ற வேற்படை தாங்கிய முருகவேள்போல அளவில்லாத அழகு பொருந்திய புதல்வர்களைப் பெற்றார்கள். (கூடு)

பிறந்த மைந்த ளவி றந்த பெருமை கொண்ட பெருமிதஞ்
சிறந்த வீர மாற்ற லேற்ற திறல்பு னைந்து வைகினர்
மறந்த தும்பு வேல்கெ டுங்கண் வணிக மாதர் சிறிதுநாள்
துறந்த ரன்ற னருள டைந்து துணைய டிக்கண் வைகினர்.

(இ - ள்) (அவ்வாறு) பிறந்த புத்திரர்கள் எல்லையில்லாத பெருமை மிக்க பெருமிதத்தையும், சிறந்த ஆண்மையையும், வன்மையையும், தக்க வெற்றியையும் வாய்ந்து வாழ்ந்தார்கள். கொலைத்தொழில் பொருந்திய வேல்போன்ற நெடிய கண்களையுடைய வணிக மங்கையர் சிறிது காள் கழித்து, சிவபெருமானது திருவருளைப் பெற்று, அவரது உபய பாதங்களின் நீழலிற் கலந்து வாழ்ந்தார்கள். (கூசு).

ஆ திருவிருத்தம் - கஎடுக

மூப்பத்துமூன்றுவது

அஷ்டமாசித்தி யுபதேசித்த படலம்

கொத்தி லங்கு கொன்றை வேய்ந்த கூட லாதி மாடகீள்
பத்தி யம்பொன் மறுக ணிந்து வளைய கர்ந்த பரிசுமுன்
வைத்தி யம்பி ஞமி யக்க மாதர் வேண்ட அட்டமா
சித்தி தந்த திறமி னித்தெ ரிந்த வாறு செப்புவாம்.

(இ - ள்) கொத்தாக விளங்குங் கொன்றை மலையணிந்த மதுரைப்பதியிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள், ஒங்கிய மாடபத்திகளையுடைய அவ்வழகிய (மதுரை) வீதியிற் சென்று வளையல் விற்ற திருவிளையாடலை முன்னெடுத்துக் கூறினேம். யக்ஷஸ்திரீகள் குறையிரக்க அஷ்டமாசித்தி யருளிய திருவிளையாடலை இனி (யாம்) தெரிந்தவளவிற் கூறுவாம்.

(வி - ம்) அம்பொன் மறுகு - செல்வமலிந்த திருவீதி. (க)

மின்ன லங்கல் வாகை வேல்வி ழுப்பெ ருங்கு லத்தினிற்
றென்ன வன்ற ஞணை நேமி திசையெ லாமு ருட்டுநாள்
முன்னை வைக ஓழி தோறு மோங்கு மொய்வ ரைக்கணே
மன்னு தண்ப ராரை யால நிழன்ம ருங்கு மறைமுதல்.

(இ - ள்) வெற்றிமாலை சூடிய மின்னல்போன்ற வேலேத் தாங்கிய மேன்மை மிக்க பாண்டியர் குலத்தவித்த குலபூஷண பாண்டியன் தன் ஆணை சக்கரத்தைத் திசைகளிலெல்லாஞ் செலுத்துங் காலத்தில், கழிந்தபொழுதாகிய ஊழிக்காலம்தோறும் (சிறிது) உயர்கின்ற கைலாயகிரியில் நிலைபெற்ற பருத்த தூரையுடைய தனது கல்லாலமர நீழலிலே வேத முதல்வராகிய சிவ பெருமான்.

(வி - ம்) "ஊழிதோறு மோங்கு மொய்வரை" என்றதனை, "ஊழிதோ றூழிமுற்று முயர்பொன் னெடித்தான்மலே" என கம்பியாரூரரும், "ஊழிதோ றோங்கு மவ்வோங்கல்" என இந்நூலாரும் கூறியவாற்று னுணர்க. (உ)

அடுப்ப மாகில் வெள்ளி வெற்பி னருகி ருக்கு மரகதங்
கடுப்ப வாம மிசையி ருந்து கனக வெற்பன் மகளெனும்
வடுப்ப டாத கற்பி னுண்ம டித்து வெள்ளி லீச்சுருள்
கொடுப்ப நேச மூறு போக குரவ னுகி வைக்கினன்.

(இ - ள்) களங்கமில்லாத வெள்ளிமலையினருகே பொருந்த விருக்கும் மரகதத் தூரட்சிபோல, இடப்பாகத்திலிருந்து மலையரசன் புத்திரியாகிய மறுவில்லாத கற்பினையுடைய உமாதேவியார் வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுக்க, அன்பு மிக்க போக குருமூர்த்தியாகி எழுந்தருளி யிருந்தனர். (கூ)

பிருங்கி நந்தி யேமு தற்பெ ருந்த கைக்க ணத்தரும்
மருங்கி ருந்த சனக ஞதி மாதவத்தர் நால்வரும்
ஒருங்கி றைஞ்சி யுண்ண வுண்ணை வமுத மூறு சிவகதைக்
கரும்ப ருந்த வாய்ம லர்ந்து கருணை செய்யு மெல்லைவாய்.

(இ - ள்) பிருங்கி முனிவர் நந்தி நாயனார் முதலிய பெருந்தகைமையுடைய சிவகணத் தலைவரும், அருகிலிருந்த சனகர் முதலிய பெரிய தபோதனர்கள் நால்வரும் ஒரு சேரப் பணிந்து, (செவி வாயால்) உண்ணுந்தோறும் அமுத மூற்றெடுக்குஞ் சிவ கதையாகிய கரும்பினை யருந்த, தமது திருவாய் மலர்ந்து திருவருள் புரியுஞ் சமயத்தில். (எ)

பௌவ மூழ்கு சூர்த டிந்த பால னுக்கு முலைகொடுத்
தெவ்வ மாய வினைகள் தீரி யக்க மாத ரறுவருந்
தெய்வ நீறு முழுத ணிந்து செய்ய வேணி கண்டிகைச்
சைவ வேட மாதவந் தரித்து வந்து தோன்றினர்.

(இ - ள்) சமுத்திரத்தில் (மாமரவடிவாகி) மறைந்த சூரபன்மனுடைய உயிரை வாங்கிய குமாரக் கடவுளுக்கு முலையூட்டித் தன்பமாகிய வினைச்சம் பந்தங்கள் நீங்கிய யக்ஞஸ்திரீகள் ஆறுபேரும், தெய்வீகமமைந்த திருநீற்றைத் தேகமுழுவதும் பூசி, சிவந்த சடையும் உருத்திராக்க கண்டிகையுமாகிய சைவ வேடத்தை யுடைய பெருந்தவ மேற்கொண்டு தோன்றினர்கள். (ஙி)

மந்தி ரச்சி லம்ப லம்பு மலர டிக்கண் வந்திசெய்
தெந்தை யட்ட சித்தி வேண்டு மெங்க ளுக்கெ னத்தொழா
அந்த ரிர்க்கை யவரி ரப்ப அண்ணல் தன்ம டித்தலந்
தந்தி ருக்கு மாதை யங்கை சுட்டியீது சாற்றுமால்.

(இ - ள்) வேதமாகிய சிலம்பொலிக்கும் மலர்போன்ற திருவடியைப் பணிந்து, எமது தந்தையே! எங்கட்கு அஷ்டமாசித்தி வேண்டுமென்று பணிந்து, அழகிய தளிர்போன்ற கையையுடைய அம்மாதர்கள் யாசிக்க, சிவபெருமானார் தமது மடித்தலத்தி லெழுந்தருளிய உமாதேவியாரை அழகிய திருக்கரத்தாற் சுட்டி, (அம்மாதர்களை நோக்கி) இவ்வாறு கூறுகின்றார்: (சு)

வேறு

அலர்பசும் பொலங்கொம் பன்ன அணங்கிவள் நிறைவா லெங்கு
மலர்பரா சத்தி யாகி மகேசையா யணிமா வாதிப்
பலர்புகழ் சித்தி யெட்டும் பணிந்துகுற் றேவல் செய்யுஞ்
சிலதிய ராகிச் சூழ்ந்து சேவகஞ் செய்ய வைகும்.

(இ - ள்) மலர்ந்த பசிய பொற்கொம்பு போன்ற இவ்வுமாதேவி எமது நிறைவால் எங்கும் வியாபித்த பராசத்தியாகியும், மகேசையாகியும், பலரும் புகழும் அணிமா முதலிய அஷ்டமாசித்திகளுந் (தன்னைப்) பணிந்து குற்றேவல் புரியுந் தாதியராகிச் சூழ்ந்து பணிகளைச் செய்யாநிற்க இருக்கின்றனள். (எ)

இவளீநீர் சிந்தித் தான்முன் னீட்டிய வினையை நீக்கித்
தவலருஞ் சித்தி யெட்டுந் தருமெனக் கருணை பூத்துச்
சிவபரஞ் சோதி யெட்டுச் சித்தியுந் தெளிதல் செய்தான்
அவசது மறந்தா ரும்மை யாள்வினை வலத்தான் மன்னோ.

(இ - ள்) (ஆதலில்) நீர் இவ்வுமாதேவியைச் சிந்தித்தால், முன் நீங்கள் சம்பாதித்த வினைச்சம்பந்த மொழித்து, அழிவில்லாத அஷ்டமாசித்திகளையுந் தருவானென்று திருவருள் புரிந்து, சிவபெருமானர் அஷ்டமாசித்திகளையும் உபதேசித்தருளினர். அப்பெண்கள் முற்பிறப்பிற் செய்த போகூழ்வலியால், அச்சித்திகளை மறந்தார்கள். (அ)

சேழுமதிப் பிளவு வேய்ந்த தேவுமக் குற்ற நோக்கி
மூழுமதி முகத்தி ஞரை மூனிக்துநீர் பட்ட மங்கைப்
பழுமர முதலஞ் ஞானப் பாறையாய்க் கிடமி னென்னக்
கழுமலுற் றவர்தாழ்ந் தென்று கழிவதிச் சாப மென்றூர்.

(இ - ள்) ஒளி வீசும் பிறைச்சந்திரனை யணிந்த சிவபெருமானும் அக்குற்றத்தைப் பார்த்து, பூரண சந்திரன் போன்ற முகத்தையுடைய மாதர்களைச் சினந்து, நீங்கள் பட்டமங்கை யென்னுந் தலத்திலுள்ள ஆலமரத்தடியில் கருங்கற்பாறையாய்க் கிடங்கள் என்று சபிக்க, துன்பமுற்ற அப்பெண்கள் வணங்கி, இச்சாபம் எப்பொழுது கழிவது என்று வினவினர்கள். (கூ)

இப்படிக் கருங்க லாகிக் கிடத்திரா யிரம்யாண் டெல்லைக்
கப்புற மதுரை நின்று மடுத்துமைத் தொடுத்த சாபத்
துப்பற நோக்கி நுங்கள் தொல்லுரு நல்கிச் சித்தி
கைப்படு கனிபோற் காணக் காட்டுதும் போதி சென்றூன்.

(இ - ள்) இவ்விதமாகக் கருங்கற்பாறையாகக் கிடமின்கள். ஆயிரந் தேவ வருஷத்திற்குப்பின் (நாம்) மதுரையிலிருந்து வந்து, உம்மையடுத்த சாபத்தின் வன்மைகெடக் கடைக்கணித்து, உங்கள் பழைய வடிவைத் தந்து, அஷ்டமாசித்திகளை அங்கையிற் நெல்லிக் கனிபோலக் காட்டுவோம்; போங்கள் என்று அருளிச் செய்தனர். (கo)

வேறு

கொடிய னூக்க ளறுவரும், நெடிய வானி மிர்ந்துகார்,
படியும் பட்ட மங்கையால், அடியிற் பாறை யாயினர்.

(இ - ள்) பூங்கொடி போன்ற அந்த ஆறு மாதர்களும், விண்ணுலகவரையி லுயர்ந்தோங்கி (இருத்தலால்) மேகந்தவழும் பட்டமங்கையிலுள்ள ஆலமரத் தடியில், கருங்கற்பாறையா யிருந்தார்கள். (கக)

கதிர்க லம்பெய் காட்சிபோல், உதிர்ப முத்தி னுடலெலாம்,
புதைப டக்கி டந்தனர், மதர ரித்த டங்கணூர்.

(இ - ள்) மதர்த்த செவ்வரிபரந்த விசாலமான விழிகளையுடைய அம் மாதர்களறுவரும், பிரகாசிக்கின்ற ஆபரணத்தையணிந்த காட்சிபோல் (ஆல மரத்திலிருந்து) உதிர்ந்த பழங்களால் தேகமுழுவதும் புதைபடக் (கருங்கற் பாறையாய்க்) கிடந்தார்கள். (கஉ)

பருவ மாயி ரங்கழிந், தொருவ மாட மதுரையெங்,
குரவ னெண்கு ணத்தினன், றிருவு ளத்தி ரும்பினன்.

(இ - ள்) ஆயிரம் வருடங்கள் சென்றழிய, மாடங்கள் நெருங்கிய மது ரையி லெழுந்தருளிய எமது ஆசிரியரும், எண்குணங்களை யுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள் தமது திருவுளந் திரும்பியருளினர்,

(வி - ம்) எண்குணங்கள்—தன்வயம் - தூயவுடம்பு - இயற்கையுணர்வு - முற்றுணர்வு - இயல்பாகவே பாசங்களினீங்குதல் - பேரருளுடைமை - முடிவி லாற்றலுடைமை - வரம்பிலின்பமுடைமை எனப்படும். (கஊ)

தன்ன திச்சை கொண்டதோர், இன்ன ருட்கு ரவனுய்,
அந்நெ டுங்க லாயினர், முன்னர் வந்து தோன்றினன்.

(இ - ள்) தமதிச்சையாற் கொண்டருளிய ஒப்பில்லாத இனிய ஞானசிரிய ராகி, அந்த நெடிய கருங்கற்பாறையாயுள்ள பெண்கள் முன் வந்து திருவுருக் கொண்டு தோன்றியருளினர். (கச)

இருட்ட தும்பு கோதையார், மருட்ட தும்பு வினைகெட
அருட்ட தும்பு கண்ணினுற், றெருட்ட தும்ப கோக்கினன்.

(இ - ள்) இருண்மயம் போன்ற அளகபாரத்தையுடைய மாதர்களது அவிச்சை நிறைந்த (கன்ம) மலங்கெட, திருவருள் நிறைந்த திருவிழியால், அருண்ஞான மீக்கூரப் பார்த்தருளினர். (கடு)

அடிகள் நோக்க அம்புயங், கடிகொள் செய்தல் காந்தள்பைங்
கொடிகொள் முல்லை குமுதமேற், படியப் பூத்த பாறையே.

(இ - ள்) சிவபெருமான் பார்த்தருள, தாமரைப்பூவும், வாசமிக்க குவளைப் பூவும், காந்தட்பூவும், பசிய கொடியாகப் படர்ந்த முல்லையரும்பும், ஆம்பற்பூவும் தம்மேற் பொருந்த அக்கருங்கற் பாறைகள் பூத்தன.

(வி - ம்) அம்புயம் - முகம், கெய்தல் - கண், காந்தள் - கை, முல்லை - பல், குமுதம் - வாய். ஈண்டு உவமானச் சொற்கள் தம் உவமேயங்களைக் குறித்தன.
இச்செய்யுள் உருவக வயர்வுகவிற்சியணி. (கசு)

தாக்க வேத கத்திரும், பாக்க முற்ற பொன்னென,
நீக்க மற்ற இருள்மல, வீக்க மற்று விட்டதே.

(இ - ள்) இரும்பானது, தாக்கிய அவ்வேதகத்திரவல் ஆகிய பொன்னைப் போல, (கெல்லின் உமிபோல) நீங்குதலில்லாத ஆணவமல வீக்கம் குறைந்தது.

(வி - ம்) முன் செய்யுளிலுள்ள 'அடிகணேக்க' என்பதனை ஈண்டுக் கூட்டி, அருணேக்கம் வேதகமாகவும், இரும்பு மாசுநீங்கிப் பொன்னைதல்போல ஆணவ மாசு கழிந்து (ஆன்மா) திருவருள் வசமாயிற்று எனவுங் கொள்க. (கஎ)

நிறையு மன்பெ னுங்நதி, பெரிறையெ னுங்க ரைகடந்,
திறைவ னின்ன ருட்கடற், றுறையின் வாய்ம டுப்பவே.

(இ - ள்) நிறைந்த அன்பென்னும் நதி (பெருகி) பொறுமை யென்னுங் கரையைக் கடந்து, சிவபெருமானுடைய இனிய திருவருளென்னுங் கடலிற் கலந்து பாய. (கஅ)

எழுந்தி றைய டிக்கணே, அழுந்து நேச மொடுதவக்,
கொழுந்த னார்க ளறுவரும், விழுந்தி றைஞ்சி னரரோ.

(இ - ள்) தவக்கொழுந்துபோன்ற மாதர்கள் அறுவரும் எழுந்து சிவ பெருமானுடைய திருவடியிலே அழுந்திய அன்புடன் (சாஷ்டாங்கமாக) வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். (கக)

குமரற் கூட்டு மிளமுலை, உமையெப் பார்கள் சென்னிமேல்,
அமலச் சோதி யங்கையாங், கமலப் போது சூட்டினன்.

(இ - ள்) முருகக்கடவுளுக்கருத்திய இளமைதங்கிய தனத்தையுடைய உமாதேவியார்போன்ற பெண்களுடைய சிரசின்மேில், சிவபெருமானர் தமது திருக்கரமாகிய தாமரைமலரைச் சூட்டியருளினர்.
(வி - ம்) அமலச் சோதி - நின்மல தேஜோ வடிவர்.
சட்சுதீக்கையால் கன்மமலத்தினின்று நீக்கிப் பிரசாதத்வ வாதனை யொழித்தற் பொருட்டுப் பரிசதீக்கை செய்தருளினர் என்க. (உ0)

சித்தி யெட்டு மங்கலார், புத்தி யிற்கொ ளுந்தவே,
கைத்த லத்தில் வைத்ததோர், முத்தெ னத்தெ ருட்டுவான்.

(இ - ள்) அஷ்டமாசித்திகளையும், அப்பெண்களது அறிவிற்பொருந்த உள்ளங்கையிலேற்றிய ஒரு முத்துபோலத் தெரிவித்தருள்வார்.
சித்தியெட்டு - முன்பின்னுக நிலைமாறித் தொக்க பண்புத்தொகை. (உக)

வேறு

அணிமா மகிமா லகிமா வரிய கரிமா பிராத்திமலப்
பிணிமா சுடையோர்க் கடைவரிய பிராகா மியமீ சத்துவமெய்
துணிமா யோகர்க் கெளியவசித் துவமென் றெட்டா மிவையுளக்கண்
மணிமா சறுத்தோர் விளையாட்டின் வகையா மவற்றின் மரபுரைப்பாம்

(இ - ள்) (சித்திகள்) அணிமா - மகிமா - இலகிமா - பெறுதற்கரிய கரிமா - பிராத்தி - மலபந்தமாகிய களங்கத்தையுடையவர்க்கு அடைதற்கரிய பிராகாமியம் - ஈசத்துவம் - உண்மையைத் துணிந்த பெரிய யோகிகளுக்கு எளிய வசித்துவம் என எண்வகையாம். இவ்வெட்டும் மனத்தில் கரிய களங்கத்தையறுத்த பெரியோர் திருவிளையாடலின் வகையாம். அவற்றின் முறைகளைக் கூறுவாம். (உஉ)

அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான் பரம காட்டை யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை யணிமாவா முவரி ஞால முதன்மேலென்
றுறையுஞ் சிவாந்த மாருறு முள்ளும் புறனு மகலாதே
நிறையும் பெருமை தனையன்றே மகிமா வென்னு நிரம்பியநூல்.

(இ - ள்) மிகவுஞ் சிறிய பிராணிகள் தோறும், தான் மிகவும் நுண்ணிய அணுவளவாய்ச் சென்று இருக்கும் அதிநுண்மை அணிமா என்பதாம். (பொருள் நிரம்பிய நூல்கள்) கடல் சூழ்ந்த பிருதிவிதத்துவ முதல் அதன்மேலுள்ள தத்துவ மென்று கூறும் சிவதத்துவமீறுகிய மூப்பத்தாறு தத்துவங்களினும் அகத்தும் புறத்தும் கீங்காது வியாபித்திருக்கும் பெருமையை யல்லவோ மகிமாவென்று கூறும்.

பரம காட்டை - மிகச் சிறிது. (உங)

இலகு மேரு பாரம்போ லிருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு வான பரவணுப்போ லிருப்ப திலகி மாவாகும்
இலகு வான பரவணுப்போ லிருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு மேரு பாரமென விருப்ப தன்றே கரிமாவாம்.

(இ - ள்) விளங்கா நின்ற மகமேருவின் பாரம்போல விருக்குஞ் சிவயோகியை யெடுத்தால் இலகுவான பரமாணுவைப்போல (இலேசாக) விருப்பது இலகிமா வென்பதாம். இலகுவாயுள்ள பரமாணுவைப்போல இருக்குஞ் சிவயோகியை யெடுத்தால் விளங்காகின்ற மகமேருவின் பாரம்போலக் கனமாயிருத்தலல்லவா கரிமாவென்பதாம். (உச)

பிலத்தி லிருந்தோ னயனுலகிற் புகுதல் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தியதாம் பரகா யத்தி னண்ணுதல்வான்
புலத்தி னியங்க விச்சித்த போக மனைத்துந் தானிருக்குந்
தலத்தி னினைந்த படிவருதல் பிராகா மியமாந் தவக்கொடியீர்.

(இ - ள்) தவக்கொடி போலும் பெண்களே! பாதலத்திலிருந்தவன் பிரமலோகத்திற்குச் செல்லுதலும் பயன் மிகுந்த பிராப்தியாம். பரகாயத்திற் பிர

வேஷித்தலும், ஆகாயத்திற் சஞ்சரித்தலும், விரும்பிய போகமுற்றும் தான் இருக்குமிடத்தில் வருதலும் பிராகாமிய மென்பதாம். (உடு)

விண்ணி லிரவி தன்னுடம்பின் வெயிலா லணைத்தும் விளக்குதல்போல்
மண்ணி லுளவாம் பொருள்பலவுங் கால மூன்றும் வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன் காயத் தொளியா லிருந்தறிதல்
எண்ணி லிதுவு மறையொருசார் பிராகா மியமென் றியம்புமால்.

(இ - ள்) ஆகாயத்திலுள்ள சூரியன் தன் தேகத்திலுள்ள வீளக்கத்தால் எல்லாவற்றையும் (தெரிவித்தலே யன்றித் தன்னையும்) விளக்குதல்போல, நில வுலகிலுள்ள பொருள் முழுவதும், திரிகாலங்களும், விண்ணுலகிற் பொருந்திய பொருள்களுமாகிய இவற்றைத் தனது தேகத்தின் ஒளியால் (விளக்குதலின் றித் தானும் இருந்த விடத்தினின்று) அறிதலுமாகிய இத்தொழிலையும் ஆலோ சிக்குமிடத்தில் வேதங்கள் ஒரு பட்சம் பிராகாமிய மென்று கூறும். (உசு)

ஈச னெனமுத் தொழிலுந்தன் னிச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத் திகழ்வ தீசத் துவமாகும்
பூச லவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன் வசமாக் கொள்கை வசித்துவமாம்.

(இ - ள்) உருத்திர மூர்த்திபோல (சிருட்டியாதி) முத்தொழில்களையும் தன் விருப்பின்படியே நடத்தி, ஏழு குதிரை பூட்டிய சூரியன் முதலிய (நவக்) கிரகங்கள் தான் ஏவும் பணிகேட்க விளங்குதல் ஈசத்துவ மென்பதாம். போர் புரியும் அசுரரையும், பறவைகளையும், விலங்குகளையும், பூதங்களையும், மனிதர் முதலிய உலகினரையும், இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலகரையும் தன் வசமாகக் கொள்வது வசித்துவமாகும். (உள)

எம்மை யுணர்ந்த யோகியர்க ளிவற்றை விரும்பா ரெனினுமவர்
தம்மைநிழல்போ லடைந்துலகர்க் கணையார் பெருமை தனையுணர்த்துஞ்
செம்மை யுடைய விவையென்னச் சித்தி யெட்டுந் தெளிவெய்தக்
கொம்மைமுலையா ரமுவருக்குங் கொளுத்தி னெனண் குணச்செல்வன்.

(இ - ள்) எம்மை யறிந்த சிவயோகர்கள், இச்சித்திகளை விரும்பார் என்றா லும், அவரைத் தேடச் சாயல்போல் தொடர்ந்து உலகிலுள்ளவர்கட்கு அவர் கள் பெருமையை அறிவிக்கும் நியதியையுடையன இவைகளென்று, அஷ்ட சித்திகளையும் தெளிந்துணரும்படி எண்குணங்களையுடைய செல்வராகிய சிவ பெருமான் குவிவாகிய முலைகளையுடைய பெண்கள் அறுவர்க்கும் உபதேசித் தருளினர். (உஅ)

வேறு

தேவதே வுபதே சித்த சித்தியைச் சிலம்பன் செல்வி
பாவனை வலத்தால் நன்கு பயின்றுவான் வழிக்கொண் டேகிப்

பூவலர் கதுப்பி நல்லா றறுவரும் புரமூன் றட்ட
காவலன் விரும்பி வைகுங் கைலைமால் வரையிற் புக்கார்.

(இ - ள்) மலர்கள் விகசித்த கூந்தலையுடைய மங்கைய றறுவரும், மகாதேவன் உபதேசித்தருளிய அஷ்டமாசித்திகளை, உமாதேவியாரது தியான பலத்தால் மிகவும் பழகி, விண்ணின் வழிக்கொண்டு சென்று, திரிபுராங்களை நகைத்தெரித்தருளிய சிவபெருமான் விருப்பங்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெரிய கைலாயகிரியிற் சேர்ந்தார்கள். (உக)

ஆ திருவிருத்தம் - கஅஅ.

மூப்பத்து நான்காவது

விடையிலச்சினையிட்ட படலம்

சந்து சூழ்மல யச்சி லம்பர்த வம்பு ரிந்தவி யக்கிமார்க்
கந்த காலிரு சித்தி தந்தத றைந்த னந்தன தடிதொழா
வந்து மீள்வள வன்பொ ருட்டுவ டாது வாயிறி றந்தழைத்
திந்து சேகரன் விடையி லச்சினை யிட்ட வாறுவி ளம்புவாம்.

(இ - ள்) சந்தன மரஞ் சூழ்ந்த பொதியமலையையுடைய சோமசுந்தர பாண்டியர், தவஞ்செய்த யக்ஷஸ்திரீகளாகிய அறுவர்க்கு அந்த அஷ்டமாசித்திகளையு மருளிய திருவிளையாடலைக் கூறினேம். தமது திருவடியைப் பணிந்து தன் நாட்டிற்குச் செல்லுஞ் சோழன் பொருட்டு வடக்கு வாசலைத் திறந்தழைத்துச் சந்திரசேகராகிய அப்பெருமான் விடையிலச்சினை யிட்டருளிய திருவிளையாடலை (யாம் இனி)க் கூறுவாம்.

(வி - ம்) வடாது - வடக்குள்ளது. (க)

தோடு வெட்டிம லைத்து வாள்விதிர் துணைவி ழிக்குயி லிளமுலைக்
கோடு வெட்டிய குறிகொண் மேனியர் குடிகொண் மாநகர் கடிகொள்
காடு வெட்டிய காரணக்குறி காடு வெட்டிய சோழனென் [பைங்
றேடு வெட்டிய வண்டு சூழ்பொழி லெயில்கொள் கச்சியு ளானவன்.

(இ - ள்) (காதிலணிந்த) தோட்டினை வெட்டிப் போர்புரிந்த வாள் அசைத்தாற் போன்ற கண்களையுடைய குயிலிசை போன்ற சொல்லையுடைய உமாபிராட்டியாரது இளமை தங்கிய தனங்களாகிய கொம்பு ஒழுதகுறி பூண்டருளிய திருமேனியையுடைய பெருமானர் எழுந்தருளிய பெரிய காஞ்சியில், (காண்டற்கு) அச்சஞ் செய்யும் பசிய காடு வெட்டித் திருத்திய காரணத்தினால் காடுவெட்டிய சோழனென்று, மலரிதழ் பொருந்திய நெருங்கிச் சூழ்ந்த சோலையையுடைய மதில்சூழ்ந்த கச்சிநகரிலுள்ளவன் அவன்.

(வி - ம்) சிவபெருமானது திருவிழிகளே உமாதேவியார் திருக்கைலாய கிரியில் ஒரு வீளையாடலாற் புதைத்தருள, திரிலோகங்களும் இருண்மயமாகி எவ்வுயிருந் துன்பத்தி லழுந்தின. இப்பாவந் தீரக் காஞ்சி நகரமடைந்து விதிப்படி சிவார்ச்சனை செய்கையில், சிவாக்கினையால் சர்வ தீர்த்தங்களும் ஒன்று சேர்ந்து கம்பையாற்றோடு கலந்து பெருக்கெடுத்துவர, அவ் வுமாதேவியார் எமது கணவர்மேலும் செல்லுமே யென்றஞ்சி வலக்காலூன்றித் தழுவிக் கொள்ள, அப்பெருமானர் மூலச்சுவட்டினையும் வளைகுறியையும் பூண்டருளினர் என்பது காஞ்சிப் புராண வரலாறு. (உ)

உத்த மச்சிவ பத்த ரிற்பெரி துத்த மன்புது விரைகலன்
மித்தை யென்றுவெ ணீறு கண்டிகை யார மென்றணி மெய்யினன்
நித்த வேதபு ராண மாதிநி கழ்த்தி டும்பொருள் கண்ணுதல்
அத்த னேபர தத்து வப்பொரு ளென்ற ளந்தறி கேள்வியான்.

(இ - ள்) உத்தமராகிய சிவபக்தரில் மிகவும் உத்தமமானவன். வாசமிக்க சந்தனக் குழம்பும் ஆபரணமும் அணித்தியப் பொருளென்று கருதி, திருவெண்ணீற்றையும் கண்டிகையையும், நித்தியமாகிய சந்தனக் குழம்பென்றும் முத்தாரமென்றும் பூண்ட மேனியை யுடையவன். அழியாத வேதபுராணாதி நூல்கள் கூறும் பொருள் தெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானே (ஆதலின் அவ்விறைவனே) பரதத்துவப் பொருள் என்று அளந்தறிந்த நூற்கேள்வியையுடையவன். (ஊ)

அங்க மாறொடு வேத நான்கும மிர்ந்து மெய்ப்பொரு ளாய்ந்துளஞ்
சங்கை கொண்டனு தினம ன்புகழ் சாற்று சைவபு ராணநூல்
பொங்கு மின்சுவை யமுது தன்செவி வாய்தி றந்துபு கட்டியுண்
டெங்க ணுயக னடியி ணைக்கணி ருத்து மன்புக ருத்துளான்.

(இ - ஸ்) அங்கங்கள் ஆறும் வேதங்கள் நான்கும் கற்று, உண்மைப பொருளே யாராய்ந்து தனது மனஞ் செல்லுதலால், எக்காளும் சிவபெருமானது கீர்த்தியைக் கூறும் சிவபுராண நூல்களில் விளங்கும் இன்சுவை பொருந்திய அமுதை (பெரியோர்) ஊட்ட, தனது செவியாகிய வாய்திறந்துண்டு, எமது நாயகனுகிய அப்பெருமானது இரு பாதங்களினிடத்தும் இருக்கச்செய்யும் அன்பு பொருந்திய மனதை யுடையவன். (எ)

முக்க ணுயகன் முப்பு ரத்தைமு னிந்த நாயகன் மங்கையோர்
பக்க முயகன் மிக்க வானவர் பரவு நாயக னரவணிச்
சொக்க நாயக னுட லுஞ்செவி யான்மு கந்துசு வைதருந்
தக்க பாலொடு தேனங்க லந்துத ருக்கி யுண்பவ ஞபிஞன்.

(இ - ள்) மூன்று விழிகளையுடைய இறைவனும், திரிபுரங்களைக் கோபத தெரித்த இறைவனும், உமாபிராட்டியாரை வாமபாகத்திலுடைய இறைவனும், மேம்பட்ட பிரமன் (முதலிய) தேவர்கள் அதிசெய்ப்பு மிறைவனுமாகிய, சர்ப்பாபரணந் தரித்த சொக்கநாயகருடைய திருவிளையாடல் ஆகிய அமுதையும் தனது செவியால் முகந்து, சுவைதரும் தகுதியாகிய தேன் பாலோடு கலந்து உண்டு களிப்பாளுயினன். (ஙு)

அங்க யற்கண்ம டந்தை பாகன டித்த லந்தொழு மாசைமேற்
பொங்கி மிக்கெழு மன்ப ஞய்மது ரேசன் மின்னுபோ லங்கழற்
பங்க யப்பத மென்று நான்பணி வேனெ னப்பரி வெய்தியே
கங்கு லிற்றுயில் வான்க யற்புரை கண்ணி பங்கனை யுன்னியே.

(இ - ள்) அங்கயற்கண்ணம்மையாரை வாமபாகத்திலுடைய சோமசுந்தரப்பெருமானது திருவடியைப் பணியும் ஆசை மேலெழுந்து, அதிகரித்தெழும் அன்பினால், அம்மதுராபுரீசனுடைய பிரகாசிக்கின்ற அழகிய வீரக் கழலணிந்த தாமரை மலர்போன்ற திருவடியை எப்பொழுது நான் வணங்குவேன் என்னும் வருத்தமடைந்த அங்கயற்கண்ணியாரை இடப்பாகத்திலுடைய அக்கடவுளைக் கருதி, இரவில் துயிலுறிவானுயினன். (சு)

அன்று செம்பியர் கோம கன்கன வின்க ணேயருள் வெள்ளிமா
மன்று ணின்றவர் சித்த ராயெதிர் வந்து மன்னவ நின்னுளத்
தொன்று மஞ்சலொ ருத்த ஞகியு ருத்திரிந்துத னித்துவந்
தின்று வந்தனை செய்து போதிய னப்பு கன்றன சேகிஞர்.

(இ - ள்) அப்பொழுது, சோழர்களுட் சிறந்த காடுவெட்டிய சோழனுடைய சொப்பனத்திலே, அருள்மூர்த்தமாய்ப் பெரிய வெள்ளியம்பலத்திலே நின்றருளிய பெருமான் சித்தமூர்த்தியா யெதிர்வந்தருளி, அரசனே! உன் மனதிற் சிறிதும் அஞ்சாதே; நீ ஒருவனுய் மாறுவேடங் கொண்டு ஒன்றியாக வந்து இப்பொழுது வணங்கிப் போவாயென்று கூறிச் சென்றருளினர்.

(வி - ம்) நானே உனக்குத் துணையாதலின் "ஒன்று மஞ்சல்" என்றும், பாண்டியன் காணின் விபரீதம் விளையுமாதலின் "ஒருத்தனுகி யுருத்திரித்து தனித்து" என்றும் கூறினர். (எ)

கேட்டு வேந்தன்வி ழித்து ணர்ந்துகி ளர்ந்த வற்புத ஞகியே
ஈட்டு சேனைய மைச்சு ளார்பிறர் யாரு மின்றிவ ழிக்கொளீஇ
காட்ட மூன்றவ ணும வாள்கொடு நல்ல ருட்டுணை யாய்வழி
காட்ட வன்பெனு மிவுளி மேல்கொடு கங்குல் வாய்வரு வானரோ.

(இ - ள்) சோழன் கேட்டு விழித்தறிந்து மிக்க ஆச்சரியமுடையவனுகி, தெருங்கிய சேனைகளும் மந்திரிகளும் பிறரும் ஆகிய ஒருவரும் துணையின்றி வழிச் சென்று, திரிசேத்திரங்களையுடைய சிவபெருமானது திருவாமத்தையே வாளாகக் கொண்டு, அவனது நல்ல திருவருளே துணையாகி முன்னின்று வழி யுணர்த்த, அன்பென்னுங் குதிரைமேலேறி இராப்பொழுதில் வருவானுயினன்.

கல்லு மாரழ லத்த மும்பல கலுழி யுங்குண கீணகடற்
செல்லு மாகதி பலவும் வானிமிர் கன்ன லுஞ்செறி செங்நெலும்
புல்லு மாகில லுங்க ழிந்துபு றங்கி டக்கந டந்துபோய்
வல்லு மாமுலை யார்க ணம்பயில் வைகை யந்துறை யெய்தினன்.

(இ - ள்) மலைகளும், தெருப்புப் பொருந்திய பாலைநிலமும், பலகாட்டாறும், ஒலிக்குங் கீழ்ச்சமுத்திரத்திற் சங்கமமாகும் பல பெரிய நதிகளும்,

ஆகாய மளாவிய கரும்பும் நெருங்கிய செங்நெற்பயிரும் பொருந்திய வளமிக்க (மருத) நிலமும், பிற்பட்டுப் புறத்திற் கழிய கடந்துபோய், சூதாடு கருவி போன்ற பெரிய முலையையுடைய பெண்கள் கூட்டம் நீராடிச் சஞ்சரிக்கும் வைகைத்துறையை யடைந்தான். (கூ)

குறுகு முன்ன ரதிர்ந்து வைகைகொ ணர்த்த கன்கரை குத்திவேர்
பறிய வன்கிணை முறிய விண்டொடு பைந்த ருக்களை யுந்தியே
மறுகி வெள்ளமெ டுத்த லேத்தர மன்ன வன்கரை தன்னினின்
றிறுதி யில்லவ னேத்தொ ழும்கிடை யூறி தென்றரு செய்துவான். (இ - ள்) அடைதற்கு முன்னமே வைகைநதி பெருக்கெடுத்துக் கோவித்து, பரந்த கரைகளை யகழ்ந்து, வேர் அறவும் வலிய கொம்புகள் முறியவும் ஆகாயமளாவிய பசிய மாங்களைச் சாய்த்து, வெள்ளமெடுத்துச் சுழன்றலைக்க, சோழன் இறுதியில்லாத சோமசுந்தரக் கடவுளைப் பணிய இஃதோர் பெருந்தடையென்று, கரையினின்று அன்பமடைவானுயினன். (கo)

இழுதொ டுஞ்சுவை யமுது பொற்கல னிட்டு ணுதிரு கண்கணீர்
வழிய வந்துவி லக்கு வாரின்வ ளைந்த தாறுப கற்செயும்
பொழுதெ ழும்பொழு தோம முக்கம்வி ளக்கு மேயிகல் பூழியன்
வழுதி யன்றியும் வைகை யும்பகை யான தென்றுவ ருந்தினன். (இ - ள்) நெய்யோடு கூடிய சுவை பொருந்திய அமுதைப் பொற்கலத்திலிட்டு (பசிவந்த பொழுது) உண்ணுமல், இருகண்களினின்றும் நீர் சொரிய, இடையே வந்து விலக்குங் கொடியரைப்போல, வைகைநதி வளைந்து தடைபடுத்தியது. பகற் பொழுதைச் செய்யுஞ் சூரியன் உதிக்குங் காலத்திலேயோ ரோர் புரியும் பாண்டியன் பெருந்துன்பஞ் செய்வான். பாண்டியனுமன்றி வைகைநதியும் நமக்குப் பகையாயிற்றே யென்று வருத்தமுற்றனன். (கக)

வேள்ள நோக்கிய மூங்கு செம்பியன் மெலிவு நோக்கிவிரைக்தெழீஇக்
கள்ள நோக்கில கப்ப டாதவர் கனவு போலவ னனவில்வந்
துள்ள நோக்குடை யன்ப ருக்கரு ளுருவ மாகிய சித்தர்தாம்
பள்ள நோக்கிவ ரும்பெ ரும்புனல் வற்ற நோக்கினர் பார்த்தமோ. (இ - ள்) வெள்ளத்தைக் கண்டு வருந்துஞ் சோழனது மெலிவைப் பார்த்து, பொய் வேடமுடையவர்பால் அகப்படாத சோமசுந்தரப்பெருமான் விரைந்து எழுந்து, கனவுபோல அச்சோழன் மனவில் வந்தருளி, அகப்பார்வையாற்றறிசிக்கும் அன்பருக்குத் திருவருள் வடிவாய் வந்தருளுஞ் சித்தமூர்த்தி, கடலோநோக்கிப் பெருக்கு எடுத்துவரும் வைகை நதியானது வற்றப் பார்த்தருளினர். (கூ)

வறந்த வாறுக டந்து வந்துவ டக்கு வாயிறி றந்துபோய்
நிறைந்த காவல்க டந்து வீதிக ணிரந்தி நேரியர் வேந்தனைச்
சிறந்த வாடக புனித பங்கய திப்பி யப்புன லாடுவித்
தறந்த வாதறை சாம கண்டர்த மால யம்புகு வித்தமோ.

(இ - ள்) வற்றிய வைகையை (சோழராஜனுடன்) தாண்டிவந்து, (மதிலின்) வடக்குவாயிற் கதவைத் திறந்து சென்று, நிறைந்துள்ள காவல்களைக் கடந்து, (அந்தணர் முதலியோர் வசிக்கும்) வீதிகளைக் கடந்து சோழராசனை மேம்பட்ட பரிசுத்தமாகிய பொற்றமரைத் தீர்த்தத்தில் நீராடச் செய்து, சில தருமங் கொடாது கூறிய சாமகீத கண்டத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் தமது ஆலயத்திற் செல்லச்செய்து,

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) திப்பியம் - திவ்ய என்னும் ஆரியச்சிதைவு. (கஈ)

வேறு

வெம்மைசெய் கதிர்கால் செம்பொன் விமானசே கரத்தின் மேய
தம்மையும் பணிவித் தெண்ணில் சராசர மனைத்து மீன்ற
அம்மையங் கயற்க ணுளா மணங்கையும் பணிவித் துள்ளஞ்
செம்மைசெய் தின்ப வெள்ளத் தழுத்தினர் சித்த சாமி.

(இ - ள்) வக்தருளிய சித்தமூர்த்தி, வெப்பஞ் செய்யுங் கிரணத்தை வீசும் செம்பொன்னாலாகிய இந்திரவிமானத்தி லெழுந்தருளிய தன்னையும் பணியச்செய்து, எல்லையில்லாத சராசரங்க ளெல்லாவற்றையும் பெற்றருளிய தாயாகிய அங்கயற்கண்ணம்மையாரையும் பணியச் செய்து உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்திப் பேரின்பப் பெருக்கில் ஆழச்செய்தருளினர்.

(வி - ம்) விமான சேகரம் - விமானங்கட்குக் கிரீடம் போன்றது. (கஉ)

எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய் போற்றி
பண்ணியன் மறைகள் தேருப் பான்மொழி மணுள போற்றி
புண்ணியர் தமக்கு வேதப் பொருளுரை பொருளே போற்றி
விண்ணிழி விமான மேய சுந்தர விடங்க போற்றி.

(இ - ள்) எண்ணினவற்றை யெண்ணியபடியே யான் பெறும்படி முடித்தவனே! உன்னை வந்திக்கக்கடவேன். பண்ணமைந்த வேதங்கள் தேறுத பால் போலும் (சுவையையுடைய)மொழியையுடைய உமாதேவி தலைவனே! உன்னை வந்திக்கக்கடவேன். (கண்ணுவராதி) முனிவர்கட்கு வேதப்பொருளை உரைத்தருளிய மெய்ப்பொருளே! உன்னை வந்திக்கக் கடவேன். ஆகாயத்தினின்றும் இறங்கிய விமானத்தில் எழுந்தருளியுள்ள அழகிய சுயம்புமூர்த்தியே உன்னை வந்திக்கக் கடவேன். (கஊ)

எவ்வுட லெடுத்தேன் மேனு ளெண்ணிலாப் பிறவி தோறும்
அவ்வுட லெல்லாம் பாவ மறம்பொருட் டாக வன்றே
தெவ்வுடல் பொடித்தா யுன்றன் சேவடிக் கடிமை பூண்ட
இவ்வுட லொன்றே யன்றே வெனக்குட லான தையா.

(இ - ள்) ஐயனே! முற்காலத்தில், கணக்கில்லாத பிறவிகள்தோறும் எவ்வெச்சரீரங்களே யெடுத்தேனே அவ்வச்சரீரங்களெல்லாம் பாவ புண்ணியங்களின் பொருட்டாகவல்லவா? மன்மதனது உடலைப் பொடிபடுத்திய பெரு

மானே! உனது திருவடிகட்கு ஆட்பட்ட இத்தச் சரீரமொன்றல்லவா எனக் குரிய சரீரமாயிருந்தது. (கசு)

இன்னன பலவு மேத்தி யிறைஞ்சிப்பல் வாமும் வேண்டும்
மின்னகு வேலி னானே வேந்தனீ போந்த வண்ணம்
தென்னவ னறிந்தா லேதஞ் செய்யுமென் றூர்த்தார்க் கண்ணி
மன்னனுச் சித்த சாபி யுத்தர வழிக்கொண் டேகா.

(இ - ள்) இவை போல்வனவாகப் பல துதிகளையுஞ் செய்து பணிந்து, பல வரங்களையும் யாசிக்கும் மின்னல்போலப் பிரகாசிக்கும் வேற்படை தாங்கிய சோழனை நோக்கி, அரசனே! நீ வந்த வகையைப் பாண்டியன் அறிந்தால் துன்பஞ் செய்வான் என்று, ஆத்திமாலை சூடிய சோழனை அந்த வடக்கு வழிக் கொண்டு சென்று. (கள)

மண்ணினை வளர்க்கும் வைகை வடகரை யளவு நண்ணிப்
புண்ணிய நீற்றுக் காப்புப் புண்டர தூதலிற் சாத்தி
உண்ணிறை கருத்துக் கேற்ப வுறுதுணை யுனக்குண் டாகி
நண்ணுக வென்று பொன்னி நாடனை விடுத்து மீண்டு.

(இ - ள்) உலகத்திலுள்ள பிராணிகளை (ஊட்டி) வளர்க்கும் வைகையினது வடகரை யெல்லைவரை, அவனோடு சென்று, அவனுக்குக் காவலாகப் புண்ணிய வடிவாகிய திருநீற்றுப் புண்டாத்தை அவன் நெற்றியிலிட்டு, உன் மனதில் நிறைந்த சிவநேயத்திற்குப் பொருந்த (இத்திருநீறே) உனக்கு மேம்பட்ட துணையாகிக் கூடச் செல்கவென்று, சோழனை யனுப்பி மீண்டு. (கஅ)

வேறு

காப்புச் செய்து கதவில் விடைக்குறி
யாப்புச் செய்தமைத் தீர்ஞ்சடைச் சித்தர்போய்த்
தூப்புக் கைவரை சூழ்வட மேருவிற்
கோப்புச் செய்தபொற் கோயிலின் மேயினார்.

(இ - ள்) (முன் திறந்த) கதவைச் சாத்தி, அக்கதவிற்கு (தமது) இடப முத்திரையைப் பொருத்தி, குளிர்ந்த சடையையுடைய சித்தமூர்த்தி சென்று, துவாரம் பொருந்திய துதிக்கையையுடைய அஷ்ட கஜங்கள் சூழ்ந்து சுமக்கும் வடபாலுள்ள மேருவைப் போலக் கோவை செய்தமைத்த பொற்றகடு வேய்ந்த திருக்கோயிலை யடைந்தருளினர். (கக)

கங்கு லின்கருங் கைகுறைப் பானைனச்
செங்கை நீட்டித் தினகரன் றோன்றலும்
எங்க ணுயக னிட்ட குறியறிந்
தங்கண் வாயி றிறப்பவ ரையுறு.

(இ - ள்) இராத்திரியின் கருமை பொருந்திய கையினைப் பறிப்பவன் போல, சிவந்த தனது கைகளை நீட்டிச் சூரியன் உதயமாக, எங்கள் பெருமா

னுகிய சோமசுந்தரக் கடவுள் பொறித்தருளிய இடப முத்திரையைத் தெரிந்து அந்த வாசற் கதவினைத் திறப்பவர்கள் சந்தேகித்து.

(வி - ம்) கருங்கை என்றதற்கேற்பச் செங்கையென்றது சொல் முரணணி.

மற்றை வாயில்கண் மூன்றினும் வல்லைபோய்
உற்று நோக்கினர் தாநென்ன லொற்றிய
கொற்ற மீனக் குறிபிழை யாமைகண்
டெற்றி தாங்கொலென் றேந்தன்மு னெய்தினர்.

(இ - ள்) மற்ற மூன்று திசைகளிலுமுள்ள வாசல்களிலும் விரைந்து சென்று தாம் உற்றுப் பார்த்து, நேற்றிட்ட வெற்றியையுடைய மீன முத்திரை பிறழாமலிருப்பதைப் பார்த்து, இம்முத்திரை யாதாய் முடியுமோ? என்று, பாண்டியன் முன் வாயிற் காவலாளர் சென்றார்கள். (உக)

போற்றி மன்னநம் பொன்னங் கயற்குறி
மாற்றி யுத்தர வாயிற் கதவதில்
ஏற்றி லச்சினை யிட்டனர் யாரையென்
றூற்றல் வேந்த அறிகிலம் யாமென்றார்.

(இ - ள்) மன்னவனே! போற்றி. வடதிசைவாயிற் கதவில் நமது அழகிய மீனமுத்திரையை மாற்றி, இடபமுத்திரை யிட்டவர் யாவரென்று யாமறியோம். வெற்றியையுடைய பாண்டியனே! என்றார்கள்.

(வி - ம்) யாரை என்றதில் ஐ தவிர் வழிச்சாரியை. கதவது என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி. (உஉ)

வையை நாடனும் வந்தது நோக்குறீஇ
ஐய வின்னதோ ரற்புத மாயையைச்
செய்ய வல்லவர் யாரெனத் தேர்கிலான்
ஐய மெய்தி யகன்மனை நண்ணினான்.

(இ - ள்) வைகை நதி வளஞ் செய்யும் காட்டையுடைய பாண்டியனும் அக்குறியைப் பார்த்து, இப்படிப்பட்ட ஓர் அதிசயம் விளக்கும் மாயைத் திறத்தைச் செய்ய வல்லவர் யாரோ? என்று தெளியாது சந்தேகமடைந்து தனது கோயிலை யடைந்தான்.

(வி - ம்) தேர்கிலான் என்னும் வினைமுற்று வினையெச்சப் பொருளது. ஐய என்பது அதிசயப் பொருள் குறிக்கும் ஒரிடைச் சொல். (உங)

மறுத்த வுண்டியன் மாமலர்ப் பாயலை
வெறுத்த கன்றரை மேற்பள்ளி கொள்ளவும்
பொறுத்த னன்றுயின் முனிருட் போழ்தினிற்
கறுத்த கண்டர் கனவினிற் கூறுவார்.

(இ - ள்) உணவு மறுத்து, மணம் பொருந்திய புஷ்பசயனத்தை வெறுத்து, இடம்பாகத் தரையின்மேற் பள்ளி கொள்ள, பரிசவின்பங் கருதாது நித்திரை செய்தான். இருட்டுக் காலம்போலக் கறுத்த ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் கனவில் வந்து கூறி யருளுகின்றார். (உச)

மட்ட லம்பிய தாதகி மாலையான்
உட்ட தும்பியொ ழுகிய வன்பினுற்
கட்டி லங்கெயிற் கச்சியிற் காடெலாம்
வெட்டி நம்புடை வித்திய பத்தியான்.

(இ - ள்) தேன் சிந்தும் ஆத்திமாலை யணிந்த சோழன் அகத்திற் றதும்பி வழிந்த சிவநேயத்தால், காவலாக விளங்கும் மதில்சூழ்ந்த காஞ்சியிலுள்ள காடு கனை யெல்லாம் வெட்டி நம்மிடத்துச் செலுத்தும் பத்தி (ஆகிய விதை)யை விதைத்தவன்.

(வி - ம்) 'வித்திய பத்தியான்' என்றது சிவபக்தி பெருகச் செய்தவனெனப் பொருள். (உடு)

வந்து நம்மை வழிபட் டேவண்டி னுன்
இந்த வாயி றிறந்தழைத் தின்னருள்
தந்து மீள விடுத்துப்பின் முட்கொளீஇ
நந்த மால்விடை நாம்பொறித் தேமெனு.

(இ - ள்) இங்கு வந்து நம்மைத் துதிக்க விரும்பினுன். (அவனே) இந்த வடவாயிலைத் திறந்தழைத்து (அவனுக்கு) இனிய அருள்செய்து திரும்பவும் (தன் நாட்டிற்குச்) செல்ல விடுத்து, பின்பு தாழிறுக்கி நமது பெரிய இடபமுத் திரையை நாம் இட்டோமென்று.

(வி - ம்) "இந்த வாயில் திறந்தழைத் தின்னருள்தந்து" என்றதனை "அடைந்தவர்க் கருளு மப்பா போற்றி" என்னும் திருவாக்கா னுணர்க. (உசு)

அருளி னீயைத் தேதற்றி யகன்றபின்
மருளி னீங்கி மலர்க்கண் விழித்தெழீஇ
வெருளி னுன்வெயர்த் தான்விம்பி னுன்பல
பொருளி னுற்றுதித் தான்குல பூடணன்.

(இ - ள்) சற்றேகத்தைத் துடைத்தருளி நீங்கியபின், குலபூஷண பாண்டியன் அம்மயக்கத்தினின்று தெளிந்து, தாமரை மலர்போலுங் கண்ணுயிலுணர்ந்து, அஞ்சி வெயர்த்து உடல் பூரித்து, பல நுண்பொருளமைந்த பாடல்களால் (சோமசுந்தரப் பெருமானைத்) துதித்தான். (உஎ)

வள்ள லன்புக் கெளிவந்த மாண்புகண்
டுள்ள வுள்ளகின் மூற்றெழு மற்புத
வெள்ள மும்பர மானந்த வெள்ளமுங்
கொள்ளை கொண்டுதன் கோமனை நீங்கினுன்.

(இ - ள்) சிவபெருமான் தனது அன்புக்கு எளியனுகி வந்த மாட்சிமையை நோக்கி நினைக்குந்தோறும் இடைவிடாது சுரந்தெழா நின்ற சிவஞானப் பெருக்கையும் சிவபோகப் பெருக்கையுங் கொள்ளை கொண்டு தன் அரண்மனையினின்று நீங்கினுன். (உஅ)

அளிய முமனத் தன்புடை யன்பருக்
கெளிய ராடலே யார்க்கும் வெளிப்படத்
தெளியு மாறு தெளிவித்துத் தண்ணெப்போல்
விளிவி லாவின்ப வெள்ளத் தழுத்தினன்.

(இ - ள்) சாந்தத்தினின்று நீங்காத மனதில் சிவநேயத்தையுடைய அடியவர்கட்கு எளியவராகிய சோமசுந்தரப் பெருமானது திருவிளையாடலே எல்லோர்க்கும் புலப்படத் தெரியும் வண்ணம் தெளிவித்து, (இன்பத்தி லழுந்திய) தன்னைப்போல அழிதலில்லாத பேரின்ப வெள்ளத்தில் (பிறரையும்) ஆழச் செய்தான்.

(வி - ம்) அளியரு மனம் - ஒடுங்கிய மனம். (உக)

வேறு

கோடாத செங்கோலும் வெண்குடையுங் கோமுடியும்
ஏடா ரலங்க லிராசேந் திரற்களித்துத்
தோடா ரிதழியான் முட்கமலஞ் சூடிவான்
நாடா ளரசுரிமை பெற்று னரபதியே.

(இ - ள்) குலபூஷண பாண்டியன் கோணுதலில்லாத தனது செங்கோலையும் சந்திரவட்டக் குடையையும் அரசுக்குரிய கிரீடத்தையும் இதழ் நிறைந்த வெற்றி மாலை யணிந்த இராஜேந்திர பாண்டியனுக்குக் கொடுத்து, இதழ் நிறைந்த கொன்றை மலர்மாலை யணிந்த சோமசுந்தரக் கடவுளுடைய திருவடித் தாமரையைச் சூடி, விண்ணுலகத்தை யாளும் இந்திரபட்டம் பெற்றான். (உ0)

ஆ திருவிருத்தம் - கசகச.

மூப்பத்தைந்தாவது

தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்

சம்பு மதுரைப் பரனிரவு தனியே வந்து தனைப்பணிந்த
வெம்பு கதிரோன் மருமானை விடுத்து மீண்டு தாழிறுக்கி
அம்பொற்கதவின் விடைபொறித்த தறைந்துந் தென்ன னடுபடைக்கு
வம்பு மலர்தோய் புனற்பந்தர் வைத்துக் காத்த வகைசொல்வாம்.

(இ - ள்) சம்புவாகிய மதுராபுரீசர், இரவில் தனியின்றி வந்து தம்மைப் பணிந்த சூரிய மரபிற்றோன்றிய காடுவெட்டிய சோழனை அவன் நாட்டிற்கு அனுப்பி, மீளவுந் தாழ்போட்டு அழகிய பொற்றகடு வேய்ந்த கதவில் இடப முத்திரையிட்ட திருவிளையாடலைக் கூறினேம். இராஜேந்திர பாண்டியனுடைய கொலைத் தொழிற்குரிய சேனைக்கு வாசம்பொருந்திய மலராலாவிய

தண்ணீர்ப்பந்தல் வைத்துக் காத்தருளிய திருவிளையாடலை (யாம் இனிக்) கூறுவாம். (க)

தென்ன னரச புரந்தரன்கோல் செலுத்து நாளிற் காடெறிந்த, மன்னன் பின்னர் வெளிப்படையாய்ப் போந்து போந்து மதுரேசன், பொன்னங் கமலத் தாள்வணங்கிப் போவான் முன்னிப் பொரும் பொருகைக், கன்னி நாடன் கேண்மைபெற வீடுத்தான் வரிசைக் கையுறையே.

(இ - ள்) பாண்டியனுடைய இராஜேந்திரன் செங்கோல் செலுத்தி வருங் காலத்தில், காடு வெட்டிய சோழன், (பின்பு எல்லோருங் காண) பகிரங்கமாய் வந்து வந்து சோமசுந்தரக் கடவுளினுடைய பொன்போலும் அழகிய திருவடியைப் பணிந்து செல்லக் கருதி, கண்ணீரோடு மோதுந் தாமிரபர்ணி நதிசூழ்ந்த பாண்டிய நாட்டையுடைய இராஜேந்திரனது நட்பையடைய வரிசையாகக் கையுறை யனுப்பினன். (உ)

பொன்னி நாடன் வரவிடுத்த பொலம்பூ ணுடை மூதற்பிறவுங்
கன்னி நாடன் கைகவர்ந்து தானுங் கலக்குந் தொடர்பினுல்
உன்னி வேறு கையுறையுய்த் துறவு செய்ய வுவப்பெய்திச்
சென்னி காதன் மகட்கொடுப்பா னினைந்தா னந்தச் செழியற்கு.

(இ - ள்) காவிரியைத் தன் நாட்டகத்துடைய சோழன் விடுத்த பொன்னு பாணம் ஆடை முதலிய பொருள்களை இராஜேந்திர பாண்டியன் கைக் கொண்டு தானும் (அவனுடு) அளவளாவுந் தொடர்ச்சியால் நட்பைக் கருதி, வேறு கையுறை விடுத்து உறவு கொள்ள, காடு வெட்டிய சோழன் களிப்படைந்து விருப்பம் பொருந்திய தன் மகளை அந்த இராஜேந்திர பாண்டியனுக்குக் கொடுக்கச் சம்மதித்தான். (ஊ)

செழியன் றனக்கு வரையறுத்த செய்தி கேட்டுச் செம்பியர்கோன்
கழியன் புடைய குலமகளைத் தான்போய்க் கொள்வான் கருதிமதி
வழிவந் தவற்குத் தம்பியென வந்த அரச சிங்கமெனும்
பழியஞ் சாதான் வஞ்சித்துப் பழனக் காஞ்சிப் பதிபுகுவான்.

(இ - ள்) சந்திரமரபில் வந்த இராஜேந்திர பாண்டியனுக்குத் தம்பியாகப் பிறந்த அரசசிங்க பாண்டியனென்னும் பெயரையுடைய பழிக்கஞ்சாதவன் (தன் மூத்தோனுகிய) இராஜேந்திர பாண்டியனுக்கு (மகட்கொடை) வரையறை செய்த செய்தியைக் கேள்விப்பட்டு, காடுவெட்டிய சோழனது மிக்க அன்புடைய குல கன்னிகையைத் தான் சென்று மணமுடிக்கக் கருதி, (தன் தமயனை) வஞ்சனை செய்து வயல்சூழ்ந்த காஞ்சிநகரிற்குச் செல்வானுயினன்.

காஞ்சிப் பதிமுன் குறுகுமிளங் காவ லோனைக் கூடற்சேனை
காஞ்சுற் றியவற் றெதிர்கொடுபோய்த் தம்முன் றனக்கென் றிருந்தமக
ளாஞ்சிற் றிடையை மணப்புணர்த்தி யந்த மருகற் காசுகிலை
வாஞ்சித் தரச புரந்தரனைப் பிடிக்க மதித்தான் வனமெறிந்தான்.

(இ - ள்) காஞ்சி நாட்டிற்கு முற்பட்டுச் செல்லும் இளவரசாகிய அரச சிங்க பாண்டியனை, கடல்போன்ற சேனை தன்னைச் சூழ்ந்துவர எதிர்கொண்டு சென்று அவன் தமயனுக்கு வரையறுத்திருந்த தனது புத்திரியைக் கலியாணஞ் செய்வித்து, அந்த மருமகனுக்கு (தமயனுடைய) அரசியலைக் கவர்ந்தளிக்க விரும்பி, இராஜேந்திர பாண்டியனைப் பிடிக்க, காடுவெட்டிய சோழன் கருதினன்.

(வி - ரை) வந்தீ என்பது வாவென்னும் செயவெனெச்சத் திரிபு. (டு)

வேறு

மருமகன்ற னுடனெ ழுந்து மாம னுன வளவர்கோன்
பொருமகன்ற சேனை யானை புடைசெ ருங்க மதிவழித்
திருமகன்றன் மேலமர்த்தி றங்கு நீத்து மூரசறைந்
துருமகன்ற பல்லியம்மொ லிப்ப வந்து ளானரோ.

(இ - ள்) மருகனுகிய இராஜேந்திரனுடன் போர்க்கெழுந்து மாமனுகிய காடுவெட்டிய சோழன், போர்புரியும் பரந்த சேனையும் யானையுந் தனது பக்கலில் நெருங்கிவர, சந்திரமரபிற் றோன்றிய இராஜகேசரி பாண்டியன்பேரில் போர்த்திறங் குறித்து, மூரசுகொட்டி இடிபோலப் பல வாத்தியங்கள் ஒலிக்கும்படி வந்தான். (சு)

திரண்ட திர்ந்தெ ழுந்து வந்த சென்னி சேனை தன்னகர்க்
கிரண்டு யோச னைப்பு றத்தி ருக்கு முன்ன ரொற்றரால்
தெருண்டு தென்னன் மாட நீடு கூடன் மேய சிவனதாள்
சரண்பு குந்து வேண்டு கென்று சார்ந்து தாழ்ந்து கூறுவான்.

(இ - ள்) நெருங்கிக் கோஷித்துப் (போர்க்கு) எழுந்துவந்த சோழனுடைய சேனை தன்னகரத்திற்கு இரண்டு யோசனைத் தூரத்திற்கப்பால் (பாடி வீடுகொண்டு) வசிப்பதற்குமுன், பாண்டியன் வேவுகாரரானுளர்த்து, மாடங்கள் நெருங்கிய மதுராபுரியி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவடியில் அடைக்கலம் புக்குக் குறையிரக்கக் கடவேன் என்று வந்துபணிந்து சொல்வானுயினன். (எ)

அன்று பாதி யிரவில் வந்து னடிப ணிந்து தமியனுய்ச்
சென்ற சென்னி யென்னு நின்ன திருவ டிக்க ணன்பினன்
இன்று மங்கி லேய னுமெ னக்கு வேண்டு வனவிடுத்
தொன்று கேண்மை புரிகு வானு ளத்தி லொன்றை யுன்னினன்.

(இ - ள்) அக்காலையில், பாதியிரவில் வந்து உனது திருவடியைப் பணிந்து தனியனுய்ப் போன காடுவெட்டிய சோழனென்னும் உனது திருவடியி லன்புடையவன் இப்பொழுதும் அங்கிலேயை யுடையவனுக எனக்கு வேண்டும் வரிசைகளே யனுப்பிப் பொருந்திய நட்பை விரும்பினவன் (இப்பொழுது) மனதில் வேறொன்றைக் கருதினன். (அ)

அறத்தி னுக்கு ளாகி யன்று நின்ற நீய வன்செயும்
மறத்தி னுக்கு ளாகி யின்று வன்மை செய்வ தேயறப்
புறத்தி னூர்பு ரம்பொ டித்த புண்ணி யாவெ னக்கரைந்
துறைத்து வேண்டி னுன வேலை யும்பர் நாத னருளினுல்.

(இ - ள்) தருமத்திற்குட்பட்டு அப்பொழுது அவனுக்குத் துணையாய் நின்ற நீ அவன் தெய்யுங் கொடுந்தொழிலுக் கிணங்கி இப்பொழுது அவனுக்குத் துணைசெய்வதோ? பாவத்தின் வழி நின்றவர்களது முப்புரங்களை யெரித்தருளிய புண்ணியனல்லவோ? என்று கூறி வலித்து குறையிரந்தான். அக்காலையில் சோமசுந்தரக் கடவுளின் திருவருளால்.

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம். (க)

மெய்து றந்த வாய்மை யொன் றீ விண்ணி னின்று மண்ணிலே
ஐது நுங்கள் சேனை யோடு மாக வத்து நாளை நீ
எய்தி வந்த தெவ்வ ரோடெ திர்ந்து ருத்து நின்றுபோர்
செய்தி வென்றி நின்ன தாதல் செய்து மென்றெ ழுந்ததால்.

(இ - ள்) பாண்டியனே! அழகிதாக உங்கள் சைனியங்களோடும் போர்க்களத்தில் அடைந்துவந்த பகைவரோடு நீ எதிர்த்து கோபித்துநின்று போர்த்தொழில் புரிவாய், வெற்றி உன்னுடையதாகச் செய்வோம் என்று, ஆகாயத்தினின்றும் அசரீரி யொன்று எழுந்தது. (கஎ)

காய வாணி செவிது ழைந்த காலை வேந்த ரிந்திரன்
நாய னுரை டிக்க ணேக யந்த வன்பு மூவகையும்
ஆய வேலை வீழ்ந்து தாழ்ந்த கன்று தண்ணி ருக்கைபோய்
மேயி னுனி மிர்ந்து கங்குல் விடியு மெல்லை நோக்குவான்.

(இ - ள்)* ஆகாயவாணி இராஜேந்திர பாண்டியன் செவியில் நுழைந்த காலத்தில், சோமசுந்தரக் கடவுளது திருவடியில் எழுந்த சேயமும் களிப்பும் பொருந்திய கடலில் விழுந்து மூழ்கி, அதனினின்று நீங்கி, தன் கோயிலிற் சென்று சேர்ந்து எழுந்தோங்கிய இராப்பொழுது விடியுமளவைப் பார்ப்பவனுமானான். (கக)

கழித்த கங்கு லிறவி சும்பு கண்வி ழிக்கு முன்னமே
விழித்தெ ழுந்து சந்தி யாதி வினைமு டித்து வானநீர்
சுழித்த லம்பு வேணி யண்ணல் தூய பூசை செய்தெழீஇத்
தெழித்தெ ழுந்த சேனை யோடு செருநி லத்தை நண்ணினான்.

(இ - ள்) மீக்க இராப்பொழுது நீங்க, ஆகாயங் கண் திறக்குமுன்னர் தான் துயிலுணர்ந்து, நித்ய கரும முதலிய கடனைச் செய்து, கங்காநதி சுழித்தொலிக்குஞ் சடாமுடியையுடைய சிவபெருமானது புனிதமாகிய பூஜையைச் செய்தெழுந்து, அதட்டிப் போர்க்கெழுந்த சேனையுடன் யுத்த பூமியையடைந்தான். (கஉ)

அலைசி றந்த சலதி மீதோ ராறு செல்லு மாறுபோல்
மலைசி றந்த கேரி வெற்பன் மள்ளர் சேணை வெள்ளமேற்
கலைசி றந்த மதிசி றைந்த கன்னி நாடு காவலான்
சிலைசி றந்த சிறிய சேணை சென்ற லைத்து நின்றதே.

(இ - ள்) அலைமிக்க கடலின்பேரில் ஒரு நதி செல்லும் வகைபோல, மலைகளிற் சிறந்த கேரிமலையையுடைய சோழராஜனுடைய வீரர் சேனைசமுத்திரத்தின் பேரில் (அறுபத்தொன்கு) கலைகளின் தேர்ச்சியில் மேம்பட்ட பாண்டி காட்டு மன்னனுகிய இராஜேந்திரனுடைய வில்லிற் சிறந்த சிறிய சேனையானது (போர்மேற் கொண்டு) சென்று வருத்தி நின்றது. (கஉ)

உருமு வன்ன சூரலினு ருலவை யன்ன செலவினர்
வெருவு தீயின் வெருளியார் கெடித்த வீர நகையினர்
செருவின் மான அணியினர் சினஇம டித்த வாயினர்
இருவர் சேனை மள்ளரும்மெ திர்ந்து கைக லந்தனர்.

(இ - ள்) இடிபோன்ற குரலினையுடையாரும், காற்றுப்போன்ற நடையினையுடையாரும், அஞ்சத்தக்க செருப்புப் போன்ற கோபத்தையுடையாரும், வெடிப்போடு புரிந்த வீரநகையையுடையாரும், போரில் (புறங்கொடாத) மானபரணமுடையாரும், கோபித்த மடித்த வாயினையுடையாருமாகிய, இருதிறத்தவருடைய சேனைவீரரும் (தம்முள்) எதிர்ந்து கைகலந்தார்கள். (கச)

மன்ற லந்தெரிய னேரி மலைய வன்ற மார்க்கெலாங்
தென்ற லம்போ ருப்பி ஞன்றி ரண்ட நான்கு கருவியும்
மின்ற யங்கு செய்ய வேணி விடைய வன்ற னருளினுல்
ஒன்ற னந்த மாக வந்து ருத்தெ திர்ந்து தோன்றுமால்.

(இ - ள்) வாசம் பொருந்திய அழகிய மாலையணிந்த கேரிமலையையுடைய காடு வெட்டிய சோழனது சேனைவீரர்கட்கெல்லாம், அழகிய பொதியமலையையுடைய இராஜேந்திரபாண்டியனது திரண்ட நால்வகைச் சேனையும், மின்னல் போன்று விளங்கும் செவ்விய சடையையுடைய சோமசுந்தரப்பெருமான் திருவருளால் ஓர் உரு அநந்த வுருவாகப் புலப்பட்டவந்து தோன்ரு நிற்கும். (கடு)

தேரி னோதை கந்து கஞ்சி ரிக்கு மோதை சொரிமதக்
காரி னோதை பேரி யங்க றங்கு மோதை மறவர்தம்
போரி னோதை வீரர் தோள்பு டைக்கு மோதை யோடுமுங்
நீரி னோதை யொன்றெ னக்க லந்தொ டுங்கி நின்றதே.

(இ - ள்) தேரின் முழக்கமும், குதிரைகள் கனைக்குமோசையும், மதம் பொழியும் யானையின் கம்பலையும், பெரிய வாச்சியங்கள் ஒலிக்கும் அரவமும், சேனைவீரர்கள் தம்முட் போர்புரியுங் கோஷமும், அவ்வீரர்கள் தமது தோள் கொட்டி ஒலிக்கும் ஆரவாரத்துடன் கடலொலியுமொன்றென்று சொல்லத் தம்முட் கலந்து அடங்கி நின்றது. (கசு)

சிலை யின்ற வீர ரோடு சிலை யின்ற வீரரே
கலை யின்ற வாள ரோடு கலை யின்ற வாளரே
கொலை யின்ற வேல ரோடு கொலை யின்ற வேலரே
மலை யின்ற மல்ல ரோடு மலை யின்ற மல்லரே.

(இ - ள்) வில்வித்தையிற் பழகிய வீரர்களோடு வில்வித்தையிற் பழகிய வீரர்களே! சஸ்திரநூலிற் பழகிய வாள்வீரர்களோடு சஸ்திரநூலிற் பழகிய வாள்வீரர்களே! கொலைத்தொழிலில் தேர்ந்த வேல்வீரர்களோடு கொலைத் தொழிலில் தேர்ந்த வேல்வீரர்களே! மற்போரிற் பழகிய மல்லர்களோடு மற் போரிற் பழகிய மல்லர்களே.

(வி - ம்) இது முதலிரண்டு பாடல்கள் ஒரு தொடர். மலை=மல்லை. ஐ - தொகுத்தல். (கள)

கரியு கைத்த பாக ரோடு கரியு கைத்த பாகரே
பரியு கைத்த மறவ ரோடு பரியு கைத்த மறவரே
கிரியு கைத்த வலவ ரோடு கிரியு கைத்த வலவரே
எரியு கைத்தெ திர்ந்த காலெ னக்க லந்து மலைவரால்.

(இ -ள்) யானையைச் செலுத்திய பாகர்களோடு யானையைச் செலுத்திய பாகர்களே. குதிரையைச் செலுத்திய வீரர்களோடு குதிரையைச் செலுத் திய வீரர்களே. (தேராகிய) மலையைச் செலுத்திய பாகரோடு (தேராகிய) மலையைச் செலுத்திய பாகரே (ஆக இவ்வாறு) வடவாமுகாக்கினியை முட்டி யெழுந்த பிரசண்ட மாருதம்போல (தம்முட்) கலந்து போர்புரிவார்கள்.

(வி - ம்) கிரி - உவமவாகு பெயர். (கச)

விடுக்கும் வாளி யெதிர்பி ழைப்பர் வெய்ய வாளி யெய்துபின்
தொடுக்கும் வாளி வில்லொ டுத்து ணிப்பர் பின்க ணிப்பற
மடுக்கும் வாளி மார்பு தைப்ப வாங்கி மற்றை வாளிகொண்
டடுக்கு மேவ லாரை யெய்த டர்ப்பர் கிள்ளி மள்ளரே.

(இ - ள்) சோழனுடைய சேனைவீரர்கள் (பாண்டிய வீரர்கள்) தொடுக்கும் பாணங்களை எதிர்கின்று தப்பி, கொடிய அம்புகளைத் தொடுத்து, பின்பு அவர் கள் தொடுக்கும் அம்புகளை வில்லுடன் துண்டு செய்வார்கள். அவர்கள் அவ வில்லாமல் தொடுக்கும் பாணங்கள் தமது மார்பில் தைத்துருவ அவற்றை வாங்கி (மீண்டும்) அம்பு கொண்டு போருக்குவரும் பகைவர் மேலேவிக் கொல்வார்கள்.

(வி - ம்) கிள்ளி - சோழன்.

வீரர் தமது மார்பிற் றைத்த அம்புகளைப் பிடுங்கி மீளவும் எய்தனர் என் பது "களங்கெழுமிய படையிரிய - உளங்கழிந்த வேல்பறித்தோச்சின்று" என் றதுபோல், தூழிலாட்டுத்துறை. (கக)

சோணை மாரி யிற்ச ரஞ்சொ ரிந்து நின்று துள்ளுவார்
ஆன வாளி யெதிர்பி ழைத்தொ துங்கி நின்ற பூற்சரங்

கூனல் வாளி சிலையி றத்தொ டுத்தெ றிந்து கூவுவார்
மீன கேத னத்து வேந்தன் வீரர் சென்னி வீரர்மேல்.

(இ - ள்) மீனக்கொடியையுடைய பாண்டியன் சேனைவீரர், சோழன் சேனைவீரர்மேல் சோனைமாரிபோல அஸ்திரங்கட்கு எதிரே தப்பி யொதுங்கி நின்று, அக்கினி சொரியும் அஸ்திரங்களை வளைத்து வில்லுகள் துண்டுபடப் பிரயோகித்துத் துண்டித்து வீரகோஷஞ் செய்வார்கள். (உ0)

தறிந்த தாள்த கர்ந்த சென்னி தரையு ருண்ட வரையெனச்
செறிந்த தோள்ச ரிந்த தேர்கி தைந்த பல்ப டைக்கலம்
மூறிந்த யானை கையி ரண்டு ழங்கி வீழ்ந்த செம்புனல்
பறிந்த பாறு பாரி டங்கள் பைத்த கூளி மொய்த்தவே.

(இ - ள்) முறிபட்ட கால்களும் அறுபட்ட தலைகளும் நிலமேல் உருண்டன. மலைபோல் தெருங்கித் திரண்ட தோள்கள் சரிந்தன. தேர்கள் அழிந்தன. பல ஆயுதங்களை முறித்தன. யானைகள் துதிக்கை துண்டுபட்டு அலறி வீழ்ந்தன. உதிர வெள்ளம் பறந்தன. கழுகுகளும் பூதங்களும் பரவிய பசாசுகளும் (போர்க்கள முழுதும்) தெருங்கின. (உக)

மடலி னீடு தார லங்கன் மன்னர் சேனை யின்னவா
றுடலி னீழ லடிய கத்தொ டுங்க வும்ப ருச்சியிற்
கடலி னீடு கதிர்ப ரப்பு கடவுளெய்து மளவுநின்
றடலி னீடி யிடைவி டாம லமரு ழுந்த தாலரோ.

(இ - ள்) இதழ்கள் பொருந்திய (மண)மிக்க மாலையணிந்த சோழபாண்டியர் சேனைகள் இவ்விதமாகத் தேகத்தினிழல் காற்றிலொதுங்கி நிற்க, கடல் போல அளவின்றிப்பரந்த கிரணங்களை வீசஞ் சூரியன் ஆகாயத்தின் மத்தியில் அடையும் நண்பகற்போதுகாறும் நின்று வலிமைகுன்றாது, இடைவிடாது போர்செய்தனர்.

(வி - ம்) "உடலினீழ லடியகத் தொடுங்க" என்றது, உச்சிப்பொழுதில் உடலின் கிழல் காற்றிலொதுங்குதல் மாபுபற்றி யென்க. (உஉ)

அந்த நாள னைத்தை யும்ம ழிக்க நின்ற வரணுதற்
சிந்து தீயெ னக்க னன்று ருத்து நின்று தெறுதலால்
எந்த யாறு மறவ றப்ப வெம்ப ரன்றி யும்பரும்
வெந்து வான யாறும் வற்ற வேனில் வந்தி றுத்ததால்.

(இ - ள்) முடிவுகாலத்தில் எல்லாவற்றையும் அழிக்கும்படி நின்றருளிய உருத்திரமூர்த்தியின் நெற்றிக்கண் சிந்தும் தீயைப்போலக் கொதித்து உஷ்ணித்து நின்று (சூரிய கிரணங்கள்) வாட்டுதலால் எவ்வகைப்பட்ட நதிகளும் மிகவும் வற்றவும் இக்நிலவுலக மன்றி விண்ணுலகுங் கருகி ஆகாயகங்கையும் வறப்ப வேனிற் பொழுது வந்து நிலைபெற்றது.

(வி - ம்) நுதல் - இடவாகுபெயராய்க் கண்ணை யுணர்த்தியது. (உங)

மண்பி ளந்து பிலந ழைந்து வரைபி ளந்து நிரையவாய்
எண்பி ளந்து நின்ற பொங்க ரிலையு கப்பி ளந்துமேல்
விண்பி ளந்து பரிதி நீடு வெங்க ரங்கள் யாரையுங்
கண்பி ளந்த ழன்று வீசு கான லெங்ரு மானதே.

(இ - ள்) சூரியனுடைய மிக்க கொடிய கிரணங்கள், யாவரையுங் கண் கூசக் கொதித்து வீசும் கனல், நிலவுலகைப் பிளந்து பாதலத்திற் சென்று மலை களைப் பிளந்த ஒழுங்குபட்டனவாய், அளவு கடந்து நின்ற சோலையிலுள்ள இலைகள் சிந்த எரித்து, மீதுள்ள விண்ணுலகைப் பிளந்து எவ்விடத்தும் பரவியன.

(வி - ம்) கண் பிளந்து - செயவெனெச்சத் திரிபு. (உச)

சேவேறு

ஆயிடை யலகைத் தேரு மடைந்தவர் வெயர்வு மன்றித்
தூயநீர் வறந்த அத்தச் சுடுபுலந் தோய்ந்த காலும்
மீயுயர் மதிநி லாவும் வெய்யவாய்ச் சுடுநல் லோருந்
தீயவர் தம்மைச் சேர்ந்தாற் றீயவ ராவ ரன்றே.

(இ - ள்) அவ்விடத்தில், கானற்சுலமும் அடைந்தவர்கள் வெயர்வுநீரு மல்லாது புனிதமாகிய நீரும் வற்றின. அந்தச் சுட்டு வருத்தும் நிலத்தில் அளா வீய காற்றும் விண்ணுலகில் உயர்ந்து விளங்குஞ் சந்திரகிரணமுங் கொடியன வாகிச் சுடா கிற்கும். நல்லவரும் கெட்டவரைச் சேர்ந்தால், கெட்டவராவா ரல்லவா.

(வி - ம்) அ + இடை = ஆயிடை. "சுட்டு நீளின் யகரமுஞ் தோன்றும்" என்பது சூத்திரம். (உடு)

வினோதித வூற்று மாறி வெகுளியுஞ் செருக்கு மாறித்
தினோயுடைக் கைம்மான் றூங்கு நடையவாய்ச் சாம்பிச் சோர்ந்த
உளர்தரு மூழிக் காலி னெடுவாம் புரவி யெய்த்துத்
தளர்நடை யுடைய வாகித் தைவரு தென்றல் போன்ற.

(இ - ள்) தினோ பொருந்திய மதிக்கையையுடைய யானைகள் பெருக் கெடுக்கும் மதச்சுரப்பு மாறி, கோபமும் இறுமாப்பும் மாறி, மந்த நடையை யுடையனவாகி வாடிச் சோர்ந்தன. சஞ்சரிக்கும் ஊழிக்காற்றுபோல வோடித் தாவா நின்ற குதிரைகள் சோர்ந்து தளர்நடை யுடையனவாகித் தவழ்ந்து செல்லுந் தென்றலை யொத்தன. (உசு)

கானலந் தேர்மேற் சூறைக் காலெனும் பாகன் றூண்ட
வேனிலிவேந் தேறிச் சீறி வெப்பமாம் படைகள் வீச
மாநிலங் காவல் பூண்ட மன்னவ ரிருவர் தங்கள்
தானையு முடைந்து தண்ணீர் நசைசுடச் சாம்பிற் றன்றே.

(இ - ள்) அழகிய கானலாகிய தேரின்மேல் சுழல் காற்றென்னும் பாகன் (இருந்து) தூண்ட, வேனிற் கால மென்னும் மன்னவனேறிக் கோபித்து,

வெம்மையாகிய ஆயுதங்களே யெறிய, பெரிய வுலகத்தைக் காக்கும் சோழ பாண்டியர்களாகிய இருமன்னர் சேனையும், (அவ் வெப்பத்திற்குத்) தோற்று நீர் வேட்கை வருத்தச் சோர்ந்தது.

(வி - ம்) கானல் தோராகவும், சூறைக்காற்று பாகனாகவும், வேனில் வேந்தாகவும், வெப்பம் படையாகவும் உவமிக்கப்பட்டன. (உஎ)

இரக்கமில் கொடிய செல்வர் மருங்குபோ யிரப்பார் போல
உரூப்பமொண் டிறைக்குங் கள்ளி நீழல்புக் கொதுங்கு வாருந்
தருக்கற நிரப்பா லெய்த்தோர் தம்மினும் வறியர் பாற்சென்
றிரப்பபோ லிலைதிங் துக்க மாகிழ லெய்து வாரும்.

(இ - ள்) இரக்கமில்லாத கொடிய செல்வமுடையோரிடஞ் சென்று யாசிப்போர் (தீய பலனடைதல்)போல, வெப்பத்தை முகந்து வீசுங் கள்ளிமரத்தின் நிழலிற்போய் ஒதுங்குகின்றவர்களும், களிப்பில்லாமல் வறுமையி லிளைத்தவர்கள், தம்மைப் பார்க்கிலும் எளியாரிடஞ் சென்று யாசித்துப் (பலன் பெறுதது) போல, இலை கருகி யுதிர்ந்த மரநிழலடைவாரும். (உஅ)

கொல்லியம் பரிமான் றேரின் குறுநிழ லொதுங்கு வாரும்
அல்லிருள் வட்டத் தோல்வெண் கவிகையு ளடங்கு வாருஞ்
செல்லிடம் பிறிது காணுர் வீரவான் சென்றூர் நின்ற
கல்லுட னிழல்சேர் வாரு மாயினர் களம செல்லாம்.

(இ - ள்) கொல்லாகின்ற யானை குதிரைபூட்டிய தேர் இவற்றின் குறு நிழலில் ஒதுங்குகின்றவர்களும், இருண்மிக்க கேடகத்துள்ளும் வெண்கொற்றக் குடையுள்ளும் அடங்குகின்றவர்களும், நிழலுக் கொதுங்குமிடம் வேறு காணுராகி வீரசுவர்க்கஞ் சென்றோரது பெயர் பொறித்த நட்ட கற்களின்கீழ் நிழலுக்குச் செல்வாருமாக, இருசேனை வீரர்களுமாயினர்.

(வி - ம்) வீரவான் சென்றூர் நின்ற கல் - போர்க்களத்திற் புறங்கொடாது உயிர்விட்ட வீரரது போர்வன்மையைக் கல்லிலெழுதி அப்போர்க்களத்தில் நடுதல் வழக்கு ஆதலின் அந்தக்கல் எனக் கொள்க. (உக)

ஆயதோ ரமையந் தன்னி லளவிலா வுயிர்க்கு மீன்ற
தாயனுர் தூலைபோல் யார்க்குஞ் சமகிலை யாய கூடல்
நாயனுர் செழியன் றூனை நனந்தலை வேத நாற்காற்
பாயதோர் தண்ணீர்ப் பந்தர் பரப்பியப் பந்தர் நாப்பண்.

(இ - ள்) இவ்வாறான சமயத்தில் எண்ணிறந்த வுயிர்கட்கெல்லாம் பெற்ற தாயைப்போலக் கருணையுடையவரும் நிறை கோலைப்போல எல்லோர்க்கும் நடுநிலையா யுள்ளவருமாகிய மதுராபுரியி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் இராஜேந்திர பாண்டியனுடைய சேனையின் நடுவில், வேதங்களே நான்கு கால்களாக நிலைபெற்ற தண்ணீர்ப்பந்தல் வைத்து, அப்பந்தர் நடுவில்.

இதுமுதல் மூன்று பாடல்கள் குளகம். (உ0)

புண்டர நுதலுங் காதின் புறத்தணி மலரும் பாத
முண்டக மலர்மே லொற்றைக் கிண்கிணி முழக்குங் கச்சியாப்
புண்டதோ லுடையுங் கண்டோ ருள்ளமுங் கண்ணுங் கொள்ளை
கொண்டபுன் னகையு முள்ளக் கருணையின் குறிப்புந் தோன்ற.

(இ - ள்) திரிபுண்டர மணிந்த நெற்றியும், காதின் தொளைப்புறத் தணிந்த மலரும், பாததாமரைமே லணிந்த ஒற்றைச் சதங்கையின் கோஷமும், கச்சைகட்டிய புலித்தோலாடையும், பார்த்தோர் மனதையுங் கண்களையுங் கொள்ளைகொள்ளும் புன்சிரிப்பும், திருவுள்ளத்தி லெழுந்த அருளின் குறிப்பும் புலப்பட. (ஈக)

அருமறை யகத்து ணின்றுங் கருக்கவ ராகி வேணிப்
பொருபுனல் பூரித் தாங்கோர் புண்ணியச் சிகரந் தாங்கி
ஒருவருக் கொன்றே யாகி யிலக்கரூக் கிலக்க மாகித்
தருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர் தண்ணீர்த் தீர்கம்.

(இ - ள்) அரிய வேதத்தினுள் நின்றருளு நிலைபோல, அரிய தவ வேடமுடையவராகி, தமது சடையிலணிந்த கரையோடு மோதுங் கங்கா நீரை நிரப்பியதுபோல, ஒப்பில்லாத புண்ணிய வடிவாகிய நீர்க்கரகத்தை யேந்தி, ஒருவர்க்கு ஒன்றும், லக்ஷம் பேர்க்கு லக்ஷமாய், சிறிய துவாரங்களால் தண்ணீர் வார்த்து (பாண்டியன் சேனைக்கு)த் தண்ணீர் வேட்கை யொழித்தருளினர்.

சுந்தரப் புத்தேள் வைத்த துறுமலர் வாசத் தெண்ணீர்ப்
பந்தர்ப் கடைந்து நன்னீர் பருகியெய்ப் பகல வாற்றல்
வந்தபின் செழியன் றன்னோர் வளவனே லேறிச் சீறி
அந்தமி லனிகஞ் சிந்தித் தும்பைவேய்ந் தடுபோர் செய்தார்.

(இ - ள்) சோமசுந்தரப் பெருமான் வைத்தருளிய மணமமைந்த மலரால் வாசமூட்டிய தண்ணீர்ப் பந்தலைச் சென்றடைந்து கல்ல நீரைப் பானஞ் செய்து இளைப்பு நீங்க, (முன் இளைப்பாலிழந்த) வலிமை வந்த பின்பு, பாண்டியன் சேனைவீரர்கள் காடுவெட்டிய சோழன்மேற் போர்க்கெழுந்து கோபித்துக் கணக்கில்லாத சேனையைப் புறங்காணத் தும்பை மாலை சூடி, கொல்லும் போர்த்தொழில் செய்தார்கள். (ஈஈ)

கடலுடைத் தென்னப் பொன்னிக் காவலன் றுணை சாய
மடலுடை வாகை வேய்ந்து வளவனை மருக னேடும்
பிடலுடைத் தறுகட் சேனை வீரர்வெங் கையாற் பற்றி
அடலுடைக் கன்னி நாடர்க் கரசன்முன் கொண்டு போந்தார்.

(இ - ள்) கடற்பெருக்குக் குலைத்து சென்றாற்போல, காவிரி நாட்டையுடைய சோழன் சேனை புறங்கொடுக்க, இதழ்கள் நெருங்கிய வாகை மாலை சூடி, அச்சோழனை அவன் மருமகனாகிய இராஜசிங்க பாண்டியனோடு, வன்மையுடைய அஞ்சாமையைக் கொண்ட பாண்டியன் சேனைவீரர் தமது வலிய

கைகளாற் பிடித்து வெற்றியுடைய பாண்டிநாட்டார்க்கு அரசனுகிய இராஜேந்திர பாண்டியன் முன் கொண்டுபோனர்கள்.

(வி - ம்) "போர்க்களத்து யிக்கோர் செருவென்றது வாகையாம்" என்ற படி வாகைமாலை வெற்றி குறித்தது. (நச)

கோடுவந்த வளவன் றன்னைக் கோப்பெருஞ் செழியர் கோமான்
வடுவந்த தம்பி யோடு மாடநீள் கூடன் மேய
கடுவந்த மிடற்றூர் மூன்போய் விடுத்திதந்தை கருத்தியா தென்ன
நடுவந்த நீலியான் கேட்ப நாயக னிகழ்த்து மன்னோ.

(இ - ள்) (சேனு வீரர்பற்றிக்) கொண்டுவந்த காடுவெட்டிய சோழனை அரசியலையுடைய பெரிய பாண்டியருட் சிறந்த இராஜேந்திர பாண்டியன் (தன் குலத்திற்கு) குற்றம் வருவித்த தம்பியோடு, மாடங்களுயர்ந்த மதுராபுரியிலமுந்தருளிய சுந்தரேசப் பெருமான் சந்நிதியிற் போய் விடுத்து, எந்தையே! நின் திருவுளமும் யாது? என வினவி, கடுநிலையையுடைய அப் பாண்டியன் குறையிரக்க, சோமசுந்தரக் கடவுள் கூறுகின்றார்.

(வி - ம்) 'வடுவந்த தம்பி'யென்றது தன் மூத்தோனுக்கு என கியமித்த பெண் தனதன்னை யெனக் கருதாது தான் மணந்தமும், தமயன் அரசியலைக் கைக்கொள்ளக் கருதிப் போர்க்கெழுந்து வந்தமும்பற்றி யென்க. (நடு)

அறவனீ யல்லை யோவுன் னகத்திலுக் கிசைந்த செய்கென்
றிறைவன தருளால் வானின் றெழுமொழி கேட்டு வைகைத்
துறைவனு மறத்தி ஞற்றூற் சோழனைச் சிலமால் யானை
மறவயப் பரிபூண் மற்றும் வழங்கினன் விடுத்தான் பின்னர்.

(இ - ள்) நீ அறநெறி தவறுதவனன்றே? உன் மனதிற் கிசைந்த காரியஞ் செய்கவென்று பெருமான் திருவருளால் ஆகாயத்தினின்றெழும் அசரீரியைக் கேட்டு, வைகைத் துறையையுடைய பாண்டியனும் அறநெறியால், காடுவெட்டிய சோழனுக்கு, மத மயக்கத்தையுடைய சில யானைகளையும், வெற்றியையும், வன்மையையுமுடைய சில குதிரைகளையும், ஆபரணங்களையும் பிறவற்றையுங் கொடுத்தனுப்பினன்; பின்பு. (நசு)

வள்ளறன் றம்பி யென்னு மன்னவர் சிங்கந் தன்னைத்
தள்ளருந் தறுக ணண்மைத் தருக்கறத் தானுள் செல்வம்
உள்ளன சிறிது மாற்றி யொதுக்கியெவ் வுயிர்க்குந் தாயாய்ப்
பள்ளநீ ருலகங் காத்துப் பல்வளம் பழுக்க வாழ்ந்தான்.

(இ - ள்) இராஜேந்திர பாண்டியன் தனது தம்பியாகிய அரச சிங்கத்தை நீங்குதலில்லாத அஞ்சாமையும் ஆண்மைச் செருக்கும் (அவனுக்கு) நீங்க, தானுளுஞ் செல்வத்திற் சிறிது கொடுத்து விலக்கி, எல்லா வுயிர்கட்குந் தாயாகி, கடல் சூழ்ந்த நிலவுலகத்தைக் காத்து, பல வளங்களும் (தனது குடிகட்கு) கைகூடி வாழத் தானும் வாழ்ந்திருந்தான். (நஎ)

ஆடி திருவிருத்தம் - கசதிருடி.

மூப்பத்தாறுவது

இரச்வாதஞ் செய்த படலம்

வரதன் மீனவன் படையிடை வந்துநீர்ப் பந்தர்
விரத னுகிழ் ரருத்திய வினையுரை செய்தும்
பரத நூலிய னுடகப் பாவையா ளொருத்திக்
கிரத வாதஞ்செய் தருளிய ஆடலே யிசைப்பாம்.

(இ - ள்) சோமசுந்தரக் கடவுள் வலிய மீனக்கொடி தாங்கிய பாண்டியன் சேனையிடையே வந்து தண்ணீர்ப்பந்தல் வைத்தவராகி, (யுத்தத்தில் சோர்வடைந்த பாண்டியன் சேனைக்கு) தண்ணீர் உதவிய திருவிளையாடலைச் சொன்னேம். பரத நூலிற் கூறிய முறைப்படி கடனத் தொழில் புரியும் பதுமை போன்ற ஒப்பற்ற பொன்னையாளுக்கு இரசவாதஞ் செய்தருளிய திருவிளையாடலை (யாம் இனி) கூறுவாம்.

(வி - ம்) கடனம் பரதநூற் பிரிவுகளி லொன்றுதலின் "பரத நூலியலுடகம்" எனக் கூறப்பட்டது. (க)

பருங்கை மால்வரைப் பூழியன் பைந்தமிழ் நாட்டின்
இரங்கு தெண்டிரைக் கரங்களா லீர்ப்புனல் வைகை
மருங்கி னந்தன மலர்ந்தபன் மலர்கடூஉய்ப் பணியப்
புரங்க டந்தவ னிருப்பது பூவண நகரம்.

(இ - ள்) பருத்த கையையும் மதமயக்கத்தையுமுடைய யானைச்சேனையையுடைய பாண்டியனது பசிய தமிழ் நாட்டில், குளிர்ந்த நீரையுடைய வைகை நதியானது ஒலிக்கின்ற தெள்ளிய அலைகளாகிய கரங்களால் அருகிலுள்ள சந்தனங்கள் புட்பித்த பல மலர்களா னருச்சித்துப் பணியும்படி, திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமான் வீற்றிருப்பது திருப்பூவணமென்னும் நகரம். (உ)

எண்ணி லங்குறை சராசர மிலிங்கமென் றெண்ணி
விண்ணி னுளகளுங் கோள்களுஞ் விலங்குவ தியாக்கைக்
கண்ணி னுன்கதிர் முதற்பல கடவுளர் பூசை
பண்ணி வேண்டிய நல்வர மடைந்ததப் பதியில்.

(இ - ள்) அங்கு வசிக்குங் கணக்கில்லாத சராசரங்கள் யாவும் சிவலிங்கக் குறிகளென் றெண்ணி, ஆகாயத்திற் சஞ்சரிக்கும் நக்ஷத்திரங்களும் கிரகங்களும் பிரதக்ஷிணஞ் செய்யும்படியுள்ளது. இந்திரன் சூரியன் முதலிய பலதேவர்கள் சிவபூசைசெய்து (தமக்கு) வேண்டிய நல்லவரங்களை (முற்காலத்தில்) அப்பதியிலடைந்தனர்.

(வி - ம்) யாக்கை கண்ணினுன் - உடல்முழுவதுங் கண்களை யுடையவன். முன்னொரு காலத்தில் இந்திரன் கௌதமமுனிவர் பன்னியைக் காவிற்புணர்ந்த

பொழுதி, அஃதணர்ந்த முனிவர் வெகுண்டு, யோனியை விரும்பிய நீ உடல் முழுதும் அதனை யடைகவெனச் சபிக்க, அவ்வாறே பெண்குறி தேகமுழுவதும் விளங்க, மனவருத்த முற்று அமராபதியை யடைந்து மறைந்து வாழ்ந்திருக்கையில், தேவர்கள் தங்கட் காசனைக் காணமுடியாது விஷயத்தை யுணர்ந்து இந்திரனுடன் முனிவர்பா லடைந்து, அஃதொழியும் வண்ணமாக அருள்செய்கவென விண்ணப்பித்து முறையிட, கௌதமர், இந்திரா! அவை உனக்கு யோனிகளாகவும் மற்றையோர்க்குக் கண்களாகவும் புலப்படுக எனச் சாபாநுக்கிரகஞ் செய்தன ரென்பது புராண வரலாறு. (ரு)

கிளியு ளார்பொழிற் பூவணக் கிழவர்தங் கோயிற்
றளியு ளார்தவப் பேறனுள் தாழ்ந்தபூந் தார்
அளியு ளார்குழ லணங்கனு ள்ந்தரத் தவர்க்குங்
களியு ளார்தர மயக்குறூஉங் கடலமு தனையாள்.

(இ - ள்) கிளிகள் தன்னுள்ளே நிறைந்து வாழுஞ் சோலை சூழ்ந்த திருப்பூவணத்தி லெழுந்தருளிய சிவபெருமானுர் திருக்கோயிற் பரத்தையர்கள் (செய்த) தவப்பலன் போன்றவளும், மகரந்தஞ் சிந்தும் மலர்மாலையில் வண்டுகளுள்ளே பொருந்தி யிசைபாடும் அணங்கு போன்றவளும், தேவர்களுக்கும் மனக்களிப்பு மிக மயக்குங் கடலிற் ரோன்றிய அமுதத்தை யொத்தவளும்.

இது முதல் நான்கு பாடல்கள் குளகம்.

(வி - ம்) அணங்கு - கொல்லியம்பாவை. (ச)

நரம்பி னெழிசை யாழிசைப் பாடலு நடநூல்
நிரம்பு மாடலும் பெண்ணல நீர்மையும் பிறவும்
அரம்பை மாதரை யொத்தன ளறனெறி யொழுகும்
வரம்பி னுலவர் தமக்குமே லாயினுள் மன்னோ.

(இ - ள்) தந்திகளா லுண்டாகிய சத்த சுரங்களோடுடைய வீணுகானமும், இசைப்பாடலும், (பரதசாஸ்திர) நடனநூலிற் கூறிய முறை நிரம்பிய நடனமும், பெண் இலக்கணத் தன்மையும், பிறவும், தேவஸ்திரீகளே யொப்பப் பெற்றுள்ளவளும், தரும மார்க்கத்தில் நடக்கும் நடத்தையினுல் அவ்வரம்பாஸ்திரீகளுக்கு மேலானவளும், (ஙு)

ஆய மாதர்போர் பொன்னனை யாளென்ப வவள்தன்
நேய வாயமோ டிரவிரு ளீங்குழி னெழுந்து
தூய நீர்குடைந் துயிர்புரை சுடர்மதிக் கண்ணி
நாய ஞரடி யருச்சனை நியமமு நடாத்தி.

(இ - ள்) ஆகிய இவன் பெயர் பொன்னனையா ளென்று சொல்லுவர். அவள் தன்னுடைய அன்பு பொருந்திய மங்கையர் குழாத்துடன் இரவின் இருள் புலரு முன்னர் நித்திரையினின் றெழுந்து, புனிதமாகிய (பொற்றும

ரைத் தீர்த்தத்தில்) நீராடி, உயிர் போன்ற பிரகாசிக்கின்ற சந்திரனைச் சிரோ மாலையாகவணிந்த சோமசுந்தரக் கடவுளுடைய பூசனைக் கடனை முடித்து. (சு)

திருத்தர் பூவண வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்
கருத்த ளாயருச் சித்தவர் களிப்பவின் சுவையூண்
அருத்தி யெஞ்சிய தருந்துவா ளஃதவ ணிழுமம்.

(இ - ள்) புனிதராகிய திருப்பூவணநாதரைத் தரிசித்துக் குற்றமில்லாத (இலக்கண மமைந்த) நடனஞ் செய்து வந்து, சிவனடியவர்களையே உண்மைப் பொருளென்று கருதும் மனமுடையவளாய் (அவர்களைப்) பூஜித்து, அவ்வடியவர் களிப்பெய்தும்படி இனிய சுவையுடன் கூடிய அமுதத்தை யுண்பித்து, மிகுந்தவற்றைப் புசிப்பாள். அது அவளது நியமனம். (எ)

மாத ரிங்கெறி வழங்குநாண் மற்றவ ளன்பைப்
பூத லத்திடைத் தெருட்டுவான் பொன்மலி வல்லி
காத லுயகன் றிருவுருக் காணிய வுள்ளத்
தாத ரங்கொடுத் தருளினூர் பூவணத் தையர்.

(இ - ள்) அழகிய இவ்வண்ணமே நடந்துவரும் காலத்தில், அப்பொன்னனையாளது பக்தியை உலகத்திலுள்ளவர்கட் குணர்த்தும்படி, அழகிய மலை வல்லியாகிய பார்ப்பதிக்கு நாயகராகிய புஷ்பவணநாதருடைய திருவுருவஞ் சமைக்கும்படி, திருப்பூவண நாதர் அவள் மனதில் ஆசை கொடுத்தருளினர்.

(வி - ம்) காணிய வென்பது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். இதற்குக் காணவென்பது பொருள். (அ)

ஐயர் தந்தபே ரன்புரு வாயினுள் மழுமான்
கையர் தந்திரு வுருவினைக் கருவினுற் கண்டு
மைய கண்ணினுள் வைகலும் வருபொரு ளெல்லாம்
பொய்யி லன்புகொண் டன்பர்தம் பூசையி னோர்வாள்.

(இ - ள்) மைதீட்டிய கண்களையுடைய பொன்னனையாள் சிவபெருமான் கொடுத்தருளிய சிறந்த அன்புருவமாய், மழுப்படையையும் மானையுந் திருக்கரத்தேந்திய சிவபெருமானது திருவுருவத்தைக் கருக்கட்டி, நாள்தோறும் தனக்கு வரும் பொருள் முழுவதையும் உண்மையாகிய அன்புடன் அடியவர் பூசையிற் செலவு செய்து வருவாளாயினள்.

(வி - ம்) 'கருவினுற்கண்டு' என்றது திருவுருவவிக்கிரகஞ் செய்யவேண்டுவோர் முன்னர் மெழுக்கினுற் செய்து அதுபோலவே வார்ப்பிக்கவேண்டுதலின், ஈண்டு மெழுக்குருவத்தை யுணர்த்தியது ; இதனைக் கருக்கட்டி யென்றும். (க)

அடியர் பூசனைக் கன்றியெஞ் சாமையா லடிகள்
வடிவு காண்பதெப் படியென்று மடியிலச் செழியற்

கொடிவில் பொற்கிழி கல்கிய வள்ளலை யுன்னிப்
பிடிய ளிருந் தாளஃ தறிந்தனன் பெருமான்.

(இ - ள்) பிடியானேபோலும் நடையினையுடைய பொன்னனையாள் சிவனடியர் பூசைக்கல்லாமல் (பொருள்) மிகுதிப்படாமையால், சிவபெருமான் திருவுளைச் சமைப்பதெவ்வாறென்று, (சிவநேயத்திற்) குறைவில்லாத அக்குல பூஷணபாண்டியனுக்கு எடுக்கக் குறையாத பொற்கிழி யருளிய சோமசுந்தரப் பெருமானைத் தியானித்து இருந்தனள். அப்பெருமான் அவளது கருத்தை யுணர்ந்தனர். (கஎ)

தூய்ய நீறணி மெய்யினர் கட்டங்கந் தொட்ட
கையர் யோகபட் டத்திடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவண மிசையசை யுண்டினர் பவளச்
செய்யு வேணிய ரங்கொரு சித்தராய் வருவார்.

(இ - ள்) புனிதமாகிய திருவெண்ணீற்றினை யணிந்த திருமேனியையுடையவரும், யோக தண்டம் தாங்கிய கையையுடையவரும், யோகப்பட்ட மணிந்த இடையையுடையவரும், திருநீற்றுப்பையை யுடையவரும், கோவண மீதுடுத்த ஆடையையுடையவரும், பவளம்போலச் சிவந்த சடையையுடைய வருமாய், அவ்விடத்தில் ஒரு சித்தமூர்த்தியாய் எழுந்தருளுவார். (கக)

வந்து பொன்னனை யாள்மணி மாளிகை குறுகி
அந்த மின்றிவர் தமதுசெய் வாரொடு மணுகிச்
சிந்தை வேறுகொண் டடைந்தவர் திருவமு தருந்தா
துந்து மாளிகைப் புறங்கடை யொருசிறை யிருந்தார்.

(இ - ள்) (அவ்வகை வடிவேற்று) வந்து பொன்னனையாளுடைய அழகிய வீட்டினைச் சமீபித்து, கணக்கில்லாது வந்து திருவமுது கொள்ளும் அடியாரோடும் வந்து, திருவுள்ளத்தில் மற்றொன்று கருதிப்போந்த சித்தமூர்த்திகள் திருவமு தருந்தாது, ஒளிவீசும் மாளிகையின் கடைவாயிலில் ஒருபுறத்திலிருந்தனர்.

(வி - ம்) 'சிந்தைவேறுகொண் டடைந்தவர்' என்பது பொன்னனையாள் வீட்டிலுள்ள உலோகங்களைப் பொன்னுக்கித் தமது திருவுருவஞ் சமைத்தற்குக் கொடுத்தருள வந்ததை உணர்த்துவதாம். (கஉ)

அமுது செய்தருந் தவரெலா மகலவே றிருந்த
அமுத வாரியை யடிபணிந் தடிச்சிய ரைய
அமுது செய்வதற் குள்ளெழுந் தருள்கென வுங்கள்
அமுத ஞாயிங் கழைமினென் றருளு மனையார்.

(இ - ள்) அருந்தவமுடைய அடியவர் யாவருந் திருவமுது செய்து செல்ல, வேற்றிடத்திலிருந்த அமுதக்கடலாகிய சித்தமூர்த்தியைக் குற்றேவல் செய்யுந் தாதியர் திருவடிபணிந்து, ஐயனே! திருவமுது செய்தற்கு உள்

ளெழுத்தருளவேண்டும் என வேண்ட, உங்கள் அமுதம் போன்ற பொன் னனையாளே இங்கழையுங்கள் எனக் கூறி யருள, அப்பணிப்பெண்கள். (கஙூ)

முத்த ராமுகிழ் வாணகை யல்குலாய் முக்கண்
அத்த ரானவர் தமதெலா மமுதுசெய் தகன்றூர்
சித்த ராயொரு தம்பிரான் சிறுநகை யினராய்
இத்த ராதலத் தரியரா யிருக்கின்று சென்றூர்.

(இ - ள்) முத்துப்போன்ற ஒள்ளிய புன்னகையையும் பாம்பின் படம் போன்ற அல்குலையுமுடைய தலைவியே! திரிசேத்திரங்களையுடைய சிவபெரு மானது அடியவர் யாவரும் திருவமுதுசெய்து சென்றருளினர். (அதில்) சித்தமூர்த்தியாய் வந்த ஒரு தம்பிரானுர் புன்னகையுடையராய் இக்கிலவுல கிற் கிடைத்தற்கரியராய் இருக்கின்றனரென்று கூறினர். (கச)

நவம ணிக்கலன் பூத்தபூங் கொம்பரி னடந்து
துவரி தழ்க்கனி வாயினுள் சுவாகதங் கிலவென்
றுவமை யற்றவர்க் கருக்கிய மாசன முதவிப்
பவம கற்றிய வடிமலர் முடியுறப் பணிந்தாள்.

(இ - ள்) நவரத்தினங்களிழைத்த ஆபரணங்கள் விகசித்த பூங்கொம்பு போல நடந்து பவளமபோன்ற இதழையுடைய கோவைக்கனிபோன்ற தனது வாயால் (உமது வரவு) நல்வரவல்லவாவென்று, ஒப்பில்லாத சித்தமூர்த்திகளுக்கு அருக்கியமும் ஆசனமுங் கொடுத்து (அடியவர்) பிறப்பை யகற்றுங் திருவடித் தாமரையைத் தனது தலையானது சூடும்படி பணிந்தனள்.

(வி - ம்) 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' என்றதனால், அருக்கியம் என்பதற்கேற்ப, பாத்தியம் ஆசமனீயமுங் கொள்க. (கடி)

சு+ஆசுதம்+கில - நல் வரவு அல்லவா.

எத்த வஞ்செய்தே னிங்கெழுந் தருளுதற் கென்ஞச்
சித்தர் மேனியும் படிவெழிற் செல்வமு நோக்கி
முத்த வாணகை யரும்பின் றஞ்சலி முகிழ்ப்ப
அத்தர் நோக்கினு ரருட்கண லருள்வலைப் பட்டாள்.

(இ - ள்) சித்த மூர்த்திகளது திருவருட் பார்வையால் அவர் அருள்வலையி லகப்பட்ட பொன்னனையாள், தேவரீர் அடியேன் சிறுகுடிலுக் கெழுந்தருளு யாததவஞ் செய்தேனென்று, சித்த மூர்த்திகள் திருமேனியையும் திருவரு வத்தின் அழகின் பெருக்கையும் பார்த்து, முத்துப்போன்ற ஒள்ளிய புன்னகை தோன்ற நின்று தனது கரங்குவிக்க, சித்தமூர்த்திகள் பார்த்தருளினர். (கசு)

ஐய வுள்ளெழுந் தருளுக வடிகணீ ரடியேன்
உய்ய வேண்டிய பணிதிரு வுளத்தினுக் கிசையச்
செய்ய வல்லனென் றஞ்சலி செய்யவுண் ணகையா
மைய னேக்கியை நோக்கிமீ னேக்கிதன் மனைளன்.

(இ - ள்) அடிகளே! தேவரீர் உள்ளெழுந்தருளக்கடவீர்; அடியேன் உச்சிவிக்கவேண்டிய பணிவிடையைத் தேவரீர் திருவுள்ளத்திற்குப் பொருந்தச் செய்யக்கடவேன் எனக் கைகூப்ப, வாயுள்ளே புன்னகை யரும்பி அங்கயற் கண்ணியார் தலைவராகிய சோமசுந்தரக் கடவுள் பிறர்க்கு மையல்பூட்டும் பார்வையுடைய பொன்னனையாளைப் பார்த்து,

இதுமுத லிரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) ஐய - அசைநிலை. (கஎ)

வடியை நேர்விழி யாய்பெரு வனப்பினை சிறிதுன்
கொடியை நேரிடை யெனவிளைத் தனையெனக் கொன்றை
முடியி னைடி யாரமென் முகிழ்முலைக் கொடிதாழ்ந்
தடிய னேற்குவே றுரையொரு மெழிலிலை யையா.

(இ - ள்) மாவடுவின் பிளவுபோன்ற கண்களை யுடையாய்! பேரழகினை யுடையாய்! உன் கொடிபோன்ற இடையைப்போலச் சிறிது இளைத்திருக்கின்றனை (யாது காரணம்?) என, மெல்லிய அரும்பாகிய தனமுகிழ்த்த பூங்கொடி போன்ற அப் பொன்னனையாள் கொன்றை மலரணிந்த சடைமுடியையுடைய சித்தமூர்த்திகளின் திருவடியைப் பொருந்த வணங்கி, ஐயனே! அடியேனுக்கு வேறு ஒரு குறையில்லை. (கஅ)

எங்க ணையகர் திருவுருக் காண்பதற் கிதயந்
தங்கு மாசையாற் கருவுருச் சமைத்தனன் முடிப்பேற்
கிங்கு நாடொறு மென்னையில் வரும்பொரு ளெல்லாம்
உங்கள் பூசைக்கே யல்லதை யொழிந்தில வென்றுள்.

(இ - ள்) எங்க ளிறைவராகிய சிவபெருமானுர் திருவுருவஞ் சமைக்க என் மனதிற் பொருந்திய விருப்பத்தாற் கருக்கட்டி, முடிக்கக் கருதிய எனக்கு இவ்விடத்து நாடோறும் என் கைம்முயற்சியால் வரும் பொருள்கள் யாவும் உங்கள் பூசைக்கே யன்றி, சேடமானவை யில்லையென்று கூறினள். (கக)

அருந்து நல்லமு தனையவ ளன்புநித் திக்கத்
திருந்து தேனென விரங்குசொற் செவிமடுத் தையர்
மூருந்து மூரலாய் செல்வமெய் யிளமைநீர் மொக்குள்
இருந்த வெல்லையு நிலையில வென்பது துணிந்தாய்.

(இ - ள்) உண்ணும் இனிய அமுதம் போன்ற உருவத்தையுடையவள் தனது அன்பு கைகூட வடித்த தேன் சுவைபோல இசைக்குஞ் சொல்லைக் கேட்டு, சித்தமூர்த்திகள், முருந்து போன்ற பற்களையுடையவளே! செல்வமும் சரீரமும் இளமையும் நீரிற்றோன்றிய குமிழி நின்ற அளவும் நிற்கும் அளவின வல்ல என்பதை நீ உணர்ந்திருக்கிறாய்.

(வி - ம்) முருந்து - மயிலிறகின் அடி.

அடியவர் பூசைப் பேறே நிலையுடையதெனக் கருதியவளாதலின் "செல்வ மெய்யிளமை நீர்மொக்கு - ளிருந்த வெல்லையு நிலையில வென்பது துணிந்தாய்" என்றார். (உ0)

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்.

(இ - ள்) சிறந்த நல்ல தருமமே நிலையுள்ள தென்றறிந்தாய்; அப் புண்ணியத்துட் சிவபுண்ணியங்கள் மேம்பட்டனவாம். அச் சிவபுண்ணியங்களுள் சிவார்ச்சனை மேம்பட்டதாம். அச் சிவபூசையுள் அடியவர் பூசை மேம்பட்ட தென்று அறிந்து, சிவனடியவரை (நாடோறும்) அருச்சனை செய்துவரு கின்றாய்.

(வி - ம்) சிவபுண்ணியம் பத்து. இதனை :—

"அயிங்கிதை பொறையே மெய்ம்மை யறைதலே யரிய நாணை
உயர்ந்தவா தாவே யுள்ள மொடுக்கலே கொடுக்கை தானை
வியந்தவர்ச் சனையே மெய்யுன் வெறித்துறு தவமே மேனி
நயந்தபா வனையே யென்னத் தசமிவை நன்றெங் காளும்"

என்பதனாலும்,

அடியவர் பூசை யதிகம் என்பதை :—

"படிய னூலின் படியிப் படியிடை
முடிவி லன்பு முதிருபு ஞற்றும்வெண்
பொடிகொண் மேனியன் பூசையி னும்மகன்
அடியர் பூசை யதிக மதிகமே."

என்பதனானு மறிக. (உக)

உறுதி யெய்தினை யிருமையு முன்பெயர்க் கேற்பி
இறுதி யில்லவன் றிருவுரு வீகையாற் காணப்
பெறுதி யாகநின் மனைக்கிடைப் பித்தளை யீயம்
அறுதி யான பல் கலன்களுங் கொணர்தியென் றறைந்தார்.

(இ - ள்) இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பயனை யடைந்தாய். உனது பெயருக்கேற்ப, தமக்கோ ரிறுதியில்லாத பெருமானுர் திருவுருவத்தைப் பொன்னுற் செய்யப் பெறும்படி உன் மனையிற் கிடக்கும் பித்தளை ஈயம் முதலான உலோகங்களாற் செய்த பல பாத்திரங்களையுங் கொண்டு வருவாயென்று கூறியருளினர். (உஉ)

ஈயஞ் செம்பிரும் பிரசித மென்பவும் புணர்ப்பாற்
ரோயும் பித்தளை வெண்கலந் தாமுதற் ரொடக்கத்
தாயும் பல்வகை யுலோகமுங் கல்லென வலம்பத்
தேயுஞ் சிற்றிடை கொண்டுபோய்ச் சித்தர்முன் வைத்தாள்.

(இ - ள்) ஈயமுஞ் செம்பும் இரும்பும் வெள்ளியும் என்று சொல்லப் படுவனவும் (ஒன்ரோடொன்றின்) சம்பந்தத்தாலாகிய பித்தளையும் வெண் கலமுந் தாவுமாகிய தொடக்கத்தையுடைய ஆராயும் பலவகைப்பட்ட உலோ

கங்களும் கல்லென்றெழுவிக்க மெலிந்த சிறிய இடையையுடைய பொன்னனையாள் கொண்டு சென்று சித்தமூர்த்திகள் திருமுன் வைத்தனள்.

(வி - ம்) 'கல்லென வலம்பத்தேயுஞ் சிற்றிடை' யென்றதால் தான் கொண்ட கருத்து முற்றியதென்னுங் குறிப்புத் தோன்றியது. (உக)

வைத்த வேறுவே றுலோகமு மழுவுழை கரந்த
சித்த சாமிக ணீற்றினைச் சிதறினர் பாவித்
தித்தை கீயிரா வெரியிலிட் டெடுக்கினன் பொன்னும்
அத்தை நாயகன் றிருவுருக் கொள்கென அறைந்தார்.

(இ - ள்) மழுவையு மானையு மொளித்து வந்தருளிய சித்த மூர்த்திகள் (பொன்னனையாள்) வைத்த பல வேறு வகைப்பட்ட உலோகங்களின் மீதும் (பொன்னுகக் கடவது என்று) திருவுளஞ்செய்து திருநீற்றைத் தெளித்து, இவ்வுலோகத்தை நீ இரவிற் புடம்போட்டெடுத்ததால் மாற்றுயர்ந்த பொன்னும்; அதனால் சிவபெருமான் திருவுருவத்தைச் செய்யக் கடவாயென்று கூறியருளினர்.

(வி - ம்) சிதறினரென்னும் வினைமுற்று வினையெச்சப் பொருளது. (உச)

மங்கை பாகரை மடந்தையு மிங்குநீர் வதிந்து
கங்குல் வாயமு தருந்தியிக் காரிய முடித்துப்
பொங்கு காரிருள் புலருமுன் போமெனப் புகன்றாள்
அங்க யற்கணி டீணப்பிரி யாததற் கிசையார்.

(இ - ள்) உமாதேவியாரை வாமபாகத்திலுடைய பெருமானாரைப் பொன்னனையாளும், இவ்விடத்தில் நீர் தங்கியருளி இராப்போது திருவமுதுசெய்து இந்தக் காரியத்தை முடித்து, மிக்க கரிய இருட்போது புலர்வதற்குமுன் எழுந்தருளும் என்று வணங்கிக் கூறினள். அங்கயற்கணம்மையாரைப் பிரியாத அப் பெருமானார் அவ்வார்த்தைக் குடன்படாது.

இது முதல் இரண்டு பாடல்கள் குளகம். (உடு)

சிறந்த மாடநீண் மதுரையிற் சித்தர்யா மென்று
மறைந்து போயினர் மறைந்தபின் சித்தராய் வந்தார்
அறைந்த வார்கழ லலம்பிட வெள்ளிமன் றுடி
நிறைந்த பேரொளி யாயுறை நிருத்தரென் றறிந்தாள்.

(இ - ள்) சிறப்புற்ற மாடங்கள் பொருந்திய மதுரைத் திருநகரிலுள்ள சித்தமூர்த்திகள் யாமென்று திருவுருவ மறைந்தருளினர். மறைந்தருளியபின் சித்த மூர்த்திகளாய் வந்த பெருமானார் சத்திக்கின்ற நெடிய வீரக்கழலொலிக்க வெள்ளியம்பலத்தில் திருநடனஞ் செய்து நிறைந்த பெருஞ்சோதியா யெழுந்தருளிய திருத்தாண்டவ மூர்த்திகள் என்று (பொன்னனையாள்) அறிந்தனள்.

மறைந்து போயினு ரெனச்சிறி தயர்ச்சியு மனத்தில்
நிறைந்த தோர்பெருங் கவற்சியை நீக்கினு ரென்னச்

சிறந்த தோர்பெரு மகிழ்ச்சியு முடையளாய்ச் சித்தர்
அறைந்த வாழுதீப் பெய்தன ளுலோகங்க ளனைத்தும்.

(இ - ள்) மறைத்து சென்றருளினரெனச் சிறிது அன்பத்தையும், (திரு வுருவ முடியாமையால் என்றும்) தன் மனதில் நிறைந்துள்ள அன்பத்தை நீக்கி யருளினரென்று மேலெழுந்தோங்கிய ஒப்பில்லாத பெருமகிழ்ச்சியையுமுடை யளாகி, சித்தமூர்த்திகள் கூறியருளிய வண்ணம் உலோகங்களை யெல்லாம் தீயிற் புடம் போட்டனள். (உஎ)

அழல டைந்தபி னிருண்மல வலிதிரிந் தான்றுள்
கிழல டைந்தவர் காட்சிபோ னீப்பருங் களங்கங்
கழல வாடக மானதா லதுகொண்டு கனிந்த
மழலை யீர்ஞ்சொலாள் கண்டனள் வடிவிலான் வடிவம்.

(இ - ள்) சிவபெருமானது திருவடிநீழலை யடைந்த மெய்யன்பர் ஆணவ மலத்தின் வலிமை கெட்ட தோற்றம்போல (உலோகம்) செருப்பினைச் சேர்ந்த பிறகு நீங்காத மாசுகழியப் பொன்னாகியது. சுவைபழுத்த தண்ணிய மழலைச் சொல்லையுடைய பொன்னனையாள் அப்பொன்னினைக் கொண்டு உருவமில் லாத சிவபெருமானுக்கோர் திருவுருவத்தை வார்த்தனள். (உஅ)

வேறு

மழவிடை யுடையான் மேனி வனப்பினை கோக்கி யச்சோ
அழகிய பிரானே வென்னு அள்ளிமுத் தங்கொண் டன்பிற்
பழகிய பாணி யானுப் பரிவினுற் பதிட்டை செய்து
விழவுதேர் நடத்திச் சின்னுள் கழிந்தபின் வீடு பெற்றுள்.

(இ - ள்) இளமை வாய்ந்த இடபவாகனத்தையுடைய பெருமானுர் திரு வுருவத்தின் பொலிவைப் பார்த்து, (தனது கைகளால் திருக்கன்னத்தை) அள்ளி முத்தமிட்டுத் தனது மெய்யன்பில் இடைவிடாதிருந்த சிவபெருமானை நீங்காத பேரன்பினுல் பிரதிட்டை செய்து நித்த நைமித்திய மகோற்சவாதி கள் நடத்தி இவ்வாறு சில நாள் கழிந்த பின்பு சிவகதி யடைந்தனள்.

(வி - ம்) அச்சோ என்றது வியப்பிடைச் சொல். (உக)

நெடுதுண் ணிடையி னுளைந் நாயகன் கபோலத் திட்ட
கையுகிர்க் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு
வெய்யவெங் கதிர்கால் செம்பொன் மேனிவே றுகி காலாம்
பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துரு வாகி மன்னும்.

(இ - ள்) இளைத்த நுண்ணிய இடையையுடைய அப்பொன்னனையாள் அப்பெருமானுடைய கன்னத்தி லள்ளிய நகக்குறியையும் அழகிய பிரானே வென்று சொல்லிய காரணக் குறியையுங் கொண்டு, விரும்பத்தக்க சூரியன் போலக் கிரணத்தை வீசுஞ் செம்பொன்னுலாகிய திருமேனி வேறுபட்டுக் கலி யுகத்தவர்க்குத் தக்க பொருந்திய திருவுருவமாகி எழுந்தருளி யிருக்கின்றனர்.

(வி - ம்) அப்பெருமானுக்கு இப்பொழுதும் நகக்குறி மன்னும் எனவும், திருநாமம் பொன்னனையாள் கூறியபடியே அழகிய பிரானெனவே மன்னும் எனவும் கொள்க. (கூ0)

திருவிருத்தம் - கஅஅடி.

முப்பத்தேழாவது

சோழனை மடுவில் வீட்டிய் படலம்

மின்னனை யார்பூங் கொன்றை வேணிய நிரத வாதம்
பொன்னனை யாள்முன் செய்து போந்தது புகன்றே மார்த்தார்
மன்னனை மடுவில் வீட்டி மலரடிக் கன்ப ஞனை
தென்னனை யமரிற் காத்த திருவிளை யாடல் சொல்வாம்.

(இ - ள்) மின்னல் போன்ற ஆத்திமாலையும் அழகிய கொன்றைமாலையும் அணிந்த சடாமுடியையுடைய சோமசுந்தாக்கடவுள் பொன்னனையாள் முன் இரசவாதஞ் செய்து சென்றருளிய திருவிளையாடலைக் கூறினேனும். ஆத்திமாலையணிந்த சோழனை மடுவில் தள்ளி, தாமரைமலர்போன்ற தமது திருவடிக்கு அன்பனாகிய சுந்தரேசபாதசேகரபாண்டியனைப் போரிற் காத்தருளிய திருவிளையாடலை (யாம் இனி)க் கூறுவாம்.

(வி - ம்) மின்னனையார் என்றதற்கு ஈண்டு மின்னல்போலத் தோன்றி மறைந்தருளினமை நோக்கிக் கூறினதாகப் பொருள் உரைப்பினும்பொருந்தும். அனைய என்னும் குறிப்புவினைப் பெயரொச்சத்தின் அகரவீறு தொக்கது.

பொன்னெடுந் தேரி ராச புரந்தான் புரந்த ராதி
பன்னெடுந் தேவ ரேத்தப் பரனுல கடைந்தா னிப்பால்
அன்நெடுந் தகையோன் மைந்த னடலிரா சேச னென்போன்
இன்நெடுந் தகையோன் மைந்த னிராசகம் பீர னென்போன்.

(இ - ள்) பொன்னுலாகிய பெரிய தேரையுடைய இராசேந்திரபாண்டியன் இந்திரன் முதலிய பல தேவர்களுந் துதிக்கச் சிவலோகத்தை யடைந்தனன். இப்புறம் அப்பெருந்தகைமையுடைய இராசேந்திரபாண்டியன் புத்திரன் வெற்றியையுடைய இராசேசபாண்டியனென்று சொல்லப்படுவான். இந்த இராசேசபாண்டியனுடைய புத்திரன் இராசகம்பீரபாண்டியனென்று சொல்லப்படுவான். (உ)

மற்றிவன் குமரன் பாண்டி வங்கிய தீப னன்னன்
பொற்றிணி தடந்தோள் மைந்தன் புரந்தர சித்தா மன்னன்
வெற்றிகொள் குமரன் பாண்டி வங்கிய பதாகன் வீரம்
பற்றிய சுந்த ரேச பாதசே கரன வன்சேய்.

(இ - ள்) இந்த இராசகம்பீர பாண்டியனுடைய புத்திரன் பாண்டிய வங்கியதீப பாண்டியனென்று சொல்லப்படுவான். அவனுடைய பொன்னிறம் வாய்ந்த திண்ணிய தோளையுடைய புத்திரன் புரந்தரசித்துப் பாண்டியனும். அந்தப் புரந்தரசித்துப் பாண்டியனுடைய வெற்றிகொண்ட புத்திரன் பாண்டி

வங்கியபதாகனென்று சொல்லப்படுவான். அவனுடைய புத்திரன் வீரமிக்க சுந்தரேசபாதசேகர பாண்டியனென்று சொல்லப்படுவான்.

(வி - ம்) புரந்தரசித்தபாண்டியன் உக்கிரகுமாரபாண்டியரைப்போலவே இந்திரனை யெதிர்த்துச் சயங்கொண்டதாகவுஞ் சரிதமுளது. (ஈ)

பலர்புகழ் சுந்த ரேச பாதசே கரனுந் தென்னன்
அலைபுன லுடுத்த கூட லடிகளுக் கன்ப னுகிக்
கொலைபுணர் வேலால் வெங்கோற் குறும்பெனுங் களைகள் தீர்த்
மலர்தலை யுலக மென்னும் வான்பயிர் வளர்க்கு நாளில்.

[அ

(இ - ள்) பலரும் புகழும் அத்தச் சுந்தரேசபாதசேகரபாண்டியன், அலை வீசும் நீர் சூழ்ந்த மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுக்கு மெய் யன்பு பூண்டவனுகி, கொலைத்தொழில் மிக்க வேலினுல் கொடுங்கோலையுடைய குறுநில மன்னரென்னுங் களைகளைக் களைந்து, பரந்த இடத்தையுடைய உல கில் வசிக்கும் உயிர்களாகிய பெரிய பயிரை வளர்த்துவருங்காலையில்.

(வி - ம்) சுந்தரேசபாதசேகரனென்னுந் தன் பெயர்க்குப் பொருந்த மின்றுணுதலின் "சுந்தரேசபாதசேகரனுந் தென்னன் கூடலடிகளுக்கன்பனுகி" என்றார். (உ)

பத்துமான் றடந்தேர் நூறு பணைக்கையமா நூற்றுப் பத்துத்
தத்துமா னயுத மள்ளர் தானையின் வளவே யீட்டி
இத்துணைக் கேற்ப நல்கி யெஞ்சிய பொருள்க ளெல்லாஞ்
சித்திரு வான கூடற் சிவனுக்கே செலுத்த லானுன்.

(இ - ள்) குதிரை பூட்டிய தேர் பத்து; பணைபோன்ற துதிக்கையை யுடைய யானைகள் நூறு; தாண்டிச் செல்லுங் குதிரைகள் ஆயிரம்; காலாட்கள் பதினுயிரம்; இவ்வளவாகவே சேனைகளைச் சேகரித்து இவ்வளவிற்குப் பொருந்தப் பொருளுதவி, சேடமான எல்லாப் பொருளையும் அறிவே திரு வுருவமான மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருப்பணிக்கே செலவிட்டு வருவானுயினன்.

(வி - ம்) சதுரங்கசேனைகள் அரசனைக் காத்துநிற்கவும், அரசன் வரு வதை யுணர்த்த அறிகுறிக்குமேயன்றி, வெற்றி கொடுக்க அல்ல ஆதலின் இவ்வாறு செய்தனனென்க. (ஙி)

கண்டிகை மகுட மாதிக் கலனிரை குயின்றுந் திங்கள்
மண்டல மிடறுஞ் சென்னிக் கோபுர மாட மாதி
எண்டிசை யிருள்கால் சீப்ப வெரிமணி யிழைத்து வேய்ந்துந்
திண்டிறு லுடையா னின்ன திருப்பணி பிறவுஞ் செய்தான்.

(இ - ள்) கண்டிகை கிரீட முதலிய ஆபரணபந்திகளைச் செய்தும், சந்திர மண்டலத்தை யிடறியோங்கிய சிகரத்தையுடைய கோபுரமும் திருமாளிகையு முதலியனவற்றை எண்டிசையிலுமுள்ள இருளை (ஒளியாகிய) காலாற் சீத்துக் கொடுக்க, நெருப்புப்போல ஒளிவீசும் மாணிக்கமிழைத்து அலங்கரித்தும், வன்

மையுடைய சுந்தரேசபாதசேகரபாண்டியன் இவைபோன்ற திருப்பணிகளையும் பிறவற்றையுஞ் செய்து வந்தனன்.

(வி - ம்) பிற என்றது நித்தநைமித்திக முதலியவற்றையென்க. (சு)

கல்லுமா றகன்ற மார்பன் கருவியின் சிறுமை நோக்கி
மல்லுமா றுத திண்டோள் வளவர்கோ னெருவன் காலிற்
செல்லுமா யிரம்ப ரிக்கோர் சேவக னென்போன் றூணை
வெல்லுடா றெண்ணி வஞ்சி வேய்ந்துகொண் டெழுந்து போந்தான்.

(இ - ள்) மலைகளும் (திண்மையாலும் விசாலத்தாலும்) மாறுபட்டகன்ற மார்பையுடைய சுந்தரேசபாதசேகர பாண்டியனுடைய சேனையின் சிறுமையை நோக்கி, மல் யுத்தத்தில் ஈடுகாத திண்ணிய தோளையுடைய சோழனெருவன் காற்றுப்போலச் செல்லும் ஆயிரம் குதிரை வீரர்களுக்கு ஒரு குதிரை வீர னென்று சொல்லப்படுவான். அவனே யப்பாண்டியனை வெல்லும் வகை கருதி வஞ்சிமாலையைச் சூடிப் போர்மேற் கொண்டெழுந்து சென்றனன்.

(வி - ம்) வஞ்சிமாலை பகைவர்மேற் செல்வதற்கோர் அதிகுறி. இதனை, "வட்கார்மேற் செல்லுதல் வஞ்சியாம்" என்பதனாலறிக. (எ)

பல்வகைக் கருவி யீட்டப் படையொடும் பரவை சீறிச்
செல்வது போலக் கன்னித் தீம்புன லுடு நோக்கி
மல்வரை யாத தோளான் வரவறிந் தெழுந்து மேருக்
கல்வரி சிலையான் முன்போய்க் கைதவன் முழங்கு கூறும்.

(இ - ள்) பலவிதப்பட்ட ஆயுதங்களைத் தாங்கிய சேனைத்தொகுதியோடு, சமுத்திரமானது கொதித்து வருவதுபோல, இனிய நீர்சூழ்ந்த பாண்டிநாட்டை எதிர் நோக்கி, அளவிடப்படாத மற்போர் பொருந்திய தோளையுடைய சோழ னது வருகையை யறிந்து, பாண்டியன் (அண்ணன்று சிங்காதனத்தை விட்டு) எழுந்து, மேருமலையாகிய கட்டமைந்த வில்லைத் தாங்கிய சோமசுந்தரக் கட வுள்முன் சென்று பணிந்து (பின்வருமாறு) கூறுகின்றான்.

(வி - ம்) கருவிப்படை என்பதனை இருபெயரொட்டுப் பண்புத் தொகை யெனக் கொண்டு, கருவியாகிய படை யெனப் பொருளுரைப்பினும் பொருந்தும். (அ)

பொன்னது வணைய வேணிப் புனிதவிப் பூமி நேமி
உன்னது வலத்தி னுலே யுருட்டுமென் வலத்தை நோக்கான்
தன்னது வலத்தி னுலென் றூணையின் சிறுமை நோக்கி
என்னது தேயங் கொள்வா னெண்ணினன் போலு மன்னோ.

(இ - ள்) பொன்போலுஞ் சடாமுடியையுடைய சுந்தரேசப் பெருமானே! இப்பூமியில் உமது திருவருள்வலத்தினுல் ஆக்கினைசக்காத்தைச் செலுத்தும் எனது வன்மையைச் சிறிதும் நோக்காமல், தன் பெருஞ்சேனையின் வன்மை

யால் என் சேனையின் சிறுமையைப் பார்த்து, (சோழன்) எனது காட்டைக் கைக்கொள்ளக் கருதினவன் போலும்.

(வி - ம்) பொன்னது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (கூ)

காவிரி நாடன் சேனைக் கடலிடை யெரிபோன் மூண்டு
மேவின னென்று கூறி மீனவன் வேண்ட வானிற்
பூவிரி வாணன் நீயே புனையநாம் பொருது மென்னு
நாவிரி யாத மாற்ற நாயகன் கூறக் கேட்டான்.

(இ - ள்) (இவ்வாறு கருதிய) சோழன் தனது சேனையாகிய கடலிடத் தெழுந்த வடவாமுகாக்கினிபோலக் கோபமூண்டு வந்தானென்று சொல்லிப் பாண்டியன் குறையிரக்க, மலர்கள் விகசித்த வெற்றிமாலையை நீயே சூட நாம் தூணையாக வந்து போர்புரிவோமென்று சோமசுந்தரக் கடவுள் ஆகாயத்தில் அசரீரியாய்க் கூறியருள, (சுந்தரேச பாதசேகர பாண்டியன்) கேட்டனன்.

(வி - ம்) இவன், போர்வந்த விடத்துச் சிவகடாக்ஷத்தாலேயே ஜயிக்க வேண்டுமன்றிச் சேனையால் ஒன்றுமில்லை யென வுறுதியாகக் கொண்டவனுதலின், பெருமான் அவ்வாறே தூணைநிற்போமென அசரீரியாகக் கூறினனெனக் கொள்க. (கo)

எல்லியங் கமலச் செவ்வி யெனமுக மலர்ந்து நாதன்
அல்லியங் கமலச் செந்தா ளகந்தழீஇப் புறம்பு போக்கு
பல்லியந் துவைப்பத் தானைப் பரவையுட் பரிமா வூர்ந்து
கொல்லியம் பொருப்பன் சேனைக் கடலிதிர் குறுகி னானே.

(இ - ள்) விடியற்காலத்தில் (விகசித்த) தாமரையின் அழகுபோல முக மலர்ச்சி யுற்றுச் சோமசுந்தரக் கடவுளுடைய அழகிய தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளைத் தன் மனதிற்கொண்டு வெளியே வந்து பல வாத்தியங் களு மொலிக்க, தனது சேனைப் பரப்பின் நடுவிற் சூழ்தரையை நடத்தி, கொல்லி மலையையுடைய சோழனது சேனைசமுத்திரத்தி னெதிரே (போருக்கு) வந்தனன்.

(வி - ம்) அம் இரண்டுஞ் சாரியைகள். (கக)

பண்ணுத விசைவண் டார்க்கும் பசுந்தொடைச் செழியன் றூனை
எண்ணுத லிலவாஞ் சென்னி யிரும்படைக் கடனே ராரூய்
நண்ணுத லெனப்போய்ப் பொன்னி நாடவன் றமர்கட் கெல்லாங்
கண்ணுத லருளா லங்கோர் கடலெனத் தோன்றிற் றம்ம.

(இ - ள்) பண்ணுடைமைந்த இசையை வண்டுகள் பாடும் பசிய வேப்ப மலர் மாலை யணிந்த பாண்டியனுடைய சேனையானது, கணக்கில்லாததாகிய சோழனுடைய பெரிய சேனையாகிய கடலுக்கு நேரே ஆறு ஒன்று செல்லுதல் போலச் சென்று சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் சோழனுடைய சேனை களுக்கெல்லாம் அவ்விடத்தில் ஒரு பெருங்கடல் வந்ததுபோலத் தோன்றியது.

கடலென வருமா வூர்ந்து கைதவன் சேனை முன்போய்
அடலணி மேருக் கோட்டி யாலவாய் நெடுநாண் பூட்டி
மடல்விழ் துழாய்க்கோ ளுட்டி வாயிரி புரத்தி லூட்டி
மிடலணி கூடற் கோமான் வேடுரு வாகி நின்றான்.

(இ - ள்) வலிமை மிக்க மகமேருவை (வில்லாக) வளைத்து, விஷம்பொருந்திய வாயையுடைய (வாசுகியாகிய) நெடிய நாணினை யேற்றிட்டு, இதழ்விரிந்த துளவமாலை யணிந்த (திருமாலாகிய) அம்பினை யேற்றிட்டு, (அந்த அம்பின்) வாயிலுள்ள அக்கினியைத் திரிபுரத்திற் கொளுவி வெற்றி பூண்ட மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள், வேடுவத் திருவுருவங் கொண்டு கடல் போல (விரைந்து) வரும் குதிரையைச் செலுத்தி, பாண்டியன் சேனையின் முன்னணியிற் சென்று நின்றருளி.

இது முதல் நான்கு பாடல்கள் குளகம். (கஉ)

கங்குல்வாய்த் திங்கள் போலக் காதணி தந்தத் தோடுங்
கங்குல்வாய் மூளைத்த மீன்போற் கதிர்முத்த வடமுங் குஞ்சிக்
கங்குல்வாய்ச் சிலைபோல் வெட்சிக் கண்ணிசூழ் கலாபச் சூட்டுங்
கங்குல்வாய் கிழிக்குந் தந்தக் கடகமு மின்னுக் கால.

(இ - ள்) இரவில் நிலவிய சந்திரன்போல விளங்குங் காதிலணிந்த தந்தத் தாலாகியதோடும், இராப்போதில் மூளைத்த நட்சத்திரத்தைப்போல விளங்கும் முத்து மாலையும், சிகையாகிய இரவில் (எழுந்த) இந்திரதனுசுபோல வெட்சி மாலை சூழ்ந்த மயிலிறகணிந்த உச்சிக் கொண்டையும், இருட்போதைக் கிழித்து விளங்கும் மின்னல்போலத் தந்தத்தாலாகிய கடகமும் ஒளிவீச. (கச)

அண்டத்தா ரமரர் காம மன்றுதொட் டடையத் தோற்று
கண்டத்தா னிருளே யெங்குங் கலந்தெனக் கறுத்த மேனி
கொண்டத்தா ரார்ந் நற்கோர் கூற்றெனக் கொல்வே லேந்திச்
சண்டத்தீ யென்ன நின்றான் காவிரித் தலைவன் காண.

(இ - ள்) ஆகாயத்தில் வசிக்கும் தேவர்கள் அமரர் என்னும் பெயரை (விடமுண்டருளிய) அக்காலமுதலடையத் தோற்றிய ஸ்ரீகண்டத்தில் நிறைந்த விடவிருளே எவ்விடத்தும் கலந்தாற் போலக் கறுத்த திருமேனியைக் கொண்டு, அந்த ஆத்திமாலையணிந்த சோழனுக்கு ஒரு யமனைப் போலக் கொல்லும் வேற்படை தாங்கி வடவைத்தீப் போல நின்றருளினார். (அதனை) சோழன் கண்டு.

சீறியா யிரம்ப ரிக்கோர் சேவகன் வந்தே னென்னுக்
கூறினை னெதிர்த்தான் வெள்ளிக் குன்றவன் பத்து நூறு
மாறிலாப் பரிக்கு மட்டோர் வயவனீ யன்றே வெண்ணில்
ஈறிலாப் பரிக்கு மொற்றைச் சேவகன் யானே யென்றான்.

(இ - ள்) கோபித்து ஆயிரங் குதிரைகட்கு ஒரு சேவகன் வந்தேனென்று சொல்லிச் சோழனெதிர்த்தான். வெள்ளிமலையையுடைய சிவபெருமானுர்,

நீ பகைமையில்லாத ஆயிரங் குதிரைகளுக்கு மட்டும் ஒரு வீரனல்லவா, கணக் கிடில் முடிவில்லாத குதிரைகளுக்கும் நானே ஒரு சேவகனென்று கூறினர்.

(வி - ம்) இது நெடுமொழி வஞ்சித்துறை என்பர்.

நீயோ ஆயிரங் குதிரைகட்கு வீரனென்று மகிழ்ந்தாய்; நான் எண்ணில் லாப் புரவிகட்கு வீரனென்று சிவபெருமான் கூறினர் என்பது. (கசு)

என்றசொல் லிடியே றென்ன இருசெவி துளைப்பக் கேட்டு
நின்றவ னெதிரே மின்னு நீட்டிச்சென் மேகம் போலச்
சென்றுவேல் வலந்தி ரித்துச் செயிர்த்தன னதிர்த்துச் சீற
வன்றிற னூற்றுப் பத்து வயப்பரிக் கொருவ னஞ்சா.

(இ - ள்) வேடுவ உருவாய்வந்த சிவபெருமான் கூறியசொல் இடி யேற்றினுலியைப் போல, தன் இருசெவிகளுந் துளைபடக் கேட்டு நின்ற சோழனெதிரே மின்னலீசிச் செல்லும் மேகம்போலச் சென்று, வேலை வலப்பாற்றிரித்துக் கோபித்து மாறுபட்டுச்சீற, வன்மையையும் வெற்றியையு முடைய ஆயிரங் குதிரைகளுக்கொருவனுகிய சோழன் அஞ்சி.

இதுமுத லிரண்டுபாடல்கள் குளகம். (கஎ)

யாமினி யிந்த வேலா லிறப்பதற் கைய மில்லை
யாமெனை வகன்றுன் மாவோ டாயிரம் பரிக்கோர் மள்ளன்
காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் கங்குற் சோதி
மாமக னதுகண் டோடும் வளவனைத் துரந்து சென்றுன்.

(இ - ள்) ஆயிரங் குதிரைகளுக் கொருவீரனுகிய சோழன் இனி யாம் இந்த வேற்படையால் மரிப்பதற்குச் சந்தேகமில்லையாமென்று புறங்கொடுத் தோடினுன். மன்மதனை யெரித்த வேடுவருக்கொண்டருளிய சிவபெருமான் மறைந்தருளினர். சந்திரமாபிற்றென்றிய சுந்தரசேர பாதசேகர பாண்டியன் பார்த்துப் புறங்காட்டியோடும் அச்சோழனைத் துரத்திப்போயினன்.

(வி - ம்) கங்குற் சோதி - இரவில் ஒளிகொடுக்குஞ் சந்திரன்.

பாண்டியன்பக்கம் வெற்றி யுண்டாயினமையின் சிவபெருமான் மறைந் தருளினர் ஈனக் கொள்க. (கஅ)

துரந்திடு மளவி லோடுஞ் சோழனுந் திரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணி பாகங் கரந்தவே டுவனைக் காணுன்
வருந்துய ரச்சந் தீர்ந்தான் மதுரையி னளவும் பற்றிப்
புரந்தரற் புறங்கண் டானைப் புறங்கண்டு முடுக்கிப் போனுன்.

(இ - ள்) பாண்டியன் துரத்துங்காலத்தில் (புறங்காட்டி) ஓடுகின்ற சோழ னுந் திரும்பிப் பார்த்து, கரிய பரந்த கண்களையுடைய உமாதேவி பாகத்தை மறைத்து வந்தருளிய வேட்டுவ மூர்த்தியைக் காணுமல் வந்த துன்பமும் பயமு நீங்கி மதுரையினெல்லை வரையில்பற்றி, இந்திரனைப் புறங்கண்ட பாண்டி யனை முதுகுகண்டு விரைந்து துரத்திப் போயினன். (கசு)

காலொன்று மூடுக்கப் பட்ட கனலொன்று நடந்தா லொத்து
வேலொன்று தடக்கை நேரி வேந்தனுன் மூடுக்குஞ் சோடுஞ்
சேலொன்று கொடிய ஞன்றன் செழுநகர் விரைந்து செல்வான்
மாலொன்று களிற்றி ஞங்கோர் மதுமலர்க் கிடங்கில் வீழ்ந்தான்.

(இ - ள்) காற்முன்றிஞல் விரைந்து மூட்டப்பட்ட செருப்பொன்று விரைந்து நடந்தாலொத்து வேலேயேந்திய கெடியகையையுடைய சோழனுல் தூரத்தப்பட்டுப் புறங்காட்டியோடும் மீனக்கொடியையுடைய பாண்டியன் - தனது வரமமைந்த மதுரை நகருக்கு விரைந்து செல்கிறவன்-மதமயக்கத்தை யுடைய யானை வீழ்ந்ததுபோல அத்திருநகரிலுள்ள ஒப்பில்லாத தேன்சிந்தும் தாமரை மலரகழியில் வீழ்ந்தான். (20)

மீனவன் மதுரை மூதூர் மேற்றிசைக் கிடங்கில் வீழ
மானவெம் புரவி யோடும் வளவனும் வீழ்ந்தான் கூடற்
கோனவ னூருளால் வாழினூர் குரைகடல் கடையத் தோன்றும்
ஆனையி னெழுந்தான் றென்னன் கோழிவேந் தாழ்ந்து போனுன்.

(இ - ள்) பாண்டியன் மதுரையென்னுந் தொன்றுதொட்டுள்ள திருநகரத்தின் மேற்றிசையிலுள்ள அகழியில்வீழ, மானத்தையுடைய கொடிய குதிரையோடும் சோழனும் அந்த அகழியில் வீழ்ந்தான். அம்மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் தேவர்கள் ஒலிக்குங் கடலைக் கடையத் தோன்றிய வெள்ளையானையைப் போலப் பாண்டியனெழுந் தனன். உறையூர்க்காசனுகிய சோழன் அந்த அகழியி லாழ்ந்திறந்தான்.

(வி - ம்) இச் செய்யுளில், வளவனும் வீழ்ந்தானென்றது வீராவேச மூற்றபொழுது உயிர்க்கிறுதி நோக்காமையும், தென்னனெழுந்தான் கோழி வேந் தாழ்ந்தான் என்பன பாண்டியனுக்கு வெற்றி கைகூட்ட வேண்டியது பெருமான் கடனை யென்பதும் புலப்படுத்தின.

மானம் தன்னிலையிற் முழாது கிற்றலும் தாழ்வு வந்தவிடத்து உயிர் விடுதலும் அறிஞர் கொள்கை. (21)

வேறு

பிலத்தள வாழ்ந்த கடிமலர்க் கிடங்கிற் பெருந்தகை யவிந்த வன் றுகில்பூண், கலத்தரும் பேழை படைபரி மான்றேர் கரியெ லாங் கவர்ந்துதண் பொருனைத், தலத்தவன் றங்க ணுயக ரணியத் தக்கதூ சணிகல னல்கி, நலத்தகை யவர்பே ரருட்கடற் கன்பு நதி யெனப் பெருகிவீற் றிருந்தான்.

(இ - ள்) பாதலத்தினளவு ஆழ்ந்துள்ள வாசமிக்க தாமரை யகழியில் வீழ்ந்தெழுந்த தண்ணிய தாமிரபர்ணி நதிசூழ்ந்த நாட்டையுடைய சுந்தரேச பாதசேகர பாண்டியன், ஆழ்ந்திறந்த சோழனுடைய ஆடையும், பூணும், ஆபரணங்கள் வைத்த அருவிலப்பெட்டியும், சேனையும், குதிரையும், தேரும் யானையுமாகிய இவற்றையெல்லாம் கைக்கொண்டு, தங்களிறைவரணியத்தக்க ஆடையாபரணங்களைக்கொடுத்து, அவ்விறைவரது பெரிய திருவருளென்னுங் கடலினுக்குத் தான் கொண்ட அன்பு நதியாக உவட்டெடுக்க நிகரின்றி யிருந்தான்.

(வி - ம்) பெருகி - செய்வெனச்சத் திரிபு. (22)

மூப்பத்தெட்டாவது

உலவாக்கோட்டை யருளிய படலம்

மின்ப னிக்கதிர் வேணி வானவன் மீன வன்றனை மானவேல்
முன்ப னிக்கவ லங்கி ரித்துமு டுக்கி நேரிய டுக்கலான்,
பின்ப னிக்கம லத்த டத்திற விட்ட வாறிது பெருமைசால்
அன்ப னுக்குல வாத கோட்டைய ளித்த வாறுகி ளத்துவாம்.

(இ - ள்) மின்னல்போல ஒளிவீசுஞ் சடா முடியையுடைய சோமசுந்தரக் கடவுள் பாண்டியன் பொருட்டு மானவடிக்க வேற்படையை, நடுக்கமுற எதிரே வலப்பால் திரித்துத் தூதத்தி, கேரிமலையையுடைய சோழன் பிஞ்பு குளிர்ந்த தாமரைகருங்கிய அகழியில் வீழ்ந்திறக்கச் செய்தருளிய திருவிளையாடலிது (ஆகும்.) பெருமை மிக்க தமது அன்பராகிய அடியார்க்குநல்லார்க்கு உலவாக் கோட்டை யருளிய திருவிளையாடலை(யாம் இனி)ச் சொல்லுவோம்.

(வி - ம்) மீனவன்றனை இதில் ஐ உருபுமயக்கம் ; மீனவன்றனக்கு என்பது பொருள். (க)

வேறு

போடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனித வேற்றுக்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கிணை யான கூடற்
படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழ வோரு ணல்லான்
அடியார்க்கு னல்லா னறத்திற்கும் புகழ்க்கு நல்லான்.

(இ - ள்) திருநீறு கிறைந்த திருமேனியையுடைய புனிதராகிய தரும விடைக்கொடியையுடைய சோமசுந்தரக்கடவுளுக்கு (உறையுளாகிய) வேதசிரமான உபநிடதத்தை யொத்த மதுரையென்னும் நிலவுலகைத் தன்வசமாக்குங் கீர்த்திநிறைந்த அப்பதியில் வசிக்கும் வேளாளர்குலத்திற் றோன்றிய நல்லொழுக்க முடையவராய் அடியார்க்கு நல்லார் என்னும் (காரணப்) பெயர் பூண்டவர். புண்ணியத்திற்கும் அதன் கீர்த்திக்கும் நல்லவராயுள்ளார். (உ)

அனைய னறத்திற் கருள்போன்றவ ளான்ற கற்பின்
மனையாள் மரபின் வழுவாத தரும சீலை
எனையாரு நன்கு மதிக்க விருக்கு நீராள்
தனையாள் பதிக்குக் கதிக்குத் தனிச்சார்பு போல்வாள்.

(இ - ள்) அவ்வடியார்க்கு நல்லாரது புண்ணியத்தை வளர்க்க ஓருள் போன்ற சிறந்த கற்பினையுடைய மனைவி குலவொழுக்கந் தவறாத தருமசீலை யென்பவள். தங்குலத்தவர் யாவரும் நன்கு மதிக்க நடக்குந் தன்மையுடையவள். தன்னைக் கொண்ட கணவனுக்கு(அடையவேண்டிய)மோக்ஷத்திற்கு ஒப்பில்லாத பற்றுக்கோடு போன்றவள். (ங)

பல்லே ருழவின் முழுதில்பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லே ருழவன் கடன்கொண்டு மிகுந்த வெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வ மியற்றி யேந்த
அல்லேறு கண்ட னடியாரை யருத்து நீரான்.

(இ - ள்) பல வர்களால் உழுதொழில் பூண்டு பயன்களடையும் அடியார்க்கு நல்லார், வில்லாகிய ஏரினுற் பகைப்புலத்தையுழும் அரசன் கொள்ளும் வரியைக்கொடுத்து, மிகுந்த எல்லாப்பொருள்களையும் இல்லறமாகிய ஏரால் (விருந்தின் புலத்தைத்) திருத்தும் தருமதேவி அமுதாகிய செல்வத்தைப் பாகஞ் செய்து தேந்த,ஸ்ரீகண்டத்தையுடைய சிவனடியாரை யுண்பிக்கும் தன்மையுடையவர்.

தோகைமாண்ட தொண்டர் சுவையாறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறு படுமுண்டி மறுத்த ருந்த
நகைமாண்ட வன்பின் றலையாயவ னல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணற்கேணியிற் பல்கு நாளின்.

(இ - ள்) எண்ணிறந்த அடியார்கள் அறுசுவை பொருந்திய நான்கு வகையாய் மாட்சிமைப்பட்ட (தம்முள்) மாறுதலையுடைய உணவுகளுள் (சூடில்லாததை) மறுத்துச் (சூடுள்ளதை) உண்ணு, மகிழ்ச்சிமாறுத அன்பிற்கிறந்த அடியார்க்கு நல்லவர் ஊட்டுந்தோறும், எவர்க்கும் மனமிசைந்த செல்வமானது மணற்கேணி நீர் (சுரத்தல்)போல ஓங்கிவளருங்காலத்தில்.

(வி - ம்) அறுசுவை—கார்ப்பு - துவர்ப்பு - இனிப்பு - உவர்ப்பு - புளிப்பு - கைப்பு என்பன. நான்கு உண்டி-உண்ணல் தின்னல் நக்கல் பருகல் என்பன.

இந்நீர ஞாய வளங்குன்றி னு மின்மை கூரத்
தன்னீர்மை குன்று னெனுந்தன்மை பிறர்க்குத் தோற்ற
நன்னீர் வயலின் விளைவஞ்கி நலிவு செய்ய
மின்னீர வேணி மதுரேசர் விலக்கி ஞரே.

(இ - ள்) இத்தன்மையான பெருஞ்செல்வங் குறைந்து வறுமையடையினும் தனது பக்திக்திறஞ் சிறிதுங் குறையாதென்னுந் தன்மையைப் பிறர்க்கு விளக்க, மின்னல்போலுஞ் சடையையுடைய சோமசுந்தரக்கடவுள் தெள்ளிய நீர் நிறைந்த வயலின் விளைவு குறைந்து வருத்த, அவ்விளைவை விலக்கியருளுவர். (சு)

குன்று விருத்திக் கடன்கொண்டுகொண் டன்பர் பூசை
நன்று நடத்தத் தொடுத்தான்கடன் முனுங் கிட்டா
தொன்றுலுங் கொண்ட விரதத்துக் குறுதி யின்றி
நின்று னுடம்பை யொறுக்கின்ற நியமம் பூண்டான்.

(இ - ள்) குறைவுபடாத வட்டிக்குக் கடன்வாங்கி வாங்கி, அடியவர் பூசையை நன்றுசு நடத்தத்தொடங்கி, கடனுங்கிடையாமையால் தாம்கொண்ட விரதத்திற்கு மற்றொன்றினுலும் பற்றுக்கோடில்லாமல் வாளாநின்றனர். (அடிய

ருண்ட பிறகே உண்ணு நியமமுடையாதலின்) தமதுடம்பை வருத்துகின்ற நியமத்தைப் பூண்டவர்.

(வி - ம்) 'குன்றுத் விருத்திக்கடன்' என்றமையால் காடோறும் அதிகப்படுவதாகிய வட்டிக்கு வாங்குங் கடன் எனக்கொள்க. (எ)

கோடுப்பா ரவரே விளைவுங்கடன் கோளு மாற்றித்
தடுப்பா ரெனின்மற் றதையாவர் தடுக்க வல்லார்
அடுப்பார் வீழுமங் களைவாரடி யார்க்கு நல்லீண்
மடுப்பா னியமக் தடைபட்டு வருந்து கின்றான்.

(இ - ள்) தம்மை யடைந்தவர் துன்பங்களை நீக்கும் பெருமானார் (அடியார்க்கு வேண்டியபடி) கொடுப்பவருமாவர், அவரே விளைவையும் கடன் கொள்ளலையும் மாற்றித் தடுப்பாராயின், அதனைத் தடுக்கவல்லவர் யார்? (ஒருவருமிலர்.) அடியவர்க்கு நல்லுணவூட்டும் அடியார்க்கு நல்லார் (தமது) ஏற்பாடு தடைப்பட்டு வருந்துவாராயினர். (அ)

விண்ணு று சூடும் விடையான் றமர்க் கூட்டி யன்றி
உண்ணு தவன்றன் னுயிர்க்குத்துணை யாய கற்பிற்
பண்ணுர் மொழிதன் னெடும்பட்டினி விட்டு நெஞ்சம்
புண்ணுக வாகம் பசித்தீயிற் புழுக்கப் பட்டான்.

(இ - ள்) சிவபெருமானுடைய அடியவர்க்கு அமுது செய்வித்தல்லாமல் உண்ணுத அடியார்க்கு நல்லார் தமது உயிர்த் துணையாகிய கற்பினையுடைய இசைபோன்ற சொல்லமைந்த மனைவியோடும் பட்டினியிருந்து தமது மனம் புண்ணையழுங்க, சரீரம் பசியாகிய தீயாற் சுட வருத்தப்பட்டனர்.

(வி - ம்) விண்ணுறு சூடும் விடையான் - ஆகாய கங்கையணிந்த (சடையையுடைய) வரும், இடபவாகன முடையவருமாகிய சிவபெருமான். (கூ)

இறக்கும் முடம்பாற் பெறும்பேறினி யாவ தென்னு
அறக்குன் றணையான் மனையோடு மடைந்திச் செய்தி
நிறக்கின்ற செம்பொற் சிலையார்க்கு நிகழ்த்தி யாவி
துறக்கின் றதுவே துணிவென்று துணிந்து போனான்.

(இ - ள்) தருமமலைபோன்ற அடியார்க்கு நல்லார், இறக்கும் இவ்வுடலால் இனி நாமடையும் பயன் யாது? என்றுகருதித் தமது மனைவியோடுஞ்சென்று, விளங்குகின்ற மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமானுக்கு இச்செய்தியைக்கூறி, உயிரை விடுவதே தக்கதென்று மனந் துணிந்து சென்றார். (கo)

ஐயன் றிருமுன்ன ரடைந்தடி தாழ்ந்து வாளினர்
உய்யும் படிநஞ் சமுதுண்ட வொருவ னுன்றன்
மெய்யன்பர் பூசைக் கிடையூறு விளைய வென்றன்
செய்யும் புலமும் விளைவின்றிச் சிதைந்த வென்னு.

(இ - ள்) சோமசுந்தரக்கடவுள் திருச்சன்னிதியை யடைந்து திருவடியைப் பணிந்து, தேவர்களுய்ய விஷபானஞ் செய்தருளிய பெருமானே! உனது

உண்மையடியவர் பூசைக்குத் தடையுண்டாக எனது நன்செய்யும் புன்செய்யும் விளைவு சுருங்கிக் கெட்டன. (கக)

விடனல்கு சூலப் படையாய்கடன் வேறு காணேன்
கடனல்க வல்லார் தமைக்காட்டுதி காட்டி லாயேல்
மடனல்கு மிந்த வுடம்பின்சுமை மாற்று வேனென்
றுடனல்கு கற்புக் குரியாளொடும் வேண்டு மெல்லை.

(இ - ள்) விஷஞ்சொரியுஞ் சூலாயுதமேந்திய பெருமானே! கடன் கொடுக்கத்தக்கவர் ஒருவரையுங் காணேன். (நீ யாவும் வல்லவனுதலின்) கடன் கொடுக்கத்தக்கவரிவரெனக் காட்டுவாய்: (அவ்வாறு) காட்டாவிட்டால், அறியாமையிலிக்க இந்த வுடற்பாரத்தை யொறுப்பேனென்று, தன்னுடனின்ற கற்புடைய மனைவியாகிய தருமசீலையோடு வேண்டுங்காலத்தில். (கஉ)

பஞ்சாதி வேதப் பொருள்சொன்ன பரமன் வாக்கொன்
றஞ்சாதி வேளாண் டலைவாவு னகத்தி லின்றூர்
செஞ்சாதி யாய செழுவாலரிக் கோட்டை யுய்த்தேம்
எஞ்சா திருக்கு மெடுக்குந்தொறு மென்று மாதோ.

(இ - ள்) பஞ்சாதியையுடைய வேதத்திற்குப் பொருள்கூறிய சோம சுந்தரக் கடவுளது அசரீரிவாக்கொன்று, வேளாளர் குலத்திற்றோன்றிய தலைவனே! உன்வீட்டிலிப்பொழுது ஒப்பிலாத செல்வெல்லாலாகிய முனைமுரியாத களங்கமற்ற அரிசிக்கோட்டையொன்று செலுத்தினேம். (நீ சிறிதும்) அஞ்சாதே. எடுக்குந்தோறும் அது எப்பொழுதுங் குறையாதிருக்கும்.

• (வி - ம்) பஞ்சாதி - சத்தை கூட்டி வேதாத்தியயனஞ் செய்வோர் நிறுத்துதற் கிடமாக வைத்த ஐம்பது பதங்கொண்ட ஒரு முடிபு. பஞ்சாது என்பதன் மரூஉ. (கங)

நீகாளும் பூசித் ததில்வேண்டிய கொண்டு நித்தம்
ஆளுத வன்பர்க் கமுதூட்டி யெவர்க்கு மன்ன
தாளுதி காளு தருமங்களுஞ் செய்தி வீடு
மேளு ளளிக்கின் றனமென்று விசும்பிற் கூற.

(இ - ள்) நீ தினந்தோறும் அருச்சித்து அவ்வரிசிக் கோட்டையில் (தினமும்) வேண்டுமளவு அரிசிகொண்டு, தினமும் சிவநேசம் மிக்க அடியார்கட்கு அமுதருத்தி எல்லோருக்கும் அன்னதான முதலிய பல தருமங்களையுஞ் செய்வாய். இறுதியிற் சிவகதி தந்தருளுகின்றோம் என்று ஆகாயத்திற் கூறியருள.

இதுமுத லிரண்டு செய்யுள்கள் குளகம். (கச)

கேட்டின்ப மெய்திக் களிவிம்மித ளுகி வேதப்
பாட்டின் பயனைப் பணிந்தில்ல மடைந்து பண்டை
ஈட்டுந் தவப்பே றெனக்கண்டனன் தொண்டர்க் கெந்தை
கூட்டுங் கதிபோ லுலவாமற் கொடுத்த கோட்டை.

(இ - ள்) (அவ்வசரீரியைக்) கேள்வியுற்று இன்பமடைந்து மேலெழும் வியப்புடையவராகி வேதவாக்கியப் பொருளாகிய சுத்தசைவப் பெருமானைப்

பணிந்து (தமது) வீட்டையடைந்து முன்புதேடிய தவப்பயன்போல, அடியவர்க்கு எமது பெருமானர் அடைவிக்கும் பேரின்பம் (குறையாது என்றும் ஒருபடித்தாயிருப்பது) போல, அழியாதிருக்கக் கொடுத்தருளிய அரிசிக்கோட்டையைப் பார்த்தருளினர்.

(வி - ம்) வேதப்பாட்டின் பயன் = சிவபெருமான். வேதம் பல கடவுளரையும் பதியெனப் பல காரணங்களாற் கூறினும் சிவபெருமானே பதியாவர். இது அரசன் தன் ஆக்ஞையைப் பலர்மூலமாகவுஞ் செலுத்துவதுபோலவென் றறியத்தக்கது. (கடு)

வானுறு சூடி தருகோட்டையை வைகல் தோறும்
பூநாறு சாந்தம் புகையொண்சுடர் கொண்ட ருச்சித்
தானுத செவ்வி யடிசிற்கு மதற்கு வேண்டும்
நானு கருவி விலைக்கும்மது நல்க வாங்கா.

(இ - ள்) கங்காதாராகிய சோமசுந்தரக்கடவுள் தந்தருளிய உலவாக்கோட்டையைத் தினந்தோறும் புஷ்பம் பரிமளகந்தம் தூபம் ஒள்ளிய தீபம் இவற்றுல் அருச்சித்து, பதம் நீங்காத அன்னத்திற்கும், அதற்கு வேண்டிய (கறிமுதலிய) பலவித உபகரணங்களைப்பெறும் விலைப்பொருள்கட்கும், அக்கோட்டையானது கொடுக்கக் கைக்கொண்டு. (கசு)

மின்னுர் சடையான் றமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்னுடர் தெய்வம் விருந்தொக்கல் செறிந்து கட்டோர்
முன்னு மெவர்க்கும் முகில்போல் வரையாம னல்கி
எந்நாளு நோயின் றளகாதிப னென்ன வாழ்ந்தான்.

(இ - ள்) மின்னல்போன்ற சடையையுடைய சிவபெருமானது அடியவர் (ஆகம) ஆராய்ச்சி யுடையவர் வேதியர் பிதிர்க்கள் தெய்வம் விருந்தினர் சுற்றத்தார் ஒன்றுபட்டுச் சிநேகித்தவர் முதலிய எல்லோருக்கும், மேகம்போல (கைம்மாறு கருதாது) அளவின்றிக் கொடுத்து எப்பொழுதும் வறுமையின்றிக் குபேரனைப்போல வாழ்ந்திருந்தனர். (கஎ)

வேறு

அன்பன் னடியார்க் கினியா னனிகா ளளந்தல்கித்
தன்பன் னியொடு மயலார் சுற்றந் தமரோடும்
பின்பந் நிலையே யிமவான் மகளைப் பிரியாத
இன்பன் னுருவாய்ச் சிவமா நகர்சென் றிறைகொண்டான்.

(இ - ள்) அன்புபொருந்திய அடியார்க்கு நல்லவர் அநேககால மிருந்து ஆயுள் முடிந்து தமது மனைவியோடும், அயலாரும் சுற்றத்தாரும் நிளஞ்ருமாகிய இவர்களோடும், பின்பு இவ்வுலகினின்றபடியே, பர்வதராஜ புத்திரியாகிய மகாதேவியைப் பிரிந்தறியாத சிவபெருமானது சாரூப்பியம் பெற்றுச் சிவபுரத்திற் சென்று வாழ்ந்தனர்.

(வி - ம்) அயலார் என்பதற்கு எவல்செய்வோரெனச் சிலர் பொருள்படுமென்பர். (கஅ)

ஆ திருவிருத்தம் - ககஉடு.

மூப்பத்தொன்பதாவது

மாமனுகவந்து வழக்குரைத்த படலம்

தரமகா நிதழி யார்தந் தமர்க்கன்பன் வறுமைப் பட்டோன்
ஆமகா ளுலவாக் கோட்டை யருளிய முறையீ ரையன்
தேமனுண் மூல்லைத் தீந்தார்ச் சிறுதகை வணிகற் காக
மாமனும் படிவங் கொண்டு வழக்குரை வண்ணஞ் சொல்வாம்.

(இ - ள்) மணங்கமழுங் கொன்றைமாலையணிந்த பெருமானுர் தமது அடியார்க்கடியவர் வறுமைப்பட்ட அக்காளில் உலவாக்கோட்டையருளிய திருவிளையாடலினது. தேனுனது மிலேபெற்ற அன்றலர்ந்த இனியமுல்லைமலர்மாலையணிந்த பிள்ளைப் பருவத்தையுடைய ஒரு வணிகனுக்காக அப்பெருமானுர், அவன் மாமனுக வடிவங்கொண்டு வழக்குப்பேசி (அவன் தாயாதிகளை வென்றருளிய) திருவிளையாடலை (யாம் இனி)க் கூறுவாம். (க)

கன்னிநான் மாடக் கூடற் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோ னன்னுன் றனபதி யென்னும் பேரான்
மன்னினு னணையான் கற்பின் மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினுண் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவி னன்னுள்.

(இ - ள்) எக்காலு மழியாத நான்மாடக் கூடலாகிய மதுரையென்னுங் காவல் பூண்ட திருநகரில் வசிக்கும் வணிகரில், குபேரன்போன்ற தனபதியென்னும் பெயரையுடைய ஒருவணிகனிருந்தான். அவனது கற்பினையுடையமனைவி சுசீலையென்னும் பெயருடையவள். (அழகில்) அன்றலர்ந்த பொற்றுமரைத் தவிசில் வசிக்கும் புண்ணியவடிவாகிய திருமகள் போன்றவள்.

(வி - ரை) 'கன்னி நான்மாடக்கூடல்' என்பதற்கு, கன்னியென்பது மதுரை நாட்டின் ஒரு பெயராதலின் கன்னிநாடாகிய நான்மாடக்கூடலென இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக வுரைப்பினும் பொருந்தும். தனபதி என்ற பெயராலும் பெருஞ்செல்வ முடைமையாலும் இவன் குபேரனே யென்னப் பட்டனன். (உ)

எனவிவர் தமக்கு மைந்தற் பேறின்றி யிரங்கு நாளில்
தனபதி மருகன் றன்னைத் தகவுசால் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பி னல்க மனைவியுந் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலிவுற வளர்த்துக் கொண்டா [ள்.

(இ - ள்) என்று சொல்லப்பட்ட இவர்களுக்குப் புத்திரப்பேறின்றி வருந் அங்காலத்தில், தனபதியென்னும் வணிகன் தனது (தங்கையின் புத்திரனை) மருகனை நல்லொழுக்க மிக்க புத்திரனைக்கொண்டு மனமகிழ்ந்து சிறப்போடு கொடுக்க, மனைவியுங் கைகூப்பி வாங்கி,(பிள்ளைப்பருவத்திற்கேற்ப) அணியும் ஆபரணங்களை யணிந்து பாதுகாத்து நாளுக்குநாள் ஓங்க வளர்த்து வந்தனள்.

(வி - ம்) 'மனமகிழ் சிறப்பால்' என்பதற்கு ஸ்வீகாரஞ் செய்து எனப் பொருள் படும். (ங)

தனபதி மகப்பே றற்ரு னுயினும் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை மயக்கினுல் வருந்தி யீன்ற
தனயனை மகவாத் தந்த தங்கைமேற் றீராப் பூசல் [வாள்.
வினைவினைத் தொழுக வோர்நா ளினையளும் வெகுண்டு சொல்

(இ - ள்) தனபதி யென்னும் வணிகன் புத்திரப்பேறில்லாதவனுயினும், நீங்காத விருப்பமுடைய தனது மனைக்கிழத்தியின்மேல்வைத்த ஆசையினுல், தான்வருந்திப்பெற்ற புத்திரனைத் தனக்குப் புத்திரனுகத்தந்த தங்கையின்மேல் நீங்காத போர்செய்துவர, ஒருநாள் அவன் தங்கையுங் கோபித்து, (தன் தமயனை நோக்கி) கூறுகின்ருள். (ச)

பெருமித முனக்கேன் பிள்ளைப் பேறற்ற பாவி நீயென்
அருமைகன் மகனு லன்ரே இருமையு மடைவா யென்னப்
பெரிதுநா ணடைந்து மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவே னென்னுத் தனபதி தவமேற் செல்வான்.

(இ - ள்) (அண்ணு!) உனக்கு வந்த இறுமாப்பென்ன? நீயோ புத்திரப் பேறில்லாத பாவி. என்னுடைய பெறுதற்கரிய நல்ல புத்திரனுலல்லவா இக போகத்தையும் பரபோகத்தையும் அடையப் போகிருய்? என்றுகூற, தனபதி மிகவும் நாணங் கூர்ந்து, இனிவரும் பிறப்பிற்காயினும் புத்திரபாக்கியத்தைத் தரும் தவஞ் செய்வேனென்று தவவினை மேற்கொண்டு போயினன். (ரி)

தன்பெருஞ் செல்வ மெல்லா மருமகன் றனக்கே யாக்கி
அன்புகொள் மனைவி யோடு மருந்தவ நெறியிற் சென்ரூன்
பின்பவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினுல் வழக்குப் பேசி வௌவினுர் தாய மாக்கள்.

(இ - ள்) தன்னுடைய பெரும்பாக்கிய முழுதும் தனது மருகனுக்கே யுரியதாக்கி, அன்புபொருந்திய மனைவியோடும் அரிய தவநெறிமேற்கொண்டு சென்றனன்: பிறகு (தவமேற்கொண்டு சென்ற) அவனது வருகை நீட்டிக்க, மருகன் (தனபதியிடத்துப்) பெற்ற பெருஞ் செல்வமுழுவதும், (தனபதியின்) ஞாதிகள் நீதிகோடி வழக்குப்பேசிக் வாங்கு கொண்டார்கள். (சு)

வினைநில னடிமை பைம்பூண் வெறுக்கை நன்பசுக்க ளேனை
வளனுமாற் றவர்கைக் கொள்ள வன்சிறை யிழந்த புட்போல்
தளர்வுறு மகனுந் தாயுஞ் சார்பிலாத் தம்ம னோர்க்கோர்
கனைகண லிருக்குங் கூடற் கடவுளே சரண மென்ரு.

(இ - ள்) வினைநிலங்களும், அடிமையாட்களும், பசிய ஆபரணங்களும், நிலையமும், நல்ல பசுக்களும், பிற பொருள்களுமாகிய இவற்றைப் பகைவர்கள் கவர, வலிய சிறகிழந்த பறவையைப் போல வருந்தும் தாயும் பிள்ளையும்

ஒரு பற்றுக்கோடு மில்லாத தம்போலியர்க்கு ஒருபற்றுக்கோடாயுள்ள மதுரா புரியிலுள்ள சோமசுந்தரக் கடவுளே அடைக்கலமென்றருளினார். (எ)

இது முதலிரண்டு பாடல்கள் குளகம்.

வந்துவா னகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயிற்
சுந்தர காதன் பாதத் துணைதொழு திறைஞ்சி யார்க்குந்
தந்தையுந் தாயு மாருந் தம்பிரா னீரே யெங்கட்கு
கெந்தையும் யாயு மென்னு விரங்கிநின் றினைய சொல்வாள்.

(இ - ள்) ஆகாயத்தில் வயிற்றைக் கிழித்துவந்த இரத்தின சிகரத்தை யுடைய இந்திர விமானமாகிய திருக்கோயிலி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளுடைய உபய பாதங்களையும் பணிந்து, எவ்வுயிர்க்கும் அம்மையப்பராகிய தலைவர் நீரே ; ஆதலால், (நீரே) அவ்வுயிர்களுளொன்றாகிய எங்களுக்கு தந்தையுந் தாயுமென்று கூறி வருந்தி, இத்தன்மையான குறைகளைச் சொல்கின்றனர். (அ)

என்மகன் றன்னை யுமந்த னின்மையா லெவருங் காணத்
தன்மக னுகக் கொண்டு தகுதியா லன்றே காணி
பொன்மணி பிறவு நல்கிப் போயினு னெம்மு னிப்பால்"
வன்மையாற் றூயத் தார்க ளனையெலாம் விளவிக் கொண்டார்.

(இ - ள்) என்மூத்தோன் என் புதல்வனைத் தனக்குப் புத்திரனின்மை யால் யாவருமறியத் தனக்குப் புத்திரனுகக் கொண்டு, தகுதியுடன் அப்பொ றுப்பே காணி பொன் வீடு முதலிய பிறவும் கொடுத்தத் (தவமேற் கொண்டு) சென்றனன் ; பிறகு (அவன்) ஞாதிகள் வலியவழக்குப்பேசி அப்பொருள்களை யெல்லாங் கவர்ந்து கொண்டார்கள். (கூ)

ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேறுங்
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணே னைய
அருத்திசா லறவோர் தேறு மருட்பெருங் கடலே யெங்கும்
இருத்திநீ யறியாய் கொல்லோ என்றுபார் படிய வீழ்ந்தாள்.

(இ - ள்) ஐயனே ! நானே ஒருத்தி ! துணையில்லாத எனக்கு இப்பிள்ளை யோ ஏகபுத்திரன் ; இப்புத்திரனும் பருத்தறியுங் கருத்தறியாத சிறுவன். (உன்னையன்றிவேறு) ஆதரவுமறியேன். அன்புமிக்க அடியவர் தெளிந் தண்ணரும் பெரிய கிருபாசமுத்திரமே ! எவ்விடத்திலும் நீ நிறைந்திருக்கிறாய் ; (இவற்றை) நீ யறியமாட்டாயோ ? என்று நிலமிசைப் படிய (சாஷ்டாங்கமாக) வீழ்ந்து பணிந்தாள். (கூ)

மாறுகொள் வழக்குத் தீர்க்க வல்லவ ரருளி னூலே
சீறுகொள் வடிவேற் கண்ணுள் சிறுதுயி லடைந்தாள் மெய்யில்
ஊறுகொள் காண மைந்து மூற்றறி கனவிற் கங்கை
யாறுகொள் சடையார் வேதச் செல்வரா யடுத்துச் சொல்வார்.

(இ - ள்) மாறுபட்ட கொடுவழக்கைத் தீர்க்கவல்ல சிவபெருமான் திரு வுபயால், கோபங்கொண்ட வடித்த வேல்போன்ற கண்களையுடையவள் திறு துயில் செய்தனள். தேகத்தில் பரிசமுதலிய ஐம்புலன்களையும் (அறிவு வாயி லாக) மனஞ்சென்றறியும் சொப்பனத்தில், கங்காநதியை யணிந்த சடையை யுடைய சோமசுந்தரக் கடவுள் அந்தணத திருவுருவேற்றுச் சொல்கின்றனர்.

புலர்ந்தபின் முயுத்தோரைப் புரவல னுணை யாற்றுல்
வலந்தரு மன்றத் தேற்றி மறித்தனை யிருத்தி யாம்போந்
தலந்தரு மறிவான் மூத்தோ ரனைவரு பிசைய வந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி யென்றார்.

(இ - ள்) விடிந்த பிறகு, தனபதி ஞாதிகளை அரசனுக்கினை வழியால் மறித்து, வெற்றிபொருந்திய சபையிலேற்றி யிருப்பாய். அமைந்த அறிவில் முதிர்ந்த யாவருமிசையும்படி நாம் வந்து அந்தக் கொடுவழக்கினை யொழித்து (உன் பொருளை) வாங்கித்தருகின்றோம், போவாயென்று கூறியருளினர்.

(வி - ம்) 'சலந்தருவழக்கு' என்றது தம்புதல்வருள் ஒருவனை ஸ்வீகாரங் கொள்ளாது தங்கைபுத்திரனைக்கொண்டனனென ஞாதிகட்கெழுந்த கோபத்தா லுண்டான வழக்கு. (கஉ)

வேரியங் குவளை யுண்கண் விழித்தனள் வியந்து கெட்டேன்
ஆருமில் லார்க்குத் தெய்வந் துணையென்ப தறிந்தே னென்னுக்
காரிருங் கயலுண் கண்ணுள் கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீரிளங் குமர னெடுத் தெரிவைதன் மனையிற் சென்றாள்.

(இ - ள்) தனபதி தங்கை தேனெழுகும் அழகிய குவளையை வென்ற கண்களை விழித்து அதிசயித்து, நான்கெட்டேன்! யாருமில்லார்க்குத் தெய்வமே துணை யென்னும் உலக வழக்கை இன்று அறிந்தேனென்று, கரிய பெரிய கயற்கெண்டையை வென்ற கண்களையுடைய மீனாட்சிதேவி கர்யகாரிய சோமசுந்தரக் கடவுளைத் தொழுது வணங்கி, அழகிய தனது புத்திரனெடுத் தன் வீட்டிற்குச் சென்றனள்.

(வி - ம்) கெட்டேன் - வியப்பிடைச் சொல். (கஊ)

சென்றவள் கங்கு லெல்லை தெரிந்தபி னெழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்துவந் தணைசெய் தம்பொற்
குன்றவ னுரைத்த வாற்றுற் கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவ ரிருக்கை யெய்தி விளம்புவாள் பலருங் கேட்ப.

(இ - ள்) சென்ற தனபதி தங்கை விடிந்தபின் னெழுந்து வெள்ளியம் பலத்தையுடைய பெருமானுரது திருக்கோயிலின் வாயிலையடைந்து பணிந்து, அழகிய மகமேருவை (வில்லாக) உடைய சிவபெருமான் கூறியருளிய வகை யால், கொடுமை மிக்க வழக்கினைப்பூட்டி வென்ற ஞாதிகளுடைய வீடுகளை யடைந்து, பலருமறியக் கூறுகின்றாள். (கச)

அட்டில்வாய் நெருப்பி டேலோ ரடியிடே லறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன் பலருங் கேட்க
இட்டன னரச ஞணை யறத்தவி சேறி யான்மூர்
ஒட்டிய படிகேட் டெங்க ளூரிப்பொருள் தந்து போமின்.

(இ - ள்) சமைக்குமிடத்தில் நீமூட்டுதலொழிக. (புறஞ்செல்ல) ஓடியெடுத்து வைத்தலொழிக. தருமவழியாலன்றிக் கொடுவழக்காலெங்களை வென்று (நீங்கள்) போக உடன்படேன். பலருமறிய அரசன்மேல் ஆணையிட்டேன். நியாயஸ்தானத்திற்கு வந்து நியாயாதிபதிகள் ஆராய்ந்துரைத்த முடிபைக் கேட்டு எங்களுக்குரிய பொருளைக்கொடுத்துச் செல்லுங்கள். (சடு)

என்றனள் மறித்த லோடு மிழுக்குரை யாடி வைது
வன்றிறல் வலியார் தள்ளி யடித்தனர்மைந்த னோடுஞ்
சென்றனள் முறையோ வென்னுத் திருந்தறத் தவசி னோர்முன்
கின்றுரை யாடி னள்கேட் டறிந்தனர் நீதி நூலோர்.

(இ - ள்) என்று கூறி மறிக்க, வலிமையிக்க ஞாதிகள் தவறுவார்த்தைகளாலைத்துத் திட்டி (பிடர்பிடித்து) த்தள்ளி, புத்திரனோடும் (அவளை) அடித்தார்கள். திருந்திய நியாயபீடத்திலுள்ளோர் முன்சென்று இதுமுறையோ வென்று (கூவிக்) கூறினள். நீதிநூல்களை யுணர்ந்த நியாயாதிபதிகள் அதனைக் கேட்டறிந்தார்கள். (கசு)

அறத்தவி சிருப்போ ரேவ லாடவ ரோடும் போந்து
மறித்தவைக் களத்திற் கூட்டி வந்தனள் வந்த வெல்லை
அறக்கொடி பாகர் வெள்ளி யம்பல வாணர் தாமத்
திறத்தன பதியே யென்னத் திருவுருக் கொண்டு செல்வார்.

(இ - ள்) நியாயபீடத்தி லிருப்பவர் ஏவிய வேவுகாரோடுஞ் சென்று, (ஞாதிகளை) மறித்து, நியாயஸ்தலத்திற்கு உடன் கொண்டு சென்று அடைந்த காலையில், உமாதேவியாரை வாமபாகத்திலுடைய சோமசுந்தரக்கடவுள் (தவமேற் கொண்டு சென்ற) தனபதியைப் போலவே திருவுருவங்கொண்டருளி வருவாராயினர்.

(வி - ம்) ' அறக்கொடி ' என்றது உமாதேவியார் முப்பத்திரண்டறங்களையுங் காஞ்சிப்பதியில் வளர்த்தவராதலின். (கஎ)

வேறு

பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்க்
தெரிகதிர் கவிழ்ப்பவா ளெறிக்கு மங்கதம்
அருவரைத் தோள்கிடந் திமைப்ப வாகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே.

(இ - ள்) பெருவிலையுடைய குண்டலமானது பிடரில் வரிசைப்பட பரவிவிளங்குங் கிரணத்தை (ஒருபாற்) பரப்பவும், கிரணத்தை வீசும் வாகு

வலயம் பெரிய மலைபோன்ற தோளிற்கிடந்து (ஒருபால்) விளங்கவும், மார்பின் மேல் கிறந்தங்கிய முத்துக் கண்டிகை விளங்கிப் பின்புறத்து (ஒருபால்) விளங்கவும்.

இதுமுதல் மூன்று பாடல்கள் ஒரு தொடர். (கஅ)

மூரலளி புறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்க ணேறெனப்
பெருமித நடைகொடு நடக்கும் பெற்றியார்.

(இ - ள்) இசைபாடும் வண்டுகள் புறவிதழில் நெருங்கி மொய்க்க, செந் தாமரை சிறிதுமலர்ந்ததைப் போல இரத்தினங்களிழைத்த மோதிரத்தை யணிந்த கைகளை வீசி, ஒப்பில்லாத கோபம் பரந்த கண்களையுடைய இடபம் போலப் பெருமித நடையோடு நடக்கும் தன்மையுடையவராகி. (கக)

வாடிய முளரிபோல் மாறிட் டாரிடத்
தூடியு மலர்ந்தபோ தொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்து முட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை.

(இ - ள்) முகங் கூம்பிய தாமரை மலரைப் போலப் பகைகொண்ட ஞாயிகளிடத்துச் சிறுதளிகொண் டெழுந்த வாட்டமும், (அன்று) அலர்ந்த தாமரைப் பூப்போல (தாம் சுவிகாரங் கொண்ட) புத்திரன்மே லெழுந்தடர்ந்த தண்ணிய திருவாசயப்பும் தம்மனதிற் கிடந்தபடி தோன்றிய திருமுகத்தை யுடையவராய் நியாயசபைக்கு வரும் பெருமானர்.

(வி - ம்) ".அடித்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்-கடுத்தது காட்டு முகம் " என்றூற்போல, "உட்கிடைகூடிய முகத்தினர்" என்றார். (உ0)

வேறு

அரசனிங் கில்லை கொல்லோ ஆன்றவ ரில்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோதில் நூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானு மில்லைகொ லுறுதி யான
தருமமெங் கொளித்த தேகொ லென்றறத் தவிசிற் சார்வார்.

(இ - ள்) இக்காட்டிலே அரசனில்லையோ ? அறிவான் மிக்க முனியோ ரில்லையோ ? ஒலிக்கும் வீரக்கழலணிந்த அரசன் செங்கோல் கொடுங்கோலா யிற்றே ? குற்றமில்லாத (வேதாகமாதி) நூல்கள் கூறும் தெய்வமும் இங்கில் லையோ? (மக்களுயிர்க்குப்) பெரும்பயனுள்ள அறக்கடவுள் எவ்விடத்தொளித் ததோ ? என்றுபலம்பி நியாயபீடத்திற் கெதிரே வந்தருளுகின்றார். (உக)

தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி விம்மித மெய்தி வெல்லும்

மனவலி யிழந்து பண்டு வழக்கலா வழக்கால் வென்ற
வினைகினைந் துள்ள மச்ச நாணினுல் விழுங்கப் பட்டார்.

(இ - ள்) தனபதிவணிகனது வருகையைக்கண்டு வஞ்சமுள்ள ஞாதிகள் வஞ்சனை பொருந்திய மனதையுடையவராய் அதிசயமுற்று (வழக்கினை) வெல்லக்கருதிய மனவன்மையிழந்து, முன்பு கொடுவழக்கால் (தனபதி தங்கையை) வென்ற கொடுந்தொழிலைக்கருதி, தமதுமனம் (அரசனறிவின் என்னவிளையுமோ? என்னும்) பயத்தாலும் நாணத்தினுலும் விழுங்கப்பட்டார்கள். (உ உ)

மாதுல ராகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தூதுல ராத கோதை தன்னெடுந் தழீஇத்தங் கண்ட
மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ரானீ ரன்றோ வையவெஞ் றழுது நைந்தார்.

(இ - ள்) மாமனுகத் திருவுருவங்கொண்டுவந்த சோமசுந்தரக்கடவுள் தமது மருகனே, தமக்குப் பின்னே வந்த மகாந்தம் வாய்ந்த கூந்தலையுடைய தங்கையொடு தழுவி, தமது திருக்கண்டத்தால் அழியாத சாமகீதத்தைப்பாடுவோர்போல வாய்திறந்து,நீங்கள் தரித்திரர்களானீர்கள். ஐயோவென்று புலம்பி வருந்தி அழுதனர்-

(வி - ம்) அந்தோ ஐய - இரக்கப்பொருள்தரும் இடைச் சொற்கள். (உக)

தடங்கையி னெடுங்க ணுளுங் குமரனும் வணிகர் தாளிற்
றடங்கணீ ராட்ட வீழ்ந்தார் தடக்கையா லெடுத்துப் புல்லி
மடங்கலே றனையார் தாமு மற்றவர் தமைத்தங் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக் குமரனே நேர்ந்து கைவார்.

(இ - ள்) உள்ளங்கைபோன்ற நெடிய கண்களையுடையி தனபதி தங்கையும் சுவிகார புத்திரனும், (வத்தருளிய) வணிகமூர்த்தியின் திருவடியைத்தமது பாத்த கண்ணீரால் அபிஷேகஞ் செய்ய (அவர் திருவடியில்) வீழ்ந்தார்கள். (அவர்களைத் தமது) நெடிய திருக்கரங்களா லெடுத்துத்தழுவி, சிங்கவேறு போன்ற வணிகமூர்த்தியும் அவர்களைத் தமது கண்ணீராகிய பெருங்கடற் பெருக்கில் அழுத்தி, அச்சுவிகார புத்திரனைப்பார்த்து மனம் வருந்துவாராயினர்.

(வி - ம்) தாளில் - இரண்டனுருபிற்கு எழனுருபுவந்தது. தாளை என்று பொருள். தடங்கண் என்ற விடத்துச் சிறப்புவிதியால் இனவெழுத்தாயது என்றும், தடக்கை என்ற விடத்துப் பொதுவிதியால் வல்லெழுத்து மிக்கது என்றுங் கொள்க. (உச)

ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
பின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்ன.

(இ - ள்) பஞ்சாயுதப் பணியை மார்பிற்காணேன். சிறுசிலம்பினைக் காலிற் காணேன். தோளிற்பூண்ட வாகுவலயத்தைக் காணேண். முகத்திற்பொங்கிய சுட்டியைக் காணேன். விளக்கம் பொருந்திய குண்டலங்களைக் (காதிற்) காணேன். அப்பா! (இவ்வாறு) உன்னுடைய வெற்றுடலைக் கண்டேன். என்ன வீலை பெறுமென்று குழந்தைக்குப் பூட்டிய (சிறிய) ஆபரணங்களையுங் கொள்ளை கொண்டார்களென்று.

இதுமுதல் ஈரான்கு பாடல்கள் குளகம்.

(வி - ம்) ஐம்படை திருமாலின் பஞ்சாயுதங்களின் வடிவமாகச்செய்யும் ஒருவகை யாபரணம். இது குழந்தைப்பருவத் தணியத்தக்கது. (உடு)

அணைவரு மிரங்க வாய்விட் டழுதவ ரிளையாள் தன்னைத்
தணையணைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்
திணையன்பின் னென்முன் வேறொன் றெண்ணன்மி னெண்ணு வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மி னென்னு.

(இ - ள்) கண்டோர் யாவரு மனமிரங்க வாய்திறந்தழுத வணிகமூர்த்திகள் இளையவளையுஞ் சுவிகார புத்திரனையுங் கண்ணீர்துடைத்துத் தமது கெடிய திருக்கரத்தால் அவர்கள் முதுகைத் தடவி வருத்தப்படாதீர்கள்; என் முன்னே வேறொன்றும் நினையாதீர்கள்; வஞ்சக்கூற்று கொடுக் தொழிலையுடைய எனது ஞாதிகள் கொடு வழக்குச் சோர்ந்து விடுவதைப் பாருங்கள் என்று கூறி. (உசு)

நட்பிடை வஞ்சஞ் செய்து நம்பினுர்க் கூன்மா றூட்டத்
துட்படக் கவர்ந்து மேற்றோர்க் கிம்மியு முதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியுஞ் சிலர்போ லீட்டப்
பட்டதோ அறத்தா றீட்டு நம்பொருள் படுமோ வென்னு.

(இ - ள்) சிநேகித்தவரிடத்தில் வஞ்சனைசெய்தும், நம்பியடைந்தவர்கட்கு மயக்கங்கலந்த உணவூட்டித் தமது வசப்பட (அவர்கள்) பொருளைக் கவர்ந்தும், யாசித்தவர்கட்கு இம்மியுங் கொடாதவராகியும், வட்டியில் வரம்பில்லாது பேசி வாங்கியும், சிலர்போலத் தேடப்பட்ட பொருளோ? தரும வழியிற் றேடிய நமது பொருள் கெடுமோ? என்று கூறி. (உள)

மங்கல மாட மோங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி மாணிக்கந் தேற்றி விற்றும்
எங்குல வணிக ரேறை யெம்மனோர் வழக்கை யிற்தப்
புங்கவ ரிடனைத் தீர்த்துத் தருகெனப் புலம்பி யார்த்தார்.

(இ - ள்) மங்கலகரமாகிய மாடங்கள் உயர்ந்த மதுரைப்பதியிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை நோக்கித் தமது வெந்த கரத்தைச் சிரமேற் குவித்து, மாணிக்கத்தி னிலக்கணத்தைத் தெளிவித்து விற்றருளிய எமது வணிக மாபிற்கு ஓர் ஆண்டுங்கமே! எம்போலிகள் வழக்கை (நியாயசபையிலுள்ள) இத்தப் பெரியோரிடத்துத் தீர்த்துத்தரக்கடவாயென்று புலம்பிக் கதறினர். (உஅ)

ஆவலித் தழுத கள்வர் வஞ்சரை வெருண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல் கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலாகா விட்டெம் வழக்கையு நமமாய் வந்த
மேவலர் வழக்குந் தூக்கித் தெரிகென விதந்து சொன்னர்.

(இ - ள்) வாய்த்திறந்தழுத பொய்வேடமுடைய பெருமானுர், தமது ஞாதிகளைக் கோபித்துப் பார்த்துப் பாண்டியனுடைய செங்கோலாகிய நுண்ணியநூல்கொண்டு கட்டிய தருமமாகிய துலாக்கோலில் உங்கள் நாவைத் துலாகாவாகச் சேர்த்து எமது வழக்கென்னும் பொருளையும் எம்முடையவ ராய்வந்த பகைவர்கள் வழக்கென்னும் பொருளையுமிட்டுச் சீர்தூக்கி அளந்தறி யக்கடவீரென்று எடுத்துக் கூறினர். (உக)

நரைமூது புலியன் னஞ்சொற் கேட்டலு நடுங்கிச் சான்றோர்
இருவர்சொல் வழக்கு மேற்கொண் டடுவதித் திரண்டு நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள் வலியரின் வேறு சொல்வார்.

(இ - ள்) நரைத்த இழப்புலியைப் போன்ற தனபதி வணிகனது சொல் லைப் பெரியோர் கேட்டலும் நடுங்கி, இருவர் சொல்லும் வழக்கையுங் கேட்டுப் பின்பு அனுவதித்து, இரண்டிலும் (உள்ள குணங்குற்றங்களைப்) பார்த்துச் சோதிக்கு மிடத்து, ஞாதிகள் வழக்கு இழுக்கெனக் கூறக்கேட்டு, அந்த ஞாதி கள் பயந்து (புறத்தில்) அஞ்சாதவர்போல வேறு கூறுகின்றார்கள்.

(வி - ம்) அநுவாதம் - முன் விளக்கப்பட்டுள்ளது. (கூ0)

தூவலருஞ் சிறப்பி னுன்ற தனபதி வணிக ரல்லர்
இவரென அவையங் கேட்ப இருகையும் புடைத்து நக்குக்
கவளமா னுரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டங் காணிமற் றனைத்துங் கூறும்.

(இ - ள்) இங்கு நிற்பவர் கெடுதலில்லாத சிறப்பமைந்த தனபதி வணிக ரல்லரென்று கூற, யானையின் தோலையுரித்துப் போர்த்த சோமசுந்தரக் கடவு ளாகிய வணிகர்பெருமான் தமதிருகரங்களையுங் கொட்டிச் சிரித்து, நியாய சபையிலுள்ளோர் கேட்கும்படி, அவரவருடைய குடிப்பேரும், பட்டமும் காணியுமாகிய யாவையு முறையாகக் கூறியருளுகின்றார்.

(வி - ம்) தாம் தனபதி வணிகரல்லவென ஞாதிகள் கூறினமையின், சபையார் தமது சொல்லை நம்பும்படி அவரவர் குடிப்பேர் - பட்டம் - காணி முதலியவற்றைக் கூறினர் என்க. (கூக)

தந்தைதாய் மாமன் மாமி தாயத்தா ரிவரை யீன்றூர்
மைந்தர்க ளுடன்பி றந்தார் மனைவியர் இளைஞர் மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை யாதிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினுல் மொழிந்தான் முன்னோன்.

(இ - ள்) பிதாவும், மாதாவும், மாமனும், மாமியும், ஞாதிகளும், அவரைப் பெற்றோரும், புதல்வரும், சகோதரரும், மனைவியரும், சுற்றத்தாரும் அளவில்லாத குணங்களும், தொழில்களும் முதலிய அடையாளங்களே முன்னைய முறைப்படி சிறிதுந் தவறாமல் (வணிகராக வந்த) முதல்வர் முறையாகக் கூறியருளினர். (கூஉ)

அனையது கேட்டி ஆன்றோ ரனைவரு நோக்கி யந்தத்
தனபதி வணிகர் தாமே யிவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம் வழக்கிழுக் கடைந்த தீது
நனைவழி வேம்பன் றேறிற் றண்டிக்கு நம்மை யென்ன.

(இ - ள்) அவ்வார்த்தையைக் கேட்ட பெரியோர் எல்லோரும் ஆராய்ந்து, இவர் அத் தனபதி வணிகரே யென்று கூற, மனவன்மையுடைய தனபதி ஞாதிகள் தமது வழக்குக் குற்றமடைந்தது; தேனெழுகும் வேம்பமலர் மாலையணிந்த பாண்டியன் இதனை யறிந்தால் நம்மைத் தண்டிப்பானென்றஞ்சி.

(வி - ம்) நியாயசபையோர் பெருமானது அடையாள வார்த்தைகளால், அவரே தனபதி வணிகரென ஒப்புக்கொண்டமையாலும், தாம் முன் இழி வழக்கால் வென்றவராதலாலும், அரசன் செங்கோலுக்குத் தீமை விளைத்தோ மென்று பெருந்தண்டம் விதிப்பானென் றஞ்சினர் என்றார். (கூகூ)

இல்லினுக் கேகி மீள்வன் யானென் றுங்கு ளத்திற் கேகி
ஒல்லையில் வருவே னென்று மொவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளா ரனைவரும் வுங்கா றள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தன சொரிந்துப் போனார்.

(இ - ள்) யான் வீட்டிற்குப் போய் வருகிறேனென்றும், குளத்திற்குப் போய் விரைந்து வருவேனென்றும் (இவ்விதமாக) ஒவ்வொரு வார்த்தையுரைத்து, வலிய தூண்போன்ற தோளையுடைய (ஞாதிகள்) யாவரும், பெருங் காற்றனது அடித்துத் தள்ளச் சிதறிச் செல்லும் மேகம்போலக் கூட்டத்துள் (ஒவ்வொருவராய்ச்) சிதைந்து ஒளித்துச் சென்றார்கள். (கூச)

அனையவர் போக நின்ற அறனவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி யீந்தன ரீந்த வெல்லை
மனமொழி கடந்த நாய்கர் மறைந்துதங் கோயில் புக்கார்.

(இ - ள்) அந்த ஞாதிகள் (போக்குக் காட்டி) ஒழிந்துபோக, ஒழியாது நின்ற தருமத்தைக் கூறும் நியாயஸ்தலத்திலுள்ளவர்கள், தனபதி வணிகர் தாமுன்பு தந்த பொருள்கள் யாவும் தமது ஸ்வீகார புத்திரனுக்கே யுரியனவென்று (அவராற்) சாசன மெழுதி வாங்கிக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்த சமயத்தில் வணிகத் திருவுருவங் கொண்ட மனவாக்கிறந்த சோம சுந்தாக்கடவுள் உருவங் கரந்து தமது திருக்கோயிலு ளெழுந்தருளுவர்.

(வி - ம்) மனமொழி கடந்த நாய்கர் - பெருமான் காரண நிமித்தமாக வணிகவேடந் தரித்துவரினும் மனவாக்குகட்கு அதீதப்பட்டவரென்க. (நடு)

இம்மெனப் பலருங் காண மறைந்தவ ரிருந்தண் கூடற்
செம்மலென் றறிந்து நாய்கச் சிறுவனுக் குவகை தூங்க
விம்மித மடைந்து வேந்தன் வரிசையுள் வெறுப்ப நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில் புதுக்கினன் கனகங் கொண்டு.

(இ - ள்) இம்மென்னு மளவில் யாவருமறிய மறைந்தருளிய வணிகேசர் பெரிய தண்ணிய மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளே யென்று (நியாய சபையோரால்) தெரிந்து, சுந்தரேசபாதசேகர பாண்டியன் வியப்புற்று, வணிகச் சிறுவனுக்குக் களிப்பு மிக, வரிசைகள் மனம் வெறுப்பக் கொடுத்து, திருக்கரத்தில் மானேந்தியவரும் வணிகவடிவேற்று வந்தவருமாகிய சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலைப் பொன்னைப் புதுக்கினன்.

(வி - ம்) உவகை தூங்க, உள்வெறுப்ப என்பன மிகுதிப் பொருள்படக் கூறியவாம். (நகு)

வேறு

பூத நாயகன் பூரண சுந்தரப் புத்தேள்
பாத சேகரன் வரகுண பாண்டியன் புயத்தில்
ஓத நீருல கின்பொறை சுமக்கவைத் தும்பர்
நாதர் சேவடித் தாமரை நகைநிழ லடைந்தான்.

(இ - ள்) பஞ்சபூதங்கட் கிறைவராகி (அவற்றுள்ளும் புறம்பும்) நிறைந்த சுந்தரேசபாதசேகரபாண்டியன் கடல்சூழ்ந்த பூபாரத்தை வரகுணபாண்டியன் புயத்தில் ஏற்றி, தேவதாயகராகிய சிவபெருமானுடைய தாமரை மலர்போன்ற சிவந்த திருவடியின் பிரகாசிக்கின்ற நிழலின்கீழ்க் கலந்தனன்.

(வி - ம்) பூதநாயகன் என்றதற்குப் பூதகணங்கட் கிறைவரெனினுமமையும். மக்களுயிர்க்குக் கோடை வெப்பாற்றும் மாநிழல்போலப் பிறவி வெப்பாற்றுங் திருவடி நீழல் இருண்மய மற்றதென்பார் "சேவடித்தாமரை நகை நிழல்" என்றார். (நஎ)

ஆ திருவிருத்தம் - ககசுஉ

நாற்பதாவது

வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்

பண்கொண்ட வேதமுத லிடையீ றுநாடரிய பரன்மாம ணிகியொரு வணிகன், எண்கொண்ட காணிபொருள் கவர்ஞாதி மாதுலரை யெதி ரேறி வென்றபடி யிதுவாங், தண்கொண்ட நேமிவர குணதேவ னெய்துபழி தன்னைத் துடைத்தனைய மனவன், கண்கொண்டு காண வுயர் சிவலோக மதுரைதனில் வருவித்த காதையினி மொழிவாம்.

(இ - ள்) பண்ணுரை பொருந்திய வேதங்களால் ஆதிமத்தியாந்தங் காணு தற்கரிய சோமசுந்தரக்கடவுள் ஒரு சேட்டிச் சிறுவனது மாமனுகிய தனபதி வணிகர் வேடங்கொண்டு, (அவனது) அளவிடப்பட்ட நிலங்களையும் பொருள் யும் அபகரித்த தனபதி ஞாதிகளாகிய மாமன்மார்களை யெதிர்த்து, (நியாயஸ் தலம்) ஏறி வெற்றிகொண்ட திருவிளையாடல் இதுவாகும். தண்ணிய ஆக்கினு சக்கரத்தையுடைய வரகுணபாண்டியன் அடைந்த பிரமஹத்தியையொழித்து, அப்பாண்டியன் தனது கண்களாற் கண்டு தரிசிக்க (எல்லா வுலகங்களிலும்) உயர்ந்த சிவலோகத்தை மதுரையில் வருவித்துக் காட்டியருளிய திருவிளை யாடலை (யாம்) இனிக் கூறுவாம். (க)

இயமான னிக்கிரவி யெரிவானி லஞ்சலில மெறிகா லெனும் பகுதி யிருநான், மயமான சுந்தரனை மனம்வாய்மெய் யன்பினிறை வழிபா டடைந்தவர குணனுய்ச், சயவீரன் வென்றூவடி வினனீறில் வென்றிபெறு சதவேள்வி யிக்கிரனை நிகர்வோன், இயன்மேனி கொண்டுவளி யினிலேழ் பசும்புரவி யினன்றேரு வென்றவர குணனே.

(இ - ள்) ஆன்மாவும், சந்திரனும், சூரியனும், அக்கினியும், ஆகாயமும், நிலமும், நீலமும், எறிகின்ற காற்றுமென்னும் அஷ்டமூர்த்தமாகிய சோமசுந் தரக் கடவுளை, மனவாக்கு (காயங்)களோடு மெய்யன்பு நிறைந்த வழிபாடு பூண்ட காரணத்தினுல் சிரேஷ்டமான குணத்தையுடையவனுகி, (சாமுத்திரிக) இலக்கணமமைந்த தனது மேனியின் ஒளியால், பசிய ஏழு குதிரைகள் பூட்டிய தேரையுடைய சூரியனது ஒளியைவென்ற வரகுணதேவ பாண்டியன், தனது வடிவத்தால் வெற்றியமைந்த மன்மதனை வென்றவன். முடிவில்லாத வெற்றி பெற்ற நூறு யாகத்தால் தேவேந்திரனைப் போன்றவன்.

(வி - ம்) "இயமான * * * இருநான் மயமான" என்றது. சிவபெரு மான் அஷ்டமூர்த்தமாக விளங்குதலின். இதனை,

திருவாசகம்

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்

உலகே ழெனத்திசை பத்தெனத்தா ளெருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ''—என்பதனு ணுணர்க.

மறையாதி கலைபலவு மகமாதி பலவினையும் வழுவாது நிறுவுத லின் மலர்மேல், இறையாகி மலர்வனிதை பிறிவான திருமகளி ரிக போகம் விளையமுறை செயலாற், கறையாழி வளைகளணி கரனுகி யிகல்செய்பொறி கரணுகி பகைகளையு நெறியால், அறைவாய்மை யுரையின்முழு துணர்வாலெவ் வுயிருநிறை யரனுகி யுலகுமுறை செயுநாள்.

(இ - ள்) வேதமுதலிய நூல்கள் பலவற்றையும், யாகமுதலிய பல கருமங் களையும், வழுவாது நிலைபெறச் செய்தலால், தாமரை மலரில் வசிக்கும் பிரம தேவராகியும், தாமரையில் வாழுந் திருமகளின் கூரிய (அன்னலக்ஷ்மி முத லிய) திருமகளிரால், இகபோகம் (ஆகிய பயிர்) விளைய அரசு செலுத்துதலால் உதிரந் தோய்ந்த சக்கரத்தையுஞ் சங்கத்தையுமேந்திய திருக்கரங்களையுடைய திருமாலாகியும், (தம்மூட்) போர்புரியும் இந்திரியமும் அந்தக்காரணமுமாகிய பகைகளைக் களையும் நல்லொழுக்கத்தாலும் வேதநூற்பொருளா லடைந்த மூற் றுணர்ச்சியாலும் எல்லா வுயிர்களிலும் நிறைந்த அபர சிவமாகியும், உலகத்தை (மனுமுறைப்படி) அரசு செய்து வருங்காலத்தில்.

(வி - ம்) இச்செய்யுளும், இயமானனெண்ணுஞ் செய்யுளும் ஏது வுருவகவணி. (கூ)

வேட்டஞ்செய் காதலொரு நாட்டங்க ளெகினவ மேட்டெங்கு மாதடவி யெரியா, நாட்டஞ்செய் காயுழுவை நீட்டுங்கை யானைமுக நாட்டும்ப லேனிமிவை முதலா, ஓட்டஞ்செய் தேரிரவி கோட்டின்க ணேறியிரு ளூட்டந்தி மாலைவரு மளவாக், கோட்டஞ்செய் வார்சிலை யின் மாட்டம்பி னூறியுயிர் கூட்டுண்டு மாகரில் வருவான்.

(இ - ள்) ஒருகாள் வேட்டையாடும் விருப்பம் தனக்குண்டாக, காடாகிய மேட்டு நிலமுழுதுஞ் சென்று, மிருகங்களைத் தேடி, கோபாக்கினி பரக்குங் கண்களையுடைய கொலைத்தொழில் பொருந்திய புலியும், நீட்டிய துதிக்கையை யுடைய யானையும், முகத்தால் நிலத்தை யுழும் ஆண் பன்றியுமாகிய இம்மிரு கங்கள் முதலாக (மேற்றிசையாகச்) செல்லுந் தேரையுடைய சூரியன் அத்தமய கிரியிற் சென்று இருளைப் பரப்பும் அந்தி மாலைவரும் அளவாக, வளைத்த வில் லிற் பூட்டிய அம்புகளினுற் கொன்று உயிர்களைக் கொள்ளை கொண்டு பெரிய மதுரை நகரத்தை நோக்கி வருவானுயினன். (ச)

காலிற்க டும்புரவி மேலிற்க டிந்துவரு காலக்க டுந்தனிலொர் மறையோன், மாலுற் றயர்ந்துமுகம் வேர்வைக் குறுந்திவலை வாரக் கிடந்துவிழி துயில்வோன், மேலக் கடும்புரவி கால்வைப்ப அந்தண னும் வீவுற்ற விந்தனன தறியான், கோலிற்செ லும்பரியின் மீனத்த னுந்தனது கோயிற்பு குந்தனன வளவே.

(இ - ள்) காற்றுப்போல வேகமாய்ச் செல்லுங் குதிரைமேல் விரைவாய்ச் செல்லும்பொழுது, அக்காட்டில் ஒரு வேதியன் நித்திரை மயக்கங் கொண்டு சோர்ந்து முகத்தில் வியர்வாகிய சிறுதுளி சிந்தக்கிடந்து துயில்கின்றவன் மேல், அந்த வேகத்தையுடைய குதிரையானது தன் கால் வைத்துச் செல்ல, (அதனால்) அம்மறையவனும் அறிவழிந்திறந்தான். அதனை யறியாதவனாகி அம்புபோல விரைந்து செல்லுங் குதிரையோடு வரகுணபாண்டியனுந் தனது கோயிற்குச் சென்றனன். அச்சமயத்தில்.

(வி - ம்) அறியான் என்றது முற்றெச்சம். பயிலின் என்பதனிறுதியில் ஒடு உருபு தொக்குநின்றது. (இ)

வேறு

கனவட்டத் தடியிடறப் பொறிவிட்டுப் புலனையக் கரணத்துட் பொதியுயிர்விட் டவனுகந், தனைமயோக்கற் பனவெடுத் தனர்கிட்டிக் குரிசில்கடைத் தலையிட்டத் திறமொழியத் தமிழ்மாறன், இனைவற்றுப் பனவர்கையிற் கனகக்குப் பைகணிறைவித் தெமதிக்குற் றவனையெடுத் தெரிமாலே, புனைவித்தக் கடன்முடிவித் தனன்மற்றப் பழிபடரிற் புதையப்பற் றியதிடைவிட் டகலாதே.

(இ - ள்) குதிரையின் காலிடறுதலால் ஐம்புலன்களும் இந்திரியங்களிற் செல்லுதலொழிந்துகெட, (மனமுதலிய) அந்தக்கரணங்களிற் பொதிந்தவுயிரிழந்த வேதியனுடைய தேகத்தை (அவனது) உறவினராகிய வேதியரெடுத்து, பாண்டியனுடைய கடைவாயிலையடைந்து (அப்பிரேதத்தை) இட்டு, அந்தச் செய்தியைக் கூற, தமிழ்வளர்க்கும் பாண்டியன் (அதனைக்கேட்டு) வருத்தமெய்தி, அவ்வேதியர்கையிற் பொற்குவை நிறைவாகத்தந்து, யமபுரியடைந்த வேதியனையெடுத்துத் தகனகிரியை முற்றுவித்தான். (வரகுணபாண்டியன்) தன்பத்திலழுந்த அப்பிரமஹத்தி இடையறாது பற்றியது.

(வி - ம்) கனவட்டம் என்றது பாண்டியன் பட்டத்துக் குதிரையின் பெயர். (சு)

வேறு

பற்றிய பழிக்குத் தீர்வு பழமறைக் கிழவர் சொன்ன
பெற்றியி னீவே றுண்டி நதிக்கரை பெருநூற் கேள்வி
முற்றிய மறையோர்க் கீந்து மூவராந் தாரு வேந்தைச்
சுற்றியுந் தூர்வை கொய்து சுரபிகள் சுவைக்க வீந்தும்.

(இ - ள்) (வரகுணபாண்டியன் தன்னைப்) பற்றிய பிரமஹத்திக்குப் பிராயச்சித்தமாகத் தொன்றுதொட்டுள்ள வேதத்திற்குரிய அத்தணர்கூறிய தன்மையின்படி ஐவகைப்பட்டவுணவுகளைப் புண்ணியநதிதீரத்திலே, வேதநூற் கேள்வியிற்கைபோன வேதியருக்குக் கொடுத்தும், திரிமூர்த்திகளின் வடிவமாகிய அரசமரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்தும், அகம்புல்லை அறுத்துப் பசுக்கள் உண்ணக் கொடுத்தும்.

இதுமுதலிரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) அரசமரத்தின் முதற்பாகம் பிரமமூர்த்தமும், இடைப்பாகம் விஷ்ணுமூர்த்தமும், இறுதிப்பாகம் உருத்திரமூர்த்தமும் என்பராதலின் "மூவராந்தாருவேர்த்து" என்றார். (எ)

அகமரு டணத்தா லோம மாற்றியு மாணைத் தாவின்
சுகைமணிக் கோடு தோய்ந்த நவிர்புனல் குடித்துத் தான
வகைபல கொடுத்து நீங்கா வலியதா யிழுது பெய்த
புகையழ லெனமே லிட்டுப் புலப்பட வளைந்த தன்றே.

(இ - ள்) அகமருஷண மந்திரத்தினாலே ஹோமஞ்செய்தும், பஞ்சகவ்வியத்தையும் பசுவினது பிராகாசிக்கின்ற அழகியகொம்பு தோய்ந்த நீரையுங் குடித்தும், பலவகைப்பட்ட தானங்களைக் கொடுத்தும், நீங்காதவன்மையுடைய தாய், நெய்வார்த்து மூட்டிய புகையையுடைய நெருப்பானது மூண்டெழுதல் போல (கண்களுக்குப் புலப்பட்ட பிரமஹத்தி) எழுந்தோங்கி வளைந்தது.

(வி - ம்) அகமருஷணம்=பாவத்தைப்போக்குவது. கட்கம் என்னுமோர் மிருகம் புண்ணியமிருகமாதலாலும், கோவென்னும் பரியாயநாமமுடைய தாதலாலும் அதன் கொம்பால் முகந்த தீர்த்தமெனப் பொருள் கோடலு மமையும்.

பஞ்சகவ்வியங்களில், கோசலம் - செல்வமுண்டாக்கும். கோமயம் - நோயொழிக்கும். பால் - சத்திருராசஞ் செய்யும். தயிர் - புத்திரருண்டாக்கும். நெய் - யாவராலும் பூசிக்கச் செய்யும் என்பது தூன்முறை. (அ)

வேறு

ஏங்கும் பெருமூச் செறிஞ்ங்கை யெறியுங் குன்றின்
ஓங்குஞ் சிறுகு முடன்றூர்த்திடு முன்னும் பின்னும்
பாங்குந் தொடருஞ் சிரிக்கும்பகு வாயை மெல்லும்
நீங்குங் குறுகும் பழிதாவென கேர்ந்து பற்றும்.

(இ - ள்) ஏங்கும் ; பெருமூச்சுவிடும் ; கைகொட்டும் ; மலைபோலெழுக் தோங்கும் ; (அணுப்போலச்) சிறுகும் ; கோபித்து இறைச்சலிடும் ; முன்புறமும் பின்புறமும் நடுவிலும் (மாறிமாறித்) தொடர்ந்து நிற்கும் ; அட்டகாசஞ் செய்யும் ; (பழிக்குப்பழி வாங்குவேனென்று) தனது பிளந்தவாயினைமெல்லும் ; (சிறிது) நீங்கியிருக்கும் ; (மீண்டும்) சமீபிக்கும் ; (பழிக்குப்) பழிகொடுவென்று எதிர்த்து (வரகுணபாண்டியனைப்) பிடிக்கும். (கூ)

மாசுண்ட தெய்வ மணிபோற்பணி வாயிற் பட்ட
தேசுண்ட தீந்தண் மதிபோலொளி தேம்பி வண்டு
மூசுண்ட தான முகமாவுண்ட வெள்ளில் போலக்
காசுண்ட பூஞை னறைபோய கருத்த ஞனன்.

(இ - ள்) சாணைபிடியாத தெய்வத்தன்மையுடைய மாணிக்கம்போலவும், இராகுவின் வாயிலகப்பட்ட ஒளியிழந்த இனிய தண்ணிய சந்திரன்போலவும், பொலிவிழந்து வண்டுமொய்த்த மதம்பொருந்திய முகத்தையுடைய யானை

யுண்ட விளங்கனி போலவும் இரத்தினங்களிழைத்த ஆபரணம் பூண்ட வரகுண பாண்டியன் ஒட்டையான மனமுடையவனுனன்.

(வி - ம்) யானைநோயைப் பெயர் ஒற்றுமைபற்றிக் களிறுண்ட விளங்கனி, யானையுண்ட விளங்கனியெனக் கூறுவது நூன்மரபாதலின் " வண்டு மூசுண்ட தான முகமாவுண்ட வெள்ளில் " என்றார்.

யானைநோயடைந்த விளங்கனி உள்ளீடிழத்தல் போலப் பாண்டியன் அறைபோய கருதீதனுனெனைக் கொள்க. (கo)

மறையோர்கள் பின்னும் பழிமேலிடு வண்ண நோக்கி
இறையோ யிதுநான் முகன்சென்னி யிறுத்த கூடல்
அறவே தியனைத் தினமாயிரத் தெண்காற் சூழல்
உறவே யொழிக்கப் படுமின்ன முரைப்பக் கேட்டி.

(இ - ள்) (பாண்டியன் செய்த புண்ணியங்களாலொழியாது) மீளவும் பிரமஹத்தி மேலோங்கிவரும் வகையை வேதியர்கள் பார்த்து, அரசனே ! இப்பிரமஹத்தி பிரமன் சிரத்தைக் கொய்த மதுரையி லெழுந்தருளிய தருமமூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுளை நாடோறும் ஆயிரத்தெட்டுதரம் பிரதக்ஷிணஞ் செய்தா லொழிக்கப்படும். இன்னமுங் கூறக் கேட்பாய். (கக)

ஆனு விரத நெறியாலிரண் டைந்து வைகல்
வானு டனேயம் முறையால்வலஞ் செய்து வந்தா
யானு லதற்கு வழிகாட்டுமென் றையர் கூறப்
போனு னசன் புனிதன்றிருக் கோயில் புக்கான்.

(இ - ள்) நீங்காத விரதநெறியில் நின்று, சோமசுந்தரக்கடவுளை அம் முறையாகப் பத்துகாள் பிரதக்ஷிணஞ் செய்துவருவாயாகில், அப் பிரமஹத்திக்குத் தீர்வு காட்டியருளுவரென்று அந்தணர்கள் சொல்ல, வரகுணபாண்டியன் சென்று அச்சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலை யடைந்தான்.

(வி - ம்) ஆனுவிரதம் - அதிவிரதம் என்க. (கஉ)

விழியா யிரத்தோன் பழிதீர்த்தநீ வேகி யன்றன்
கழியா மாபா தகந்தீர்த்தநீ கௌவைக் கங்கைச்
சுழியா றலைக்குஞ் சடையாயெனைத் தொட்ட லைக்கும்
பழியா னதுந்தீர்த் தருளென்று பணிந்து வீழ்ந்தான்.

(இ - ள்) ஆயிரங் கண்களையுடைய இந்திரன் (தவஞ் செய்துகொண்டிருந்த விருத்திராசுரனைக் கொன்றதனால்) அடைந்த பிரமஹத்தியை யொழித்தருளினை. ஒருவராலும் நீக்குதற்கரிய (தாயைப் புணர்ந்து தந்தையைக் கொலை செய்த வேதியனது) மகாபாதகத்தை யொழித்தருளினை. ஒலியையுடைய கங்கை யென்னுஞ் சுழித்தல் பொருந்திய நதியானது அலைக்குஞ் சடையையுடைய பெருமானே ! என்னைப்பற்றி வருத்தும் பழியையுந் தீர்த்தருளா யென்று வணங்கி நமஸ்கரித்தான்.

(வி - ம்) இந்திரனுக்குற்ற பிரமஹத்தியும், வேதியனுக்குற்ற மஹா பாதகமும் புத்தி பூர்வமாகச் செய்யப்பட்டன. யானோ அபுத்தி பூர்வமாகச் செய்தேன். அவற்றை நீக்கியருளிய தேவரீர் என் துயரைத் தீர்த்தல் அரி தன்றே யென்பது புதைபொருளாகத் தோன்றும். (கஉ)

எண்ணும் படியம் முறையால்வளைந் தேத்த ஐயன்
விண்ணின் றியம்பு மரசேபரி மேத வேள்வி
நண்ணும் பயனோ ரடிவைப்பினி னண்ண வெம்மைப்
பண்ணும் வலத்தான் மகிழ்ந்தேம்பழி யஞ்சல் மன்னோ.

(இ - ள்) அம்முறைப்படி நின்றெண்ணப் பிரதக்ஷிணஞ் செய்து துதிக்க, சோமசுந்தரக்கடவுள் ஆகாயத்தினின்று (அசரீரியாகக்) கூறி யருளுவார் : அரசனே ! பிரதக்ஷிணஞ் செய்வேமென்று ஓரடி யெடுத்துவைக்கில், அசுவ மேதயாகப் பயன் கிட்டும். எம்மைச் செய்யும் பிரதக்ஷிணத்தால் மகிழ்வுற்றேம். பழிக்கு அஞ்சுதலொழிவாய்.

(வி - ம்) இது முதல் மூன்று பாடல்கள் ஒரு தொடர். (கச)

பொன்னோடு முத்தங் கொழிக்குந்துறைப் பொன்னி நாடன்
நின்னோ டமராற்ற நினைந்தெழு நீயு நேர்வாய்
அன்னோ னுனக்குப் புறங்கிட்டகன் றோடு நீயும்
பின்னோடி யெட்டிப் பிடிப்பாரிற் றுரத்து மெல்லை.

(இ - ள்) பொற்கட்டிகளோடு முத்துக்களை அலைகளொதுக்குந் துறையை யுடைய காவிரி நாட்டரசனுகிய சோழன் உன்னுடன் போர் செய்யக் கருதி வருவான். நீயும் அவனோடு எதிர்ப்பாய். அவன் உனக்குப் புறங்காட்டிப் போர்க்களத்தினின்று நீங்கி யோடுவான். நீயும் அவன் பின் சென்று எட்டிப் பிடிப்பவர்போலத் துரத்துங் காலையில். (கரு)

எமையா மருச்சித் திருக்குந்தலத் தெய்து வாயால்
அமையாத வன்கட் பழியாற்றுது மென்னச் சேற்கண்
உமையாள் மனோள னருள்வாழ்த்தி யுரக னுச்சிச்
சுமையாறு தோளான் றொழுதான்ற னிருக்கை புக்கான்.

(இ - ள்) எம்மை நாமே யருச்சனைசெய்து வழிபட்டிருக்குந் தலமாகிய திருவிடைமருதூரில் வருவாய். பொறுத்தற்கரிய கொடிய பழியை (அங்கே) ஒழிப்போம் என்றருள, ஆதிசேடன் தனது உச்சிச்சுமை யாறுதற் கெல்லை யாகிய தேவியுடைய வரகுணபாண்டியன், மீனாட்சி தேவியார் தலைவராகிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளைத் துதித்து வணங்கித் தனது இருப் பிடத்தைச் சேர்ந்தனன்.

(வி - ம்) எமையாமருச்சித் திருக்குந்தலமென்றது :—

காசிபர் முதலிய முனிவர்கள் அகஸ்தியர் கட்டளைப்படி தவஞ் செய்து சாஸ்வதியால் வேதாகமங்களி னுண்மைப்பொரு ளுணர்ந்து, இலட்சுமியால் சிவபூஜாவுபகரணங்களைப் பெற்று, உமாதேவியாருளை நாடி ஒரு நந்தவன

முண்டாக்கித் தவஞ் செய்து உமாதேவி தரிசனம் பெற்று, சிவதரிசனம் வேண்டுமென வாங் கேட்க, உமாதேவியார் தமதிதய கமலத்திற் பெருமானை நினைக்க, அவர் **சோதிமயமானலிங்கழார்த்தியாய்** எழுந்தருளிக் காட்சி தந்து, உமையே! நாம் இப்போது எழுந்தருளிய சோதிலிங்கத்தோடு இத்தலத்தில் அநாதியாயுள்ள இலிங்கத்தைக் கூட்டி யாவரும் பூசித்துக் கடைத்தேறும்படி நாமே பூசித்தருளுகின்றோமெனக் கூறிக் கலப்பித்துப் பூசித்தருளினர் என்பது **திருவிடைமருதூர்ப்புராண** வரலாறு. (கசு)

ஆர்த்தார் முடியோன் சிலகாள்கழித் தாற்ற லேற்ற
போர்த்தாவு வேங்கைக் கொடித்தாணை புடவி போர்ப்பப்
பேர்த்தார் கலிவந் தெனப்பேரிய மார்ப்பக் கன்னிப்
பார்த்தாம வேல்மீ னவனூட்டிற் படர்ந்த வெல்லை.

(இ - ள்) சிலகாள் கழித்து, ஆத்திமாலை யணிந்த முடியையுடைய சோழனுடைய வன்மை பொருந்திய போர்மேற் செல்லும் புலிக்கொடியை யுயர்த்திய சேனையானது, உலகம் புதைபடக் கடலானது நிலைபெயர்ந்து வந்தாற்போல, பெரிய போர் மூசாவெலிக்க, கன்னிநாட்டை யாளும் வெற்றிமாலை புனைந்த வேலேந்திய பாண்டியனூட்டில் வந்த காலையில். (கஎ)

மிடைந்தேறு கேரிப் பொருப்பன்படை வேலை மேற்சென்
றடைந்தேறி மீனக் கொடியோ னமராட லாழி
கடைந்தேறு வெற்பிற் கலங்கிற் றெனக்கிள்ளி சேனை
உடைந்தேக வெந்திட் டுடைந்தோடின னுள்ளம் வெள்கா.

(இ - ள்) நெருங்கிப் போருக்குவந்த கேரிமலையையுடைய சோழனது சேனை சமுத்திரத்தின்மேல் மீனக்கொடியையுடைய பாண்டியன் சென்று போருக்கெழுந்து போர்புரிய, திருப்பாற்கடலானது கடையவெழுந்த மந்தரகிரியால் நிலை கலங்கியதுபோலச் சோழன் சேனையானது நிலைகலங்கியோட, (சோழன்) மனநிலைகலங்கிப் புறமுதுகிட்டு ஓடினனன்.

(வி - ம்) சோழன் சேனை கடலாகவும், பாண்டியன் மந்தரமாகவும், சோழன் சேனை ஓடியது மந்தரகிரியாற் கலங்கிய கடலாகவும் உவமித்தார். (கஅ)

சுறவக் கொடியண்ணல் தூந்துபின் பற்றிச் செல்வோன்
புறவக் கடிமுல்லையுந் தாமரைப் போது மேந்தி
நறவக் கழிநெய்தலங் கானலின் ஞாங்கர் மொய்த்த
இறவப் புலவு கழுவீர்ந்துறைப் பொன்னி சேர்ந்தான்.

(இ - ள்) மீனக்கொடியையுடைய வரகுணபாண்டியனுல் தூரத்திப் பின் பற்றிச் செல்லப்பட்ட சோழன், முல்லை நிலத்திலுள்ள வாசம் பொருந்திய முல்லை மலரையுந் தாமரை மலரையு மேந்தித் தேன்சிந்துங் கழிசூழ்ந்த நெய்தனிலத்திலுள்ள சோலையின் பக்கத்தில் நெருங்கிய இறாலின் புலால் நாற்றத்தைப் போக்கும் குளிர்ந்த துறையையுடைய காவிரி நதியை யடைந்தனன்.

பூசத் துறையிற் புகுந்தாடியப் பொன்னித் தென்சார்
வாசத் திடைமா மருதைப்பணி தற்கு வைஞகத்
தேசத் தவன்கீழ்த் திசைவாயில் கடந்து செல்லப்
பாசத் தளையும் பழியும்புற நின்ற வன்றே.

(இ - ள்) வைகை நதிசூழ்ந்த பாண்டி நாட்டையுடைய வரகுண பாண்டியன் பூசத்துறையிற் சென்று நீராடி, அக்காவிரி நதியின் தக்ஷிணதீரமாகிய பெருமை பொருந்திய திருவிடைமருதூரி லெழுந்தருளிய சிவபெருமானுரை வணங்க, கீழ்த்திசை வாயிலைக் கடந்து உள்ளே செல்ல, பாசமாகிய பந்தமும் பிரமஹத்தியும் (அவனுடன் செல்லாது) புறத்தில் நின்றன.

(இ - ம்) பூசத்துறை என்றது தைமாச பூர்ணிமை என்க.

திருஇடைமருது என்றதால், முதல் மருதும், கடைமருதும் வேறுண்டெனக் கொள்க. (2o)

சுருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து குழறத் தெய்வ
மருதிற் சிறந்த பெருந்தேனைக்கண் வாயங் காந்து
பருகிப் படிந்து தழல்வாய்வெண்ணெய்ப் பாவை யொப்ப
உருகிச் செயலற் றுரையற்றுணர் வாகி நின்றான்.

(இ - ள்) வேதங்களாகிய வண்டுகள் புறஞ்சூழ்ந்து பண்பாட, தெய்வத் தன்மையுடைய இடைமருதில் சிறந்து விளங்கும் பெருந்தேனை, கண்ணுகிய வாயைத் திறந்து படியப்பருகி, நெருப்பிலிட்ட வெண்ணெயாற் செய்த பதுமைபோ லுருகிச் செயலொழிந்து வசனித்த லொழிந்து அறிவின் வடிவாகி நின்றனன்.

(வி - ம்) திருக்கைலாயமே மருதமரமாக வந்திருத்தலின் தெய்வமருது எனப்பட்டது. அதாவது:—ஒரு காலத்தில் உமாதேவியார் சிவபெருமானைப் பணிந்து தேவரீர் பூமியில் எழுந்தருளியிருக்குந் தலங்களைக் காட்டியருளவேண்டும் எனக் கேட்க, சிவபெருமான் அவ்வாறே தாமெழுந்தருளி யிருக்கும் எல்லாத் தலங்களையுந் தேவியாருக்குக் காட்டிக் கொண்டு காவிரித தென்கரையி லுள்ள திருவிடைமருதூர்க்கு நேரே எழுந்தருளுகையில், திருக்கைலையானது எம்பெருமானையும் பிராட்டியாரையும் பிரிவாற்றாது மருத விருக்ஷ வடிவாக நிற்கக் கண்டு சிவபெருமான் உமாதேவியாரோடு அதன் நிழலில் எழுந்தருளி நின்றன ரென்பது திருவிடைமருதூர்ப் புராண வரலாறு.

"இடைமருதிற் சிறந்த பெருந்தேன்"—இதனை,

திருவாசகம்

"அந்த விடைமருதி லானைத்தத் தேனிருந்த
பொன்தைப் பாவிநாம் பூவல்லி கொய்யாமோ"—என்பதனு ணுணர்க.

வேறு

சோமய பரமா னந்த நிருத்தகான் மாடக் கூடற்
பாபா வீமையா முக்கட் பகவபார்ப் பதிம ஞளை

புராதன வகில நாத புண்ணிய மருத வாண
அராவணி சடையா வென்றென் றளவிலாத் துதிகள் செய்தான்.

(இ - ள்) கோயில்லாதவனே! (கண்டோர்க்குப்) பேரானந்தத்தரும் திருக் கூத்தை யுடையவனே! நான்மாடக் கூடலாகிய மதுரையி லெழுந்தருளிய பராபரனே! இமையாத நிரிசேத்திரங்களையுடைய பகவானே! உமாதேவி யார் தலைவனே! (எல்லாத் தேவர்கட்கும்) மூத்தவனே! பாம்பை யணிந்த சடையை யுடையவனே! என்று இடையறாது கணக்கில்லாத தோத்திரங்கள் செய்தனன்.

(வி - ம்) ஆலயம் - கோய். நிராமயன் - பிறப்பும் இறப்புமில்லான் என்பதும் பொருந்தும். (உட)

சோற்பதந் கடந்த சோதித் துதித்தடி பணிந்த வேந்தை
மற்பெருந் தோளாய் கிழை வாயிலிற் பிரமச் சாயை
நிற்பதக் நெறியாற் செல்லே னிழன்மதி புரிஞ்சு மேலைப்
பொற்பெரு வாயி னீங்கிப் போதிநம் மதுரைக் கென்றான்.

(இ - ள்) சொல்லளவையைக் கடந்து நின்ற ஒளிமயமாகிய பெருமானைத் தம்மைத் துதித்து அடிபணிந்த வரகுண பாண்டியனைப் (பார்த்து) மற்போர் நிறைந்த பெரிய தோளையுடையாய்! (நீ வந்த) கிழைவாயிலிற் பிரமஹத்தி நிற்கின்றது; அவ்வழியாற் செல்லாதே. ஒளியமைந்த சந்திரமண்டலத்தையளாவும் மேற்றிசையிலுள்ள பொன்னாலாகிய பெரிய வாயிலினின்று நீங்கி, நமது மதுரைக்குச் செல்வாயென்று கூறியருளினர். (உங)

வரகுண னதுகேட் டையன் மருதீனை வளைத்து நீங்கற்
கருமையால் வாயில் தோறு மடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து
வரைதிரளைத் தன்ன மேலை வாயிலாற் போவா னன்ன
திருமணிக் கோபு ரந்தன் பெயரினற் செய்து நின்னாள்.

(இ - ள்) வரகுணபாண்டியன் அத்திருவார்த்தையைக் கேட்டு, இறைவர் எழுந்தருளி யிருக்கும் இடைமருதினைப் பிரதக்ஷிணஞ் செய்து, பிரிதற்கருமையால் வாயில்தோறும் அடிக்கடி வீழ்ந்து பணிந்தெழுந்து, மலையைத் தொளைத்தாற் போன்ற மேலை வாயிலின் வழியாகச் செல்கின்றவன், அந்த வாயிலிலுள்ள அழகிய இரத்தினமிழைத்த கோபுரமொன்றைத் தன் பெயராற் கட்டுவித்து, சிலகாள் (அங்கிருந்து). (உச)

இதுமுதல் வீரண்டு பாடல்கள் குளகம்.

திருப்பணி பலவுஞ் செய்து தென்றிசை வழிக்கொண் டேகிச்
சுருப்பணி மிடுநாண் பூட்டுஞ் சுவைத்தண்டச் சிலையார் காய்ந்த
மருப்பணி சடையான் கோயில் வழிதொறுந் தொழுது போற்றிப்
பொருப்பணி மாடக் கூடற் பொன்னக ரடைந்தான் மன்னே.

(இ - ள்) பிற திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்து முடித்து, தென்றிசையின் வழிக்கொண்டு சென்று, வண்டி னிரையாகிய நெடிய நாண்பூட்டிய

கருப்பு வில்லேத் தாங்கிய மன்மதனே யெரித்தருளிய (வாகத்தின்) கொம்பினே யணிந்த சடாமுடியையுடைய மருதவாணர் திருக்கோயிலே, (தனது கண்கட்குப் புலப்படு மெல்லையும்) வழிதோறும் பணிந்து துதித்து, மலேபோலும் அழகிய மாடங்களேயுடைய மதுரைத் திருநகரத்தை யடைந்தனன்.

(வி - ம்) வரகுணபாண்டியன் செய்த ஏனைத் திருப்பணி பல என்றதை:—

பதிணெராக் திருமுறை - திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

"* * * வெள்ளேநீறு மெய்யிற் கண்டு - கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும் ஓடும் பன்னரி யூளேகேட் டரனேப் - பாடின வென்று படாம்பல வளித்தும் குவளேப் புனலிற் றவளே யாற்ற - ஈசன் றன்னே யேத்தின வென்று காசும் பொன்னுங் கலத்து தூவியும் - வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய செழுவிதை யெள்ளேத் தின்னக் கண்டு - பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன இடித்துக் கொண்டவ னெச்சிலே நுகர்ந்தும்மருத வட்டத் தொருதனிக்கிடந்த தலேயைக் கண்டு தலேயுற வணங்கி - உம்மைப் போல வெம்மித் தலேயும் [பகிடத்தல் வேண்டுமென் றடித்தடித் திரந்தும் - கோயின் முற்றத்துமீயிசைக்கிடப் வாய்த்தனவென்று †காய்க்கட்ட மெடுத்தும்-காம்புகுத்துதிர்ந்தகனியுருக்கண்டு வேம்புகட்கெல்லாம்விதானமமைத்தும் - விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று புரிகுழற் றேவியைப் பரிவுடன்கொடுத்த - பெரிய வன்பின் வரகுணதேவரும்"

என வரும் பட்டினத்துப்பிள்ளையார் திருவாக்கா னறிக. இச் சரிதங்கள் எழுத விரியுமாதலின் இம்மட்டும் விடுத்தோம். (உடு)

தோடுபழி தொலேவித் தாண்ட சுந்தரத் தோன்றல் பாதக்
கடிமல ரடைந்து நாளுங் கைதொழு தலக மெல்லாம்
வடுவறு செங்கோ லோர்சும் வரகுண னறவோர் நாவால்
அடிசுவை யமுத மன்ன வான்புகழ் செவிம டுப்பான்.

(இ - ள்) (விடாது) தொடர்ந்த பிரமசாயை யொழித்து அடிமை கொண்ட சோமசுந்தரக்கடவுளுடைய வாசம் பொருந்திய திருவடித்தாமரையை யடைந்து, எப்பொழுதுங் கைகூப்பிப் பணிந்து உலக முற்றுங் குற்ற மற்ற செங்கோல் நடாத்தும் வரகுணபாண்டியன், முனிவர்கள் தமது நாவால் அட்ட சுவைபொருந்திய அமிர்தத்தை யொத்த சிவபெருமானது பெருமையைச் செவி (ஆகிய நாலிஞல்) அருந்துவானுயினன். (உசு)

வேதமா கமம்பு ராண மிருதிகள் மூதலா நூலும்
ஓதுவ துலகின் மிக்க தருந்திர வுலக மென்னும்

†திருக்கோயிலின் முன் நாய்மலங் கிடக்கக்கண்ட வரகுணபாண்டியர் இதனே யெடுப்போர் என் தேயத்திற் காற்கூறு பெறுவரென்று முதற் பிரதக்ஷிணஞ் செய்தும், அறைக்கூறு பெறுவர் என்று இரண்டாவது பிரதக்ஷிணஞ் செய்தும், முக்காற்கூறு பெறுவரென்று மூன்றுவது பிரதக்ஷிணஞ் செய்தும், முழுக்கூறு பெறுவரென்று நான்காவது பிரதக்ஷிணஞ் செய்தும், ஒருவராலும் எடுக்கப்படாமை கண்டு, என் தேயத்தை நானே யுடையனென்று தனது திருக்கரத்தெடுத்துப் புறம்பே யெறிந்தாரென்பது சரிதம்.

புராதன வகில நாத புண்ணிய மருந்த வாண
அராவணி சடையா வென்றென் றளவிலாத் துதிகள் செய்தான்.

(இ - ள்) கோயில்லாதவனே! (கண்டோர்க்குப்) போனகத்தருள் திருக் கூத்தை யுடையவனே! காண்மாடக் கூடலாகிய மதுரையி லெழுந்தருளிய பராபரனே! இமையாத திரிநேத்திரங்களையுடைய பகவானே! உமாதேவி யார் தலைவனே! (எல்லாத் தேவர்கட்கும்) மூத்தவனே! பாம்பை யணிந்த சடையை யுடையவனே! என்று இடையறாது கணக்கில்லாத தோத்திரங்கள் செய்தனன்.

(வி - ம்) ஆமயம் - நோய். நிராமயன் - பிறப்பும் இறப்புமில்லான் என்பதும் பொருந்தும். (உஉ)

சோற்பதங் கடந்த சோதித் துதித்தடி பணிந்த வேந்தை
மற்பெருந் தோளாய் கீழை வாயிலிற் பிரமச் சாயை
நிற்பதங் நெறியாற் செல்லே னிழன்மதி யுரிஞ்சு மேலைப்
பொற்பெரு வாயி னீங்கிப் போதிநம் மதுரைக் கென்றான்.

(இ - ள்) சொல்லளவையைக் கடந்து நின்ற ஒளிமயமாகிய பெருமானைத் தம்மைத் துதித்து அடிபணிந்த வரகுண பாண்டியனைப் (பார்த்து) மற்போர் நிறைந்த பெரிய தோளையுடையாய்! (நீ வந்த) கீழைவாயிலிற் பிரமஹத்தி நிற்கின்றது; அவ்வழியாற் செல்லாதே. ஒளியமைந்த சந்திரமண்டலத்தை யளாவும் மேற்றிசையிலுள்ள பொன்னாலாகிய பெரிய வாயிலினின்று நீங்கி, நமது மதுரைக்குச் செல்வையென்று கூறியருளினர். (உங)

வரகுண னதுகேட் டையன் மருதினை வளைந்து நீங்கற்
கருமையால் வாயில் தோறு மடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து
வரைதிரளைத் தன்ன மேலை வாயிலாற் போவா னன்ன
திருமணிக் கோபு ரந்தன் பெயரினாற் செய்து சின்னாள்.

(இ - ள்) வரகுணபாண்டியன் அத்திருவார்த்தையைக் கேட்டு, இறைவர் எழுந்தருளி யிருக்கும் இடைமருதினைப் பிரதக்ஷிணஞ் செய்து, பிரிதற்கருமையால் வாயில்தோறும் அடிக்கடி வீழ்ந்து பணிந்தெழுந்து, மலையைத் தொளைத்தாற் போன்ற மேலை வாயிலின் வழியாகச் செல்கின்றவன், அந்த வாயிலிலுள்ள அழகிய இரத்தினமிழைத்த கோபுரமொன்றைத் தன் பெயராற் கட்டுவித்து, சிலகாள் (அங்கிருந்து.)

இதுமுதல் வீரண்டு பாடல்கள் குளகம். (உச)

திருப்பணி பலவுஞ் செய்து தென்றிசை வழிக்கொண் டேகிச்
சுருப்பணி நெடுகாண் பூட்டுஞ் சுவைத்தண்டச் சிலையாற் காய்ந்த
மருப்பணி சடையான் கோயில் வழிதொறுந் தொழுது போற்றிப்
பொருப்பணி மாடக் கூடற் பொன்னக ரடைந்தான் மன்னோ.

(இ - ள்) பிற திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்து முடித்து, தென்றிசையின் வழிக்கொண்டு சென்று, வண்டி னிரையாகிய நெடிய காண்பூட்டிய

களுக்கு அரிய சிவபெருமானுமெழுந்தருளிய சிவபுரமானது விண்ணினின்றும் மிழிந்து (திருக்கோயிலுள்) விளங்க. (கூ0)

ஆண்ட நாயக னந்தியை யழைத்தெமக் கன்பு
மாண்ட காதலான் வரகுண வழுதிநம் மூலகங்
காண்டல் வேண்டினுன் காட்டெனக் கருணையா லேவல்
பூண்ட வேத்திரப் படையினுன் முழுதனன் போந்தான்.

(இ -ள்) (நம்மை) அடிமை கொண்ட சோமசுந்தரக்கடவுள் திருநந்தி தேவரை யழைத்து, எமக்கு அன்பு மிக்க வீரப்பிளையுடைய வரகுணபாண்டியன் நமது சிவலோகத்தைத் தரிசிக்க விரும்பினுன்; (அதனை அவனுக்கு) காட்டா யென்றருள, (இறைவர்) கிருபையால் (தேவர்கள் நெருக்கை யொதுக்கும்) திருப்பணி மேற்கொண்ட வேத்திரப் படையையுடைய அந்நந்திதேவர் வணங்கிப் புறம்போந்து.

(வி - ம்) தொழுதனன்; போந்தான்—வினையெச்சப் பொருளன. (கூக)

வருதி யாலெனப் பணிந்தெழு வரகுணற் கொடுபோய்க்
கருதி யாயிரம் பெயருடைக் கடவுள்நான் முகத்தோன்
சுருதி யாதியீ ரளப்பருஞ் சுயம்பிர காசப்
பரிதி யால்சிவ புரமிது பாரெனப் பணித்தான்.

(இ - ள்) வருவா யென்றருள, வணங்கி யெழுந்த வரகுணபாண்டியனைக் கொண்டு சென்று, ஆயிரம் பெயர்களையுடைய திருமாலும் பிரமனும் எண்ணி வேத முதலியவற்றுல் தனது முடிபை யளத்தற்கரிய ஸ்வயம்பிரகாசத்தையுடைய ஞான சூரியராகிய சிவபெருமானுர் ஆண்டருளும் சிவபுரம் இதுவாம் பாரா யெனப் பணித்தருளினர். (கூஉ)

கருப்பு ரங்கமழ்ந் தூளர்பசுங் கால்களா லுதையுண்
டருப்பி னஞ்சிதைந் தாயிரப் பத்தியோ சனைபோய்
மருக்க மழ்ந்துறு முயிரம் வாலிதழ்க் கமலம்
இருக்கு மோடைகள் புடைதொறுந் தழுவிய யாறும்.

(இ - ள்) கருப்பூரவாசங் கமழ்ந்து சஞ்சரிக்கும் தென்றற் காற்றுகளால் மொத்துண்டு அரும்பின் கூட்டங்கள் முறுக்கவிழ்ந்து பதினுயிர யோசனையெல்லை சென்று மணம்வீசி, வெள்ளிய லக்ஷம் இதழ்களையுடைய வெண்டாமரை மலர்களிருக்கும் ஓடைகள் பக்கங்களோறுந் தழுவிய யாறுகளும்.

இதுமுதல் பதினேழு பாடல்கள் ஒரு தொடர். (கூகூ)

வரம்பின் மாதரார் மதுரவாய் திறந்துதேன் வார்க்கும்
நரம்பி னேழிசை யாழிசை நகைமலர்த் தருவின்
சுரும்பி னேரிசை நாரத தும்புரு விசைக்கும்
இரும்பு நீர்மெழு காக்கிய வின்னிசை யெங்கும்.

(இ - ள்) எண்ணிறைந்த தெய்வமாதர்கள் இனியவாயைத் திறந்து தேனைச் சொரியும் நரம்பின்கண்ணமைந்த எழிசைகளையுடைய வீணையோடு பாடும்

இசையும், விகசித்து விளங்கும் மலர்களையுடைய விருக்ஷங்களில் வண்டுகள் பாடுந் தம்முளொத்த இசையும், நாதருந் தும்புருவும் பாடும் இரும்பின் தன்மையை மெழுகுபோற்செய்யும் இனிய இசையும் எவ்விடத்திலுமுள்ளனவாம்.

அமுத வாவியும் பொன்மல ரம்புயத் தடமுங்
குமுத வாயர மாதராங் குயிலினம் பயிலும்
நிமிர வாள்விடு மரகத நெடியபைங் காவுந்
திமிர மாசறக் கழுவிய தேவர்வாழ் பதமும்.

(இ - ள்) அமுதம் பொருந்திய தடைக்கிணறுகளும், பொற்றாமரைத் தடாகங்களும், ஆம்பல்போலும் வாயையுடைய தேவமாதர்களாகிய குயிற்கூட்டங்கள் சஞ்சரிக்கும் நிரம்ப ஒளிவீசும் மாகதமாகிய நெடிய பசிய சோலையும், இருளாகிய களங்கமொழிய ஒளிவீசுந் தேவர்வாழ் பதமும்.

(வி - ம்) தேவர்வாழ் பதம் - சிவபுரத்தில் மேற்புறத்துள்ளதென்பர்.(கூடு)

அலங்கு பாற்கடல் போற்புறத் தமுதநீ ரகழும்
பொலஞ்செய் ஞாயில்சூழ் புரிசையும் பொன்செய்கோ புரமும்
நலங்கொள் பூவியல் வீதியு நவமணி குயின்ற
துலங்கு மாளிகைப் பந்தியுஞ் சூளிகை நிரையும்.

(இ - ள்) சத்திக்கும் பாற்கடல்போலப் புறத்தே அமுதநீர் நிறைந்த அகழியும், பொன்னுற் செய்த வுறுப்புகளமைந்த மதிலும், பொன்னுற் செய்த கோபுரங்களும், அழகு பொருந்திய பொலிவமைந்த வீதிகளும், நவரத்தினங்களிழைத்த விளங்காநின்ற உபரிகையின் வரிசைகளும், அவற்றின் இறப்பின் வரிசைகளும். (கூசு)

ஐம்பு லங்களும் வைகலும் விருந்தெதி ரருந்த
வெம்பு நால்வகை யுண்டியும் வீணையுஞ் சாந்துஞ்
செம்பொ னூசமு மாடலின் செல்வமுந் தெய்வப்
பைம்பொன் மேகலை யோவியப் பாவையொப் பாரும்.

(இ - ள்) ஐம்புலன்களும் நாடோறும் விருந்தாகவுண்ண நால்வகை யுணவும், வீணைநாதமும், கலவைச்சந்தனமும், செம்பொன்னூசுகளும், (பரத) நாட்டியச் செல்வமும், தெய்வத்தன்மையுடைய பசும்பொன்னுற் செய்த மேகலாபரணமணிந்த சித்திரப்பதுமை போன்ற பெண்களும்.

(வி - ம்) 'ஐம்புலன்களும் விருந்தாக அருந்த' என்றது—மெய்யால் நுகரும் பொருள் ஓவியப்பாவை. வாயால் நுகரும் பொருள் நால்வகையுண்டி. கண்ணால் நுகரும் பொருள்கள் செம்பொன்னூசமும் ஆடலின் செல்வமும். மூக்கால் நுகரும் பொருள் சாந்து. செவியால் நுகரும் பொருள் வீணையெனக் கொள்ளக் கிடந்தன. (கூஎ)

படர்ந்த வார்சடை யுருத்திரர் பணைத்திறு மாந்த
வடங்கொள் பூண்முலை யுருத்திர மகளிரோ டமரும்

இடங்கொள் மாளிகைப் பந்தியு மிகல்வினை தன்பங்
கடந்த செல்வமுங் கவலையில் போகமுங் காட்டி.

(இ - ள்) பரவிய நெடிய சடையையுடைய உருத்திரர்கள் பூரித்திறு மாந்த முத்துவடமாகிய ஆபரணமணிந்த தனங்களையுடைய பெண்களோடு வசிக்கும் இடம் பரந்த உபரிகையின் வரிசையும், பகைமையுந் துன்பமு மொழிந்த செல்வமும், கவலையில்லாத போகங்களும் (ஆகிய இவற்றைத் தனித் தனியே) கூண்பித்து. (கூஅ)

முண்ட காசனன் பதமிது மூவுல களந்த
தண்டு ழாயவன் புரமிது தனிமுதல் வடிவங்
கொண்டு வீறுசா லுருத்திரர் கோப்பதி யின்ன
எண்டி சாமுகங் காவல ருறைவிட மிவைகாண்.

(இ - ள்) பிரமபதவி யிது ; திரிலோகங்களையுமளந்த தண்ணிய துளவ மாலை யணிந்த விஷ்ணுபதவி யிது ; ஒப்பற்ற சிவபெருமானுது திருவுருவங் கொண்டு பெருமை மிக்க சிறந்த உருத்திரபதவி யிது ; எண்டிசைகளையுங் காக்கும் (இந்திரன் முதலிய) திக்குப்பாலகர்கள் வசிக்கும் பதவிகளிவை: பாராய்.

புலரு முன்புன லாடிநீ றுடிகம் புனிதன்
இலகு மாலயம் விளக்கிநந் தனப்பணி யியற்றி
மலர்கொய் தாய்ந்தனர் தொடுத்தசன் புகழ்செவி மடுத்தில்
வுலக வாணராய்ப் போகமுற் றுறைகுந ரிவர்காண்.

(இ - ள்) விடியுமுன் நீராடி (முறைப்படி) திருவெண்ணீறு தரித்து, நமது பெருமான் எழுந்தருளியிருக்குங் திருக்கோயிலைத் திருவலகிட்டு, திரு நந்தவனத் திருப்பணி செய்து, மலர் கொய்து ஆராய்ந்து தொடுத்து, சிவபெரு மான் திருப்புகழைச் செவியாற் கேட்டு, இம்மிலவுலக வாசிகளாய் (இறுதியில் லாத) போகம் நுகர்ந்து வாழ்பவர்களிவர்கள் : பாராய்.

(வி - ம்) இச்செய்யுளில், சாதமார்க்கமாகிய சரியை செய்தோரைக் கூறி னர். இதனை,

" சாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரர்தங் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ
தேதுபணி யீதென்று பணிந்தவர்தம் பணியு
மியற்றுவதிச் சரியைசெய்தோ ரீசனுல கிருப்பர் "

என்பதனுணர்க. (சஅ)

தூய ராகியைஞ் சுத்திசெய் தகம்புற மிரண்டின்
நேய ராய்விதி நெறியினுன் முகமனீ செட்டாற்

காயம் வாய்மன வொருமையா லர்ச்சித்துக் கடவுள்
நாய ஞரரு ளுறைபத நண்ணிஞ ரிவர்காண்.

(இ - ள்) பரிசுத்தமுடையவராகிப் பஞ்சசுத்திசெய்து உள்ளும் புறம்புஞ் சிவநேயமுடையவராய், ஆகமவிதி முறையால் சோடசோபசாரத்தாலும், மன வாக்குக் காயங்களின் ஒருப்பாட்டாலும் அருச்சனைசெய்து கடவுள் நாயகராகிய சோமசுந்தரக் கடவுளின் பக்கலிலுள்ள பதவியை அடைந்தவர்கள் இவர்கள்: காண்பாய்.

(வி - ம்) பஞ்ச சுத்திகள்—பூதசுத்தி - ஆன்ம சுத்தி - திரவிய சுத்தி - மந்திர சுத்தி - லிங்கசுத்தியாம்; இவற்றுள், தத்துவங்கள் சடமென்றுணர்தல் பூதசுத்தி யென்றும், அவ்வாறுணர்வது திருவருளாலே யன்றித் தன்னு லன் றென் றுணர்தல் ஆத்மசுத்தி யென்றும், ஆன்மாவுக் குணர்வில்லை யாதலின் அதுவுந் திருவருளேயென் றுணர்தல் திரவியசுத்தி யென்றும், ஸ்ரீ பஞ்சா க்ஷரத்தை உச்சரித்து அதனுண்மையை யறிதலே மந்திரசுத்தி யென்றும், சிவமே ஸகல ஜகத்காரண பூதமென்றும், அச்சிவம் சிவலிங்க மூர்த்தத்தில் எழுந்தருளியிருக்குமென்றும் உணர்தல் லிங்கசுத்தியென்றுங் கூறுவர்.

இச்செய்யுளால் புத்திரமார்க்கமாகிய கிரியையைக் கூறினர். (சக)

கிளர்ந்த காலினு லங்கியை நிமிர்த்துமேற் கிடைத்து
வளர்ந்த பிங்கலை யிடைநடு வழியுரு மதியின்
விளைந்த வின்னமு துண்டுநம் விடையவன் வடிவங்
குளைந்த னிற்குறித் தவனுருக் கொண்டவ ரிவர்காண்.

(இ - ள்) மேலெழுந்த பிராணவாயுவால் (இதயத்திலுள்ள) அக்கினியை யெழுப்பி மேற்சென்று, குன்றாத இடைகலை பிங்கலைகட்கு நடுவிலுள்ள சுழி முனை வழியாகச் சென்று சந்திரமண்டலத்தில் விளைந்த இன்னமுதத்தை நுகர்ந்து, நமது சிவபெருமான் திருவுருவத்தை லலாட ஸ்தானத்திற் சிந் தித்து, அவனது சாரூப்பியத்தை யடைந்தவர்கள் இவர்கள்: பாராய்.

(வி - ம்) இச்செய்யுளாற் சகமார்க்கத்தின் நிலையினர்களாகிய யோகிகளைக் கூறினர்.

'உளந்தனிற் குறித்தவ னுருக்கொள்ள' லென்பது, நெற்றியாகிய ஆக்ஞை ஸ்தானத்தில் அந்தர முகமாகத் தரிசித்தோர்க்குச் சிவபெருமானது ஜோதிரூப தரிசனங் கிடைக்குமாதலின், இதனை " நெற்றிக்கு நேரே நீண்ட புருவத் திடையே - உற்றுற்றுப் பார்க்க வொளிதோன்றும் " என்பதனாலறிக. (சஉ)

முக்க ணுயகன் பொருட்டென வேள்விகள் முடித்துத்
தொக்கீ வேதிய ரிவர்புனற் சாலியித் தொடக்கத்
தக்க பேரறம் புகழ்பயன் றமைகன்கு மதிக்கும்
பொக்க மாறிய நிராசையாற் புரிந்தவ ரிவர்காண்.

(இ - ள்) திரிநேத்திரங்களை யுடைய சிவபெருமானுக்குப் பிரீதியாக யாகங்களைச் செய்து சிவபதவி யடைந்த அந்தணர்க ளிவர்கள். தண்ணீர்ப் பந்

தல் வைத்தல் முதலிய தகுந்த பெரும் புண்ணியங்களையும், புகழையும், பயனையும் கன்கு மதிக்குஞ் குற்றம் நீங்கிய நிராசையோடு செய்தவர்க ளிவர்கள்: பாராய்.

(வி - ம்) நிராசையால் என்றதிலுள்ள மூன்றனுருபு உடனிகழ்ச்சிப் பொருளது. (சசு)

மறையி னுற்றினுற் றந்திர மாபினுன் மெய்யில்
நிறையு நீற்றினர் நிராமய னிருத்தனைத் தெழுத்தும்
அறையு நாவினர் பத்தரா யான்புகழ் கேட்கும்
முறையி னுலிவர் வினைவலி முருக்கினர் கண்டாய்.

(இ - ள்) வேத நெறியாலாவது ஆகம நெறியாலாவது, தமதுடம்பி லணிந்த விபூதி யுடையவரும், நோயில்லாதவனும் கடனஞ் செய்வோனுமாகிய சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தையும் உச்சரிக்குஞ் நாவை யுடைய வருமாய், சிவபெருமானுக்கு அடியராய், அச் சிவபெருமான் திருப்புகழைக் கேட்கும் முறைமையினுல் வினை வலிமையைக் கெடுத்தவர்க ளிவர்கள்: பாராய்.

மறைக ளின்சத வுருத்திர மந்திர நவின்றோர்
நிறைகொள் கண்டிகை நீறணி நீர்மையா ரேனுங்
குறிகு ணங்குலன் குறித்திடத் தன்பணைச் சிவனென்
றறியு மன்பினுற் பிறவிவே ரறுத்தவ ரிவர்காண்.

(இ - ள்) வேதங்களிலுள்ள சதவுருத்திர மந்திரத்தை யுச்சரித்து, (சிவ புண்ணியம்) நிறைந்த உருத்திராக்ஷ கண்டிகையையுந் திருநீற்றையும் அணிந்த தன்மையுடையோர் எவராயிருப்பினும், அவர் பெயரையுங் குணத்தையுஞ் சாதியையுங் குறியாது அடியவரைச் சிவனேயென் றுணரும் அன்பினுல் பிறவியின் வேரை யறுத்தவர்கள் இவர்கள்: பாராய்.

(வி - ம்) சதவுருத்திரம் - வேதங்கள் பிரமன் முதல் சதாசிவ மீறாக முறையே யேற்றங் கூறுவதால், அவற்றுள் நடுவாகவுள்ள சதவுருத்திர மந்திரங்களே யோகாகமத்தால் உருத்திரகணங்களைச் சங்காரக்கிரமத்தில் வைத்து அதீதசிவம்வரை வரைப்படுத்திக் கூறுவது ஆகலின், "மறைகளின் சத வுருத்திரம்" என்றார். (சடு)

ஆனஞ் சாடிய பரஞ்சுட ரிறைசிவ ஞான
தானஞ் செய்தவர் தருப்பணஞ் செய்தவர் சாம
கானஞ் செய்தவற் காலயங் கண்டுதா பித்தோர்
ஊனஞ் சேர்பிறப் பறுத்துவா ழுத்தம ரிவர்காண்.

(இ - ள்) பஞ்சகவ்விய மாடிய சிவபெருமானுடைய சிவஞானதானஞ் செய்தவரும், தருப்பணஞ் செய்தவரும், சாமகீதம் பாடுஞ் சிவபெருமானுக்கு ஆலயத்தை விதிப்படி தாபித்தவரும், குற்றமடைந்த பிறப்பினை யொழித்து வாழும் நல்லவர்களும் இவர்கள் : பாராய்.

(வி - ம்) பரஞானம் அபரஞான மெனச் சிவஞான மிருவகை. சிவமே டிரண்டற்று அபேதமாயிருத்தல் பரஞானம். காமிகாதி சிவாகமங்கள் கூறுவது

அபரஞானம். ஆகம வுண்மையைப் பக்குவர்க் குபதேசித்தலும், ஆகம மளித்த லும், அதனை யெழுதுவதற்கு ஏடுகொடுத்தலும் சிவஞானதானம் எனப்படும். தருப்பணமென்றது ஈண்டுச் சிவப்பிரீதியாகச் செய்வதை. (ஈசு)

சிவனை யர்ச்சனை செய்பவர்க் கிசைவன செய்தோர்
அவனை னக்குறித் தடியரைப் பூசைசெய் தாறு
சுவைய வின்னமு தருத்தினோர் தொண்டர்தம் பணியே
தவமெ னப்புரிந் துயர்ச்சியைச் சார்ந்தவ ரிவர்காண்.

(இ - ள்) சிவபெருமானை அருச்சிப்பவர்கட்கு இசையுங் காரியங்களைச் செய்து வந்தவரும், அடியவரைச் சிவபெருமானே யென்று கருதிப் பூசித்து அறுசுவை பொருந்திய இனிய உணவை உண்பித்தவரும், சிவனடியவர்க் குச் செய்யுங் குற்றேவலே பெருந்தவமாக விரும்பிச் செய்து உயர்பதவியடைந் தவர்களும் இவர்கள் : பாராய். (ஈஎ)

ஆதி சுந்தரக் கடவுளுக் காலயம் பிறவும்
நீதி யாலருச் சனைபிற பணிகளு நிரப்பிப்
பூதி சாதன வழிநிலம் புரந்திவ ணடைந்தி
கோதி லாதகின் குடிவழிக் கொற்றவ ரிவர்காண்.

(இ - ள்) முதற்கடவுளாகிய சோமசுந்தரக் கடவுளுக்கு ஆலயமும், மற் றுள்ளனவும், முறைப்படி அருச்சனையும், பிறதிருப்பணிகளுமாகிய இவற்றைச் (செய்து) முடித்து, திருநீற்றையும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தையுங் கொண்டு நிலவுல கைக் காத்து இச்சிவலோக மடைந்த குற்றமில்லாத உன்னுடைய குடியிற் றோன்றிய அரசர்கள் இவர்கள்: பாராய். (ஈஅ)

என்று வேத்திரங் கொடுகுறித் தெம்மிறை நந்தி
கொன்றை வேணிய னடியர்தங் குழாத்தினைத் தேற்றி
நின்று வீழ்ந்துவீழ்ந் தஞ்சலி முகிழ்த்திட நெறியே
சென்று வானவர் நாயகன் றிருமுன்பு விடுத்தான்.

(இ - ள்) என்று கூறிப் பிரம்பாயுதத்தாற் சுட்டி, எமதிறைவராகிய திருநந்தி தேவர், கொன்றைமாலைசூடிய சடைமுடியையுடைய சிவபெருமா னது அடியார் கூட்டத்தியல்பை விளக்கி, முறைப்படியே வாகுணபாண்டியன் நின்று வீழ்ந்து வீழ்ந்து கைகுவிக்கத் (திருநந்திதேவர்) சென்று, தேவதேவ னாகிய சிவபெருமான் சந்நிதியில் (அவ்வாகுணனைச்) செலுத்தினர். (ஈசு)

மறைக ளாகமம் வடிவெடுத் திருபுடை வாழ்த்த
நறைகொள் யாழ்தழீஇத் தும்புரு நாரதர் பாட
அறைகொள் வண்டிமிர் கொம்பரி னரம்பைய ராடக்
குறைகொள் வானவர் பதங்கிடை யாதிறை கொள்ள.

(இ - ள்) வேதங்களும் ஆகமங்களும் உருவங்கொண்டு இருபால் நின்று வாழ்த்தவும், இன்னிசை பொருந்திய வீணையைத் தழுவித் தும்புரு நாரதர்கள்

(ஒருபால்) பாடவும், இசை பாடும் வண்டுகளொலிக்கும் பூங்கொம்புபோல அரம்பாஸ்திரீகள் (ஒருபால்) நடிக்கவும், குறையிரக்குந் தேவர்கள் சமயம் பெறுது (ஒருபால்) தங்கவும்.

இதுமுதல் எழு பாடல்கள் ஒருதொடர். (நo)

மதங்க விழ்க்குமால் வரைமுக மைந்தனுஞ் சூரன்
கதங்க விழ்த்தவேற் கந்தனுங் கருதலன் வேள்வி
விதங்க விழ்த்தவாள் வீரனும் வெயின்முடித் தார்தேன்
பதங்க விழ்ப்பவீழ்ந் தேவின பணிவழி நிற்ப.

(இ - ள்) மதத்தைச் சிந்தும் யானைமுகக் கடவுளும், சூரபன்மனுடைய கோபத்தைக் கெடுத்த வேற்படை தாங்கிய முருகக்கடவுளும், தக்கனுடைய யாகவகையைச் சிதைத்த வாட்படையேந்திய வீரபத்திரக் கடவுளும், விளங்குங் கிரீடத்தி லணிந்த மாலையானது தேன் சொரியப் படிந்து பணிந்து (பெருமான்) ஏவிய திருப்பணியின் வழியில் (ஒருபால்) நிற்கவும்.

(வி - ம்) 'மதங்கவிழ்க்கு மால்வரை' யென்றது விகாயகருக்கு யானைமுக முடைமையின் யானையென்னுஞ் சாதியொருமை நோக்கிக் கூறியது. விகாயகருக்குப் பரஞானமும் அபரஞானமு மிரண்டு மதங்களெனச் சாஸ்திரங் கூறும், யானைகட்கு இருகன்னத்தும் வலப்புறத்துமாக மூன்று மதங்கள் உள்ளன. (நக)

தூங்கு தானையை யொதுக்கிவாய் துணைக்காம் பொத்தி
ஓங்கு மாலயன் றங்குறை யொதுங்கிநின் றுரைப்ப
வாங்கு வான்சிலை யிக்திரன் முதற்றிசை வாணர்
தாங்க டாம்புரி காரியக் குறைகின்று சாற்ற.

(இ - ள்) உயர்ந்த திருமாலும் பிரமனும், மூன் அசையும் ஆடையை யொதுக்கித் தமது வாயை இருகாத்தாலு மமைத்து, தமது குறைபாடுகளை (ஒருபால்) ஒதுங்கி நின்று உரைக்கவும், வளைந்த பெரிய வில்லைத் தாங்கிய இந்திராதி திக்குப்பாலகர்கள் தாங்கள் செய்யுங் காரியங்களிலுள்ள குறைபாடுகளை (ஒருபால்) நின்று சொல்லிக் கொள்ளவும். (நஉ)

எழுவி னேடுதண் டேந்திவாய் மென்றெயி றதுக்கிக்
குழுமு பாரிடத் தலைவருங் கோடிகூற் றெதுங்கி
விழும மூழ்கிமெய் பனித்திட விதிர்க்குமுக் குடுமிக்
கழுமு ளேந்திய கணத்தவர் கடைதொறுங் காப்ப.

(இ - ள்) வேதடியோடு தண்டாயுதத்தைத் தாங்கி, வாயை மென்று பற்களை யதுக்கி நெருங்கிய பூதகணத்தலைவரும், எண்ணிறந்த கூற்றுவர்கள் (அஞ்சி) ஒதுங்கித் துன்பத்தி லழுந்தி உடல் நடுங்க அசைக்கும் முத்தலைச் சூலத்தைத் தாங்கிய சிவகணங்களும் வாயில்களோறுங் காத்து நிற்கவும். (நக)

சித்தர் வானவர் தானவர் சாரணர் திணிதோள்
வைத்த யாழினர் கின்னரர் மாதவ ரியக்கர்

பைத்த பாரிடர் காருடர் பாதல வாணர்
சுத்த யோகியர் முதற்கணத் தொகையெலாம் பரவ.

(இ - ள்) சித்தர்களும், தேவர்களும், அசுரர்களும், சாரணர்களும், வலிய தோளிற் சாத்திய வீணையையுடைய விஞ்சையர்களும், கின்னரர்களும், பெருந் தபோதனர்களும், யக்ஷர்களும், பரவிய பூதகணத் தலைவர்களும், கருடர்களும், நாகலோகத்தவர்களும், சுத்த (மனமுடைய) யோகவான்களும் முதலிய ஆகாய வாசிகள் யாவரும் (ஒருபால்) வணங்கவும். (நிச)

இனிவ ரும்பிறப் பறுத்தெமைக் காத்தியா லெனத்தங்
கனிவ ரும்பிய வன்பெழு கருணையா ரமுதைப்
பனிவ ருந்தடங் கண்களாற் பருகிமெய் பனிப்ப
முனிவர் சங்கர சிவசிவ வெனமுறை முழங்க.

(இ - ள்) இனி வராகின்ற மறுமையை விலக்கி எம்மைக் காப்பாயென்று, தமது கனிந்த அன்பென்னும் வெள்ளத்திலெழுந்த அருணிறைந்த சிவமாகிய அமுதினை, ஆனந்த பாஷ்பஞ்சிந்தும் பரந்த தமது கண்களாற் பருகி, உடல் கம்பிக்க, முனிவர்கள் சங்கர! சிவ! சிவ! என்று (ஒருபால் நின்று) வேத கோஷஞ்செய்யவும். (நிடு)

வரந்த வாதன யாவர்க்கும் வரன்முறை வழங்கி
முருந்த வாகைகை மலைக்கொடி முகிழ்நகை யரும்பத்
திருந்த வாயிரங் கதிர்விடு சிங்கமெல் லணைமேல்
இருந்த நாயக னிருக்கைகண் டிறைஞ்சினு னிறைவன்.

(இ - ள்) (தாம் அருளும்) வரங்கள் பிறழாமல் எல்லோர்க்கும் முறைப்படி தந்தருளி, மயிலிறகினடியை நட்புக் கொண்ட தந்த பந்தியையுடைய உமா தேவியார் (வாமபாகத்திலிருந்து) புன்னகை செய்தருள, முறையாகக் கணக் கில்லாத கிரணங்களே வீசும் மெல்லிய சிங்காசனத்தின்மேல் எழுந்தருளி யிருந்த சிவபெருமானது இருப்பினைத் தரிசித்துப் பணிந்தான் வரகுண பாண்டியன்.

(வி - ம்) தவாதன—முற்றெச்சம். (நிசு)

உரைக ளுந்தடு மாறுமெய் யுரோமமுஞ் சிலிர்ப்பக்
கரையி றந்தவின் னருட்பெருங் கடலிலன் பென்னுந்
திரையி றந்தவா றீர்த்திட மிதந்துபோய்ச் செப்பின்
வரையி றந்தவா னந்தவா ரமுதைவாய் மடுத்தான்.

(இ - ள்) பேசுஞ் சொற்கள் தடுமாறவும், உடலில் உரோமங்கள் புளகிக்க வும், எல்லையில்லாத இனிய அருளாகிய பெருங்கடலில், அன்பாகிய அலை யொழிந்த நதியானது (தன்னை) இழுத்துச் செல்ல, (அந்நதியில்) மிதந்து சென்று, சொல்லுரைவையைக் கடந்த பேரின்பமாகிய அரிய அமுதத்தை (மன நிறைய)ப் பருகினான். (நிஎ)

தன்பு லன்களுங் காணமுந் தன்னவே யாக்கி
அன்பு டம்புகொண் டவனெதி ரருட்சிவ லோகம்
பின்பு பண்டுபோல் மதுரையாப் பிராட்டியுந் தானும்
முன்பி ருந்தவா றிருந்தனன் சுந்தர மூர்த்தி.

(இ - ள்) தனது இந்திரியங்களையும் அந்தக் கரணங்களையுந் தன்னுடையனவாகவே செய்து, அன்பே உடம்பாகக் கொண்ட வரகுணபாண்டியனுக் கெதிரே, அருள்வடிவாகிய சிவபுரமானது பின்னர் முன்புபோல மதுரையாக, சோமசுந்தரக் கடவுள் தானும் அங்கயற்கண்ணியாருமாக முன்னிருந்த வகையே இருந்தருளினர். (நஅ)

வேந்தர் சேகரன் வரகுணன் விண்ணிழி கோயில்
எந்தல் சேவடி யிறைஞ்சிநின் றிறையருட் பெருமை
ஆய்ந்த வாவுதன் னகம்புக வின்பமோ டன்பு
தோய்ந்து தாமரைநீர் துளும்பகாக் குழறிடத் துதிப்பான்.

(இ - ள்) வரகுணபாண்டியன், விண்ணிழி விமானத்திலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுடைய சிவந்த திருவடிகளைப் பணிந்து நின்று, அவ் விறைவனுடைய திருவருட் பெருமையானது ஆராய்ந்து விரும்புந் தனது மனதிற் பிரவேசிக்க, பேரின்பத்திலுஞ் சிவநேயத்திலுமழுந்தி, கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்பவும், நாக்குழறவும் பணிவானுயினன்.

(வி - ம்) வேந்தர் சேகரன் - அரசர்கட்கு முடிபோன்றவன். (நக)

வேறு

நாயினேன் றன்னை நடுக்கும் பழியகற்றித்
தாயினே னாகித் தலையளித்தாய் தாள்சரணஞ்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
கோயினேர் நின்றவருட் குன்றேநின் றாள்சரணம்.

(இ - ள்) நாய்போன்ற என்னை வருத்தும் பிரமஹத்தியை நீக்கி, (கருணை செய்வதில்) தாய்போன்று தலையளித்தாண்டவனே ! உன் திருவடிக்கு வந்தனம். உனக்குத் தூரமாயுள்ள யான் கண்டு தரிசிக்கச் சிவலோகத்தைக் காட்டிப் பின்னர், திருக்கோயிலில் என்னெதிர் நின்றருளிய திருபாமலையே ! உன் திருவடிக்கு வந்தனம்.

(வி - ம்) நான் தரிசித்தற் கருகனல்லனுயினுந் தேவரீர் செய்த அருள் பெரிது என்பதுதோன்ற " சேயினேன் காணச் சிவலோகங் காட்டி" என்றார்.

மாழாந்து செய்யும் வினைவழிபோய் வன்னரகிற்
றூழா தடியனேற் கன்புதந்தாய் தாள்சரணம்
ஏழாகி நான்கு வகையா யெழுபிறப்பும்
பாழாக வெண்ணப் பணிகொண்டாய் தாள்சரணம்.

(இ - ள்) மயக்கிச் செய்யும் வினைவழிச் சென்று கொடிய நரகிலழுந்தாமல் அடியேனுக்கு அன்பு தந்தாண்டவனே ! உன் திருவடிக்கு வந்தனம். எழு

வகை (தோற்றம்) ஆகி, நான்கு வகையுளடங்கிப் பரந்த பல பிறப்புக்களும் என் னிடத்துப் பாழ்பட ஈன்னைக் குற்றேவல் கொண்டவனே ! உன் திருவடிக்கு வந்தனம்.

(வி - ம்) எழுபிறப்பு - மக்கள் - தேவர் - விலங்கு - புள் - ஊர்வன - நீர் வாழ்வன - தாவரம் எனப்படும். நான்கு வகை - அண்டசம் - சுவேதசம் - உத் பீசம் - சராயுசம் எனப்படும். அவ்வெழு பிறப்பும் நான்குவகையுளடங்குவதால் " ஏழாகி நான்கு வகையா யெழுபிறப்பும் " என்றார். (சுக)

வேங்கட் பழியின் விணேயேனே வேறுக்கித்
திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய்நின் ரூள்சரணம்
அங்கட் சிவபுரமுண் டன்புடையார்க் கென்பதையின்
றெங்கட்குக் காட்டி யிசைவித்தாய் தாள்சரணம்.

(இ - ள்) விணேப்பற்றுடைய என்னைக் கொடிய பழியினின்று வேறு படுத்தி எமது சந்திரகுலத்திற்கு நேர்ந்த குற்றத்தைத் தீர்த்தவனே ! உன் திருவடிக்கு வந்தனம். சிவநேயமுடையார்க்கு அவ்விடத்துச் சிவபுரமுண் டென்று (சிவாகமாதிகள்) கூறுவதை இப்பொழுது எங்களுக்குக் காட்டித் தெளிவித்தவனே ! உன் திருவடிக்கு வந்தனம். (உஉ)

வேறு

என்ன வேத்தியின் னருள்முகந் தீறிலா வன்பாற்
பின்னர் வேறுபல் பூசையுமு பிறக்குவித் திருந்தான்
மன்ன ரேறடை யார்க்கொரு மடங்கமே றடல்வேற்
றென்ன ரேறெனத் தோன்றிய வரகுண தேவன்.

(இ - ள்) என்று துதி செய்து, அரசர்களாகிய யானைகளுக்கு ஆண் சிங்கம் போல்பவனும், சத்துருக்கட்கு இடியேறுபோல்பவனும், வெற்றி பொருந்திய வேற்படை தாங்கிய பாண்டியருள் ஆண்சிங்கம் போல்பவனுமெனச் சொல்லும்படி அவதரித்த வரகுணதேவனென்னும் பாண்டியன், இனிய திரு வருளே யீடைந்து அளவிலடங்காத பேரன்பினல், பின்பு பலவகைப்பட்ட பூசைகளேயும் விளங்கச் செய்வித்திருந்தனன். (சுங)

என்ற தென்மலே முனிவணே யிருடிகள் நோக்கி
அன்று வாசவன் பழிகரி சாபமந் தணணேக்
கொன்று தாயொடுங் கூடிய கொடுவிணே மூதலாத்
துன்று பாவமு மதுரையிற் றொலேத்தன னன்றே.

(இ - ள்) என்று கூறியருளிய பொதியாசலத்திலுள்ள அகஸ்திய முனி வரை மற்ற முனிவர்கள் பார்த்து, அக்காலத்தில் [பூர்வத்தில்] இந்திரனுடைய பிரமஹத்தி, வெள்ளேயானேயின் சாபம், தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்த (பிராமணனுடைய) மஹாபாதகம் முதலாக நெருங்கிய பாவங்களே யெல்லாம் (சோமசுந்தரக் கடவுள்) மதுரையிலேயே தொலேத்தருளினர்.

(வி - ம்) இச்செய்யுளாற் பிறவிடங்களிற் செய்த பாவங்களெல்லாவற்றையும் இத்தலமே தீர்க்கவல்லது எனக் கூறப்பட்டது. (கூ)

பர மனெண்குணன் பசுபதி வாகுணற் பற்றும்
பிர மவன்பழி யிடைமரு திடைவிட்டுப் பெயர
வர மளித்தவா றென்னைகொல் வள்ளலே யிதனைத்
தி ரமு றப்புக லெமக்கென முனிவர்கோன் செப்பும்.

(இ - ள்) பரமனும் எண்குணங்களையுடையவனும் பசுபதியுமாகிய சோமசுந்தாக்கடவுள் வாகுண பாண்டியனைப் பிடித்த வலிய பிரமஹத்தியை, திருவிடைமருதில் விட்டு நீங்க வரமருளியவகை யாது? அருட்கொடையாளராகிய அகஸ்தீய முனிவரே! இதனை எங்களுக்குச் சந்தேகமகலக் கூறியருளவேண்டும் எனக் கேட்க, முனிவர் பெருமானுரைக்கிறு அகஸ்திய முனிவர் கூறியருளுகின்றார். (கூடு)

பூத நாயகன் சுந்தரன் புண்ணிய மூர்த்தி
யாத லாலன்ன தலத்துறை யடியவ ரஞ்சிப்
பாத கஞ்செயா தொழுகுறூஉம் படிநினைந் தினைய
நீது றூஉம்பழி தனையிடை மருதினிற் றீர்த்தார்.

(இ - ள்) பஞ்ச பூதங்கட்கிறைவராகிய சோமசுந்தரக்கடவுள் தருமசொரூபியாதலின், அந்தத் திருவாலவாயிலில் வசிக்கும் அடியவர் அஞ்சிப் பாதகஞ் செய்யாமல் நல்லொழுக்கமுறத் திருவுளங்கொண்டு, இந்தக் கொடிய பாதகத்தைத் திருவிடைமருதூரில் தீர்த்தருளினர்.

(வி - ம்) அன்ன இனைய—சுட்டுத்திரிபுகள்.

பூதநாயகன் என்றதற்குப் பூத கணங்கட் கிறைவனுகிய சிவபெருமான் எனப் பொருளுரைப்பது மமையும்.

மதுரையிற் செய்த புண்ணியம் வளருதல்போலப் பாவமும் வளருமென்பது தோன்ற "அஞ்சிப்பாதகஞ் செயாதொழுகுறும்படி" என்றார். (சுசு)

என்ன கத்திய முனியிறை யிறைகொடுத் தியம்ப
நன்றெ னச்சிரம் பணித்துமெய்ஞ் ஞானவா னந்தக்
துன்றி நற்றவர் சுந்தரச் சோதிசே வடிக்கீழ்
ஒன்று மற்புத வானந்த வுததியுட் குளித்தார்.

(இ - ள்) என்று முனிசிரேஷ்டராகிய அகஸ்திய முனிவர் விடைகொடுத்தருள, (கேட்ட) நல்ல முனிவர்கள், தக்கதென்று சிரமசைத்து, உண்மை யறிவானந்தத்திற் றேய்ந்து, சோமசுந்தரக் கடவுளுடைய சிவந்த திருவடியின்கீழ்ப் பொருந்திய அற்புதம் விளக்கும் பேரின்பமாகிய கடலிலாழ்ந்து களிகூர்ந்தார்கள். (சுஎ)

வேறு

அன்ன தனித் தொன்மதுரை யன்றுதொடுத் தின்றெல்லை
தன்னனைய தாயகில தலங்கள்சிகா மணியாகிப்

பொன்னகரின் வளஞ்சிறந்து பூவுலகிற் சிவலோகம்
என்னவிசை படப்பொலிந்த தேழிரண்டு புவனத்தும்.

(இ - ள்) அந்த வொப்பில்லாத தொன்றுதொட்டுள்ள மதுரைத் திருநகரானது பதினெண்குலகங்களிலும் அன்றுமுதல் இன்றுவரை தனக்குத் தானே சமானமானதாய் எல்லாச் சிவதலங்களுக்கும் ஒரு சிகாமணியாய், வளப்பத்தால் தேவருலகத்தினு மேம்பட்டுப் பூலோக சிவலோகமென்று புகழுண்டாக விளங்கியது. (சுஅ)

ஆ திருவிருத்தம் - உஉகூ.

நாற்பத்தொன்றுவது

விறகு விற்ற படலம்

நெடியவன் பிரமன் றேட நீண்டவன் றென்னற் கேழின்
மூடியதாஞ் சிவலோ கத்தைக் காட்டிய மூறையீ தையன்
படிபிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகா ளாகி
அடிமையென் றடிமை கொண்ட அருட்டிற மெடுத்துச் சொல்வாம்.

(இ - ள்) திருமாலும் பிரமதேவரும் (முறையே திருவடியையும் திருமுடியையும்) தேடும்படி (அவர்கட்கெட்டாது ஒளிப்பிழம்பாக்) கின்ற சோமசுந்தரக் கடவுள், ஏழுலகினுக்கும் ஒரு மகுடமாகிய சிவபுரத்தை வரகுணபாண்டியனுக்குக் காட்டியருளிய திருவிளையாடலிது. அச் சோமசுந்தரக்கடவுள் நிலவுலகின்மேல் விறகு விற்கும் ஆளாகத் திருவுருவங்கொண்டு நடந்து (இசை) பாடி, பாணபத்திரருடைய அடிமையென்று கூறி, அவரை யடிமைகொண்டருளிய திருவிளையாடலின் திறத்தை (யாம் இனி) எடுத்துச் சொல்லுவாம். (க)

மன்றலந் தெரியன் மார்பன் வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவ லானிற் பொலியுநா ளேம நாதன்
என்றிரு விறல்யாழ்ப் பாணன் வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னேடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்.

(இ - ள்) வாசம் பொருந்திய அழகிய வேப்பமலர்மாலை யணிந்த வரகுண பாண்டியன் செங்கோல் செலுத்தி இந்திரனைப்போல விளங்குங் காலத்தில், ஏமநாதனென்னு வெற்றி பொருந்திய ஒரு யாழ்ப்பாணன் வடதிசையினின்றும் வந்து வெற்றிகொண்ட விருதுகளோடும் கல்விமிக்க மதுரைப்பதியை யடைந்தான்.

(வி - ம்) வென்றிகொள் விருது என்ற அடையானே, ஏமநாதனென்பான் பல அரசர் சபையிலுஞ் சென்று தன் இசைவன்மையைப் புலப்படுத்தி

ஆங்குள்ள இசைநூற்புலவரை வென்று, அவ்வரசர் கொடுத்த பல சின்னங் களைப்பெற்றவன் என்பது கொள்ளக் கிடந்தது. (உ)

பூழியர் பெருமான் கோயில் புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத் தொழுதுபல் புகழ்கொண் டாடி
ஏழிசை மழலை வீணை யிடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்ன னஞ்செவி வழியப் பெய்தான்.

(இ - ள்) பாண்டியர் பெருமானை வாருணபாண்டியனது கோயிலிற் சென்று, அரசசபையை யடைந்து, முகபடாமணிந்த யானைச்சேனையையுடைய அப்பாண்டியனைப் பணிந்து, பலவிதமான புகழ்களைப் புகழ்ந்து பாடி, மழலைச் சொல்போலும் இனிமை வாய்ந்த ஏழிசையமைந்த வீணையை யிடப்பால் தழுவி, சுருதி கூட்டி இனிய இசையாகிய தேனை அவ்வரசன் செவியினுள் நிரம்பி வழியவாக்கினன். (ஊ)

முகையுடைக் தவிழ்ந்த மாலை முடித்தலை துளக்கித் தூசு
பகலவிர் மணிப்பூ ணல்கிப் பல்லுணக் கருவி நல்கி
அகன்மனை வேறு காட்டி யரசர்கோன் வரிசை செய்ய
இகலறு களிப்பி னேடு மிசைவல்லா னில்லிற் புக்கான்.

(இ - ள்) அரும்பின் முறுக்குடைந்தவிழ்ந்த மாலை சூடிய கீரீடத்தைத் தரித்த தலையை யசைத்து, ஆடையையும் விளங்கும் இரத்தினபாணங்களையுந் தந்து, பலவகைச் சுவைபொருந்திய உணவுப் பொருள்களை யளித்து, இடம் பார்த்த வீடொன்றைத் தனியே கொடுத்து, வரகுணபாண்டியன் வரிசைகள் செய்ய, பகையகன்ற இறுமாப்போடும் இசைநூலில் வல்ல ஏமநாதன் (தனக் குக் காட்டிய) வீட்டிற் சென்றனன். (எ)

மீனவன் வரிசை பெற்ற செருக்கினும் விருதி னினும்
மானமேல் கொண்டு தன்னே டின்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங் கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் தழையர்க் கூவிப் பத்திரம் கொணர்ந்தி சென்றான்.

(இ - ள்) பாண்டியன் செய்த வரிசையைப் பெற்ற செருக்கினாலும், (பல அரசரிடம் பெற்ற) விருதினாலும், மானம்மீக் கூர்ந்து தன்னோடு இசைபாடுத லில்வல்ல தானமமைந்த யாழ்வல்லவர்கள் இவ்விடத்தில் வேறொருவர் நில சென்று இறுமாந்திருக்கும் வகையினை வாருணபாண்டியன் தெரிந்து வேவு காரரை யழைத்துப் பாணபத்திரரைக் கொண்டு வாருங்களென்று கட்டளை யிட்டான்.

(வி - ம்) தானம் - ஏழு சுரங்களுந் தங்குமிடங்கள். (ஏ)

உழையரால் விடுக்கப் பட்ட பத்திர னுவரி வென்றோன்
கழல்பணிந் தருகு நிற்பக் கௌரிய னேக்கிப் பாணி
பழிசை வல்லா னேடும் பாடுதி கொல்லோ வென்ன
மழலையா ழிடந்தோ ளிட்ட பாணர்கோன் வணங்கிச் சொல்வான்.

(இ - ள்) வேவுகாராற் செலுத்தப்பட்ட பாணபத்திரர், கடலே வென்ற வரகுண பாண்டியனுடைய பாதத்தைப் பணிந்து பக்கலில் நிற்க, அப்பாண்டியன் பார்த்து, தாளங்களில் வல்ல ஏமநாதனோடு பாடவல்லையோ? என வினவ, மழலைச் சொல்போல இனிமை வாய்ந்த வீணையை இடதுதோளிலிட்ட பாணர் கட் கிறைவராகிய பத்திரர் பணிந்து கூறுகின்றார்.

(வி - ம்) உக்கிரகுமார பாண்டியன் கடல்சுவற வேல்விட்டு வென்றதை அம்மரபினனுகிய இப்பாண்டியன்மீது உரிமை தோன்றக் குறித்து "உவரி வென்றோன்" என்றார்.

பாணி=தாளம். அது, கொட்டு-அசை - தூக்கு - அளவு என நால்வகைப் படும். கொட்டாவது அமுக்குதல். அசையாவது தாக்கி யெழுதல். தூக்காவது தாக்கித் தூக்குதல். அளவாவது தாக்கின ஓசை கேரே மூன்று மாத்திரைபெறு மளவும் வருதல் என இசைநூலார் கூறுவர். (கூ)

தென்னவர் பெருமை யானுன் றிருவுள வலனுங் கூடல்
முன்னவ னருளு மூட்டு முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி யவனிவீ றழிப்ப னென்றன்
மன்னவ னுனைப் பாடு போகென வரைந்து சொன்னன்.

(இ - ள்) பாண்டியருட் சிறந்த அரசனே! அடியேன் உனது திருவுளக் கருத்தின் வண்மையும், மதுராபுரியிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளுங் கூட்டி முடிக்கும் நன்முயற்சியின் வழியே சென்று இசைபாடி, அவ் ஏமநாதனுடைய விருதினை வாங்கி, அவனைச் செருக்கழிப்பே னென்று கூறினார். வரகுணபாண்டியன் காளைக்கு (வந்து) அவனோடு பாடுக. (இன்றைக்கு) போகக் கடவாய் என்று கால வரையறுத்துச் சொல்லினன். (எ)

இற்கண்ணே யிசைவல் லான்போ யிருந்துழி யணையான் பாங்கர்
கற்கும்பாண் மக்கண் மல்ல லாவணங் கவலை மன்றம்
பொற்குன்ற மனைய மாட மறுகெங்கும் போகிப் போகிச்
சொற்குன்ற வகையாற் பாடித் திரிந்தனர் வீறு தோன்ற.

(இ - ள்) தமது வீட்டினிடத்திற் பாணபத்திரர் சென்றிருந்த காலத்தில், அந்த ஏமநாதன் பக்கலில் இசைகற்கும் பாணர்கள் வளம் பொருந்திய கடை வீதியிலும், முத்தெருக்கூடுமிடத்திலும், அம்பலத்திலும், மேருமலை போன்ற மாடங்களையுடைய வீதிகளில் எவ்விடத்திலுஞ் சென்று சென்று (இசை நூலிற்குரிய) சொற்கள் (தத்தமக்குரிய) மாத்திரைகளிற் குறைவுபடாதபடி, தமது இசைநூலின் வண்மை யாவர்க்கும் புலப்படப் பாடித்திரிந்தார்கள். (அ)

இவ்விசை கேட்டு நன்றென் றறிசயித் திசைவல் லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும் வண்ணமீ தென்னை கெட்டேன்
அவ்விசை வல்லான் பாடு முறையெற்றே அவனை காளைச்
செவ்விசை பாடி வெல்வ தெவனெனத் திவவுக் கோலான்.

(இ - ள்) வாரினாற் கட்டப்பட்ட வீணையில் வல்ல பாணபத்திரர், இந்த இசையைக் கேட்டு நன்றியிருக்கிறதென்று அதிசயித்து, இசைநூலில் வல்ல ஏமநாதனிடத்துக் கற்கும் மாணாக்கர்கள் பாடும்வகை யிதுவாயின் ஆ கெட்டேன்! அந்த ஏமநாதன் பாடும்வகை எவ்வாறுள்ளதோ? அவனே நாளைக்குச் செவ்விய இசையைப்பாடி வெல்வ தெங்ஙனம்? என்று.

(வி - ம்) கெட்டேன்—வியப்பிடைச் சொல். (கூ)

மையணி மிடற்றி னானே மதுரைநா யகனே வந்தித்
தையனே யடியேற் கின்று னருட்பிழை செய்யல் வேண்டும்
மெய்யனே யென்று போற்றி வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தா னில்லம் புக்கினி திருந்தா னிப்பால்.

(இ - ள்) விஷத்தை யணிந்த நீல கண்டத்தையுடைய பெருமானுகிய மதுராபுரியிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே வணங்கி, ஐயனே! உண்மை வடிவாயுள்ளவனே! அடியேனுக்கு இப்பொழுது உன் திருவருள் முன்னிற்க வேண்டும் என்று துதித்துவேண்டி, சிவநேயங் கலந்த பொய்புகலாத மனத்தையுடைய பாணபத்திரர் தமது வீட்டை யடைந்து கவலையின்றி யிருந்தார். இப்புறம். (கo)

வேறு

வருத்த முகிவந் திரந்தவ னிசைப்பகை மாற்ற
விருத்த னும்விற காளென விண்ணிழி விமானத்
தொருத்த னுரறி வாகிய வுண்மையா னந்தத்
திருத்த னுர்தம திச்சையாற் றிருவுருக் கொள்வார்.

(இ - ள்) வருத்தமுடையவராகி வந்து தமது குறை கூறியிரந்த பாணபத்திரருக்குப் பகைவனுகிய ஏமநாதனைக் குடியோட்ட, விண்ணிழி விமானத்திலெழுந்தருளிய ஒப்பில்லாதவரும், சச்சிதானந்த வடிவுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள் விருத்தவடிவாகிய விறகுதலையன்போலத் தமது இச்சையால் திருவுருவங் கொள்வாராயினர். (கக)

அழுக்கு மூழ்கிய சிதாசைத் தவிர்சடை யமுதம்
ஒழுக்கு வெண்மதி வாங்கியே செருகிய தொப்ப
மழுக்கு கூனல்வெள் வாய்க்குயம் வலம்படச் செருகி
இழுக்கு தேய்செருப் பருமறை கடந்ததா ளேற்றி.

(இ - ள்) அழுக்குமயமாகிய கந்தையுடுத்தி, விளங்குஞ் சடையிலணிந்த அமுதஞ் சொரியும் வெள்ளிய பிறையை வாங்கிப் (பின்புறஞ்) செருகியது போல, மழுங்கிய வளைந்த வெள்ளிய வாயையுடைய கொடுவாளை வலப்பாற் செருகி, இழுத்துத் தேய்ந்த செருப்பினை அரிய வேதமுடிவைக் கடந்த திருவடியிற்றொடுத்து. (கஉ)

பழையதோர் பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க் கோடுள்
உழைய தாகவிட் டெருத்தலைத் தூசலா டியவொண்

குழைய காதினிற் களவிணர்க் குறியகாய் தூக்கித்
தழையும் வாங்கிகை சரிந்திடச் சுமையடை தாங்கி.

(இ - ள்) பழையதாகிய ஒப்பில்லாத பொல்லம் பொருந்திய பத்தரை யுடைய வீணையானது தோளினிடத்ததாகத் தொங்கவிட்டு, பிடரை யலைத்து ஊசல்போலசைந்தாடிய ஒள்ளிய குண்டலத்தை யணிந்த காதினிற் களாவின் பூங்கொத்தோடு ஆதன் சிறிய காய்க்கொத்தையுந் தொங்கவிட்டு, தழைந்த கீண்ட சிகைசரியச் சும்மாடு தாங்கி.

இதுமுதல் ஐந்து பாடல்கள் குளகம்.

(வி - ம்) பத்தர் - வீணைதண்டத்தின் கோட்டின்புறத்துள்ள சுரைக் குடுக்கை. அஃது வீணையுறுப்புகளுள் ஒன்று. அஃது பழையதாதலின் "பொல்லம் பொத்திய" என்றார்.

வீணையுறுப்புகளே "கோடே பத்தர் ஆணி நரம்பே - மாடக மெனவரும் வகையின தாகும்" என்பதனுணர்க. (கஙு)

தறிந்த விந்தனந் தினந்தொறுந் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையசாய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணு
தெறிந்த விந்தனச் சுமைதிரு முடியின்மே லேற்றி.

(இ - ள்) முறிபட்ட விறகைத் தினந்தோறுஞ் சுமத்தலால், கீண்ட உரோமங் கழித்து தேய்ந்து அழுந்திய தலையையுடையவராய், அன்புகொண்டு (அலைகளால்) மடங்கிவருங் கங்காதேவியாரும் இடதுபாகத்தில் வசிக்கும் உமாதேவியாருங் காணுமல் வெட்டிய விறகு சுமையைத் தமது திருமுடியின்மேல் வைத்து.

(வி - ம்) கங்காதேவியும் உமாதேவியுங் காணில் மனக்தாளாராதலின், "மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணுது" என்றார். (கசு)

என்பு தோன்றியூ னின்றியே யிளைத்தயாக் கையராய்
அன்பு தோன்றியே கண்டவ ரகங்களிற் திரங்க
வன்பு தோன்றிய மனமொழி கடந்ததாள் மலர்பார்
முன்பு தோன்றிய தவத்தினுன் முடிமிசைச் சூட.

(இ - ள்) எலும்புகள் தெரிந்து தசையில்லாமல் இளைத்த தேகத்தையுடையவராய், பார்த்தவர்கள் அன்பு கொண்டு மனமெக்குவிட் டிரங்க, தம்பா லுருகுதலில்லாத மனத்தையும் வாக்கையுங் கடந்துநின்ற பாததாமரைகளே, நிலமகள் முன்பு செய்த தவத்தால் தனது முடிமேற் சூடவும். (கடு)

திருமு கத்துவேர் வரும்பவாய் குவிந்தொலி செய்ய
வருவர் கற்சுமை தாங்கிமேற் சார்த்துவர் மடுநீர்
பருகு வாமெடுப் பார்தலை வெம்மைவேர் பறிய
இருகை யாலடிக் கடியெடுத் தேந்தியூர் புகுவார்.

(இ - ள்) திருமுகத்தில் வியர்வை தோன்றத் திருவாய் குவிக்தொலி செய்ய வாரா நிற்பர். கல்லாலாகிய சுமைதாங்கிமேற் சார்த்தா நிற்பர். மடிவி லுள்ள நீரைப் பருகா நிற்பர். (விறகு சுமையை) எடுத்துத் தமது திருமுடி மேல் வைப்பர். தலையில் உஷ்ணத்தாலாகிய வியர்வை கழியத் தமது இருகரங் களாலும் அடிக்கடி (சுமையை) மேலே யெடுத்தேந்தி ஊரிற் செல்லா நிற்பர்.

(வி - ம்) இச்செய்யுளில் விறகாளின் தொழிற்றன்மை தோன்றக் கூறிய தால் தொழிற்றன்மையணி. (கசு)

நடந்து கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியுங் கவலையு மூடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார்.

(இ - ள்) (இவ்வாறு) நடந்து வாங்குவோர்க்கு மேற்பட்ட விலை கூறியும், நான்மாடக் கூடலாகிய மதுரைப்பதியில் நெருங்கிய வீதிகளையும், மூத்தெருக் கூடுமிடத்தையும், மூடுக்குச்சந்திகளையும் நெருங்கிப் பின்பற்றிய வேதத்தை யும் பிரம விஷ்ணுக்களுடைய ஆலோசனையையும் பகற்பொழுதையுங் கடந்து போய், அந்த இசைவுலில்வல்ல ஏமநாதன் கடைவாயிலில் அடைவார்யினர்.

(வி - ம்) " அருவிலை பகர்ந்து " என்றதால், விறகு விற்கவந்தவரல்ல ரென்பதும், " அவ்விசைவலான் கடைத்தலைச் செல்வார் " என்றதால், ஏம நாதன் தன்னை விறகு சுமையோடு காணவேண்டுமென்று சென்றவரென்பதும் புலப்பட்டன. (கஎ)

வரவு நேர்ந்தழைப் பவரென ஆம்பல்வாய் மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழுவுயிர்த் துணைவன்
பிரிவு நோக்கினு னெனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகடல் நீந்த.

(இ - ள்) (சந்திரனது) வருகையை நோக்கி அழைப்பவர்போல ஆம்பல் கள் வாய்மலர, வெள்ளிய சந்திரன் இரவை வெளிப்படுத்திப் புன்னகையரும்பி உதையஞ் செய்யவும், தமது உயிர்போன்ற கணவருடைய பிரிவுநோக்கி வருந் திய பெண்கள்போல, தேனுகிய நீரைச் சொரியுந் தாமரைகள் குவியவும், சூரியன் மேலைக்கடலில் நீந்திச் செல்லவும்.

(வி - ம்) இதுமுதல் ஐந்து செய்யுள்களால் மாலைக்காலம் வருணிக்கப் பட்டது.

கண்ணீர் என்றதைக் கள் நீர் எனப் பிரித்துத் தேனுகிய நீரென்க.

ஒருபால் இன்பமும் ஒருபால் துன்பமும் உண்டாதல் உலகியல்பு என் பார் " ஆம்பல்வாய்மலர நகைத்தெழ " என்றும், " தாமரையின் நிரைகள் கூம் பிட " என்றுங் கூறினர். (கஅ)

பறவை வாயடைத் தருகணீ பார்ப்பொடும் பெடையைச்
சிறக காலணைத் திரும்பொழிற் குடம்பையுட் செறிய

நறவ வாய்ப்படை யுண்டதே னக்கிவண் டோடைப்
பொறைகொள் தாமரைப் பள்ளியுட் புகுந்துகண் படுக்க.

(இ - ள்) ஆண் பறவைகள் கூவாது, அருகேவந்த குஞ்சுகளோடும் பெண் பறவைகளைச் சிறகாலணைத்து, பெரிய சோலைகளிலுள்ள கூடுகளிலணையவும், பெண் வண்டுகள் வாயாலுண்ட தேனினை ஆண்வண்டுகள் நக்கி ஓடைகளிலுள்ள இதழ்ப்பரப்பையுடைய தாமரைகளாகிய சயனத்திற் சென்று துயிலவும். (கக)

புல்லெ னீணிலைக் குரங்கினம் பொதும்பர்புக் குறங்க
மூல்லை யாய்மகா ருய்த்தரக் கன்றுள்ளி மூந்திக்
கொல்லை யானிரை மணிதொறுங் குறுகிடச் சிறுபுன்
கல்வி மாணவச் சிறார்பயில் கணக்கொலி யடங்க.

(இ - ள்) குரங்கின் கூட்டங்கள் சோலையிலுள்ள உயர்ந்த மரங்களில் விரைந்து சென்று துயில் புரியவும், முல்லை நிலத்திலுள்ள ஆயர்குலச் சிறுவர்கள் செலுத்தத் தமது கன்றுகளைக் கருதி அம்முல்லை நிலத்திலுள்ள பசுக்கள் முற்பட்டுத் தமது வீடுகள்தோறுஞ் செல்லவும், இளங்கல்வி பயிலும் மாணாக்கச் சிறுவர்கள் கூறும் நெடுங்கணக்கொலி யடங்கவும்.

(வி - ம்) நீணிலை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. (உ0)

புனைந்த ஆழ்கடற் கரும்படா முடம்பெலாம் போர்த்து
வனைந்த பூண்முலை நிலமகள் துயில்வது மானக்
கனைந்த காரிருள் மெல்லெனக் கவிதரப் பிரிவால்
இனைந்த காதலர் நெஞ்சில்வே ளெரிகணை நாட்ட.

(இ - ள்) (தன்னைச்) சூழ்ந்த ஆழ்ந்த கடலாகிய கரியபோர்வையை உடல் முழுதும் போர்த்து, ஆபரணமணிந்த தனங்களையுடைய பூமிதேவி கண்துயில் கூருதலே யொப்ப, மிக்க கரிய இருளானது மெல்லென வந்து உலகினைப் போர்க்கவும், (கணவர்) பிரிவால் வருந்திய மகளிருடைய மனத்தில் விளங்கும் நெருப்புப்போன்ற அம்புகளை மன்மதன் தாட்டவும்.

(வி - ம்) அகத்திணையியல்,

"பரத்தையிற் பிரிதல் ஓதற்குப் படர்தல்
அருட்டகு காவலொடு தூதிற் ககறல்
உதவிக் கேகல் நிதியிற் நிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே"

எனப் பிரிவு பலதிறப்படுதலின் பிரிவால் எனப் பொதுப்படக் கூறினர். (உக)

திங்கள் வாணுதல் முயற்கறைத் திலகமுஞ் சிவந்த
மங்கு லாடையு மயங்கிரு ளோதியும் வான்மீன்
பொங்கு மாரமும் பொலிந்துதன் கொண்கனைப் பொருப்பன்
மங்கை தேடிவந் தாளென வந்தது மாலை.

(இ - ள்) சந்திரனுகிய நெற்றியில், முயற்களங்கமாகிய திலகமும், செவ் வானமாகிய வுடையும், கரிய அந்தகாரமாகிய கூந்தலும், நக்ஷத்திரங்களாகிய விளங்காநின்ற முத்துமாலையுமாகிய இவற்றுல் விளங்கி, உமாதேவியார் தனது கணவனைத் தேடிவந்ததைப்போல மாலைக்காலம் வந்தது.

(வி - ம்) முயற்கறை - இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத் தொடர். (உஉ)

எடுத்த இந்தன மொருபுறத் திறக்கியிட் டூன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்தினைப் பாறித்
தொடுத்த வின்னிசை சிறிதெழீஇப் பாடினுர் சுருதி
யிடுத்தி யாரவன் பாடுவா னென்றிசை வல்லான்.

(இ - ள்) எடுத்த விறகின் சுமையை, ஒருபுறத்திலிறக்கி நிலத்திலூன்றி மறுபுலத்திலிருத்து, வந்த ஏமநாதனுடைய வீட்டின் புறத்திலுள்ள திண்ணை யின் மேலே இனைப்பாறி, இடைவிடாது பாடும் இனிய இசையைச் சிறிதெழுப்பிப் பாடினுர். அச்சுருதியைக் கேட்டு, பாடுகின்ற அவன் யார்? என்று இசைநூலில் வல்ல ஏமநாதன். (உக)

வேறு

வண்டறை கொன்றை யான்முன் வந்துநீ யாரை யென்றன்
பண்டரு விபஞ்சி பாண பத்திர னடிமை யென்றன்
மூண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன்மற் றேனை
அண்டருந் தன்குற் றேவ லடிமையாக் கொண்ட வம்மான்.

(இ - ள்) வண்டுகளொலிக்குங் கொன்றைமாலை யணிந்த சிவபெருமான் முன்னே வந்து, நீ யார்? என்று வினவினன். தாமரைமலரைப் பீடமாகக் கொண்ட பிரமதேவரையும், திருமாலையும், இந்திரன் முதலிய மற்றைத் தேவர்களையுந் தமது குற்றேவல் செய்யும் அடிமைகளாகக் கொண்ட (விறகால் வடிவங் கொண்டுவந்த) சிவபெருமான், இசையமைந்த யாழில் வல்லவராகிய பாணபத்திரனடிமை யென்று கூறினர்.

(வி - ம்) சிவபெருமான், தமது அடியார்க்கடியவராகிய பாணபத்திரர் தம் மிடம் வேண்டிக்கொண்டது கருதி ஏமநாதனை மறுபுலத்துய்ப்ப வேண்டி வந்த வர் ஆதலின், அப்பாணபத்திரரை யுயர்த்திப் "பண்டரு விபஞ்சி பாணபத் திரனடிமை" என்றுர். (உச)

கனியிசைக் கிழவன் றன்கீழ்க் கற்பவ ரனேகர் தம்முள்
ளனியிசைக் கிழமை வேட்டு நானுமவ் வினைஞ னேன்
தனியிசைக் கிழவ னெனக்கித் தசையெலா மொடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக் காகா யென்றெனைத் தள்ளி விட்டான்.

(இ - ள்) சுவைகனிந்த இசையில்வல்ல பாணபத்திரர் கீழ் இசைகற்போர் அனேகருளர். அவருள் சிறந்த இசைநூல் கற்கும் உரிமையை நானும் விரும்பிக் கற்குந் தொழிலுடையனுயினேன். ஒப்பில்லாத இசைநூலில்வல்ல அத்தப்

பாணபத்திரர் (என்னைப்) பார்த்து, (உடம்பிற்) சிறிதுக் தசையில்லாதொழிய விருத்தனுயினை; (ஆதலால்) இனி இசைநூல் கற்கும் உரிமைக்குதவாயென்று என்னைக் கற்போரினின்றுக் தள்ளிவிட்டனர்.

(வி - ம்) தாம் ஒருவரே பாணபத்திரர்கீழ் இசை கற்றுரென்று கருதாது "கனியிசைக் கிழவன்றன்கீழ்க் கற்பவர் அநேகர்" என்றும், அவருள் யான் வயது மூதிர்த்து இசைநூற் பயிற்சிக்குத் தகுதியின்றித் தள்ளப்பட்டேன் என்பார் "தசையெலா மொடுங்க மூத்தா யினியிசைக் கிழமைக்காகா யென்றெனைத் தள்ளிவிட்டான்" என்றுங் கூறினர்.

இதனுல், தள்ளுண்ட ஒருவன் இவ்வாறு பாடுவானுயின், அவரால் கொள்ளப்பட்ட மாணுக்கரும் அவ்வண்ணம் பாடப் பயிற்றிய பாணபத்திரரும் எவ்வாறு பாடார் என்பதும் கூறுதே கருத உரைத்தாராயினர். (உடு)

வெவ்விற கெறிந்து கட்டி விலேபகர்க் தேனு மைய
இவ்வயி றேம்பு கேனென் றித்தொழில் பூண்டே னென்ன
கைவளக் தெரிந்த ஏம நாதனும் விறகு மளளா
அவ்விசை யொருகா லின்னும் பாடென ஐயன் பாடும்.

(இ - ள்) ஐயனே! உலர்ந்த விறகினை வெட்டி விற்றுயினும் இந்த வயிற்றினை யோம்பக் கடவேனென்று இவ்விறகு விற்குத் தொழிலேப் பூண்டேனென்று கூற, பண்ணில் வல்ல ஏமகாதனும், விறகு சுமக்குந் திண்ணியா! அந்தத் தேவகாந்தாரத்தை இன்னுமொருதரம் பாடாயென்று கூற, சிவபெருமானுர் பாடுகின்றுர்.

(வி - ம்) "வெவ்விற கெறிந்து கட்டி விலேபகர்க்தேனு மைய இவ்வயி றேம்புகேனென் றித்தொழில் பூண்டேன்" என்றது ஆசிரியன் சொல்வழி மாணுக்க னெழுகுதல் கடனுதலின் அவ்விசைத் தொழிலாற் சீவியாது இவ்விறகு விற்றற் றெழிலாற் சீவிக்கின்றேனெனைக் கூறியதாம். தாம் பாடிய தேவகாந்தாரம் முற்றும் பாடினரல்ல ராதலின் "ஐயன் பாடும்" என்றுர். கைவளம் - ஒரு பண். (உசு)

குண்டுநீர் வறந்திட் டன்ன கெடுங்கொடிக் குறுங்காய்ப் பத்தர்த்
தண்டுநீ ணிறத்த நல்யா ழிடந்தழீஇத் தெறித்துத் தாக்கிக்
கண்டுமா டகந்தி ரித்துக் கௌவிய திவவிற் பாவ
விண்டுதே னெழுகிற் றென்ன வீக்கிமென் சுருதி கூட்டி:

(இ - ள்) மடிவிலுள்ள நீர் வறந்தாற்போல, நீண்ட கொடியிலுள்ள சிறிய காயாகிய குடுக்கையைப் பின்புறத்திலுள்ள தண்டையுடைய மிக்க நிறமமைந்த வீணையை இடப்பால் தழுவி, கரம்பினைத் தெறித்துத் தாக்கிப்பார்த்து, முறுக்காணியைத் திருத்து, அதில் விடாதுபற்றிய கட்டிற் பாவ, தேனுனது மலரினின்றும் ஒழுகியது போல கரம்பினை வீக்கி, மெலிவுபடச் சுருதியை யெழுப்பி.

(வி - ம்) "கல் யாழ்" என்றதனுல் குற்றக் தீர்ந்த தென்பதும், "நிறத்த யாழ்" என்றதனுல் நிறம் ஐந்தும் அமைந்ததென்பதும், "விண்டுதே னெழு

கிற்றென்ன வீக்கி" என்றதனால், கரம்பின் வீக்கு மலரினின்று ஒழுகுந் தேனெழுக்குப்போ லுள்ளதென்பதும் பெறப்பட்டன.

இக்குற்றங்கள் யாழ்செய்யும் மரத்தால் நேரும் எனக்கொள்க. இதனை,

சீவகசிந்தாமணி - காந்தர்வதத்தையாரிலம்பகம்

["நீரிலே நிற்பு லழுகுதல் வேத னிலமயங்கும்
பாரிலே நிற்ற லடிவீழ்த்த னேய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வு நிற்றல்
சேரினேர் பண்க ணிறமயக் கம்படுஞ் சிற்றிடையே"]

எனக் காட்டிய நச்சினார்க்கினியர் மேற்கோளால் அறிக. இக்குற்றம் செம்பகை - ஆர்ப்பு - கூட்டம் - அதிர்வு என நான்கு வகை யென்பர். அதனை,

வெடி உதாரணச் செய்யுள்

["செம்பகை யார்ப்பு கூட மதிர்வு
செம்பகை யென்பது பண்ணே னெரா
வின்பமி லோசை யென்மனர் புலவர்.
ஆர்ப்பெனப் படுவ தளவிறக் திசைக்கும்
கூட மென்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வாரா தழுங்கியிசைப் பதுவே.
அதிர்வெனப் படுவ திழுமென வின்றிச்
சிதறி யுரைக்குர சுச்சரிப் பிசையே"] எனவும்,

பஞ்சபாரதீயம்

"இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகும்
சீசான்னமாத் திரையி னேங்க வீசைத்திடுஞ் சுருதி யார்ப்பே
மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகும்
நன்னுதால் சிதற வுற்ற லதிர்வென நாட்டி னோரே"

எனவுங் காட்டியவற்றை னுணர்க.

இனி, இவ்வகைக் குற்றத்தரும் வீலக்கு மரங்களை நீக்கி உத்தமமாகிய வித்திக்கப்பட்ட மரங்களால் வீணைதண்டஞ் செய்ய வேண்டுமென்பதனை,

"சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழுந் தணக்குடனே—மெல்லியலா
உத்தம மான மரங்க ளிவையென்றார்
வித்தக யாழோர் விதி.

தளமாய்ச் சமதித்துத் தண்காற்று நான்கு
முளதா யொருங்கூன மின்றி—யளவு
முதிரா திளகாது மூன்றுங்கூ றுய
வதுவாகில் வீணைத்தண் டாம்"

என வருவனவற்றை யுணர்க.

"பதுமங் கழல்குடக் தாடியொ டெள்ளிபண் பூண்டு கின்ற
விதியமர் தண்டு குடையே குடுமிமெய்க் கோட்டு றுப்பு
மதியமர் போதிகை புட்டின் முகஞ்சுவர் மன்னெ ருத்தம்
விதியமர் பத்தர்க் குறுப்பென் றுரைத்தனர் மின்னிடையே"

என்றபடி தக்க சிற்பனுல் இலக்கண சம்பந்தமாகச் செய்யப்பட வேண்டு மென்க.

'நிறம் ஐந்து' என்றதனே,

"மாத்திரைக ளொன்பானுங் தாளங்க ளெட்டானும்
ஏத்துங் கிரியையென் றீரைந்துங்—கோத்துப்
பதின்மூன் றெழுத்தாற் றெழிலேந்தும் பண்ணின்
மதியோர்க ளேந்துகிற மாம்" என்னுஞ் செய்யுளானும்,

'விண்டுதே ளெழுகிற்றென்ன வீக்கி' யென்றதனே,

"பசும்பொன் யாழ் - சுரம்புதே ளுர்த்தென" என வருவதனுனுமறிக.

விசையொடு தானந் தோறும் விரனடந் தூச லாட
இசைமுத லேழிற் பல்வே றின்னிசை யெழுஞ்சா தாரி
அசையொடு வீதிப் போக்கு மூடுகிய லாகம் யார்க்கும்
கசைதரு சுரம்பு கண்ட மொற்றுமை நயங்கொண் டார்ப்ப.

(இ - ள்) (சுரங்களேழும்) தானங்கள் தோறும் விசையுட்டன் விரல் சென்று போக்குவரவு செய்ய, சுரல் முதலிய ஏழிசைகட்கு முதலாயுள்ள சத்தசுரங்களில் பலவேறுவகைப்பட்ட இனிய இசைகளில் ஒன்றுயெழும் சாதாரிப் பண்ணும், அசையும், வீதிப்போக்கும், வண்ணமும், திறமுமாகிய இவைகளால் எல்லோர்க்கும் விருப்பந்தரும் சுரம்பினுசையும் சாரீர வோசை யும் ஒற்றுமை நயத்தோடொலிக்க.

(வி - ம்) அசை=ஒரு மாத்திரையளவுள்ள தாளம். அது "கொட்டு மசையுக் தூக்குமளவும் - ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்" என்றபடியே, கொட்டு - அசை - தூக்கு - அளவு என்னும் நான்கனு ளொன்றென்க.

வீதிப்போக்கு—நகர முதலிய சாலெழுத்தக்கள் நேராய்ச் செல்லுதல். மூடுகியல் என்றது வண்ணம். அது பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பு வண்ணம் எனு மூவகைத்து. ஆகாம் - யாழ்த்திறம்.

அசைவு என்னும் பாடத்தை அசையெனக் கொள்வ துசிதம். (உ அ)

வயிறது குழிய வாங்க லழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணுடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்ட லின்ன வுடற்றெழிற் குற்ற மென்ப.

(இ - ள்) (பாடும்பொழுது) வயிறு குழிபட வாங்குதலும், அழுமுகங் காட்டுதலும், வளைந்த குற்றமில்லாத புருவங்களே நெரித்தலும், தலையை அசைத் தலும், கண்களே ஆட்டலும், பாடுதற்குக் கருவியாயுள்ள கண்டம் வீங்குதலும், பையைப்போல வாயைத் திறத்தலும், பற்களைக் காட்டுதலுமாகிய இவை போல் வனவற்றை உடலின் தொழிலால்வருங் குற்றங்களென (இசைநூலார்) கூறுவர்.

(வி - ம்) சிவபெருமான் பாடியது தேவகாந்தாரமாதலின், அதற்கியைய இக்குற்றங்கள் ஒழியப் பாடவேண்டுமென்றார். இதனை,

"கண்ணிமையா கண்டக் குடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்றாப் பற்றெரியா—வெண்ணிலவை
கள்ளார் கறுக்கெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட வுணர்."

"உள்ளாளம் விக்குவுட னுத மொலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்த றூன்படுத்தல்—மெள்ளக்
கருதி கலிதல்கம் பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை"—என வருவதனானும்.

கல்லாடம்

"வீரனுன் கமைத்த வணிகுரல் லீங்காது
கான்மறை தள்ளும் வாய்பிள வாது
காட்டியுள் ளுணர்த்து கோக்கமா டாது
பிதிர்கனன் மணிசூழ் முடிநடுக் காது
வயிறுகுழி வாங்கி யழுமுகங் காட்டாது" (உக)

என வருவதனானும் மறிக.

வெள்ளோகா குளிகி மோசை வெடிகுர ஞகி யின்ன
எள்ளிய வெழாலின் குற்ற மெறிந்தகின் றிரட்ட லெல்லை
தள்ளிய கழிபோக் கோசை யிழைத்தனெட் டுயிர்ப்புத் தள்ளித்
துள்ளலென் றின்ன பாடற் றொழிற்குற்றம் பிறவுந் தீர்த்தே.

(இ - ள்) வெள்ளோசையும், காகுளிப்பாட்டும், கீழோசையும், வெடித்த குரலும், காசிப்பாட்டுமாகிய இவைபோல்வன (இசைநூலார்) விலக்கிய சாரீர வோசையின் குற்றமாம். எறிந்து நின்றிரட்டலும், அளவுகடந்த கழி போக்கும், ஓசை யிழைத்தலும், பெருமூச்செறிதலும், ஒருபுற மோட்டலு மென்று சொல்லப்பட்ட இவைபோல்வனவாகிய பாடற் தொழிற்குற்றத்தினும் பிற குற்றத்தினுந் தீர்த்து நீக்கி.

(வி - ம்) நிறமென்றது மேற்காட்டி யிருத்தலின், வெள்ளை யென்பதற்கு நிறமில்லாத வெள்ளோசை யெனப் பொருள் கொள்க. காகுளி - பேய்க் கூச்சல்போற் பாடுவது. கீழோசை - நிறமும் தானமும் குறைபட்டது; இத னைக் கட்டையோசை யென்பர். காசிப்பாட்டு - ஒரு தானத்தே பாடுகையில் ஒரு தானத்தில் தழுவுவது; இதனை மூக்காற் பாடுதலெனவும் கூறுவர். எறிந்துநின்றிரட்டல் - ஒரு பண்ணைப் பாடுகையில் பிறிதொரு பண்ணிற் பிறழ்தல். கழிபோக்கு - ஓரோசையான தன்மை நீக்கிப் பலவோசையுங் கலத்தல். பிற என்றதால் அசைவு முதலியவற்றையுங் கொள்க. அசைவு= சோம்பல்.

குற்றந் தெரிந்து என்ற பாடத்தைக் குற்றமெறிந்து என்றும், ஓசை யிழைத்த தெட்டுயிர்ப்பு என்ற பாடத்தை ஓசை யிழைத்த னெட்டுயிர்ப்பு என்றுங் கொள்வது உசிதம். இச்செய்யுளின் கருத்தை,

கல்லாடம்

"நாசி காஞ்சி வெடிகூரல் வெள்ளை
பேசாக் கீழிசை யொருபுற மோட்டல்
கெட்டுயிர்ப் பெறித்த லெறிக்துகின் றிரட்டல்
ஓசை யிழத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்ற மசைவொடு மாற்றி"

என வருவதனுணர்க. (கூ०)

எழுதுசித் திரம்போல் மன்னி யிழுமெனு மருவி யோதை
முழவொலி கஞ்ச நாதம் வலம்புரி முரலு மோசை
கொழுதிசை வண்டின் முரி பெனவிசைக் குணனும் வேரல்
விழுமிலை சிரன்மீன் மேல்வீழ் வீழ்ச்சுபோற் பாடற் பண்பும்.

(இ - ள்) (சிற்ப நூலோர்) எழுதிய சித்திரப்பதுமைபோல (பதுமாசனத்தில்) இருந்து இழுமென்றொலிக்கும் அருவியினோசையும், மத்தள வொலியும், கஞ்சக்கருவியின் நாதமும், வலம்புரிச்சங்கு முழங்கும் முழக்கமும், (மலர்களை மூக்கால்) உழுதுபாடும் வண்டின் முழக்கமும்போல இசைக்கும் இசையின் குணமும், மூங்கிலினின்று விழாநின்ற இலையினது வீழ்ச்சியும், மீனெறி பறவையானது மீன்மேல் விழும் வீழ்ச்சியும்போலப் பாடும் பாடலின் குணமும்.

சிலப்பதிகாரம்

["பதுமுக முற்கட் டிதமே யொப்படி
இருக்கை சம்புட மயமுகம் சுவத்திகம்
தனிப்புட மண்டில மேக பாதம்
உளப்பட வொன்பது மாகும்
நிரிதர வில்லா விருக்கை"]

எனக் காட்டிய மேற்கோளால் ஓவிய நூலுட் கூறிய விருத்தி யொன்பதுட் சிறந்த பதுமாசனத்தைக் கூறினும்.

வலம்புரி நாதமும் வண்டி னோசையும் உத்தமமென்றதை,

"தூயமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும்
வையமுழங்கும் வலம்புரியும்—கையைவத்துத்
தும்புருவு நாதரும் பாடியமூ வோசையென
நம்புநீர் நால்வேதத் துள்.

செச்சிலி பூனை குடமுழக்சுஞ் செம்மைத்தாம்
உச்சிமலை நீர்விழுக்கா டொண்பருந்து—பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கா னிழற்பறவை
ஏயுங்கா லோசை யியல்பு."

என இசைநூன் மரபு வழக்கெடுத்து உதகரித் துளவற்றை யுணர்க. அன்றியும், பருந்தின் வீழ்ச்சி, பூனையின் புணர்ச்சி, வானம்பாடி நிலை, குயிலோசை முதலியனவற்றைக் கூறுவதுமுண்டு. அதனை,

கல்லாடம்

"வண்டின் முரியுங் கஞ்ச நாதமும்
சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வதும்

அருவி யோசையு முழவின் முழக்கமும்
வலம்புரிச் சத்தமும் வெருகின் புணர்ச்சியும்
இன்னுமென் றிசைப்பப் பன்னிய விதியொடு ''

என்பதனானுணர்க. (ஈக)

பொருந்தமந் தாரத்தி னோடு மத்திமந் தாரம் போக்கித்
திருந்திய துள்ளல் தூங்கல் மெலிவது சிறப்பச் செய்து
மருந்தன செய்யு ளோசை யிசையோசை வழாமல் யார்க்கும்
விருந்தெனச் செவியின் மாந்தப் பாடினர் வேத கீதர்.

(இ - ள்) படுத்த லோசையோடு சமனோசையும் எடுத்த லோசையுமாகிய இவற்றில் இசைய அடக்கி, திருத்தமாகத் துள்ளப்படுதலும் தூங்கப்படுதலும் மெலிக்கப்படுதலுமாகிய இவை சிறந்து நிற்கச்செய்து, அமுதத்தை யொத்த பாடலினோசையும் இசையினோசையுந் தம்முள் வழுவாமல், சாமவேத கீத ராகிய பெருமானர் எல்லோர்க்கும் விருந்துபோலக் காதாற் பருகப் பாடி யருளினர்.

(வி - ம்) மந்தரம் மத்திமம் தாரம் என்பன முறையே படுத்தல் நலிதல் எடுத்தல் எனப்படும். இவை இசை வேறுபாடுகள். '' நீடவங் குறுகவ் நிவப்புத் தூக்கிப் - பாடிய புலவர் '' என்னூர் ஐயனரிதனாரும்.

'' பாவோ டிணைத லிசையென்னூர் பண்ணென்னூர்
மேவார் பெருந்தான மெட்டானும—பாவாய்
எடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார் '' என்பதனானறிக.

[மந்தர மத்திம தார மென்பவற்றை, திருத்தொண்டர் புராணத்தில், '' மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையாற் - றந்திரிகண் மெலி வித்துஞ் சமங் கொண்டும் வலிவித்தும் '' என வரும் ஆனாயநாயனார் புராணச் செய்யுளானும்,

உக-வது செய்யுள்முத லிதுகாறுங் கூறியவற்றைக் கல்லாடம் ''நீர்நிலை'' என்னும் உஉ-வது அகவலுரையானுமுணர்க.] (ஈஉ)

வேறு

விசைசார் மலரோ னறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்னே
அரசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே.

(இ - ள்) வாசம் பொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவர் கண்டறியாத வேறுபாட்டினையுடைய சிவபெருமான் பாண்டியர் திருக்கோலங் கொண்டு மதுராபுரியில் வீற்றிருந்தனன். அஃதியாது காரணமோ ? அரசனும்

அம்மதுரைப்பதியில் வீற்றிருந்த அப்பெருமான் என்னுடைய களங்கமமைந்த மனத்திலுங் குடிபுகுந்தான். அஃதியாது காரணமோ ? (அறியேன்.)

(வி - ம்) தம்மை மதியாது இருமாப்புற்றிரு றறிதற்கரிய ரென்பார் "விரை சார் மலரோ னறியா விகிர்தன் " என்றும், அத்தகையினர்க்கன்றி அன்பர்க் கெளியரென்பார் " அரசாய் மதுரை யமர்ந்தான் " என்றும், அவ்வாறிருத்தல் வியப்பு; அதனினும் களங்கமுடைய என் மனத்திற் குடிபுக்கது பெருவியப்பு என்பார் " புரீசார் மனனும் புகுந்தா னென்னே " ஏன்றுங் கூறினர். இதனை,

" மூவரா லு மறியொ ணுமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ ணுமலர்ச் சோதியான் "

என்பதனுனறிக. (கூக)

பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா வமர்ந்தா னென்னே.

(இ - ள்) பாடலமைந்த வேதங்களுங் தெளியாத பரமசிவன் மதுராபுரியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளினன். அஃதியாது காரணமோ ? அம் மதுராபுரியைப்போல, கொடுந்தொழிலையுடைய என் மனத்தையும் ஆடற் றொழி லமைந்த நடனசாலையாகக் கொண்டு வீற்றிருந்தருளினன். அஃதியாது காரணமோ ?

(வி - ம்) " பாடன் மறையுந் தெளியாப் பரமன் " என்றது, சுட்டறிவிற் பட்ட பாசஞானமாகிய சொற்பிரபஞ்ச மாதல்பற்றியும், " கூடல்போலக் கொடியே னகமும் ஆடலரங்கா வமர்ந்தான் " என்றது, இறைவன் அடியவர் மனத்தில் இடையறாது வசிப்பவனுதல்பற்றியு மென்க. இதனைத் தேவாரம் " செக்கு செக்கு நினைபவர் நெஞ்சுளே - புக்கு நிற்கும்பொன் னுர்சடைப் புண்ணியன் " என்றும், சிவஞானசித்தியார் " தாவர சங்கமங்க ளென்றிரண் டருவி னின்று, மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன் " என்றுங் கூறியவாற்று னறிக. (கூச)

நீல வண்ணன் தேறு நிமலன்
ஆல வாயி லமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே.

(இ - ள்) நீலமேகவண்ணராகிய திருமால் தேடியுணராத சிவபெருமான் திருவாலவாயி லெழுந்தருளி யிருந்தனன். அஃதியாது காரணமோ ? அத் திருவாலவாயிலில் எழுந்தருளிய சிவபெருமான் மலரில் மணம் (அபேதமாயிருப் பது) போல, ஏழையேன் மனத்திலுங் குடிபுகுந்தனன். அஃதியாது காரணமோ ?

(வி - ம்) "அலரில் வாசம் போலென் னுளமும் புகுந்தான்" என்றது அன்புஞ் சிவமும் அபேதமா யிருத்தல்பற்றி யென்க. இதனை,

திருமந்திரம்

"அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பு சிவமாவ தாரு மறிகிலார்
அன்பு சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே" என்பதனானும்,

திருவாசகம்

"மாறிலின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனெந்தின் வழியடைத் தமுதே
ஊறிலின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த இன்பமே யென்னுடை யன்பே"

என்பதில் "அன்பே" என்னும் னதுவினானுங் கண்டு கொள்க. (கூடு)

வேறு

பாணர்தம் பிராணைக் காப்பான் பருந்தொடு நிழல்போக் கென்ன
யாணரம் பிசைபின் செல்ல விசைத்தவின் னிசைத்தே னண்ட
வாணர்தஞ் செவிக்கா லோடி மயிர்த்துளை வழியத் தேக்கி
யாணரின் னமுத யாக்கை யிசைமய மாக்கிற் றன்றே.

(இ - ள்) பாணபத்திரரைக் காக்கும்படி, பருந்தினுடை நிழல்செல்வது போல, வீணைகரம்பிலெழுந்த இசையின் பின்செல்லப் பாடிய இனிய இசை யாகிய தேனுனது, (விஞ்சையர் முதலிய) ஆகாயவாசிகளுடைய காதாகிய கால் வழியே சென்று, உரோமங்களின் துளைவழியாய் வழிய நிரப்பி, (உண்ணுந் தோறும்) புதுமை விளைக்கும் இனிய அமுதத்தாற் பெருகிய அவர்கள் சரீ ரத்தை இசைமயமாக்கியது.

(வி - ம்) "பருந்தொடு நிழல்போக் கென்ன" என்றது, பருந்தினுடனே அதன் நிழலும் பின்பற்றிச் செல்வதுபோல, வீணையோசையோடு சாரீர வோசையும் பின்பற்றிச் செல்லுதலின். இதனை, சீவகசிந்தாமணி காந்தரு வதத்தையாரிலம்பகத்தில் "பருந்து மதனிழலும் பாட்டு மெழாலும்" என்ற வீடத்தில் [பருந்து பறக்கின்றவிடத்து முறையே யுயர்ந்து தன்னிலத்தின் கட் டாழ்ந்து பின்னு மம்முறையே மேன்மேலுயர்கின்றாற்போலப் பாடவேண் டுதலி னுவமையாயிற்று] என்றார் நச்சினார்க்கினியர்.

யாழ் + நரம்பு = யாணரம்பு. (கூசு)

தருக்களுஞ் சலியா முந்நீர்ச் சலதியுங் கலியா நீண்ட
பொருப்பிழி யருவிக் காலு நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத வின்னிசை யமுத மாந்தி
மருட்கெட வறிவன் றீட்டி வைத்தசித் திரமே யொத்த.

(இ - ள்) (ஓரறிவுயிர்களாகிய) மரங்களுஞ் சலியாவாய், முத்தொழில் புரியும் கீரையுடைய கடலும் ஒலியாவாய், உயர்ந்த மலையினின்றிழியும் அருவியாகிய கால்களும் நதிகளும் (அலகளாற்) புரண்டுதுள்ளாவாய், கிருபாசமுத்திரமாகிய இறைவன் பாடிய இனிய இசையாகிய அமுதத்தைப் பருகி மயக்க மகல, சிற்பதூற்றலெவ னெழுதிய சித்திரங்களேயே போன்றிருந்தன.

(வி - ம்) தருக்கள் முதலியன தமது சலித்த லொழிந்து சித்திரித்த தருக்கள் முதலியனே போன்றிருந்தன வென்பதாம். (கூஎ)

வீணைகை வழுக்கிச் சோர்வர் சிலர்சிலர் விரன டாத்தும்
யாணரம் பெழாலுங் கண்டத் தெழாலும்வே ருக வேர்ப்பார்
காணமோ டுவகை தள்ள நாத்தலே கடுங்கித் தங்கள்
மாணிழை யவர்மேல் வீழ்வர் விஞ்சையர் மயங்கிச் சில்லோர்.

(இ - ள்) (இன்னாருள் இறைவர் இசையைக்கேட்ட) சிலர் (தாம் ஏந்திய) வீணையானது கையினின்றும் வழுவிவிழச் சோர்வடைவார்கள். (வேறு) சிலர் விரல்கள் சென்றுலவும் வீணையின் நரம்பிலெழுந்த வோசையும் கண்டத் தோசையும் வேறுபட, வெயர் வரும்புவார்கள். விஞ்சையருட் சிலர் காணமும் மகிழ்ச்சியும் (ஒவ்வொரு பக்கம்) மேலோங்க காக்குழறி மதிமயங்கி, தங்கள் தங்கள் மனைவிமார்மேற் சோர்ந்து வீழ்வார்கள்.

(வி - ம்) இன்னார் முதலியோர் தந்தொழிலிழந்து பரவசமாயினர் என்பதாம். (கூஅ)

போதுளான் பரமன் பாதப் போதுளா னுனன் வேலை
மீதுளான் பரமா னந்த வேலைமீ துள்ள னுனன்
தாதுளாங் கமலக் கண்போற் சதமக னுடல மெல்லாங்
காதுளா னல்லே னென்றுன் கண்ணுளான் கானங் கேட்டு.

(இ - ள்) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் பாடியருளிய தேவகானத்தைக் கேட்டு, தாமரை மலரின்மேல் வாழும் பிரமதேவன் அச்சிவபெருமான் திருவடித் தாமரையின்கீ ழுள்ளவனுனன். திருப்பாற்கடலில் (அறிதுயில்கொண்டு) விளங்குந் திருமால் பேரின்பக் கடலின்மே லுள்ளவனுனன். இந்திரன் (தீனக்குள்ள) மகாந்தம் பொருந்திய தாமரைமலர் போன்ற கண்கள் போல, உடல் முழுதுஞ் செவிகளுடையவ னல்லனுயினே னென்று கவலையுற்றான்.

(வி - ம்) சதமகன் = நூறு யாகங்களைச் செய்தவன் ; இந்திரன். (கூக)

முனிவருந் தவத்த ராதி முத்தர்மா சித்த ரன்பின்
துனிவரும் பழங்கண் டீர்ப்பான் சுந்தரத் தேனன்றல் கீதங்
கனிவருங் கருணை யென்னுங் கடலிலன் பென்னு மாற்றிற்
பனிவருங் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட வின்பத் தாழ்ந்தார்.

(இ - ள்) வெறுப்பில்லாத தவத்தினர் முதலிய முத்தர்களும், மகாசித்தர்களும் அன்பினையுடைய பாணபத்திரர் கொண்ட துன்பமிக்க நடுக்கத்தை

யொழித்தற் பொருட்டு, சுந்தரேசப் பெருமான் பாடியருளிய தேவகான மானது (பாணபத்திரனது) கனிந்த கிருபையென்னுங் கடலில் அன்பென்னும் நதியுடன் அளிக்கும் ஆனந்த பாஷ்பமும் கலந்து பாய, இன்பக் கடலிலழுந்தினர். (சஂ)

ஊடிவே றெதுங்கித் துன்ப வுவரியுட் குளித்தார் தம்மிற்
கூடிவே றற்ற வின்பக் குளிர்கடல் வெள்ளத் தாழ்ந்தார்
நாடிவே றிடைப்பி ரிந்தார் மேன்மன நடாத்தி மேனி
வாடிவே ளலைப்பச் சோர்ந்து மம்மர்கோ யுழந்தார் மண்ணோர்.

(இ - ள்) நிலவுலகி லுள்ளவர்களில், பிணங்கி வேறிடத்தொதுங்கித் துன்பக் கடலில் மூழ்கிய பெண்கள் தமது கணவருடன் கலந்து ஒன்றுபட்ட இன்பமாகிய தண்ணிய கடல் வெள்ளத்தில் அழுந்தினர்கள். (பொருள் முதலியவற்றை) நாடி மறுபுலத்துச் சென்ற கணவர்மேல் தமது மனத்தைச் செலுத்திய மாதர்கள் உடல்மெலிந்து, மன்மதன்வருத்த வுணர்வழிந்து, காமநோயில் வருந்தினர்கள்.

(வி - ம்) ஊடிய மாதர்கள் கூடினர்களென்றதால் **மெய்ப்பாடு மகிழ்ச்சி**யும், கணவரைப் பிரிந்த மகளிர் தங்கணவர்மேல் மனஞ்செலுத்தின ரென்றதால் **மெய்ப்பாட்டவலமுமாகிய** அகப்பொருட்டுறைகள் விளங்கின. (சக)

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமா னரிமான் புல்வாய் வல்லிய மருட்கை யெய்தித்
தத்தமா றறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளு மிசைவலைப் பட்ட வம்மா.

(இ - ள்) படம் பொருந்திய தலையையும் விடம் பொருந்திய வாயையுமுடைய பாம்பும், பல பொறிகள் வாய்ந்த மயிலும், தொங்கி யசையும் வாயையுடைய யானையும், சிங்கமும், மானும், புலியும் மயங்கித் தத்தம் செல்வழி தெரியாதனவாகி, இடங்கள்தோறுந் தலைதடுமாறி மயங்கிச் சோரும்படி, இத்தன்மையாக மிருகங்களும் பறவைகளும் இசையாகிய வலையிலகப்பட்டன.

(வி - ம்) "வானவர் மக்கள் நாகர் விலங்குபுள் ளாதி செவியறிவோ டையறி வுயிரே" என்றபடி, ஐயறிவுடையனவாய்ப் பகுப்புணர்ச்சியின் றி நின்ற மிருகங்களும் தாம் செல்லும் வழியும் பகைமையுமின்றிச் சலியாதிருந்தனவென, இசையின் றெழிற் குணங் கூறுவோர், அவற்றின்மேலேற்றி வியப்பிடைச்சொல் வைத்து "இசைவலைப்பட்ட அம்மா" என்றார். (சஉ)

வன்றரை கிழிய வீழ்போய் வான்சிலை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்க ளெல்லாஞ் செவியறி வுடைய வாகி
மென்றளி ரீன்று போது விரிந்தகண் ணீருஞ் சோர
நன்றறி மாந்தர் போல நகைமுக மலர்ந்த மாதோ.

(இ - ள்) வலிய நிலமானது நிழிபட விழுதுவீழ்த்திப் பெரிய நிலைகள் கரிந்துபோக நின்ற (பரிசமென்னும்) ஓரறிவையுடைய மரங்கள் யாவும் (ஓசையுணரும்) செவியுணர்ச்சியையு முடையனவாகி, மெல்லிய தளிர் தளிர்த்து

அரும்பி, மலர்த்து, கண்ணீருஞ் சிந்த, நன்று தீது பகுத்துணரும் மக்கள்போல நகையுடன் முகமலர்ந்தன.

(வி - ம்) " புன்மர முதலவுற் றறியுமோ றறிவுயிர் " என்றபடி—ஒன்றறிவுயிர் எனப்பட்டது. கரிந்தமாங்கள் தளிர்த்து அரும்பி மலர்த்து கள் பொழுக்கி நிற்பச் செய்வது இசையின் குணமாதலின் அதனை அவற்றின் மேலேற்றிச் " செவியறி வுடையவாகி நன்றறி மூன்தர்போல நகைமுக மலர்ந்த வன்றே " என உபசரித்தார். (சஙு)

வாழிய வுலகின் வாழ்நர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரண மெல்லா மசைவற வடங்க ஐயன்
எழிசை மயமே யாகி யிருந்தன வுணர்ந்தோ ருள்ளம்
ஊழியி லொருவன் றுள்புக் கொடுங்கிய தன்மை யொத்த.

(இ - ள்) ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள தேவர்களும், மனிதர்களும், பறவைகளும், மிருகங்களும், பிறபொருள்களும், ஆழ்ந்த (மன முதலிய) அந்தக்கரணங்களெல்லாம் அசைவற்று அடங்கி நிற்க, சுந்தரேசப்பெருமான் பாடியருளிய எழிசையின் மயமாய் மூடிந்திருத்தலால், பரஞானமுடையோர் உள்ளம் ஊழிக்காலத்திலும் அழியாதுள்ள சிவபெருமான் திருவடியிற் சென்றொடுங்கிய தன்மையை யொத்திருந்தன. (சச)

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தி னெழுந்த மூல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ் சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரு மெய்யு முருக்கிய திசைவல் லோனை.

(இ - ள்) நீக்கண் பொருந்திய நெற்றியையுடைய சோமசுந்தரக் கடவுளின் சாமகீதம்பாடுந் திருக்கண்டத்தினின்றெழுந்த சாதாரிப் பண்ணுகியமைந்த தேவகானம் சராசாங்களையும், நிலவுலகத்தையும், விண்ணுலகத்தையும், நிறைந்த அட்டதிக்குகளையும் விழுங்கித் தன்மயமாகச் செய்து, இசைநூலில் வல்ல ஏமநாதனை உள்ளே நிறைந்த உயிரு முடலும் நெக்குவிட் டுருகச் செய்தது. (சரு)

வேறு

சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாப் புலன்கள்
ஐந்து மோசையா விசைவலா னிருந்தன னுகப்
பந்த நான்மறை நாவினும் பத்திர ஞளாய்
வந்து பாடினு ரிந்தனச் சுமையொடு மறைந்தார்.

(இ - ள்) இசைநூலில் வல்ல ஏமநாதன் மனத்தின் வழியே யியங்கும் ஐம்பொறிகளுஞ் செவிகளாகவும் ஐம்புலன்களுஞ் சத்தவுணர்வாகவும் இருக்க, நான்கு வேதங்களையுந் தமது திருநாவாற் பாடியருளிய சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரர் அடிமையாய் வந்து, கட்டமைத்த சாதாரிப் பண் பாடி, விறகின் சுமையுடன் மறைந்தருளினர்.

(வி - மீ) "பத்த ஞான்மறை" என்றது—பதம் நிரை பாழி சாகை பஞ்சாதி அநுவாகமென உறுப்புகளுடைமையாலும், " ஐம்பொறிகளுஞ் செவிகளாப் புலன்க ளைந்து மோசையா " என்றது, மனத்தின் வழியே செல்லும் ஐம் பொறிகளும் அதன்வழியே நின்றதாலும், ஒருணர்ச்சி அதிகரித் தெழுங்கால் ஏனை யுணர்ச்சிகள் சுருங்குவதாலுமெனக் கொள்ளக் கிடந்தது. (சசு)

யான நிந்தசா காரியன் நிம்பரு ளிதனை
ஞான நிந்துதென் நெருவரு நவின்றிலர் தேவ
கான மீதிவற் குணர்த்தினேன் கடவுளே யன்றி
ஏனை மானுடர் வல்லரோ இதுவியப் பென்ன.

(இ - ள்) இது ஞான் கற்ற சாதாரிப் பண்ணல்ல. இவ்வுலகத்தில் இப் பண்ணினை ஞான் கேட்டறிந்துளேனென்று ஒருவரும் கூறிற்றிலர். (இங்கு வந்த விறகாள் பாடிய) இது தேவகானமாம். இவனுக்குக் கற்பித்தவன் கட வுளே யல்லாமல், மற்ற மானுடர் கற்பிக்கவல்லரோ? இது அற்புதமான செய்தி யென்று. (சஎ)

இழுக்கி விட்டஇக் கிழமக னிசையிதே லந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் நெவென மதியா
அழுக்க முற்நெழுந் திசைவலா னடித்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான்.

(இ - ள்) பாணபத்திரனால் தள்ளிவிடப்பட்ட இந்தக் கிழவனே பாடும் இசை இத்திறத்ததாகில், அத்தக் குற்றமில்லாத பாணபத்திரன் பாடும்பாடல் எத்திறத்ததோ? என்று கருதி, இசைநூலில் வல்ல ஏமநாதன் கவலையுற் நெழுந்து, தன்கீழ்ப் பாடல் கற்ற மக்கள் கூட்டங்களும் தலைதடுமாறிச் செல்ல, பாதியிரவில் (பிறர்க்குத் தெரியாமல்) ஓடத் தலைப்பட்டனன். (சஅ)

மடக்கு பல்கலைப் பேழையு மணிக்கலம் பிறவும்
அடக்கு பேழையுங் கருவியாழ்க் கோலுமாங் காங்கே
கிடக்க மானமு மச்சமுங் கிளர்ந்துமுன் னீர்த்து
நடக்க வுத்தர திசைக்கணே நாடிஞ னடந்தான்.

(இ - ள்) பல வஸ்திராங்களை வைக்கும் மடக்குப் பெட்டியும், இரத்தினபர ணங்களும் மற்றுள்ளனவு மடக்கிய பெட்டிகளும், வீணையும், வைத்தவிடங் நோறும் அவ்வாறே யிருக்க, மானமும் பயமும் மேலெழுந்து முன்னிழுத்துச் செல்ல, வடதிசையின் கண்ணே நாடிச்சென்றனன்.

(வி - மீ) தான் பாணபத்திரரோடு பாடிஞல் தனக்கு மானக்கேடு வரு மென அச்சமெய்தி, வைத்த யாவுமறந்து சென்றனென்பார் "மானமும் அச்ச முங் கிளர்ந்து முன்னீர்த்து நடக்க மடக்கு * * * ஆங்காங்கே கிடக்க" என்றார். (சக)

சிவிகை யோர்வழி விறலிய ரோர்வழி செல்லக்
கவிகை யோர்வழி கற்பவ ரோர்வழி கடுகக்

குவிகை யேவல மொருவழி கூடகா ணுள்ளத்
தவிகை யேர்வரு மொருவழி யகன்றிட வகன்றூன்.

(இ - ள்) பல்லக்கு ஒரு வழியிலும் பாடும் பெண்கள் ஒரு வழியிலுஞ் செல்லவும், குடை ஒரு வழியிலும் தன் கீழ்க்கற்பவர் ஒரு வழியிலும் விரைந்து செல்லவும், கூப்பிய கையையுடைய ஏவலாளர் ஒரு வழியிற் செல்லவும், மனத்தில் காணெழுந்த பாடற் கீழ்மக்களும் ஒரு வழியிற் செல்லவும், (ஏமகாதன் ஒரு வழியிற்) சென்றான். (இ0)

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
இன்று பத்திர விசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திர னடிமையா மென்றுபாண் செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோ ளென்றார்.

(இ - ள்) வெற்றி வாய்ந்த இடப வாகனத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் அப்பொழுது, பாணபத்திரருடைய சொப்பனத்திலே வந்து, பாண பத்திரனே ! இப்பொழுது இசைவல்லானுகிய ஏமகாதனிடத்தில் நாம் விற காளாகச் சென்று, பாணபத்திர னடிமையா ளென்று இசைபாடி (அவனை) வென்று உனது வேண்டுகோளால் உன்னைக் காவல்செய்தோமென்று கூறியருளினர்.

(வி - ம்) திருநாவுக்கரசு நாயனார்

"சலமிலன் சங்கான் சார்ந்த வர்க்கலால்
நலமில ஞடொறு நல்கு வானவன்" எனவும்,

மாணிக்கவாசகர்

"அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானங்
களவறுத்து கின்றூண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும்"

எனவும் கூறிய ஏதுக்களால், சிவபெருமான் அடியார்க் கெளியராதலின், "விற காளாய்ச் சென்று பத்திர னடிமையாமென்று நின் வேண்டுகோள் பத்திரஞ் செய்தோம்" என்றார். (இக)

குஞ்சி நாண்மலர்க் கொன்றையா ரங்ஙனங் கூறும்
நெஞ்சி னுல்நிணப் பரியசொற் கேட்டலு நெஞ்சம்
அஞ்சி னுனிது செய்யவோ அடியனேன் மறைகட்
கெஞ்சி னுரையின் றிரந்தவா றென்றுகண் விழித்தான்.

(இ - ள்) அன்றலர்ந்த கொன்றைமலர் மாலையைச் சிகையிலணிந்த சிவ பெருமான் அப்படிக் கூறியருளும் மனத்தாலும் நினைத்தற்கரிய சொல்லைக் கேட்டபொழுதே, (பாணபத்திரர்) மனந் துணுக்குற்றார். வேதங்களுக்கும் எட்டாத பெரியவரை அடியேன் இந்த இழிதொழிலைச் செய்யவா இப் பொழுது குறைகூறியிரந்த வகை ? என்று கண் விழித்தெழுந்தார். (இஉ)

கண்ம லர்ந்தெழு பத்திரன் கரையிலா வுவகை
உண்ம லர்ந்தெழு மன்புகொண் டிக்கவெங் கதிரோன்

விண்ம லர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயிற்
பண்ம லர்த்தகான் மறைப்பொரு ளடித்தலம் பணிந்தான்.

(இ - ள்) தூயிலுணர்ந்தெழுந்த பாணபத்திரர் எல்லையில்லாத மகிழ்ச்சியை உள்ளே பெருக்கி யெழுந்த அன்பானது செலுத்த, சூரியன் ஆகாயத்தி லுதயஞ் செய்து எழுதற்கு முன்னமே போய், விண்ணிழி விமானத்தி லெழுந்தருளிய இசையமைந்த நான்கு வேதங்களின் பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுளின் திருவடியைப் பணிந்தார்.

(வி - ம்) அன்பால் மகிழ்ச்சி பெருகுதலாலும், அன்பாலேயே சிந்தித்த லுஞ் சேவித்தலும் உளவாகலாலும் "உவகையுண் மலர்ந்தெழு மன்பு கொண் டேக * * அடித்தலம் பணிந்தான்" என்றார். இதனை,

திருவாசகம்

"அன்பிலு லடியே லுவியோ டாக்கை யானந்த மாய்க்கசிந் தருக" என்றும், "சிந்தனை நின்றனக் காக்கி நாயினேன்றன் கண்ணினைநின் றிருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி யைம் புலன்க ளார வந்தனை" என்றும் வருவனவற்றா லுணர்க. (நசு)

கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியி லேற்றவோ முண்டகத் தாள்களொந் திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா விளைந்ததே குற்றம்.

(இ - ள்) வெப்பம் பொருந்திய காட்டிற் செல்லவோ? கட்டிய விறகைத் திருமுடியில் ஏற்றவோ? தாமரை மலர்போலுந் திருவடிகள் நோவ நடந்தருளி, சிற்றடியேன் காரணமாக (பாணபத்திர னடிமை யென்னும்) தகாத சொல்லைக் கூறவோ? வஞ்சக் கொடுந் தொழிலையுடையேன் குறைகூறி யிரந்தவகை (ஆ! ஆ!) குற்றம் விளைந்தது. (நிச)

நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமுஞ் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதஞ்
செடிய னேன்பொருட் டாகஇச் சேணிலந் தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ ஐயநின் பெருமை.

(இ - ள்) விஷ்ணுமூர்த்தி முதலிய தேவர்களிதயங்களையும் எண்ணிறந்த வேதங்களையும் கடந்துநின்ற உனது கமலபாதங்கள் இழிதொழிலுடையேன் காரணமாக இத்தப் பெரிய நிலவுலகத்திற் றோய்ந்தன. ஐயனே! அளத்தற் கரிய உனது பெருமை அடியேனளவில் எளிதாகி நின்றதோ. (நுஙி)

நாத அந்தமுங் கடந்தமெய்ஞ் ஞானவா னந்த
போத மென்பரஃ தின்றெரு புடவிமா னுடமாய்
ஆத பந்தெறத் தறிந்தவிந் தனஞ்சுமந் தடியேன்
பேதை யன்பள வாயதோ பெருமநின் னருவம்.

(இ - ள்) பெருமானே! தேவரீர் திருவுருவம் நாதாந்தத்தையுங் கடந்த சச்சிதானந்தமென்று கூறுவர். அத்தகைய திருவுருவம் இப்பொழுது (நில வுலகில்) ஒருமாநுடத் திருவுருவமாய், வெயில் சுட்டு வருத்தலால் முறிபட்ட விறகினைச் சுமந்து, பேதைமைத் தன்மையையுடைய அடியேனது அன்பென் னும் எல்லையில் எளிதாகி நின்றதோ. (இசு)

மறிந்த தெண்டிரை கிடந்தவ னுந்தியில் வந்தோன்
அறிந்த தன்றரும் பொருள்வரம் பகன்றெழு விசும்புஞ்
செறிந்த அண்டமுங் கடந்தது சிறியனேன் பொருட்டாத்
தறிந்த விந்தனஞ் சுமந்ததோ தம்பிரான் முடியே.

(இ - ள்) தேவரீர் திருமுடி, மடங்கிவருந் தெள்ளிய அலைகளையுடைய திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் திருமாலும், அவனுந்தியினின்று தோன்றிய பிரமதேவனும் உணர்ந்ததன்று. அணுவளவையுங் கடந்து, பரந்த விண்ணுலகத்தையும் ஏனைய அண்டங்களையுங் கடந்து நின்றது. (அது கடைப்பட்ட) சிறியேன் காரணமாக முறிபட்ட விறகுசுமையைச் சுமந்து நிற்கின்றதோ. (இஎ)

என்ன வந்தணை செய்துகின் றீறத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனை வலங்கொடு மீண்டு
மன்னர் தம்பிரா னுகிய வரகுண தேவன்
தன்னை வந்தடி பணிந்தனன் தந்திரிக் கிழவோன்.

(இ - ள்) என்று வீணையில் வல்ல பாணபத்திரர் வணங்கி நின்று துதித்து, அங்கயற் கண்ணம்மையார் எழுந்தருளி யிருக்கும் (இடப்) பாகத்தையுடைய சோமசுந்தரக் கடவுளைப் பிரதக்ஷிணஞ் செய்து திரும்பி, அரசர்கட்கரசனுகிய வரகுணதேவ பாண்டியனிடம் வந்து பாதங்களைப் பணிந்து (ஒருபுடை) நின்றனர்.

(வி - ம்) தந்திரி=வீணையின் தண்டம். அஃது வீணையை யுணர்த்தியது.

வந்த வேழிசைத் தவிமகன் வரவறிந் தரசன்
அந்த வேழிசைக் கிழவனை யழையென வுழையோர்
பந்த யாழ்மக னிருக்கைபோய்ப் பார்த்தனர் காணுர்
சிந்தை யாகுல மடைந்தவன் போனவா தெளியார்.

(இ - ள்) வரகுணதேவ பாண்டியன் தன்னிடம் வந்த ஏழிசையில் வல்ல பாணபத்திரரது வருகையை யுணர்ந்து (வடதிசையி லிருந்துவந்த) அந்த ஏழிசையில் வல்ல ஏமநாதனை யழைப்பீரெனப் பணிக்க, வேவுகாரர் தண்டின் கட்டமைந்த வீணையில் வல்ல ஏமநாதனுடைய விடுதியிற் போய்ப் பார்த்து அவனைக் காணுது, மனத்தில் வருத்தமுற்றெழிந்த ஏமநாதன் போனவழி உணராதவர்களாய்.

இஃதுமுத லிரண்டு பாடல்கள் குளகம்.

(வி - ம்) ஆறு என்னும் இடப்பெயர்ச்சொல் ஈறுதொக்கது. (இக)

எங்கு ளானெனத் தேடுவா ரிவரெதி ரயல்வாய்
அங்கு ளார்சில ரறிந்தவா றறைகுவா ரவனேற்
றிங்கு ளான்விற கெடுத்தொரு முதுமக னிவன்பாற்
பொங்கு மேழிசைப் பத்திர னடிமையாய்ப் போந்தான்.

(இ - ள்) (அந்த ஏமநாதன்) எங்கொளித்தானெனத் தேடித் திரியும் அந்த வேவுகாரருக் கெதிரே (அவ்வீதியின்) பக்கலில் வசிப்பவர்களிற் சிலர் அங்கு நிகழ்ந்த வகையை யொருவாறு கூறுவர் : அவன் மேற்றைப் பொழுதிங்கிருந்தான். ஒரு விருத்தன் விறகு சுமை யெடுத்துக்கொண்டு, இவ்வேம நாதனிடத்தில், விளங்கும் ஏழிசையில் வல்ல பாணபத்திர ரடிமையென்று வந்தான். (கூ0)

பாடி ஞன்பின்பு பட்டது தெரிகிலேம் பாஞள்
ஓடி ஞனெனைக் கேட்டலு மொற்றர்போய்க் கொற்றஞ்
சூடி ஞனவை யடைந்தவர் சொல்லிய வாறே
ஆடி ஞர்வியப் படைந்தனு மானமுற் றரசன்.

(இ - ள்) (அம் முதுமகன்) பாடினன். பிறகு நடந்த செய்தியை யறியோம். பாதியிரவில் ஓடினனென்று கூறக்கேட்ட அப்பொழுதே வேவுகாரர் சென்று, வெற்றிமாலை யணிந்த பாண்டியன் சபையை யடைந்து, அங்குள்ளோர் கூறியபடியே கூறினர்கள். அவ் வரகுணதேவ பாண்டியன் (அதனைக் கேட்டு) அதிசயங் கூர்ந்து சந்தேகமுற்று.

(வி - ம்) ஏமநாதன் தன்னிடம் போந்த முதுமகளுடைய பாணபத்திர ரடிமையின் பாட்டால் ஓடினனென வியப்பும், பாணபத்திரர் தம்மிடம் பழகிய ஒரு முதுமகனுல் ஏமநாதனை வென்றனரோவென அநுமானமுங் கொண்டனன் பாண்டியன் என்பார் " வியப்படைந் தனுமானமுற் றரசன் " என்றார்.

இதுமுத லிரண்டு பாடல்கள் குளகம். (கூக)

தன்ன டைந்தஅத் தந்திரித் தலைவனை நோக்கி
என்ன வாறவன் போனவா றிங்கினும் போன
பின்னை யாதுசீ செய்தனை யெனவிசைப் பெருமான்
தென்னர் கோனடி தொழுதுதன் செய்தியை மொழிவான்.

(இ - ள்) (வரகுணதேவ பாண்டியன்) தன்னிடம் வந்த அந்த யாழில் வல்ல பாணபத்திரரைப் பார்த்து அவன் போனவகை யாதுவகை? நீ இங்கு கின்றும் போனபின்பு யாது செய்தனை? என வினவ, இசையில் வல்ல பாணபத்திரர் பாண்டியர் பெருமானது பாதங்களைப் பணிந்து, தம்மிடத்து நிகழ்ந்த செய்தியைச் சொல்லுவாராயினர்.

(வி - ம்) இங்கு + இன் + உம் = இங்கினும் - இங்கிருந்தும் என்பது பொருள். இன்உருபு ஐந்தாம் வேற்றுமை நீக்கப்படு பொருளில் வந்தது. (கூஉ)

நேன்னல் வாய்படி யேன்னின தாள்நிழல் நீங்கிப்
பின்னல் வார்சடை மௌலியெம் பிரானடி பணிந்தேன்

இன்ன லார்குறை யிரந்துமீண் டிருக்கைபுக் கிருந்தேன்
கன்ன லார்மொழி பங்கரென் கனவில்வந் தருளி.

(இ - ள்) நேற்றைப்பொழுதில் அடியேன் உமது பாத நிழலினின் றும் நீங்கி, பின்னிய தெடிய சடாமகுடம் பொருந்திய எமது சோமசுந்த ரப் பெருமானுருடைய திருவடியைப் பணிந்து, துன்பம் பொருந்திய எனது குறைபாடுகளை யிரந்து, திரும்பி என் வீட்டிற் சென்றிருந்தேன். கரும்பின் சுவைபோன்ற சொற்களையுடைய மீனாட்சி தேவியை வாமபாகத்திலுடைய அச் சோமசுந்தரக்கடவுள் என் கனவில் வந்தருளி.

(வி - ம்) "காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க"—என்னும் திருவாச கத்தின் படியே, சோமசுந்தரக் கடவுளே அடியவர் குறையை முடிப்பவராத லின், அவர் திருவடியில் என் குறையை யொப்புவித்து என்னிருக்கையி லிருந்தே னென்றார். (சுசு)

ஓடி யுன்பொருட் டாகநாம் விறகெடுத் தழுன்று
வாடி நின்பகைப் புறங்கடை வந்துசா தாரி
பாடி வென்றுநின் பகைவனைத் துரந்தன மெனச்சொல்
ஆடி னர்விழித் தேனிது நிகழ்ந்ததென் றறைந்தான்.

(இ - ள்) (காட்டிற்குச்) சென்று உன் காரணமாக நாம் விறகு சுமை யெடுத்தழுன்று வருந்தி, நின் பகைவனுகிய எமகாதனுடைய தலைவாயிலில் வந்து, சாதாரிப் பண் பாடி வெற்றிகொண்டு உனது பகைவனை யோட்டி னேம் என்றருளிச்செய்தனர். (அடியேன்) துயிலொழிந்தனன். இதுவே நடந்த செய்தியென்று (பாணபத்திரர்) கூறினர்.

(வி - ம்) தம்மைச் சரணடைந்தோரது துயரத்தை யொழித்தல் சிவ பெருமானுரது பாரமாதலால் "ஓடியுன்பொருட்டாக * * * பகைவனைத் துரந்தனம்" என்றார். இதனை, திருநாவுக்கரசு சுவாமிகள் "தன்னை யடைந் தோர் வினை தீர்ப்பதன்றே தலையாயவர்தம் கடனுவதுதான்" எனக் கூறிய தனு னுணர்க. (சுஉ)

ஏவன் மைந்தர்போய் விளங்கிவந் திசைத்ததும் வீணைக்
காவ லன்கனி நிகழ்ச்சியு மொத்தலிற் கைக்கும்
பூவ லங்கலா னீஃதுநம் பொன்னகர்க் கூடல்
தேவர் தம்பிரான் திருவிளை யாட்டெனத் தெளிந்தான்.

(இ - ள்) வேவுகாரர்கள் சென்று தெரிந்துவந்து கூறியசெய்தியும், வீணை யில் வல்ல பாணபத்திரர் கண்ட கனவின் நிகழ்ச்சியுந் தம்முளொத்தலால், வேப்ப மலர்மாலை யணிந்த பாண்டியன் இச்செயல் நமது அழகிய நகரமாகிய மதுரைப்பதியி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலே யெனத் தெளிந்துணர்ந்தனன்.

(வி - ம்) கைக்கும் பூ = கசப்பாகிய மலர்; வேம்பு. (சுடு)

இகழ்ந்த கூற்றெறி சேவடிக் கிடையறு நேயக்
திகழ்ந்த பத்திர னன்பையுக் தேவரைக் காப்பான்

அகழ்ந்த ஆழிகளுஞ் சுண்டவ னருளையும் வியந்து
புகழ்ந்து போய்மது ராபுரிப் புனிதனைப் பணியா.

(இ - ள்) அவமதித்த இயமனை யுதைத்தருளிய சிவந்த திருவடிகளுக்கு நீங்காத சிவநேயத்தால் விளங்கிய பாணபத்திரருடைய பத்திமையையும், (பிரமாதி) தேவர்களைக் காத்தற்பொருட்டு (சகரர்) தோண்டிய கடலிற்றோன்றிய நஞ்சினைத் திருவமுது செய்தருளிய பெருமானுடைய திருவருளையும் மெச்சிப் புகழ்ந்து சென்று, மதுரையிலெழுந்தருளிய பரிசுத்தனுகிய சோமசுந்தரக் கடவுளைப் பணிந்து.

(வி - ம்) இதிற்பொதிந்த சரிதங்கள் முன் விளக்கப்பட்டனவே யாதலின் ஆங்காங்குக் கண்டு கொள்க. (சுசு)

பத்தர் யாழிசைக் கிழவனைப் பனைக்கையா னெருத்தில்
வைத்து மாடமீ ணகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்த மாழ்ந்திட வரிசைகள் மிதப்புறச் செய்து
தத்து மான்றெடைத் தேரினன் றன்மனை புகுவான்.

(இ - ள்) பத்தரமைத்த வீணையில் வல்ல பாணபத்திரரைப் பனத்தண்டு போன்ற தூதிக்கையையுடைய யானையின் பிடரின்மேல் வைத்து, உபரிகைகள் நிறைந்த மதுராபுரியினைப் பிரதக்ஷிணஞ் செய்வித்து, (சிவநேயத்தில்) மலிந்த அவரது மனமுமயங்கப் பல வரிசைகளையும் அளவின்றி (அவாவடங்க்)க் கொடுத்து, தாவிச் செல்லுங் குதிரையைப் பூட்டிய தேரையுடைய வரகுண தேவபாண்டியன் தனது கோயிலுக்குச் செல்லுவோன். (சுஎ)

தேவ ருந்தவ முனிவருந் தேவரிற் சிறந்தோர்
யாவ ருந்தமக் காட்செய விருப்பவ ரிருதாள்
கோவ வந்துமக் காட்செய்து துங்குறை முடித்தார்
ஆஎ ரேலுமக் கீனைவரு மேவல ரன்றே.

(இ - ள்) தேவர்களும், தவத்தையுடைய முனிவர்களும், தேவர்களுட் சிறந்த (பிரமன் முதலிய) யாவரும், தமது குற்றேவல் செய்யவிருக்குஞ் சிவபெருமானுர், தமது உபயபாதங்களும் வருந்தவந்து உமக்கு அடிமை செய்து, உமது குறைபாட்டினை யொழித்தருளினராகில், உமக்கு (அத்தேவர் முதலிய) யாவரும் (குற்றேவல் புரியும்) ஏவல் மக்களல்லரோ? (சுஅ)

ஆத லாலெனக் குடையரீ ருமக்குநா னடியேன்
ஈத லாலெனக் கும்மெமாடு வழக்குமே றிலைநான்
ஓத லாவதோர் குறையுள தின்றுதாட் டுமக்கு
வேத நாதனைப் பாடலே கடனென விடுத்தான்.

(இ - ள்) ஆகையினுல், என்னை யாளாகவுடையவர் தேவரீரே! தேவரீருக்கு நான் அடிமை; இதுவன்றித் தேவரீரொடு எனக்கொரு தொடுவழக்கில்லை; அடியேன் தேவரீரிடத்திற் கூறும் ஒரு குறைபாடுள்ளது. (அதாவது) இன்று முதல் நான்கு வேதங்கட்கும் தலைவராகிய சோமசுந்தரக் கடவுளைப்

பாடுவதே தேவரீர்க்குக் கடமையென்று (பாணபத்திரருக்கு விடை கொடுத்தி) அனுப்பினன். (சுகூ)

அரச னல்கிய வெறுக்கைபூ ணுடைகள் பிறவும்
பரசு நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து
வரிசை யாலிசைக் கிளையொடு மீண்டில்வந் தெய்திக்
கரைசெ யாமகிழ்ச் சிறந்திசைக் காவல னிருந்தான்.

(இ - ள்) இசைநூலில்வல்ல பாணபத்திரர் வருணபாண்டியன் கொடுத்த திரவியமும் ஆபரணமும் ஆடைகளும் மற்றுள்ளனவுமாகிய எல்லாவற்றையும், தம்மை வணங்கும் கவிஞரும் இசைகற்கும் மாணாக்கர்களுமாகிய யாவர்க்கும் பங்கிட்டுக்கொடுத்து, (பாண்டியன்)கொடுத்த வரிசையுடன் (தம்மைச்) சூழ்ந்த இசைநூல் வல்லாரோடு தமது வீட்டில் வந்தடைந்து, அளவில்லாத மகிழ்ச்சி யுற்று இருந்தனர்.

(வி - ம்) "யாவர்க்கும் பகிர்ந்து" என்றதனால், பாணபத்திரர் உயிர்ச்சார் பும் பொருட் சார்புமாகிய பற்றொழிந்தவரென்றும், "கரைசெயா மகிழ்சிறந்து" என்றதனால், சிவபெருமான் அடியவரிடத்திற் கொண்ட திருவருளைக் கருதுந் தோறும் ஆமகிழ்ச்சி யடைந்தனரென்றுங் கொள்க. (எ0)

ஆ திருவிருத்தம் - உக00.

நாற்பத்திரண்டாவது

திருமுகங்கொடுத்த படலம்

முன்னவன் மதுரை மூதூர் முழுமுத லிசைவ லாணை
இன்னிசை பாடி வென்ற தென்னுரை செய்கே னந்தத்
தென்னவன் சேரன் மாடே திருமுகங் கொடுத்துப் பாணர்
மன்னவன் தனக்குச் செம்பொன் வழங்கிய வழக்குஞ் சொல்வாம்.

(இ - ள்) (பிரமாதிதேவர்கட்கெல்லாம்) முற்பட்டவனும், தொன்று தொட்டுள்ள மதுராபுரிக்கு முதல்வனுமாகிய சோமசுந்தரக் கடவுள் (வடபுலத் திருத்துவந்த) இசைநூலில் வல்ல ஏமநாதனை (தேவசாந்தாரம்) பாடி வென்ற திருவிளையாடலை எவ்வாறு கூறி முடிப்பேன். அந்தப் பாண்டியர் திருக்கோலங்கொண்ட சோமசுந்தரக் கடவுள் சேரமான் பெருமானுருக்குத் திருமுகங் கொடுத்தருளிப் பாணர் பெருமானுர்க்குச் செம்பொன். அருளிய திருவிளையாடலை (யாம் இனி) எடுத்துக் கூறுவாம்.

(வி - ம்) 'என்னுரை செய்கே' னென்றது தனக்குச் சிறுமை கற்பித்து அஃதோர் அற்புதத் திருவிளையாடலெனத் தன்மை யொருமை வினைமுற்று லும், 'வழக்குஞ்சொல்வாம்' என்றது "அம்மா மென்பன முன்னிலை யாரையும்,

எம் ஏம ஓ மிவைபடர்க்கை யாரையும், உம்மூர் கடதற விருபாலாரையுங், தன் ஞெடி படிக்குந் தன்மைப்பன்மை" என்ற சூத்திரப்படி உளப்பாட்டுத் தன் மைப் பன்மை வினைமுற்றாலும் அமைந்தன. (க)

இனிமதி யெமக்கே தென்னு யாழ்வல்லோ னன்று தொட்டுப்
பனிமதி மருமான் கோயிற் பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயில்முப் போது மெய்திக்
கனிமதி யன்பிற் பாடுங் கடப்பமு நியமம் பூண்டான்.

(இ - ள்) வீணையில்வல்ல பாணபத்திரர் இப்பணி யெமக்கு இனிகல்லறிவு கொளுத்து மென்று, அந்நாள்முதல் குளிர்ந்த சந்திரமாபில்வந்த பாண்டி யனதுகோயிலில் இசைபாடும் உரிமையையொழித்து, வீளங்த பிறையை யணிந்த சோமசுந்தரக் கடவுள் திருக்கோயிலை முப்பொழுதிலுஞ் சென்ற டைந்து, தமது மனத்திற்கனிந்த அன்பின் முதிர்ச்சியாற்பாடுங் கடமையாகிய நியமத்தை மேற்கொண்டனர். (உ)

இத்தொழி லன்றி வேறு தொழிலிவற் கின்மை யாலே
பத்திர னிலம்பா டெய்தப் பொறுப்பரோ பழனக் கூடற்
சித்தமூர்த் திகளாகிய எமது பெருமான் மனத்தாலுவரோ? (தாளாதவராய்)
அரசனுடைய பொக்கிஷத்திலுள்ள பொருள்களே (எவர்க்கும் தெரியாது)
கவர்ந்து, பத்தர்பொருந்திய வீணையை இடத்தோளிலேந்திப்பாடும் பாணபத்
திரர்காண நாடோறும் வைத்தருளுவர்.

(வி - ம்) பாணபத்திரருக்கு அன்றன்றுள்ள குறைக ளொழிய அவ்வவற் றிற்கேற்பக் கொடுத்து வந்தமையின் "பாடுவோன் காண வைப்பா" என்றார்.

சிலபொலங் காசு சின்னுள் மணிக்கலன் சின்னுள் செம்பொற்
கலவகைச் சின்னு ளம்பொற் சாமரைக் காம்பு சின்னுள்
அலர்கதி ரிமான் சேக்கை யாடகத் தகடு சின்னுள்
குலமணி வருக்கஞ் சின்னுள் கொடுத்திடக் கொண்டு போவான்.

(இ - ள்) சில பொற்காசுகளைச் சிலகாலும், சில இரத்தினபரணங்களைச் சில காலும், பீதாம்பரங்களைச் சிலகாலும், அழகிய பொன்வேய்ந்த சாமரை யின் காம்புகளைச் சிலகாலும், பரந்த ஒளிவாய்ந்த சிம்மாசனத்தில் வேய்ந்த பொற்றகட்டைச் சிலகாலும், இரத்தினவகைகளைச் சிலகாலும் (சிவபெரு மான்) கொடுத்தருள, (பாணபத்திரர்) கொண்டுபோவா ராயினர்.

(வி - ம்) பெருமான் பாணபத்திரருக்குக் கொடுத்த பொருள்களாவும் பாண்டியன் கருவூலத்திருந்தே கொடுக்கப்படலின், ஒரே பொருளிலெடுத் தால் காவு வெளிப்படுமென்று கருதிச் சிற்சில தினங்களவரையில் ஒவ்வொரு பொருளைக் கொடுத்து வந்தனர் எனக்கொள்க. (ச)

கைவரும் பொருளைத் தந்த கள்வருந் தானு மன்றி
எவ்வெவர் தமக்குந் தோற்ற தெரியிலிட் டழித்துஞ் சின்னஞ்
செய்வன செய்துந் தன்னைச் சேர்ந்தவ ரிரந்தோர் கைபார்த்
துய்பவர் பிறர்க்கு மாற்ற துதவியுட் கவலை தீர்ப்பான்.

(இ - ள்) தமது கையிற் கிடைத்தபொருளைத் தந்தருளிய கள்வருந் தாமுமன்றி, யாவர்க்கும் புலப்படாமல் கெருப்பிலிட்டுருக்கியும் உருவேறு படித்தும் பொருள்களை உருவேறுபடுத்தியும், தம்மையடைந்தவரும் தம்பாலி ரப்பவரும் தமது கைவரவைப் பார்த்துப் பிழைப்பவரும் பிறருமாகிய யாவருக் குங் குறையாது கொடுத்து, மனக்கவலையொழித்து வருவார் (பாணபத்திரர்).

(வி - ம்) எரியிலிடல் முதலியன பாண்டியன் பொருள்களுதவின், அவன் அவற்றைக் கண்டு ஐயுறுவண்ணஞ் செய்த செயல்க ளென்க. (இ)

வைகலுங் கொடுப்போர் பின்னுள் மறுத்தன ராகப் போய்ப்போய்க்
கைதொழு திறைஞ்சி வாளா வருமவன் கலியின் மூழ்கி
உய்வகை வேறு காணு தொக்கலு மொக்க வாடிக்
கையற வடைய கோனு துறங்கினன் கனவி னெல்லை.

(இ - ள்) தினந்தோறுங் கொடுத்துவருஞ் சோமசுந்தாக்கடவுள் பின் வருகாளில் மறுக்க, (அதுமுதல்) சென்று சென்று கைகுவித்துப்பணிந்து (இசைபாடி) ஒன்றும் பெறாதவரும் பாணபத்திரர் வறுமையி லழுந்திப் பிழைக்கும்வகை பிறிதொன்று உணராது, தமது சுற்றத்தோடு ஒருசேரவாடித் துன்பமுக, அதனையாற்றாது கண்துயில் கூர்ந்தார். (அவர்) கனவில்.

(வி - ம்) உதவி செய்துவந்த பெருமான் மறுத்தமையின், "உய்வகை வேறுகாணாது வாடி யுறங்கினன்" என்றார். (ஈ)

சித்தவெழ் பெருமான் வந்து செப்புவா ரப்பா நிம்பத்
தொத்தவன் கோசந் தன்னிற் றும்பியுண் கனியின் வெளவி
இத்தன மின்று காறு மீந்தன மெம்பா லன்பு
வைத்தவ னறிந்தாற் சங்கை மனத்தனுப் விகற்பங் கொள்வான்.

(இ - ள்) சித்தமூர்த்திகளாகிய எமது பெருமானுர்வந்து சொல்கின்றார்: அப்பா! வேப்பமலர் மாலையணிந்த பாண்டியனுடைய பொக்கிஷத்தில், யானை யுண்ட விளங்கனிபோல (அதிலுள்ள பொருளைக்) கவர்ந்து இப்பொருளை இத்தினம்வரையிற் கொடுத்துவந்தோம். எம்மிடத்து நின்போல் அன்பு வைத்த வாருணபாண்டிய னறிந்தால், ஆசங்கைகொண்ட மனமுடையவனுய் வேறுபாடு கொள்வான். (எ)

மயலறக் கற்புக் காக்கு மகளிர்போற் றுறவு காக்க
முயலும்யோ கரிலுட் காப்பு முரசெறி புறஞ்சூழ் காப்புங்
கயலிலச் சினையு நிற்கக் கவர்ந்ததற் புதமிக் கள்வன்
உயிர்தொறு மொளித்த கள்வ னெருவனே வறியே னென்பான்.

(இ - ள்) மயக்கமறக் கற்பினைக்காக்குங் கற்புடை மகளிர்போலவும், அற வறத்தைக் காக்க முயலுஞ் சிவயோகிகளைப் போலவும் அகக்காவலும், மூர செறித்து புறஞ்சூழ்ந்தவரும் புறக்காவலும், இட்ட மீனமுத்திரை இட்டபடி யாயு மிருக்க, (கருவூலத்திருந்த பொருளை) வௌவியது பெருவியப்பு. (நினைத் தப்பார்க்கில்) இக்கள்வன் உயிர்கள்தோறு மொளித்துநின்ற கள்வனுமிய இறைவனே? அறியேனென்று கூறிச் சந்தேகிப்பான். (அ)

கோமக னினையே செய்தி யறியுமேற் கோசங் காப்போர்க்
காமுறு தண்ட நின்போ லன்பகத் தெம்மை வைத்த
தேமரு போந்தின் கண்ணிச் சேரமான் றனக்குப் போது
நாமொரு முடங்கல் தீட்டி நல்குவம் போதி யென்ன.

(இ - ள்) வரகுணபாண்டியன் இச்செய்தியையறிவனுயின், கருவூலங்காப் பவர்க்குத் தண்டனையுண்டாம். உன்னைப்போல அன்பால் தம்மனததிலென் றும் எம்மை நீங்காதுவைத்த தேன்பொருந்திய பனைமாலையையணிந்த சேரமான்பெருமானுராகிய கழறிற்றறிவார் நாயனருக்கு இப்பொழுது நாமொரு திருமுகம்வரைந்து கொடுப்போம் போவாயென்று.

(வி - ம்) சேரமான்பெருமானுயனுர் சேரர்குலத்திலவதரித்து இராஜ போகத்தை வெறுத்து, தீநவஞ்சைக்கஞ்சுகத்தையடைந்து சிவபெருமானுடைய திருவடிக்கன்பு பூண்டொழுகியும், தமது தந்தை அரசினைவெறுத்துத் தவஞ் செய்ய வனத்திற்குச் சென்றபொழுது மந்திரிமுதலானுர்வந்துவேண்டச் சிவ பெருமான் கட்டளைப்படி முடிசூடியும், சிவசந்நிதியிற்சென்று பணிந்து யானை மேல் திருவீதி உலாவருகையில், தாம் கொண்டுவரும் உவர்மண் மழையால் நனைந்து உடல்முழுது மொழுகியுலர்ந்து வெண்ணிறமுற்ற ஓர் *ஈர்ங்கொல்லி தம்மெதிர்வரக்கண்டு சிவனடியரென யானையினின் றிறங்கிப்பணிய, அவ்வீர்ங் கொல்லி மதிமயங்கி எதிர்பணிந்து "அடியேன் **அடிவண்ணனே**" எனக்கூற, காயனர் "**அடிச்சேரன்**, திருநீற்றுத் திருவேடத்தை நினைப்பித்தீர் வருந்த வேண்டாம்" எனமொழிந்தும், நடராஜப்பெருமான் திருவடிக்குப் பக்தியுடன் அர்ச்சித்துத் திருச்சிலம்பொலிகேட்டுக் களித்துவருகாளில், ஒருபொழுது அத் திருச்சிலம்பொலி கேளாமையால் "யாது தவறிழைத்தேனே" என்று உடை வாளையுருவி மார்பில்காட்டி உயிர்விட நின்றபொழுது எம்பெருமான் மகிழ் வுடன் திருச்சிலம்பொலி கேட்பிக்கப்பெற்றும் விளங்குதலின் "நின்போலன் பகத் தெம்மைவைத்த - தேமருபோந்தின் கண்ணிச் சேரமான்" என்றுர். இதனை, தீநத்தோண்டர்புராணம் சேரமான்பெருமாணயனுர் புராணத்திற் கண்டுகொள்க. (கூ)

மறைக்குரை செய்த வாக்கான் மதிமலி புரிசை யென்னுஞ்
சிறப்பியற் சீர்சால் செய்யுட் பாசுரஞ் செப்பித் தீட்டிப்
பிறைச்சடைப் பெருமா னல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வன்
உறக்கநீத் தாடிப் பாடி யுவகைமா கடலி லாழ்ந்தான்.

* ஈர்ங்கொல்லி - வண்ணன்.

(இ - ள்) (கண்ணுவர் முதலிய முனிவர்கட்காக வேதத்திற்குப்) பொருளருளிச்செய்த திருவாக்கினால் " மதிமலி புரிசை " என்னும் (முதலியுடைய) சிறப்புப் பொருந்திய சீரமைந்த செய்யுளாகிய திருமுகப்பாசுரமொன்று திருவாய்மலர்ந்து வரைந்தருளி, பிறைச்சந்திரனை யணிந்த சடையையுடைய சோமசுந்தரக்கடவுள் கொடுத்து அந்தர்த்தானமாயினர். பெரிய பண்பாடுதலில் வல்ல பாணபத்திரர் அயிலுணர்ந்தெழுந்து (ஆகந்தப்பெருக்கால்) ஆடியும் பாடியும் மகிழ்ச்சி யென்னும் பெரிய கடலிலழுந்தினர்.

(வி - ம்) இச்செய்யுளிற் கூறிய விஷயத்தை:—

" அதிர்கழ லுதியர் வேந்தற் கருள்செய்த பெருமை யாலே
எதிரில்செல் வத்துக் கேற்ற இருநிதி கொடுக்க என்று
மதிமலி புரிசை யென்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத் **திருமுகங்** கொடுத்தார் காண "

எனத் திருத்தொண்டர்புராணம் மாறுபடாது கூறுதல் காண்க. (கo)

திருமுகப்பாசுரம்

திருச்சிற்றம்பலம்

" மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பாணீற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யா மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய சூடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லெம்பா லன்பன் றம்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடப் பதுவே "

திருச்சிற்றம்பலம்

என்றது—(சிற்பநூல் வல்லோர்) நுண்ணுணர்வு நிறைந்த மதில்சூழ்ந்த கான்மாடக்கூடலென்னுந் திருநகரமாகிய மேலே பறந்துலவும் வெண்ணிறமும் வரிகளுமமைந்த சிறகையுடைய அன்னங்கள் சஞ்சரிக்குஞ் சோலைசூழ்ந்த திருவாலவாயிலில் நிலைபெற்றுள்ள சிவன் யாம் கூறியருளும் வார்த்தை : கார்கால மேகம்போல, கவிவல்லுநர்க்குத் தனதுரிமையினின்று அவர்களுக்குரிமைப்பட வுதவி, வெண்ணிறம்பொருந்திய பூரணசந்திரன்போல விளங்கும் வெண்கொற்றக் குடை நிழல்செய்ய (தேவமணி முதலிய இலக்கணங்களால்) ஒளிவாய்ந்து பகைவர் மூனையில் அஞ்சாது செல்லுங் குதிரையைச் செலுத்தும் சேரமான் காண்க— (இசைத்தொழிற்) பண்பால் யாழ் வாசித்தலில் வல்ல பாணபத்திரன் தன்னைப் போல எம்மிடத்தில் அன்பு மிக்கோன். தன்னைக் காணக்கருதி வந்தனன். (அறத்தாறீட்டிய) மாட்சியையுடைய பொருளைக் கொடுத்து என்னிடத்து வர விடுக்க—எனப் பொருள்படும்.

வேறு

வாங்கிய திருமுக மணிப்பட் டாடையிட்
டாங்கிறை யடிபணிந் தகன்று பத்திரன்
ஓங்கிய கோயிலை வலங்கொண் டொல்லென
நீங்கிமேல் வரைப்புல நெறிக்கொண் டேகுவான்.

(இ - ள்) பாணபத்திரர் தாம் வாங்கிக்கொண்ட திருமுகத்தினை அழகிய பட்டாடையில் வைத்து, சித்தமூர்த்திகளாய் வந்த சோமசுந்தரக்கடவுள் திருவடியைப் பணிந்து அங்கு நின்றும் நீங்கி, (விண்ணளவு) ஓங்கிய திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து விரைந்து புறம்போந்து, மேற்றிசையிலுள்ள மலைநாட்டின் வழிக்கொண்டு செல்லத் தொடங்கினர். (கக)

கோல்லையுங் குறிஞ்சியுங் கொதிக்கும் வெம்பரற்
கல்லத ரத்தமுங் கடந்து முட்புறப்
பல்சுளைக் கனியடி யிடறப் பைப்பைய
நல்வளங் கெழுமலை நாடு நண்ணினான்.

(இ - ள்) முல்லை நிலத்தையுங் குறிஞ்சி நிலத்தையும் வெய்மையாற் கொதிக்கும் பருக்கைக் கற்களை வழியிலுடைய பாலை நிலத்தையுங் கடந்து, முள்ளைப் புறத்திலுள்ள பல சுளைகளமைந்த பலாக்கனிகள் தமது காலிலிடற, மெல்ல மெல்லச்சென்று, நல்ல வளமிக்க மலைநாட்டை யடைந்தனர் (பாணபத்திரர்.)

(வி - ம்) அதர்=வழி. அத்தம் - பாலைநிலம். (கஉ)

அலைகடல் தெடுந்துகி லத்த காடெனுந்
தலைமகள் தனக்குவான் றடவு குன்றுபூண்
முலையென விளங்கின முகத்திற் றீட்டிய
திலகமே யானது திருவஞ் சைக்களம்.

(இ - ள்) அலைக்குங் கடலாகிய தெடிய ஆடையை யுடுத்த அந்த மலைநாடென்னுந் தலைமகளுக்கு, வானமளாவிய மலைகளே ஆபரணமணிந்த முலைகள்போல விளங்கின. திருவஞ்சைக்களமென்னுந் திருநகரம் (அத்தலைமகள்) முகத்திலிட்ட திலகமாக விளங்கியது. (கூ)

அறமக ளாக்கமு மலரின் மேயசெந்
நிறமக ளாக்கமு நீதி சான்றபோர்
மறமக ளாக்கமும் வடசொற் றென்கலைத்
திறமக ளாக்கமுஞ் சிறந்த தந்நகர்.

(இ - ள்) தரும மங்கையாலாகிய ஞானச் செல்வமும், தாமரை மலரில் வசிக்குஞ் செந்நிறம் பொருந்திய திருமகளாலாகிய பொருட் செல்வமும், நீதியின் வழியமைந்த போர்த்தொழிற்குரிய வீரலக்ஷ்மியினுலாகிய பிரதாபச் செல்

வமும், ஆரியம் தமிழ் என்னும் பகுப்பமைந்த கலைமகளாலாகிய கல்விச் செல்வமும் அத்திருமகளிற் போலிக்கு சிறந்தன.

(வி - ம்) வடசொல் - ஆரியம். தென்கலை - தமிழ். (கச)

மண்புக ழுக்ககர் மறுகின் மாடொரு
தண்புனற் சாலியிற் சார்ந்து ளானிப்பால்
விண்புகழ் நீதியவ் வேந்தற் கன்றிரா
கண்புனை நுதலினர் கனவிற் றோன்றினர்.

(இ - ள்) பாணபத்திரர், நிலவுலகு புகழும் அங்ககாத்தின் வீதியிலுள்ள ஒரு தண்ணிய நீர்ப்பதலிற் சேர்ந்திருந்தனர். பின்னர், தேவர்களும் புகழத்தக்க நீதியையுடைய அச்சோமான் பெருமாணயனுர்க்கு அன்றிரவில் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுர் சொப்பனத்தி லெழுந்தருளினர். (கடு)

தென்னவன் மதுரையி லிருக்குஞ் சித்தர்யாம்
நின்னிடை வந்துளேம் நின்னைக் கண்டுதான்
கன்னிதி வேண்டநம் மோலை கொண்டுநம்
இன்னிசைப் பாணபத் திரனிங் கெய்தினன்.

(இ - ள்) நாம் பாண்டியன் அரசு செலுத்தும் மதுரையிலிருக்குஞ் சித்தர்; நின்னிடத்தில் வந்தோம். நின்னைக் கண்டு, தான் மிக்க பொருளைப் பெற நமது திருமுகங்கொண்டு நம்மிடத்தன்புள்ள இனிய இசையில் வல்ல பாணபத்திரன் இங்கு வந்திருக்கின்றனன். (கசு)

மற்றவற் கருகிதி கொடுத்து மன்னரீ
தெற்றென வரவிடு கென்று சித்தர்தாஞ்
சொற்றனர் போயினுர் சுரக்குந் தண்ணளி
ஒற்றைவெண் குடையினு னுறக்க நீங்கினுன்.

(இ - ள்) அரசனே! அப்பாணபத்திரனுக்குப் பெறுதற்கரிய பொருள் கொடுத்து விரைந்து அவனை எம்பால் வர நீ அனுப்புக வென்று சித்தமூர்த்திகள் சொல்லிச் சென்றருளினர். தண்ணிய கருணை சுரக்கும் ஒப்பில்லாத வெண் கொற்றக் குடையையுடைய சோமான் பெருமானுர் துயிலுணர்ந்தனர். (கள)

கங்குல்வாய்க் கண்டஅக் கனவைப் பெண்ணையங்
தொங்கலான் தமிழொடு சொல்லிச் சேற்கணுள்
பங்கினுன் திருமுகங் கொணர்ந்த பத்திரன்
எங்குளான் கொல்லெனத் தேட வெண்ணுவான்.

(இ - ள்) இரவிற் கண்ட அந்தச் சொப்பனத்தை அழகிய பூமாலையணிந்த சோமான் பெருமானுர் தமது உறவினராகிய மந்திரிகளோடு கூறி, அங்கயற்கண்ணியாரை வாமபாகத்திலுடைய சோமசுந்தரக் கடவுள் அருளிய திருமுகத்தைக் கொண்டு வந்த பாணபத்திரர் எங்கிருக்கின்றனரோ வெனத் தேடக் கருதுவார்.

(வி - ம்) சிவபெருமான் திருவருட் பெருமை தம்மு ளடங்காது மேலிடுத லின் "தமரொடு கூறினர்" என்றார். (கஅ)

மற்றவர் தமைத்தாமே வருக தில்லெனக்
கொற்றவ னேவலோர் குறுகி மாடமுங்
தெற்றியு மியமமு மன்றுஞ் சென்றுசென்
றெற்றிகழ் மணிகள செங்குந் தேடுவார்.

(இ - ள்) அப்பாணபத்திரை விரைந்துதேடி வருகவென்றேவ, சேர மான் பெருமானுருடைய வேவுகாரர் பலவிடங்களிலுஞ் சென்று, மாடங்களி லும் திண்ணைகளிலும் கடைவீதிகளிலும் அம்பலங்களிலும் போய்ப்போய், சூரி யன்போல்ப் பிரகாசிக்கும் அழகிய நகரமெங்குந் தேடுவாராயினர்கள்.

(வி - ம்) தில் என்னுமிடைச்சொல் "விழைவே கால மொழியிசைக் கிளவியென் றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே" என்பது சூத்திரமாகலின், காலத்தின்மேல் நிற்றலால் விரைந்து எனப் பொருள் கொண்டாம். (கக)

தருமநீர்ப் பந்தரி லிருக்குந் தக்கிரி
வருபிசைக் கிழவனைக் கண்டு வல்லைபோய்த்
திருமகற் குணர்த்தினர் சேர னோடெழீஇப்
பெருமகன் பாணர்தம் பிரான நண்ணினன்.

(இ - ள்) தருமத்தின் பொருட்டு வைத்த தண்ணீர்ப்பந்தலில் (இளைப் பாறி) வசிக்கும் வீணையில் வல்ல பாணபத்திரைக் கண்டு, விரைந்து சென்று சேரமான் பெருமானுக்குக் கூறினர்கள். அன்பினிற் பெரிய அச்சேரமான் பெருமானுர் தமது சேனையோடெழுந்து பாணர் பெருமானுராகிய பாணபத்தி ரையடைந்தனர்.

(வி - ம்) 'திருமகன் பெருமகன்' என்பன—சேரமான் பெருமானுர் முறையே அருட்செல்வம்போல அரசியலுக் குறுப்பாகிய பொருட் செல்வத்தி னும் பெரியரெனக் குறித்தன. (உ0)

கண்டனன் முகிழ்த்தகைக் கமலஞ் சென்னிமேற்
கொண்டனன் பாடினன் கூத்து மாடினன்
தண்டென வீழ்ந்தன னன்பிற் றண்ணரு
வண்டென மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே.

(இ - ள்) அரசர்கட் கரசாகிய சேரமான் பெருமானுர் கண்டு, அன்போடு கூப்பிய கைத்தாமரைகளைத் தமது சிரசின்மேற் சூடித்துப் பாடி, ஆனந்தக் கூத்தாடி, தண்டம்போல நிலமிசை வீழ்ந்து, தண்ணிய தேனைக் கண்ட வண்டு போலப் பாணபத்திரைக் கண்டு மகிழ்கூர்ந்தனர்.

(வி - ம்) சேரமான் பெருமானுர் பாணபத்திரைத் தூரத்திற் கண்ட பொழுதே திரியாங்கம் [சிரமேல் இருகரங் கூப்புதல்] செய்து பணிந்தன ரென்பார் "முகிழ்த்தகைக் கமலஞ் சென்னிமேற் கொண்டனன்" என் றும், தேனைக் கண்ட வண்டு மகிழ்வுற்றாற்போலப் பாணபத்திரைக் காண ஏக்

குற்றிருந்த சேரமான்பெருமானுர் கண்டபொழுதே அன்பு சிறந்து தன்வய மீங்கிப் பாடியாடி அஷ்டாங்கமாகத் திருவடியில் வீழ்ந்து பணிந்து ஆராவின்ப முற்றனரென்பார் " தண்ணரு வண்டென மகிழ்ந்தனன் மன்னர்மன்னனே " என்றுங் கூறினர்.

திருத்தொண்டர் புராணம்

" கேட்ட பொழுதே கைதலைமேற் கொண்டு கிளர்ந்த பேரன்பால்
காட்டம் பொழிநீர் வழிந்திழிய வெழுந்து நடக்க மிகவெய்தி
ஓட்டத் தம்பொன் மாளிகையின் புறத்தி லுருகுஞ் சிந்தையுடன்
பாட்டின் றலைமைப் பாணனுர் பாதம் பலகாற் பணிகின்றுர் "

என வருதலுங் காண்க. திரியாங்கம் என்றதை,

சிவபுண்ணியத் தெளிவு

" சிரமே காங்கம், வலக்கரத்தைச் சிரத்திற் குவித்தல் அவிதாங்கம்,
சிரமேல் வாம கரத்தினையுஞ் சேர்த்தல் திரிவி தாங்கமதாம்,
சிரநீள் கரஞ்சா நுக்கணிலக் தீண்டிற் பஞ்சாங் கமதாகும்,
சிரமோ வாய்சா துகைசானு செகத்திற் படித லட்டாங்கம் "

என்பதனுலறிக. (உக)

வாங்கினன் திருமுக மலர்க்க ணேற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போல்மகிழ்
தூங்கினன் றடங்கணீர் துளிப்ப மெய்யெலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே.

(இ - ள்) அரசர்க் கரசாகிய சேரமான் பெருமானுர் சிவபெருமானுர் கொடுத்தனுப்பிய திருமுகத்தை வாங்கித் தமது தாமரைமலர்போன்ற கண் களிலொற்றி, சிரசின்மேல் மலர்மாலைபோலச்சூடி மகிழ்ச்சிமிகுத்து, பரந்த கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ் சிந்தவும் மயிர்க்கூச் செறியவும் தேக முழுதும் விம்மித மடைந்தனர்.

(வி - ம்) திருத்தொண்டர் புராணம்

" அடியேன் பொருளாத் திருமுகங்கொண் டீண்ந்த தென்ன வவர்தாமுங்
கொடிசேர் விடையார் திருமுகங்கை கொடுத்து வணங்கக் கொற்றவனுர்
முடிமேற் கொண்டு கூத்தாடி மொழியுங் குழறிப் பொழிகண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்துவிழப் புவிமேற் பலகால் வீழ்ந்தெழுவார்."

எனக் கூறுவதுங் காண்க. (உஉ)

வேறு

மின்னனிருஞ் செம்பொன்மணி மாடக் கூடல் மேயசிவன்
யாமெழுதி விடுக்கு மாற்றம், நன்னர்முகி லெனைப்புலவர்க் குதவுஞ்
சேர நரபாலன் காண்கதன்போல் நம்பா லன்பன், இன்னிசையாழ்ப்
பத்திரன்றன் மாடே போந்தா னிருநிதியங் கொடுத்துவர விடுப்ப
தென்னத், தென்னர்பிரான் திருமுகத்தின் செய்தி நோக்கிச் சேரர்
பிரான் களிப்பெல்லை தெரியா ஞகி.

(இ - ள்) ஒளி விளங்கும் செம்பொன்னாலாகிய மாடங்களையுடைய நான் மாடக் கூடலாகிய மதுரையிலெழுந்தருளிய சிவபெருமானுகிய யாம் (திருக் கையால்) வரைந்தனுப்புந் திருமுகம்: (உலகிற்கு) நன்மையபக்கும் மேகம்போலப் புலவர்க்கு நன்மையபக்கும் சேரமானுகிய நரபதி காண்க: தன்னேப்போல நம்மிடத்து அன்பனுகிய இனிய இசையமைத்த யாழ் வாசித்தலில் வல்ல பாண பத்திரன் தன்னிடத்து வந்தனன். அவனுக்குப் பெருநிதி கொடுத்து வர விடுப்பது - என்று, பாண்டியர் பெருமானுராகிய சோமசுந்தரக் கடவுள் வரைந்தருளிய திருமுகத்தின் செய்தியை (வாசித்து)ப் பார்த்து, சேரர்பெரு மானுர் தமக்கு உண்டாகிய மகிழ்ச்சியால் அளவு தெரியாதவராகி.

இதுமுதல் எழு செய்யுள்கள் குளகம்.

(வி - ம்) இச்செய்யுளும் " மதிமலி புரிசை " என்னுந் திருநகப்பாசுர மும் கருத்துப் பேதமின்றி இருப்பது கண்டுகொள்க. (உங)

வேறு

பொன்னின் றளிகை மிசைவைத்துப் புழைக்கை மதமான் றலையேற்றி
மன்னுங் கொளையாழ்ப் புலவனேமுன் வைத்துப் பின்னே தானிருந்து
மின்னுங் கதிர்கா லிணைக்கவரி வீசிப் பலவே றியங்கலிப்பத்
தென்னென் றளியா ரிசைத்தாரான் திருமா நகரை வலஞ்செய்யா.

(இ - ள்) பொன்னுற் செய்த பீடத்தின்மேலிருத்தி, ஆவாரம் பொருந் திய துதிக்கையையும் மதமயக்கத்தையுமுடைய யானையின் மத்தகத்தின்மே லேற்றி, கிலெபெற்ற இசையமைத்த யாழில்வல்ல பாணபத்திரரை முன்னர் வைத்துத் தான் பின்னரிருந்து, விளங்கா நின்ற ஒளிவீசும் இணைக்கவரிகளை வீசி, பலவேறு வகைப்பட்ட வாத்தியங்க ளொலிப்ப, தென்னென் றிசை பாடும் வண்டுகள் பொருந்திய மாலையை யணிந்த சேரர்பெருமானுர் பெரிய அழகிய திருநகரினை வலஞ்செய்வித்து.

(வி - ம்) சைவ சமய நெறி

" தேசிகர் தம்மைச் சிவனேசர் தம்மையும்
ஈசனென வேயுளத்து ளெண் "

என்றபடி, சிவனடியவரைச் சிவமேயென வுணர்ந்த ஆரா அன்பினர் என்பார் "மூன் வைத்துப் பின்னே தானிருந்து - மின்னுங் கதிர்கா லிணைக்கவரி வீசி" எனனூர். (உச)

பஞ்சு தடவுஞ் சீறடியார் பலமங் கலங்கொண் டெதிர்போத
மஞ்சு தடவு நீள்குடுமி மாட மதியிற் கொடுபோகி
நஞ்சு தடவு மணிகண்ட னன்பன் றனிநன் னீராட்டி
அஞ்சு தடவி யோவியஞ்செய் தமைத்த மணிமண் டபத்தேற்றி.

(இ - ள்) செம்பஞ்சுக் குழம்பூட்டிய சிற்றடியையுடைய மாங்கல்யமாதர் கள் அஷ்டமங்கல மேந்தி எதிரே வர, மேக மளாவிய நீண்ட சிகரத்தையு டைய தமது கோயிலுக்குச் கொண்டு சென்று, ஆலகாலவிடம் பொருந்திய

ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் அன்பாகிய பாணபத்திரனை (வாசமிக்க) கல்லகீரால் ஸ்நானஞ் செய்வித்து, பஞ்சவர்ணங்களாற் சித்திரஞ் செய்தமைத்த இரத்தின மிழைத்த மண்டபத்திலிருந்தருளச் செய்து.

(வி - ம்) அஷ்ட மங்கலங்கள் : கண்ணுடி - இடபம் - விளக்கு - சீவற்சம் - கவரி - சங்கு - சுவத்திகம் - நிறைகுடம் - வாசகீர். இவை திருமணப்படலத்தில் முன்னே விஷ்கப்பட்டுள்ளன. (உடு)

அம்பொற் றவிசிட் டருச்சனைசெய் தாறு சுவையின் னமுதளுத்திச்
செம்பொற் கலவை நறுஞ்சாந்தந் தீம்பூ வாதி முகவாசம்
பைம்பொற் கலத்து வெள்ளிலேதீம் பழுக்காய் பிறவு முறைகல்கி
உம்பர்க் கிறைவன் திருமுகத்தி லுய்ப்ப தெனலா லுய்த்துமினை.

(இ - ள்) அழகியபொற்பீடமளித்து, அருச்சித்து, அறுசுவை பொருந்திய இனிய அமுதமுண்பித்து, செம்பொன்நிறம்வாய்ந்த கூட்டுவர்க்கமாகிய நறுமணங்கமழுஞ் சந்தனமும், இனியமலர் முதலிய முகவாசமும், பசியபொற்றட்டில் வெற்றிலையுஞ் சுவையமைந்த பாக்கும், பிறவும் முறைப்படிகொடுத்து, தேவதேவராகிய சோமசுந்தாக்கடவுள் வரைந்தருளிய திருமுகத்தில், அனுப்புவது என்றிருத்தலால், (அவ்வாறே) அனுப்புவோமென்று,

(வி - ம்) சிவனடியாரைச் சிவனேப்போலவேகருதி அருச்சனைசெய்தல் முறையாதலின், சோமான்பெருமானுர் பாணபத்திரரைப் பூசித்தனரென்க. (உசு)

செம்பொ னறையைத் திறந்தழைத்துக் காட்டி யினைய திருவெல்லாம்
உம்பர் பெருமா னடியீர்நீ ருடையீர் கவர்ந்து கொண்மினென
இம்பர் நிழற்றும் வெண்குடையா னிசைப்ப வெதிர்தாழ்ந் திசைக்கிழவ
நம்ப னருளுக் குரியீர்நீர் நல்கிற் றமையு மெனக்கென்ன. [ன்

(இ - ள்) பொக்கிஷத்தைத்திறந்து அழைத்துக் காண்பித்து, மகாதேவனுக் கடியவரே! இச்செல்வம் முழுவதையும் நீரேயுடையீர்; கைக்கொள்ளுமென்று, இவ்வுலகிற்கு நிழல்செய்யும் வெண்குடையையுடைய சோமான் பெருமானுர் கூற, பாணபத்திரர் எதிர்பணித்து, நீர் சிவபெருமான் திருவருளுக்குரியீர்; நீர் கொடுப்பது எனக்குப்போதுமென்று கூற. (உஎ)

மன்னன் முனெண் ணியவாற்றுல் வழங்க வழங்க மறுத்துமறுத்
தின்னல் தீரு மிசைக்கிழவ னிலங்கும் பொலம்பூ ணிருநிதியம்
பொன்னஞ் சிவிகை சுரிபரிமான் பொற்பட் டாடை பலபிறவுந்
தன்ன வெண்ணு மளவாற்றுற் முனே கொள்ளத் தார்வேந்தன்.

(இ - ள்) சோமான்பெருமானுயனுர் நினைத்தபடியே கொடுக்குந்தோறும் போதும் போதுமென்று மறுத்து, வறுமைநீங்கிய பாணபத்திரர் விளங்கும் பொன்னுலாகிய ஆபாணமும் பெருஞ்செல்வமும் பொன்னுலாகிய அழகிய பல்லக்கும் யானையும் குதிரையும் பீதாம்பரமும் பிரபலவகைப்பொருள்களும் [சிறியனவென்னும்] அளவின் வகையால் பாணபத்திரரே கைக்கொள்ள, பனமாலையணிந்த சோமான்பெருமானுர்.

(வி - ம்) திருத்தொண்டர் புராணம்

"பரந்த நிதியின் பரப்பெல்லாம் பாண னுர்ப்பத் திரனுர்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிரைத்துக் காட்டி மற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகள் முதலா வுயிருள் ளனதனமும்
புரந்த அரசுங் கொள்ளுமென மொழிந்தார் பொறையர் புரவலனுர்.

பாண னுர்பத் திரனுரும் பைம்பொன் மௌலிச் சேரலனுர்
காணக் கொடுத்த நிதியெல்லாங் கண்டுமகிழ்வுற் றறியத்துப்
பேணு வெனக்கு வேண்டுவன அடியேன் கொள்ளப் பிஞ்ஞகனுர்
ஆணை யரசு மரசுறுப்புங் கைக்கொண் டருளு மெனவிறைஞ்ச.

இறைவ ராணை மறுப்பதனுக் கஞ்சி யிருந்தார்"—என வருதல்காண்க.

சேரர் பெருமான் தமது சேனைமுதலியவற்றுடன் அரசியலையுந் தந்தனரென்பார் "மன்னன் முனெண் ணியவாற்றூல் வழங்க வழங்க" என்றும், பாணபத்திரர் அரசியலையும் அரசுறுப்புகளையும் ஒருத்தனரென்பார் "மறுத்து மறுத்து" என்றும், அவ்வாறு பாணபத்திரர் பெற்றது அளவிலவாயினுஞ் சேரமான்பெருமானுர் கருத்திற்குச் சிறிதென்பார் "தன்ன வென்னு மளவாற்றூற் றூனே கொள்ள" என்றுங் கூறினர். (உஅ)

பின்னே ழுடியோ சேட்சென்று பெருமை சான்ற வரிசையினூற்
றன்னே ரிசையான் றணிவிடுத்து மீண்டா னுகத் தமிழ்மதுரை
மின்னேர் சடையா ரிசைத்தொண்டன் முனு மீண்டு வெயில்விரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன் போல மதுரை நகர்புக்கான்.

(இ - ள்) பிழுகு ழுடி தூரமோ (சென்றனர்); நகர்கடந்து நெடுந்தூரம் பின்சென்று, பெருமை மிக்க வரிசையோடு இசையில் வல்ல தம்மையொத்த (சிவபக்தி யுடைய) பாணபத்திரரையனுப்பி (அவர் உத்தரவுபெற்று) சேரமான் பெருமானுர்மீளு, தமிழ் பயிலு மதுரைநகரிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுக்கு இசைத்தொண்டு பூண்ட பாணபத்திரரும் திரும்பி, சூரியனேப்போலப் பிரகாசிக்கும் பொலிவமைந்த முடியையுடைய குபேரனேப்போல மதுரைத் திருநகரிற் சேர்ந்தார்.

(வி - ம்) "பின்னே ழுடியோ சேட்சென்று" என்றதால், தமது வீட்டிற்கு வந்து போகும் பெரியோர்பின் "ஏழடித்தூரஞ் சென்று வழிவிடுதல் முறையாயிருக்க, இவர் அன்பின் மிகுதியால் நகர்நீங்கு மெல்லையும் பின்சென்றுரென்றும், "மீண்டானுக" என்றதால், அவர் உத்தரவுபெற்றுத் திரும்பினுரென்றும், "நிதிக்கிழவன் போல" என்றதால், அவர் யானைமேற் கொண்டு சென்றன ரென்றுங் குறித்தன.

திருத்தொண்டர் புராணம்

"பண்பு பெருகும் பெருமாளும் பாணனுர்பத் திரனுர்பின்
கண்கள் பொழிந்த காதல்நீர் வழியக் கையாற் றொழுதனைய
நண்பு சிறக்கு மவர்தம்மை நகரின் புறத்து விடைகொண்டு" என்றும்,

" அறைமும் மதத்துக் களிறுபரி யுள்ளிட் டனவேண் டுவகொண்டோர்
பிறைவெண் கோட்டுக் களிற்றின்மேற் கொண்டுபோந்தார் பெரும்பாணர்"

என்றும் வருதல் காண்க.

சைவ சமய நெறி

"போம்பொழுது பின்னே பதினுன் கடிபோக
ஈரம்பெற்றே மென்றெண்ணி நன்று"

என்றபடி, பதினுன்கடி தூரம் பின்சென்று வழிவிட வேண்டுமென்பதும் ஒருவகை. (உக)

வந்து மதுரைப் பெருமானே வணங்கிக் கொணர்ந்த நிதியெல்லாம்
இந்து மருமா னகருள்ளார் யாரு மறிய யாவர்க்கும்
மூந்தை வேத முதல்வர்க்கும் புலவீவார் தமக்கு முறைநல்கிச்
சந்த யாழி னிசைப்பாணர் தரும மனியான் வைகினுன்.

(இ - ள்) சந்தமமைந்த வீணையிசையில் வல்ல பாணர்கள்செய்த புண்ணியம் போன்ற பாணபத்திரர் வந்து, மதுராபுரீசனுகிய சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து கொண்டுவந்த பொருள்கள் எல்லாவற்றையும், சந்திரமாபில் வந்த வரகுணதேவபாண்டியனது மதுரைப்பதியிலுள்ளவர் யாவருமறிய யாவருக்கும், மூற்பட்ட வேதநூலுணர்ந்த முதன்மைபெற்ற அந்தணருக்கும், புலவர்களுக்கும் முறையே கொடுத்து மகிழ்வோடிருந்தனர்.

(வி - ம்) "யாருமறிய முறைநல்கி" என்றதால் உலகினர் தாம்பெற்ற பொருளைப் பிறர்க்கு உதவி உய்யும்படித் தாமே கொடுத்துக் காட்டினர் என்பது பெறப்பட்டது. (கூ)

ஆ திருவிருத்தம் - உகஉ0.

நாற்பத்து மூன்றுவது

பலகையிட்ட படலம்

கருக்குழாய் முகிலொருபாற் கலந்தவர்பத் திரற்குநிதி
திருக்குதா ருதியனிடைத் திருமுகமீந் தளித்ததிது
வருக்கியா முவனிசைப்ப மழைதூங்கு கள்ளிசவில்
இருக்குபா டெனப்பலகை யிட்டதூஉ மினிப்பகர்வாம்.

(இ - ள்) கரிய குளவமாலை யணிந்த மேகவண்ணராகிய திருமாலை ஒரு பாகத்திற்கொண்ட பெருமானுர், திருந்திய பனைமாலை யணிந்த சேரமான் பெருமானுருக்குப் பாணபத்திரரிடத்தில் திருமுகங் கொடுத்தனுப்பித் திரவியங் கொடுத்தருளிய திருவிளையாடலினது. வீணையில் வல்ல பாணபத்திரர் மழை பொழியும் நடுராத்திரியில் வருத்தமுற்று இசைபாட, அச் சோமசுந்தரக்

கடவுள் இருக்குபாடாயென்று பலகை தந்தருளிய திருவிளையாடலையும். இனி (யாம்) கூறுவாம்.

(வி - மீ) "கருந்தழாய் முகிலொருபாற் கலந்தவர்" என்றதில், ஒருபால் என்றதற்கு வலப்பாக மெனப் பொருள்கொண்டு விஷ்ணுசத்தியை வலப்பாகத் துடையர் எனப் பொருள் கொள்வது மொன்று. இதனை,

கூர்மபுராணம்

"வலத்புற மதனின் மேய வண்டுகண் படிக்குங் கூந்தல்
உலப்பருங் காலா தீத வருவமா யொளியா யொன்றுய்க்
கலப்பிலவ் வியத்தந் தோன்றுங் காரண மாகி யாளு
ஙலத்தகு குணக்குன் றுகு காரண ளுகு மன்றே."

என்பதனுணர்க. அன்றியும், சிவபெருமான் சிருட்டியில் இச்சைகூர்ந்து அக்காலத்தில் பிரமனைத் தனது வலப்பாகத்திலும் விண்டுவைத் தன திடப் பாகத்திலு மிருத்து பிறக்கச்செய்து, அவர்களால் சிருஷ்டியாதிகாரியங்களை யியற்றுவித்து, சர்வசங்காரகாலத்தில் அண்டாண்ட பிரமாண்டங்களையும் அழித்து, எஞ்சிநின்ற பெருந்தேவர்களாகிய இவ்விருவரையும் அவர் தோன்றி யபடியே தமதிருபுறத்திலும் ஒடுக்கிக் கொள்வாதலின் "ஒருபால்" என்ற தற்கு வாமபாக மென்றும் பொருள் கூறக்கிடந்தது. இதனை,

"மைந்த கின்னையென் வலப்புறத் தளித்தன னறிய
பைந்து ழாய்மது வண்ணனை யெனதிடப் பாலில்
தந்த ளிததன னீவிர்வெங் கரிமுகன் றழல்வேற்
கந்த னேரெனக் கருணையி னுச்சிமோந் தணைத்தான்" எனவும்,

ஓகூஷிணாம்ஹஹிவாவ்யஹ ஹரிவ·ம்ராம்ஹஸம்ஹஹி ।

ஹ்ருயாந்நீயாபூஹ்ருத் ஶிவஷ்யஶிவஸம்ஜ்ஞகு ॥

எனவும் வருவனவற்றா னுணர்க. (க)

முன்புடைய நாயகனை முப்போதும் புகுந்திறைஞ்சி
இன்புறுமே ழிசைக்கிழவ னிருநிதிய மருளியபின்
அன்புசிறந் தரையிரவு மடைந்துபணிந் தடல்விடையின்
பின்புறநின் றேழிசையும் பாடிவரும் பேறடைவான்.

(இ - ள்) முன்பே தம்மை யாளாகவுடைய சோமசுந்தரக்கடவுளை (காலை உச்சி மாலையென்னும்) முக்காலங்களிலுஞ் சென்று பணிந்து மகிழ்ச்சிபொருந் தும் பாணபத்திரர், (சோமான் பெருமானர்) கணக்கில்லாத பொருளைத் தந் தருளியபின் தலையன்பிற்பட்டு அர்த்த யாமத்திலுஞ் சென்று பணிந்து, வெற் றியையுடைய திருநந்தி தேவர் பின்னே நின்று, (குரல் முதலிய) எழிசை களையுந் தினந்தோறும் பாடிவரும் பயனை யடைவாராயினர். (உ)

தொழுந்தகையன் பருந்தேவர் தொகுதிகளுந் தொழத்திங்கட்
கொழுந்தலைய நதியலையக் குனிக்கின்ற தனிக்கடவுள்

செழுந்தளச் சிவிகையின்மேற் றேவிதிருப் பள்ளியறைக்
கெழுந்தருளும் போதுபணிக் தேத்துவா னேரிரவில்.

(இ - ள்) யாவரும் பணியும் பெருந்தகைமையுடைய அடியாங்களும், தேவர் கூட்டங்களும் வணங்கவும், இளஞ்சந்திரன் (ஒருபால்) அசையவும், கங்கை (ஒருபால்) அசையவும், வெள்ளியம்பலத்திலே திருநடனஞ் செய்தருளும் ஒப்பில்லாத பெருமானுர் பருத்த முத்துக்களாலமைந்த சிவிகையின் மேல் உமாதேவியார் திருப்பள்ளியறைக்கு எழுந்தருளுங் காலையில், ஓரிரவில் வணங்கித் துதிக்க. (ங)

இன்னிசையாழ்ப் பெரும்பாண னெவ்விடையூ றடுத்தாலுந்
தன்னியம நெறியொழுக்கந் தவாதனென்ப தலகறியப்
பொன்னியலுஞ் சடைமௌலிப் புராணர்திரு விளையாட்டால்
அன்னிலையிற் கருங்கொண்மூ வார்த்தெழுந்த திசையெல்லாம்.

(இ - ள்) இனிய இசையமைந்த யாழில் வல்ல பாணபத்திரர் எவ்வகைப் பட்ட இடையூறுவந்தாலும், தமது கடப்பாடாகிய ஒழுக்க நெறியினின்றுஞ் சிறிதும் தவறு சென்பதை உலகினாறிய, பொன்போன்ற சிவந்த சடா மகுடத்தை யுடைய சோமசுந்தரக் கடவுள் திருவிளையாடலினால், அந்த இராப் போதில், திசையெல்லாம் சூல்கொண்ட மேகங்கள் இடித்தெழுந்தன. (ச)

தடித்துநிரை புடைபரப்பித் தடுமாறித் திசைமயங்கத்
துடித்துவிட வாயரவஞ் சோர்ந்துசுருண் டீளையொதுங்க
இடித்துடுவின் கணம்புதைப்ப இருள்கான்று சலபதிமுன்
முடித்திடுவான் வரவழைத்த முகிலேமும் வளைந்ததென.

(இ - ள்) மின்னல் வரிசைகளே யயலிற் பரப்பி, எண்டிசையிலுள்ளோருந் தடுமாறி மயங்கவும், விடமமைந்த வாயையுடைய பாம்புகள் (உடல்) துடித்துச் சோர்ந்து பிலங்களிற் புகவும் இடியிடித்து, நட்சத்திரத் தொகுதிகள் புதைபட இருளைவீசி, வருணன் முன்பு மதுரையையழிக்க அனுப்பிய சத்த மேகங்களும் அம்மதுரையை வளைந்தபோலும் வளைந்தது. (ஞ)

கருங்கடலே விசும்பெடுத்துக் கவிழ்ப்பதென வெண்டாரை
நெருங்கிருளி னிருப்புக்கோ னிரைத்ததென நிறங்கருக
ஒருங்குசொரிந் துள்ளுணரா ருள்ளம்போ லுட்புறம்பு
மருங்கொடுகீழ் மேலென்று தெரியாத மயங்கிருள்வாய்.

(இ - ள்) ஆகாயமானது கரிய கடலே (தலைகீழாக) எடுத்துக் கவிழ்ப்பது போலவும், மிக்க இருளில் நாராசங்களே வரிசையாக வைத்ததுபோலவும், வெள்ளிய மழைத்தாரைகள் நிறந்திரிந்து தோன்றவும் ஒருசேர வருஷித்து, தம்மை யறியாதவர் மனம் இருண்டிருத்தல்போல உள்ளென்றும் புறமென்றும் அயலென்றும் கீழென்றும் மேலென்றும் பகுத்தற்கரிய இருண்ட இருட்பொழுதில்.

(வி - மீ) "உள்ளுணரா ருள்ளம்போல்" என்றது, இருளொடுகூடிய கண் இருண்மயமாய் நிற்றல்போல, பாசத்தோடுகூடிய ஆன்மா அப் பாசமயமாய் நிற்றலினெனக் கொள்க. (சு)

மாமாரி யிடைநனைந்து வருவானம் மாரிதனைப்
பூமாரி யெனநினைந்து திருக்கோயில் புகுந்தெய்திக்
காமாரி தனைப்புணர்ந்து கருணைமா ரியினனைந்து
தேமாரி பொழிவதென தெள்ளிளியாழ் வாசிப்பான்.

(இ - ள்) பெருந்தாரைகளால் விழும் மழையில் நனைந்துவரும் பாணபத்திரர் அந்த மழையை மலர்மழைபோலக் கருதி, திருக்கோயிலுக்குச் சென்று சேர்ந்து, சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து, அவர் திருவருள் மழையால் நனைந்து, தேன்மழையைப் பொழிந்ததுபோலத் தெள்ளிய இசையமைந்த வீணை வாசிக்கத் தொடங்கினார்.

(வி - மீ) காமாரி - காமனைச் சங்கரித்த சிவபெருமான். (எ)

விடைக்கடவுள் பின்னின்று வீணையிடத் தோள்கிடத்திப்
புடைத்தநரம் பெறிந்துமிடம் நெளிபோக்கிப் பொலங்கொன்றைச்
சடைக்கடவுள் செவிவழிபோ யருட்பைங்கூழ் களையெடுப்பத
தொடைத்தமிழி னிசைப்பாணிச் சுவையமுத மடைதிறந்து.

(இ - ள்) திருநந்தி தேவருக்குப் பின்னே நின்று, வீணையை யிடத் தோளிற் சேர்த்து, வீணையின் நரம்பைத் தாக்கித் தடவி, சாரீரத் தொனி யெழுப்பி, பொன்னிறம் வாய்ந்த கொன்றைமாலையணிந்த திருச்சடையை யுடைய சோமசுந்தரக்கடவுளின் திருச்செவியாகிய கால்வழியேசென்று, திருவருளாகிய பயிரானது தலையெடுத்தோங்க, தமிழாற் றொடுத்த இசைப்பாடலாகிய சுவை கனிந்த அமுதமானது மடையெடுத்து. (அ)

இது முதல் இரண்டு பாடல்கள் குளகம்.

நரம்புநனைந் திசைமழுங்க நனைந்துடலம் பனிப்பவிசை
வரம்பொழுகு விரன்மிறைத்து வலிவாங்க மயிர்சிலிர்ப்ப
நிரம்பியசே றடிபுதைப்ப நின்றுநிறை யன்பிசையாய்
அரும்புதல்போ லென்புருக்கு மமுதவிசை பாடுமால்.

(இ - ள்) வீணைநரம்புகள் (மழையால்) நனைந்து இசைகுன்றவும், தமது உடல் (மழையால்) நனைந்து நடுங்கவும், இசையினெல்லை கடவாது செல்லும் விரல்கள் விறைத்து வலிகொள்ளவும், மயிர் சிலிர்க்கவும், நிரம்பிய சேறு தமது காலைப் புதைக்கவும், (உடல்) கம்பியாதுநின்று, நிறைந்த அன்பே இசைவடிவாய்ப்பொங்கி மேலெழுதல்போல, எலும்பினையு முருக்கும் அமுதம்போலச் சுவைகனிந்த இசை பரடுவாராயினர். (கூ)

வேறு

மாதர் நகையாய் மதுரேச ருண்பலிக்கெம் மனைவாய் வந்து
காதன் முகத்தரும்பிக் காட்டியென் சிந்தை கவர்ந்தார் போலுங்

காதன் மூகத்தரும்பக் கையறவு தீரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித் தாவி பிழைத்தேன் போலும்.

(இ - ள்) அழகிய தந்தபந்திகளையுடைய தோழியே! மதுரைப்பதியி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் உண்ணும் ஐயத்தின் பொருட்டு எமது இல்லில்வந்து புணர்ச்சிக்குறிப்பைத் தமது திருமுகத்திலே தோற்றுவித்து எனது மனத்தைக் கைக்கொண்டார். அக் காதற் குழிப்பு என் முகத்திலுந் தோன்றக் காமவாதை தீரக் கலக்கத்தொடங்கினேன். (தமது திருமேனி யிற்) பாதி பெண்வடிவாயிருந்தனர். (அதுகண்டு) வெட்கமுற்று விழித்து உயிர் பிழைத்தேன்.

(வி - ம்) இச்செய்யுளைக் கனவுகிலை யென்னுந் துறைப்பொருண்மேல் வைத்துத் தலைவி கூற்றாகக் கூறினார். (கo)

ஒண்ணுதலாய் வெண்டலைகொண் டுண்பலிக்கு நம்மனையி னூடேகூடற்
கண்ணுதலா ருள்ளாளக் கானமிசைத் தென்னுள்ளங் கவர்ந்தார் போ
கண்ணுதலார் பாடு மவிநயங்கண் டாகங் கலப்பேன் பாதி [னுங்
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித் தாவி பெற்றேன் போலும்.

(இ - ள்) ஒள்ளிய நெற்றியையுடைய தோழியே! நான்மாடக் கூடலாகிய மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் தலையொழிந்த கபாலத்தை யேந்தி உண்ணும் பலியின் பொருட்டு எமது இல்லின்கண்ணே உள்ளாளக் கீதம்பாடி என்மனத்தைக் கொள்ளைகொண்டார். நெற்றிக்கண்ணையுடைய அச் சோமசுந்தரக்கடவுள் பாடிய அவிநயத்தைக் கண்டு அவரது திருமார்பிற் கலக்கதொடங்கினேன். (தமது திருமேனியிற்) பாதிபெண்வடிவமாயிருந்தனர். (அதுகண்டு) வெட்கி விழித்து உயிர் பிழைத்தேன். (க்க)

ஐயரியுண் கண்ணுய் திருவால வாயுடையா ரையங் கொள்வான்
மையனகை செய்தென்ன மூலையின்மேற்செங்கை வைத்தார்போலும்
மையனகைசெய்தென் வனமூலைமேற் கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி விழித்தாவி தரித்தேன் போலும்.

(இ - ள்) அழகிய அரிபாய்ந்த கண்களையுடையபெண்ணே! திருவாலவா யென்னும், மதுராபுரியை யுடைய சோமசுந்தரக்கடவுள் பலி யேற்கும் பொருட்டு, காமக் குறிப் புணர்த்தும் புனனகை செய்து எனது சந்தனக் கோலத்தையுடைய தனத்தின்மேல் கை வைக்க, மயங்கிச் சோரும் யான், உமா தேவியார் இடப்பாகத்திலிருக்கக்கண்டு நடுக்குற்று விழித்து உயிர்பிழைத்தேன்.

வேறு

பாடுவா ரிருவர்க் கன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்
தோடுவார் சேவியி லூட்டுந் தொண்டுகண் டிதன்மே னின்று
பாடுவா யுனக்கே யிந்தப் பலகையென் றுழ்ந்த அன்பின்
நாடுவார் விசும்பிற் கூறி நகைமணிப் பலகை யிட்டார்.

(இ - ள்) பாடுந் தும்புரு நாரதரிருவருக்கும் அக்காலத்தில் பரிசாகக் கொடுத்தருளிய சங்கத்தோடணிந்த ரீண்ட திருச்செவியிலூட்டும் இசைத்

தொண்டை யுணர்த்து, இந்தப்பலகையின் மேலேகின்று பாடுவாய் உனக்கே இந்தப்பலகை யுரியதென்று, மெய்யன்பினை நாடியருளும் சோமசுந்தரக்கட வுள் ஆகாயவாணியாற் கூறி, விளங்கும் இரத்தினமழுத்திய பலகையொன்றி னைக் கொடுத்தருளினர்.

(வி - ம்) "பாடுவா யிருவர்க் கன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்தோடு" என்றதைத் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் "தோடுடையு செவியன்" என முதற்கண் விதந்ததானும், நக்கீரதேவர் திருவெழுகூற்றிருக்கையில் "இரண்டு கின் குழையே யொன்றுகின் னேறே" எனக்கூறியதனானு முணர்க. (கஉ)

இறையரு ளாணை யஞ்சி யிட்டபோற் பலகை யேறி
நன்றகெழு மதுர கீதம் பாடிகான் மறைகள் சூடும்
அறைகழ லகத்துட் கொண்டு புலகையு மங்கை கொண்டு
மறைவழி யாழ்வல் லோன்றன் மனைவயிற் செல்லு மெல்லை.

(இ - ள்) சோமசுந்தரக்கடவுள் அருளிய கட்டளையை யஞ்சி, (அவர்) கொடுத்தருளிய பொற்பலகையின்மீதேறி, தேனி னினிமைபோன்ற இனிய கீதத்தைப்பாடி, நான்கு வேதங்களுஞ் சூடிய ஒலிக்கும் வீரக்கழலணிந்த திரு வடியைத் தமது மனத்திற்கொண்டு, (இறைவர் கொடுத்தருளிய) அப்பலகையை யுந் தமது கையிலேந்தி, இசைநூல்வழி யாழ் வாசித்தலில் வல்ல பாணபத்திரர் தமது வீட்டிற்குச் செல்லுங் காலையில். (கச)

மின்னுமா மேக நீங்கி விசும்புவாய் விளங்கித் தென்றல்
மன்னுமா மலையின் மேய மாதவன் குடித்த வைகற்
பொன்னுமா மணியு முத்தும் புலப்படக் கிடந்த வேலை
என்னமீன் விளங்கித் தோன்ற வேகியில் புகுந்தா னிப்பால்.

(இ - ள்) தென்றற்காற்று நிலைபெற்ற பெரிய பொதியாசலத்திற் பொருந் திய பெருந்தவத்தையுடைய அகத்தியமுனிவர் ஆசமனியஞ் செய்தகாலத்தில், பொன்னும் சிறந்த இரத்தினங்களும் முத்தங்களும் கண்ணுக்குப் புலப்பட இருந்த கடல்போல, மின்னல் வீசும் பெரிய மேகங்கள் நீங்குதலால் ஆகாயத் தின் வாய் விளங்க நட்சத்திரங்கள் விளங்கிததோன்ற; (பாணபத்திரர் வழி தெரிந்து) சென்று தமது வீட்டிற் சேர்ந்தார். பின்னர்.

(வி - ம்) 'விசும்புவாய் விளங்கி' யென்றதில் விளங்கி செயவெனெச்சத் திரிபு. விசும்பு கடலாகவும், நக்ஷத்திரங்கள் பொன்னும் இரத்தினங்களும் முத் தங்களுமாகவும் உவமிக்கப்பட்டன. இஃது பண்புவமையணி. (கடு)

பாயிருட் படலங் கிண்டு பரிதிகண் விழித்துச் செங்கை
ஆயிரம் பரப்பி முங்கீ ரலைகடல் கீந்து மெல்லை
மாயிரு ஞாலங் காக்கும் வரகுண னிரவு தங்கள்
நாயகன் பாடற் கிந்த நல்லருட் பரிசில் கேட்டான்.

(இ - ள்) சூரியன் கண்விழித்து, பாவிய இருட்டொகுதியைக்கிழித்து, சிவந்த ஆயிரங்கரங்களைப் பரப்பி, முத்தொழிற்குணங்களையுடைய அலைக்குங்

கடலை நீந்திச்செல்லுகையில், பெரிய நிலவுலகைக் காக்கும் வரகுணதேவ பாண்டியன் (அன்று) இரவில், தங்கள் தெய்வமாகிய சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரர் பாடலுக்குக் கொடுத்தருளிய அருட்கொடையைக் கேள்வியுற்றனன். (கசு).

இன்னிசைக் கரசை யிட்ட பலகைமீ திருத்தி மன்னர்
மன்னவ னிவனே எங்கள் மதுரைநா யகனென் றுன்னி
மின்னிவர் மணிப்பூ ணல்கி வீரோகில மிகவு நல்கி
நன்னிதி வெறுப்ப நல்கி வரிசையா நடத்தி வந்தான்.

(இ - ள்) இனிய இசையில்வல்ல பாணபத்திரரை (பெருமான்) கொடுத்தருளிய (அத்தப் பொற்) பலகையின்மே லிருக்கச்செய்து, மன்னர்மன்னனுகிய வரகுணதேவபாண்டியன் இவரே எங்கள்(குலதெய்வமாகிய)சோமசுந்தரக்கடவுளென்றுகருதி, ஒளிபரந்த இரத்தினபரணங்களைக் கொடுத்து,வீலைவையுடைய கழனிகளையு மிகவுங்கொடுத்து, நல்ல செல்வத்தையும் அவாவடங்கக் கொடுத்து (அதுமுதல் இவ்வாறே) வரிசையாகக் கொடுத்து நடத்திவந்தனன். (கஎ)

வேறு

இறையருள் வரிசை பெற்றபத் திரனுமேறுயர்த்தவரைநாற்போதும்
மூறையினுல் வழிபட் டொழுகுவா னுக முடிகெழு வரகுண வேந்து
மறைமுத லடிகள் வந்துவந் தனையால் வழுத்துவான் நில்பகல் கழிய
நிறைபெருஞ் சுடரோன் றிருவுரு வடைந்து நெறியினுற் சிவபுர மடைந்தான்.

(இ - ள்) வரகுணதேவபாண்டியன் கொடுத்தவரிசைகளைப் பெற்ற பாணபத்திரரும், இடபத்தைக் கொடியாகவுயர்த்திய சோமசுந்தரக்கடவுளே நான்கு காலங்களிலும் முறைப்படி வழிபாடுசெய்து நடந்துவர,கிரீடஞ் சூடிய வரகுண பாண்டியனும் வேதமுதல்வராகிய சோமசுந்தரக்கடவுளே வலஞ்செய்து வந்தனையோடு துதிப்பவன், சிலநாள் கழிய எங்கும் நிறைந்த பெருஞ்சுடர் வடிவாயுள்ள சிவபெருமானுருடைய சாரூபம்பெற்று, திருவருள்வழித்தாகச் சிவபுரத்தையடைந்தனன்.

(வி - ம்) நாற்போது : காலை - நண்பகல் - மாலை - அர்த்தயாமம் எனப்படும்.

ஆ திருவிருத்தம் - உகசஅ.

நாற்பத்து நான்காவது

இசைவாதுவென்ற படலம்

கூட லம்பதியி லாடக மேருக் கொடிய விற்குரிஞ் லடியவ னுக்குப், பாட லின்பரிசி லாகிய செம்பொற் பலகை யிட்டபடி பாடின மன்னன், வீட் ரும்பொருவில் கற்புடை யாளோர் விறலி யைப்பர மனிறை யருள் பற்றி, மாட கஞ்செறியும் யாழ்வழி பாடி வாது வென்றவர லாறு மிசைப்பாம்.

(இ - ள்) மதுரைத் திருநகரத்தில், ஒப்பான்மேருவாகிய (வெற்றிக்) கொடி கட்டிய வில்லேயேக்திய சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரருக்கு (அவர் பாடிய) பாடலுக்குப் பரிசாகச் செம்பொன்னுற் செய்த பலகையைத்தந்தருளிய திரு வினேயாடலேக் கூறினேம். அப்பாணபத்திரருடைய அழியாத கற்பினே யுடைய மனேவியார் சிவபெருமானுர் திருவருளேப் பற்றி, மூலுக்காணிகள் பொருந்திய வீணையின் வழியே பாடி, ஒருபாடினியை வாதில்வென்ற திரு வினேயாடலேயும் (இனிக்) கூறுவாம். (க)

வரகு ணன்கதி யடைந்தபி னம்பொன் மௌலி சூடிய இராச இராசப், புரவ லன்புவி மடந்தையை வேட்டுப் புயந்த ழீஇக்கொடு நயந்தரு நாளிற், பரவு மன்பதை புரந்தொழு கந்தப் பஞ்ச வற்குரிய ரஞ்சன வுண்கண், மரபின் வந்தமட வார்பல சேண மையல் செய்யு மட வார்பலர் மாதோ.

(இ - ள்) வரகுணதேவ பாண்டியன் சிவகதியடைந்த பின்னர், அழகிய பொற்கிரீட மணிந்த இராசராச பாண்டியன் பூதேவியை மணந்து புயத்தில் தழுவி (குடிகளுக்கு) இன்பந்தந்து வருங்காலையில், பரவிய குடிகளேப் பாது காத்து நடந்தொழுகும் அப்பாண்டியனுக்கு உரிய மாதர்கள் தனது மரபின் வந்த மை தீட்டிய கண்களேயுடைய பெண்கள் பலர். அவரல்லாத மயக்கஞ் செய்யுங் காமக்கிழத்தியர் பலர். (உ)

அன்ன போகமட வாரு ளொருத்தி யரச னுக்கமுது மாலியு மாகும், மின்ன னுள்மதுர கீத மிசைக்கும் விஞ்சை யின்றுறைவ லாளவ ளுக்கும், பன்ன காபரண மின்னிசை பாடும் பத்தி ரன் பொருவில் கற்புடை யாட்கும், மன்னு கீதவிணே யாலிகல் மூள வழுதி காதன்மட மாது பொருளாய்.

(இ - ள்) அந்தக் காமக்கிழத்தியரு ளொருத்தி இராசராசபாண்டியனுக்கு உணவுமுயிருமாகிய மின்னல் போன்றவள். இனிய இசைபாடுங் கல்வியின் துறையில் வல்லவள். அக்காமக்கிழத்திக்கும் சர்ப்பாபரணமணிந்த சிவபெரு மானுர் திருச்சன்னிதியில் இன்னிசைபாடும் பாணபத்திரருடைய ஒப்பில்லாத

கற்புவாய்ந்த மனைக்கிழத்திக்கும், நிலைபெற்ற கீதத்தொழிலால் (ஒருவரீர் டொருவர்) பகையுண்டாக, அப்பாண்டியன் காமக்கிழத்தி கோபங்கொண்டு.

இஃதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம். (கூ)

பாடினிக்கெதிரொர் பாடினி தன்னைப் பாட விட்டிவள் படைத்த செருக்கை, ஈட ழிப்பலென வெண்ணி யெழீஇத்தன் னிறைம கற்கஃ திசைத்தலு மந்தத், தோடி றப்பொரு கயற்கணி ஞள்தான் சொன்ன வாறுழுகு மன்னவர் மன்னன், நாடி யத்தன்கய விறலியை மீழ காட்டி ணும்வரவ ழைத்து விடுத்தான்.

(இ - ள்) பாணபத்திரன் மனைவிக்கெதிரே ஒரு பாடினியைப் பாட விடுத்து, இப்பாணபத்திரன் மனைவி படைத்த கர்வத்தை அடியோடழிப்பே னென்று கருதியெழுந்து, தன் தலைவனுகிய பாண்டியனுக்கு அதனைக் கூற, தோடுபுறங் காட்டப் போர் செய்யுஞ் சேற்கெண்டைபோலுங் கண்களையுடைய அந்தக் காமக்கிழத்தி சொன்னவகையே (அவள்மீதுள்ள அன்பினால்) நடக்கும் இராசராச பாண்டியன் யோசித்து,வெல்லும் அத்தகைமையுடைய பாடினியை ஈழநாட்டினின்றும் வரவழைத்தனன். (கூ)

பந்த யாழ்முதுகு தைவர விட்டுப் பாட லாயமிரு பக்கமு மொய்ப்ப, வந்த பாடினி மடந்தையு மன்னர் மன்ன னேத்தொழு தெதார் கின்னர மாதிற், சந்த வேழிசை மிழற்றினள் நின்றுள் தன்னை நோக்கியொரு மின்னிடை யாள்மேற், சிந்தை போக்கிவரு தீப்பழி நோக்காத் தென்ன ருக்கரச னின்னது செப்பும்.

(இ - ள்) பாடுந் தோழிகள் இருபக்கலிலுஞ் சூழ்ந்துவர, கூட்டமைந்த வீணையானது முதுகைத் தடவும்படி தொங்கவிட்டு, (மரக்கலத்தினின்றிறங்கி) வந்த பாடினியும், இராசராச பாண்டியனைப் பணிந்து, ஒரு கின்னரப் பெண் போலப் பண்ணுல் அமைத்த ஏழிசைகளையும் பாடிநின்ற ஈழநாட்டுப் பூடினியை நோக்கி, ஒரு காமக்கிழத்திமேல் தன் மனத்தைச் செலுத்தி அதனுல் வருங் கொடும்பழியை நோக்காத பாண்டியர்க்குள் வீரம் வாய்ந்த இராசராசபாண்டியன் இவ்வாறு கூறுகின்றனன் : (கூ)

பத்தி ரன்மனைவி தன்னையெம் முன்னர்ப் பாடு தற்கழைய தற்கவ ளாற்ரு, லுத்த ரஞ்சொலினும் யாமவள் சார்பா யுனைவி லக்கினும் விடாது தொடர்ந்தே, சித்த காணமுற வஞ்சின மிட்டுச் செல்லலில் லெனவ ளோந்துகொ ளென்ரு, லெய்த்த நண்ணிடையி னுளே யிருக் கைக் கேகி நாளைவரு கென்று விடுத்தான்.

(இ - ள்) பாணபத்திரருடைய மனைவியை எமது சமுகத்தில் (இசை) பாடுதற்கு அழைப்பாய் ; அவள் (உன்னுடன் பாட முடியாமல்) போக்குச் சொன்னபோதிலும், யாம் அவள் பக்கமாக நின்று உன்னைத் தடுத்தாலும் நீ விடாமற் பின்தொடர்ந்து, அவள் மனத்தில் நாணமீதூரச் சபதங்கூறி, போகாதே ; நில் எனத் தடுப்பாய் என்று கூறி, இளைத்த நண்ணிய இடையை

யுடைய ஈழநாட்டுப்பாடினியை (இன்றுனக்குவிடுத்த) விடுதிக்குச் செல்க ; காலைவருகவென விடைகொடுத்தனுப்பினன். (சு)

வேறு

பின்ன ரின்னிசைப் பத்திரன் பெருந்தகை விரலி
தன்னை யங்கழைத் துளத்தொன்று புறத்தொன்று சாற்றும்
என்னு டின்னிசை பாடுவா ருளர்கொலோ இங்ஙன்
றுன்னி வந்திருக் கின்றன ளிசைவலா ளொருத்தி.

(இ - ள்) இனிய இசைபாடுதலில் வல்ல பாணபத்திராது கற்பு பொருந்திய மனைவியைப் பின்னர் (தனியே) வரவழைத்து, உள்ளத்திலொன்றும் புறத்திலொன்றுமாகக் கூறுகின்றான் : இச்சபையில் என்னுடன் இசைபாடுதலில் வல்லவர் (ஒருவரேனும்) உளரோவென்று, இசைநூலில் வல்ல பெண் ணொருத்தி கினைத்து (மமதையுடன்) வந்திருக்கின்றனள். (எ)

ஆட மைத்தடந் தோளினு யவளொடுங் கூடப்
பாட வல்லியோ பகரெனப் பாடினி பகர்வாள்
கோட ருந்தகைக் கற்புடைக் கூடலெம் பெருமான்
வீட ருங்கரு ணையுமெனக் கிருக்கையால் வேந்தே.

(இ - ள்) அசைகின்ற மூங்கில் போன்ற பெரிய தோளினையுடையாய் ! அப்பாடினியுடன் கூடநின்று நீ பாடவல்லையோ ? சொல்லவென வினவ, பாணபத்திரர் மனைவியார் கூறுகின்றனர் : அரசனே ! கோணுதலில்லாத அருந்தகைமையுடைய கற்பும் இம்மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் அழிவில்லாத கிருபையும் எனக்குக் கூடியிருத்தலால். (அ)

பாடி வெல்வதே யன்றிகான் பரிபவ முழந்து
வாடு வேனலே னென்றுரை வழங்கலு மதுக்கால்
ஏடு வார்குழ லவளையு மிருக்கையுய்த் திருந்தான்
நீடு வார்திரைப் பொருகையந் தண்டுறை நிருபன்.

(இ - ள்) நான் பாடி வெற்றிகொள்வதெயன்றித் (தோல்வியால்) தன் புற்று வாட்டமுறேன் எனக் கூற, தேன் சிந்தும் மலரிதழ்கள் பொருந்திய கூந்தலையுடைய பாணபத்திரர் மனைவியாரையும் அவர் வீட்டிற்குச்செலுத்தி, நீடிய பெரிய அலைகளையுடைய தாமிரபர்ணியின் அழகிய தண்ணிய துறையையுடைய பாண்டிய னிருந்தனன். (கூ)

மற்றை வைகலவ் விருவரைப் பஞ்சவன் மதுரைக்
கொற்ற வன்றன தவையிடை யழைத்துநேர் கூட்டிக்
கற்ற வேழிசை கேட்குமுன் கலத்தினும் போந்த
வெற்றி வேல்மதர் நெடுங்கணுள் விறலியை வைதாள்,

(இ - ள்) மறுநாள், அவ்விரண்டு பாடினிகளையும் மதுரைக்காசளுகிய பாண்டியன் தனது சபையில் வருவித்து, நேரிற் சந்திப்பித்து, அவர்கள் கற்ற

(குரல் முதலிய) ஏழிசைகளையுங் கேட்பதற்குமுன், மாக்கலத்தினின்றும் வந்து வெற்றிபொருந்திய வேல் போன்ற மதர்த்த நெடிய கண்களையுடைய யாழ்ப் பாணப் பாடினி பாண பத்திரர் மனைவியாரை வைதனள்.

(வி - ம்) ஏழிசையாவன : குரல் - அத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம். இவற்றுள் மிடற்றுரற் குரல், நாவிஞற்றுத்தம், அண்ணதாற் கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால் விளரி, மூக்காற்றாரமாகத் தனித்தனிப் பிறக்கும். இவையே ஏழ்சுரமென்றும் வீணையி லேழ்தரம்பென்றும் கூறப்படும். இவற்றிற் கோசையுவமை : மயில் இடபம் ஆடு கொக்கு குயில் குதிரை யானை. சுவையுவமை: பால் தேன் நிழான் நெய் ஏலம் வாழை மாது ளங்கனி. வாசனையுவமை: மௌவல் முல்லை கடம்பு வஞ்சி நெய்தல் பொன்னு விளை புன்னை. அக்காரம் : ஆ அ ஈ இ ஊ உ ஏ எ ஐ இ ஒ ஒ ஔ உ. மாத்திரை: நான்கு குரல், நான்கு துத்தம், இரண்டு கைக்கிளை, மூன்று உழை, நான்கு இளி, மூன்று விளரி, இரண்டு தாரம். இவற்றுலெழுபாலை பிறக்கும். அவையாவன: குரலே குரலாயிற் செம்பாலை. துத்தமே குரலாயிற் படுமலைப்பாலை. கைக்கி ளையே குரலாயிற் செல்வழிப்பாலை. உழையே குரலாயின் அரும்பாலை. இளியே குரலாயிற் கொடிப்பாலை. விளரியே குரலாயின் விளரிப்பாலை. தாரமே குரலா யின் மேற்செம்பாலை. இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப்பாலை வலிது. கொடிப் பாலைக்கு விளரிப் பாலையும் மேற்செம்பாலையும் வலிது. அன்றியுந் தாரத்துள் உழையும், உழையுட் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத் துள் விளரியும், விளரியுள் கைக்கிளையும் பிறப்பது தகுதி. இவற்றிற்கிறைவர்: விச்சுவாமித்திரன் - ஜமதக்கினி - சந்திரன் - சூரிபன் - கௌதமன் - காசிபன் - ஈசன். இவற்றிற்குயிர் ஈசன் எனப்படும். (கஎ)

குற்ற மெத்தனை யெத்தனை குணங்கள் யாழ்க் கோலுக்
குற்ற தெய்வமே திசைப்பதெவ் வுயிருடம் புயிர்மெய்
பெற்ற வோசையெவ் வளவவைக் குத்தரம் பேசி
மற்றெ னோடுபா டில்லையேல் வசையுனக் கென்றனள்.

(இ - ள்) வீணைதண்டத்திற்குக் குற்றங்கள் எத்தனை? குணங்கள் எத்தனை? பொருந்திய தெய்வங்கள் யாவை? எந்த வுயிரெழுத்து எந்த மெய்யெழுத்து எந்த உயிர் மெய்யெழுத்து இசைப்பது? (அவைகட்கு) பொருந்திய ஒலி யெவ் வளவினை? அவற்றிற்கு விடை (முதலிற்) கூறி, பிறகு என்னுடன் பாடுக. இல்லையாயின், உனக்குக் குற்றம் வீளையு மென்றனள்.

(வி - ம்) குற்றங்கள்: செம்பகை ஆர்ப்பு கூடம் அதிர்வு. இவை பிறத்தற் குரிய நீரில் நின்றழுகுதலும், மெல்குதலும், வேதலும், தக்கவிடத்திற் பிறவாதா தலும், இடிவீழ்தலும், கோயுறலுமான மாங்கள் - இதனை,

"நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயங்கும்
பாரிலே நிற்ற லடிவீழ்தல் கோய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வுநிற்றல்
சேரினோர் பண்க ணிறமயக் கம்படுஞ் சிற்றிடையே"

என்பதனுனறிக. மேற்கூறிய செம்பகையாதி குற்றங்களை,

பஞ்சபாதீயம்

" இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகும்
சொன்னமாத் திரையி னேனுங் விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே
மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகும்
கன்னுதால் சிதற வுர்த லதிர்வென நாட்டி னீரே. "—என் றும்,

சீவகசிந்தாமணி உதாரணச் சூத்திரம்

சேம்பகை யெனீபது பண்ணே ளெரா
வினபமி லோசை யென்மனூர் புலவர்
ஆர்ப்பெனப் படுவ தளவிறக் திசைக்கும்.

கூட மென்பது குறியுற வீளம்பின்
வாய்வதின் வாராது மழுங்கியிசைப் பதுவே.

அதிர்வெனப் படுவ திழுமென வின்றிச்
சிதறி யுரைக்குக ருச்சரிப் பிசையே."

என்றும் கூறியுள்ளனவற்ருனுணர்க.

இனி, குணங்கள் என்றது செம்பகையாதி குற்றங்களின்மையாகிய குணங்கள். அவை, கொன்றை கருங்காலி முருக்கு குமிழ் தணக்கென்னும் மரங்களுள்ளே கால்வகைக் காற்றும் மயங்கா நிலத்தில் வளர்ந்து இளமையும் நெடும் பிராயமுமின்றி நடுத்தரமாகிய மாத்திரை யளிக்தெடுத்து விதிப்படி செய்த வீணை தண்டத்தால் உண்டாகும். இதனை,

" சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழுந் தணக்குடனே - மெல்லியலா
யுத்தம மான மரங்க ளிவைபென்னூர்
வித்தக யாழோர் விதி.

தனமாய்ச் சமநிலத்துத் தண்காற்று நான்கு
முளதா யொருங்கூன மின்றி - யளவு
முதிரா திளகாது மூன்றுங்கூ றய
வதுவாகில் வீணைதண் டாம். "—என்பதனுனறிக.

தெய்வம் மேற்செய்யுளிற் காட்டப்பட்டன. உயிரும் உயிர்மெய்யும் பன்னிரு மாத்திரையீருகவும், மெய் பதினெருமாத்திரையீருகவும் இசைக்கும். இவற்றை யெல்லாம் இசைநூலுட் பரக்கக்காண்க. ஈண்டு விரிவு கருதி விடுத் தாம்.

" தெய்வம் பொருளா லுயர்திணையேனும் சொல்லாலஃறிணை யாதல் பற்றி யாவென அஃறிணைப் பயனிலையான் முடிக்கப்பட்டதென்க. (கக)

இருமை யும்பெறு கற்பினு ளியம்புவாள் கலத்தின்
வருமை நும்பெறற் கல்வியும் வாகின்மே லுலக்கப்
பெருமை யும்பலர் விரும்புறு பெண்மையின் செருக்குந்
திருமை கன்சபை யறியவாய் திறக்கவேண் டாவோ.

(இ - ள்) இகத்தையும் பரத்தையும் பெறுதற்குரிய கற்பினையுடைய பாணபத்திரர் மனைவியர் கூறுகின்றனர் : மாக்கலத்தினின்றுவந்த பெறுதற்

கரிய கல்வியையும், வாதின்மேற்சென்ற ஊக்கப் பெருமையையும், பலரும் அவாவும் உனது பெண்ணலத்தின் சிறப்பையும் இப்பாண்டியன் சபையிலுள்ளோர் அறியும்படி வாய்திறக்க வேண்டாமோ ? (கூ)

நெய்புண் பூங்குழல் மடவரால் நின்னெடும் வாது
செய்யும் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுண்போல்
உய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள்.

(இ - ள்) நெய்பூசிய மலரையணிந்த அளகபாரத்தையுடைய ஈழநாட்டுப் பாடினியே! உன்னெடும் இசைவாது செய்யும் போருக்கு நான் எதிரேயல்லாமல், கொடிய வாயைத்திறந்து கொடுஞ்சொற்களைப் பேசும்போருக்கு நான் எதிரல்லேன் ; உன்னைப்போல மானத்தைவிற்று உயிர்பிழைக்கும் விலைமாதர்களே அக்கொடுஞ்சொற்களுக் கெதிராவார்கள் என்று கூறினர். (கஉ)

வென்றி மீனவன் விலக்குவான் போலெதிர் விலக்கித்
துன்று தார்க்குழல் மடந்தைதீர் பாடுமின் தோற்றோர்
வென்ற மாதரார்க் கடிமையாய் விடுவதே சபதம்
என்று மானமுண் டாக்கலு மீழநாட் டரிவை.

(இ - ள்) வெற்றியையுடைய பாண்டியன் (இருவரையும்) விலக்குவானைப் போல எதிர்கின்று விலக்கி, நெருங்கிய மாலையணிந்த கூந்தலையுடைய மங்கையரே! பாடுங்கள். தோல்வியுற்றவர் வென்றவர்க்கு அடிமையாய் விடுதலேயுங்கட்குள் சபதமென இருவருக்கும் மானமுண்டாக்கலும், ஈழநாட்டினிரும் போந்த பாடினி. (கக)

முந்தி யாழிடந் தழீஇக்குரல் வழிமுகிழ் விரல்போய்
உந்த வேபெரு மிதகைபுட்கிடங் தருப்பச்
சந்த வேழிசை யிறைமகன் முழ்செவிக் கன்பு
வந்த காதலாள் மழலையி னமுதென வார்த்தாள்.

(இ - ள்) தான்முற்பட்டு வீணையை யிடத்தோளிற்றழுவி, குரல் என்னும் கரம்பின் வழியே முகிழ்த்த விரல்சென்று தாக்கவும், பெருமிதப்புன்னகையானது உள்ளிருந்து முகிழ்ப்பவும், பண்ணுகவமைத்த எழிசைகளும் இராசராசபாண்டியனுடைய தாழ் செவியில் அவனன்பு கைவந்த காமக்கிழத்தியின் மழலைச் சொல்லாகிய இனிய அமுதம்போல வார்த்தனள். (கடு)

வீணை வாங்கினள் மாடக முறுக்கினள் விசித்து
வாண ரம்பெறிந் திருசெவி மடுத்தன ரியக்கர்
நாண மெல்லிர னடைவழி நாவினி யமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர்செவி நிறைத்தாள்.

(இ - ள்) வீணையை எடுத்து மாடகத்தை முறுக்கிக் கட்டமைத்து, ஒன்னிய கரம்புகளைத் தடவி, தமது இருசெவியாலுமடித்து யகூர்களும் நாண

மீதூர, மெல்லிய விரல்களே அங்கரம்புகளில் நடத்தலின் வழியே தமது நாவால் வீளைக்கும் இசையமுதத்தை, பாணபத்திரர் மனைவியாரும் பலர் செவிக்கும் ஊட்டினர். (கசு)

அரச னுட்கிடை யறிந்தில ரவைக்களத் துள்ளார்
விரைசெய் வார்குழற் பாடினி பாடலே வியந்தார்
புரைசை மானிடைப் பூழிய னிலங்கையிற் போர்த்த
வுரைசெய் குங்குமக் கொங்கையாள் பாடலே மகிழ்ந்தான்.

(இ - ள்) சபையிலுள்ளோர் அரசனுடைய உட்கருத்தை யுணராதவர் களாய் வாசங்கமழுங் கூந்தலையுடைய பாணபத்திரர் மனைவியின் பாடலே மெச்சினர்கள். கழுத்திற் கயிறுபூண்ட யானைக்கூட்டங்களையுடைய பாண்டி யன் இலங்கையினின்றும் வந்த குங்குமஞ்சுழும்பு பூசிய குன்றுபோன்ற குசங் களையுடைய ஈழப்பாடினியின் பாடலே மெச்சினான். (வி - ம்) புரசை - புரைசை; "அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்" என்றபடி மொழியிடைப்போலி. (கள)

வேறு

தென்னவ னுட்கோ ளில்லை தெரிந்தன ரவையத் துள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தன ரவளைத் தானே
முன்னவ னருளைப் பெற்று மும்மையுந் துறந்தே னேனும்
மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்கா னன்றே.

(இ - ள்) சபையிலுள்ளவர்கள் பாண்டியனது உள்ளக்கருத்தை யுணர்ந்து அந்த ஈழப்பாடினியையே பாண்டியன் புகழ்ந்தவண்ணமே புகழ்ந்தார்கள். சிவபெருமான் திருவருளைப்பெற்று (மண் பெண் பொன் என்னும் ஈஷணைத் திரவியங்கள்) மூன்றனையுந் துறந்தவராயினும், அரசன் சொல்லியவழியே சொல்லுதல் வழக்கல்லவா ? (கஅ)

பொன்றளி ரணையாள் மையற் புதுமது நுகர்ந்து தீது
நன்றறி யாத கன்னி நாடவ னவையை நோக்கி
இன்றொரு நாளிற் றேரத் தக்கதே தா இதுவென் றந்த
வென்றடு வேற்க ணுரைப் போமென விடுத்தான் மன்னோ.

(இ - ள்) பொன் தளிர்த்தாலொத்த மேனியையுடைய காமக்கிழத்தி தரும் காமமாகிய புதிய தேனைப்பருகி, நன்மைதீமைகளைப் பகுத்தறியாத பாண்டியன், சபையிலுள்ளோரைப் பார்த்து, இவ்விசைத்திறத்தை யிப்பொ ழுதே ஒருநாளி லளந்தறியக்கூடுமோ? என்றுகூறி, அந்த இரு பாடினிகளையும் போகக்கடவீரென விடை கொடுத்தனன்.

(வி - ம்) வென்றடு வேற்கணுரை-பகைவரை வெற்றிகொள்ளும் வேற்படை போன்ற கண்களையுடையவர்கள். (கக)

மருவிய வாய மேத்த விருந்தினள் மனைவந் தெய்திப்
புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்தமை புகழ்ந்த தாகப்

பெருமிதக் கலிக்கொண் டானைப் பெருங்களிப் படைத்து மஞ்சத்
திருமல ரணைமே லார்வக் கிளைத்தினி திருந்தா ளிப்பால்.

(இ - ள்) தன்னைச் சூழ்ந்த பெண்கள் கூட்டம் வாழ்த்த ஈழநாட்டிலிருந்து வந்த பாடினி தன்விடுதியில் வந்தடைந்து, பாண்டியன் தனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ச்சியாகக்கொண்டு இறுமாப்பு மேற்கொண்டு நீங்காத பெருஞ் செருக் கடைந்துமஞ்சத்திற் பரப்பிய புஷ்பசயனத்தின்மேல் மகிழ்ச்சியுடன் இனிதாகவிருந்தனள். இப்பால்,

(வி - ம்) 'புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்ததாக' என்றது, பின் வருவது தெரியாமையின் இகழ்ச்சி புலப்படுத்தக் கூறினர். (உ0)

வணங்குறு மருங்கிற் கற்பின் மடவரன் மதங்கி தானும்
அணங்கிறை கொண்ட நெஞ்ச ளங்கயற் கண்ணி பாகக்
குணங்குறி கடந்த சோதி குரைகழ லடிக்கீ ழெய்தி
உணங்கினள் கலுழ்கண் ணீர மொதுங்கிநின் றிதனைச் சொன்னாள்.

(இ - ள்) வளையுமிடையையும் கற்பினையுமுடைய பாணபத்திரர் மனைவியாரும் அன்பங் குடிகொண்ட மனமுடையவளாய், அங்கயற்கண்ணியாரை வாமபாகத்திலுடையவராய்க் குணங்குறிகளைக் கடந்த பேரொளியாகிய சோமசுந்தரக் கடவுளுடைய சத்திக்கின்ற வீரக்கழலணிந்த திருவடியையடைந்து, புல்லிதது சிந்துங் கண்ணீருடையராய், ஒருபாலொதுங்கி நின்று இதனைக் கூறுகிறார்: (உக)

தென்னவ னுகி வையஞ் செய்யகோல் செலுத்திக் காத்த
மன்னவ வழுதி வார வழிவழக் குரைப்ப தானுன்
அன்னவன் கருத்துக் கேற்ப அவையரு மனைய ரானுர்
பின்னடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவ ரையா.

(இ - ள்) ஐயனே! பாண்டியர்மரபிற்றோன்றி உலகினைச் செங்கோல் செலுத்திக் காக்கும் அரசனுகிய இராசராச பாண்டியன் நடுநிலைமையைக் கைவிட்டு அழிவழக்குப்பேசுவதானுன். அப்பாண்டியனுடைய கருத்துக்குப் பொருந்த அவன்சபையிலுள்ள பெரியோரும் அத்தன்மையரேயாயினர். பின்பு நடுநிலைமையினின்று சீர்தூக்கிப் பேசத்தக்கவர் யாவரிருக்கின்றனர்? (நீயேயன்றி ஒருவருமிலர்.) (உட)

உன்னருட் டுணைசெய் தென்பா லுறுகணோய் துடைப்ப தென்ன
மின்னனுய் நீயே காளை வெல்லுமா செய்து மஞ்சேல்
என்னவா கிய வாணி யீறிலா னருளாற் கேட்டு
மன்னருங் கற்பி னுள்தன் மனைபுகுந் திருந்தாள் மன்னோ.

(இ - ள்) உனது திருவருட்டுணைசெய்து என்னிடத்திலுள்ள துன்ப நோயையொழிக்கக் கடவாயென்றிரக்க, மின்னல் போன்றவளே! நீயே காளையினத்தில் வெல்லும்படி செய்வோம். அஞ்சற்கவென்று கூறிய

அசரீரியைச் சோமசுந்தரக் கடவுளின் திருவருளாற் கேட்டு, நிலைபெற்ற அரியகற்பினையுடைய பாணபத்திரர் மனைவியார் தமதில்லிற் சென்றிருந்தனர்.

அன்றுபோல் மற்றை ஞான்று மழைத்தனன் பாடல் கேட்டுக்
குன்றுபோற் புயத்தா னென்னற் கூறிய வாறே கூற
மன்றுளார் பலரு மன்ன வண்ணமே சொன்னர் கேட்டு
நின்றபாண் மடந்தை பாண்டி நிருபனே நோக்கிச் சொல்வாள்.

(இ - ள்) மலைபோலுயர்ந்த புயத்தையுடைய பாண்டியன் அன்றுபோல மறுநாளிலும் (அவ்விருவரையும்) அழைப்பித்து, அவர்கள் பாடல்களைக் கேட்டு, நேற்றுக் கூறியதுபோலவே (இன்றுங்) கூறச் சபையிலுள்ள பெரியோர் பலரும் அவ்வாறே சொல்லினர். அதனைக்கேட்டு, அங்கு நின்ற பாணபத்திரர் மனைவியார் பாண்டியராகனைப் பார்த்துக் கூறுகின்றனர் :

(வி - ம்) சொல்வாள் - நிகழ்காலப் பொருளில்வந்த வினையெச்சம். (உசு)

தென்னரே றணையாய் ஞால மனுவழி செங்கோ லோச்சும்
மன்னரே றணையாய் வார வழக்கினை யாத லானீ
சொன்னவா றவையுஞ் சொல்லத் துணிந்தது துலைநா வன்ன
பன்னகா பரணர் முன்போய்ப் பாடுகேம் பாடு மெல்லை.

(இ - ள்) பாண்டியருள் ஆண்சிங்கம் போன்றவனே ! உலகத்தில் மனுமுறையே செங்கோல் செலுத்தும் மன்னவருள் ஆண்சிங்கம் போன்றவனே ! நடுநிலைமையிகந்த வழக்கினையுடையாயாதலால், நீ கூறியபடியே சபையுஞ் சொல்லத்துணிந்தது. துலையின் மேல்நிலைப்போன்ற சர்ப்பாபரணத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் சன்னிதியிற் சென்று நாங்களிருவரும் பாடுகின்றோம். பாடுங்காலத்தில். (உரு)

இருவரேம் பாட்டுங் கேட்டுத் துணிந்திவள் வென்று ளென்னு
ஒருவர்சந் நிதியிற் சொன்னற் போதுமென் றுரைத்தாள் பாண்டித்
திருமக னினைய வாறே செய்மினீர் செய்மி னென்ன
மருவளர் குழலி னர்தம் மனைபுகுந் திருந்தார் பின்னர்.

(இ - ள்) எங்களிருவருடைய பாடலையுங் கேட்டு ஒருவர் மன்துணிந்து (இவரென்) இவள்தான் வென்றுளென்று அச் சன்னிதியிற் சொன்னல் அமையுமென்று கூறினர். பாண்டிநாட்டரசனுகிய இராசராசபாண்டியன் அப்படியே நீங்கள் செய்யுங்களென்று கூற, வாசம்பொருந்திய கூந்தலையுடைய பாடினிகளிருவரும் தமதில்லிற் சென்றிருந்தார்கள். (உசு)

வேறு

தென்ற ளுடனு மந்திரச் செல்வரும்
நன்று தீதுணர் நால்வகைக் கேள்வியோர்
ஒன்ற வேகி யொளிவிடு வெள்ளிமா
மன்ற வாணர்மா மண்டபத் தெய்தினர்.

(இ - ள்) பாண்டியனும் மந்திரிகளும் (இசையிலுள்ள) குணங் குற்றங்க ளைப் பகுத்தறியும் ஞான்கு வகைப்பட்ட கேள்வி நிறைந்த இசைநூற் புலவர் கள் தம்மைச் சூழ்ந்துவரச் சென்று, ஒளிவீசும் வெள்ளியம்பலவாணர் மகா மண்டபத்தி லடைந்தார்கள்.

(வி - ம்) கீத ஞானம் - இலய ஞானம் - சுருதி ஞானம் - தாள ஞானம் என்பன நால்வகை ஞானங்களென்பர். (உஎ)

எய்தி யம்மட மாதரை யிங்குறச்
செய்தி யென்னத் திருமக னேவலோர்
கொய்தி ணெடி நொடித்தழைத் தாரொடு
மைதி கழ்ந்த விழியார் வருவரால்.

(இ - ள்) அடைந்து, அப்பாடினிகளை யிங்கு வரச்செய்யுங்களென்ற பணிக்க, பாண்டியன துஎவல்வழி நிற்கும் வேவுகாரர் விரைந்தோடி அரசன் கட்டளையைக் கூறி அழைத்த அவ்வேவுகாரரோடு, மைவிளங்கிய கண்களை யுடைய பாடினிகள் வரா நிற்பர். (உஅ)

படிமை யார்தவப் பாடினி வந்தெனக்
கடிமை யாவளின் றையுமின் ருலெனக்
கொடுமை யார்மனக் கோட்டச் செருக்கொடுங்
கடுமை யாகவந் தாள்கலத் தின்வந்தாள்.

(இ - ள்) தவவேடமுடைய பாடினிவந்து எனக்கு இப்பொழுது அடிமை யாவாள் ; சந்தேகமில்லையென்று, கொடுமை மிக்க மனக்கோணலால் செருக் கோடும் மாக்கலத்தில் வந்த பாடினி விரைந்து வந்தனள். (உக)

கற்பின் மிக்கெழு கற்புங் கருத்தினிற்
சிற்ப ரஞ்சுடர் சேவடி மேல்வைத்த
அற்பு மிக்கெழ மெல்லவந் தாளரோ
பொற்பு மிக்குள பத்திரன் பொன்னனுள்.

(இ - ள்) கல்வி யறிவால் மேம்பட்டு விளங்குங் கற்பும், தமது மனத்திற் சோமசுந்தரக் கடவுளுடைய சிவந்த திருவடிமேல் வைத்த பத்திமையும் பொலிந்து தோன்ற, அழகுமிக்க பாணபத்திரருடைய மனைவியார் மெல்லென வந்தனர். (உ0)

அலங்கு மாமலர் டங்கத மாதிபல்
கலன்கள் தாங்கிக் கலைஞர்க் ழாத்திடை
இலங்கு மாட மதுரைக் கிறைவரும்
புலங்கொள் நாவலர் போல்வந்து வைகினர்.

(இ - ள்) விளங்குகின்ற மாடங்கள் நெருங்கிய மதுரைப்பதியி லெழுந் தருளிய சோமசுந்தரக் கடவுளும், அசைகின்ற முத்தாரத்தோடு வாகுவலய முதலிய ஆபரணங்க ளணிந்து, இசைப்புலவர் கூட்டத்துள் இசைநூலில்வல்ல புலவர்போல (வடிவேற்று) வந்து தங்கியருளினர். (உக)

அந்த வேத்தவை தன்னி லருங்கலம்
வந்த வேய்த்தடக் தோளிசை மாதராள்
முந்த வேத்திசை பாடினள் முந்தையோர்
சிந்தை வேட்டொன்றுஞ் செப்பின ரில்லையால்.

(இ - ள்) அந்த அரசசபையில், அரிய மரக்கலத்தில் வந்த மூங்கில்போலும் பருத்த தோளையுடைய (ஏழகாட்டுப்) பாடினி முற்பட நால்வகை வருண வாழ்த்தும் பாடினள். (அச்சபையிலிருந்து அதைக் கேட்ட) முதியோர் மனம் விரும்பி ஒன்றுங் கூறிற்றிலர்.

(வி - ம்) அவள் இசை அச்சபையோரை மகிழ்வுறச் செய்யாமையின் அவர்கள் ஒன்றுஞ் செப்பினரிலர் என்றார். நால்வகை வருணவாழ்த்தாவது - நால்வகை வருணப் பூதரைச் சிறுதேவபாணியாற் றுதித்து மூவடி முக்கால் வெண்பாவால் அவர் அணிமாலை ஆடை கீரம் கொடி முதலியவற்றைத் துதித்து அவர்களா லொன்று பெறுதல். இதனை,

மதிவாணனார் இசைநூல்
[சீவகசிந்தாமணி உதாரணச் செய்யுள்]

" அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல் வாழ்க
வணிக ரிருதெறி னீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
அரங்கியற் கூத்து நிரம்பினி னூடுக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென்
றிப்படிப் பலிகொடுத் திறைவனிற் றொக்குச்
சீட்பட வமைத்துச் செழும்புகை காட்டிச்
சேவடி தேவரை யேத்திப் பூதரை
மூவடி முக்கால் வெண்பா மொழிந்து
செவியிழுக் குறுமை வேத்தனே யேத்திக்
கவியொழுக் கத்து கின்றுழி வேந்தன்
கொடுப்பன கொடுக்க வமையு மென்ப."

எனக் கூறுதலானுணர்க. (கூ)

வீணை தோளிட னேந்திய வெண்மலர்
வாணி பாட இருக்கையின் வைகியே
யாண மம்பெறிக் கின்னிசை யோர்ந்தெழீஇப்
பாணர் கோமகன் பன்னியும் பாடுமால்.

(இ - ள்) வீணையை யிடத்தோளிலேந்திய கலைமகள் பாடும் அவ்வாசனத்திலே தாமுமிருந்து, வீணையின் நாம்பினைத் தடவி, இன்னிசையை யாய்ந்தெழுப்பி, பாணர்கட்கிறைவராகிய பத்திராது மனைவியாரும் பாடலுற்றனர்.

(வி - ம்) வாணியிருக்கை யென்றது பதுமாசனம். அது காலடிகளை மாற்றிக் குறுமேலாக விருத்தல். அஃதொன்பது விருத்தியு ளொன்று. இதனை,

" பதுமமு முற்கட் டிதமே யொப்படி'
இருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகம்

தனிப்புட மண்டில மேக பாதம்
உளப்பட வொன்பதும்
ஆருக் திரிதர வில்லா திருக்கை."—என்பதனுனறிக. (கூகூ)

வேறு

குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுக் தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற்படுதலைகொண்
டிடங்கள் தோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே.

(இ - ள்) மதுரையிலெழுந்தருளிய பெருமானே! அகங்கை யளவு நீரையும் பச்சிலையையுமிட்டு வழிபடும் அடியார்க்கு ஐராவதத்தையும் சேஷசயனத்தையும் தாமரைத் தவிசையுந் தந்தருளுவாய். (வழிபடும் அடியார்க்கு) சேஷசயனத்தையுந் தாமரைத் தவிசையுந் தந்தருளும் நீயே திருக்காத்திற் கபாலத்தைத் தாங்கி (தாருவன முனிவர்) வீடுகள் தோறும் இரக்கின்றாயென்று இகழும் புறச்சமயிகட்கு (யான்) யாதினை (விடையாகக்) கூறுவேன்?

(வி - ம்) இமையாக்குஞ்சரம் - கண்ணிமையாத யானை. இக்கிரனும் பிரமனும் திருமாலும் சிவபிரானை வழிபாடு செய்தே தமது பதவியை யடைந்தனரென்பது தோன்ற நிற்றலின் குறிப்பெச்சம். பரம + இஷ்டி = பரமேஷ்டி. தாருவன முனிவர் கௌதம முனிவரை வீணை பதிதராகத் தமது மாயையாற் கற்பித்து அதனாற் பாபமேற்றுத் துன்புற்றிருந்தனராதலின் அதனை விலக்கற் பொருட்டுச் சிவபெருமான் அவர்பால் பலியேற்றனர். *இவ்விதையத்தை அகச்சமயிகளறிந்து அருமை பாராட்டி மகிழ்வர். புறச்சமயிகள் அதனை யுணராது அவமதிப்பாராதலின் "ஏசுவார்க் கென்பேசுவனே" என்றார். (கூஈ)

தேனுர் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
ஞானு வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
ஞானு வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
ஆனு யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே.

(இ - ள்) மதுரையி லெழுந்தருளிய நமது பரமனே! தேன்போலுஞ் சுவை பொருந்திய மொழியையுடைய மாதர்களது கட்பார்வையின் வழியே செல்லாத சிவயோகிகட்கே மோக்ஷமென்று, பலவகைப்பட்ட வேதப்பொருளை நீயே விரித்துக் கூறினை. பலவகைப்பட்ட வேதப்பொருளை விரித்துக் கூறிய நீயே இடப்பாதி பெண்ணுருவாயினை யெனப் புறச்சமயிகள் இகழில் அடியேன் யாது விடையாகக் கூறுவேன்.

(வி - ம்) வேதம் விச்சுவரூபியெனக் கூறுதற் கியைய ஆண்மாக்களுக்கு ஈடருளுதற் பொருட்டுப் பத்தமருளப் பாதிநாரி யுருவாளுயென்று அகச்சமயிகள் மகிழ்வர். புறச்சமயிகள் அதனை யுணராது அவமதிப்பாதலின், "பழித்தால் அடியேன் விடையே தறைவேனே" என்றார்.

---

*தமிழ் வசன நடையில் வெளியிட்டிருக்கும் **சிவமகாபுராணம்** - ஞான சங்கிதையிற் கௌதமேசுவரலிங்க மகிமை யுரைத்த அத்தியாயத்திற் காண்க.

'பாதி காரி யுருவானாய்' என்பதனை,

திருவாசகம்

"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்றும்,

சிந்தாந்த நூலார்

"ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
போகங்க ளெங்கே புணர்ப்பெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு"

என்றும் வருவனவற்றா னறிக. (கூ)

வரத ஞகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தா யென்பார்க் கென்ஞன் விளம்புவனே.

(இ - ள்) மதுரையி லெழுந்தருளிய ஒப்பில்லாத முதற்கடவுளே! அருட் கொடையை யுடையவனுகி எல்லா வுயிர்கட்கும் மாயாமலத்தின் விருத்தி வன்மையை யடக்கி, நித்தியமான மோகூ இன்பத்தைத் தந்தருளுகின்றனை. நித்தியமான மோகூ இன்பத்தைத் தந்தருளுகின்ற நீயே மோகூ இன்பத்தை யடைய முயல்வார் போல நோன்பாகிய யோக நிலையினைக் கைக்கொண்டரு ளினை என்னும் புறச் சமயிகளுக்கு நான் யாது (விடையாகக்) கூறுவேன்?

(வி - ம்) தனு கரண புவன போகங்களாய்க் கன்மத்துக்கேற்ற சரீரங்க ளைக் கொடுத்தல் மாயா மலத்தின் றொழில். அழுக்கைக் கொண்டே அழுக்கை யொழித்தல்போல, மாயையைக்கொண்டே அந்த மாயையை யொழிததன் வலியடக்கலாம். முக்திநிலை வாக்கிறந்ததாதலின் சனகர் முதலிய மகருஷிகள் நால்வர்க்குணர்த்திய சிவயோக நிலையை அகச்சமயிகளுணர்வர். புறச்சமயிகள் அதனை யுணராது அவமதிப்பாராதலின் "விரதயோக நிலையடைந்தா யென் பார்க் கென்ஞன் விளம்புவனே" என்றார். இதனை,

திருவாசகம்

"நன்றுக நால்வருக்கு நான்மறையி னுட்பொருளே
அன்றுலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி
அன்றுலின் கீழிருந்தங் கறமுரைத்தா ஞயிடினும்
கொன்றுன்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ"

என்பதனுனறிக. (கூ)

கண்ணுதல் மதுரைப் பிராணியிவ் வாறு கருதிய பாணியாற் கனிந்து, பண்ணுதல் பரிவட் டணைமுத லிசைநூல் பகர்முதற் றொழி லிரு நான்கும், எண்ணுறு வார்தல் வடித்திடன் முதலா மெட்டி

சைக் காணமும் பயப்ப, மண்ணவர் செவிக்கோ வானவர் செவிக்கும் வாக்கினுள் ஈவினை யமுதம்.

(இ - ள்) நெற்றிக்கண்ணையுடைய மதுராபுரீசனே இவ்வண்ணமாகப் பொருளமைந்த பண்ணினுல் மனங்கனிந்து, பண்ணுதல் பரிவட்டணை முதலாக இசை தூல் கூறும் முதற்றொழில்களாகிய எட்டும், எண்ணிநிற்கும் வார்தல் வடித்தல் முதலிய எண்வகைப்பட்ட இசைக்காரணங்களும் பயன்பட,மண்ணுலக வாசிகள் செவிக்குமட்டுமோ, தேவர்களது செவிக்கும் தமது காவால் வினைந்த இசையமுதத்தை வார்த்தனர் (பாணபத்திரர் மனைவியார்).

(வி - ம்) பண்ணுதல் பரிவட்டணை முதல் முதற்றொழிலிருநான்கு—பண்ணல் - பரிவட்டணை - ஆராய்தல் - தைவரல் - செலவு - கையூழ் - வியாயாட்டு - சூறும்போக்கு எனப்படும். அவற்றுள், பண்ணல் - பாடலினைத்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான் நரம்புகளை பெயருந்தன்மை மாத்திரை யறிந்து வீக்குதல். பரிவட்டணை - அவ்வீக்கின நரம்பை அகமும் புறமும் விரல்களாற் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல், ஆராய்தல் - ஆரோகண அவரோகணவகை யால் இசையைத் தெரிதல். தைவரல் - அருசுருதி யேற்றுதல். செலவு - ஆலத்தியே நிரம்பப் பாடுதல். வியாயாட்டு - பாடலினைத்த வண்ணத்திற் சுரதத்தை விடுத்தல். கையூழ் - பாட லினைத்த வண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாகப் பாடுதல். சூறும்போக்கு - குடகச் செலவுந் தள்ளற்செலவும் பாடுதல் என்பர்.

வார்தல் வடித்திடன் முதலா மெட்டிசைக்காரணம்—வார்தல் - வடித்தல் - உந்தல் - உறழ்தல் - உருட்டல் - தெருட்டல் - எள்ளல் - பட்டடை யெனப் படும். அவற்றுள், வார்தல் - எடுத்தல் ; வடித்தல் - படித்தல் ; உந்தல் - ஒலி தல் ; உறழ்தல் - கும்பித்தல் ; உருட்டல் - உருட்டு; தெருட்டல் - ஒலி ; எள் ளல் - குடிலம்; பட்டடை - தூக்கு என்பர். (உ-ஏ)

இடையிலை டேனைப் பிங்கலை யியக்க மிகந்துமூ லந்தொடுத் தியக்கி, நடுவுறு தொழிலாற் பிரமரந் திராந்த நடைபெற விசைக்கு முள் ளாளம், பிடறுவிங் காள்கண் ணிமைத்திடா சொயிறு வெளிப் படாள் புருவமேல் நிபிராள், கொடிறது துடியாள் பாடலு மதிகேட் டனைவருங் குதூகல மடைந்தார்.

(இ - ள்) இடைகலையுடன் மற்றப் பிங்கலையிலுமியங்குஞ் சஞ்சரிப்பொழி ந்து மூலாதாரத்தினின்றும் வாயுவை யெழுப்பிச் சுழிமுனையின் றொழிலால் பிரமரந்திர முடிவுகாறுஞ் செல்லப்பாடுந் தேவகாந்தருவத்தை, கண்டம் வீங்காம லும், கண்ணிமை கொட்டாமலும், பற்கள் தோன்றாமலும், புருவமேறாமலும், கபோலந் துடியாமலும் (பாணபத்திரர் மனைவியார்) பாட, அத்தேவகாந்தரு வத்தை எல்லோருங் கேட்டுக் களிப்படைந்தார்கள்.

(வி - ம்) உள்ளாளக் கீதம் பதினெருவகையாற் பாடப்படு மென்பார். இதனை,

> " உள்ளாளம் விம்முவுட னுதை மொலியுருட்டுத்
> தள்ளாத தூக்கெடுத்தல் தான்படுத்தல்—மெள்ளக்

கருதி கலிதல் கம்பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை.''

கண்ணிமையா கண்டங் குடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்ரு பற்றெரியா—எண்ணிலிவை
கள்ளார் கறுந்தெரியற் கைதவனே கற்தருவர்
உள்ளாளப் பாட லுணர்''—என்பதனு னறிக.

இவ்விரகஸ்யம் சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகத்தில் நச்சினார்க்கினியர் எழுதிய உரையிலும், இசைநூல்களிலுங் கண்டுகொள்க. (ஈ அ)

கன்னிகா டுடையான் கைதவ னெனும்பேர்க் காரணந் தேற்றுவா னெனத்தான், இன்னிசை யறிஞ னுகியு முன்போ லியம்புவா னெருப்படி கின்ரு ன், முன்னவ னருளாற் றன்மனக் கோட்ட முரண் கெடப் பொதுமையா னேக்கி, இன்னிவள் தானே வென்ற னென்ரு னினையவா றுணவரு மொழிந்தார்.

(இ - ள்) பாண்டிநாட்டையுடைய இராசராசபாண்டியன் (தனக்குரிய) கைதவன் என்னும் பெயருக்குக் காரணத்தைத் தெளிவிப்பவன்போல, தான் இனிய இசைநூலில் வல்ல புலவனுகியும், முன்புபோலக் கூற உடன்படுகின்ற வன், சோமசுந்தரக்கடவுளின் அருளால் தனது மனக்கோணலின் மாறுபாடு கெட, கடுங்கிலைமையினின்று சீர்தூக்கி, இந்தப் பாணபத்திரன் மனைவியே வென்ரு னென்று கூறினன். இப்படியே அங்கிருந்தார் யாவருங் கூறினர்.

(வி - ம்) கை தவன் = தவம் கைகூடியவன். இஃதிவன்பால் ஒரு சொல்லின் தன்மைத்தாய வஞ்சகமுடையான் எனக் காரணக்குறியாக மாறுகின்ரு ரென்று தலின் ''கைதவனெனும்பெயர்க் காரணந் தேற்றுவான் போல'' என்ரு ர். கைதவம் = வஞ்சனை (ஈ க)

கரியுரை மொழிந்த கைதவ னிலங்கைக் கைதவப் பாடினி கழுத்திற், புரிகுழல் மாதை யிருத்தினை இருத்தும் போதுமை யிடங்கரத் திருந்த, அரியநா வலரீ தற்புத மீதற் புதமென அறைந்தவை காண, விரிகதிர் மின்போல் மறைந்தனர் யாரும் வியந்தனர் பய்ந்தனன் வேந்தன்.

(இ - ள்) சாக்ஷிமொழி கூறிய பாண்டியன் இலங்கையினின்றுவந்த வஞ்சகப்பாடினியின் கழுத்தில், கட்டமைந்த கூந்தலையுடைய பாணபத்திரர் மனைவியை யிருத்தா யென்றேவ, ஏவற்பெண்க ளிருத்தங்காலையில், உமாதேவியாரை வாமபாகத்திற்கரந்து (மாறுடத்) திருவருவங் கொண்டிருந்த அரிய (இசைநூலில் வல்ல) நாவலர் பெருமானுகிய சோமசுந்தரக்கடவுள், இச்செயல் அற்புதமென்று கூறிச் சபையிலுள்ளோ ருணர விரிந்த கிரணத்தையுடைய மின்னல்போல மறைந்தருளினர். (அதனைக் கண்ட) யாவரும் அதிசயித்தார்கள். இராசராசபாண்டியன் பயந்தனன். (சஅ)

செங்கணே றழுக ராடலி தென்றே யாவருந் தெளிந்தன ரேத்தி
அங்கணு யகர்தங் கருணையின் திறனு மடியவ ரன்பையுந் தூக்கித்

தங்கணு ரருவி பெருகஆ னந்தத் தனிப்பெருஞ் சலதியி லாழ்ந்தார்
வங்கமேல் வந்தாள் பிடர்மிசை யிருந்த மாணிழை விறலியை மன்னன்.

(இ - ள்) சிவந்த கண்களையுடைய விடைமேலழகர் திருவிளையாடலிது என்று யாவருந் தெளிந்து துதித்து, அவ்விடத்துச் சோமசுந்தரக்கடவுளின் திருவருளின் திறத்தையும் அடியவர்களின் அன்பின் திறத்தையுஞ் சீர்தூக்கி, தமது கண்களில் ஆனந்தவெள்ளம் உவட்டெடுத்தூற்ற வொப்பில்லாத பேரின்ப சாகரத்தி லழுந்தினர்கள். மாக்கலத்தின்மேல் வந்த பாடினியின் பிடர்மேலிருந்த பாணபத்திரர் மனைவியை, இராசராசபாண்டியன். (சக)

இறக்குவித் தவட்கு முந்தமுத் தார மெரிமணிக் கலன்றுகில் வரிசை, பெறக்கொடுத் தேனை யவட்குமுள் மகிழ்ச்சி பெறச்சில வரிசைதந் தவையிற், சிறக்கவந் தொருங்கு வைகிவா னிழிந்த தெய்வதக் கோயில்புக் கிருந்த,அறக்தொடி யிடைஞ்சேர் பெருமும்புல வோர்க்கு மருங்கல ஞதிகள் நல்கா.

(இ - ள்) இறக்குவித்து, அப்பாணர் மனைவியாருக்கு முற்பட முத்துமாலி கையையும் தீப்போலச் செந்நிறம் வாய்ந்த இரத்தினபாணங்களையும் பீதாம்ப ரங்களையும் வரிசையாகப் பெறத் தந்து, ஈழப்பாடினிக்கும் மனத்தில் மகிழ்ச்சி யரும்பச் சிலவரிசைகள் கொடுத்து, சபையில் மேம்பட ஒரு சேரவிருந்து, விண்ணினின்றும் இழிந்த தெய்வத்தன்மையுடைய திருக்கோயிலிற் சென்று, ஆங்குவழுந்தருளிய உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய பெரிய புலவர் சிகா மணிக்கும் அரிய ஆபரணங்களைக்கொடுத்து. (சஉ)

வேறு

மன்னவர் வலிக ளெல்லாந் தெய்வத்தின் வலிமுன் னில்லா
அன்னமா தெய்வஞ் செய்யும் வகிலெலா மாண்மூன் றட்ட
முன்னவன் வலிமுன் னில்லா வெனப்பலர் மொழிவ தெல்லாம்
இன்னபாண் மகளிற் காணப் பட்டதென் றிறும்பூ தெய்தா.

(இ - ள்) அரசருடைய வலிமைகளெல்லாம் தெய்வத்தின் வலிமைக்கு முன் நில்லாவாம். அத்தப் பெரிய தெய்வங்கள் செய்யும் வலிமைகளெல்லாம் திரிபுரங்களை நகைத்தெரித்தருளிய சிவபெருமான் வலிமைக்கு முன் நில்லாவா மென்று, பலருங் கூறுவதெல்லாம் இந்தப் பாடினியாரிடத்து (ஜயமறக்) காணப் பட்டதென்று வியப்படைந்து. (சங)

மின்னியல் சடையி னானை விடைகொடு வலஞ்செய் தேகி
இன்னிய மியக்கஞ் செய்ய எழில்கொடன் கோயி லெய்தித்
தொன்னிதி பெற்றான் போலச் சுகுணபாண் டியனைப் பெற்று
மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகினன் இராச ராசன்.

(இ - ள்) மின்னலையொத்த சடையையுடைய சோமசுந்தரப்பெருமானி டத்து விடைபெற்றுச்சென்று இனிய வாச்சியங்களொலிக்க, அழகுபொருந் திய தனது கோயிலையடைந்து, தொன்றுதொட்டுள்ள சங்கநிதி பதுமநிதிகளைப் பெற்றவன்போல, சுகுணபாண்டியனைப் பெற்ற மகிழ்ச்சி மிக இராசராசபாண் டியனிருந்தனன். (சச)

ஆஉ திருவிருத்தம் - உகஉஉ.

நாற்பத்தைந்தாவது

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம்

இருளேக்கந் தரத்தில் வைத்தோன் தன்னிடத் தென்று மன்பின்
தெருளேத்தந் தவட்கு மாறுந் தெரிவையை யிசையால் வெல்ல
அருளேத்தந் தளித்த வண்ண மறைந்தனந் தாயாய்ப் பன்றிக்
குருளேக்கு முலைதந் தாவி கொடுத்தவா றெடுத்துச் சொல்வாம்.

(இ - ள்) ஸ்ரீகண்டத்தில் விஷத்தைப்பொருத்திய சிவபெருமானுர் தம் மிடத்தில் எப்பொழுதும் மெய்யன்பினே வைத்த பாணபத்திரர் மனைவியாருக் குப் பகையாயுள்ள ஈழநாட்டுப் பாடினியை இசைப்பாட்டினுல் வெல்லத் திரு வருள் வைத்துப் பாலித்த திருவீளையாடலைக் கூறினேனும். பன்றிக் குட்டிகளுக் குத் தாயாக வந்து முலைகொடுத்துப் பாலித்த திருவீளையாடலே யினியெடுத்துக் கூறுவாம். (க)

முறையென இமையோர் வேண்ட மூளைத்தருஞ் சயின்று சான்றுய்
உறையென மிடற்றில் வைத்த வும்பரான் மதுரைக் காவாக்
திறையென வெறிநீர் வைகைத் தெற்கது குருவி ருந்த
துறையென வுளதோர் செல்வத் தொன்மணி மாட மூதூர்.

(இ - ள்) தேவர்கள் முறையேவென்று யாசிக்க, (கடலில்) தோன்றிய ஆலாலவிஷத்தை யுண்டு (அதனே) சாகுதியா யிருவென மிடற்றில் வைத்தரு ளிய சிவபுரத்தையுடைய பெருமானுர் (எழுந்தருளிய) திருவாலவாய்க்குத் திறையாக மூத்தங்களே வீசும் வைகைநதியின் தென்பால் குருவிருந்த துறையெனவுள்ளது, ஒப்பில்லாத செல்வமிக்க தொன்றுதொட்டுள்ள இரத்தி னங்க ளழுத்திய மாடங்களேயுடைய பெரிய நகரம். (உ)

தருகாத னுதி வாளினுர் தங்குரு விருந்து நோற்பக்
குருகாத னெனப்பேர் பெற்றுக் கோதிலா வரந்தந் தேற்றில்
வருகாதன் சித்தி ரத்தேர் வலவனு ருடனே கஞ்சத்
திருகாதன் பாவ வைகி யிருக்குமச் சிறந்த வூரில்.

(இ - ள்) பஞ்சதருக்களுக்குத் தலைவனுகிய இந்திரன் முதலிய தேவர்க ளுடைய குருவாகிய பிரகஸ்பதிமுனிவர் இருந்து நோற்றலால், குருநாத னெனக் காரணப் பெயர் கொண்டருளி, குற்றமில்லாத வரங்களே அவருக்குக் கொடுத்து, இடபவாகனத்தில் வருஞ் சிவபெருமான் சித்திராதனென்னுங் கற் தருவனுடனே, தாமரை மலரில் வாழுந் திருமகள் கொழுநனுகிய திருமால் பணிசெய்ய எழுந்தருளி யிருக்கும் அந்தச் சிறந்த (குருவிருந்த துறையென் னும்) திருப்பதியில். (ங)

சுகலனென் றிருவே ளாள னவன்மனை சுகலை யென்பாள்
இகலருங் கற்பி னுள்பன் னிருமகப் பெற்றுள் செல்வப்
புகலருஞ் செருக்கா லன்ன புதல்வரைக் கடியா ராகி
அகலருங் களிப்பு மீதூ ரன்பினுல் வளர்க்கு நாளில்.

(இ - ள்) சுகலனென்றொரு வேளாளனுள்ளான். அவன் இல்லாள் சுகலை யென்னும் பெயருடையாள். மிகுந்த கற்பினையுடைய அத்தச் சுகலை பன்னிரு புதல்வரைப் பயந்தனள். பெருஞ் செல்வத்தாலாகிய சொல்லுதற்கரிய இறுமாப்பால் அம்மக்களை (குற்றங் கண்டவிடத்து)த் தண்டியாதவர்களாகி, நீங்காத களிப்புமிக்க அன்புடன் வளர்க்குங் காலத்தில். (சு)

தந்தையுந் தாயு மாயத் தறுகண்மிக் குடையா ராகி
மைந்தரும் வேட சோடு கூடிவெங் கானில் வந்து
வெங்தொழில் வேட்டஞ் செய்வார் வெயில்புகாப் புதற்கீ ழெய்தி
ஐந்தவித் திருந்து நோற்குங் குரவனை யங்குக் கண்டார்.

(இ - ள்) தமது பிதாவும் மாதாவு மிறக்கக் கொடுந் தொழிலை மிகவு முடையராகி, அப்பன்னிரண்டு புத்திரர்களும் வேடருடன் கலந்து வெப்பம் பொருந்திய காட்டில் வந்து கொடுந்தொழிலாகிய வேட்டையாடுகின்றவர்கள், சூரியகிரணஞ் செல்லாத அடர்ந்த ஒரு புதலின் கீழ்ச்சென்று ஐம்புலன்களையும் வென்றிருந்து தவஞ்செய்யும் பிரகஸ்பதி முனிவரை அவ்விடத்திற் பார்த்தார்கள்.

(வி - ம்) ஐந்து - புலன்கண்மேனிற்றலின், பண்பாகு பெயர். (இ)

கைத்தலம் புடைத்து நக்குக் கல்லும்வெம் பரலும் வாரி
மெய்த்தவன் மெய்யிற் ருக்க வீசினர் வினையை வெல்லும்
உத்தமன் வீக்கஞ் செய்தார் தவத்தினுக் குவரென் றுன்னிச்
சித்தமொந் தினைய வஞ்சத் தியலைச் செயிர்த்து நோக்கா.

(இ - ள்) கைகொட்டிச் சிரித்து, கல்லெயுங் கொடிய பருக்கைகளையும் பொறுக்கி உண்மைத் தவத்தையுடைய பிரகஸ்பதிமுனிவர் தேகத்திற் படும்படி யெறிந்தார்கள். வினையை யொழிக்கும் உத்தமராகிய அப்பிரகஸ்பதி முனிவர், இவர்கள் நமது தவத்திற்கு அழிவு செய்தனரென்று கருதி மனங்கொண்டு, இந்த வஞ்சம் பூண்ட கொடியரைக் கோபித்துப் பார்த்து.

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம். (கு)

தொழுந்தொழில் மறந்து வேடத் தொழிலுழுந் தூழல்வீர் நீர்மண்
உழுந்தொழு லுடைய நீரார் பன்றியி னுதரத் தெய்திக்
கொழுந்தழ லனைய ஏனக் குருளையாய்த் தந்தை தாயை
இழுந்தல முறுமி னென்ஞ இட்டனன் கடிய சாபம்.

(இ - ள்) (பெரியோரைக் கண்டவிடத்து) பணியுந்தொழிலைக் கைவிட்டு வேட்டுவத் தொழிலை மேற்கொண்டிழல்கின்ற செய்கையையுடையீர்! நீங்கள்

நிலத்தை யுழுந்தொழிலையுடைய குலத்திற் பிறந்த தன்மையால், பன்றியின் கர்ப்பத்தை யடைந்து முதிர்ந்த நெருப்பை யொத்த வெய்ய கோபத்தை யுடைய பன்றிக்குட்டிகளாய், (பிறந்தபோதே) தந்தை தாயை யிழந்து வருந் துங்களென்று கடுஞ்சாபங் கொடுத்தனர். (எ)

பாவத்தை யணைய மைந்தர் பன்னிரு பேரு மஞ்சிச்
சாவத்தை யேற்றெப் போது தணிவுதிச் சாப மென்ன
ஆவத்தை யகற்று மீச னருட்கழல் நினைந்து வந்த
கோவத்தை முனிவு செய்தக் கடவுளர் குரவன் கூறும்.

(இ - ள்) பாவம் உருவெடுத்தாற்போன்ற பன்னிரு புதல்வரும் அச்சங் கொண்டு (முனிவர்) சாபத்தை மேற்கொண்டு, இந்தச்சாபம் எங்களுக்கெப்பொ ழுது நீங்குவதென, (ஆன்மாக்களின்) இடையூற்றினை யொழிக்குஞ் சிவபெரு மானது கருணை வடிவாகிய திருவடியை நினைத்துத் தமக்குவந்த கோபத்தை வெறுத்துத் தேவகுருவாகிய பிரகஸ்பதி முனிவர் கூறுகின்றனர். (அ)

என்னையா ளுடைய கூட லேகநா யகனே யுங்கட்
கன்னையாய் மூலதந் காவி யளித்துமே லமைச்ச ராக்கிப்
பின்னையா னந்த வீடு தருமெனப் பெண்ணெர் பாகன்
றன்னையா தரித்தோன் சொன்னஞன் பன்னிரு தனயர் தாமும்.

(இ - ள்) என்னையாளாகவுடைய நான் மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளே உங்களுக்குத் தாயாகவுந் மூலகொடுத்துக்காத்து, சிலநாட்களின் பின்னர் (உங்களைப்) பாண்டியனுக்கு மந்திரிகளாக்கிப் பின்பு சிவகதி தந்தருளுமொன்று, உமாபிராட்டியாரை ஒருபாகமாகவுடைய அக் கடவுளே முதல்வனென்றுபற்றிய பிரகஸ்பதிமுனிவர் கூறினர். பன்னிருபுதல் வரும். (கூ)

தோன்மைசால் குருவி ருந்த துறையதன் புறத்த வான
பன்மைசால் கான வாழ்க்கைப் பன்றிகட் கரசாய் வைகுந்
தன்மைசால் தனியே னத்தின் றன்பெடை வயிற்றிற் சென்று
வன்மைசால் குருளை யாகிப் பிறந்தனர் வழக்கான் மன்னோ.

(இ - ள்) தொன்றுதொட்டுள்ள குருவிருந்த துறையின் புறத்திலுள்ள பல வகைப்பட்ட காட்டில் வாழும் பன்றிகளுக்கு வேந்தாய் நிலைபெற்ற தன் மைமிக்க வொப்பில்லாத ஆண்பன்றியின் உயிர்த்துணையாகிய பெண்பன்றியின் கருப்பத்திலடைந்து, வன்மைமிக்க குட்டிகளாகி (சாபம் இடையீடுபடாத) வழக்கினால் அன்றே பிறந்தார்கள். (கஅ)

ஆனநா ளொருநா ளெல்லை யரசருக் கரச ஞன
மீனவன் மதுரை நீங்கி மேற்றிசைக் கான நோக்கி
மானமா வேட்டஞ் செய்வான் மத்தமா வுகைத்துத் தண்டாச்
சேனைதன் புறம்பே மொய்ப்பச் செல்கின்றான் செல்லு மெல்லை.

(இ - ள்) இவ்வாறான காலையில் ஒருநாளளவில் அரசர்க்கரசனான இராச ராச பாண்டியன் மதுரையினின்றும் நீங்கி, மேற்றிசையிலுள்ள அவ்வனத்தை நோக்கிப் பெரிய மிருகவேட்டையாடுதற் பொருட்டு மதமயக்கத்தையுடைய யானையைச் செலுத்தி, நீங்காத சேனைகள் தன்புறத்தே சூழ்ந்துவரச் சென்றான். (கக)

மாவழங் கிடங்கள் தேர வல்லதோல் வன்தா லொற்றர்
பாவடிச் சுவடு பற்றிப் படர்ந்துநா றழல்பு லால்வாய்த்
தீவிழி யுழுவை யேனத் திரிமருப் பிரலை புல்வாய்
மேவிட னறிந்து வல்லே விரைந்துவந் தெதிரே சொன்னார்.

(இ - ள்) மிருகங்கள் சஞ்சரிக்கும் இடங்களையறியத்தக்க தொடுதோல் வீக்கிய முருட்டுக்கால்களையுடைய தூதுவர்கள், பரந்த காலடிச்சுவட்டைப் பற்றிப் பின் சென்று, தோன்றுங் கோபாக்கினியையும் புலால் நாறும் வாயையும் தீக்கொப்புளிக்குங் கண்களையுமுடைய புலிகளும், பன்றிகளும், திருகிய கொம்புகளையுடைய கலைமானும், மானும் இருக்குமிடங்களையுணர்ந்து, கடுகவிரைந்து வந்து பாண்டியன் முன் கூறினார்கள். (கஉ)

மற்றத்துறை வேட்ட மாக்கள் வல்லைபோ யொடியெ றிந்து
புறத்துவார் வலைகள் போக்கி நாயதன் புறம்பு போர்ப்ப
நிறைத்துமா வொதுக்கி நீட்டும் படைஞராய் நிரைசூழ் நிற்ப
அறத்துறை மாறுக் கோலா ஞனைமேல் கொண்டு நிற்ப.

(இ - ள்) கொலைத்தொழிலின் வழியே சென்ற வேட்டுவத்தொழிலோர் விரைந்து சென்று ஒடி வீசிப் புறம்பே வாராலாகிய வலைகளைக்கட்டி, நாய்கள் வலையின் புறம்பே நிறைத்துக் கூட்டி, மிருகங்களை விலக்கி யோட்டுகின்ற ஆயுதங்களையுடையர் போலச் சூழ்ந்து நிற்கவும், அற வழியினின்று மாறுபடாத செங்கோலையுடைய இராசராசபாண்டியன் யானைமேலேறி ஒருபால் நிற்கவும்.

(வி - ம்) ஒடியெறிதல் - மூலைபோக்குதல். (கங)

சில்லரித் துடிகோ டெங்குஞ் செவிடுறச் சிலையா நிற்பப்
பல்வகைப் பார்வை காட்டிப் பயில்வினி யிசையா நிற்ப
வல்லிய மிரலை மையல் மானினம் வெருளா நிற்ப
வில்லிற வலித்து வாங்கி மீளிவெங் கணைகள் தூர்த்தார்.

(இ - ள்) சில்லரிவாச்சியமும், உடுக்கையும், கொம்பும் எவ்விடத்துஞ் செவிடுபட வொலியா நிற்கவும், பலவகைப்பட்ட பார்வைகளையும் காட்டி சைகையோசை ஒருபா லிசையாநிற்கவும், புலியுங் கலைமானும் மயக்கம் பொருந்திய மான்கூட்டமுமஞ்ச, வில்முறியும் வண்ணம் மண்டலாகாரமாக வளைத்து, வெற்றிமிக்க கொடிய பாணங்களைத் தூர்த்தனர்.

(வி - ம்) பார்வை காட்டல் என்றது புலிபோலப் புலியும், மான்போல மானுங்காட்டி வரவழைத்தல். பயில்வினி யென்றது ஓசையுவமையால் அவ்வம் மிருகங்களை விளித்தல். (கச)

வேறு

செறிந்த மான்மு றிந்த தாள்சி தைந்த சென்னி செம்புனற்
பறிந்த வாறு வெண்ணி ணம்ப ரிந்து வீசு கையிறு
மறிந்த வேழு யர்ந்த வேழ மாண்ட வெண்கு வல்லியம்
பிறிந்த வாவி யோடும் வாய்பி ளந்த வாய்வி ழுந்தவே.

(இ - ள்) நெருங்கிய மான்கள் கால்கள் முரிந்து தலீயறுபட்டு உதிர வெள்ளம் பெருக்கின. எழுமுழ முயர்ந்த யானைகள் வெள்ளிய கிணங்களைச் சிந்தி வீசுக் துதிக்கையற்று மயங்கிவீழ்ந் திறந்தன. காடிகளும் புலிகளும் நீங்கிய பிராணனோடும் வாய் பிளந்து விழுந்தன.

(வி - ம்) முறிந்த சிதைந்த மறிந்த - முற்றெச்சங்கள். எழு முழ முயர் தல் முன் காட்டப்பட்டது. (கடு)

தோட்ட புற்கி ழங்கு வாடை தொடவி சைந்து கண்ணியுட்
பட்ட வும்பொ றித்து வைத்த பார்வை வீழ்ந்த டுத்தவும்
கட்டி யிட்ட வலியி ழைத்து ஞமலி கௌவ நின்றவும்
மட்டி லாத வொட்டி நின்ற மள்ளர் வேலின் மாய்ந்தவே.

(இ - ள்) கல்லி யெடுத்துவைத்த டில்லின் கிழங்கின் வாடைவீச விரைந் தோடிக் கௌவி வலியிற்பட்டனவும், எழுதி காட்டிய பார்வையை நோக்கி விரும்பிவந்தடுத்தனவும், கட்டிய வலியினின்று தப்பி நாய்கள் கௌவ நின்ற னவுமாகிய அளவில்லாத மிருகங்கள் பதுங்கிநின்ற வேட்டமாக்கள் வேலிஞ லிறந்தன. (கசு)

பட்ட மாவீ ழிந்து நின்ற மறவி லங்கு பல்கில
வட்ட மாவ லைந்து டித்த வலியி னுந்தி யப்புறத்
தெட்டி நின்ற கொலைஞர் மேமில திர்ந்து மீள வெயில்வலைந்
தொட்டி ணைம லியு மாப்பொ றிக்க ணங்க ளொத்தவே.

(இ - ள்) இறந்த மிருகங்களொழியப் பிழைத்துநின்ற மிருகங்களுள் பல வுஞ் சிலவும் மண்டலமாக வலைந்து சூழ்ந்த வலையினின்றுந் தாவி அப்புறத்தில் அடுத்துநின்ற வேட்டமாக்கள்மேற் பாய்ந்து மீளுதல், மதிலே முற்றுகைசெய்து போர் செய்யநின்ற வீரர்களோடு போர் செய்யவமைத்த யந்திரங்களாகிய மிரு கங்களே யொத்திருந்தன. (கஎ)

வல்லி யந்து லாத்த கன்று மான்று லாத்த கன்றுவெங்
கல்லி யங்கு மெண்கி னாத்து லாத்த கன்று கயவுவாய்
வெல்லி பந்து லாத்து மள்ளர் விட்ட வாளி யிங்ஙன ந்
சொல்லி னுங்க டிந்து போய்த்து ணித்த மாவ ளப்பில.

(இ - ள்) சேனவீரர்களெய்த அம்புகள் (முனிவர்) சாபத்தினும் விரைந்து சென்று புலிகளைத் தூளித்தருவி, மான்களைத் தூளித்தருவி, வெவ்விய மலைகளில் வாழும் காடிகளைத் தூளித்தருவி, பெரிய வாயையுடைய வெற்றி

பொருந்திய யானை மேற்றைத்து, இவ்வாறு அண்டுபடுத்திய மிருகங்கள் எண்ணிறந்தன.

(வி - ம்) முனிவர் சாபம் சபிக்கப்பட்டவர்பேரில் அப்பொழுதே செல்லுதலின் 'சொல்லினுங் கடிந்துபோய்' என்றார். (கஅ)

மடுத்த வாளி யிற்பி ழைத்து வலியை மூட்டி யப்புறத்
தடுத்த ழானை வெளவி நாய லுத்து நின்ற வாதிநாள்
உடுத்த பாச வலியி னின்று முய்கு வாரை யொய்யெனத்
தடுத்தவா விளைத்து நின்ற தைய லாரை யொத்தவே.

(இ - ள்) பாய்ந்த அம்பினின்றுந் தப்பி, கட்டிய வலையினின்றுந் தாண்டி, அப்புறஞ்சென்ற மானினை நாய்கள் சென்று புறஞ்செல்ல வொட்டாமல் வருத்தி நின்றன. இது முன்னுளிலே விடாது தொடர்ந்த ஆணவமலமாகிய வலையினின்றுந் தப்பிப் பிழைக்க முயலும் பெரியோர்களை, வீசைத்து செல்லவொட்டாமற் றடுத்து முன்னின்று (ஆடை யணி முதலியவற்றால்) ஆசையை விளைவிக்கும் பெண்கள் செயலை யொத்திருந்தன. (கக)

மதியை கேர்வ கிர்ந்து கௌவி யனைய வான்ம ருப்புவெங்
கீதிய வேழ மீது தாது காலு நீல முகையினில்
நுதிய வேணு ழைந்த செம்பு ணுழில் வீழு முதிரமீர்
முதிய கான வரியின் மீது மொய்த்த தீயை யொத்தவே.

(இ - ள்) சந்திரனைச் சரிபாதியாகப்பிளந்து கௌவியதுபோன்ற வெள்ளிய கொம்புகளையுடைய வெய்ய நடையையுடைய யானையின்மேல், மகரந்தத்தைச் சிந்தும் நீலோற்பலத்தின் அரும்புபோல விடம் பூசிய முனையையுடைய வேற்படை தைத்தலால், அந்த யானையின் சிவந்த தசைகளினின்றும் விழுகின்ற உதிரவெள்ளமானது, பெரிய காட்டகர்ந்த மலையின்மேல் தெருங்கிய தீத்திரளை யொத்திருந்தன.

(வி - ம்) நுழைந்த - காரணப்பொருளில் வந்த பெயரெச்சம். தைத்தலால் என்றும். 'நீலமுகையில் நுதிய' என்றது பண்புபற்றிய உவமையாதலின் விடம் பூசிய வெனப் பொருளின் குணத்தை விரித்தாம். (உ0)

மள்ள ரோசை துடியி னோசை வயிரி னோசை வாளிபோய்த்
தள்ள வீழ்வி லங்கி னோசை தப்பி யோடு மானின்மேற்
றுள்ளு நாய்கு ரைக்கு மோசை கான மூடு தொக்குவான்
உள்ளு லாயு டன்ரெ ழிக்கு முருமி னோசை புரையுமால்.

(இ - ள்) வீரர்கோஷமும், உடுக்கையொலியும், ஊதுகொம்பின் முழக்கும், அம்புகள் சென்று தாக்க விழும் மிருகங்களின் ஆர்ப்பரிப்பும், தப்பியோடிய மான்களின்மேலே தாவிச்செல்லும் நாய்கள் குரைக்கின்ற குரைப்பும், காட்டில் ஒருசேரத் திரண்டு, மேகத்திற்ரேன்றி மிக்கொலிக்கும் இடியினோசையை யொத்திருக்கும். (உக)

இன்ன வேறு பல்வி லங்கெ லாம லைத்தி லங்குவேல்
மன்ன ரேறு தென்னர் கோம கன்கு டக்கி னீங்குவான்
அன்ன போதொ ரோன மேன வரசி ருக்கு மடலியாய்
முன்ன ரோடி வந்து நின்று வந்த செய்தி மொழியுமால்.

(இ - ள்) இப்படிப் பல வேறுவகைப்பட்ட மிருகங்களையெல்லாம் வருத்தி விளங்கும் வேற்படை தாங்கிய அரசர்களுள் ஆண்சிங்கத்தையுனைய இராசராச பாண்டியன் (அங்கிருந்து) மேற்றிசை நோக்கிச் செல்கின்றவனுயினன். அப் பொழுது ஒரு பன்றியானது பன்றிவேட்டிருக்குங் காட்டில் முற்பட வோடி வந்து (ஒதுங்கி) நின்று, தான் வந்த செய்தியைக் கூறுகிற்கும். (உஉ)

வேறு

எங்களுக் கரசே கேட்டி யிங்குஞ மிருக மெல்லாந்
திங்களுக் கரசன் கொன்று வருகின்ரு னென்று செப்ப
வெங்களிப் படைக்கு பன்றி வேந்தனு மடியோ ராற்றச்
சங்கையுற் றெழுந்து போவான் றன னுயிர்ப் பெடையை நோக்கா.

(இ - ள்) எங்களுக்கரசனே! கேட்பாய். இக்காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் இராசராசபாண்டியன் கொலைசெய்து வருகின்ருனென்று கூற, பன்றியரசனும் வீரச்செருக்கடைந்து, கொல்லும் போர்த்தொழில்புரிய மேற் கொண்டெழுந்து போகின்றவன் தனது உயிர்போன்ற பெண்பன்றியைப் பார்த்து. (உங)

இன்றுபாண் டியனேகொரிட் டிருஞ்சம ராடி வென்று
வன்றிறல் வாகை யோடு வருகுவ னேயோ வன்றிப்
பொன்றுவ னேயோ நீயுன் புதல்வரைப் பாது காத்து
நன்றிவ ணிருத்தி யென்ன நங்கைப்பே டின்ன கூறும்.

(இ - ன்) இப்பொழுது பாண்டியனை யெதிர்த்துப் பெரிய போர் புரிந்து வலிய வீரத்தால் அவனை வென்று வெற்றிமாலை புனைந்துவருவேனோ? அன்றி அவனுல் இறப்பேனோ? நீ உன் மக்களைப் பாதுகாத்துச் சுகமாயிருப்பாயென்று கூற, சிறந்த பெண்பன்றி யிதனைக் கூறுகிற்கும். (உச)

ஆயிய்ங் கேக இந்த வாகமிங் கிருப்ப தேயிப்
பாவியோ மேனி லிந்தப் பறழினை வருத்த தெய்வம்
மாவம ராடி வென்று வருதியேல் வருவே னன்றி
நீவிளிந் திடத்து மாய்வே னிழலுக்குஞ் செயல்வே றுண்டோ.

(இ - ள்) எனது பிராணன் அங்குப் போர்க்குச்செல்ல, இத்தத்தேகம் இவ்விடத்திற் சுகமாயிருப்பதும் வழக்கோ? முற்பிறப்பில் இத்திப் பாவமிகு தியையுடைய எனக்கோ இக் குட்டிகளைத் தெய்வம் தந்தது. (பாண்டியனோடு) பெரிய போர்செய்து வருவாயானுல் வருவேன். அதுவன்றி நீ (இறந்தால்) இறந்தவிடத்தி லிறப்பேன். உனது தேகநிழல் போலப் பின்செல்லும் எனக்கும் வேறுசெயலுளதோ? (எனக்கூற). (உடு)

போதுக மெழுக வென்னுப் பொருக்கென வெழுந்து நீலத்
தாதுறை ழேன்ப் பாட்டி தன்புடை தழுவிச் செல்லும்
பேதுறு பறழை தூக்கிப் பின்றொடர்ந் தணைந்து செல்லக்
காதெயிற் றெறுழி வேந்தன் காலென நடந்தா னன்றே.

(இ - ள்) போவோம் எழக்கடவாயென்று பன்றியரசன் கூற, நீலோற் பலத்தின் மகரந்தத்தைப் போன்ற கருமைநிறம் பொருந்திய பெண்பன்றி (கணவனுக்கு முன்) விரைந்தெழுந்து, தனது பக்கலில் தழுவிச் செல்லும் மயக்கமிக்க குட்டிகளைத் தள்ளி, பின்றொடர்ந்து விடாது செல்ல, கொல்லும் வக்கிர தந்தங்களையுடைய அப்பன்றியரசன் காற்றைப்போலப் போருக்கு விரைந்து சென்றனன். (உசு)

பல்வகைச் சாதி யுள்ள பன்றியின் கணங்க ளெல்லாம்
வெல்படைத் தறுகட் சேணை வீரராய் முன்பு செல்லச்
செல்லெனத் தெழித்துச் செங்கட் டீயுசு மான தென்னும்
மல்லல்வாம் புரவி மேல்கொண் டெழுந்தனன் வராக வீரன்.

(இ - ள்) பலவகைப்பட்ட சாதியாயுள்ள பன்றியின் தொகுதிகள் யாவும், வெல்லும் ஆயுதங்களை யேந்திய அஞ்சாமையையுடைய சேனவீரராய் முன்னே செல்ல, மேகம்போலக் கோஷித்து, சிவந்த கண்களினின்றும் கோபாக்கினி ஜ்வாலை பன்றிகளுள் மிக்க வீரம் வாய்ந்த அரசன், மானமாகிய மிகவும் தாவும் குதிரையின்மேற் கொண்டெழுந்தனன்.

(வி - ம்) மானம் - போர்புரிகையில் அபஜயமாகிய பின்வாங்கி உயிர் வாழாமை எனப்படும். (உள)

முற்படு தூசி யாக நடக்கின்ற முரட்காற் பன்றி
மற்படு சேணை நேரே வருகின்ற மன்னர் மன்னன்
வெற்படு தடந்தோள் வன்ருள் வீரர்மேற் சீறிச் செல்லப்
பிற்பட வொதுங்கி வீரர் பெய்தன ரம்பு மாரி.

(இ - ள்) முன்னணியாகச் செல்கின்ற முருட்டுக்கால்களையுடைய பன்றிகள், மற்போரில் மிக்க தமது சேனைக்கு நேரே வருகின்ற இராஜராஜ பாண்டியனுடைய மலையைச் செயித்த பெரிய தோளையும் முருட்டுக்கால்களையுமுடைய சேனவீரர்கள்மேல் சீறிப்பாய, அவ்வீரர்கள் சிறிது பின்னே யொதுங்கி நின்று அஸ்திர மழையைச் சொரிந்தார்கள். (உஅ)

சொரிந்தன சோரி வெள்ளஞ் சொரிந்தன வீழ்ந்த யாக்கை
சரிந்தன குடர்க ளென்பு தகர்ந்தன வழும்பு மூளை
பரிந்தன சேனங் காகம் படர்ந்தன வுயிரு மெய்யும்
பிரிந்தன வேன நின்ற பிறைமருப் பேனவீரர்.

(இ - ள்) (பாய்ந்த) பன்றிகளிற் சிற்சில (மேகங்கள்போல) உதிர வெள்ளத்தைச் சிந்தின; உடலறுபட்டு விழுந்தன; குடல்சரிந்தன; எலும்புகள் நுறுங்கின; வழும்பும் மூளைகளுங் கசிந்தன; பருந்துகளுங் காகங்களும் பரவின.

(சில) உயிரும் மெய்யுந் தம்மினின்று நீங்கின. (உயிர் பிழைத்து) நின்ற பிறைச் சந்திரன் போன்ற வக்கிர தந்தங்களையுடைய ஏனப்பன்றி வீரர்கள்.

(வி - ம்) சொரிந்தன வென்னும் வினைமுற்று, பெயராய் வினைமுதற் பொருண்மேல் நின்றது. (உக)

பதைத்தன செரியிற் சீறிப் பஞ்சவன் படைமேற் பாய்ந்து
சிதைத்தனர் சிலரைத் தள்ளிச் செம்புனல் வர்யிற் சோர
உதைத்தனர் சிலரை வீட்டி யுரம்புதை படக்கோ டூன்றி
வதைத்தனர் சிலரை நேரே வகிர்ந்தனர் சிலரை மாதோ.

(இ - ள்) பதைத்துத் தீப்போலக் கோபித்துப் பாண்டியனுடைய சேனை வீரர்மேற் பாய்ந்து சில வீரர்களை யழித்தார்கள்; உதிரவெள்ளம் வாயினின்றுஞ் சோரச் சில வீரர்களைக் கீழே தள்ளி யுதைத்தார்கள்; சில வீரர்களை மார்புகளிற் புதையத் தமது வக்கிர தந்தங்களை யழுத்தி வதைத்தார்கள்; சில வீரர்களை நேரே பிளந்தார்கள். (உ0)

தாள்சிதைந் தாருஞ் சில்லோர் தலைசிதைந் தாருஞ் சில்லோர் [ர்
தோள்சிதைந் தாருஞ் சில்லோர் தொடைசிதைந் தாருஞ் சில்லோ
வாள்சிதைந் தாருஞ் சில்லோர் வரையறுத் தலரோன் றீட்டும்
நாள்சிதைந் தாருஞ் சில்லோர் நராதிபன் சேனை வீரர்.

(இ - ள்) இராஜராஜ பாண்டியனுடைய சேனை வீரர்களில், சிலர் கால் முரிந்தவரும், சிலர் தலையறுபட்டு வீழ்ந்தவரும், சிலர் தோளறுபட்டு வீழ்ந்தவரும், சிலர் வாளேயேந்திய கையறுபட்டு வீழ்ந்தவரும், சிலர் வரையறை செய்து பிரமதேவ னெழுதிய ஆயுள்காலங் கழிந்தவருமாயினர்கள்.

(வி - ம்) வாள் - கைமேல் நின்றது. இது விடாதவாகு பெயர். (உக)

கண்டனர் கன்னி நாடு காவல னமைச்சர் சீற்றங்
கொண்டனர் முசல நேமி கூற்றென வீசி யார்த்தார்
விண்டனர் மாண்டார் சேனை வீரரு மினைய வெல்லைப்
புண்டவ ழெயிற்று வேந்தைப் புடைநின்ற பேடை நோக்கா.

(இ - ள்) பாண்டிநாட்டிறைவனுகிய இராஜராஜ பாண்டியனுடைய மந்திரிகள் கண்டு சினங்கொண்டு இருப்புலக்கைகளையுஞ் சக்கரங்களையு மெறிந்து கோஷித்தார்கள். பன்றிச் சேனைவீரரு முயிர்விட்டிறந்தார்கள். அப்பொழுது தசையுலவும் வக்கிரதந்தங்களையுடைய பன்றிராசனைப் பக்கலினின்ற பெண் பன்றி பார்த்தது.

இதுமுதல் மிரண்டு செய்யுள்கள் குளகம்.

(வி - ம்) கண்டனர் கொண்டனர் விண்டனர் என்னும் வினைமுற்றுகள் வினையெச்சப் பொருளன. (உஉ)

ஏவிய சேனை யெல்லா மிறந்தன வினிநாஞ் செய்ய
லாவதென் வாளா நாமு மழிவதிங் கென்னே தப்பிப்

போவதே கூரும் மென்று புகன்றதத் துணையை நோக்கிச்
சாவதை யஞ்சா வனத் தனியர சொன்று சாற்றும்.

(இ - ள்) (காம் போருக்கு) ஏவியசேனை யாவும் மடிந்தன. இனி நாம் செய்யக்கடவதென்ன ? இவ்விடத்திற் பயனின்றி நாமும் உயிர்விடுதலிற் பயனென்னை ? உயிர்தப்பிப் பிழைத்துப்போவதே காரியம் என்று கூறியது. உயிர் விடுகைக்கு அஞ்சாத அப்பன்றியானது அப்பெண் பன்றியைப் பார்த்து ஒரு செய்தி கூறுகிறகும். (கூக)

நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாத லாலுன்
கண்ணறி வுடைமைக் கேற்ற காரிய முரைத்தாய் மானம்
எண்ணறி வுடையோர்க் கெல்லா மிழுக்குடைத் தன்றே வீதால்.

(இ - ள்) நுட்ப புத்தியையுடையவராகி நூலாராய்ச்சியிற் பழகினலும், பெண்புத்தியென்று கூறுவதெல்லாம் பேதைமையுடையது ஆகையால்; உன்னிடத்துள்ள உணர்ச்சியுடைமைக்குப் பொருத்திய செய்கையளவு கூறினாய். மானத்தைக் கருதும் உணர்வுடையவர்க் கெல்லாம் இச்செயல் குற்றமுடைய தல்லவா ?

(வி - ம்) "நுண்ணறி வுடையராய் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே"

என்றது ஆன்றோர் வசனம் ; என்னை ?

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கு—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்" என்றது முறையாதலின். (கூச)

தூங்கிருள் வறுவாய்ச் சிங்க மிரண்டுறை துறையின் மீடோர்
வாங்கிரு மருப்புக் கேழல் வந்துநீர் பருகி மீளும்
வீங்கிரு ளுடற்கா ரேன மொன்றுறை துறையில் வீரந்
தாங்கிரு மடங்க னீர்க்குத் தலைப்பட அஞ்சு மன்றே.

(இ - ள்) நிலைபெற்ற இரவில் உலர்ந்த வாயையுடைய இரண்டு சிங்கங்கள் வசிக்கும் நீர்த்துறையினிடத்தில், வளர்ந்த வக்கிர தந்தங்களையுடைய ஒரு பன்றி வந்து நீர்பருகித் திரும்பும். மிக்க கருநிறம் வாய்ந்த சரீரத்தையுடைய பெரிய பன்றி யொன்று வசிக்கும் நீர்த்துறையில், வீரமிக்க இரண்டு சிங்கங்கள் தண்ணீர் பருகுதற்கு வர அஞ்சாகிற்கும். (கூடு)

அத்திட மரபின் வந்து பிறந்துளே னுதை லாலே
கைத்திடு தாரான் வீரங் கவர்ந்திசை திசையும் வானும்
வைத்திட வல்லே னன்றி மடிந்திட வல்லே னுகிற்
பொய்த்திடு முடம்பே யன்றிப் புகழுடம் பழிவ தண்டோ.

(இ - ள்) (யான்) அவ்வகைய திறம்வாய்ந்த குடிப்பிறப்பிற் பிறந்தவனுதலின், வேப்ப மாலையணிந்த பாண்டியனுடைய வீரத்தைக் கொள்ளை கொண்டு என் பிரதாபத்தைத் திக்குகளிலும் ஆகாயத்திலும் நிறுத்த வல்லேன். அல்லது இறக்க வல்லேனல்லேன், நிலைபெறுத பூதவுடம்பு அழிவதல்லாமல், புகழுடம்பு அழிதலுளதா ? (இல்லை.)

(வி - ம்) கைத்தல் - கசத்தல். குணகுணிகட் கொற்றுமை யுண்மையின், குணத்தைக் குணிமேலேற்றிக் "கைத்திடு தாரான்" என்றார். (சுசு)

வேறு

நீங்கில் லெனத்தன் பெடைதன்னை நிறுத்தி நீத்தென்
கீரனில் லெனவாழ் கருமாவின் கணங்க ளெல்லாம்
ஊனில் லுயிருண் டனமென்றினி யோடல் கூடற்
கோனில் லென ஆர்ப் பவன்போலக் கொதித்து நேர்ந்தான்.

(இ - ள்) (அஞ்சுகின்ற) நீ நிற்கவென்று தன் பெண் பன்றியை நிறுத்திப் பிரிந்து, என் காட்டை வீடாகக் கொண்டு வாழும் பன்றிக் கூட்டங்களின் உடம்பிலுள்ள வுயிரைக் கவர்ந்தோமென்று இனிச்செல்லற்க. பாண்டியனே ! நிற்கவென வீரகோஷஞ் செய்பவனைப்போலப் பொங்கிப் போர்செய்ய எழுந்தான்.

(வி - ம்) இச்செய்யுள் நெடுமொழி வஞ்சித்துறை. (சுஎ)

நிலத்தைக் கிளைத்துப் பிலங்காட்டி நிமிர்ந்த தூள்வான்
றலத்தைப் புதைப்பத் தனியேன வரவு நோக்கி
வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் சிலவாங்கி வாளிக் [ன்.
சூலத்தைச் சொரிந்தான் பொருநைத்துறைக் கொற்கை வேந்த

(இ - ள்) பூமியைப் பறித்துப் பாதலத்தைக் காட்டி மேலெழுந்த தூட்படலம் விண்ணகத்தைப் பொதியவரும் ஒப்பில்லாத பன்றியைப் பார்த்து, தாமிரபர்ணித் துறைக்கும் வைகைத் துறைக்கும் அரசனுகிய பாண்டியன், அதன் வீரத்தைப் புகழ்ந்து மெச்சி, வில்லேவளைத்துப் பாணகூட்டத்தை (மழையாக)ப் பொழிந்தான்.

(வி - ம்) கொற்கை - வைகையின் துறையெனச் சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையிற் கண்டது. (சுஅ)

குறித்துச் செழியன் விடுவாளியைக் கோல வேந்தன்
பறித்துச் சிலவாளியை வாய்கொடு பைம்பு லென்னக்
கறித்துச் சிலவாளியைக் கால்கொடு தேய்த்துத் தேய்த்து
முறித்துச் சிலவாளியை வாலின் முறித்து நின்றான்.

(இ - ள்) தன்னைக் குறியாகக்கொண்டு பாண்டியனெய்யும் பாணங்களைப் பன்றியாசன் உடலினின்றும் பறித்தும், சில பாணங்களைப் பசிய புல்லைப் போலக் கறித்தும், சில பாணங்களைக் காலால் நிலத்திற் றேய்த்துத் தேய்த்து முறித்தும், சில பாணங்களை வாலினல் முறித்தும் நின்றனன். (சுசு)

மானம் பெரிது மதியின்வழி வந்த வேந்தன்
தானம் பொரிது கவிழ்க்கும்புகர்த் தந்தி கையில்
ஊனம் பொரிந்த முசலங்கொடுத் தேறி யுய்த்தான்
ஏனம் பொரிதார்த் திடியேற்றி னெழுந்த தன்றே.

(இ - ள்) சந்திரமரபிற் றோன்றிய இராஜராஜபாண்டியன் மானமீக் கூர்ந்து, மதப்பெருக்கினை யாற்றுதொழுக்கும் புள்ளி தங்கிய (முகத்தை யுடைய) யானையின் அதிக்கையில், குற்றமற வகுத்த இருப்புலக்கையைக் கொடுத்து, அந்த யானைமேலேறிச் செலுத்தினன். பன்றியானது கோபமாற் றூது கோஷித்து இடியேறு போலப் போருக்கெழுந்தது. (சம)

தந்திப் பொருப்பைத் துணிக்கென்று தாழன்று சீற்றம்
உந்திக் கதலிக் கொழுந்தண்டென வூசற் கையைச்
சிந்திப் பிறைவா ளெயிறோச்சிச் சிதைத்து வீட்ட
முந்திக் கடுந்தேர் மிசைப்பாய்ந்தனன் மூரித் தாரான்.

(இ - ள்) யானையாகிய மலையைத் துண்டுபடுத்தக் கடவேனென்று கருதிக் கொதித்துக் கோபக்கொண்டு, கொழுவிய வாழைத்தண்டுபோல வூசலாடுங் கையைத் துணித்து, பிறைபோன்ற வள்ளிய வக்கிர தந்தத்தால் குத்தி யழுத்திக் கொல்ல, பழைமையாகிய (வேப்பமலர்) மாலை யணிந்த இராஜராஜ பாண்டியன் விரைந்து செல்லும் தேரின்மேல் முற்பட்டுப் பாய்ந்தனன். (சக)

திண்டேர் மிசைநின் றடனேமி திரித்து விட்டான்
கண்டேன வேந்தன் விலக்கிக் கலிங்காலிற் பாய்ந்து
தண்டே ருடையத் தகர்த்தான்பரி தன்னிற் பீய்ந்து
வண்டேறு தாரான் விடவேலை வலங்கி ரித்தான்.

(இ - ள்) வலிய தேரின்மேலேறிக் கொல்லுஞ் சக்கரத்தைச் சுழற்றியெறிந்தனன். பன்றி யரசன் கண்டு அதனை விலக்கி, கடிய காற்றைப்போல விரைந்துபாய்ந்து தண்ணிய நிழல்வாய்ந்த தேர் சிதையும்படி யுடைத்தான். வண்டுகள் குடிகொண்ட மாலையணிந்த பாண்டியன் குதிரைமேற் பாய்ந்து விஷம் பூசிய வேலினை வலம்படத் திரித்தனன். (சஉ)

சத்திப் படைமேல் விடுமுன்னர்த் தறுகண் வீரன்
பத்திச் சுடர்மா மணித்தார்ப்பரி மாவின் பின்போய்
மொத்திக் குடர்செம் புனல்சோர முடுகிக் கோட்டாற்
குத்திச் செகுத்தான் பொறுத்தானலன் கூடல் வேந்தன்.

(இ - ள்) வேற்படையை விடுவதற்கு முன்னரே அஞ்சாமையையுடைய பன்றி வேந்தன், கிரண வரிசையையுடைய சிறந்த இரத்தினங்களழுத்திய கிண்கிணி மாலை பூண்ட அக்குதிரையின் பின் சென்று தாக்கி, குடலும் உதிரமுஞ் சோர விரைந்து தனது வக்கிர தந்தத்தாற் குத்திக் கொன்றனன். பாண்டியன் மானமீக் கூர்ந்து. (சஎ)

மண்ணிற் குதித்து வலிகண்டு வராக மேந்தை
எண்ணித் தலையிற் புடைத்தான்கை யிருப்புத் தண்டாற்
புண்ணிற் படுசெம் புனலாறு புடவி போர்ப்ப
விண்ணிற் புகுந்தான் சுடர்கீறி விமான மேலால்.

(இ - ள்) (குதிரையினின்றும்) பூமிமேற் குதித்து, அதன் வண்மையைக் கண்டாராய்ந்து, கையிலேந்திய இருப்புத் தண்டத்தாற் பன்றி வேந்தனைத் தலையி லடித்தனன்; அடிபட்ட புண்ணினின்றெழுகும் உதிரவெள்ளம் நில வுலகைப் போர்க்க, சூரியமண்டலத்தைக் கிழித்துச் சென்று விமானமேல் வீரசுவர்க்கஞ் சென்றனன். (அஅ)

வேனிற் கிழவோனில் விளங்கி வியக்து வாழ்நர்
தேனிற் பொழிபூ மழைபெய்ய நினைந்து தெய்வக்
கானத் தமுதுண் டிருகாது களித்து வீர
வானத் தமுதுண் டமங்கையர் கொங்கை சேர்ந்தான்.

(இ - ள்) மன்மதனைப்போல விளங்கித் தேவர்கள் அதிசயித்துப் பொழி யும் புஷ்பவருஷம் தேனைப் பெய்ய நினைந்து, தேவகானமாகிய அமுதை இரண்டு காதாலும் பருகிக் களிப்படைந்து, வீரசுவர்க்கத்திலுள்ள தேவமாதர் தத்தை வாயாற் பருகி, அரமகளிர் குஜத்தை யுணர்ந்தனன்.

(வி - ம்) உம்மை-இனைத்தென அறிபொருளில் வந்த முற்றுப்பொருட்டு. என்னை? "இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள் - வினைப்படுத லுரைப்பி னும்மை வேண்டும்" என்பது சூத்திரம். (அடு)

வேறு

பின்றுணை யாய பெடைத்தனி யேனம்
என்றுணை மாய விருப்பது கற்போ
வென்றில னேனும் விசும்படை வேனுல்
என்றிகல் வேந்தை யெதிர்த்த தருத்தே.

(இ - ள்) அதன்பின், துணையாகின்ற ஒப்பில்லாத பெண் பன்றியானது எனது உயிர்க்கேள்வன் இறக்க தானிருந் துயிர்வாழ்வது கற்பியலோ? வெற்றி பெறுகலேனுயினும், வீரசுவர்க்கத்தை யடைவேனென்று, பகைகொண்ட இராசராசபாண்டியனைக் கோபித்துப் போர்செய்ய எதிர்த்தது. (அசு)

விறனவில் பேட்டை வீளிப்பது வேந்தர்க்
கறனல வென்றவ ளுள்ளீனை மள்ளர்க்
கிறைமக னுன சருச்சர னென்றோர்
மறமக னேர்ந்தம ராட வளைந்தான்.

(இ - ள்) வீரங்கூறிப் போர்க்கெதிர்த்த பெண்பன்றியைக் கொல்வது இராசராசபாண்டியனுக்குப் போர்த்தருமம் மல்லவென்று, அப்பாண்டிய னேவிய வினைமுயலும் மறவீரர்களுக்குப் பதியாகிய சருச்சரனென்று சொல்லப்பட்ட ஒரு வீரன் எதிர்த்து (அப்பன்றியோடு) போர்புரியச் சூழ்ந்தான். (அள)

நனிபெரு தாடம ராடின னஞ்சிற்
கனிகின வன்பெடை காய்கின வேடத்
தனிமக னீத்தசை வீட்டின தாற்றல்
இனியிலை யென்ன இளோத்துயிர் சோர்வான்.

(இ - ள்) நெடுநேரம் வெற்றிதரும் போர் செய்தனன்; விஷம்போலக் கொடுமை பழுத்த கோபத்தையுடைய வலிய பெண் பன்றி, கொதித்தெழுந் கோபத்தில் ஒப்பற்ற வேட்டுவ வீரனை நிலத்திற் றள்ளியது. போராற்றும் வன்மை இனிச் சிறிதுமில்லையென்று கூற இளோத்து உயிர்சோரும் அவ்வீரன்.

இரும்புசெய் தண்டினை யிம்மென வோச்சிப்
பொரும்பெடை சென்னி புடைத்து விளிந்தான்
விருந்தின ராயிரு வோரும் விமானத்
தருந்திறல் வான மடைந்தன ரன்றே.

(இ - ள்) இரும்பினாற் செய்த தண்டாயுதத்தை விரைந்து ஓச்சி, போர் செய்யும் அப்பெண் பன்றியின் தலைமேலடித்துத் தானும் இறந்தான். (மடிந்த) இருவரும் (தேவர்கட்கு) விருந்தினராய் விமானத்திலேறி, அரிய வீரசுவர்க்கத்தில் அடைந்தார்கள். (சசு)

வன்றிறன் மன்னவர் மன்னவ னுந்தன்
பொன்றிகழ் மாநகர் புக்கன னிப்பாற்
பன்றி விழுந்து பருப்பத மாகா
நின்றது பன்றி நெடுங்கிரி யென்ன.

(இ - ள்) மிக்க வெற்றிவாய்ந்த இரிசராசபாண்டியனும் தன்னுடைய இலக்குமி விளங்குந் திருநகரமடைந்தனன்; இப்புறம், நெடிய வராககிரி யென்று (கண்டோர்) சொல்லப் பன்றியானது வீழ்ந்து பருப்பதமாகிப் பொலிந்தது. (சுo)

அன்று தொடுத்தது னுக்கது பேராய்
இன்றும் வழங்குவ திம்பரி னந்தக்
குன்றி லருந்தவர் விஞ்சையர் கோபம்
வென்றவ ரெண்ணிலர் வீடுற கோற்பார்.

(இ - ள்) இவ்வுலகத்தில், அக்காலந்தொட்டு இதுகாறும் அம்மலைக்குப் பன்றிமலை யென்று அப்பெயரேயாய் வழங்காகின்றது. அந்த மலையில் அரிய தபோதனர்களும் வித்தியாதரர்களும் கோபத்தை யொழித்த யோகிகளுமாகிய அளவிறந்தோர் வசித்து, சிவகதியடையத் தவஞ் செய்கின்றார்கள்.

(வி - ம்) 'கோபம் வென்றவர்'—கோபம் தவத்திற் கிடையூறுதலின் அதனைச் செயித்தவரென்றது பொருள். (நுக)

வேறு

என்று கூறிய அருந்தமிழ்க் கிறைவனை நோக்கித்
துன்று மாதவ ரறிவிலாச் சூகர வுருவக்

குன்றின் மீதிருந் தவமெலாங் கோதற கோற்று
நின்ற காரணம் யாதெனக் குறுமுனி நிகழ்த்தும்.

(இ - ள்) என்று சொல்லிய அகத்திய முனிவரைப் பணிந்து தெருங்கிய பெருந் தபோதனர்கள், அறிவில்லாத பன்றி வடிவமைந்த மலையின் மேலிருந்து அவ்விஞ்சையர் முதலிய யாவரும் குற்றமறத் தவஞ்செய்து நின்ற காரணம் யாது ? என வினவ, அந்த அகத்திய முனிவர் கூறியருளுகின்றார்.

(வி - ம்) தமிழ்க்கிறைவர் என்றது அகத்தியருக்குக் காரண ஆக்கப்பெயர். இது வடமொழிக்குப் பாணினியார் இறைவராதல் போலத் தென்மொழிக்கு அகத்தியர் இறைவராதலி னென்க. (இஉ)

வேனில் வேளென விளங்குவிச் சாதர னென்னுக்
தான யாழ்மகன் புலத்தியன் றவத்திறுக் கிடையூ
றான பாண்செயப் பன்றியாச் சபித்தன னதுவோன்
ஏன மாகுவோ னுய்வதென் றெனக்கென முனிவன்.

(இ - ள்) வேனிற் காலத்திற்குரிய மன்மதனைப்போல விளங்கும் வித்தி யாதரனுகிய தானங்களமைந்த வீணையில் வல்ல* ஒரு யக்ஷன், புலத்தியமுனிவர் தவத்திற்கிடையூறுள்ள இசைப்பாடல் பாட, அம்முனிவன் (வித்தியாதரனை)ப் பன்றியாகச் சாபத்தந்தனன். பன்றி வடிவாகும் அந்த யக்ஷன் (பன்றி வடிவி னின்று) எப்பொழுது எனக்குத் தீர்வு உறுவதென்று வினவ, அப்புலத்திய முனிவன். (இக)

மன்னர் மன்னனுந் தென்னவன் வந்துநின் வனத்திற்
றுன்னு செல்வகை விலங்கெலாந் தொலைத்துனை மாய்க்கும்
பின்ன ரிவ்வுருப் பெறுகெனப் பணித்தன னியக்கன்
அன்ன வாறுவந் திறந்துபின் பழவுரு வடைந்தான்.

(இ - ள்) இராசராசனுகிய பாண்டியன் வேட்டைமேல் வந்து, உனது காட்டில் தெருங்கிய பலவகை மிருகங்களே யெல்லாங் கொன்று, உன்னையுங் கொல்லுவான். பின்பு இந்த யக்ஷவடிவத்தைப் பெறக்கடவாயென்று பணித் தருளினர். அவ்வித்தியாதரன் அப்படியே வந்து (பிறந்து) இறந்து பின்னர் பண்டுள்ள உருவத்தை யடைந்தனன்.

(வி - ம்) பணித்தல் - அருளிச்செய்தல். (இச)

ஆய புண்ணிய விஞ்சைய ருகமாய்க் கிடந்த
தூய நீரதா லவ்வரை மீமிசைத் துறந்த
பாய கேள்வியி றிறைகொளப் பட்டதெவ் வுயிர்க்கும்
நாய ஞர்மது ரேசரு ளயந்தவ ணுறைவார்.

(இ - ள்) அந்த மலை இவ்வாறுகிய புண்ணிய சொரூபமுடைய யக்ஷன் சரீரமாயிருந்த பரிசுத்தத் தன்மையையுடையது; (அதனால்) தன்மேல், பரந்த

*இவன் பெயர் ரிங்கி யென வடதூலார் கூறினர்.

நூற்கேள்வியை யுடைய முனிவர்களால் வசிக்கப்பட்டது ; எல்லா உயிர்க்கும் தலைவராகிய சோமசுந்தரக் கடவுளும் அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். (நிஎ)

என்ற கத்தியன் விடைகொடுத் தியம்பின னிப்பாற்
பன்றி யேற்றையும் பாட்டியும் பைம்புனத் திட்டுச்
சென்ற விந்தபின் பின்னிரு குருளையுந் தினைப்புற்
றன்ற லக்கலீ னுழந்தமை யாளனுக் குரைப்பார்.

(இ - ள்) என்று அகத்திய முனிவர் விடை தந்தருளினார் ; இப்புறம், ஆண் பன்றியும் பெண் பன்றியும் பசிய வனத்தில் தங்குட்டிகளை யிட்டுப் போர்க்குச் சென்று இறந்த பின், அப்பன்னிரண்டு குட்டிகளும் (தாய் தந்தையரை இழந்தலால்) மயங்கி, அக்காலையில் துன்ப நோயடைந்ததை வரையறுத்துக் கூறுவோரெவர் ? (ஒருவருமிலர்.) (நிசு)

ஓடு கின்றன தெருமரு றுவன நிழலைத்
தேடு கின்றன தாய்மூலைத் தீயபால் வேட்டு
வாடு கின்றன தாகமெம் பசிகனி வருத்த
வீடு கின்றன வெயில்சுட வெதும்புகின் றனவால்.

(இ - ள்) (தாய் தந்தையரைப் பெறுமல்) ஓடியும், சுழன்றும், நிழலைத் தேடிச் சென்றும், தாய்மூலையின் இனிய பாலை விரும்பி வாடியும், தாகமும் கொடிய பசியும் மிகவும் வருத்த உயிர் சோர்ந்தும், சூரியகிரணஞ் சுட்டுவருத்த வெம்பி வருந்தா கின்றன.

(வி - ம்) ஓடுகின்றன - உறுவன - தேடுகின்றன - வாடுகின்றன - வீடு கின்றன என்பன வினையெச்சப் பொருளில் வந்த வினைமுற்றுகள். (நிள)

இன்ன வாறிவை யணங்குறு மெல்லைவேல் வல்ல
தென்ன ராகிய தேவர்கள் தேவரங் கயற்கண்
மின்ன னுளொடு மின்னவிர் விமானமீ தேறி
அன்ன கானகத் திச்சையா லாடல்செய் திருந்தார்.

(இ - ள்) இவ்வகையாகப் பன்றிகள் வருந்தும் காலையில், வேற்படையில் வல்ல சவுந்தரபாண்டியராய்த் திருக்கோலங் கொண்டருளிய தேவர்கட்குத் தேவராகிய சோமசுந்தரக் கடவுள் அங்கயற்கண்ணியாராகிய மின்னலை யொத்த உமாதேவியாரோடும், ஒளி வீசி விளங்கும் விமானத்தின்மேலெழுந்தருளி, அக்காட்டில் தமதிச்சையால் திருவிளையாடல் செய்தருளி யிருந்தனர்.

(வி - ம்) சண்டி இச்சை யென்றது இச்சாசத்தியை. இதனை,

" ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றிரண்டு மூன்று
கின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணேச மாகும்
நன்றெலா ஞான சத்தி யானயற் றறிவ ஞதன்
அன்றருட் கிரியை தன்னு லாக்குவ னகில மெல்லாம் "

என்பதனுணர்க. (நிஅ)

ஏன மென்பற முழுகணெய்க் கிரங்கினு ரிச்சை
ஆன வன்புதந் தத்துய ரகற்றுவா னின்ற
மான வன்புடைப் பேடையின் வடிவெடுத் தயருங்
கான வன்பறழ் கலங்கஞர் கலங்கநேர் வந்தார்.

(இ - ள்) பன்றியின் மெல்லிய குட்டிகளுற்ற துன்பமிக்க பசிநோய்க் கிரங்கி, தமதிச்சையாலாகிய அன்பு கூர்ந்து அத்துன்பத்தை யொழித்தருள, நீலமலைபெற்ற மிக்க வலிமையையுடைய பெண்வராகத்தின் கோலங் கொண்டு, காட்டிற்சேர்ந்த வலிய அந்தக் குட்டிகளை வருத்தும் பசித்துன்பங்கெட எதிரே வந்தருளினர். (நகூ)

கிட்டி னின்றதந் தாயெதிர் குட்டியுங் கிட்டி
முட்டு கின்றன மொய்ப்பன முதுகுறத் தாவி
எட்டு கின்றன கால்விசைத் தெதிர்வன நிலத்தை
வெட்டு கின்றன குதிப்பன வோடுவ மீள்வ.

(இ - ள்) நெருங்கிய தமது தாய்க்கெதிரே பன்றிக்குட்டிகளும் நெருங்கி முட்டியும் மொய்த்தும் முதுகிற் பொருந்தத் தாவி யெட்டியும் காலால் விசைத்தெதிர்ந்து நிலத்தை வெட்டியும் குதித்தும் ஓடியும் திரும்பாகின்றன.

(வி - ம்) தாயிழந்து துன்புறும் பன்றிக்குட்டிகள் தமது தாயைக் காணப் பெற்றதால் அலை செய்யும் ஆர்ப்பரிப்பை இச்செய்யுளிற் கூறினர். (சுo)

ஏன மின்னமுங் காண்பரி தாகிய ஏனம்
ஆன மெய்ம்மயிர் முகிழ்த்திடத் தழுவிமோந் தருளின்
மான மென்முலை யருத்திமா வலனும்வன் றிறனும்
ஞான மும்பெருந் தகையுநற் குணங்களு நல்கா.

(இ - ள்) (திருமாலாகிய) வராகம் இன்னுங் காண்டற்கரிய வராகமானது தனது சரீரத்திலுள்ள மயிர்கள் சிலிர்க்கத் தழுவி மோந்து, தனது பேருளாற் சுரந்த பெரிய முலைப்பாலூட்டி, பெரிய வலிமையும் மிக்க சதுரப்பாடும் ஞானமும் பெருந்தகைமையும் (இவையேயன்றிப் பிற) நற்குணங்களுமாகிய இவைகளை (அத் திருமுலைப்பாலுடன்) கொடுத்தருளி. (சுக)

துங்க மாமுக மொன்றுமே சூகர முகமா
அங்கம் யாவையு மானுட யாக்கைய வாக்கிக்
கங்கை நாயகன் கடவுளர் நாயகன் கயற்கண்
மங்கை நாயகன் கருணையாந் திருவுரு மறைந்தான்.

(இ - ள்) உயர்ந்த பெரிய முகமொன்றே (முன்புள்ள) பன்றி முகமாக அமைத்து, (மற்ற) உறுப்புகள் எல்லாவற்றையும் மானுடசரீர வுறுப்புகளாகச் சமைத்து, கங்கையின் தலைவரும் தேவர்களின் இறைவரும் அங்கயற்கண்ணியார் கணவருமாகிய சோமசுந்தரக் கடவுள் அருளுருவாகிய திருவுருவைக் கரந்தருளினார். (சுஉ)

இம்மை யிம்மை யினிவரு பவமுஞ்
செம்மை செய்தசே தனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
எம்மை யெப்பவத் தாயினு மெனைப்பல வுயிர்க்கும்
அம்மை யப்பராய்க் காப்பவ ரவரலா லெவரே.

(இ - ள்) இவ்வுலகத்தில் இப்பிறவியில் (பன்றிக் குட்டிகளுக்குத்) தாயாய், இனி (அவைகட்கு) வரும் பிறவிகளையும் புனிதமாக்கி அறிவில்லாத அவ்வுயிர்களையும் அறிவுடைய உயிர்களாகச் செய்தருளினீர். எப்பிறப்பிலாயினும் எமக்கும் மற்றைப் பல உயிர்களுக்குந் தாய் தந்தையராகிக் காப்பவர் அவரன்றி யாருளர். (ஒருவருமிலர்.)

(வி - ம்) எம்மை - நான்கனுருபு நிற்குமிடத்து இரண்டனுருபு நிற்றலின் உருபுமயக்கம்; ஈண்டு உம்மை தொக்கிநின்றது; எமக்கும் எனக்கொள்க. (சூசூ)

ஆ திருவிருத்தம் - உஉடுடு.

நாற்பத்தாறாவது

பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

தந்தை தாயிழந் தலமருங் குருளையைத் தாயாய்
வந்து நாயகன் மூலிகொடுத் தருளிய வகையீ
தந்த ஆறிரு மைந்தரு மந்திர ராகி
எந்தை யார்சிவ புரம்புகுந் திருந்தவா றிசைப்பாம்.

(இ ள்) மாதா பிதாக்களை யிழந்து வருந்தும் பன்றிக் குட்டிகளுக்குச் சோமசுந்தரக் கடவுள் தாயாய்த் திருவுருவங்கொண்டு வந்து மூலி கொடுத் தருளிய திருவிளையாடலிது. அந்தப் பன்னிரு புதல்வரும் (இராசராச பாண்டியனுக்கு) மந்திரிகளாகி, பின்னர் எமது பெருமானுரது சிவபுரத்தை யடைந்த திருவிளையாடலை (இனி)க் கூறுவாம். (க)

ஆதி நாயகன் திருவுரு மறைந்தபின் னனைய
கோதி லாதிரண் டேனமாக் குமாரருங் காலைச்
சோதி யாதிரண் டருக்கர்போற் றோன்றியப் பொருப்பில்
ஓதி யாய்ந்தபல் கலைஞரா யொருங்குவீற் றிருந்தார்.

(இ - ள்) (தேவர்கள் யாவரிலும்) முதற்கடவுளாகிய சோமசுந்தரக்கடவுள் திருவுருவங் கரந்தருளிய பின்னர், அந்தக் குற்றமில்லாத வராகமுகத்தினையுடைய பன்னிரண்டு குமாரர்களும் காலையிலுதித்த கிரணத்தையுடைய

பன்னிரண்டு சூரியர்களைப்போல வொளிவாய்ந்து, கற்றாராய்ந்த பல கலைகளிலும் வல்லுநராய் அவ்வாக மலையில் ஒருசேர வீற்றிருந்தார்கள்.

திருவாசகம்

(வி - மீ) " மன்ன வெம்பிரான் வருக வென்னினை
மாலு நான்முகத் தொருவன் யாரினு
முன்ன வெம்பிரான் வருக வென்னினை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக "

எனக் கூறிய பெரியோர் வாக்கின்படி, ஆதிகாயகன் என்றார். (உ)

அனைய நாயவர் வைகுநா ளறைபுனற் கூடற்
புனித நாயக னருட்டிற முயிர்க்கிலாம் பொதுவாய்
இனிய வானவ னென்பதை யாவருந் தேற
வனிதை பான்மொழி மங்கைதன் மணாளனே வினவும்.

(இ - ள்) அவர்கள் அத்தன்மையாய் வாழுங்காலத்தில், ஒலிக்கும் நீர் சூழ்ந்த மதுராபுரியி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளின் திறங்கள் எல்லா வுயிர்கட்கும் பொதுமையாய் நின்று இன்பந்தருவனவென்று உண்மை நூல்கள் கூறுதலே யாவருந் தெளிய, பால்போன்ற (இனிய) சொற்களையுடைய அங்கயற்கண்ணம்மையார் தமது கணவரை வினவுகின்றார்.

(வி - மீ) அருட்டிறம் - அவரவர் திறத்திற்கேற்பத் திருவருட்டிறமும் பலவாறாக நிற்றல். (ஊ)

வெகீவி லங்கினும் வெய்யவா யசேதன விலங்காம்
இவ்வி லங்கெயிற் றேனமென் குருளைகட் கிரங்கிக்
கைவி லங்கினே யெய்தநீ கருணையாய் முலைதந்
திவ்வி லங்கறி வகற்றிய தியாதென இறைவன்.

(இ - ள்) கொடிய மிருகங்களிலுங் கொடியதாய், இழிந்த மிருகமாக விளங்குகின்ற வக்கிர தந்தங்களையுடைய இத்தப் பன்றியினது மெல்லிய குட்டிகளுக்குங் கருணைகூர்ந்து (சமணர்களேவிய) யானையையெய்து சங்கரித்த தேவரீர் திருவருளால் தாயாக வந்து முலைகொடுத்தருளி, அந்த மிருகத்தின் அறிவொழித்தருளியது யாது ? என்று வினவ, சோமசுந்தரக் கடவுள்.

(வி - மீ) பூர்வம் விக்கிரமபாண்டியனுக்கிரங்கி அவனைக் காத்தற்பொருட்டுச் சமணர்களேவிய யானையைக் கொன்ற தேவரீர், இராசராச பாண்டியனுல் வேட்டையாடிக் கொல்லப்பட்ட பன்றியின் குட்டிகளுடைய பாதையையகற்றி அவைகளைக் காக்கக் கருதி மனமிரங்கிய காரணம் யாது என வினவியதாம். (எ)

அகில வேதமு மாகம பேதமு நம்மைச்
சகல சீவ தயாபர னென்றுரை சால்பால்

இகலில் சேதன மசேதன மாகிய விரண்டும்
புகலில் வேறல வெமக்கவை பொதுமைய வதனுல்

(இ - ள்) எல்லா வேதங்களும் பலதிறப்பட்ட ஆகமங்களும் எல்லா ஆன்மாக்களிடத்தும் ஒருதன்மைத்தான தயாமூர்த்தியெனக் கூறும் பெருந்தகைமையால், மாறுபடுதலில்லாத வுணர்வுடைய வுயிர்களும் உணர்வில்லாத உயிர்களுமாகிய இரண்டு பொருள்களும், சொல்லுமிடத்து எமக்கு அவைகள் வேறல்ல. ஒரு தன்மையன. அக்காரணத்தால்.

(வி - ம்) ஆகமங்கள் இருபத்தெட்டு வகையினவாதலின் "ஆகமபேதம்" என்றார். (நி)

தாயி ழுந்துவெம் பசித்தழ லகஞ்சுடத் தழன்று
காயு மாதபம் புறஞ்சுடக் தானிடைக் கிடந்து
தீயு மேனமென் குருளைகள் தெருமர விரங்கி
ஆயு மாய்முலை யளித்துயி ரளித்தன மதனுல்.

(இ - ள்) தாயை யிழத்தலாலும், கொடிய பசியாகிய தழல் உள்ளே சுட்டு வருத்துதலாலும், கொதித்து வருத்துஞ் சுடுவெயிலானது புறத்திற் சுட்டு வருத்துதலாலும், காட்டிற் கிடந்து ஓயாகின்ற பன்றியின் மெல்லிய குட்டிகள் சுழன்று வருந்த அவற்றிற்கிரங்கி, தாயுமாகி முலைகொடுத்து அவ்வுயிர்களை ஓம்பினேம்; அக்காரணத்தினுல்,

திருமந்திரம்

(வி - ம்) "வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
காத னருளவை காடிலிரண் டுக்தம்
பேதம தென்பர் பெரியோர்ச் சபேதமே"

என்றபடி சிவபெருமான் தம்மாற்கூறிய வேத சிவாகமங்கள் பொதுமைய வெண்பகுத்த யாவருங் கடைப்பிடித்துய்ய அசேதன யாக்கையைக் கொண்டருளினராதலின் ஆடுமாய் என்றதில் உம்மை இழிவு சிறப்பு. (சு)

அளவி லாற்றலுக் திறனுநல் லரும்பெறற் கல்வி
விளைவு ஞானமுங் கிடைத்தனர் மீனவற் கினிமேல்
வளைவி லாதகோ லமைச்சராய் வளம்பல பெருக்கிக்
களைவில் பாசநீத் தெம்பெருங் கணத்தவ ராவார்.

(இ - ள்) எல்லையில்லாத வல்லமையும், திறமும், பெறுதற்கரிய நல்ல கல்வித் தேர்ச்சியும், ஞானமும் (எமது மூலைப்பாலுண்ட சம்பந்தத்தால்) அடைந்தார்கள். இனிமேல் பாண்டியனுக்குக் கோடாத செங்கோலையுடைய மந்திரிகளாய் (அவனுக்குப்) பல செல்வ வளங்களையும் (மென்மேலும்) பெருகச் செய்து, நீங்குதலில்லாத பாசங்களினின்று நீங்கி, எமது பெரிய சிவகணத்திலே வர்களாவார்கள்.

(வி - ம்) இச்செய்யுள் காரணகாரிய மாலையணி. ஈரைந்து காரியத்தை மூற்றுவிக்க வல்லமை வேண்டுதலின் அறிவிலாற்றலும், குணங்குற்றங்களோ யாய்ந்து காரியங்களில் முயலச் சதுரப்பாடு வேண்டுதலின் திறனும், கல்வி யறிவாயல்லாமல் இடையூறின்றி அத்திறன் மூற்றுப்பெறுதாதலின் அதன் பின் அரும்பெறற் கல்வி வீளவும், ஞானமின்றி அக்கல்வி யறிவு பயன் பெறுதாதலின் அதன்பின் ஞானமும், என முறைப்பட வைத்துக் கூறினர்.

வெட்டுவாய்தோறும், செம்பிற் கலக்கு கிற்குங் களிம்புபோலப் பாசம் ஆணமபோதத்தோடுங் கலக்கு கிற்றலின் "களிவில் பாசம்" எனப்பட்டது. (எ)

என்று நாயக னுயகிக் கிறைகொடுத் தியம்பி
அன்று மீனவன் கனவில்வந் தரசகேள் பன்றிக்
குன்றி லேனமா முகத்தராய்ப் பன்னிரு குமார்
வென்றி வீரராய் வைகுநர் மிக்கீறி வுடையார்.

(இ - ள்) என்று சோமசுந்தரக் கடவுள் அங்கயற்கணம்மையாருக்கு விடை கொடுத்தருளி, அப்பொழுதே இராசராசபாண்டியனுடைய சொப்பனத்தில் வந்தருளி, அரசனே! கேள்: வராகமலையிற் பன்றி முகத்தையுடையவராய்ப் பன்னிரண்டு குமாரர்கள் வெற்றிபொருந்திய வீரர்களாய் வசிக்கின்றார்கள். அவர்கள் அறிவின் மிகுதியுடையவர்கள்.

(வி - ம்) இச்செய்யுளில் "வென்றி வீரராய் மிக்கறிவுடையோர்" எனக் கூறினமையின் உதாரவணி. (அ)

அவரை நின்கடைக் கமைச்சராக் கோடியென் றளவில்
சிவப ரஞ்சுட ரருள்செயச் செழியர்கோ வேந்தன்
கவல ருங்களிப் புடையனுக்க் கண்மலர்த் தெழுமான்
தவழ்ந ருந்திரைக் கருங்கடல் தத்திநீந் தெல்லை.

(இ - ள்) அக்குமாரர்களே உனது திருவாயிலின் மந்திரிகளாகக் கொள்வாய் என்று, எல்லையில்லாத சிவபரஞ்சோதியாகிய சோமசுந்தரக்கடவுள் திருவருள் செய்ய, இராசராசபாண்டியன் கவர்ச்சியில்லாத களிப்புடையவனுக்குத் துயி லுணர்ந்து சூரியன் தோற்றிப்பூட்டிய எழுகுதிரைகளும் நெடிய அலைகள் தவழுங் கரிய கீழைக்கடலைத் தாவி நீந்தி யுதயமாம் வைகறைப் பொழுதில்.

(வி - ம்) களிப்புத் திலைக்குமிடத்து இடையிடையே கவலை வந்துறுமாத லின் அவ்வாறுற்றில னென்பார் "கவலருங் களிப்புடையனுய்" என்றார். (கூ)

மாண்ட கேள்விசான் மந்திரர்க் குணர்த்தியம் மலைமேற்
காண்ட கேனமா வீரரைக் கொணர்கெனக் கருணை
பூண்ட காவல னமைச்சரும் போயவர்க் கண்டு
வேண்ட வீரரு மீண்டினர் மீனவன் திருமுன்.

(இ - ள்) மாட்சிமைப்பட்ட நூற்கேள்வியில் மிக்க மந்திரிகட் குணர்த்தி, அவ்வராககிரியில் வாழும் பொலிவு மிக்க வராக வீரர்களைக் கொண்டுவரக்கடவீ ரென்று கூற, கருணையில் மிக்க பாண்டியன் சொல்வழி மந்திரிகளுஞ் சென்று,

அக்குமரர்களைக் கண்டு தமது அரசன் கட்டளையைக்கூற, அவ்வராக வீரர்களும், அப்பாண்டியன் சபையின் கண்ணே வந்தார்கள். (கo)

வந்தி றைஞ்சிய வராகமா மைந்தரை நேர்கண்
டந்த மில்களிப் படைந்துவேந் தமைச்சியற் கிழமை
தந்து வேறுபல் வரிசையுந் தக்கவா கல்கிக்
கந்து சீறிய கடகரிக் கைதவன் பின்னர்.

(இ - ள்) கட்டுத்தறியை முறிக்கும் மதயானைச் சேனையையுடைய அப் பாண்டியன் (தனது சபையின்கண்) வந்து பணிந்த வராக வீரர்களை நேரே பார்த்து, எல்லையில்லாத மகிழ்வு கூர்ந்து, மந்திரக்கிழமையும் கொடுத்து, பலவகைப்பட்ட வெவ்வேறு வரிசைகளையும் அவர்கள் தகுதிக்கேற்றபடி செய்து, பின்னர். (கக)

பழைய மந்திரக் கிழார்மடப் பாவைபோல் வரை
விழவு சால்கடி மங்கலம் விதியினுற் புணர்த்தி
அழகி தாமென நடத்தினு னணியரும் வீரக்
கழலி னுற்கொரு கவயமுங் கண்ணுமாய் நடப்பார்.

(இ - ள்) பண்டைய அமைச்சர்கள் பெற்ற இளமை வாய்ந்த பதுமை போன்ற பெண்களோடு சிறப்பு மிக்க விவாகோற்சவத்தை வேதவிதிப்படி (பன்னிரு குமரர்க்கும்) கூட்டி, (பார்த்தோர்) இஃதழகினதெனச் சொல்ல முடித்தான். அக்குமாரர்களும் வீரக்கழலணிந்த பாண்டியனுக்குக் கவசமுங் கண்ணுமாகி நடந்தார்கள்.

(வி - ம்) கண்ணுங் கவசமும் என்றது, பாண்டியனைத் தீவழியினின்று நல்வழியிற் செலுத்துதலாற் கண்ணையும், ஓரிடையூறு சம்பவிக்கையில் அதனை விலக்கிப் பாதுகாத்தலின் கவசத்தையும் போன்றனரென்க. (கஉ)

வேறு

உடம்பா றிரண்டிற் குயிரொன்றென வொன்றி னையவாய்
விடம்பா யசவம் விழுங்கும்மிரை யொத்து நெஞ்சக்
திடம்பாடு கொள்ள விணைவாங்கிச் செழியன் கல்வி
இடம்பாடு கல்கும் பயன்போல்மகிழ் வெய்த நின்றார்.

(இ - ள்) அக்குமாரர்கள் பன்னிரண்டு தேகத்திற்கும் உயிர் ஒன்றென்று சொல்லக் கலந்து, ஐந்து தலைகளையுடைய விடம்பரவிய சர்ப்பம் விழுங்கும் இரையை யொத்து, மனம் சலனமின்றி நிற்கக் கருமத்தை முடித்து, பாண்டியன் கற்ற கல்வி மிகவும் பயக்கும் பயனைப்போல மகிழ்ச்சியடையத் தொழிற்றலை நின்றார்கள். (கூ)

நல்லாவின் பாலி னறுந்தேன்கலந் தென்னப் பன்னூல்
வல்லாரு மாகி மதித்தட்பரு மாகிச் சோர்வில்

சொல்லா லடையார் மனமுங்களி தூங்கச் சொல்லிப்
பல்லார் பிறர்சொற் பயனுய்ந்து கவர வல்லார்.

(இ - ள்) கல்ல பசுவின் பாலில் கறுமணங்க்முழுத் தேனைக் கலக்தாற் போல, பல நூல்களில் வல்லவருமாய் நுண்ணறிவுடையவருமாய் (இடையில்) மறதியில்லாத சொற்களாற் பகைவர் மனங் களிப்படையப் பேசிப் பலரும் பிற ருஞ் சொல்லும் சொற்களிலுள்ள பயனை யாராய்ந்து கைக்கொள்ளவல்லவராகி,

பழையே மிறையூழ் கொளப்பட்டமென் றேமாப் பெய்தார்
உழையேவல் செய்யுஞ் சிறார்போல வொதுங்கி வேந்தன்
விழைவே தனை விடம்போல வெறுத்து வெஃகார்
அழல்போ லணுகா ரகலார்நிழ லன்ன நீரார்.

(இ - ள்) பாண்டியன் தேகசாயைபோல விடாது நிற்குந் தன்மையை யுடைய அப்பன்னிரண்டு குமாரரும், நாம் பழையோம், அரசனுல் முறையாக கன்கு மதிக்கப்பட்டோமென் றிறுமாப்படையாது, பக்கலில் நின்று ஏவிய ஏவல் செய்யுஞ் சிற்றுள்களைப்போல ஒதுங்கி நின்று, அரசன் விரும்பிய பொருள் யாதோ அதனை விஷம்போல வெறுத்து விரும்பாமல், அரசனைத் தீப்போலக் கருதி யவனை அணுகவுமாட்டார் ; நீங்கவுமாட்டார். (கடி)

மறுக்குஞ் செயல்நீத்து நடக்கையின் வையத் தோரை
ஒறுக்கும் பொருளும் பணிகேட்கையி னொன்ன லாரைச்
செறுக்கும் பொருளுங் கவராவ்வினை செல்வ மாக்கள்
இறுக்கும் பொருளே யிறைவற்கிவ ரீட்டுஞ் செல்வம்.

(இ - ள்) விலக்கத்தக்க தீத்தொழில்களை விலக்கி (விதிப்படி) நடக்கை யில், (தவறிய வழி) குடிகளைத் தண்டித்தலால் வரும் பொருளையும், தாம் பணித்த பணியைக் கேட்டொழுகுகையில் பகைவரைக் கோபித்தலால் வரும் பொருளையும் கைக்கொள்ளாது, வினைவு முதலியவற்றால் வருஞ் செல்வத்தை யுடைய குடிகள் இறையிறுக்கும் பொருளை அரசனுக்கு இவர்கள் தேடும் பொருள்களாம். (கசு)

மறத்தாம வேலான் மனக்கொள்கைதந் நெஞ்சுள் வான
நிறத்தாடி நீழ லெனத்தோற்ற நினைத்து மற்ற
தறத்தா னெனிலாற் றுவன்றெனி லாக்க மாவி
இறத்தான் வினை மனத்தானு மிழைக்க வெண்ணார்.

(இ - ள்) கொலைத்தொழிற் பயின்ற வேற்படைதாங்கிய இராசராசபாண் டியனுடைய மனக்கொள்கை தமது மனத்தில் ஆகாயம்போல(ப் புகை) நிறம் வாய்ந்த கண்ணாடி நிழல்போலப் புலப்படுதலால் அதனைச் சீர்தூக்கி, அக் கொள்கை அறநூல் வழிப்பட்டதானுற் செய்தலும், அல்லாயாயின் தனது செல்வமும் உயிரும் அழிய (அரசர்க்குக் கோபம்) வரினும், தமது மனத்தாலா யினுஞ் (சிறிதுஞ்) செய்யக் கருதாது தவிர்த்தலும் உடையார்.

தன்னெஞ்சுள் எனப் பாடங் கூறுவதுமுண்டு. (கஎ)

வேறு

இன்னவா றெழுகும் பன்னிரு வோரு மீகையுந் தருமமும் புகழுந், தென்னர்கோ மகற்கு வைகலும் பெருகத் திசையெலாம் விசயமுண் டாக்கிப், பன்னகா பரணன் சிவபுர மடைந்து பரன்கண நாதருட் கலந்து, மன்னிவீற் றிருந்தார் மன்னர்மன் னவனும் வான்பத மடைந்துவீற் றிருந்தான்.

(இ - ள்) (மன்னவனுக்குத் தக்கவை யியற்றி) இவ்வண்ணமாக நடக்கும் பன்னிரு குமரரும், பொருளும் அறமும் புகழ்ச்சியும் பாண்டியனுக்கு நாடோறும் வளர்ந்தோங்க, எண்டிசையிலுஞ் செயத்தை நிறுத்தி, சர்ப்பாபரணத்தையணிந்த சிவபெருமானுடைய சிவபுரத்தை யடைந்து சிவகணநாதருள் கலந்து நிலைபெற்று வசித்திருந்தார்கள். இராசராசபாண்டியனும் இந்திர பதவியையடைந்து வீற்றிருந்தனன்.

(வி - ம்) மன்னவர்க்கு வருத்த அங்கம் ஆறனுள், பல்லி குடி அமைச்சு கட்டு அரணென்னும் ஐந்திற்கும், பொருளே முக்கிய கருவியாதலின் "ஈகை" யென்றும், அதனாலேயே தருமமும் புகழும் நாடோறும் பெருகலின் "தரும மும் புகழும் வைகலும் பெருக" என்றும், அதனாற் பகைவர் அவனடிக் கீழ்ப் படுதலின் "திசையெலாம் விசயமுண்டாக்கி" என்றுங் கூறினர்.

இச்செய்யுள் காரணமாலையணி. (கஅ)

ஆ திருவிருத்தம் - உஉஎங.

பாற்பத்தேழாவது

கரிக்குருவிக்குபதேசித்த படலம்

வரிக்குருகுப் பத்திரற்குப் பலகையிட்ட மணிகண்டன்
அரிக்குருளை வடிவான அடல்வீரர்க் கரசன்பார்
பரிக்குமமைச் சியலளித்த பரிசுரைத்தாம் பசுபதிபாற்
கரிக்குருவி குருமொழிகேட் டருளடைந்த கதைபகர்வாம்.

(இ - ள்) இசைப்பாடலுக்குருகுப் பாணபத்திரருக்குப் பலகை தந்தருளிய நீலகண்டராகிய சோமசுந்தரக்கடவுள் பன்றிக்குட்டிகளின் வடிவாகிய வெற்றி பொருந்திய பன்னிரு வீரர்களுக்கும் பாண்டியநாட்டினைத் தாங்கும் மந்திரக் கிழமை கொடுத்தருளிய திருவிளையாடலைக் கூறினேம். அச்சோமசுந்தரக் கடவுளிடம், கரிக்குருவியானது உபதேசமொழி கேள்வியுற்று அவரது திரு வருளையடைந்த திருவிளையாடலை (யாம் இனி)க் கூறுவாம்.

(வி - ம்) பசுபதி என்றது எல்லா வுயிர்கட்கும் பொதுமைய னென்பது தோன்றக் கூறப்பட்டது. (க)

வேறு

மன்னவ னிராச ராசன் வானவர்க் கரச னுன
தின்னவன் குமர னுன பெருவலி மடங்க லன்னான்
துன்னல ரடுபோர் சாய்க்குஞ் சுகுணபாண் டியனீர் ஞாலம்
இன்னல்தீர்த் தறக்கோ லோச்சி யீர்ங்குடை நிழற்று நாளில்.

(இ - ள்) இராசராசபாண்டியன் தேவர்களுக்கரசனும் இந்திரபதத்தை யடைந்த பிறகு, அவன் புத்திரனுகிய பெரிய வன்மைவாய்ந்த ஆண் சிங்கத் தைப்போன்று, பகைவர் செய்யுங் கொலைத்தொழில் வாய்ந்த போர்முனையைச் சாய்க்குஞ் சுகுணபாண்டியன் கடல்சூழ்ந்த நிலவுலகிற்கு நலிவினை விலக்கிச் செங்கோலைச் செலுத்தித் தண்ணிய தவளவட்டக்குடையால் நிழல்செய்யுங் காலையில்.

(வி - ம்) இச்செய்யுளில், இன்னல் என்றது அரசனுலும், அவன் பரி சனத்தாலும், பகைவராலும், கள்வராலும், விலங்குகளாலுங் குடிகளுக்கு வரும் நலிவு என்க. (உ)

ஆற்றல்சா லொருவன் மேனு ளாற்றவு மறமே யாற்றி
மாற்றமில் சிறிது பாவஞ் செய்ததன் வலத்தால் வந்து
தேற்றமில் கபவா யாகிச் செனித்தலாற் காக மாதி
கூற்றென வூற்றஞ் செய்யக் குருதிசோர் தலைய தாகி.

(இ - ள்) வலிமைமிக்க ஒருவன் முற்பிறப்பிற் பெரும்பாலுந் தருமத் தையே செய்து, மாறுதலில்லாத பாவத்தைச் சிறுபான்மை செய்து, அப்பாவ வன்மையால் அசேதனமாகிய கரிக்குருவியாய்ப் பிறத்தலால், காக முதலிய பறவைகள் (அதனை) இயமனேப்போல இடையூறு செய்ய, உதிரஞ் சொரி யுந் தலையையுடையதாகி.

(வி - ம்) அரவஞ் சிறிதாயினும் விடம் உயிர்க்கிறுதி தந்தே யொழிதல் போலப் பாவஞ் சிறிதாயினும் இழிபிறப்பைத் தந்தே யொழியுமாதலின் "மாற்றமில் சிறிது பாவம்" என்றூர். (ஊ)

புட்கெலா மெளிதா யூறு பாடஞ்சிப் புறத்துள் வைகி
உட்கிரீள் வனத்துட் போகி வழிமருங் கொருசார் நிற்குங்
கட்கவிழ்ந் தொழுகப் பூத்த கவிழிணர் மரமேல் வைகி
வெட்கமீ தூரச் சாம்பி வெய்துயிர்த் திருக்கு மெல்லை.

(இ - ள்) எல்லாப் பறவைகட்கும் வருத்தத்திற்கெளிய பறவையாய், (அவை செய்யும்) இடையூற்றினுக்குப் பயந்து, நகர்ப்புறத்திலிருந்தும், (அங்கும் பற வைகள் செய்யும் வருத்தத்திற்கு அஞ்சியாற்றாது) பெரிய காட்டிற் சென்று வழியில் ஒருபால் நிற்கும். தேனைச் சொரிந்து சிந்த மலர்ந்த கவிழ்ந்த பூங் கொத்துகளையுடைய மாமரத்தின் மேலிருந்து வெட்கமீதூரச் சோர்ந்து பெரு மூச்செறிந்து வாழுமளவில். (எ)

விடையவ னீறு பூசு மெய்யவன் பூண்ட கண்டித்
தொடையவன் புறம்பு முள்ளுந் தூயவன் குடையுங் கையில்
உடையவன் தரும தீர்த்த யாத்திரை யொழுக்கம் பூண்ட
நடையவ னெருவ னந்த நறுந்தரு நிழலிற் சார்ந்தான்.

(இ - ள்) சிவபெருமானது திருநீறு பூசுந் திருமேனியையுடையவனும், (ஆபரணமாகப்) பூண்ட உருத்திராக்க கண்டிகையாகிய மாலையையுடையவனும், அகமும் புறமுந் தூய்மையையுடையவனும், கையிலேந்திய குடையையுமுடையவனும், புண்ணிய வடிவாகிய தீர்த்த யாத்திரை செல்லும் நியதியையே தனக் கோராபரணமாகப் பூண்ட கடைப்பிடியையுடைய வொருவன் அந்த நறு மணமிக்க மாமரத்தின் நிழலை யடைந்தனன்.

(வி - மி) "விடையவனீறு" என்றதைத் "திருவாலவாயான் திருநீறே" எனத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாண்டியன் சுரமொழித்து, அவனது கூன்பாண்டிய னென்னும் பெயரைப் போக்கி, நின்றசீர் நெடுமாற பாண்டியனெனப் பெயர் சூட்டத் திருவாய்மலர்ந்தருளிய திருநீற்றுப் பதிகத்தானுணர்க. (இ)

இருந்தவன் சிலரை நோக்கி யியம்புவா னெவர்க்கும் பேறு
தருந்தலந் தீர்த்த மூர்த்தித் தன்மையிற் சிறந்த அன்பு
வருந்தமிழ் மதுரை பொற்ரு மரைத்தடஞ் சுத்த சேசப்
பெருந்தகை யென்று சான்றோர் பேசுவா ராத லாலே.

(இ - ள்) (அந்த மாமர நீழலில்) இருந்த முனிவன் (அங்குள்ள சிலரைப் பார்த்துக் கூறுகின்றான் : எல்லோருக்கும் முக்திப் பயனைக் கொடுக்குந் தல மும் தீர்த்தமும் மூர்த்தியுமாகிய தன்மைகளுட் சிறந்தன (கேட்டபோருக்கு) அன்புபயக்கும் தமிழ்வழங்கும் மதுரையும், பொற்றுமரைத் தீர்த்தமும், சோம சுந்தரமூர்த்தியுமே யென்று பெரியோர் கூறுவர் ஆதலின். (உ)

ஓரிடத் திணைய மூன்று விழுப்பழு முள்ள தாகப்
பாரிடத் தில்லை யேனைப் பதியிடத் தொன்றே யென்றுஞ்
சீருடைத் தாருங் கூடற் செழுநக ரிடத்தம் மூன்றும்
பேருடைத் தாகு மென்றுற் பிறிதொரு பதியா தென்றான்.

(இ - ள்) ஒரு தானத்தில் (தலமென்மையுந் தீர்த்த மேன்மையும் மூர்த்தி மேன்மையுமாகிய) இம் மூன்று மேன்மையும் உளதாக (இங்கன்றி) இல்லை வலஞ்சுழியிலில்லை. மற்றைத் தலங்களில் ஒன்றேயுள்ளது. எப்பொழுதும் திரு விழாச் சிறப்புடையதாகிய மதுரையென்னும் வளமிக்க திருநகரில், அம் மூன்று மேன்மையும் பேர்பெற்றதா யுளதாமென்னில், (இதுபோற் சிறந்த) வேறொரு தலம் யாதுள்ளது? என்றனன். (எ)

இம்மது ரேசன் சேவித் தேத்துவோர்க் கெளிய ஞகிக்
கைம்மலர் நெல்லி போலக் கருதிய வரங்க ளெல்லாம்
இம்மையி னுடனே நல்கு மேன்மைய தலத்து வாழ்நர்
அம்மையி னன்றி நல்கா ராதலா லதிக னென்றான்.

(இ - ள்) இந்த மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், தன்னை வணங்கும் அடியவர்க் கெளியவராகி, கையிலேந்திய நெல்லிக்கனியைப்போலக் கருதிய எல்லா வாங்களையும் இப்பிறப்பில் உடனே தந்தருளுவர். மற்றைத் தலங்களிலுள்ள மூர்த்திகள் மறுமையினன்றிக் கொடார்கள்; ஆகையால், சோமசுந்தரக்கடவுளே மேம்பட்டவரென்று கூறினன்.

(வி - ம்) உள்ளங்கையிலேந்திய நெல்லிக்கனியானது தனது புறவடிவையேயன்றி, புலப்படாத அகவடிவையும் புலப்படுத்தல்போல, வேண்டிய வாங்களை இப்பிறப்பிலேயே தந்தருளுவதால் "கைம்மலர் நெல்லிபோலக் கருதிய வாங்களெல்லா மிம்மையி னுடனே நல்கும்" என்றார். (அ)

மற்றது கேட்டுக் கொம்பர் வைகிய கயவாய் ஞானம்
பெற்றது பறவை யாகிப் பிறந்ததும் பிறவுந் தோற்றம்
உற்றது நாமிச் சன்ம மொழிப்பதற் கறவோ னிங்ஙன்
சொற்றதே யுறுதி யென்று துணிவுகொண் டெழுந்த தன்றே.

(இ - ள்) கொம்பிலிருந்த கரிக்குருவியானது அதனைக் கேள்வியுற்ற அப்பொழுதே ஞானமடைதலால், பறவையாய்த் தான்வந்து பிறந்ததையும், மற்றுள்ளனவற்றையுந் தெரிந்து, நாம் இந்தப் பிறப்பினை யொழித்தற்கு, இம் முனிவன் இங்ஙுக் கூறியதே உறுதிபயப்பதென்று கருதித் துணிந்து, (மதுரைக்கேகி) எழுந்து.

இதுமுதல் பத்துப் பாடல்கள் குளகம். (ஆ)

ஆய்மலர்க் கான நீங்கி யாடக மாடக் கூடற்
போய்மலர்க் கனக கஞ்சப் புண்ணியப் புனல்தோய்ந் தாம்பல்
வாய்மலர்க் கயலுண் கண்ணுள் மணுளனை வலஞ்செய் தன்பிற்
றோய்மலர்க் கழலி னுனை யகத்திறுத் தொழுதர்ச் சித்தே.

(இ - ள்) (வண்டுகள்) ஆராயும் மலர்களையுடைய காட்டினின்றும் நீங்கி, பொற்றகடுவேய்ந்த மாடங்கள் நெருங்கிய மதுரையிற் சென்று, மலர்ந்த பொற்றாமரை மலர்களையுடைய புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, ஆம்பல் மலர்போன்ற திருவாயினையுடைய அங்கயற்கண்ணியார் கணவராகிய சோமசுந்தரக்கடவுளைப் பிரதக்ஷிணஞ் செய்து, (அடியவர்) அன்பிற் கலந்த (தாமரை) மலர்போன்ற திருவடியையுடைய அச்சோமசுந்தரக் கடவுளை மனத்தினுலுருச்சனைசெய்து பணிந்து.

(வி - ம்) அகத்தினுற் றொழுதர்ச்சித்து - மானத பூசை செய்து. (கஎ)

இன்னண மூன்று வைகல் கழிந்தபி னெம்பி ராட்டி
தன்னமர் காத லாணைத் தாழ்ந்தெதிர் நோக்கி யையன்
என்னையிக் கயவாய் செய்யுஞ் செயலிதன் வரலியா தென்ன
முன்னவ னதன்றன் செய்தி வரவெலா முறையாற் கூறு.

(இ - ள்) இவ்வாறு மூன்று தினங்கள் கழிந்தபிறகு, எமது பிராட்டியாராகிய அங்கயற்கண்ணியார் தம்மால் விரும்பப்பட்ட கணவராகிய சோமசுந்தரக்

கடவுளைப் பணிந்து, எதிரே நின்று, ஐயனே! இத்தக் கரிக்குருவி செய்யுஞ் செய்கை யாது? என வினவ, அச்சோமசுந்தரக்கடவுள் அதனது முன்னிகழ்ந்த செய்தியும், இங்குவந்த செய்தியுமாகிய இவற்றையெல்லாம் முறைப்படக் கூறி. (கக)

பத்திமை நியமம் பூண்ட பறவைமேற் கருணை நாட்டம்
வைத்திமை யாத முக்கண் மறைமுத லொருசெய்க் கன்று
நித்திய நிலைமை நல்கி நேர்ந்தவெங் கூற்றைக் காய்ந்த
சத்திய ஞான மிர்த்துஞ் சயத்தினை யுபதே சித்தான்.

(இ - ள்) இமைத்தலில்லாத திரிநேத்திரங்களையுடைய சோமசுந்தரக் கடவுள், பத்திசெய்து வழிபடுதலையே கடப்பாடாகக் கொண்ட கரிக்குருவியின் மேல் திருப்பாநோக்கம் வைத்து, மார்க்கண்டேயருக்கு அக்காலையில் நித்தியத்துவத்தைத் தந்தருளி, அவர்மேலெதிர்த்த கொடிய இயமனை யுதைத்தருளிய உண்மை ஞானமாகிய மிருத்யுஞ்சய மந்திரத்தை (அதனுக்கு) உபதேசித்தருளினர்.

(வி - ம்) மிருத்யுஞ்சயம் - இயமனைச் சயிக்கத்தக்க மந்திரம். (கஉ)

வேறு

உவமை யற்றவ னுரைத்த மந்திரஞ்
செவிம டுத்தலுஞ் சிற்று ணர்ச்சிபோய்ப்
பவம கற்றிடப் படுக ரிக்குரீஇ
கவலை விட்டான் கழல்வ ழுத்துமால்.

(இ - ள்) சமானமற்றவராகிய சிவபெருமான் உபதேசித்தருளிய (மிருத்யுஞ்சய) மந்திரத்தைக் காதிற் கேட்டலுஞ் சிற்றறிவு நீங்கி, (அத் திருமந்திரத்தால்) இளைவரும் பிறவி நீக்கப்பட்ட கரிக்குருவியானது கவலையொழித்து அப்பெருமான் திருவடியைத் துதிக்கும். (கங)

எண்ணி லாவுயிர்க் கிறைவ போற்றிவான்
றண்ணி லாமதிச் சடில போற்றியென்
புண்ணி யப்பயன் போற்றி யங்கயற்
கண்ணி நாதனின் கருணை போற்றியால்.

(இ - ள்) எல்லையில்லாத ஆன்மகோடிகளுக்குத் தலைவனே! உன்னை வந்திக்கக்கடவேன்; ஆகாயத்திற்றவழும் தண்ணிய கிரணம் வாய்ந்த சந்திரனை யணிந்த சடாமகுடத்தையுடையவனே! உன்னை வந்திக்கக்கடவேன்; எனது சிவபுண்ணியத்தின் பேறுபுள்ளவனே! உன்னை வந்திக்கக்கடவேன். அங்கயற் கண்ணம்மையார் தலைவனே! உனது திருவருளை வந்திக்கக்கடவேன். (கச)

தேளித லின்றியே செய்த தீமையால்
விளியு மென்னையு மாளல் வேண்டுமோ
எளிய செங்குளா ரென்று தேர்ந்துதேர்ந்
தளியை யாவதுன் னருளின் வண்ணமே.

(இ - ள்) யான் (குணம் குற்றம்) தெரியாது செய்த தீவினையால், இழி பிறப்புற்று இறக்குமென்னையும் ஒரு பொருளாகக் கருதி யாளவேண்டுமோ ? (அடியேன் போன்ற) எளியர் எங்கிருக்கின்றனரென்று நாடி (அவர்மேற்) கருணையுடையவனுயிருத்தல் உன் திருவருளின் திறம். (கஙு)

உம்மை நல்லற முடைய நீர்மையால்
இம்மை யிம்மனு இயம்பி னுயிது
அம்மை நன்னெறிக் கேது வாதலான்
மும்மை யுங்கல முடைய மொய்ம்பினேன்.

(இ - ள்) அடியேன் முற்பிறப்பிற் செய்த சிவபுண்ணியப்பேற்றினைப் பெரும்பாலும் உடையனுதற்றன்மையால், இப்பிறப்பில் இத்திருமந்திரத்தை யருளினை : இது மறுமையிற் சிவகதியருளுதற்குக் காரணமாதலின், (உம்மை அம்மை இம்மை யென்னும்) மூத்திறத்துப் பேறுமடைந்த வலியனுயினேன்.

ஆயி னும்மெனக் கைய வோர்குறை
தீய புள்ளெலா மூறு செய்தெனைக்
காயு மானமுங் கழியக் கண்டபேர்
ஏயெ னும்படிக் கெளிய னுயினேன்.

(இ - ள்) ஆனபோதிலும், ஐயனே ! எனக்கோர் குறையுளது. கொடிய பறவைகளெல்லாம் மானமும் என்னினின்று நீங்க இடையூறு செய்து என்னை வருத்தும்படிக்கும், பார்த்தவர்கள் ஏ யென்று இழித்தோட்டும்படிக்கும் எளிய னதலை யடைந்திருக்கின்றேன்.

(வி - ம்) ஏ - இழிபு குறிக்கும் இடைச்சொல். (கஎ)

என்ன வக்குரீஇ யியப்ப எம்பிரான்
அன்ன புட்கெலாம் வலியை யாகெனப்
பின்னு மக்குரீஇ தாழ்ந்து பேதையேற்
கின்னு மோர்வரங் தருதி யென்றதால்.

(இ - ள்) என்று அக்குருவி குறையிரக்க, எமது சோமசுந்தரப்பெருமான் நீ அவ்வகைய பறவைகளுக்கெல்லாம் வலியானுகக் கடவாயென்றருளு, அத்தக் குருவி மீளவும் பணிக்து, (எம்பெருமானே !) அறிவில்லாத அடியேனுக்கு இன்னும் ஒரு வரம் தந்தருளாயென் றிரந்தது. (கஅ)

வலியை யென்பதென் மாபி னுக்கெலாம்
பொலிய வேண்டுமெப் போது நீசொன
ஒலிய மந்திர மோதி யோதிநாங்
கலியை வெல்லவுங் கருணை செய்கென.

(இ - ள்) வலியையாகவென எனக்கருளியபேறு என் மரபலுளள பறவை கட்கெல்லாம் எந்நாளுங் குறைவின்றி விளங்கவேண்டும். நீ யருளிய ஒலியை யுடைய திருமந்திரத்தை யிடையீடின்றிப் பயின்று நாங்கள் கலிபத்தைப் புறங்காணவுங் கருணை செய்தருளா யென்றிரக்க. (கக)

ஆவ தாகவென் றமரர் நாயகன்
மூவெ ழுத்தினுள் முடிந்த அம்மனு
தாவில் தெய்வத மிருடி சந்தமோ
டோனி லோசைமூன் றெடுதெ ருட்டினுன்.

(இ - ள்) குறையிராத னுகைகூடக் கடவதென்று, தேவர்கள் பெருமானு ராகிய சோமசுந்தரக் கடவுள் மூன்றெழுத்தினுல் முடிந்த அம்மிருத்யுஞ்சய மந்திரத்தைக் கெடுதலில்லாத தெய்வம் ருஷி சந்தஸ் என்னும் இவற்றோடும் நீங்குதலில்லாத (உதாத்தம் அநுதாத்தம் சொரிதமாகிய மூவகை) ஒலியுடன் பெற அருளினர்.

(வி - ம்) மூன்றெழுத்தினுல் முடிந்த (மிருத்யுஞ்சய) மந்திரம் என்றது த்ரியம்பகம். [திரியம்பகம்.] சந்தஸ் - காயத்திரி. (உ0)

வேறு

குருமொழி பயின்று மூள்வாய்க் குருவிதன் குலனுக் தன்போல்
அருமறை முதல்வ னீந்த ஆற்றலாற் பறவைக் கெல்லாம்
பெருமைசால் வலியா னென்னும் பெயரவா யுலகின் மன்னக்
கருமணி கண்டன் செம்பொற் கணைகழ லடிசேர்ந் தன்றே.

(இ - ள்) முட்போலக் கூரிய வாயையுடைய கரிக்குருவியானது குருவுப தேசத்தை யிடைவிடாது பழகி, தன் சாதிப்பறவைகளுந் தன்னைப்போலச் சோமசுந்தரக் கடவுளருளிய அரிய மந்திரவன்மையாற் பெருமைமிக்க வலியா னென்னும் பெயரை யுடையனவாய் உலகில் நிலைபெற, கரிய நீலமணிபோன்ற கண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுளுடைய செம்பொன்னுலாகிய ஒலிக் கும் வீரக்கழலணிந்த திருவடியை யடைந்தது.

(வி - ம்) சேர்ந்தது + அன்று = சேர்ந்தன்று. இது தொகுத்தல். (உக)

இக்கரிக் குருவி தானுறற் றெய்திய வரத்தைத் தன்போல்
ஒக்கவு மெளிதா வெய்தப் பெற்றதா லுலகின் மேன்மை
தக்கவ னெருவன் வாழத் தன்கிளை வாழ்வ தென்ன
மிக்கவ ரெடுத்துக் கூறும் பழமொழி விளங்கிற் றன்றே.

(இ - ள்) இக்கரிக்குருவி தான் வருந்தி நோற்றடைந்த வரத்தைத் தன் னைப்போலத் தன் சாதிப்பறவைகளெல்லாம் வருந்தாமல் எளிதாக அடையப் பெற்றதனுல், உலகின்கண் மேன்மையோடு கடுநிலைமையையுடைய ஒரு வன் வருந்தி முயன்று வாழ, அவன் கீழ் அவன் உறவினர் யாவரும் வாழ்வா ரென்று ஆன்றோர் எடுத்துக் கூறும் பழமொழி விளங்கியது.

(வி - ம்) இச்செய்யுளிற் கூறிய பழமொழியை, நாலடியார்

"அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம் போலொப்பத் தாங்கிப்—பழமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்"—என்பதனுனறிக. (உஉ)

வேறு

ஈச னடிக்கன் பில்லார்போ லெளியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் புடையார்போல் வலியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் பின்மையினு லெளிதாய்த் திரிந்த இக்கயவாய்
ஈச னடிக்கன் புடைமையினுல் வலிதா யிற்றே யெவ்வுயிர்க்கும்.

(இ - ள்) சிவபெருமான் திருவடிக்கீ ழன்பில்லாதவர்போல் யாவருள்ளும் எளியவரில்லை; சிவபெருமான் திருவடிக்கீ ழன்புடையவர்போல யாவருள்ளும் வலியவரில்லை. சிவபெருமான் திருவடிக்கீழ் அன்பில்லாமையினுல் எல்லாப் பறவைகளுள்ளும் எளிதாகத் திரிந்த இக்காரிக்குருவி, சிவபெருமான் திருவடிக் கீழ் அன்புடைமையினுல் எல்லாவுயிர்களுள்ளும் வலிதாயிருந்தது. (உங)

ஆ திருவிருத்தம் - உஉகூசு.

நாற்பத்தெட்டாவது

நாரைக்கு முத்திகொடுத்த படலம்

அத்தி தந்த விமான மழகியார்
பத்தி தந்த பறவைக்கு மந்திர
சித்தி தந்த திறனிதீ நாரைக்கு
முத்தி தந்த கருணை மொழிகுவாம்.

(இ - ள்) அஷ்டகஜங்களாற் சுமக்கப்பட்ட விமானத்தி லெழுந்தருளிய சுந்தரேசப் பெருமானர், அன்புசெய்த வழிபட்ட காரிக்குருவிக்கு மந்திரசித்தி தந்தருளிய திருவிளையாடலிது. நாரைக்குச் சிவகதி தந்தருளிய திருவிளையாடலை (யாம் இனி)க் கூறுவாம். (க)

தேக்கு நீர்வைகை நாட்டொரு தென்புலத்
தாக்கு மாடவைப் பொன்னுள தவ்வயின்
வீக்கும் யாழ்செயும் வண்டுக்கு வீழ்நற
வாக்கு தாமரை வாவியொன் னுள்ளதால்.

(இ - ள்) நிறைந்த நீர்மயமாகிய வைகைநதி சூழ்ந்த பாண்டிநாட்டில் ஒரு சார் தென்பாலில், சிற்பநூல்வழி சமைத்த மாடங்களையுடைய நகரம் ஒன் நுள்ளது. அவ்விடத்தில் நரம்பின் கட்டமைந்த வீணையி னிசைபோலப் பாடும் வண்டுகளுக்கு விரும்புந் தேனை வாக்காகின்ற தாமரைகளையுடைய தடாகம் ஒன்றிருக்கின்றது. (உ)

ஆழ மிக்க கயந்தலை யத்தலை
வாழு மீன மணைத்தையும் வாய்ப்பெய்து

சூழ நகத்துமுத் தீனுங் துறைக்கணே
தாழ்வ தோர்செய்ய தாண்மட நாரையே.

(இ - ள்) (அது) அளத்தற்கரிய ஆழத்தையுடைய தடாகமாம். அத்தடாகத்தில் வாழும் மீனகளையெல்லாங் கொள்ளைகொண்டு, சுற்றிலுஞ் சங்குகள் முத்தீனுக்களையீனுந் துறையிலே, சிவந்த கால்களையுடைய ஓர் இளநாரை வாசஞ் செய்யா நின்றது. (ரு)

சிறிய நாண்மழை யின்றியச் சேயிதழ்
வெறிய தாமரை யோடை வியன்கரை
இறைகொள் நாரை யிருவினைப் பௌவமும்
வறிய தாகி வறப்ப வறந்ததால்.

(இ - ள்) சிலநாள் மழையின்மையால், அந்தச் சிவந்த இதழையுடைய வாசமிக்க தாமரைகள் நிறைந்த தடாகத்தின் விசாலித்த கரையிற் றங்கிய நாரையினது (கல்வினை தீவினையென்னும்) இருவினைக் கடலும் சிறிதுமில்லாது வறக்க, அத்தடாகமும் வற்றியது. (ஸ)

நுரைசெ றித்தன்ன நோன்சிறை நாரையும்
இரைவி ரும்பியவ் வாவியி னந்தொரீஇ
விரைய வந்தொரு காணிடை வீழ்ந்ததாற்
புரையி லோர்க்கிட ஞருமப் பொங்கர்வாய்.

(இ - ள்) நுரைகளைச் செறித்தாற் போன்ற (வெள்ளிய) வலிய சிறகையுடைய நாரையும் இரையை விரும்பி அத்தடாகத்தினின்றும் நீங்கி, விரைந்து வந்து ஒரு காட்டிற் சோர்ந்து விழுந்தது. குற்றமில்லாத முனிவர்கட்கு உறையுளாகிய மரச்செறிவையுடைய அக்காட்டில். (ஙு)

முத்த ரான முனிவர் குழாத்தொடுஞ்
சுத்த வானந்த வாரியுட் டோய்ந்ததன்
சித்த மாசு கழீஇச்சிவ மாகிய
சத்தி யத்தவ மாமுனி தங்குமால்.

(இ - ள்) சிவன்முத்தராகிய முனிவர் கூட்டத்தோடும் களங்கமில்லாத பேரின்பப் பிரவாகத்துள் மூழ்கித் தனது மனத்தழுக்கைப் போக்கி, சிவசொரூபமாகிய சத்தியத்தவன் என்னும் பெயரினையுடைய பெரிய தபோதனனொருவன் (அங்கே) வசிக்கின்றனன். (சு)

கூப்பி டெல்லை குணித்துச் சதுரமா
யாப்ப மைத்துசுற் றெங்குப்ப டித்துறைக்
காப்ப மைத்து குளிர்சந்தி யாமடங்
காப்ப மைந்தோர் கயந்தலை யுள்ள தால்.

(இ - ள்) ஒருகூப்பிடு தூரஞ் சதுரமாய் வரையறுத்துக் கட்டுத லமையப்பெற்று, சுற்றிலும் எங்கும் படித்துறைக்கோவை யமையப்பெற்று, தண்ணீயை கிழல் செய்யுஞ் சந்தியாமடத்துடன் காவலோ டமைந்த ஒரு தடாகமுள்ளது.

விரைசெய் சண்பகம் பாதிரி வேங்கைதேன்
இரைசெய் வஞ்சி யிலஞ்சி குராமரா
நிரைசெய் கிஞ்சுக நீண்மரு தாதியா
உரைசெய் பன்மர மும்புறத் துள்ளவால்.

(இ - ள்) வாசம் வீசுஞ் சண்பகமும், பாதிரியும், வேங்கையும், வண்டுகளாலிக்கும் வஞ்சியும், மகிழும், குராவும், மராவும், வரிஞ்சயாயுள்ள முண்முருக்கும், நீண்ட மருதும் இவை முதலாகக் கூறப்படும் பல மரங்களும் (அத்தடாகத்தின்) பக்கங்களிலுள்ளன. (அ)

அந்த வாவியின் பேரதோ தீர்த்தமென்
றிந்த ஞால மியம்புவ தாலிரை
உந்த வாவி கொடுக்க வெழுந்துமுன்
வந்த நாரை யதன்கரை வைகுமால்.

(இ - ள்) அத்தத் தடாகத்தின் பெயர் அதோ தீர்த்தமென்று இவ்வுலகத்திலுள்ளவர் கூறுவர். இரையானது மிக்க விருப்பத்தினைக் கொடுக்க, மேலெழுந்து அத்தடாகத்தின் முன்வந்த நாரையானது அதன் கரையிலே தங்கா நிற்கும். (ஆ)

ஆய்ந்த மாதவ ரப்புனி தத்தடங்
தோய்ந்து தோய்ந்தங் கெழுந்தொறுந் தோட்புறஞ்
சாய்ந்த வார்சடைக் கற்றையிற் றத்துமீன்
பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்தீரோ

(இ - ள்) (வேதசிவாகமங்களை) ஆராய்ந்துணர்ந்த பெரிய தபோதனர்கள் அந்த வாலிதாகிய தடாகத்தில் நீராடி யெழுந்திருக்குந் தோறும், (அவர்கள்) பிடரிற்சாய்ந்து கிடக்கின்ற நீண்ட சடாடவியில், சாவாகின்ற மீன்கள் தம்மூட்பாய்ந்து புரளுதலைப் பார்த்து.

இதுமுதல் இரண்டுபாடல்கள் குளகம். (இ)

ஈண்டை யித்தவத் தோர்திரு மேனியைத்
தீண்ட எத்தவஞ் செய்தன வேகொலென்
றுண்டை மீனமக் காகா வெனவிரை
வேண்டு நாரை வெறுத்தங் கிருந்ததால்.

(இ - ள்) இவ்விடத்தில் இந்தத் தபோதனர்களுடைய திருமேனியைப் பரிசிப்பதற்கு (இம்மீன்கள்) என்ன தவஞ்செய்தனவோ? என்று கருதி, அவ்விடத்திலுள்ள அம்மீன்கள் நமக்கு இரையாகா வென்று, இரைவேண்டிவந்த நாரை அதனை வெறுத்து அங்கு வசித்தது.

(வி - ம்) ஈண்டை இதில் ஐகாரம் சாரியை யிடைச்சொல். (ஈ)

வேறு

தன்னிகர் தவத்தோர் யாருந் தடம்படிந் தேறி நித்த
மன்னிய கருமம் முற்றிச் சந்தியா மடத்தில் வைகி

மின்னிய மகுடஞ் சூடி வேந்தனு யுலகங் காத்த
பொன்னியற் சடையான் கூடற் புராணநூ லோதுகின்றார்.

(இ - ள்) தம்மைப்போன்ற தவத்தினையுடைய யாவரும், அத்தடாகத்தில் நீராடிக்கரையேறி, (இடைவிடாது) என்றுமுள்ள நித்திய கருமத்தை முடித்து, சந்தியாமடத்திலிருந்து, விளங்கா நின்ற கிரீடத்தைத் தரித்துச் சவுந்தரபாண்டியனாகி யுலகினைக் காத்துவந்த பொன்போலச் செங்கிறம் வாய்ந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக் கடவுளுடைய திருவாலவாய் மான்மியநூலை யோதிவருகின்றவர்க ளாயினர்கள். (கஉ)

அண்ணலெம் பெருமான் செய்த அருள்லீலை யாட்டு மாதிப்
பண்ணவன் சிறப்புங் கூடற் பழம்பதிச் சிறப்புந் தீர்த்தத்
[ணும்
தெண்ணருஞ் சிறப்புஞ் சேர்ந்தோர்க் கெளிவரு மிறைவ னென்
வண்ணமு மெடுத்துக் கூறக் கேட்டங்கு வதியு நாரை.

(இ - ள்) இறைவனுகிய எமது சோமசுந்தரப் பெருமான் செய்தருளிய திருவிளையாடலையும், யாவர்க்கும் முழுமுதற்பொருளாகிய அப்பெருமானது சிறப்பையும், நான்மாடக்கூடலாகிய தொன்று தொட்டுள்ள மதுரைப்பதியின் தலச்சிறப்பையும், (பொற்றாமரைத்) தீர்த்தத்தின் அளவிடற்கரிய சிறப்பையும், அடைந்தவர்கட்கெளிய கருணைவள்ளலென்னுந் திறத்தையும் அம்முனிவர்க ளெடுத்துக்கூற, அவ்விடத்துத் தங்கும் நாரை கேட்டு.

இதுமுதல் ஆறுபாடல்கள் குளகம். (கரு)

மடம்படு மறிவு நீங்கி வல்வினைப் பாசம் வீசித்
திடம்படு மறிவு கூர்ந்து சிவபரஞ் சோதி பாதத்
திடம்படு மன்பு வாவென் றீர்த்தமு ழெழுந்து நாரை
தடம்படு மாடக் கூடற் றனிநக ரடைந்து மாதோ.

(இ - ள்) அறியாமை நீங்கி (எழுந்த ஞானேதயத்தால்) வலிய ஆகாமிய கன்மபந்தத்தை யொழித்து, உயிர்க்குறுதிதரும் ஞானேதயம் பெற்று, சோம சுந்தரக்கடவுளின் திருவடியிற் பாந்த நேயமானது வாவென்றழைக்க, நாரை அங்கு நின்று மேலெழுந்து விசாலித்த உபாகைகள் நிறைந்த மதுரையாகிய ஒப்பில்லாத திருநகரை யடைந்து. (கசு)

வாங்கிய திரைசூழ் பொற்ரு மரைபடிந் திமையா வேழந்
தாங்கிய விமான மேய தலைவனைத் தாழ்ந்து சூழ்ந்து
தேங்கிய வருட்க ணோக்கந் தெரிசித்துத் திருமுன் வைகி
ஓங்கிய கருணை மேனி யுள்ளுறத் தியானஞ் செய்து.

(இ - ள்) வளைந்த அலைகள் சூழ்ந்த பொற்றுமரைத் தீர்த்தத்தில் நீராடி, இமைகொட்டாத அஷ்ட கஜங்கள் சுமந்த விமானத்தி லெழுந்தருளிய சோம சுந்தரக் கடவுளைப் பணிந்து பிரதக்ஷிணஞ்செய்து, தன்மேல் தேக்கிய திருவருட்பார்வையைத் தரிசித்து, திருமுன்னிருந்து, (ஆன்மாக்களிடத்து) வளர்ந்தோங்கிய திருவருளாகிய திருமேனி தனதுள்ளத்திற் பதியத் தியானித்து.

(வி - ம்) "தேங்கிய அருட்கணேக்கந் தெரிசித்து" என்றது, சஞ்சித கன்மம் ஒழிந்த தென்றும், "கருணேமேனி" என்றது, சிவபெருமான் திருமேனி திருபாவடிவமே யென்றுங் குறிப்பிட்டதாம். (கடு)

இங்கிலே கியம மூவைக் தெல்லைஞான் றியன்று பின்னுள்
அங்கிலே யொழுகு நாரை யாடக கமலத் தோய்வான்
வன்னிலே மதில்சூழ் ஞாங்கர் வந்துழிப் பசியால் மிவந்து
மின்னிலே வேல்போற் றுள்ளு மீன்கவர்ந் துண்கு மென்ன.

(இ - ள்) இவ்வாறு செய்கடனைப் பதினேந்து தினஞ்செய்து வருகாளில் அந்தியமத்தை முடிக்கும் நாரையானது பொற்றுமரைத் தீர்த்தத்தில் நீராடி, வலிய நிலையையுடைய சுற்றுமதிலின் பக்கலில் வந்தவிடத்துப் பசித்தழலாற் றீந்து கருகி, விளங்குந் தகட்டுவடிவாகிய வேலைப்போலத் துள்ளாநின்ற மீனைக் கொள்ளைக்கொண்டு உண்போமென்று. (கசு)

சிறிதுளத் துள்ளி நாதன் றிருவருள் வலத்தாற் பின்னர்
அறிவுவந் தச்சோ இந்த அறப்பெருந் தீர்த்தத் துள்ளே
எறியுமீ னருந்த ஆசை யெழுந்தமீ தெனக்கிப் போதிப்
பிறவியென் றெழுவ தென்னப் போஞ ரடைந்து பின்னும்.

(இ - ள்) சற்று மனதிற்கருதி, சோமசுந்தரக் கடவுளது திருவருளின் வன்மையால் பின்பு ஞானம் வந்து, ஐயோ! இத்தத் தரும சொரூபமாகிய பெரிய தீர்த்தத்தில் துள்ளுகின்ற மீனைத் தின்ன எனக்கிப்பொழுது விருப்பமெழுந்தது. (இக்கொடுமையால்) இந்தப்பிறவி யெப்பொழு தொழிவது? என்று பெருந்துன்பமடைந்து, மீண்டும். (கஎ)

சுந்தரச் செம்மல் பாதத் துணைமல ரன்பிற் றேய்த்து
சிந்தைவைத் திருக்கு மெல்லே தேவரு மறையுஞ் செய்யும்
வந்தனைக் கரியா ஞரை மனகினை வடிவாய்த் தோன்றி
எந்தமக் கினியாய் வேண்டும் வரமென்கொ லியம்பு கென்றார்.

(இ - ள்) சோமசுந்தரக் கடவுளுடைய தாமரை மலர்போன்ற உபயபாதங்களில்வைத்த அன்பிற்படிந்து, தனது மனத்தை (அந் நிலையில்) வைத்திருக்குந் தருணத்தில், தேவர்களும் வேதங்களுஞ் செய்யும் வழிபாட்டினால் அறியக் கூடாத அச்சோமசுந்தரக்கடவுள் நாரை மனத்திற்கருதிய திருவுருவோடுகாட்சியளித்து, எமக்கு இனியவனே! நீ வேண்டிய வரம்யாது? என வினவினர். (கஅ)

வேறு

செய்ய காண்மட நாரையுஞ் சென்றுதாழ்ந்
தைய னேயிப் பிறவிய றுத்துனின்
மெய்யர் வாழ்சிவ லோகத்தின் மேவினான்
உய்ய வேண்டுமொன் றின்னமு முண்டோ.

(இ - ள்) சிவந்த கால்களையுடைய இளமை தங்கிய நாரையும் புடை பெயர்ந்து பணிந்து, ஐயனே! இந்தப் பிறவியின் வேரையறுத்து உமது மெய்

யன்பர் வாழுஞ் சிவலோகத்தினையடைந்து, அடியேன் பிழைக்கவேண்டும். இன்னமும் (வேண்டுவது) ஒரு வரமுள்ளது. (கக)

வுள்ள லென்மர புள்ளவு மற்றைய
புள்ளு மிக்தப் புனித மலர்த்தடத்
துள்ள மீனுயி ருண்ணினைக் காலமுங்
தள்ளொ ணுத பழிவந்து சாருமே.

(இ - ள்) தயாவள்ளலே! என் மரபிலுள்ள பறவைச் சாதிகளும் ஏனைப் பறவைகளும் இத்தக் களங்கமில்லாத பொற்றுமரைத் தீர்த்தத்திலுள்ள மீன் களினுயிரைக் கொள்ளே கொண்டால், எத்தக் காலத்திலுந் தள்ளுதற் கரிதா கிய பாவம் வந்து சம்பவிக்கும். (உ0)

என்று மித்தட மீனில வாகநீ
நன்று சால்வர நல்கென வெள்ளிமா
மன்று ளானும் வரந்தந்து போயினன்
சென்று நாரை சிவலோகஞ் சேர்ந்ததால்.

(இ - ள்) எக்காலத்திலும் இத்த (ப் பொற்றுமரைத்) தீர்த்தத்தில் மீன் களில்லாதிருக்கும்படி நீ நன்மையிக்க வரந் தந்தருளாயென்று குறையிரக்க, பெருமை பொருந்திய வெள்ளியம்பலத்தில் நடித்தருளிய சோமசுந்தரக் கடவு ளும் (அவ்வாறே) வரமருளிச்செய்து சென்றனர். நாரை சிவலோகத்தைச் சென்றடைந்தது. (ஙக)

இயங்க ளொந்து மியம்பவி மானமேம்
புயங்கள் நான்குமுக் கண்களும் பொற்பவான்
வியங்கொள் பூமழை வெள்ள த்து ளாழ்ந்துபோய
வயங்கொள் நந்திக ணத்துள் வதிந்ததே.

(இ - ள்) (தேவ) வாச்சியங்கள் ஐந்துமொலிக்க, விமானத்தின்பேரில் (இவர்ந்து) நான்கு புயங்களும் மூன்று கண்களும் அழகுசெய்ய (சாரூப்பிய மடைந்து), ஆகாய வாசிகள் சிந்திய புஷ்பமாரியாலாகிய வெள்ளத்துள் மூழ்கிச் சிவலோகஞ் சென்று, வெற்றிமிக்க திருநந்திதேவர் சிவகணத்துள் (தானும் ஒருகுகத்) தங்கியது. (உஉ)

அன்று தொட்டின் றளவும்பொற் றுமரை
என்று மைக்கு மெழின்மல ரோடையிற்
சென்று கைத்துத் திரிகின்ற மீனலால்
ஒன்று மற்றன நீர்வா ழுயிர்களும்.

(இ - ள்) (அவ்வண்ணமாக இறைவரிடத்தில் அந்நாரையானது வரம் பெற்ற) அக்காலமுதல் இக்காலவரையிலும், பொற்றுமரையென்று கூறும் பொலிவுமிக்க திருக்குளத்தில், உலாவித தாவித்திரிகின்ற மீன்களேயன்றி, நீரில் வாழும் (தவளை முதலிய) உயிர்களுஞ் சிறிதுமின்றி யொழிந்தன. (உங)

வேறு

தன்கிளை யன்றி வேற்றுப் பறவைகள் தாமுந் தன்போல்
நன்கதி யடைய வேண்டிற் றேகொலிந் நாரை செய்த
அன்பினில் வியப்போ ஈச னருளினில் வியப்போ அன்பர்க்
கின்புரு வான ஈச னருளன்பர்க் கெளிதே யைய.

(இ - ள்) தனது ஜாதிப்பறவைகள் மட்டுமேயல்லாமல் வேறு சாதிப்பற வைகளும், தன்னைப்போல் நல்ல சிவகதியை யடைய வரமும் வேண்டியது. இந்த நாரையானது வழிபட்ட பத்திமையில் வியப்புள்ளதோ? (அப்பத்தி மைக்கு மகிழ்ந்து அருள்புரிந்த) சோமசுந்தரக் கடவுளின் திருவருளில் வியப் புள்ளதோ? அடியவர்க்கு (அவயவங்களோறும்) இன்பவடிவாய் நின்ற அச்சோம சுந்தரக்கடவுளின் திருவருள் அடியார்க்கு எளிது.

(வி - ம்) ஐய - வியப்பிடைச்சொல். ஏகாரம் - தேற்றம். (உச)

வேறு

மறக்கு நும்புக் களைகட்டு மண்ணின்மேல்
அறப்பெ ரும்பயி ராக்கிய தன்பயன்
சிறக்க நல்கிட வுண்டு சேருக்குவான்
துறக்க மெய்தி யிருந்தான் சுகுணனும்.

(இ - ள்) பாவமாகிய களையைக்களைந்து, நிலவுலகின்மேல் தருமமாகிய பெரிய பயிரையேற்றி, அந்த (த் தரும)ப் பயிராலாகிய பயன் மிகவுங் கைகூடக் கிழாஞருமன்றித் தானும் அதனை அகர்ந்து, இறுமாக்குஞ் சுகுணபாண்டியனும் தேவருலகத்தை யண்டைந்து (மகிழ்ச்சியோடு) இருந்தனன். (உஞ)

ஆ திருவிருத்தம் உஉக.

பாஞ்சோதிமுனிவர் அருளிச்செய்த திருவிளையாடற் புராணம் -
கூடற்காண்ட மூலமும்,
சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதரா யிருந்தவரும்
உரையாசிரியருமாகிய ஈக்காடு - இரத்தினவேல் முதலியார் இயற்றிய
உரையும் விசேடமும் முற்றுப்பெற்றன.